OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
18 MAR 1910
MADRAS.

# மதிராஸ் புல்லடீன் ஆப் குவாபரேஷன்.

வால்யூம். I.] செப்டம்பர், 10௳, 1909 [நெ. 1

## முகவுரை.

"இக்காலத்தில் கைத்தொழில் வர்த்தகம் முதலான ஊக்கமும் தைரியமும் வேண்டிய வழிகளில் இத்தேசத்தார் பெரும்பாலார் புகுந்து வெற்றியடைவதற்கு, ஒழுங்காகச் சேர்க்கப்பட்டு உபயோகிக்கப்பட்ட மூலதனத்தின் குறைவும், மனிதர்களுக்குள் நம்பிக்கையில்லாமையுமே முக்கியமான இடையூறுகளென்பதற்குச் சிறிதேனும் சந்தேகமில்லை. மூலதனத்தின் குறைவோ நம்பிக்கையில்லாமையின் பயனே. கூட்டுறவு முறையில், ஓரிடத்துள்ள கைத்தொழிலாளிகளாவது பயிர்த்தொழிலாளிகளாவது தாங்கள் எவ்வளவு குறைவாகவும் ஏழைகளாகவும் இருந்தாலும், ஒன்று சேர்ந்தால் சிறுகச் சிறுக தங்களுக்கு தற்காலம் அவசியமான செலவுகளுக்கும் பிற்காலம் செய்யவேண்டிய செல்வப் பெருக்குக்கும் போதுமான பணத்தைச் சுலபமாக அடையக்கூடும். ஆகையால் வேளாண்மை, கைத்தொழில், வர்த்தகம் முதலிய விஷயங்களில் தங்களுக்கு நேரில் ஸம்மந்தம் இருந்தாலும் இல்லாவிடினும் நுண்ணறிவுள்ள கல்விமான்களுக்கும் விவேகிகளுக்கும் இச்சங்கங்களை தங்களாலியன்ற மட்டும் தேர்ச்சியடையும்படி செய்வது கடமையென்று நான் வற்புறுத்துகின்றேன். இச்சங்கங்களால் அங்கத்தினர்களுக்கு உடனே கிடைக்கும் பணலாபம் பெரிதல்ல. அவைகள் எந்தெந்த தேசங்களில் வேரூன்றியிருக்கின்றனவோ அங்குள்ள மனிதர்களுக்கு ஒழுங்கான முறைகளைக் கற்பித்து பரஸ்பர நம்பிக்கை, சுவாதந்திரியம், நாணயமுள்ள உழைப்பு முதலிய நற்குணங்களையும் அவரிடத்து நிலைநாட்டுகின்றன".

(1907-ம் வருஷத்தில், மைசூர் நகரில், தஸரா பண்டிகைகாலத்தில் ஏற்படுத்திய பொருட் காக்ஷிச்சாலையில், மாக்ஷிமை தங்கிய மைசூர் மகாராஜாவினால் செய்யப்பெற்ற ப்ரஸங்கத்தினின்றும் மேற்கூறிய விஷயம் எடுக்கப்பட்டது.)

# அறிக்கை.

---

சென்னை ராஜதானியில் இப்போது நூற்றி நாற்பது சங்கங்களுக்கு மேலிருக்கின்றன. மாதம் மாதம் புதிய சங்கங்களும் விரைவாக ஏற்படுகின்றன. ஒவ்வொரு சங்கமும் தனித் தனியே நடைபெற்று வருகின்றது. ஒரு சங்கத்தை நடத்துவோர்களுக்கு மற்ற சங்கங்களில் என்ன செய்கிறார்கள், என்னசெய்ய முயலுகின்றார்களென்றும் தெரிந்துகொள்ள வழியில்லை. ஆகையால் இச்சங்கங்களின் தேற்றத்தைப்பற்றி சில மாதத்திற்கு ஒருமுறை அறிக்கைப் பத்திரம் ஒன்றைப் பிரசுரம் செய்வது உசிதமென்று எனக்குத் தோன்றுகிறது. இப்படிச் செய்வதால் ஒவ்வொரு சங்கத்திற்கும் மற்ற சங்கங்களின் ஒழுங்கும் தேர்ச்சியும் நன்றாகப்புலப்படும். மேலும் திறமை யற்ற சங்கங்களுக்கும் மற்ற சங்கங்களின் தேர்ச்சியைக் கண்டு சுரவை யுண்டாகும்.

2. இந்தப்பத்திரிகையில் புதிதான சங்கங்களின் தாகலையும் உபவிதிகளின் மாறுதல்களையும் தெரிவிக்க உத்தேசிக்கிறேன். வருஷந்தோறும் செய்யும் கணக்குப் பரிசோதனையில் வெளியாகிற முக்கிய விஷயங்களையும் தெரிவிக்கலாம். அநேக சங்கத்தார்களும் ஜனங்களும் எனக்கு கேள்விகள் போடுகிறார்கள். இவைகளின் விடைகளும் இப்பத்திரிகையில் காணப்படும். பொதுவாய் சங்கங்கள் பலப்பட்டு விருத்தியாக, இவ்விதமான விருத்திக்குக் காரணமாகிய ஐக்கிய நாணய முறைகளை மறந்து விடக்கூடும். ஆகையால் இம்முறைகளைப் பற்றியும் அடிக்கடி இப்பத்திரிகையில் எழுதக்கூடும். பரிசோதனை உத்தியோகஸ்தர்களுக்காக (Inspector) இலாகாவினால் கொடுக்கப்படும் விதிகளும் இப்பத்திரிகையின் பாகத்தில் வெளியாகும்.

3. ஐக்கிய நாணயமுறைகளில் அவாவுடைய ஜனங்களிடமிருந்தும் சங்கங்களிடமிருந்தும் வியாஸங்களை நான் கோருகின்றேன். இவை சென்னையில் சேபாக்கம், ஐக்கிய நாணயச்சங்கங்களின் ரெஜிஸ்டிராருக்கு அனுப்பப்படவேண்டும். இன்ஸ்பெக்டர்களும் அங்கங்கு பார்க்கும் முக்கியமான விஷயங்களை பத்திரிகையில் போடுவதற்கு அனுப்பவேண்டும்.

4. இப்பத்திரிகைக்கு தபாற் கூலியோடு வருஷத்திற்கு $1\frac{1}{2}$ ரூபாய் கட்டணம். தனிக்காபிக்கு 8 அணா விலை. ஆங்கிலம் தமிழ் தெலுங்கு மூன்று பாஷைகளிலும் வெளியாகும். இன்ஸ்பெக்டர்கள் சங்கங்களுக்கு இப்பத்திரிகைகளை வாசித்துக்காட்டி விஷயங்களைத் தெளிவாக போதிக்கவேண்டும்.

160952

OFFICE OF THE REGISTRAR ... 18 MAR 1910 MADRAS.

# மதிராஸ் புல்லடீன் ஆப் குவாபரேஷன்.

---

## ஐக்கிய நாணயச் சங்கங்கள்.

---

**1907** ம் வருஷத்தில் ஸூரத்து நகரத்தில் கூடிய கைத்தொழில் மகா சபைக்கு வங்காள கவர்ன்மெண்டைச் சேர்ந்த ஒரு பெரிய உத்தியோகஸ்தர் அடியில் கண்ட கருத்தமைந்த ஒரு உபந்நியாஸ மெழுதியனுப்பினார்.

"இந்து தேசத்தில் வேளாண்மை செய்பவர்களுக்கு அதிக அவசியமாக வேண்டிய தென்னவென்றால், குறைந்த வட்டிக்கு ரொக்க நாணயக் கடனேயாம். தற்காலத்தில் வேளாண்மை செய்பவர்கள், நூற்றுக்கு வருஷத்திற்கு 25 ரூ. முதல் 50 ரூ. வரையில் வட்டிகொடுத்து கடன் வாங்குகிறார்கள். ஆனகயினாலே அவர்கள் வேளாண்மையில் மேற்கண்ட வட்டிக்குக் கடன் வாங்கி யாதேனுமொரு சீர்திருத்தஞ் செய்தால் அச் சீர்திருத்தத்தினால் மேற்கண்ட வட்டி வீதத்திற்குக் குறையாமல், அதிக வரும்படி கிடைத்தாலொழிய வேளாண்மை செய்தவனுக்கு யாதொரு லாபமுமில்லை. ஆகையால் அதிகத்திறமையோடும் கவனத்துடனும் வேளாண்மை செய்பவனுக்குங்கூட, 100 ரூபாய்க்கு வருஷம் 1-க்கு $12\frac{1}{2}$ ரூபாய்க்கு மேல்படாமல் வட்டிக்குப் பணம் கிடைத்தாலொழிய அவனுக்கு கவர்ன்மெண்டார் ஏற்படுத்தியிருக்கும் அக்ரிகல்சுரல் டிபார்ட்டுமெண்டுகளால் (Agricultural Departments) அதிகப் பிரயோஜன முண்டாக மாட்டாது. வேளாண்மையிற் சிறந்த அன்னிய தேசங்களுக்கு ஒப்பாக நம்முடைய கவர்ன்மெண்டாரும் அக்ரிகல்சுரல் டிபார்ட்டுமெண்டு (Agricultural Department) யென்னும் பெயர் விளங்கிய ஓர் ஆபீஸ் யேற்படுத்தும் பொருட்டு இயன்ற முயற்சி யெல்லாம் செய்கிறார்கள். வேளாண்மை பெருகும் பொருட்டு இப்போது செய்துவரு மேற்பாடுகள் சுமார் 5 அல்லது 10 வருஷங்களுக்கு முன்னதாக பலன் அடையமாட்டா; ஆகையால் அக்ரிகல்சுரல் டிபார்ட்டுமெண்டினால் அதிக நன்மையுண்டாகவேண்டுமானால் சொல்ப வட்டிக்கு கடன் கிடைக்கும்படியான முயற்சிகளைச் செய்ய

இதுவே சமயம். ஆகையால் தான் இவ்வுபன்னியாஸத்தின் விஷயம் வெகு முக்கியமென்று ஏற்படுகிறது. வேளாண்மை யென்பது நம்முடைய தேசத்தில் விருத்தியடைய வேண்டுமானால், அதற்கு வேளாண்மை செய்வோர் வாங்கும் கடன்களுக்கு வட்டிக் குறைவதே மூலாதாரம்.

சென்ற க்ஷாமத்தை விசாரிப்பதற்காக ஏற்பட்ட சபையார் சொல்லிபடி "வேளாண்மை செய்பவர்கள் தங்களுடைய தொழிலை நஷ்டமன்னியில் நடத்தி வருவதற்கு வட்டி அதிகமில்லாமலும் அதிகக் கடன் வாங்க ஏவுதலுண்டாகாமலும் சிலவுபாயங்களை ஏற்படுத்துவது அதிகமுக்கியமானது. வட்டி குறைந்தால் கடன் வாங்க ஆசை அதிகமாகும்; அதை அடக்கவேண்டும். இல்லாவிடின், வட்டிகுறையக் குறைய குடியானவன் அதிக கடனில் ஆழ்ந்துவிடுவான். வட்டிக்குறைவினால் விளையும் மேற்கண்ட தீமையை கவனித்து நம் முபாயங்களைச் செய்யவேண்டும். இது தான் அதிக கடினமான விஷயம். கவர்ன்மெண்டார் விவஸாயம் செய்பவர்களுக்கு கடன்கொடுக்க ஏற்படுத்திய ஆக்டினால் அதிக நன்மை விளைந்தபோதிலும் மேற்கண்ட தீமையை விலக்க முடியவில்லை. இப்பேர்ப்பட்ட உபாயங்களை ஏற்படுத்துவதால், கிராமங்களிலுள்ள கொடுக்கல் வாங்கல் செய்யும் சாவகாரிகள் நீங்கிவிடமாட்டார்கள். அப்படி அவர்கள் நீங்குவதும் நம்முடைய எண்ணமல்ல. ஒவ்வொரு கிராமத்திற்கு எப்படி தச்சன், அம்பட்டன், வெண்ணான் அதிக அவசியமோ, அதேபிரகாரம் கொடுக்கல் வாங்கல் செய்ய முதலுள்ளோரும் அதிக அவசியம். அவன் கிராமத்தார்களுக்கு செய்யுமுதவியன்னியில் வேளாண்மை முதலிய தொழில்களை நடத்தமுடியாது. ஆகையால் நாம் செய்யும் முயற்சியெல்லாம் கூடி மேற்கண்ட கொடுக்கல் வாங்கல் என்னும் தொழிலால் அதிகப்பயனுண்டாக வேண்டுமென்பதே யொழிய வேறில்லை. தற்காலத்தில் கிராமங்களில் ஒருவர் இருவர்தான் இத்தொழில் நடத்துகிறார்கள். ஆகையால் அவர்கள் கேட்கும் வட்டிகொடுப்பதைத்தவிர வேறே வழியில்லை. இந்த நிலைமையில் அவர்கள் தங்கள் லாபத்தை நாடுவது குற்றமாகுமோ? கிராமங்களில் பணம்கடன் கொடுப்பவர்களுக்கு அதிக லாபமும் அதிக நஷ்டமும் சம்பவிக்கக்கூடும். மோசம் செய்யும் குடியானவனால் சம்பவிக்கும் நஷ்டத்திற்காக, யோக்கியனான குடியானவன் அதிக வட்டி கொடுக்கவேண்டியதாயிருக்கிறது. ஆகையால் நாம் கிராமங்களில் ஸாவகாரிகள் இல்லாமற் போகவேண்டுமென்றும் முதலுக்கு வட்டியேகூடாதென்றும் விரும்புகிறதில்லை. முதலாளிகளுடைய பணத்தை, நல்ல, அதாவது நஷ்டமில்லாத வழிகளில் செலுத்தி விவஸாயம் செய்பவர்களுக்கு அதிக வட்டி கொடுப்பதினால் நேரிடும் நஷ்டங்களை நிவர்த்திக்கவேண்டுமென்பதே நம்முடைய நோக்கம். சில ஸாவகாரிகள் தங்களுக்கு நஷ்டம் வந்தால் வரட்டும், அதிக வட்டிக்கு பணம் கொடுத்து, அதிக பணக்காரர்களாகிவிடலாம் என்று நினைத்து தம் முதலை வைத்துக்கொண்டு சூதாடுகிறார்கள். ஆகையால் வேளாண்மையிற் சென்று நியாயமான வட்டியை சம்பாதிக்கும் முதலுக்கும், மேற்கண்டபடி சூதாட்டத்தில் சென்று அநியாயவட்டி சம்பாதிக்கும் முதலுக்கும் ஒரு தாரதம்மியம் ஏற்படுத்தவேண்டுமென்பதே நம்முடைய கருத்து.



மேற்கண்ட தீமைகளை நீக்கி நன்மைகளை மாத்திரம் விளைவிக்கும் உபாயங்கள் இப்போது ஏற்பட்டு வரும் ஐக்கிய நாணய சங்கங்களேயாம்.

இந்நாட்டிற்கும் அதின் குடிகளுக்கும் க்ஷேமத்தை நாடும் ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டிய பெரிய விஷயம் இதுவே. இவ்விஷயத்தில் ஒவ்வொருவனும் எவ்வளவு சுலபமான அளவிலாகிலும் உதவிசெய்யலாம். இந்த அற்ப உதவியினால் விளையும் நன்மை பலவாகும். பணம் வேண்டாம். மனிதர்களே தேவை. கிராமங்களில் வேளாண்மை செய்பவர்கள் நியாயமான வட்டிகொடுக்க தயாராயிருக்கிறார்கள். அந்த வட்டிக்கு பணமும் வேண்டிய அளவு கிடைக்கும். ஆனால் நாடெங்கும் சென்று மேற்கண்டபடி ஐக்கிய சங்கங்களை ஏற்படுத்தி அதனால் முதலாளிகளும் தொழிலாளிகளும் லாபம் அடையலாம் என்ற நியாய மார்க்கத்தை பிரசங்கித்து பரவச் செய்ய முயற்சிகொள்ளும் புண்ணியவான்களும் தேசாபிமானிகளுமே தேவை

நமது தேசத்திய கிராம வேளாண்மைக்காரர்களுக்கு உண்டான ஒரு பெருங்குறையை ஐக்கிய நாணயச் சங்கம் என்ற உபாயம் தீர்க்கும் என்பதற்கு நியாயம் என்னவென்று பலர் கேட்கலாம். அடியிற் சொல்லும் சில விஷயங்களால் அது தெளிவாகும்.

ஐக்கிய நாணயச் சங்கங்களை ஏற்படுத்தும் பொருட்டும் அவைகளைப் பரவச்செய்யும் பொருட்டும், கவர்ன்மெண்டார் ஒரு சட்டம் விதித்து மூன்று வருஷகாலம் தான் ஆயிற்று. இச்சொற்ப காலத்தில் இத்தேச நன்மையையே கருதும் இந்தியர்களும் ஐரோப்பியர்களுமான சிலர் ஒரே நோக்கமாய் ஐக்கிய நாணய சங்கங்களை ஏற்படுத்தும் விஷயமாய் உழைத்து வந்தார்கள். அதின் பலனை இதோ பாருங்கள். நாளது தேதியில் இந்தியாவில் நகர் கிராம மத்திய ஐக்கிய சங்கங்களுக்கு இருபத்தைந்து லக்ஷரூபாய் மூலதனம் சென்ற வருஷத்தில் மட்டும் முப்பத்தியேழு லக்ஷ ரூபாய் கொடுக்கல் வாங்கல்கிராமச் சங்கங்களை மாத்திரம் சற்று யோஜிக்கலாம். இச்சங்கங்களில் வைக்கப்பட்ட பணத்தில் ஒவ்வொரு பைசாவும் கிராமங்களில் வேளாண்மை செய்பவர்களுக்கும் அவ்வேளாண்மையைச் சார்ந்த தச்சன் கருமான் போன்ற மற்ற தொழில் செய்பவர்களுக்கும் கடனாக கொடுபட்டு உதவி யிருக்கிறது. இந்த மூன்று வருஷத்தின் முயற்சியின் பயனாக இந்தியாவில் இக்காலத்தில் 735 கிராமச் சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளின் மூதலனம் பதினொருலக்ஷ ரூபாய். இதில் கால் கவர்ண்மெண்டாராலும் கால் பங்கு வெளி ஜனங்களாலும் வைக்கப்பட்டிருக்கிறது. போக மீதி அரைப்பங்கு அச்சங்கத்து மெம்பர்களுக்கே சேர்ந்

தது. சென்ற வருஷத்தில் மாத்திரம் பனிரண்டு லக்ஷ ரூபாய் கடனுக்கொடுபட்டிருக்கிறது. ஆனால் இச்சங்கங்களின் சிப்பந்தி முதலிய செலவுகளோ ஏழாயிரம் ரூபாய் தான். அவ்வருஷத்திய லாப நஷ்டக்கணக்கில் ஒரு பைசா கூட "திரும்பி வாராதகடன்" என்ற நஷ்டக் கணக்கில் தாக்கல் ஆகவில்லை. அல்லாமலும் ரிசர்வ் பண்டு என்ற ஆபத்து தனம் லக்ஷ ரூபாய் ஏற்பட்டிருக்கிறது.

ஐக்கிய நாணயச் சங்கம் என்றால் என்ன? அவைகள் இந்நாட்டில் ஏன் இதற்கு முன்னமே ஏற்படுத்தப்படவில்லை என்று கேட்கலாம். இதைச் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன். சென்ற நூற்றாண்டின் மத்தியில் ஐரோபா கண்டத்தில் அனேக லோகோபகாரிகள், வேளாண்மை செய்பவர்களுக்கு சுலபமான வட்டிக்கு கடன் கிடைக்கும்படிக்கும் ஆனால் அவர்கள் சுலப வட்டியால் ஏவப்பட்டு அதிகக்கடனில் வீழ்ந்து முழுகிப் போகாமலிருக்கும் படிக்கும் பற்பல ஏற்பாடுகளை ஆலோசித்து வந்தார்கள். அவைகளில் மூன்று உபாயங்கள் தான் உபயோகமுள்ளனவாய்த் தோன்றின. அவைகள் எவையெனில் ஜர்மனி தேசத்தில் ராபீஸன் (Raiffeisen) ஷால்ஜ (Schulze) என்னும் இத்தாலியா தேசத்தில் லஜ்ஜாட்டி என்னும் பெயர் வழங்கும் விடாமுயற்சியும் லோகோபகார சிந்தையும் உள்ள மகான்களுடைய பெயர்களை பழமொழியாக லோகமெங்கும் வழங்கும்படி செய்த உபாயங்களேயாம். ராபீஸன், ஷால்ஜா, என்பவர்கள் ஒரே காலத்தில் அவர்களுடைய முயற்சிகளைச் செய்தார்கள். அவ்விருவர்களுடைய நோக்கங்கள் வெவ்வேறு. அவர்களுடைய உபாயங்கள் பற்பலவிடங்களில் பலனடைந்திருக்கின்றன. விசேஷமாய் ராபீஸன் சங்கங்கள் கிராமங்களிலும் ஷால்ச் சங்கங்கள் நகரங்களிலும் பயன்பட்டிருக்கின்றன. இச்சங்கங்களின் பலன் வெகு சுலபமாய் கிடைக்கவில்லை. அவைகளை ஏற்படுத்திய மகான்கள் பொறுமையுடன் உழைத்த பிறகு தான் ஏற்பட்டது. இச்சங்கங்களுக்கு பலர் இடையூறு செய்தார்கள். அம்மாதிரி இடையூறு செய்தவர்களுக்குள் குடிகளுடைய க்ஷேமத்தையே கருதும் அத்தேசத்திய கவர்ன்மெண்டாருடைய அறியாமை ஒன்று என்பது அறியத்தகும். 1893 வருஷத்துக்கு பிற்பாடு தான் இவைகளில் வெளியோருக்கு நம்பிக்கை யேற்பட்டது. லஜ்ஜாட்டி வொல்லம்பர்க் என்பவர்கள் மேற்சொன்ன சங்கங்களை இத்தாலியாவிலும் ஹாஸ் என்னும் மாகாணத்திலும் பரவச்செய்தார்கள். ஆகவே இப்போது ஜர்மானியா இத்தாலியா தேசங்களில் ஒவ்வொரு மூலையிலும் ஐக்யநாணயங்கங்களில் நம்பிக்கையேற்பட்டதுமன்னியில் பற்பல சங்கங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

சென்னையில் 1893 வருஷத்தில் வேளாண்மைக்கு எவ்விதமான திரவிய சகாயம் ஏற்படுத்தலாம் என்று விசாரணை செய்துவந்த சர் F. நிக்கல்சன் என்பவருக்கு மேற்சொல்லிய ஐரோப்பிய சங்கங்கள் புலப்பட்டன. இப்



போது நம்முடைய தேசத்தில் ஏற்பட்டிருக்கும் சங்கங்கள் அவருடைய முயற்சியின் பயன் என்றே கொள்ளவேண்டும்.

மேற்சொல்லிய சங்கங்களில் ராபீஸன் சங்கங்கள் நமது தேசத்து விவசாயிகளுக்கு ஏற்றவை என்பது அவருடைய அபிப்பிராயமாதலால் அவைகளைப்பற்றி சற்று விவரிக்கிறேன்.

ராபீஸன் சங்கம் என்பது ஒரு கிராம விவசாயிகளின் சிறு சங்கம்; அதை அவர்களே சுயமாக பரிபாலனம் செய்கிறார்கள். அவற்றில் ஒவ்வொருவனுக்கும் தன் ஜாமீன்பேரில் கிடைக்கக்கூடிய கடன் முதலிய பிரயோஜனங்கள் மிக சொல்பம். ஆனால் அவர்களுடைய அன்னியோன்யத்தாலும் ஐக்கியத்தாலும ஒன்று சேர்ந்து சட்டக்கட்டுப்பாட்டுக்குள்பட்ட சங்கம் என்று ஏற்பட்ட பிறகு அச்சங்கத்தாரின் கூட்டு ஜாமீன்பேரில் கிடைக்கக் கூடிய லாபங்கள் வெகு பல. ஒவ்வொரு மனிதனுக்கும் தன்னை நன்றாய் அறிந்த சிலர்களுக்கு கொஞ்சம் நாணயம் நம்பிக்கை அல்லது செல்வாக்கு உண்டாகும்படியான யோக்யதை எப்போதும் உண்டு. மற்றவர்களுக்கு தன்னிடத்தில் நம்பிக்கை உண்டாகவேண்டுமானால் ஒருவனுக்கு பணமாவது ஸ்தாவர ஜங்கம சொத்தாவது இருக்கவேண்டுமென்பது கட்டாயமில்லை. இவனிடத்தில் பணம் கொடுத்தால் மோசம் செய்யமாட்டான், இவன் யோக்யன் என்ற நல்ல பெயரை எப்பேர்ப்பட்ட ஏழையும் சம்பாதிக்கக் கூடும். நம்முடைய கிராமத்தார்களில் இவ்விதமான யோக்யதை அபூர்வமில்லை என்பது தெரிந்த விஷயம் நம்முடைய கிராம விவசாயிகளுக்குள் பெரும்பான்மையோரை அவருடைய அயலார்கள் நம்புகிறார்கள் இந்த நம்பிக்கையே ஐக்ய சங்கங்களின் மூலாதாரம். இந்துதேசத்தில் வெகு ஏழைகளும் ஐக்ய சங்கங்களில் சேரவேண்டியபடியால் அவர்களை சங்கத்து மூலதனத்துக்காக பணம் கொடுக்கச் சொன்னால் அவர்களால் கொடுக்க முடியுமா? முடியாது. ஆனால் தங்களுடையவும் தங்களுடைய சங்கத்தாராகிய மற்றவர்களுடைய லாபத்துக்காக தங்களுடைய நாணயம் அல்லது யோக்கியதையை ஜாமீனாக கொடுக்கும்படி கேட்கலாம். ஐக்ய சங்கங்களில் பணம் வைப்பவர்களுக்கு அச்சங்கத்தாரில் ஒவ்வொருவருக்கும் உள்ள சகல சொத்தும் அவர்களுடைய சகல சாமார்த்தியமும் யோக்யதையும் ஜாமீனாகும். சங்கத்திற்கு சம்பவிக்கும் நஷ்டத்திற்கு அச்சங்கத்திற் சேர்ந்த ஒவ்வொருவனும் பூராவாய் உத்திரவாதி யாகிறான். குடிவார பாத்யதையும் இல்லாமல் கூலிக்குப் பயிர் செய்யும் குடியானவர்கள் சேர்ந்த ஐக்ய சங்கத்திற்கு என்ன ஜாமீன் என்று பலர் கேட்கிறார்கள். அதற்கு பதில் அவர்களில் ஒருவனும் தன் சரீர சுவாதீனத்தை இழந்து விட இஷ்டப்படமாட்டான் என்பதும் சங்கத்திற்கு நேரிடும் ஒவ்வொரு நஷ்டத்திற்கும் அதிற்சேர்ந்த ஒவ்வொருவனும் உத்திரவாதி ஆதலால் அவ்வித நஷ்டம் நேரிடாமலிருக்க முயல்வான் என்ற துணிவுமே ஜாமீன் என்று சொல்லலாம்.

இப்படி ஒவ்வொருவனும் பூராவும் உத்திரவாதியாயிருக்கும் சங்கங்களில் நஷ்டம் சம்பவிக்கிறதில்லை என்பது அனுபோகத்தாலும் வெளிப்படுகிறது. இத்தேசத்திலோ குடியானவர்கள் தங்கள் கிராமத்தை விட்டு வெளியே குடிப்போவது குறைவென்று நினைக்கிறார்கள். தாங்கள் உத்திரவாதிகளாவார்கள் என்ற பயத்தினாலேயே சங்கத்தின் காரியங்களை அதிக கவனத்துடன் நடத்தி நஷ்டம் வாராமல் பாதுகாக்கிறார்கள். இவ்விதமாய் பூரா உத்திரவாதம் ஒப்புக்கொண்டவர்கள் சேர்ந்த சங்கங்களுக்கு மூலதனம் கிடையாது. பங்காளிகளுக்கு லாபத்தை பிரித்துக் கொடுக்கவேண்டியதுமில்லை. சங்கத்தாரில் கடன் வாங்குகிறவர்கள் கடன் கொடுப்பவர்கள் என்ற தாரதம்யங்களும் அத்தாரதம்யத்தினால் உண்டாகும் மனக்குறைகளுமில்லை. எல்லாருக்கும் ஒரேவிதமான நோக்கம். ஒவ்வொருவரும் இதில் உழைப்பது கடமை ஆதலால் அவ்வூழியத்திற்குச் சம்பளம் கிடையாது. கடன் வாங்கும் பணத்தை வட்டிக்கு கொடுத்ததினால் வரும் லாபமுழுதும் சங்கத்திற்கே சேருகிறது. இந்த ஏற்பாட்டில் ஒவ்வொருவனும் உத்திரவாதியாதலால் எல்லாரும் அச்சங்கத்தின் க்ஷேமத்திற்கு கட்டாயமாய்ப் பாடுபடுகிறார்கள்; ஆகையினால் அச்சங்கத்திற்கு ஒருபந்தோபஸ்து ஏற்படுகிறது. கடன் வாங்கவிரும்புஞ் சங்கத்திற்கு இதுவே ஒரு பெரிய தகுதி. ஒவ்வொருவனும் தன் அயலானுடைய நடவடிக்கைகளை அதிக சிரத்தையுடன் கவனிக்கிறான். ஏன்? தனக்கு நஷ்டம் சம்பவிக்காமலிருக்க. ஒருவன் தான் கடன் வாங்கினபணத்தை துர்விநியோகம் செய்தால் சங்கத்திலுள்ள மற்றவர்கள் பணத்தை சீக்கிரம் வாபீஸ் கேட்டுவிடுவார்கள். ஒவ்வொருவனுக்கும் பூரா உத்திரவாதம் ஏற்பட்டிருக்கிறபடியால்தான் அதிகச்சம்பளம் வாங்குஞ் சிப்பந்திகளால ஆகவேண்டிய வேலைகளைக் கூட சங்கத்தார்கள் தாங்களே சம்பளமில்லாமல் திறமையுடன் நடத்திக் கொள்ளுகிறார்கள். மேற்கண்ட ஏற்பாடுகளால் உண்டாகும் நன்மை இன்னதென்று தெரியவில்லையா. வேறே ஒரு நன்மைவிளையாவிட்டாலும் "வாங்கினபணத்தை திருப்பிக்கொடுப்பதே யோக்கியதை" என்ற விஷயம் எல்லாருடைய மனதிலும் சீக்கிரத்தில் பதிந்துவிடுகிறது. இப்பேர்ப்பட்ட பொறுப்பை ஒரு குடியானவனும் வகிக்க இஷ்டப்படமாட்டான் என்று அனுபோகமில்லாத சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் குடியானவன் தனக்கு நன்மை எது என்று சீக்கிரம் பகுத்தறிந்து சங்கத்தில் சேர்ந்துவிடுகிறான். அதினாலுண்டாகும் அசௌகரியங்கள் மிகசொல்பம். சௌகரியங்கள் அளவற்றன.

இப்பேர்ப்பட்ட சங்கத்தாரில் சச்சரவும் கலகமும் நேரிட்டு சங்கம் கலைந்துவிடலாம் என்பதும் சம்பவிக்ககூடியதே. இதைத் தடுக்கும்படியான ஒரு நல்ல உபாயம் என்னவென்றால் சங்கத்தின் லாபத்தைக்கொண்டு ரிசர்வ் பண்டு என்ற ஆபத்தனம் ஒன்றை சேகரிப்பதேயாகும். இந்த ஆபத்தனம் சங்கத்தாருக்குப் பொதுவேதவிர ஒருவனுக்கும் அதில் பாத்தியதையில்லை.



இந்த தனம் சங்கத்திற்கு ஒரு ஜாமீன் ஆவதுமன்னியில் அதில் சேர்ந்தவர்கள் ஒற்றுமையாயிருக்கும்படி செய்யும் ஓர் உபாயம். அச்சங்கத்தில் சேர்ந்தவரையில்தான் ஆபத்தனத்தினால் விளையும் பலன்களை யடையலாம். இவ்வேற்பாடுகள் சிறு கிராமங்களுக்கே ஏற்றவை. ஏனென்றால் கிராமங்களில்தான் ஒருவரையொருவர் நன்றாயறிய சௌகரியமுண்டு. வெளியூரார் வருவதும் உள்ளூரார் வெளியேபோவதும் அபூர்வம். ஒருவன் தன் அயலாருக்குத்தெரியாமல் ஒன்றும் செய்யமுடியாது. ஒவ்வொருவனும் தன் அயலானுடைய நடவடிக்கைகளை வெகு இலேசாய் அறிந்து கொள்ளக்கூடும். இந்தியாவின் கிராமங்கள் பெரும்பான்மையும் இவ்விதமாகவே யிருக்கின்றன.

மேற்சொல்லியவாறு ரயிபீஸன் சங்கங்கள் ஏற்படுத்தப் படுகின்றன. அச் சங்கங்களுக்கு மூலதனம் எவ்விதமாய்க் கிடைக்கிறது என்ற விஷயத்தைச் சற்று கவனிப்போம். அச் சங்கத்தில் சேருகிறவர்களில் பெரும்பான்மையோர் அச்சங்கத்தில் வைப்பதற்கு பணமற்று கடன்வாங்கும் பிரயோஜனத்தையே நாடி அதிற் சேருகிறார்கள். ஆகையால் ஆரம்பத்தில் சங்கத்திற்கு பணம் வெளியேயிருக்கும் முதலாளிகளிடத்திலிருந்துதான் வரவேண்டும். இந்த விஷயத்தில்தான் புதிதாய் ஏற்படுத்தப்பட்ட சங்கங்களுக்கு ஆரம்பத்தில் கொஞ்சம் கஷ்டம். அச்சங்கத்தில் சேர்ந்தவர்களிடத்தில் வெளியோருக்கு நம்பிக்கை ஏற்படுகிற வரையில் மூலதனம் கிடைப்பதுகடினம். ஆனால் மூலதனத்தைக்கொண்டு கொடுக்கல் வாங்கல் செய்தபிறகுதான் நம்பிக்கையும் ஏற்படும். பணமுண்டானால் நம்பிக்கையேற்படும்; நம்பிக்கை ஏற்பட்டால்தான் பணம் கிடைக்கும். இதற் கென்னசெய்யலாம்? நஷ்டம் வந்தாலும் வரட்டும் என்று வெகு தயையுடன் இந்தச் சங்கங்களில் பணம்வைக்க துணிவுகொண்ட சில முதலாளிகளும் இத்தேசத்திலிருக்கிறார்களென்று தெரிகிறது. தவிர கவர்ன்மெண்டாரும் மூலதனம் கொடுத்து உதவிசெய்யத் தயாராக இருக்கிறார்கள். இவ்வுதவி சாசுவதமல்ல. சுலபமான வட்டிக்கு கிடைக்கும் மூலதனத்தால் மெம்பர்கள் லாபமடைகிறார்கள். அதினால் பணம் மீர்க்க ஏதுவாகிறது. அப்படி மீர்க்கும் பணத்தை அச் சங்கத்திலேயே வைக்கிறார்கள். அவர்கள் அப்படி உதவிபெற்று லாபமடைந்து பணம் மீர்த்து, மீர்க்கும் பணத்தை அச்சங்கங்களில் வைத்து அச்சங்கங்கள் விருத்தியடையவேண்டுமென்பதே எல்லா தேசாபிமானிகளுடைய நோக்கம். ஐக்கிய சங்கங்களில் நம்பிக்கை ஏற்பட்டபிறகு லோகவிவகாரப்படி தகுந்த நியாயவட்டிக்கு மூலதனமே தானேவரும் என்பது நிச்சயம். வங்காள மாகாணத்தில் ஏற்பட்டிருக்கும் சங்கங்களுக்கு 100 க்கு $12\frac{1}{2}$ முதல் $18\frac{3}{4}$ வரை வட்டிக்குத்தான் சங்கங்களுக்கு கடன் கிடைக்கிறது. நாள்பட நாள்பட இன்னும் குறைந்த வட்டிக்கு பணம் கிடைக்குமென்பது நமக்கு நம்பிக்கை. அப்படிப்பட்ட நல்லகாலம் வருகிறவரையில் நம்முடைய சங்கங்களில் வைக்கும்பணங்களின் பந்தோபஸ்துக்கு யாதொரு குறைவில்லையென்று நாடெங்கும் தெரி

விக்க முயல்வோர். ஐக்கிய சங்கத்தார்கள் தங்களுக்கு நஷ்டமில்லாமலும் பணம் வைப்பதற்கு வெளியோருக்கு ஏவுதல் உண்டாகும்படியும் தகுந்த வட்டி கொடுக்கத்தான் வேண்டும். முடிவில் சங்கத்தில் பணம் வைக்க முதலில் கூச்சமும் அச்சமும் பட்ட கிராமத்து முதலாளிகள் வந்து சங்கத்திற்கு சேர்ந்து கடன் வாங்குகிறவர்களுடைய ஜாமீனுக்கும் தங்களுடைய முதலுக்கும் தகுதியாயுள்ள நியாய வட்டியே போதுமானதென்று திருப்தியடைவார்கள்.

கிராமத்தில் ஒருவன் தனக்கு உள்ள எல்லா முதலையும் தன் கிராமவாசிகளிடம் ஒப்புவித்து விடுவதில் அதிகபயம் இருக்கவேண்டியது நியாயந்தான். ஆனால் அடியிற்சொல்லும் பந்தோபஸ்துக்கு ஏற்ற உபாயங்களால் மேற்சொல்லியபடி பயமுண்டாவதற்கு ஏதுவில்லை. முதலாவது ஐக்கிய சங்கங்களில் சேர்ந்த மெம்பர்களுக்குமட்டும் தான் அவைகளில் கடன் கொடுக்கிறார்கள் என்பதும் சங்கத்தில் சேராதவர்களுக்கு கடன் கொடுப்பதில்லையென்பதும் விதிக்கப்பட்டிருக்கின்றன. தவிரவும் அச்சங்கத்தில் செய்யும் கொடுக்கல் வாங்கல் முதலிய நடவடிக்கைகளெல்லாம் ஒருவரையொருவர் நன்றாய் அறிமுகமுள்ள அக்கிராம வட்டாரத்திற்குள்ளேயே என்றும் விதிக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு நல்ல ஜாமீனுள்ள புள்ளியானாலும் வெளியூராரை ஐக்கிய சங்கங்களில் சேர்ப்பதில்லை. அப்படி சேர்ப்பது அபாயம். அவன் பேரில் கிராமத்தாருக்கு எவ்விதமான பிடிமானமும் இல்லை. கிராமத்தின் எல்லைக்குள்ளாக யாராரை நம்பலாமோ அவர்களை மெம்பர்களாக்கலாம். ஒருவனை மெம்பராகச் சேர்க்கக்கூடாதென்றால் அவனை நம்பிக் கடன்கொடுக்கவும் கூடாது. சங்கத்திற் சேர்ந்தவர்களுக்கு, கிராமத்திலுள்ள மற்றவர்களை அதில் சேர்க்கவும் விலக்கவும் சுதந்திரமுண்டு. அவர்கள் ஒருவனை தெரிந்து மெம்பராகச் சேர்த்துக்கொண்டால் அவனிடத்தில் அவர்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதற்கு அதுவே சாக்ஷியமாகும்.

2-வது ஒவ்வொரு மெம்பரும் தான் கடன்வாங்கும்போது காரணம் இன்னதென்று மற்றவர்களுக்கு தெரிவிக்கவேண்டும். அவர்கள் அது தகுந்த காரணமா என்று விசாரித்து அதற்குவேண்டிய அளவுதான் கடன் கொடுப்பார்கள்.

3-வது ஒரு மெம்பர் தான் கடன்வாங்கும் பணத்தை, தான் முன்குறிப்பிட்ட காரியத்திற்கே உபயோகிக்கவேண்டும். இல்லாவிட்டால் நஷ்டம் நேரிடும் என்று பயந்து சங்கத்தார்கள் பணத்தை வாபீஸ் கேட்பார்கள்.

4-வது, கடன்வாங்கும் ஒவ்வொரு மெம்பருக்கும், ஜாமீனாகவிருந்து மேலொப்பம் போடுவதற்கு வேறே இரண்டு மெம்பர்கள் சம்மதிக்கவேண்டும். தாங்கள் கடன்வாங்கும்போது பிறர்கள் தமக்கு ஜாமீனாக ஒப்புக்கொள்ள வேண்டுமேயென்ற எண்ணத்துடன், ஒவ்வொரு மெம்பரும் தனக்கு அபிமானமும் நம்பிக்கையுமுள்ள மற்றவர்களுக்கு ஜாமீனாவதற்கு சம்மதிப்பதுமல்லாமல் தங்கள் ஜாமீன்பேரில் கடன்வாங்கும் பணம் நல்ல



OFFICE OF THE REGISTRAR
13 MAR. 910

வழியில் உபயோகிக்கப்படுகிறதா வென்றும் வெகு ஜாக்கிரதையுடன் கவனிக்கிறார்கள். இவ்வாறு மேற்சொன்ன பந்தோபஸ்துகள் ஏற்பட்டமையால் தான், நாளதுவரையில் ஐரோப்பா கண்டத்திலும் நம்முடைய தேசத்திலும் ஏற்பட்ட ஐக்கிய சங்கங்களில் ஒரு பைசாகூட நஷ்டம் நேரிடவில்லை.

மேல்விவரிக்கப்பட்ட ஐக்கிய சங்கங்கள் மிக உபயோகமுள்ளவையென்றும், பந்தோபஸ்தானவை யென்றும், அவைகள் நமது இந்து தேசத்து கிராமங்களில் வேளாண்மை செய்பவர்களுக்கு மிக பொருத்தமுள்ளவைகளென்றும் தெரியப் போதுமான அளவு சொல்லியாய்விட்டது.

அச்சங்கங்களை பரிபாலனம் செய்யும் முறையை சற்று கவனிப்போம். இச்சங்கங்கள் சிறிய குடியரசுகள் என்று சொல்லலாம். அச்சங்கத்தார்கள் கையில் அதைச்சேர்ந்த சகல அதிகாரமுமிருக்கிறது. அவர்கள் வருஷத்திற்கு ஒருமுறை கூடி தங்களில் ஐந்து பேர்களை 1 வருஷத்திற்கு பஞ்சாயத்துக்காரர்களாகவிருந்து அதிகாரம் நடத்தும்படியாகவும், அதின் காரியங்களை நடத்திவரும்படியும், கேட்டுக்கொள்ளுகிறார்கள். அவ்வைந்து பேர்களில் ஒருவர், வேண்டிய கணக்குகளை எழுதிக்கொள்ளுகிறார்கள். அவர்தான் காரியதரிசி; சங்கம் பெரிதானால் அவருக்கு உதவியாக மற்றொருவரை ஏற்படுத்திக்கொள்ளுகிறார்கள். பஞ்சாயத்துக்காரர்களுக்கு சம்பளமில்லை. வேலையும் அதிகமில்லை. ஒவ்வொருவரும் முறையே பஞ்சாயத்துக்காரர்களாக ஏற்பட்டு வேலைசெய்யக் கடமைப்பட்டவர்களேயொழிய வேறில்லை. பஞ்சாயத்துக்காரர்களுக்கு ஏன் சம்பளமில்லை என்றாலோ, அவர்களுக்குச் சம்பளங் கொடுத்தால் கடன் வாங்குகிறவர்களுக்கு வட்டி யதிகமாய் விடும். இரண்டாவது, சம்பளமில்லாமல் வேலைபார்க்கும் பஞ்சாயத்துக்காரர்களுக்கு, சங்கத்தின் க்ஷேமத்திலேயே நோக்கம். சம்பளம் வாங்குகிறவர்களுக்கோ, மறு வருஷம் அந்தச் சம்பளம் கிடைக்கவழிதேடுவதே முதல் நோக்கம். அந்த உத்தியோகத்தைவிட இஷ்டம் வராது. சம்பளமில்லாமல் வேலைசெய்பவர்கள் வருஷம் முடிந்தவுடனே மற்றவர்களும் தங்களைப்போல் உழைக்கட்டும் என்ற எண்ணத்துடன் தங்கள் உத்தியோகத்தை பிறரிடத்தில் ஒப்புவிக்கத் தயாராயிருக்கிறார்கள்.

தர்மத்துக்கு வேலைசெய்யும் பஞ்சாயத்துக்காரர்கள் நித்தியம் வேலை செய்யவேண்டுமென்று யார் சொல்லுவார்கள்? ஆகையால் மாதம் ஒருமுறை அதாவது, பவுர்ணிமை அல்லது அதைப்போன்ற ஒருகுறிப்பிட்ட நாளில் பஞ்சாயத்துக்காரர்கள் கூடுவார்கள். ஒருவன் கடன் கேட்டால் அவர்கள் மூன்று விஷயங்களை கவனிப்பார்கள்:—

1. கடன் அவசியந்தானா?

2. அதை எத்தனை தடவைகளில் திருப்பிக் கொடுப்பான்?

3. கடன் வாங்குகிறவன் திருப்பிக் கடனைச் செலுத்தாவிட்டாலும் அதைச் செலுத்துவதற்குமுன் இறந்துபோனால் யார் ஜாமீன்? என்பவை

களேயாம். பஞ்சாயத்துக்காரர்களுக்கு மெம்பர்களில் ஒவ்வொருவருடைய யோக்கியதையும் நன்றாய் தெரிந்திருக்கிறபடியால் கடன் அவசியம்தானவென்று தீர்மானிப்பது அவர்களுக்கு வெகு எளிது. ஒரு மெம்பர் தான் வாங்கிய பணத்தைத் திருப்பிக்கொடுப்பானா என்பதையும் அவர்கள் அறியக் கூடும். பணம் திருப்பிக் கொடுக்கையில் கவனிக்கவேண்டிய ஒரு பெரிய நியாயம் என்னவென்றால் பணம் கடன் வாங்கினவன் அதைக் கொண்டு கிருஷிசெய்து, திருப்பிக் கொடுக்கவேண்டிய முதலையும் வட்டியையும் தவிர, தனக்கு லாபத்தையும் விளைவித்திருக்கவேண்டும். அல்லது, அதிக வட்டிக்கு வாங்கின கடனை திருப்பிக்கொடுத்து வட்டி லாபம் அடையவேண்டும். ஒரு மெம்பர் வெளியே கொடுக்கும் வட்டிக்கும், சங்கத்திற்கு கொடுக்கும் வட்டிக்கும் உள்ள தாரதம்மியத்தை கவனித்து அவன் இத்தனை தடவையில் பணம் வாபஸ் கொடுக்கலாம் என்பதையும் அவர்கள் தீர்மானிக்கக்கூடும். ஒரு மாசூலை உற்பத்தி செய்யக் கடன்வாங்கினால் அந்தக்கடனை தன் மாசூல் கைவசம் வந்தவுடனே திருப்பிக்கொடுக்கவேண்டும்; கடன் அவசியம் என்று பஞ்சாயத்துக்காரர்கள் தீர்மானித்து, மெம்பர்களும் அதை ஒப்புக்கொண்டுவிட்டால் அந்தப்பணத்தைக் குறிப்பிட்ட விஷயத்திற்கே உபயோகப்படுத்தவேண்டும். கலியாணத்துக்கென்று வாங்கிய கடனைக்கொண்டு மாடுவாங்கலாகாது. பஞ்சாயத்துக்காரர்கள் ஒப்புக்கொண்ட விஷயத்தைத் தவிர மற்றொரு விஷயத்துக்கு அந்தப்பணத்தை உபயோகிக்க சம்மதித்தால், கடன் வாங்கியவன்பேரில், பஞ்சாயத்துக்காரர்களுக்கு யாதொரு பிடிப்புமில்லை. இத்தனை தடவையில் பணத்தை வாபஸ் கொடுக்கவேண்டுமென்று தீர்மானிப்பதில் மெம்பர்களுடைய யோக்கியதாபக்ஷத்தைக் கவனித்து பஞ்சாயத்துக்காரர்கள் தீர்மானம் செய்கிறார்கள். ஒருவன் புகையிலை பயிர் செய்தால் அவன் மாசூலை கைப்பற்றி விற்றுமுதல் செய்தவுடன் கடனைத் திருப்பிக்கொடுப்பான். ஒருவன் வசத்தில் சணலிருக்கலாம். அவன் சணல் விலையான உடன் கடனைத் திருப்பிக்கொடுப்பான் மற்றொருவன் மாதச் சம்பளத்திற்கு வேலைசெய்கிறவனாயிருப்பான். அவன் மாசத்திற்கு இத்தனை என்று ஏற்படுத்தியபடி திருப்பிக்கொடுப்பான். பஞ்சாயத்தார்கள் கடன்கொடுக்க அதிகாரம் பெற்ற தொகையும், அவர்கள் சங்கத்து மூலதனத்துக்காக வாங்கக்கூடிய கடனும மெம்பர்களாலேயே வரையறைக்கப்பட்டிருக்கின்றன.

சங்கத்துக்காரியங்களை நிர்வகிக்கும் பஞ்சாயத்துக்காரர்கள் அல்லாமல், மேல் விசாரணை சங்கம் ஒன்று இருப்பது வழக்கம். அவர்களுக்கு குறிப்பிட்ட காலங்களில் கணக்குகளைப் பரிசோதிப்பது கடமை. தவிரவும், மெம்பர்கள் வாங்கும் கடன்களை சரியானபடி யுபயோகிக்கிறார்களாவென்றும், சரியானபடி யுபயோகிக்காவிட்டாலும், வேறெவிதமாய்ச் சங்கத்தின் பந்தோபஸ்துக்கு குறைவு நேரிடும்படி நடந்துகொண்டாலும், அப்பிசகுகளை பஞ்சாயத்தாருக்கு அவர்கள் தெரிவிப்பார்கள்.



இதுவரை ஐக்கிய சங்கங்களின் மூலநியாயங்களையும், அவைகளை விவகாரத்தில் கொண்டுவரும் முறைகளையும் பற்றிக் கவனித்தோம். அவைகளை மறுபடியும் தெளிவாய் சுருக்கிச் சொன்னால் நன்றாய் மனதில் பதியும்.

ராபீஸன் ஐக்கிய நாணய சங்கங்களின் மூல நியாயங்கள் ஏழு:—

1. அளவையற்ற உத்திரவாதம்.

2. கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளை ஒரு சிறிய வட்டாரத்துக்குள்ளேயே நடத்திவரவேண்டுமென்பது.

3. பங்குகளாய்ப் பிரித்த மூலதனமும், அதற்காக ஏற்பட்ட லாப பட்டவாடாவும் இல்லாதிருத்தல்.

4. நிர்வாகஞ்செய்யும் பஞ்சாயத்தாருக்கு சம்பளமில்லாமை.

5. சம்பாதித்த லாபத்தைக்கொண்டு கடனை திருப்பிக் கொடுத்தல்.

6. அச்சங்கங்களால் நல்ல நடத்தை விருத்தியாவது.

7. அச்சங்கங்களால் தனலாபமுண்டாகுமென்பது.

ஐரோப்பிய கண்டத்தில் சென்ற 50 வருஷகாலமாய் நடந்துவரும் ஐக்கிய நாணய சங்கங்கள் பெருகி விருத்தியடைவதற்கு காரணமான மூல நியாயங்கள் மேற்சொல்லிய ஏழுமேயாகும். இப்போது இந்தியாவிலும் அவைகள் விருத்தியடைந்து வருவதற்கும் அவைகளே மூலகாரணம்.

இன்னும் சொல்லவேண்டிய விஷயம் ஒன்றுதானிருக்கிறது. மேற்சொன்ன சங்கங்கள் வெகு சின்னவைகள். பெரும்பான்மையும் பலவீனமுள்ளவைகளாயிருக்கின்றன. எப்படி பல மெம்பர்கள் சேர்ந்து சங்கம் ஒன்று ஸ்தாபித்து பலமடைகிறார்களோ, அப்படியே சங்கங்கள் பல ஒன்று சேர்ந்து ஒரு சங்கங்களின் சேர்க்கை ஒன்று ஸ்தாபித்து, திரவியம், நிர்வாகம், மேல்விசாரணை முதலிய விஷயங்களில் பரஸ்பர உபகாரம் அடைகின்றன. இந்தியாவிலும் அதேமாதிரியாக, பல சங்கங்கள் சேர்ந்த சேர்க்கைகள் ஏற்படவேண்டும். இந்த ஐக்கிய நாணய சங்க விஷயத்தை கவனிக்கும் ஒவ்வொருவரும் இதுவே நோக்கம். ஐரோப்பிய தேசங்களில் அவைகள் விருத்தியடைந்தாற்போல் இத்தேசத்திலும் விருத்தியடையக்கூடும் என்று நம்புகிறோம். சங்கங்கள் ஒன்றோடொன்று சேர்ந்து ஐக்கியமுண்டானால் அவைகளில் ஜனங்களுக்கு நம்பிக்கை அதிகரிக்கும். பணம் வைக்கும் முதலாளிகளுக்கு அதிக பந்தோபஸ்தும் ஏற்படுகிறபடியால் இச்சங்கங்களுக்கு இன்னும் குறைந்தவட்டிக்கு பணம்கிடைக்கும். அதிக முதலுள்ள சங்கங்களின் பணம் குறைந்த முதலுள்ளவைகளுக்கு உதவும்.

இச்சங்கங்கள் நாளடைவில், இந்தியாவில் ஏழைகள் கடன்வாங்கியடையும் துன்பங்களை நிவர்த்தி செய்யும். ஆனால், பலபேர்களுடைய உதவியே

ண்டும். கவர்ன்மெண்டார் செய்யும் பணஉதவி நமக்கு அவசியமில்லை. தேசாபிமானம் உள்ளவர்கள் நம்முடன் சேர்ந்து, ஐக்கிய சங்கங்களின், நியாயங்களையும்; அவைகளால் விளையும் நன்மைகளையும் நாடெங்கும் பரவச்செய்து நூதனமாய் ஏற்பட்டுவரும் சங்கங்களுக்கும், அவர்களை நிர்வாகம்செய்யும் பஞ்சாயத்தார்களுக்கும் தைரியம் கொடுப்பதுமல்லாமல், புத்திமதியும் சொல்லவேண்டும். பணம் வாவென்றால் வரும். இந்தேசத்தையும், அதிலுள்ள பல எளிய ஜனங்களையும் அபிமானிக்கும் புண்ணியாத்துமாக்கள் எந்த வழியில் வருகிறார்களோவென்று தேடுகிறோம். அப்பேர்ப்பட்ட அபிமானிகள் தோன்றினால், தங்கள் காலத்தையும், தேக வலிமையையும், நமது தேசத்தில் பாடுபட்டும் ஏழைகளாயிருக்கும் கோடானுகோடி ஜனங்களுடைய நன்மைக்கே சமர்ப்பித்து விடுவார்கள். நம்முடைய ஐக்கிய சங்கங்களில் நம்பிக்கை கொள்வார்கள். இந்திய வாலிபர்களுக்கு இதைக்காட்டிலும் மேன்மையும் புண்ணியமும் நிறைந்த உத்தியோகம் கிடைக்குமோ? அதிக செல்வமும் செல்வாக்கும் வேண்டாம். அதிக கல்வியும் வேண்டாம். பொருமையும் பிறர்படுந் துன்பத்தில் பச்சாத்தாபமும்தான் வேண்டும். ஒருவன் தன்தேசம் க்ஷேமமடைய வேண்டுமென்று எண்ணுவனேல் அவன் செய்யக்கூடிய வேலைகளில் இதுவே மேலானது.

---

# ரிஸர்வு பண்டு என்று சொல்லப்படும் ஆபத்தனம்.

---

**1.** ஐக்கிய நாணய சங்கங்களுக்காக ஏற்பட்ட சட்டத்தில் 8 வது பிரிவில் பின் வருமாறு சொல்லியிருக்கிறது:—

(1) "கிராம ஐக்கிய சங்கத்து மெம்பர்களில் ஒருவருக்கும் லாபத்தைப் பிரித்துக் கொடுக்கக் கூடாது. ஆனால் இச்சங்கங்களில் வரும் லாபம் முழுமையையும் ரிஸர்வு பண்டு என்ற ஆபத்தனம் ஒன்றை ஏற்படுத்தி அதில் சேர்க்க வேண்டியது"

"இந்த சட்டத்தின் கீழ் ஏற்படுத்திய விதிகளின் பிரகாரம், மேல்கண்ட ரிஸர்வு பண்டு சங்கத்தார் வெளியோரிடத்திலிருந்து வாங்கியிருக்கும் கடன்களுக்குத் தகுதியான அளவு, பெருகி கொடுக்கும் கடன்களின் வட்டி வீதமும் தகுந்த அளவு குறைந்துவிடும் பக்ஷத்தில் அதன் பிறகு வரும் வருஷத்திய லாபங்களில் முக்கால் பங்குக்கு மேற்படாமல் மெம்பர்கள் பங்கிட்டுக்கொள்ளலாம்."

(2) "நகர் ஐக்கிய சங்கங்களில் வருஷாந்திர லாபங்களில் கால் பங்குக்கு குறையாமல் ரிஸர்வு பண்டுக்கு சேர்த்து விட்ட பிறகுதான் மெம்பர்களுக்கு லாபம் கொடுக்கலாம்."



**2.** லாபங்களை விநியோகம்செய்யும் முறையில் கிராம சங்கங்களுக்கும், நகரச் சங்கங்களுக்கும் ஏற்பட்டிருக்கும் வித்தியாசம் கவனிக்கத்தக்கது. இந்த வித்தியாஸத்திற்கு காரணம் என்னவென்றால், கிராம சங்கங்கள், ஐரோப்பா கண்டத்திலுள்ள ராபீஸன் சங்கங்களின் ஏற்பாட்டின்படி ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

அவைகளில் சேர்ந்த மெம்பர்கள் யாதொரு முதலும் வைக்கிறதில்லை. ஆகையால் அவர்களை முதலாளிகள் என்றும் பங்காளிகள் என்றும் சொல்லத்தகாது. நகர சங்கங்களிலோ அவைகளின் மெம்பர்கள் பங்கு ஒன்றுக்கு இவ்வளவு பணம் என்று விதிக்கப்பட்டபடி கொடுக்கும் முதலையே முக்கிய மூலதனமாகக் கொண்டு வேலை நடத்துகிறார்கள். ஆகையால், கிராமசங்கங்களில் லாபத்தைப்பங்கிட்டுக் கொடுத்தால், அச்சங்கங்களில் கடன் வாங்குகிற மெம்பர்களின் துன்பத்தால் பிழைப்பதுபோலாகும். ஆனால் நகர சங்கங்களில் லாபத்கிற் சிறுபாகத்தையாவது முதல் வைத்ததற்கு பிரதிபிரயோஜனமாகும்படி, கொடுப்பது அவசியம். பங்கு ஒன்றுக்கு இவ்வளவு என்று வைக்கும் பணத்தையே மூலதனமாகக் கொண்டு கிராமச்சங்கங்கள் ஏற்பட்டால் வைக்கும் முதலுக்குத் தகுந்த வட்டி கொடுப்பது நியாயம்தான். 1904-ம் வருஷத்திய 10-வது ஆக்டை மறுபடியும் மாற்றும்போது, இந்த விஷயத்தைத் தெளிவாய்த் தெரியப்படுத்துவார்கள் என்று நம்பலாம். ஒரு சங்கத்தை லாபம் சம்பாதிக்க வேண்டுமென்றே ஏற்படுத்தி, அதில், வருஷாந்திரத்தில் பிரித்துக் கொள்ளும் லாபம் அதிகரிக்கும்படி அதிக வட்டிக்கே பணத்தைக் கடன் கொடுப்பது அபாயம் என்றே சொல்லவேண்டும். ஏனென்றால், பாடுபட்டு வேளாண்மை முதலிய தொழில்களைச்செய்து பலருக்கு குறைந்த வட்டிக்கு கடன் கிடைக்கும்படி செய்வதே இச்சங்கங்களின் முதல் நோக்கம். இந்த நோக்கத்துக்கு நேர்விரோதமாய் பங்காளிகள் அதிக லாபத்தைப் பிரித்துக்கொள்வது அதிக அபாயமல்லவா? பங்காளிகள் பிரித்துக்கொள்ளும் லாபம், பங்கு ஒன்றுக்கு இவ்வளவுக்கு மேற்படக்கூடாது என்று சங்கத்தின் விதிகளிலேயே ஏற்படுத்தி விட்டால், மேற்கண்ட அபாயம் நீங்கிவிடும். இந்த விதிகள் ரிஜிஸ்திராருடைய அனுமதி பெறவேண்டியபடியால், யாதொருசங்கமும ஐக்கியசங்கமென்று பெயர் வைத்துக்கொண்டு அதிக லாபம் சம்பாதிக்காமல் அவர் பார்த்துக்கொள்ளக்கூடும். இப்போது ஐக்கிய நாணய சங்கங்களுக்கு 100 க்கு 7½ வட்டிக்கு மேற்படாமல் கடன் கிடைக்கக்கூடியபடியால் அதற்கு மேற்பட்ட லாபம் பங்காளிகளுக்குக் கொடுக்கலாகாது. இந்த நிபந்தனை, கிராம சங்கங்களுக்கும் தவிர நகர் சங்கங்களுக்கும் முதற் பாராவில் கண்டபடி ஆபத்தனம் பெருகி வட்டியும் குறைந்த பிறகும் கூட அதிக அவசியம் தான்.

**3.** 'ஆபத்தனம்' என்று ஒரு பண்டு ஏற்படுத்துவது முக்கியமான விஷயம். சென்னை ராஜதானியின் சங்கங்களில் ஆபத்தனத்தைப் பிரிவிடக்கூடாது என்றும் அது சங்கத்தாருக்கெல்லாம் பொதுவே தவிர தனித்தனியே ஒருவருக்கும் பாத்தியமில்லையென்றும், தெய்வீகத்தால்வரும் நஷ்டங்களை பர்த்திசெய்வதற்குத்தான் உபயோகப்படுத்த வேண்டுமென்றும், வேறே காரியங்களுக்கு உபயோகிக்கக் கூடாதென்றும், ரிஜிஸ்திரார் அனுமதியின்மேல்தான் அதை உபயோகப்படுத்தலாம் என்றும் ரிஜிஸ்திரார் சொல்லுகிறபடி அந்த ஆபத்தனத்தை பந்தோபஸ்து செய்ய வேண்டுமென்றும், சங்கங்களின் விதிகளிலேயே ஏற்பட்டிருக்கின்றன. ஆபத்தனம் என்றால் இன்னதென்று தெரியாத சிலர் இன்னாருக்குச் சொந்தமென்றும் இன்ன காரியத்துக்கு உபயோகம் என்றும் தெரியாத இந்த ரிஸர்வு பண்டுக்காக,, லாபத்திலிருந்து வருஷந்தோறும்

கொடுப்பானேன்? என்று கேட்கிறார்கள். இது அறியாமை. ஐக்கிய நாணய சங்கங்களுக்கு முக்கிய மூலதிரவியம், கடன் வாங்கிய பணம் தான். ஆகையால் மனதுக்கு எட்டிய வரையில் யோசித்தால், ஐக்கிய சங்கங்களுக்கு, அவைகளிற் சேர்ந்த மெம்பர்களின் யோக்கியதையும், அவர்கள் ஐக்கியத்துடன் தங்கள் விவகாரங்களை நடத்திக்கொள்வார்கள் என்ற தைரியமுமே ஜாமீன். ஆனால் சென்னை ராஜதானியில் ஐக்கியத்தால் நாணயம் ஏற்படும் என்பது ஜனங்களுக்கு நன்றாய்த் தெரியவில்லை. ஒரு கிராமத்தார் யோக்கியர்கள் என்று பெயர் ஏற்பட்டபோதிலும், வெகு தூரத்திலிருக்கும் முதலாளிகளுக்கு அவர்களிடத்தில் நம்பிக்கை ஏற்படுகிறதில்லை. சமீபத்திலுள்ளவர்கள் தான் நம்புவார்கள். அவர்களுக்கும் பணம் தேவை. சென்னை ராஜதானியிலுள்ள ஐக்கிய சங்கங்களுக்கு, வெளியூரார்கள் முதல் கொடுத்திருப்பதற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு. அது என்னவெனில், இவ்விராஜதானியின் கிராமங்களில் ஐக்கியம் சொல்ப அளவாகிலும் உண்டென்பதும், அந்த ஐக்கியத்தால் கிராமத்திலுள்ள பணக்காரர்கள் அக்கிராமத்திலுள்ள ஏழைகளின் க்ஷேமத்தைக்கருதி சங்கத்துப் பொதுக்கடனுக்கு தாங்கள் ஜாமீனாகிறார்கள். இப்பேர்ப்பட்டவர்கள் ஐக்கிய சங்கம் ஒன்றில் சேர்ந்தார்கள் என்றும், அதினால் தகுந்த ஜாமீனும், ஜாக்கிரதையான மேல் விசாரணை ஏற்பட்டதென்று, ரிஜிஸ்திராருக்குத் தெரிந்தவுடனே அச்சங்கத்திற்கு வேண்டிய அளவு கடன் கிடைக்கும்படி செய்கிறார். ஆனால் எப்போதும், ரிஜிஸ்திராரே இவ்விஷயங்களை கவனித்துக்கொண்டிருப்பதும், தகுந்த புள்ளிகள் சங்கத்தை விட்டுவிடுவார்களாவென்று அவர் கவனிப்பதும் அசாத்தியம். ஆனால் ஒரு ஐக்கிய சங்கம் ஏற்பட்டு, அதில் ரிஸர்வுபண்டு என்று மேற்சொல்லிய ஆபத்தனம் ஒன்றையும் காட்டக்கூடுமானால் அதினாலேயே, அச்சங்கத்தில் வெகு ஜாக்கிரதையுடன் கடன் கொடுக்கிறார்கள் என்றும், மேல் விசாரணை திறமையுள்ளதென்றும் பந்தோபஸ்துக்கு குறைவில்லை என்றும் தெளிவாகிறது. அதாவது, ரிஸர்வ்பண்டே, சங்கம் நல்லஸ்திதியிலிருப்பதற்கு ஒரு சாக்ஷியமாகும். ரிஸர்வுபண்டு ஒரு சங்கத்திற்கு ஏற்பட்டுவிட்டால் வெளியார்கள் அச்சங்கத்தில் பணம் வைக்கமாட்டார்கள் என்ற பயம் நீங்கிவிடும். ரிஸர்வு பண்டுக்கு மனம் தளராமல் லாபங்களைச் சேர்ப்பது மல்லாமல், ஒரு சங்கத்தோடு மற்றொருசங்கம் போட்டிபோட்டு அதைக் கூடியசீக்கிரத்தில் விருத்தி செய்யவேண்டும். வர்த்தக ரீதியாய் யோசித்தாலும் கூட தகுந்த ரிஸர்வு பண்டு ஏற்பட்டு சரியாய் நடந்து வரும் சங்கம் ரிஜிஸ்டிராருக்கும் பணம்வைக்கும் டிபாசிட்டர்களுக்கும் தெரியாமல் ரிஸர்வு பண்டுக்கு மிஞ்ச கடனில் ஆழ்ந்துவிடுமென்பது அசாத்தியம். ஆகையால் ஒரு சங்கத்திற்கு தகுந்த ஆபத்தனம் ஏற்பட்டால் வெளியோர் பணம் லேசாய் வருவதுமல்லாமல், சொல்பவட்டிக்கும் கிடைக்கும்.

சாதாரணமாய், சங்கங்களின் ரிஸர்வுபண்டுகளை சென்னை ஐக்கிய பாங்கியில் போடும்படி சட்டளையிட்டிருக்கிறேன். வெகு சங்கத்தார்கள் இதற்கு ஆக்ஷேபிக்கிறார்கள். ஆகையால் என் உத்திரவுக்கு ஆதாரமாய் சில விஷயங்களைச் சொல்லுகிறேன். ரிஸர்வு பண்டு என்பது வருஷந்தோறும் கொடுக்கல் வாங்கல் செய்யும் நடவடிக்கைகளில் நேரிடக்கூடிய பிசகுகளுக்கும் நஷ்டங்களுக்கும் உட்பட்டிருக்கக்கூடாது. ரிஸர்வுபண்டை பொது பொக்கிஷத்திலிருந்து விலக்கி வைத்திருப்பதே நிதிகளின் மேலான ஏற்பாடு. அதை வேறாகவைக்காவிட்டால் வருஷத்திய நடவடிக்கைகளில் நேரிடும் நஷ்டத்தை ரிஸர்வுபண்டிலிருந்து எடுத்து பர்த்தி செய்யவில்லை என்று ஜனங்களுக்கு என்னமாய்த் தெரியும்? தவிர ரிஸர்வு பண்டை, அதிக பந்தோபஸ்தான விடங்களிலேயே வட்டிக்குப் போட்டிருக்கவேண்டும். கவர்ன்மெண்டில் வட்டிக்குப் போட்டிருப்பதும், தபால்



ஆபிஸ்களில் டிபாஸிட் செய்திருப்பதும் நல்லதுதான். ஆனால் இவைகளில் 100க்கு $3\frac{1}{2}$ வட்டிக்கு மேல் கிடைக்கிறதில்லை. சென்னை அர்பன் பாங்கி அதிக பந்தோபஸ்து. அதின்கணக்குகளை ரிஜிஸ்திரார் தணிக்கை செய்கிறார். 100க்கு 5 வட்டி கொடுக்கிறார்கள். தவிர ரிஸர்வுபண்டு டிபாஸிட்டுகளை ரிஜிஸ்டிரார் உத்திரவு அன்னியில் எடுக்க முடியாது. ஆகையினால் அதுவே ரிஸர்வு பண்டுகளை வைக்க மிக சிலாக்கியமான இடம். சில சிறு சங்கங்களின் ரிஸர்வு பண்டுகளை அருகிலிருந்து விருத்தியடைந்து கொண்டிருக்கும் பெரிய சங்கங்களில் டிபாஸிட் செய்யும்படி அனுமதி கொடுத்திருக்கிறேன். பணத்தை பட்டணத்துக்கு அனுப்புவதில் அதிக செலவு ஆகிறது. அச்சங்கங்கள் தகுந்த யோக்கியதையுள்ளவையென்று ரிஜிஸ்தாருக்கு நேராகவே தெரியும். இப்படிப்பட்ட சில சங்கங்கள் தவிர மற்ற சங்கங்களின் ஆபத்தனம் முழுவதையும் பொதுவாக சென்னை ஐக்கியபாங்கியில் வைக்கவேண்டுமென்று விதித்திருக்கிறது. மற்றொரு சௌகர்யம் என்னவென்றால், இப்படி சென்னை ஐக்கிய பாங்கியில் வைக்கப்பட்ட பணம் முழுமையும் ஐக்கிய சங்கங்களுக்கே உதவுகின்றன. அப்படிச்செய்வதில் இந்த ரிஸர்வுபண்டு தனித்தனியான சங்கங்களின் லாப நஷ்டங்களினால் குறைவு படாது.

ஐக்கிய நாணய சங்கங்களின் ஆபத்தனத்தை பாதுகாப்பதற்கு எல்லாவற்றைக்காட்டிலும்சிலாக்கியமான இடம் எதுவென்றால், அச்சங்கங்கள் எல்லாம் ஒன்றுகூடி ஏற்படுத்தும் ஒரு மகாசங்கமாகும். இதன் நடவடிக்கைகளை எல்லாம் தனிச்சங்கங்களிற் பிரதி நிதிகள்சேர்ந்து நடத்தவேண்டும். மேல்கண்ட ரிஸர்வு பண்டுகளை செலவுசெய்ய வேண்டுமானால், மகாசங்கத்தில்சேர்ந்த எல்லாசங்கங்களின் பொறுப்பையும் ஜாமீனாக கொண்டு அத்துகைகளை சரியாய் விடுவதில் கவலை யுள்ளவர்களாலும் செய்யப்படும், அப்பேர்ப்பட்ட மகா சங்கங்கள் சென்னை ராஜதானியில் இல்லை. ஆகையால் கடைசியாய்ச் சொன்னபடி ரிஸர்வு பண்டுகளை காப்பாற்ற தற்காலத்தில் முடியாது.

ஆர். ராமசந்திரராவ்.

# கிராம நாணயச்சங்கங்கள்.

யுனைடெட் பிராவின்ஸ் ஐக்கியநாணயசங்கங்களின் ரிஜிஸ்தரார் கிராமநாணய சங்கங்களைப்பற்றி ஒரு சிறு பத்திரிகையை பிரசுரம் செய்திருக்கிறார். சென்னை இராஜதானியின் வேலை முறைமைகளை அனுசரித்து மாறுபாடுகளுடன் இவ்விஷயம் கீழே எழுதப்பட்டிருக்கிறது.

1. அநேகமாய் எல்லா விவஸாயிகளும் தங்களுடைய விவஸாயமுறைமைகளை சரிவர நடத்தும் பொருட்டு பணம் கடன்வாங்கவேண்டியதாயிருக்கும். விதை, நீர் பாய்ச்சல், ஏறு உழவுமாடுகள் முதலியவைகளுக்காக அவர்களுக்குப் பணம் தேவை. ஆனால் தங்களுடைய கைம்முதலிலிருந்து எல்லாச் செலவுகளையும் பெரும்பாலோர் செய்ய சக்தியற்றவர்களாயிருக்கிறபடியால் அவர்கள் கடன் வாங்கவேண்டியதாயிருக்கிறது. அப்படிக்கடன் வாங்குகிறதில் அநேகமாய் மிகவும் உயர்ந்த வட்டி கொடு

க்கவேண்டியதாயிருக்கிறது. ஒரு ஏழை விவஸாயி கொடுக்கிற ஜாமீன் மிகவும் குறைந்ததாயிருக்கிறபடியாலும், மேற்சொல்லிய விவஸாயிக்குக்கொடுத்திருக்கும் முதலைக்கூட இழக்கும்படியாயிருக்குமென்று கடன் கொடுப்பவன் கொள்ளும் பயத்தினாலும், எவ்வெளவுக்கெவ்வளவு ஏழையாய் ஒரு விவஸாயி இருக்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு உயர்ந்த வட்டி கொடுக்கவேண்டியதாயிருக்கிறது.

2. மேலும் அநேகமாய் எல்லா விவஸாயிகளும் தங்கள் பணத்தை தம் தம் வீடுகளில் படுக்கையின் கீழாவது, அடுப்பின் அருகிலாவது சுவற்றிலாவது, புதைத்து வைக்கிறார்கள். அந்தப்பணம் தங்களுடைய விவஸாயத்திற்குப்போதாததினால் அவர்கள் கடன் வாங்கவேண்டியதாயிருக்கிறது. எப்படியும் கடன் வாங்கவேண்டியிருக்கிறபடியால் செலவுக்கு வேண்டியமுழுத்தொகையை வாங்கிக்கொண்டு அவசியமான தேவை வரும் சமயத்தில் தங்களுடைய சொந்தப் பணத்தை எடுத்துக் கொள்ளலாமென்று அதை அப்படியே வைத்து விடுகிறார்கள். அநேகமாய் பணத்தை புதைத்து வைக்கிறவர்கள் பணம் எவ்விடம் புதைக்கப்பட்டிருக்கின்றதென்று தங்கள் சிநேகிதர்களுக்கு தெரிவிக்காமல் இறக்கிறபடியால் இந்தப்பணம் இழக்கப் படுகிறது. இப்படிக்குப் புதைத்து வைத்தபணத்தைக் கண்டெடுத்தால் அதை புதையல் என்று சொல்லுகிறார்கள்.

3. கிராம நிதியின் கருத்துக்கள் இரண்டுள. விவஸாயிகளிடமிருந்து முதலாளிகள் பெற்றுக்கொள்ளும் வட்டியைக்காட்டிலும் குறைந்த வட்டிக்குப் பணம் அவர்களுக்குக்கிடைக்கும்படியான மார்க்கத்தை ஏற்படுத்தல் ஒன்று; விவஸாயிகள் தங்களுக்காக ஸ்வல்பபணத்தை எப்படி சேகரிக்கக்கூடுமென்று கற்றுக்கொடுத்தல் இரண்டாவது. இதுமேற்சொல்லியதைவிட முக்கியமானதாயிருக்கிறபடியால் இதைப்பற்றி முதலில் விவரிப்பது உத்தமம்.

4. இரண்டாவது பாராவில் சொல்லப்பட்டபடி, அநேகமாய் எல்லா விவஸாயிகளும் தம்தம் வீடுகளில் எங்கேயாவது ஸ்வல்பப்பணத்தைப் புதைத்துவைத்திருக்கிறார்கள். அந்தப்பணம் விவஸாயத்திற்குப் போதாததினால் இலாபத்தைக் கொடாமல் பிரயோஜன மற்றதாயிருக்கிறது. ஆனால் பத்து அல்லது பதினைந்து பெயர்கள் சேர்ந்து ஓர் கிராமநாணயசங்கத்தை யேற்படுத்தித் தங்கள் வீடுகளில் புதைத்து வைத்திருக்கும் முழுத்தொகையையாவது அல்லது அதில் ஒரு பாகத்தையாவது வைப்பாகச்செலுத்தினால் அப்பணம் இரண்டொரு விவசாயிகளுக்கு வேண்டிய முழுத்தொகையை கொடுப்பதற்குபோதுமானதாயிருக்கும் இந்த இரண்டொரு பெயர்கள் தாங்கள் பெற்றுக்கொள்கிற பணத்திற்கு வட்டி கொடுக்க வேண்டியதாயிருக்கிறபடியால் அங்கத்தினர் தாங்கள் வைப்பாகச்செலுத்தியிருக்கும் பணத்திற்கு வட்டி யடைவார்கள்.

5. இந்தப்பத்து அல்லது பதினைந்து மனிதர்கள் ஒவ்வொரு பசலியில் தங்களுக்கு கட்டும்படியாக தாங்கள் வேலை செய்கிற ஒவ்வொரு உழவுக்கும் ஐந்து அல்லது பத்து சேர்தானியமாவது அல்லது இரண்டொரு ரூபாயாவது கொடுப்பதாக ஒப்புக்கொண்டால் கொஞ்ச நாட்களில் நாணயச் சங்கத்தில் தங்கள் செலவுக்கு வேண்டிய முழுப் பணம் சேர்ந்துவிடும். ஆகையினால் அவர்கள் சாவகாரிகளிடமிருந்து உயர்ந்த வட்டிக்கு கடன் வாங்கவேண்டியதாய் நேரிடாது. அத்துடன் தாங்கள் வைப்பாக செலுத்தியிருக்கும் பணத்திற்கு வட்டியும் அடைவார்கள் அவர்களுக்கு அவசியமாயிருக்கும் சமயத்தில் பணத்தை தாங்களே திருப்பிவாங்கிக்கொள்ளவுங் கூடும். ஒவ்வொருவருஷமும் சொல்பபணம் சேர்த்துவைக்கிற வழக்கம் உண்டாவதற்காக முதல் ஐந்து வருஷத்தில்



வைப்பாகசெலுத்தியிருக்கும் பணத்தை திருப்பிவாங்காம லிருப்பது நலம். இதில்செலுத்தியிருக்கும் பணம் இந்தச்சங்கத்தில் சேராதவர்களுக்கு கொடுக்கப்படாமல் இதின் அங்கத்தினர்களுக்கே அவர்கள் செலவுக்குவேண்டிய மட்டும் கொடுக்கப்படும் இச்சங்கம் கடன்வாங்குகிறவர்களுக்கு வருஷத்தில் ரூபாய்க்கு இரண்டணா வீதம் வட்டிக்கு கொடுத்து பணம் வைப்பாக செலுத்தியிருப்பவர்களுக்குக்கு ரூபாய்க்கு ஓரணா வட்டி கொடுத்தால் இச்சங்கத்திற்கு வருஷத்தில் ரூபாய்க்கு ஓரணா வீதம் லாபம் கிடைக்கும்.

6. ஒவ்வொருவரும் தனியாய் கடன் வாங்கினால் கொடுக்கவேண்டிய வட்டியைக்காட்டிலும் குறைந்தவட்டிக்கு சங்கத்திற்காக சேர்ந்து கடன் வாங்கலாமென்பது இப்பத்துப்பதினைந்து மனிதர்கள் சேருகிறதின்லாபம் அவர்கள் வாங்கியிருக்கும் பணத்திற்கு எல்லாரும் சேர்ந்தும் தனித்தனியாயும் பாத்தியப் பட்டவர்களாயிருப்பார்கள். ஆகையினால் இவர்களிடமிருந்து வரும் ஜாமீன் நல்ல ஜாமீனென்று எண்ணப்படும். மேலும் கடன் கொடுப்பவனுக்கு ஒவ்வொரு மனிதரோடு கணக்கு வைத்துக்கொள்வதைக்காட்டிலும் ஒருசங்கத்தோடு வைத்துக்கொள்வது நலம். ஏனெனில் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கும் பத்து பதினைந்து இடத்தில் எழுதாமல் ஒரே இடத்தில் எழுதிவிடக்கூடும். மேலும் அவன் பத்துப்பதினைந்து வசூல் செய்வதைக்காட்டிலும் ஒரே சங்கத்தினின்று வசூல் செய்வதினால் சிரமம் குறைந்துவிடுகிறது. பிரியாது செய்யும்படியாய் நேரிட்டாலும் அதிகமான பிரியாது செய்யாமல் ஒரே பிரியாதாய் செய்துவிடலாம். இவ்விஷயங்களெல்லாம் கடன் கொடுப்பவனுக்கு எடுத்துரைத்தால் நிச்சயமாய் அவன் ஒரு சங்கத்திற்கு குறைந்த வட்டிக்கு கடன் கொடுப்பான்.

7. அங்கத்தினருக்குக் கடன்கொடுத்தால் ரூக்கு இரண்டணா வீதம் வட்டி வாங்கிக்கொண்டு வைப்பாக பணம் செலுத்தியிருப்பவர்களுக்கு ரூக்கு ஓரணா வீதம் வட்டி கொடுக்கவேண்டுமென்று 5-வது பாராவில் சொல்லியிருக்கிறோம் இப்படி நடத்தினால் சங்கத்திற்கு லாபம் வரும். சாவகாரியிடமிருந்து பணத்தைவாங்கி அங்கத்தினருக்கு கடன் கொடுப்பதில் மேற்சொல்லிய முறைமையையே அனுசரித்தல் வேண்டும். முதலாளி 100 ரூக்கு வட்டி மாசம் எட்டணாவீதம் சங்கத்திற்கு கடன் கொடுத்தால் சங்கம் அங்கத்தினர்களுக்கு ரூக்கு வட்டி மாசம் இரண்டு தம்பிடிவீதம் கடன் கொடுக்கவேண்டும். இவ்விதமாய் கிடைக்கும் லாபம் சொல்பகாலத்தில் கடன் வாங்கியிருக்கும் முழுத்தொகையையும் திருப்பிக்கொடுக்கிறதற்கு போதுமானதாயிருக்கும், ஒரு சங்கம் வருஷத்திற்கு ரூக்கு ஓரணாவீதம் வட்டிக்கு 400 ரூ. கடன்வாங்கி அங்கத்தினர்களுக்கு ரூக்கு இரண்டணா வட்டி வீதம் கடன் கொடுக்கிறதாக வைத்துக்கொண்டால் சங்கத்திற்கு வருஷத்தில் 400 அணா அல்லது 25 ரூ. லாபம் வரும். மேலும் பின்னால் சொல்லுகிறபடியால் பணத்தை அநேக தவணைகளில் கொடுக்கும் படியாக இருந்தால்கடனை சுமார்பதினைந்து வருஷங்களில சிறுகச்சிறுக இலாபத்திலிருந்தே அடைத்து விடலாம் ஆகையால் இவ்விதம் முன் வாங்கப்பட்டகடன் கொடுக்கப்பட்ட பிறகு சங்கத்திற்கு 400 ரூ. மூலதனமாய் விடும். அங்கத்தினர்கள் வைப்பாக செலுத்தியிருக்கும் பணத்தைத் தவிர வேறு கடன் சங்கத்திற்கு கிடையாது.

8. ஒரு கிராமத்தில் விவசாயிகள் ஐக்கிய நாணய சங்கம் ஏற்படுத்தஇஷ்டப்பட்டால் அவர்கள் முதலில் ஒன்று சேர்ந்து ஓரிடத்தில் கூடி இவ்விஷயத்தைப்பற்றி நன்றாய் பேசவேண்டும். கூடியிருக்கும் ஜனங்களுக்கு இக்காரியம் நல்லதென்று தோன்றினால் அவர்கள் அச்சங்கத்தில் சேர இஷ்டப்படுகிறவர்களின் பெயர்களைக் குறித்துக். கொள்ளவேண்டும். ஆனால் சங்கத்தினால் கொடுபடவேண்டிய கடனுக்கு அங்கத்தினர்கள் எல்லோரும் சேர்ந்தும் தனித்தனியாயும் பாத்தியப்பட்டவர்களாயிருக்கிறபடியால்

அயோக்கியர் என்று தெரிந்தவர்களையும், பண விஷயங்களில் அஜாக்கிரதையாயிருக்கிறவர்களென்று பெயர்பெற்றவர்களையும் கொடுக்கவேண்டிய சமயத்தில் கடனைத் திருப்பிக்கொடாதவர்களையும், அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ளக்கூடாது. மிகவும் யோக்கியர்களாயும், வாங்கியிருக்கும் கடனைத்திருப்பிக்கொடுக்கிறவர்களாயும் இருக்கிறவர்களைத்தான் சேர்த்துக்கொள்ள வேண்டும். இவ்விதம் பெயர்களைக்குறித்துக் கொண்ட பிறகு அங்கத்தினர்கள் தங்கள் சங்கத்தை ரிஜிஸ்தர் செய்வதற்காக ரிஜிஸ்த்ராருக்கு எழுத வேண்டும். இச்சங்கத்தைப்பற்றி விசாரிப்பதற்காக ஓர் இன்ஸ்பெக்டரை அனுப்புவித்து எல்லா விஷயங்களும் சௌகரியமாயிருந்தால் அதை ரிஜிஸ்தர் செய்வார்கள். பிறகு இன்ஸ்பேக்டர் அவ்வூருக்கு வந்து அச்சங்கத்தார்களுள் ஒரு பஞ்சாயத்தை ஏற்படுத்தி, வேலைஎவ்விதம் ஆரம்பிக்கிறதென்று கற்றுக் கொடுப்பார். பஞ்சாயத்தார்கள் எல்லா அங்கத்தினர்களுக்காக வேலையை நடத்தவேண்டியபடியால் அவர்கள் மிகவும் புத்திசாலிகளாயும் ஊராரால் மதிக்கப்பட்டவர்களாயும் இருக்கவேண்டும். பஞ்சாயத்தை ஏற்படுத்தினபிறகு அந்தப்பஞ்சாயத்தார் தங்களுக்குள் ஒருவரைத் தலைவராக நியமித்துக்கொள்ளவேண்டும்.

9. பிறகு மெம்பர்கள் எவ்வளவு பணம் வைப்பாகச் செலுத்தத்தயாராயிருக்கிறார்களென்று விசாரித்து, அந்த வருஷம் கடன் கொடுப்பதற்கு எவ்வளவு பணம் வேண்டியதாயிருக்குமென்று தெரிந்து கொள்வது அவசியம். இருபது அங்கத்தினர்கள் சேர்ந்து நூறு ரூ. வைப்பாகச் செலுத்தியிருக்கிறதாய் வைத்துக்கொள்வோம். முதல் வருஷம் விவஸாயத்திற்கு அவர்களுக்கு 400 ரூ. தேவையாயிருக்கலாம். ஆகையால் அவர்கள் 300 ரூ. கடன் வாங்கவேண்டியதாயிருக்கும். அவர்கள் ஒன்று சேர்ந்து அவ்வூர் சாவகாரியிடம் போய் வருஷத்தில் நூற்றுக்கு ஐந்து அல்லது ஆறு ரூ. வீதம் குறைந்த வட்டிக்கு தங்களுடைய சேர்ந்த ஜாமீன் பேரில் கொடுக்க சம்மதிக்கிறானா வென்று கேட்க வேண்டும். அப்படிக் கொடுக்கிறதற்கு ஒருக்கால் சம்மதிக்கலாம். அப்படியானல் பணத்தை கடன் வாங்கிக் கொண்டு அங்கத்தினர்களுக்கு கேட்ட சமயத்தில் கொடுக்கவேண்டும். சாவகாரி அப்படிக்கொடுக்க சம்மதிக்காவிட்டால், பட்டணம் ஐக்கிய நாணயசங்கத்தின் ரிஜிஸ்தராருக்கு, இச்சங்கம் எப்படி நடந்து வருகிறதென்பதைப் பற்றியும், எவ்வளவு பணம் வேண்டுமென்பதைப்பற்றியும் எழுதினால் 100க்கு வட்டி 7½ ரூ. வீதம் பணம் கடன் கொடுக்கும்படி செய்வார்.

10. ரிஜிஸ்தரார், வேண்டிய சமயங்களில் சங்கத்திற்கு பணம் கடன் வாங்குகிறதற்கு உதவி செய்வதுடன், கணக்குகள் எப்படி வைத்துக்கொள்ளுகிறதென்றும், வேலையை எப்படி நடத்தவேண்டுமென்றும், இன்னும் எந்தவிஷயங்களில் சகாயம் வேண்டியிருக்கிறதோ அவ்விஷயங்களில் இவர்களுக்கு யோசனைசொல்லவும் தயாராயிருக்கிறார்.

# கிராம ஐக்கிய நாணய சங்கங்கள் கவனிக்கவேண்டிய சுலபமான விதிகள்.

---

வங்காள நாட்டு ஐக்கிய நாணயச்சங்கத்தின் "ரிஜிஸ்தரார்" கிராமங்களில் ஏற்படுத்தப்படும் சங்கங்களும் அதைச் சேர்ந்த [1]இன்ஸ்பெக்டர்களும் கவனிக்க வேண்டிய விதிகள் அடங்கிய ஒரு உபயோகமான பத்திரிகையை வெளிப்படுத்தி இருக்கிறார். இந்த நாட்டில் நடந்து வரும் வேலையின் நிலைமைக்குத் தக்கபடி சில பதங்களை மாற்றி அந்த பத்திரிகையின் பொருள் எழுதப்பட்டிருக்கிறது. நாட்டில் உள்ள எல்லா சங்கங்களும் இந்த கட்டளைகளைப் படித்துத்தெரிந்து கொள்வதுடன், விவரமாய் சொல்லப்பட்ட இந்த நியமங்களை இன்ஸ்பெக்டர்கள் சங்கங்களுக்கு இடைவிடாது போதித்துக் கொண்டிருக்கவேண்டும்:—

" இந்த மாகாணத்தின் சங்கங்களை நேரில் சோதிக்கவே பலவிடங்களிலும் உள்ள அநேக சங்கங்களின் பல விதமான குறைகளை நான் கவனித்தேன். இக்குறைகளுக்கு முதல் காரணம் மெம்பர்கள் தங்களுடைய சங்கத்தின் நோக்கத்தையும் அதன் முக்கிய நியமங்களையும் முழுதும் அறிந்து கொள்ளாததே. இதனால் அவர்கள் ஒழுங்காய் நியமம் செய்த விதிகளின் ஆவசியகத்தை மதிப்பதில்லை என்றும், அவர்களுடைய கணக்குகள் சரிவர வைக்கப்படவில்லை யென்றும் அவர்களுடைய அப்பியாசங்கள் ஜாக்கிரதையற்றதாயும் அபாயம் விளைவிப்பதாயும் இருக்கின்றனவென்றும் தெரிய வருகின்றன. இப்படி இருப்பதால் நான்மெம்பர்கள் இன்ஸ்பெக்டர்கள் ஆகிய இருவகையார் தன்மையை நோக்கி அவர்களுக்கு வேலை செய்வதில் பிரியம் கவனம் ஒழுங்கு முதலிய குணங்களை உண்டாக்கவும் இப்படி செய்வதால் காரியஸித்தியைப் பெறவும் சில விதிகளை எழுதுகிறேன்.

## நோக்கங்கள்:

ஐக்கியநாணயத்தின் முக்கிய விஷயம் என்னவென்றால் பயிர் செய்பவனுடைய நாணயத்தின் உண்மையான மதிப்புக்குத்தகுந்தபடி பலன் அடையவேண்டுமென்பதே: அதாவது அவன் நேர்மைக்கும் உத்தரவாதம் செய்யக்கூடிய சக்திக்கும் உரியபடி கடன் வாங்கும் சக்தியை உண்டு பண்ண வேண்டும் என்பதே. பயிரிடும் ஒருவன் தனியே கடன் வாங்க முயன்றால் அவன் நாணயம் மெலிந்து கடன் கொடுப்பவன் இச்சைப்படி வாங்க நேரும். அப்படி யல்லாமல் பலர் ஒன்று சேர்ந்து ஒரு சங்கத்தை ஸ்தாபித்து அந்தச் சங்கம் விரும்பும் கடன்களுக்கு ஒன்று சேர்ந்தும் தனித்தனியாயும் பாத்தியப் பட்டவர்களாய் இருந்தால் அவர்களுடைய நாணயம் பலப்பட்டு நியாயமான வட்டிக்குக் கடன்

---

1. பெயர்வழிக்கணக்குகளை குறித்து பதிந்து வைக்கும்படி நேமிக்கப்பட்ட ஒரு உத்தியோகஸ்தர், இந்த பதம் வரும் இடங்களில் இதே கருத்தில் உபயோகிக்கப்படும்'
2. மேல்விசாரணை செய்யும் உத்தியோகஸ்தர்.

கிடைக்கும். "மேலும் கூட்டுறவு, பணத்தை மிகுத்தல், செட்டு, சுதந்தரம், தன்னையே தான் ஆதரித்துக்கொள்வது ஆகிய குணங்களை விருத்தி செய்வதும் இச்சங்கத்தின் மற்றொரு நோக்கம். இந்த குணங்கள் காரியசித்திக்கு அவசியமானவை.

## நியமங்கள்:

ஒரு சங்கத்தின் முக்கிய ஆதாரமான நியமம் எல்லை இல்லாமல் உத்தரவாதமாய் இருத்தல். இதனால் ஒவ்வொரு மெம்பரும் மற்றவர்களுக்கு உத்தரவாதம் செய்வதாகும். ஒரு மெம்பர் கொடுக்க வேண்டிய தொகையை கொடுக்கத்தவறினாலும் அல்லது சுத்தமாய்க்கொடுக்க முடியாமல் போனாலும் அவனுக்கு ஜாமீன் நின்று வாங்கிக்கொடுக்க மெம்பர்கள் முதல் பொறுப்பு. இப்படி ஜாமீன் கொடுத்தவர்களும் கொடுக்கத் தவறினால் மற்ற எல்லா மெம்பர்களும் கடைசியாய்க் கொடுத்துத் தீரவேண்டும். சங்கத்தின் கடன்களுக்காக ஒவ்வொரு மெம்பரினுடைய சகல சொத்தும் சங்கக்கடனை செலுத்தக் கிரயத்துக்கு வந்து விடும் என்பது எப்பொழுதும் தெளிவாய்க் கவனம் இருக்க வேண்டும்.

இந்த நியமப்படி நடப்பதால் அபாயம் நன்மை இரண்டும் சம்பவிக்க இடமுண்டு. ஆனால் மெம்பர்கள் தங்கள் சங்கத்தின் விஷயங்களை நியமப்படி நடத்தி வந்தால் நல்ல லாபத்தையும் நற்குணப்பயிற்சியையும் அடைவார்கள். சங்கத்தின் விஷயங்கள் சரிவர நடக்காவிட்டால் நஷ்டம் நேரும்; ஆபத்துக்களுக்கு உட்படுவார்கள். அவர்களுடைய தொழிலை அதிக ஜாக்கிரதையாய் நடத்துவது அவர்களுடைய கடமைக்கும் நன்மைக்கும் பொருத்தமானது. பண விஷயமாய் ஒவ்வொரு மெம்பரும் மற்றவர்களுக்கு உத்தரவாதமாகையால், நாணயமும் உண்மையும் உள்ளவன் என்று எல்லா மெம்பர்களும் உறுதியாய் நம்புகிறவர்களை மட்டுமே மெம்பர்களாய்ச் சேர்க்க வேண்டும். அப்படிச் சேர்க்கப்பட்ட பின் ஒருவனிடத்தில் உள்ள நம்பிக்கையில் உறுதிப்பாடு குறைந்தால் அவனுக்கு வரவேண்டிய தொகைகளை வசூல் செய்துக்கொண்டு உடனே சங்கத்தினின்று நீக்கி விடவேண்டும். மேலும் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டபின் ஒவ்வொரு மெம்பரும் நான் விதிக்கும் நியமங்களைகருத்துடன் கவனிக்கவேண்டும்.

"சங்கத்தை நிர்வாகம் செய்பவர்களை இரண்டு பாகமாய் பிரிக்கலாம். (க) பஞ்சாயத் (உ) சாமான்ய மெம்பர்.

(க) பஞ்சாயத்.—இவர்களுடைய முக்கிய கடமைகள் என்னவெனில்

(1) ஒழுங்கு தவறாமல் ஒரு குறித்த நாளில் (உதாரணமாய் பௌர்ணமை தினம்) குறைந்தது மாதத்தில் ஒரு தரம் கூடவேண்டும். நிர்வகிக்க வேண்டிய வேலை ஒன்றுமில்லாவிட்டாலும் இந்த மாதாந்திர சபை கூட வேண்டும். இப்படி சபை கூடுவது சங்கத்தின் விஷயங்களை மெம்பர்கள் கவனிக்கும்படி செய்கிறது; மேலும் இப்படிக் கூடாவிட்டால் சங்க விஷயங்களில் மெம்பர்களுக்குப்பிரியம் குன்றிக்கெடுதி நேரும். ஒவ்வொரு விஷயமும் இந்த சபையின் முன்னிலையில் பகிரங்கமாய் நடக்கவேண்டும். சங்கத்தார் எல்லொரும் ஏகோபித்து நல்ல அபிப்பிராயம் கொண்டால் தான் ஒருவன்மெம்பராக சேர்க்கப்படலாம். கடன் வாங்கச் செய்துக் கொண்ட விண்ணப்பங்களை முன்பின் ஆலோசித்து கடன் கொடுக்கவும் கொடாமல் தள்ளிவிடவும்



அதிகாரமுண்டு. அப்படி கடன் வாங்குவதன் நோக்கத்தை ஜாக்கிரதையாய் யோசித்துவிண்ணப்பத்தில் காட்டிய நோக்கத்தை ஈடேறச்செய்ய அவசியம் வேண்டும் தொகையை மட்டும் உத்தரவு செய்யவேண்டும். உபயோகமான அல்லது அதி அவசியமான விஷயங்களுக்குமட்டுமே கடன் உத்தரவு செய்யவேண்டும். சபையின்முன்னிலையிலேயே பணம் கொடுத்தல் வாங்குதல் கணக்கு பதிவு முதலியவை நடக்கவேண்டும். நியமிக்கப்பட்டபடி வரவு அல்லது செலவுத் தொகைகளை தகுந்த புஸ்தகத்தில் பதிய வேண்டிய இடத்தில் கவனமாய்ப் பதிவு வேண்டும். ஒவ்வொரு மெம்பரினுடைய உத்தரவாத நிலைமையை மாதாந்திரம் சோதித்து உத்தரவாதக் குறைவான மெம்பர்களின் கடன்களை உடனே வாங்கிவிடவேண்டும். ஒவ்வொரு மாதமும் வரவேண்டிய கடன் தொகைகளின் விவரங்களைப்பார்ப்பதோடு அத்தொகைகள் எவ்விதமாய் உபயோகப்படுகிறதென்பதையும் சோதிக்கவேண்டும் அப்படி தொகைகள் தகாதவிதமாய் உபயோகிக்கப்பட்டால் பணத்தை உடனே வசூல் செய்வதோடு அந்த மெம்பரும் நீக்கப்படவேண்டும். தவறுகளும் பிரியாதுகளும் இந்தசபையில் ஆலோசிக்கப்படும். சாதாரணமாய் பஞ்சாயத்தார் பிரதிமாதமும் சங்கத்தினுடைய நிலைமையையும் வேலைகளையும் விவரமாய்பார்வையிடவேண்டும்.

(2) எல்லா வேலைகளையும் பகிரங்கமாயும் ஒன்று சேர்ந்து நடத்தவேண்டும்—தெளிவாய் உத்தரவு இருந்தால் அல்லாமல் பஞ்சாயத்து மெம்பர்கள் அதன் அக்கிராஸனாதிபதி உள்பட சுயமாய் பொறுப்பு ஏற்றுக்கொண்டு ஒரு விஷயமும் நடத்தக் கூடாது. மாதாந்திரம் கூடும் பஞ்சாயத்தார் சபையில் காரிய நிர்வாகம் செய்யப்போதுமான பஞ்சாயத்தார் சமூகத்தில் கூடிய பஞ்சாயத்தார் ஏகோபித்து எல்லாம் நடத்தவேண்டும்: இப்படி ஏகோபித்து பகிரங்கமாய் நடத்துவது மிகவும் அவசியம். இப்படி நடத்தாவிட்டால் ஒருவருடைய அதிகாரம் மேலிட்டு அதனால் சங்கத்திற்கு அதிக அபாயம் விளைவதோடுகூட கூட்டுறவினர் சங்கம் ஸ்தாபித்த தன்முயற்சியும் நோக்கமும் வீணாகும்.

(3) வரவேண்டிய கடன்களை முதலும் வட்டியும் சேர்த்தும் வசூல் செய்ய தாமதமன்னியில் பிரயத்தனப்படவேண்டும். கடன்கள் கொடுக்கும் போது திரும்பிக் கொடுக்க வேண்டிய தேதி ஏற்படுத்தவேண்டும். விசேஷமான சமயங்கள் தவிர சாதாரணமாய் 12 மாதத்துக்கு மேல்வாய்தா கொடுக்கக்கூடாது. ஒருதேதி நிச்சயிக்கப்பட்டால் தங்கு தடை இல்லாமல் அந்த தேதியிலேயே முதலும் வட்டியும் வசூல் செய்யவேண்டும். தவணை அதிகப் படுத்த வேண்டுமானால் துணைச் சட்டங்களின் விதிப்படி கண்டிதமாய் உத்தரவு கொடுக்கவேண்டும். இந்த விதி தவறாமல் கவனிக்கவேண்டும் சங்கம் உபகாரமாய் இருக்கும் பொருட்டுமுதல் எப்பொழுதும் சுழண்டுகொண்டே இருக்கவேண்டும் கடன்களை நீடித்து

வாங்காமல் விட்டிருந்தால் சங்கத்து மெம்பர்கள் மிச்சம் பிடிக்கவும் விருத்தி செய்யவும் அப்பியாஸம் செய்ய சந்தர்ப்பமில்லாமல் போய்விடும். தவிர சங்கத்தின் நோக்கம் தவறிவிடுவதோடு மூலதனம் எப்படி அதிகரிக்கவேண்டுமோ அப்படி அதிகரிக்காது,

(4) சங்கத்தில் பணம் கட்டவும் அதன் விஷயங்களில் ஒவ்வொருவரும் விருப்பத்தோடு வேலை செய்யும்படியும் பொதுவாய் சங்கத்தின் மெம்பர்களுடைய நன்மையை விருத்தி பண்ணும்படியாய் தூண்டுவது. தங்களுடைய சங்கத்தைதாம் நன்குமதிப்பதாக மெம்பர்கள் தங்கள் பணங்களைக் கட்டி வைப்பதினால் வெளியிடலாம். அவர்கள் பணத்திற்கு வட்டிவருவதுடன் மிச்சம் பிடிக்க ஆரம்பிப்பார்கள். மெலும் அவர்கள் பொருள் வைத்திருப்பதால் சங்கத்தின் நன்மையில் அவர்கள் கவனத்தை செலுத்தி சங்கம் நியமப்படி நடக்கும் வழியை கவனிக்கும்படி தூண்டப்படுவார்கள். பஞ்சாயத்தைச்சேர்ந்த ஒவ்வொரு மெம்பரும் தன்னால் இயன்ற மட்டும் பின்சொல்லுகிறவிதம் செய்யவேண்டும்.

(a) கடன் கொடுக்கப்பட்டு திரும்பிச் சேராத ஒவ்வொரு தொகையைப்பற்றியும் விவரமாய் இருந்த காரணத்திற்கு இவ்வளவு தொகைகொடுக்கப்பட்டது என்று அறிந்திருக்கவேண்டும்.

(b) எந்தவிஷயத்தின் பொருட்டு கொடுக்கப்பட்டதோ அதே விஷயத்தில் அந்த தொகை உபயோகிக்கப்படுகிறதா என்று கவனித்து அப்படிகிரமப்படி உபயோகப்படுத்தாத பக்ஷத்தில் உடனே அந்த விஷயத்தை பஞ்சாயத்தார் சமூகத்தில் தெரியப்படுத்தவேண்டும்.

(c) மெம்பர்கள் ஜாமீன் கொடுத்தவர்களுடைய பணப் பொறுப்பின் நிலைமையைப்பற்றி தான் விசாரித்து பொறுப்பு விஷயமாய் ஏதாவது மாறுதல் நேர்ந்ததாகத்தோன்றினால் உடனே பஞ்சாயத்தாருக்கு தெரியப்படுத்தவேண்டும்.

(d) பஞ்சாயத்தார் கூடும் ஒவ்வொரு சபையிலும் தான் ஆஜராய் இருந்து சங்கத்தின் நடவடிக்கையின் எல்லா அம்சங்களையும் தான் அறிந்துகொள்ளவேண்டும்.

(e) கணக்கு பரிசோதிப்பவர் ஒருவர் இருந்தால் அவராவது அல்லது பஞ்சாயத்தாரில் ஒருவராவது கணக்குகளை சோதிக்கும்படி செய்யவேண்டும்.

**2. மெம்பர்.**—கடமைகள்—

(a) **தான் செலுத்தவேண்டிய வட்டியைகாலம் தவறமல் கோடுப்புடன் முதலையும் குறிப்பிட்ட தேதியில் செலுத்தவேண்டும்.**—இது மெம்பருடைய முக்கியமான கடமை. இப்படிச் செய்தால் தான் தொழில் நடத்தும் நல்ல அப்பியாசங்கள் தெரியும். மேலும் மூலதனம் சதாசுழன்றுகொண்டே உபயோகப்படுவதோடு ஆபத்தனமும் விருத்தி அடைய இடமுண்டு,



(b) **கூடுமானபொழுது சங்கத்தில் பணம் வைத்தல்.**—இதுவும் மிகவும் முக்கியமானது. இதனால் மெம்பர்கள் பணம் விருத்திசெய்து மிச்சம்பிடிக்கக் கற்றுக்கொள்வார்கள். இப்படிச் செய்வதால் மெம்பர்களுக்கு சங்கத்தில் ஒருவித பற்று உண்டாய் மற்ற மெம்பர்கள் அவரவர்களுடைய கடமைகளை கைவிடாமல் நடத்துகிறார்களா என்று கவனிக்கும்படி தூண்டப்படுகிறார்கள். மேலும் இப்படி சங்கத்தில் பணம் கட்டுவதில் வட்டி வருகிறபடியால் லாபகரமாயும் இருக்கும்.

(c) பஞ்சாயத்தார் சபை கூடும்போது மெம்பர்களும் அடிக்கடி அவர்களுடைய ஸம்பாஷணைகளைபோய் கவனிக்கவேண்டும். இப்படிச் செய்வதால் சங்கத்தின் வேலைகளைப்பற்றி விரிவாய் தெரிந்துகொண்டு ஏதாவது குறைகள் நேர்ந்தால் உடனே அறிந்துக்கொள்ளலாம்.

(d) பஞ்சாயத்தார் அவர்களுடைய வேலையை நியமப்படி நடத்துகிறார்களா என்று கவனிக்கவேண்டும். பஞ்சாயத்தாரில் ஒருவருடைய நடத்தை மெம்பர்களுக்கு அதிருப்தி உண்டுபண்ணுமானால் அவருக்கு பதிலாய் மற்றொருவரை ஏற்படுத்தவேண்டும்.

(e) வருஷமுடிவில் சங்கத்துவேலைகளை விவரமாய் திரும்பி பரிசோதிக்கும்போது சபையிலிருந்து விஷயங்களை கவனிக்கவேண்டும். இந்தப் பொதுச்சபைக்கே சங்கத்தின் சம்மந்தமாய் பிரதானமான அதிகாரங்கள் உள்ளபடியால் ஒவ்வொரு மெம்பரும் இந்த மகாசபையில் இருப்பது மிகவும் முக்கியம். சங்கத்தின் மெம்பர்கள் யாவரும் வருஷத்தில் ஒருமுறை கூட்டம்கூடி சென்ற வருஷத்தின் வேலையை விசாரித்து முக்கியமான சங்கத்து வேலைகளை பார்க்கும் உத்தியோகஸ்தர்களின் நடவடிக்கையை யோசித்து வேறு உத்தியோகஸ்தர்கள் நியமிப்பது அவசியமானால் அப்படிச் செய்து மற்றுபிரியாதுகளையும் விவாதங்களையும் தீர்மானம் செய்வதோடு இனிவரும் வருஷத்தின் வேலையை திட்டம்செய்வது அவசியம். இப்படிக்கூடுவதால் சங்கம் தங்களுடையதே, சங்கம் ஓங்கிதலை எடுப்பதும், தலை எடாமல் அழிவதும் தங்களாலேயே என்று மெம்பர்களுடைய மனதில் பதிவது முக்கிய கருத்து.

(f) சாதாரணமாய் மெம்பர்கள் சங்கத்தைச் சேர்ந்த எல்லாவிஷயங்களிலும் உரிமை பாராட்டவேண்டும் எல்லாமெம்பர்களும் இப்படிச்செய்தால் சங்கம் லாபகரமாய் இருக்குமென்பதில் சந்தேகமில்லை.

"இந்த நியமங்கள் சமான்யமானவைகளானாலும் அதிகபிரயோசனமுள்ளவை. சங்கமானது தங்களுடையதே. ராஜாங்கத்தார் உண்டுபண்ணிய ஒரு சங்கமன்று என்பது மெம்பர்கள் மனதில் உறுதியாய்ப் பதியவேண்டும். பண உத்தாசையாலும், யோசனை சொல்வதாலும், ஆதரவு அளிப்பதாலும் உதவிசெய்வதுதவிர ராஜாங்கத்தார் மற்றப்படி மேலே ஒன்றும் செய்யமாட்டார்கள். வரும் லாபத்தை எடுத்துக்கொள்ளவும் மாட்

டார்கள். நஷ்டத்தை ஏற்றுக்கொள்ளவும் மாட்டார்கள். சிக்கனத்தாலும் கூர்மையான யுக்தியாலும் சங்கத்தின் அங்கத்தினர் யாவரும் நியமப்படி நடந்துகொள்கிறார்களா என்று ஒவ்வொருவரும் கவனித்துப் பார்ப்பதினால் சங்கம் அதிக லாபகரமானதாயும் கடன் கொடுக்கப்போதுமான பணம் கையிலிருப்பதோடு சேமித்துவைக்கும் ஆபத்தனமும் அதிகப்படும். சங்கத்திற்கு வரவேண்டிய கடன்தொகைகள் திருப்பிவந்துசேர்ந்த பொழுது, அந்த மூலநிதி சங்கத்தின் மெம்பர்களுடையதாகையால் சொல்பவட்டிக்கு பணம் வாங்கிக்கொள்ளலாம். இந்த ஸ்திதிக்கு சங்கம் வருவதற்குள் ஒவ்வொருவரும் ஜாக்கிரதையோடு வேலை நடத்துவது, சிக்கனமாய் இருப்பது, மிச்சம் பிடித்துவைப்பது ஆகிய நன்மைகளை அறிந்த நல்லதனப் பொறுப்புள்ளவர்களாவார்கள். ஆனால் மேல் சொல்லப்பட்ட நியமங்களை அனுஷ்டிக்காத பக்ஷத்தில் அதிக நஷ்டம் விளையக்கூடும். சங்கத்தில் தவறுகளும் சங்கடங்களும் உண்டானால் உபகாரம்செய்து மீட்டு நல்ல ஸ்திதிக்கு கொண்டுவரத்தக்க அயலார் யாருமில்லை. சங்கத்தின் கடன்களுக்கு ஒவ்வொரு மெம்பரும் உத்தரவு சொல்லவேண்டிவரும். சங்கத்தின் நோக்கம் சித்தியாவதும் தவறிப்போவதும் மெம்பர்கள் நடந்துகொள்ளும்விதத்தை தழுவநேரும்.

---

## இன்ஸ்பெக்டருடைய கடமைகள்.

---

மேல் விவரித்துச் சொல்லிய நியமங்களை படிப்பதினால் மாத்திரம் சங்கங்கள் இந்த நியமங்களின் அருமையை தெளிய அறிந்துகொள்வது அசாத்தியம். இன்ஸ்பெக்டர்கள் அடிக்கடி பார்வையிட்டு சங்கங்களுக்கு ஒத்தாசை செய்வார்கள். ஐக்கிய நாணயச் சங்கம் நீடித்து நிலைபெற இன்ஸ்பெக்டர்கள் பரிசோதிப்பது மிகவும் அவசியம். அப்படி பரிசோதிப்பது விவரமாய் விஷயங்களை நுட்ப ஆராய்ச்சிசெய்ய முக்கிய சாதகமாய் இருப்பதோடு கூட ஒழுங்கு தவறுதலால் உண்டாகும் தவறுகளைத் தடுத்து சங்கத்தின் மெம்பர்களுக்கு அபாயமில்லை என்ற கவலையற்ற நிலைமை உண்டுபண்ணுகிறது. ஒவ்வொரு சங்கத்தையும் இன்ஸ்பெக்டர்கள் கூடிய மட்டில் அடிக்கடி போய்பார்க்கவேண்டும்.

இன்ஸ்பெக்டருடைய கடமைகள்:—

(a) **கணக்குகளை ஜாக்கிரதையாய் பரிசோதித்தல்**—கையில் உள்ள ரொக்க இருப்பை சோதனை செய்து ரொக்க வரவு செலவுக் கணக்கில் காட்டியதொகைக்குச் சரியாய் இருக்கிறதா என்று பரிசோதிக்கவேண்டும். அப்படியல்லாமல் மாறுபாடிருந்தால் அந்த மாறுபாட்டிற்கு தக்க காரணம் கண்டுபிடிக்கவேண்டும். ஒவ்வொரு கணக்கு புஸ்தகத்திலும் பதிந்துள்ள கணக்குக்களைச்



சோதித்து ஒத்திட்டுக்கொண்டு தவறுகளைச் சுட்டிக்காட்டுவதோடு திருத்தவேண்டும். மேலும் இன்ஸ்பெக்டர் கணக்குகள் வைத்துக்கொள்ளும் கிரமத்தை ஜாக்கிரதையாய் விவரித்துச் சொல்லி மெம்பர்கள் அறிந்துகொள்ளக் கடினமாய் இருப்பதை தெளியத் தெரியும்படி செய்யவேண்டும். ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல் விஷயமும் வரவு செலவு பதியும் புஸ்தகத்தில் பதியப்பட்டு தினம்தோறும் நிலுவை பதிவது அதிக அவசியமென்று சங்கத்து மெம்பர்கள் ஊன்றி கவனிக்கவேண்டும். இவைகள் எல்லாம் சரியாய் கவனித்தால் மற்ற விவரங்களெல்லாம் இயல்பில் பின் தொடரும்.

(b) இன்ஸ்பெக்டர்கள் கணக்குகளை ஒழுங்கு படுத்தி கணக்கைப் பதிபவன் கணக்கு எழுதவேண்டிய கிரமங்களை தெரிந்துக் கொண்டான் என்று திருப்தி அடைந்தபின் சங்கத்து மெம்பர்களை ஒன்று கூட்டி அந்த சங்கத்தின் நோக்கங்களையும் நியமங்களையும் விசாரிக்கவேண்டும். இப்படி பரிசோதிப்பது திருத்தமானதாய் இருக்கவேண்டும். தெரிந்துக் கொள்ளக்கூடாத விஷயங்களை தெளிய எடுத்துச் சொல்வது மாத்திரம் போதாது. சங்கத்தின் நோக்கங்களையும் சங்கத்து மெம்பர்கள் உண்மையில் தெளிவாய் அறிந்துகொண்டார்கள் என்று தான் திருப்தி அடையவேண்டும்.

(c) சங்கத்தாருடைய துணைச்சட்டங்கள்படியும் மேல் காட்டிய கட்டளைகள் படியும் சங்கத்தின் வேலைகள் நடத்தப்பட்டுவருகிறதா என்று விவரமாய் விசாரிக்கவேண்டும். பஞ்சாயத்தார்களும் மெம்பர்களும் தங்கள் தங்கள் கடமைகளைச் செய்தார்களா என்று யுக்தியோடு விவரமாய் கவனிக்கவேண்டும். அவர்கள் ஒவ்வொருவரும் செய்யவேண்டிய கடமைகளின் ஆவசியகத்தை அவர்களுக்குக் காட்டவேண்டும். தான் சோதிக்கப்போன சங்கத்தில் ஒவ்வொரு விஷயத்தையும் மெம்பர்கள் நன்றாய் தெரிந்துக் கொள்கிறவரையில் போதிக்கவேண்டும். பஞ்சாயத்தார் பகிரங்கமாய் தவராமல் கூடுவது, பணம் கொடுக்கல் வாங்கல் செய்வது பஞ்சாயத்தார் ஐக்கிய மத்தியமாய் எல்லா விஷயங்களையும் நடத்துவது எல்லா பாக்கிதாரர்களும் கெடுவு தப்பாமல்

கொடுத்து சங்கத்து விஷயங்களைப் பொதுவாய் கவனத்தோடு மேல் பார்வையிடுவது, வருஷந்தோறும் பொதுசபைகூடுவது சகல விஷயங்களையும் பகிரங்கமாய் செய்வது—ஆகிய இந்த கடமைகளை அவசியம் செய்யுப்படி தூண்டவேண்டும்.

(d) பரிசோதனை முடிந்தவுடன் இன்ஸ்பெக்டர் பஞ்சாயத்தாருக்குதான் கண்டுபிடித்த குற்றங்கள் இன்னவை, இன்ன விஷயங்கள் கவனிக்கவேண்டியவை என்று குறிப்பு எழுதிக்கொடுக்க வேண்டும். மறுதடவை பரிசோதிக்கப்போகும்போது இந்த குறிப்பைக் கொண்டுவரச் சொல்லி அதில் காட்டிய குற்றங்கள் எவ்வளவு திருத்தம் பெற்றன என்று பார்க்கவேண்டும்.

"சங்கம் ஓங்கி மேன்மையடைவது மெம்பர்களின் செய்கைகளாலேயேதான். மேல் சொல்லப்பட்ட நியமங்களை கவனித்து வந்தால் நிச்சயமாய் மனதில் கொண்ட நோக்கப்படி செய்து முடிக்கலாம். இதனால் மெம்பர்களும் மற்றவரும் லாபமடைவார்கள். மேல் சொல்லிய நியமங்களை கவனியாவிட்டால் ஒரு பயனும் அடையமாட்டார்கள். மெம்பர்களுடைய பொறுப்பை அவர்கள் கவனித்துச் சங்கம் விருத்தி அடையும்படி செய்வது இன்ஸ்பெக்டர்களுடைய கடமை. இன்ஸ்பெக்டர்கள் தங்கள் கடமையை நிறைவேற்றினார்கள் என்பது அவர்கள் மேல் பார்வை பார்த்துவரும் சங்கங்களின் நோக்கம் சித்தியாவதால் வெளிப்படும்.

---

# குறிப்புகள்.

---

1. அங்கத்தினன் ஒருவன் தான் வாங்கியிருக்கும் கடனை ஒரு தவணையில் காலத்தில் கொடுக்கா விட்டாலும், சிலநாட்கழித்து கொடுப்பதற்கு உத்திரவு கேட்டு பெற்றுக்கொள்ளாமலிருந்தாலும், அவன் தவறினவன் ஆகிறான். உதவி விதிகள் அவன் பணத்திற்கு வட்டியை உயர்த்தல், அவன் பேரில் வியாஜ்யம் (ஸிவில் சூட்) செய்தல், கடைசியில் அவனை சங்கத்தினின்று விலக்கல், ஆகிய இவ்வித தண்டனைகளுக்கு இடங்கொடுக்கின்றன. இம்மாதிரி கடுமையான முறைமைகளை அனுசரிப்பதற்கு பதிலாக செங்கல்பட்டு ஜில்லாவிலுள்ள கிழச்சேரி அக்கிரிகல்சரல் பாங்கில் ஒரு சௌகரியமான ஏற்பாட்டை கண்டுபிடித்திருக்கிறார்கள். சிறிய தவறுகளுக்கு நிர்வாக சபையால் குறிக்கப்படுகிற காலம் வரையில் தவறினவன் புதுக் கடன்வாங்குகிறதற்கு அருகனல்லாதவனாகிறான். இந்த தண்டனை அவமானமாக நினைக்கப்படுவதோடுகூட தவறினவனுக்கு தொல்லையையும் உண்டாக்குகிறது. இன்ஸ்பெக்டர் 1907-8-ம் வருஷக்கணக்கைப்பற்றிய தன்னுடைய ரிபோர்ட்டில் இந்த உபாயத்தினால் நல்ல பலன்கள் இருந்ததாகவும் பணம் கொடுப்பதில் தாமதம் ஒரு போதும் எற்படவில்லை யென்றும் கூறியிருக்கிறார்.



2. சங்கங்களிலிருந்து மதிராஸ் ஸெண்ட்ரல் அர்பன் பாங்கிக்கு பணத்தை எப்படி அனுப்புகிறதென்று அடிக்கடி கேள்விகள் வருகின்றன. சங்கத்தினுடைய இருப்பிடம் ஒரு ஜில்லாவின் முக்கிய பட்டணத்திலாவது அல்லது அதன் அருகிலாவது இருந்தால் சங்கம் செய்ய வேண்டியதெல்லாம் கூடி ஜில்லாகஜானாவில் பணத்தை செலுத்தி, விலையில்லாமல் பெற்றுக்கொள்ளக்கூடிய டிரான்ஸ்பர் ரசீதை தபாலில் அனுப்பிவிடவேண்டியதுதான். சங்கம் ஒரு தாலூகாவின் முக்கிய பட்டணத்திலாவது அல்லது அதன் அருகிலாவது இருந்தால் பணத்தை தாலூகா கஜானாவில் செலுத்தி ரசீதைபெற்றுக்கொண்டு, அதை கஜானா டிப்டி கலெக்டருக்கு அனுப்பி டிரான்ஸ்வர் ரசீதை அவரிடம் வேண்ட அதைப் பெற்ற பிறகு தபால் மூலமாய் அனுப்பிவிடவேண்டியது. இம்மாதிரி செய்தல் கொஞ்சம் காலம் பிடித்தாலும் அதிகமாக செலவு பிடிக்காது. தாலூகாவின் நடுவில் இருந்தால் தபால் மூலமாய் அனுப்புவதுதான் மிகவும் சௌகரியமானது. 25 ரூ. வரையில் அனுப்புவதற்கு உள் நாட்டு மணியார்டர் செய்வதே பணசகாயம். தொகை அதிகமாயிருந்தால் நோட்டாக மாற்றி இன்ஷ்யூர் பண்ணவேண்டும். ஐந்து ரூபாய்க்கு குறைந்து சில்லரையாய் அனுப்பவேண்டியிருந்தால் ரூபாய் அணாக்களை மணியார்டரிலும் ஓரணாவுக்கு குறைந்ததை தபால் முத்திரைகடிதாசாக அனுப்பவேண்டும். ஒன்றல்லது இரண்டு தம்பிடிகளை கடிதத்திற்குள்வைத்து அனுப்பிவிடலாம். இப்பொழுது நாம் ரூ. 518 10 அணா 8 பை அனுப்ப வேண்டியதாக வைத்துக் கொள்வோம். மிகவும் சகாயமாய் அனுப்பக்கூடியதெப்படி என்றால்

ரூ. 500 நோட்டாக மாற்றி இன்ஷ்யூர் பண்ணுதல்

ரூ. 18. 10 அணாவை மணியார்டரில் அனுப்புதல்

அரையணா முத்திரை கடிதாசையும் இரண்டு தம்பிடியையும் கடிதத்திற்குள்வைத்து அனுப்புதல், இப்படியில்லாமல், ஸெண்ட்ரல் பாங்கியிலிருந்து ஆபத்தின் வட்டி அல்லது கடன் முதலிய பணங்கள் சங்கத்திற்கு வரவேண்டியதாகயிருந்தால் ஸெண்ட்ரல் பாங்கை ஆலோசனைசெய்து மிகுதியை அனுப்புதல் மிகவும் நல்லதாகும். எல்லா சமயங்களிலும் பணம் அனுப்புவதினால் உண்டாகிற செலவு சங்கத்தினுடைய வருஷச்செலவோடு சேர்த்து கணக்கிடப்படும்.

3. கடன் வாங்குவதைப்பற்றிய சட்டத்தின் பிரகாரம் எல்லா சங்கங்களும் தம்தம் அங்கத்தினரது சொந்த ஜாமீனின்பேரில் கடன்பெற்றுக்கொண்டு அந்தக் கடன்வாங்கிய தொகையை அங்கத்தினருக்கு பிரித்து கொடுக்கலாம் ஆனால் அப்படிக் கடன்வாங்குவதில் அதைப்பற்றி சட்டத்தில் உண்டாக்கப்பட்டுள்ள சில நிபந்தனைகளுக்கு உட்படவேண்டும். சங்கங்களுக்கு இவைகளைப்பற்றி இன்னும் விஷயங்கள் அறியவேண்டுமென்று ஆவலிருந்தால், ஜில்லாகலெக்டர் அவர்களுக்கு எழுதி தெரிந்துகொள்ளலாம்.

4. கூட்டுறவினர் சங்கத்தில் பணம் போட்டுவைப்பதினால் தக்க ஜாமீனோடு கூடி பத்திரமாய் வட்டிக்கு விடுவதற்கு ஏற்பட்டிருக்கிற சந்தர்ப்பத்தை ஜனங்கள் அறிகிறார்களா. இப்பொழுது இருக்கிற சங்கங்கள் விளம்பரங்கள் செய்யாததினால், அவைகள் வேலை நடக்கும் இடங்களின் சுற்றுப் பக்கத்திலுள்ளவர்கள் தான் முன் பணம் செலுத்த தூண்டப்படுகிறார்கள், ஆனால் சில சமயங்களில் சங்கத்திற்கு வேண்டியதைவிட அதிகமாக வைப்புப்பணம் செலுத்துவதற்கு பலர் தயாராயிருக்கிறபடியால் அவ்வதிகப்பணம் மறுக்கப்படவேண்டியதாகிறது. தானங்கள், மாணுக்கர்களுக்கு உதவிச் சம்பளம், கட்டளை முதலாக பொதுநன்மைக்குக் கருதப்பட்டுள்ள பணங்களைப் போட்டுவைப்பதற்கு கூட்டுறவினவர் சங்கமே மிகவும் பத்திரமான இடமாகும். கீழ் வெங்காளத்திலும் ஆஸ்ஸாமிலும் பொதுநன்மைக்கு உபயோகப்படவேண்டிய பணத்தை கூட்டுறவினர் சங்கத்தில் போட்டுவைத்திருப்பதற்கு அநேக உதாரணங்கள் இருக்கின்றன.

5. குமாஸ்தாக்களின் சங்கங்களும் இவ்விஷயங்களை நன்றாக தெரிந்துகொள்ள கற்றறிந்தவர்களினால் உதவிசெய்யப்பட்டால், ஒருபொழுதும் ஓங்கியிராமல் இருக்கமாட்டா. இச்சங்கங்களினால் அங்கத்தினர்களுக்கு நிதர்சனமாய் பிரயோஜனம் தவறாது உண்டென்பது அனுபோகமுள்ளவர்கள் ஒவ்வொருவரின் உயர்ந்த அபிப்பிராயமாகும். ஆனால் சங்கம் நிச்சயமாக ஓங்கவேண்டுமென்பதின்பொருட்டு, எந்த கச்சேரி உத்தியோகஸ்தர்களின் சம்பந்தமாக ஏற்பட்டுள்ளதோ அந்தக் கச்சேரியில் வேலையாய் இருக்கின்றானென்ற ஒரே ஆதாரத்தைக் கொண்டே ஒருவனை அங்கத்தினராக சேர்த்துக்கொள்ளக்கூடாது. புதிதாக அங்கத்தினர்களை சேர்ப்பது நிர்வாகசபையின், பகுத்தறிவின்பேரில் முழுதும் பொருத்ததாகவைக்க அவர்கள் தங்கள் பகுத்தறிவை ஜாக்கிரதையாய் உபயோகிக்கவேண்டும். பணம் எதற்காக தேவையென்று முன்னதாக விசாரணை செய்யாமல் ஒருபொழுதும் கடன் கொடுக்கப்படாது. பணத்தின் கெட்ட உபயோகத்தை தடுக்க உள்ள விதிகளை கடுமையாக உபயோகிக்கவேண்டும். அநேகம் குமாஸ்தாக்களின் சங்கங்கள் கூட்டுறவினர்கள் சங்கத்தைவிட பின்னுதவு நிதிகளை ஒத்திருந்தாலும், அப்படியிருந்துகொண்டே அனேகம் பிரயோஜனமான கருத்துக்களை பூர்த்திசெய்கின்றன. இப்படிப்பட்ட சங்கங்கள் ஸெக்ரடேரியட், அக்கௌண்டென்ட் ஜெனரல் ஆபீஸ்



போன்று அதிக உத்தியோகஸ்தர்கள் அமர்ந்துள்ள கச்சேரிகளில் அனேகமாக ஓங்கிவளரும். இவைகளில் சில மாறுதல்கள் செய்துவிட்டால் ஊர்காவல் சேவகர்கள்போன்ற தாழ்ந்த உத்தியோகஸ்தர்களுக்கு இம்மாதிரி சங்கங்கள் உண்டாக்கலாம்.

6. ஸெண்ட்ரல் பாங்கியிலிருந்து வாங்குகிற கடனுக்கு போடப்படுகிற வட்டி 100-க்கு $7\frac{1}{2}$ ஆகும். வைப்பிற்கு கொடுக்கிறவட்டி இதைவிட குறைந்ததாகவே இருக்கவேண்டும் அதற்கு காரணம் என்னவென்றால் ஸெண்ட்ரல் பாங்கியிலிருந்து ரிஜிஸ்ட்ராரின் அனுமதியின்பேரில் சுலபமாக கடன் கிடைக்கும். ஆனால் முன்பணம் அடைவதற்கு நிர்வாக சங்கப் பணம் போட்டுவைக்கத் தயாராயுள்ளவர்களை தேடிப்பிடித்து பிறகு அவர்களுக்கு பாங்கியின் நிலைமையையும் விவரித்துக் கூறவேண்டும். இம்மாதிரி சிரமம் எடுத்துக்கொள்ளுதல் சங்கத்திற்கு க்ஷேமத்தை உண்டாக்குவதேயாகும். முதலில் நிர்வாக சங்கத்திற்கு மிக்க ஊக்கத்தை உண்டாக்குகிறது. இரண்டாவது, வைப்புப் போடுகிறவர்கள் சங்கத்தில் தாங்கள் இழக்கக்கூடியதாயிருக்குமாகையால் பாங்கியினுடைய நடவடிக்கைகளை கவனிப்பார்கள். ஆகையால் ஸெண்டிரல் பாங்கி கடனைவிட, வரவர குறைந்த வட்டிக்கு வைப்புப் பணங்களை வாங்குதற்கு இதுவே ஒரு பெரிய தூண்டுதல் ஆகின்றது.

7. ரிஜிஸ்திரார் அவர்கள் அனுமதியில்லாமல் ஸெண்ட்ரல் பாங்கி ஒரு சங்கத்திற்கும் கடன்கொடுப்பதில்லை. ஆகையால் காலதாமதமாகாமலிருக்கும் பொருட்டு ஸெண்டரல் பாங்கியிலிருந்து வேண்டிய கடனுக்கு சங்கங்கள் ரிஜிஸ்டிராருக்கு எழுதலாம் என்று கேட்டுக்கொள்ளப்படுகின்றன. கடனுக்காக இவர்கள் செய்யும் மனுவின்பிரதியை நேராக ஸெண்டிரல் பாங்கிக்கு அனுப்புவதிலும் ஒருவித ஆக்ஷேபணையில்லை

8*****

9. ஒவ்வொரு கடனும் திருப்பிக் கொடுபடும் சமயத்தில் கடனேடுப் புத்தகத்தில் கடனாளியின் கைநாட்டை வாங்கிக்கொண்டு அவனிடத்தில் கடனுக்கு சம்பந்தமான பத்திரத்தை திருப்பிக்கொடுத்துவிடவேண்டுமென்று சங்கங்கள் அறியவும். இம்மாதிரியே முன்னால் வாங்கப்பட்ட கடனைகொடுப்பதற்கு சங்கத்திலிருந்து உதவியாக கடன் கொடுக்கும்போதும் முன்கடனைச் சேர்ந்த பத்திரங்களை கடன் வாங்குகிறவன் கொண்டுவந்து கொடுக்கும்படி செய்து சங்கத்திலிருந்து கொடுக்கப்படும் கடனைச்சேர்ந்த பத்திரங்களோடு அவைகளைச் சேர்த்துவைக்கவேண்டும்.

# செங்கல்பட்டு கூட்டுறவினர் சங்கம்.

இப்பொழுது பயிர்த்தொழிலில் அமர்ந்துள்ள மனிதர்களின் வறுமையைப் போக்குவதற்கு ஐக்கிய நாணய சங்கங்களே சிறந்த உபாயமென்று எவ்விடத்திலும் தெரிந்துகொண்டிருக்கின்றார்கள். இந்தியாவில் சுலபமாக கிராமச்சங்கங்கள் ஏற்பட்டு அவைகள் ஒழுங்காக நிலைபெறுமோ என்ற சந்தேகங்கள் முன்னொருக்கால் இருந்தாலும் அவையெல்லாம் அனுபோகத்தில் உண்டாயிருக்கின்ற சிறந்த பலன்களால் தெளிந்துவிட்டன. இவ்வழியில் விருத்தியானது மெதுவாயிருந்தால் இதற்குக்காரணம் இத்தேசத்தின் நிலைமையில் கூட்டுறவு முறைகளுக்கு புதிய கஷ்டங்கள் எவை உண்டாகுமோ என்று அறிந்துகொண்டே மெல்ல சொல்லவேண்டுமென்ற ரிஜிஸ்திராருடைய நோக்கமென்றே சொல்லலாம். அபிவிருத்தியின் குறைவு சென்னை மாகாணத்தை ஒட்டினவரையில் மூலதனத்தின் இன்மையால் அல்ல ஏனெனில் ரிஜிஸ்ட்ராரினால் உத்திரவு கொடுக்கப்பட்ட கடன்கள் அனைத்தையும் கொஞ்சமேனும் தாமதமின்றி வெகு ஊக்கமும் கடமையில் நோக்கமுமுள்ள காரியதரிசியாகிய ஸர். வி. வி. தேசிகாசாரியார் அவர்களால் நிர்வாகம் செய்யப்பட்ட சென்னை ஸென்டிரல் அர்பன் பாங்க் கொடுத்துவருவது பாராட்டத்தக்கதே. ஆயினும் கூட்டுறவு முறைமையின் பலன்களை அறிந்து ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று அங்குள்ளோர்களுக்கு இந்த நன்முறையை போதிக்கக்கூடியதான குணமுள்ள வழியுரைப்போர்கள் பெரும்பாலும் இல்லாமல் இருப்பதே இச்சங்கங்கள் விஸ்தாரமாக பரவாமலிருப்பதற்கு காரணமென்று சொல்லலாம். ஏனெனில் இப்பொழுது ஏதாவது ஒரு கிராமத்தில் சங்கமொன்று இல்லாவிடின் கிராமவாஸிகளுடைய வறுமையைதீர்க்க துரைத்தனத்தாரால் செய்யப்பட்ட மேன்மையுள்ள ஏற்பாடுகளை அங்குள்ளோர்கள் தெரிந்துகொள்ளவில்லையென்பது இதற்குக் காரணமல்ல. ஆனால் அனேகமாய் கிராமத்திலுள்ளோர்கள் ஒன்றுபட்டு தொழில்செய்ய மனமுள்ளவர்களாயும் இருப்பதில்லை. ஒரு சங்கத்தை ஏற்படுத்தி அதை சண்டை சச்சரவின்றி ஒழுங்காய் நடத்திவர சக்தியுள்ளவர்களாயுமிருப்பதில்லை. உதாரணமாக சேலம் அர்பன் பாங்க் காரியதரிசியாகிய ம-ா-ா-ஸ்ரீ வி. ஆதிநாராயண செட்டியார் அவர்கள் அவருடைய ஜில்லாவிலுள்ள எல்லாகிராமங்களும்சுலபமான நாணயத்தின் பலன்களை பெறவேண்டுமென்று கருதி இரண்டொரு மாதகாலம் ஐக்கிய நாணயத்தின பெருமையைப்பற்றி பிரசங்கம் செய்து கொண்டு சுற்றிவந்தார். உடனே 26 புதியசங்கங்களுக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டன. ஒவ்வொரு சங்கமும் 50 அங்கத்தினர்களுக்கு பிரயோஜனமுள்ளதென்று வைத்தாலும் மேற்சொல்லிய 26 சங்கங்களும் சற்றேறக்குறைய 1300 குடும்பங்களை சாவகாரிகளின் வலைகளினின்றும் விடுவிக்



கக்கூடுமென்பது திண்ணம். இம்மாதிரியான பேருதவியை அவர் செய்தது பெரும்புகழன்றோ?

2. சென்னை ராஜதானியில் முதல்முதல் ஐக்கிய நாணயமுறைமை செங்கல்பட்டு ஜில்லாவில்தான் வழக்கத்துக்கு கொண்டுவரப்பட்டது. இக்காரணம்பற்றியே இவ்விடத்தில் ஏராளமாய் ஐக்கிய நாணய சங்கங்கள் பரவியிருக்கின்றன. கூட்டுறவினர்கள் எல்லாப் பிரயோஜனங்களையும் தாங்களே அடைவதில் பிரியப்பட இல்லை. மற்ற கிராமவாசிகளும் இப்பிரயோஜனங்களை அடையவேண்டுமென்பது அவர்களுடைய ஆசை. ஆகையால் சிறிதேனும் பிரதிப்பிரயோஜனத்தை உத்தேசிக்காமலே ஜில்லாவிலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஐக்கிய நாணயத்தின் பிரயோஜனங்களை புகட்டி ஒவ்வொரு கிராமத்திலும் ஐக்கிய நாணயசங்கங்களை ஏற்படுத்தவேண்டுமென்ற கொள்கையுடன் ஒரு சங்கமாக ஜில்லாவிலுள்ள முக்கியமான கூட்டுறவினர்கள் சேர்ந்திருக்கிறார்கள். இவர்களுடைய எண்ணமோ மிகப்பெரிது. ஆயினும் இச்சங்கம் இதற்குள்ளாகவே வேலைசெய்ய ஊக்கத்துடன் ஆரம்பித்து அனேக சங்கங்களை ஏற்படுத்த விண்ணப்பங்களை அனுப்பியிருக்கின்றது. இச்சசங்கத்தின் உபவிதிகள் கீழே காட்டப்பட்டிருக்கின்றன.

3 இச்சங்கத்தின் அங்கத்தினர்கள் கிராமம் கிராமமாகச் சென்று தாங்களே ஐக்கிய நாணயசங்கங்களின் அங்கத்தினர்களாக இருந்து அடைந்து வருகிற பயன்களை அங்குள்ளோர்களுக்கு தெளிவாகச்சொல்லி வருகிறார்கள். அவர்கள் சொல்வது புத்தகத்தில் எழுதியுள்ள கோட்பாடுகள் மாத்திரம் அல்ல. தாங்களே அனுபவிக்கிற பயன்கள்தான். தமிழ்பாஷையில் அடிக்கடி சிறிய பத்திரிகைகளை இனமாக பிரசுரம் செய்கிறார்கள். இவைகளில் ஒன்றைக் கீழேகாட்டியிருக்கிறோம். இச்சங்கத்தில் வெகு ஊக்கத்துடன் வேலைசெய்யும் மகான் கீழச்சேரியைச்சேர்ந்த ம. ரா. ரா. ஸ்ரீ. வி. அருளப்பநாயுடுஎன்பவர். ஒவ்வொரு தாலூகாவிலும் ஒரு ஆதிநாராயணசெட்டி அல்லது அருளப்பநாயுடு இருந்தால், பயிர்த்தொழில் செய்து ஏழ்மையில் மூழ்கியிருக்கின்ற கிராமவாசிகளின் வறுமைத்துன்பமானது சுலபமாக சில வருஷங்களுக்குள் நீங்கி விடுமென்பதற்குச் சந்தேகமுண்டோ?

# செங்கற்பட்டு கூட்டுறவினர் சங்கம்.

---

## விதிகள்.

### பெயர், விலாசம், நோக்கம்.

1. செங்கற்பட்டு கூட்டுறவினர் சங்கம், செங்கற்பட்டு ஜில்லா காஞ்சிபுரம் தாலூகா கீழச்சேரி போஸ்டாபீஸைச்சேர்ந்த கீழச்சேரி கிராமத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

2. செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள கிராமங்களில் இருக்கும் ஒவ்வொரு குடிக்கும் ஐக்கிய நாணயத்தின் நன்மையை போதிப்பதும், பிரதி கிராமத்திலும் ஐக்கிய நாணயச்சங்கம் ஸ்தாபிக்கத் தூண்டுவதும், ஐக்கிய நாணய விருத்தியில் அக்கறைகொண்டிருக்கிற இந்த ஜில்லாவிலுள்ள எல்லா ஜனங்களையும் கூட்டி அபிப்பிராயம் மாற்றிக்கொள்வதும் இந்த சங்கத்தின் நோக்கங்களாகும்.

### மெம்பர்கள்.

3. சங்கத்தின் நோக்கத்தில் அக்கறைகொண்டிருக்கிற பரோபகார சிந்தையுள்ள எவரும் சங்கத்தில் மெம்பராகலாம். ஆனால் அப்படி மெம்பராகுபவர் செங்கற்பட்டு ஜில்லாவில் வாசம் செய்கிறவராகவாவது நிலம் உடைத்தாயிருக்கிறவராகவாவது இருக்கவேண்டும். மேலும் 6 - வது விதியின்படி செலுத்தவேண்டிய சந்தாத்தொகையைச் செலுத்த ஒப்புக்கொள்வதோடு தன்னாலியன்றவரையில் சங்கத்தின் நோக்கத்தை சித்திபெறச் செய்விப்பதாக ஒவ்வொரு நபரும் தான்சேருமுன் வாக்குறுதிசெய்ய வேண்டும். கனவான்களை கௌரவமெம்பர்களாகச் சேர்த்துக்கொள்ள நிர்வாகசபையாருக்கு அதிகாரமுண்டு.

4. மெம்பர்களைச் சேர்க்கும் விஷயத்தில் நிர்வாகசபையார் செய்யும் தீர்மானம் முடிவானதாகும்.

### சங்கத்துக்கு திரவிய வருவாய் எப்படி என்பது.

5. மெம்பர்கள் செலுத்தும் சந்தாத்தொகையும், பரோபகார சிந்தையுள்ள கனவான்கள் கொடுக்கும் 'Donation' என்று சொல்லப்படும் 'தானத்தொகையும்' சங்கத்தின் திரவிய வருவாயாகும்.

6. ஒவ்வொரு மெம்பரும் வருஷந்தோறும் ரூபா 1 சந்தா செலுத்திவரவேண்டும். ஜூலை முதல் ஜூன் வரையில் முடியும் வருஷம் தான் சங்க



வருஷமாகும். ஜூன்மீ 30உக்குள் எல்லா மெம்பர்களும் தங்கள் சந்தாத்தொகைகளைச் செலுத்திவிடல்வேண்டும்.

7. சங்கத்திற்கு இனாமாக ஒருதொகை ஒரே தடவையாகக் கொடுப்பது தானத்தொகை என்று செல்லப்படும்.

8. சந்தாத்தொகை மெம்பர்களுக்கு எந்த சந்தர்ப்பத்திலும் வாபஸ கொடுக்கப்படமாட்டாது.

### நிர்வாகம்.

9. சங்கத்தின் காரியங்களை நிர்வகிப்பது 7 மெம்பர்கள் அடங்கிய ஒரு நிர்வாகசபையைச் சேர்ந்தது. அவர்களில் ஒருவர் காரியதரிசியாயிருப்பார். நிர்வாகசபையின் அதிகாரத்துக்குட்பட்டு சங்கத்தின் காரியங்களெல்லாம் காரியதரிசிசெய்வார்.

10. சங்கத்தின் நோக்கத்தை ஈடேற்றக்கூடிய காரியங்கள் அனைத்தும் செய்வது நிர்வாக சபையின் வேலை. ஐக்கிய நாணயச்சங்கங்களால் விளையும்பயனை அச்சிட்ட துண்டுப்பத்திரிகைகள் மூலமாய்ப் பிரசுரப்படுத்தற்கும், சங்கத்தின் தகுதியுள்ள மெம்பர்கள் மூலமாய் போதித்தற்கும், இவைபோல்வன பிறசெய்வதற்கும் நிர்வாக சபையாருக்கதிகாரமுண்டு.

11. ஐக்கியநாணய விருத்தியில் அக்கறை கொண்டிருக்கிற ஜனங்கள் அடங்கிய மஹாநாடு ஒன்றை வருஷத்துக்கு ஒருமுறை இந்த ஜில்லாவில் ஏதாவது ஓரிடத்தில் நிர்வாகசபையார் கூட்டவேண்டும். 1904-ம் ௵த்திசு 10-வது இந்திய ஆக்டின்கீழ் ரிஜிஸ்தர்செய்யப்பட்டு செங்கற்பட்டு ஜில்லாவிலிருக்கிற சங்கங்களின் மெம்பர்களும் அந்த எல்லாச்சங்கங்களின் நிர்வாக மெம்பர்களும் அந்த மஹாநாட்டுக்கு அழைக்கப்படவேண்டும். அவர்களுக்கு அந்த மஹாநாட்டுக்கு வந்து ஆஜரிருக்க உரிமையுண்டு. நிர்வாக சபையார் இதர ஜனங்களையும் மஹாநாட்டுக்கு அழைக்கலாம். நிர்வாகசபையார் மஹாநாட்டின் வேலைக்கிரமத்தை திட்டப்படுத்தவேண்டும்.

12. சங்கத்தின் வேலையைக்குறித்து பொருக்கவேண்டிய செலவை சங்கத்தின் திரவியத்திலிருந்து பொறுக்க நிர்வாகசபையாருக் கதிகாரமுண்டு.

13. சங்கத்தின் வேலையைக்குறித்து நிர்வாக சபையாருக்கு வேண்டியதைச் செய்துகொடுக்க ஒவ்வொரு மெம்பரும் கடமைப்பட்டவராவார்.

14. நிர்வாகசபையின் மெம்பர்களை சங்கம் ஆரம்பிக்கும்போது மஹாசபையார் நியமிக்கவேண்டியது. பிறகு உண்டாகும் காலிகளை நிர்வாகசபையாரே பர்த்தி செய்து கொள்ளவேண்டியது.

15. சங்கத்தின் காரியங்களை நிறைவேற்ற அவசியமான விதிகளை ஏற்படுத்த நிர்வாக சபையாருக்கதிகாரமுண்டு.

16. வருஷப்பிரதிவருஷம் ஜூலைமீ 15உக்குள் நடந்த வருஷத்தில் சங்கம்செய்த வேலையைக்குறித்தும் வரவு செலவைக்குறித்தும் நிர்வாகசபையார் ஒரு ரிப்போர்ட் தயார்செய்து மெம்பர்கள் அடங்கிய மகாசபைக்குக் கொண்டுவரவேண்டும்.

17. தாங்கள் செய்யும் வேலைகளுக்காக நிர்வாகசபையார் யாதொரு பிரதிபலனும் பெறமாட்டார்கள்.

# செங்கற்பட்டு கூட்டுறவினர் சங்கம்.

## அறிக்கைப் பத்திரம்.

### ஐக்கிய நாணயச்சங்கங்களால் உண்டாகும் நன்மை.

இந்தியாவிலுள்ள விவசாயிகளும் மற்றவர்களும் மிதமிஞ்சினவட்டிக்குக் கடன்பெற்று மீளாக்கடன்காரர்களாகி நசித்துப்போகிறார்களென்று இந்தியா கவர்ன்மெண்டார் அறிந்து அவர்களுக்குச் சாதகம் செய்யும்பொருட்டு 1904-ம் வருஷத்தில் ஐக்கியநாணயச்சங்க ஆக்ட் (Co-operative Credit Societies Act) என்று சொல்லப்படும் 1904-ம் வருஷத்திய 10-வது இந்திய ஆக்டை பாஸ்செய்தார்கள். அந்த ஆக்டின்படி ஒரே கிராமத்தில் அல்லது ஒரே கிராமத்தொகுப்பில் பற்றுள்ள 10 பெயருக்குக் குறையாத நபர்கள் ஒரு சங்கமாய்ச்சேர்ந்து, பங்குத்தொகையாக தாங்களே ஏதாவது பணம் செலுத்தியோ செலுத்தாமலோ, தங்களுக்குவேண்டிய பணத்தை தங்களுக்குள் யாரிடத்திலிருந்தாவது அல்லது இதரர்களிடத் திலிருந்தாவது கடன் வாங்கி, தங்களில் கடன் யாருக்கு அவசியமிருக்கிறதோ அவர்களுக்கு கடன் கொடுத்து, சங்கத்தை நடத்தினால் கவர்ன்மெண்டார் அந்த சங்கத்துக்குச் சில சௌகரியங்கள் செய்கிறார்கள். இந்த ஆக்டின்கீழ் ரிஜிஸ்தர் செய்யப்படும் சங்கங்கள் ஐக்கிய நாணயச் சங்கங்கள் என்று சொல்லப்படும்.

2. முன்பாராவின் கடைசிவாக்கியத்தில் சொன்ன சங்கதி அடியில் வருவதால் ஸ்பஷ்டமாய் விளங்கும். ஒன்றிற்கொன்று ஒருமயில் தூரத்திற் கதிகப்படாத 3 கிராமவாசிகளில் 30 பெயர் ஒன்றுசேர்ந்து சங்கம் ஸ்தாபிக்



கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அந்த 30 மெம்பரும் தலைக்குக் கொஞ்சம் முதல்பணம் செலுத்துகிறதாக வைத்துக்கொள்வோம். சங்கத்தின் மொத்த முதல்பணம் அல்லது மூலதனம் ரூபா 500 என்று அது பங்கு 1 க்கு ரூபா 5 வீதம் 100 பங்குகள்கொண்டது என்றும் ஏற்படுத்துகிறார்கள். சங்கத்தில் 100 மெம்பர்கள்வரையில் சேரலாமென்றும் ஒவ்வொருவரும் 5 பங்குகள்வரையில் எடுத்துக் கொள்ளலாமென்றும் தீர்மானிக்கிறார்கள். மேற்சொன்ன 30 மெம்பர்களும் தலைக்கு ஒன்று அல்லது பலபங்குகள் எடுத்துக்கொண்டு மொத்தத்தில் 50 பங்குகளால் ரூபா 250வசூலாகிறது. இந்த ரூ. 250 மேற்சொன்ன 30 பெயர்களுக்கும் கடன்கொடுக்க நிச்சயமாய்ப்போதாது. ஆகையால் அவர்களுக்கு எவ்வளவு தொகை வேண்டியிருக்கிறதோ அவ்வளவுதொகையும் இந்த சங்கம் கடன்வாங்கியே கொடுக்கவேண்டும். அந்தக்கடனை மேற்சொன்ன 30 பெயர்களில் யாரிடமாவது பணமிருந்து வட்டிக்குக் கொடுத்தாலும் வாங்கலாம், அல்லது வெளியாரிடமிருந்தும் வாங்கலாம். இந்த இரண்டுவிதமும் சாத்தியமில்லாவிட்டால் சென்னபட்டணத்தில் வெளிஜில்லாக்களில் இருக்கும் ஐக்கிய நாணயச்சங்கங்களுக்குக் கடன்கொடுப்பதற்காகவே ஏற்பட்டிருக்கும் "மதராஸ் சென்டிரல் பாங்கில்" எந்த சமயமும் எவ்வளவு தொகைவேண்டுமானாலும் வாங்கலாம். இந்த பாங்கினிடம் வாங்கும் கடனுக்கு வட்டி 100 க்கு மாதம் 1 க்கு 10 அணா கொடுக்கவேண்டும். இந்தவிதமாக எல்லா மெம்பர்களுடைய ஆதாரவின் பேரில் வாங்கியகடனை மெம்பர்களுக்குள் யாருக்குக்கடன் அவசியமோ அவர்களுக்குக் கொடுத்து குறிப்பிட்டகாலத்திற்குள் வசூல்செய்து மறுபடியும் வேண்டியவர்களுக்குக் கொடுத்து சங்கம்நடத்தவேண்டும். ஒரு மெம்பருக்கு இவ்வளவு தொகைதான் கடன்கொடுக்க வேண்டுமென்றும் அது இன்ன காலத்திற்குள் திருப்பிக்கொடுக்கப்படவேண்டுமென்றும்நிபந்தனை ஏற்படுத்த வேண்டும். பங்கு 1 க்கு ரூபா 100 கடன் கொடுக்கலாமென்றால் 5 பங்கு எடுத்துக்கொண்ட மெம்பர் ரூபா 500 வரையில் கடன் பெறலாம். எல்லாக் கடனையும் ஒருவருஷத்திற்குள் திருப்பிக்கொடுக்கும்படி செய்யலாம். ஆனால் வருஷவாரி வட்டியையும் அசலில் ஒருபாகத்தையும் செலுத்தினால் இரண்டு முதல் 5 வருஷங்கள் வரையில் தவணைகொடுக்கலாம். மெம்பர்களுக்குக் கொடுக்கும் கடன்களுக்கு சங்கம் வசூல்செய்யவேண்டிய வட்டி சங்கம் வாங்குங்கடனுக்குக் கொடுக்கும் வட்டியைப் பொறுத்திருக்கிறது. அது, தற்காலம், மாதம் 1 க்கு 100 க்கு 12 அணாவீதம் ஏற்படுத்தும்படி நேரும். கடன்களை சொத்து அடமானத்தின்பேரிலும் ஜாமீன்பேரிலும் கொடுக்கலாம். மேற்சொல்லிவந்த நிபந்தனைகள் மேற்சொன்னமாதிரியே வைத்துக்கொள்ள வேண்டுமென்ற அவசியமில்லை. தங்கள்தங்கள் சௌகரியங்கள் போல் செய்துகொள்ளலாம். சங்கத்தை நடத்துவது மெம்பர்கள்தான். சகல அதிகாரங்களும் அவர்களுடையதே

3. இந்த ஐக்கிய நாணயச்சங்கங்களால் குடிகளுக்குக் குறைந்தவட்டிக்கு பணங்கிடைப்பது மாத்திரமல்ல. ஒருவர்க்கொருவர் பரஸ்பர நம்பிக்கையும் கூட்டுறவும் உண்டாகும். கிராமங்களில் ஒற்றுமை யுண்டாகி சச்சரவுகள் நீங்கும்.

4. இந்த சங்கங்கள் விருத்தியால் தனவான்கள் கவலைப்படவேண்டியதில்லை. அவர்கள் பணவைப்புக்கு இந்தச் சங்கங்களைப்போன்ற பந்தோபஸ்தான இடம்வேறில்லை. இதுவரையில் 100 சங்கங்களுக்கு மேல் ரிஜிஸ்தராகி தனவான்களால் நடத்தப்பட்டு நல்லஸ்திதியிலிருக்கின்றன. ஒரு ஆசாமிக்குக்கொடுக்கும் கடனைப்பார்க்கிலும் பலர்சேர்ந்து ஜவாப்பு சொல்லுகிற ஒருசங்கத்துக்குக் கொடுக்கும் கடன் பந்தோபஸ்துள்ள தல்லவா? கவனியுங்கள் தனவான்களே! கவர்ன்மெண்டார் மேற்பார்வை யிருப்பதால் மோசமில்லை.

5. கவர்ன்மேண்டார் செய்திருக்கும் சகாயங்கள்—இந்த சங்கங்களை ரிஜிஸ்தர்செய்து அவைகள் கெட்டுப்போகாமலும் மோசங்கள் நடவாமலும் பார்க்கும்படி கவர்ன்மெண்டார் ஒரு ரிஜிஸ்திரார் அவர்களையும் அவர்கீழ் பல சிப்பந்திகளையும் நியமித்திருக்கிறார்கள். இந்த ரிஜிஸ்திரார் ஜில்லா கலெக்டர் உத்தியோகம் செய்பவர்களிலிருந்து தான் நியமிக்கப்படுகிறார். இப்போது இருப்பவர் கர்நூல் ஜில்லா கலெக்டராயிருந்த Mr. R. ராமச்சந்திராவ் அவர்கள். இவர் இந்த சங்கங்களை யாதொரு கட்டணமுமில்லாமல் ரிஜிஸ்தர் செய்கிறார். ரிஜிஸ்திரார் அவர்களும் அவருடைய டெப்டி கலெக்டர் இன்ஸ்பெக்டர்கள் சங்கங்களின் கணக்குகளை ஆடிட்செய்வதற்கு யாதொரு கட்டணமும் வாங்கப்படுவதில்லை. மேலும் சங்கம் வெளியாருக்கு எழுதிக்கொடுக்கும் பத்திரங்களுக்கும் சங்கத்தின் மெம்பர்கள் சங்கத்திற்கு எழுதிக்கொடுக்கும் பத்திரங்களுக்கும் ஸ்டாம்பு போடவேண்டியதில்லை. சங்கத்தில் கடன்வாங்கி பத்திரம் வெற்றுகாகிதத்தில் எழுதி சப் ரிஜிஸ்தரார் ஆபீசில் தாக்கல்செய்தால் அவர் யாதொரு துட்டும் வாங்கிக்கொள்ளாமல் ரிஜிஸ்தர் செய்துகொடுப்பார். எல்லா கிராமச் சங்கங்களுக்கும் ஜில்லா கெஜட்டு இனமாக சப்ளை செய்யப்படுகிறது.

6. ஐக்கிய நாணயச் சங்கங்களால் விசேஷநன்மை குடிகளுக்கு உண்டாவதால் பிரதி கிராமக்குடிகளும் தங்களுக்காக ஒரு சங்கம் ஸ்தாபித்துக் கொள்ள விரும்புகிறோம். விருப்பமுள்ளவர்கள் 10 பெயருக்குக் குறையாமல் கையெழுத்துப்போட்டு ஐக்கிய நாணயச்சங்க இன்ஸ்பெக்டர் ம-ரா-ஸ்ரீ கே. தெய்வசிகாமணி முதலியார் அவர்களுக்காவது அல்லது அடியில் கையொப்பமிட்ட எனக்காவது அனுப்பினால், அதன்பின் கோரின கிராமத்திற்கு இன்ஸ்பெக்டர்வந்து மேல் நடக்கவேண்டியதைச் செய்வார். மனுபாரம் என்னிடம் பெற்றுக்கொள்ளலாம்.



7. மற்றும் விவரம்வேண்டுவோர் அடியில் கையொப்பமிட்ட எனக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம். இந்த நோட்டீஸ் பிரசுரம்செய்திருக்கிற "செங்கற்பட்டு கூட்டுறவினர் சங்கம்" ஜனங்களிடத்தில் எந்த லாபத்தையும் உத்தேசிக்கவில்லை.

இங்ஙனம்
கார்சால அருளய்யநாயுடு,
காரியதரிசி, செங்கற்பட்டு கூட்டுறவினர் சங்கம்,
கீழச்சேரி போஸ்டு, ஸ்ரீபெரும்பூதூர் வழி, செங்கற்பட்டு ஜில்லா.

## இன்ஸ்பெக்டர்களுக்கு.

வருஷக்கணக்கு பரிசோதனை ரிபோர்டுக்களை தயார்செய்வதில் அனுசரிப்பதற்கு கீழேகாட்டிய பொதுவான அறிவிப்புக்களை வெளியாக்குகிறோம்:—

1. அங்கத்தினர்கள் சங்கத்தைவிட்டு விலகுவதின காரணம் நன்கு விசாரிக்கப்பெற்று தெரிவிக்கப்படவேண்டும்.

2. ரிபோர்ட்செய்யப்படும் வருஷத்தின் கடைசிநாளில் ஜாபிதாவிலிருந்த அங்கத்தினர்கள் அனைவர்களுக்கும் அவரவர்களின் தொழில்கள் காட்டப்படவேண்டும்; அந்த வருஷம் சேர்ந்தவர்களுக்கு மட்டும் தெரிவிப்பது போதாது.

3. அங்கத்தினர்களால் கொடுக்கப்பட்ட சந்தாப்பொருளானது வேலை நடத்துவதற்கு வேண்டிய பணமானபடியால், அதை ஒன்பதாவது ஸ்டேட்மெண்டில் அங்கத்தினர்களின் கடன அல்லது சேமப்பொருளின் கீழே காட்டக்கூடாது.

4.. சேமப்பொருள்களுக்கேற்பட்ட விதிகளின்படியே சங்கத்தைச் சேராதவர்களிடமிருந்தும் சேமப்பொருள்கள் வாங்கப்பட்டபோதிலும், அவற்றை ஸ்டேட்மெண்டுக்களில் சங்கத்தைச் சேராதவர்களிடம் வாங்கப்பட்ட கடன்களென்றதலையின் கீழ்காட்டவேண்டும். வாலாற்றில் விவரங்களைச் சொல்லவேண்டும்.

5. சங்கத்தினால் கொடுக்கப்பட்ட கடன்கள், பொதுப்பணம், ஆபத்தனம் முதலியவற்றின் வட்டியை "நானாவிதவரவு" என்று நினைத்து, "மற்ற தொகைகள்" என்றதலையின் கீழ்காட்டவேண்டும்; அவற்றை "வாங்கப்பட்ட அல்லது கொடுக்கப்பட்ட வட்டி" என்றதலையின் கீழ் கொண்டுவரக்கூடாது.

6. லாயக்கணக்கில் சேரவேண்டிய ஐந்தாவது விதியில் தெரிவிக்கப்பட்டதொகைகளையும் பிரவேச கட்டணங்களையும் விலக்க, குறித்த நாளில் வட்டியைக் கொடுக்காததிற்காக தண்டனையாகக் கொடுக்கப்படும் மடங்கு வட்டிமுதலான நானாவித வரவுத்தொகைகளையும், "மற்றதொகைகள்" என்றதலையின் கீழ்காட்டவேண்டும். தகுந்த தகவல்களில்லாமலாவது, ரெஜிஸ்டிராருடைய உத்திரவில்லாமலாவது, வருஷமுடிவில் குறிக்கக்கூடாமலும் பகுக்கக்கூடாமலும் வைக்கவேண்டிய தொகைகளையும், திருப்பிக்கொடுக்க வேண்டிய தொகைகளையும் "சரிக்கட்டுத்தொகைகள" என்றதலையின் கீழ் காட்டவேண்டும். இவ்வண்ணமே, நஷ்டக்கணக்கில் கடன் கணக்காகக்காட்ட வேண்டிய பற்பல செலவுகளையும் "மற்றதொகைகள்" என்றதலையின் கீழ் கொண்டுவரவேண்டும் முன்னால் "சரிக்கட்டுத் தொகைகளில்" காட்டப்பட்ட விகிதங்களுக்கு இப்போது கொடுக்கப்படுகிற தொகைகளையும், பிறகு வசூல் செய்யும் உத்தேசத்துடன் சங்கத்தின் பொருளின்றும் முன்பணமாகக் கொடுக்கப்படும் தொகைகளையும் சரிக்கட்டுத் தொகைகளென்றதலையின் கீழே காட்டவேண்டும்.

7. பரிசோதனைகாலத்தில் கடன் தொகைபேட்டில் காட்டிய கடன்களின் உபயோகங்களைப் பார்க்கவேண்டும். கடன்சரியாய் உபயோகிக்கப்பட்டதாவென்று கண்டுபிடிக்க சங்கத்தார் முயன்றார்களாவென்றும் கணக்குப் பரிசோதனைக்காரர் தெரிவிச்கவேண்டும்.

8. தவறினவர்களின் முழுத்தகவல்களும், அவர்களின்பேரில் நடத்திய நடவடிக்கைகளும் தாராளமாய் சொல்லப்படவேண்டும்.

9. கடன் விண்ணப்பங்கள் காலதாமதமின்றி கவனிக்கப்பட்டனவாவென்று கணக்குப் பரிசோதனைக்காரர் தெரிவிக்கவேண்டும். ஆனால் ஒருபோதும எந்தக்கடனாவது தவறாக கொடுக்கப்பட்டது அல்லது வெறுக்கப்பட்டது என்று இவர் சொல்லக்கூடாது.

10. குறிப்பிட்ட கடனுடைய உபயோகத்தை நன்கு ஆலோசித்து திருப்பிக்கொடுக்கும் முறைகளை ஏற்படுத்தினார்களாவென்று கணக்குப் பரிசோதனைக்காரர் தெரிவிக்கவேண்டும்.

11. அநிச்சயமான சில்லரைச் செலவுகளின் முழுவிவரமும் கொடுக்கப்படவேண்டும். சங்கத்தின் லாபத்தை உத்தேசித்து இச்செலவுகள் சரியாவென்றும் கணக்குப் பரிசோதனைக்காரர் தெரிவிக்கவேண்டும்.

12. சங்கம் ஏற்படுவதற்குமுன் கிராமத்திலிருந்த வட்டியும், ஏற்பட்டபின் இருந்து வருகிறவட்டியும் தெரியவேண்டும். சங்கத்தினால் வட்டி குறைவு பட்டதாவென்றும் குறிப்பிடவேண்டும்.

13. சங்கத்தின் கடன்வாங்கும் முழுத்திறமை யென்னவென்றும் இதற்கு அதிகமாக எப்போதாவது கடன் வாங்கபட்டதாவென்றும் தெரிவிக்கவேண்டும்.



14. பரிசோதனைசெய்யும் தினத்தில் சங்கத்தின் கையிருப்பை கணக்கிட்டு சரியாவென்று குறிக்கவேண்டும். வருஷமுடிவில் கையிருப்புப்பணம் எவ்விதம் உபயோகிக்கப் பட்டதென்றும் தெரிவிக்கவேண்டும்.

15. கொடுக்கப்பட்ட கடன்களின் விவரங்களைக் காண்பிக்கும் ரசீது புத்தகங்களை நேரில்பார்த்து உண்மையுரைக்கவேண்டும்.

16. கணக்குகளின் அட்டவணைகளை அச்சிடுவது ரொம்ப கடினமான வேலை. ஆகையால் எண்ணிக்கைகளின் அட்டவணை ஒன்றுகூட இருக்கக்கூடாது. ரிபோர்டில் எல்லாப்பதிவுகளையும் ஒன்றின்பின் ஒன்றாய் செய்ய வேண்டும். சங்கத்தின் சொத்துக்கள். கடன்கள், வரவு செலவுகள், லாபநஷ்டங்களைக் காட்டுகிற குறிப்புகளையும் இம்மாதிரியே ஒன்றின்பின் ஒன்றாய்க் காட்டவேண்டும்.

17. ஒருதரம் ஆபத்தனத்தோடு சேர்ந்த ஒருதொகையை ரெஜிஸ்டிராருடைய உத்திரவின்றி மறுபடியும் சங்கத்தின்பொதுப்பணத்தில் கொண்டுவரக்கூடாது.

18. கணக்குப் பரிசோதனையில் தவறுகளைக் கண்டுபிடித்தவுடன் அவற்றைத் திருத்தவேண்டும். ரெஜிஸ்டிராரினால் அங்கீகரிக்கப்பட்ட வருஷக்கணக்கில் தவறைக்கண்டால், கணக்கில் திருத்தம் செய்யாமலே, பின்வரும் வருஷத்தின் கணக்கில் வேண்டிய திருத்தம் செய்வதற்கு ரெஜிஸ்டிராருடைய உத்திரவுக்கு கூட்டுதல் குறைத்தல் குறிப்பு ஒன்றைத்தயார்செய்து அனுப்பவேண்டும்.

19. ஒன்பதாவது அட்டவணையில் பணம் செல்லவேண்டிய நாளுக்குப் பிறகு சேரவேண்டிய தொகைமுழுவதையும், 6, 10, 11, 18, 24, 25 கலங்களில் காட்டவேண்டும். முன்னதாக வாங்கப்பெற்ற தொகைகளை, 7, 13, 19, 27, 28 காலம்களில் விலக்கவேண்டும்.

20. ஏற்பட்ட அட்டவணைகளில் யாதொரு மாறுபாட்டையும் செய்யக்கூடாது, தொகைகளின் விபாகத்தைப்பற்றிச் சந்தேகமிருந்தால் கையெழுத்தில் ஒருபகுதியை ஏற்படுத்திக்கொண்டு இதற்குக் காரணத்தையும் நன்றாய் விளக்கவேண்டும்.

21. முடிவான பரிசோதனை செய்வதற்குமுன், சங்கத்தின் உபவிதிகளையும், சென்றவருஷத்தின் கணக்குப் பரிசோதனை ரிபோர்டையும், ஸர்க்காரால் செய்யப்பெற்ற குறிப்புக்களையும் நன்றாய் படித்துத்தெரிந்து கொண்டுதான் அட்டவணைகளில் பதிவுசெய்ய ஆரம்பிக்கவேண்டும்.

# விளம்பரம்.

இதனடியிற்கண்ட இந்தியா கவர்ன்மெண்டாருடைய விளம்பரம் மீண்டும் பிரசுரிக்கப் படுகிறது:—

நெ-2520

ஹோம் இலாகா

பப்ளிக்

சிம்லா-1908-ஹூ நவம்பர்மீ 6-உ

1904-ஹூ செப்டம்பர்மீ 30-உ ஹோம்இலாகா விளம்பரம் நெ-2104-ஐ-ரத்துசெய்து (1904-ஹூ ஹூத்து 10-வது ஆக்டாகிய) 1904-ம் ஹூத்துக் கோவாபரேடிவ்க்ரெடிட் ஸொஸைடீ என்னும் ஐக்கிய நாணயச்சங்கங்களைக்குறித்த ஆக்ட் 25-வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிலுள்ள (e) அடையாளமிட்ட பகுதியினாலும், (2) குறிப்பிட்ட உட்பிரிவினாலும் கொடுக்கப்பட்ட அதிகாரங்களைக்கொண்டு, ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் - அந்த ஆக்டின்படி அந்தந்த காலத்தில் ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கும் யாதொரு கோவாபரேடிவ்க்ரெடிட் ஸொஸைடி என்னும் ஐக்கியநாணயச் சங்கத்தினாலாவது அந்த சங்கத்தின் பொருட்டாவது அல்லது அந்தசங்கத்தின் விவகாரங்களைக்குறித்து சங்கத்தின் உத்தியோகஸ்தராலாவது அங்கத்தினராலாவது பிறக்கும் தஸ்தாவேஜுகளுக்கு அந்தந்த காலத்தில் செலாவணியாய்க் கொண்டிருக்கும் ரெஜிஸ்ட்ரேஷனைக் குறித்த சட்டத்தின் பிரகாரம் செலுத்தத்தக்க எல்லா கட்டணங்களையும் கனிகூர்ந்து வஜாசெய்கிறார்கள்.

ஆனால், பிரதேச கவர்ன்மெண்டார் அப்படிப்பட்ட நிவாரணையை எந்த சங்கத்தின் விஷயத்திலாவது எப்போதாகிலும் ரத்து செய்யலாம்.

# ரிஜிஸ்டிரார் அவர்கள் விளம்பரம்.

(1) ஜென்னிலைக் கடன்களுக்கும் (2) ஆதாரக்கடன்களுக்கும் அச்சிட்டிருக்கிற பாண்டு பாரங்கள் ஐக்கிய நாணயசங்கங்களின் ரிஜிஸ்டிரார் அவர்கள் ஆபீஸில் இருக்கின்றன. ஐக்கிய நாணயச்சங்கங்கள் ஷை ஆபீஸிலிருந்து அவைகளை விலைகொடுத்து பெற்றுக் கொள்ளலாம்.



## 1908-ம் ஹூ ஜூலைமீ 1-உயிலிருந்து 1909-ம் ஹூ ஜூன்மீ 30-உ முடிய பதிவு செய்துகொள்ளப்பட்ட புதிய சங்கங்களின் ஜாபிதா.

| நம்பர். | சங்கங்களின் பெயர். | தாலூகா. | ஜில்லா. |
|---|---|---|---|
| 102 | மங்கவரம் | ஸர்வசித்தி | விசாகப்பட்டணம் |
| 103 | சந்திரகிரி | சந்திரகிரி | வடஆற்காடு |
| 104 | தாரமங்கலம் | சேலம் | சேலம் |
| 105 | ஓடவன்குறிச்சி | ஷை | ஷை* |
| 106 | தோலூர் | ஷை | ஷை |
| 107 | ஓமலூர் | ஷை | ஷை |
| 108 | நமகிரிபேட்டை | ஷை | ஷை |
| 109 | கர்னூல் அர்பன் | ராமல்லகோடா | கர்னூல் |
| 110 | மேச்சேரி | சேலம் | சேலம் |
| 111 | வனவாஸி | ... | ... |
| 112 | ராசிபுரம் | ... | ... |
| 113 | தலங்கை | வாலாஜா | வடஆர்காடு |
| 114 | கன்னங்குறிச்சி | சேலம் | சேலம் |
| 115 | பொட்டிபுரம் | ... | ... |
| 116 | ஜலகண்டாபுரம் | ... | ... |
| 117 | முத்துநாயக்கன்பட்டி | ... | ... |
| 118 | கிருஷ்ணகிரி அர்பன் | கிருஷ்ணகிரி | ... |
| 119 | பாலக்கோடு | தர்மபுரி | ... |
| 120 | கிருஷ்ணபுரம் | ... | ... |
| 121 | அதமன்கோட்டை | ... | ... |
| 122 | தர்மபுரி | ... | ... |
| 123 | அதிகாரப்பட்டி | ஊத்தங்கரை | ... |
| 124 | பள்ளிபட்டி | ... | ... |
| 125 | கம்பயநல்லூர் | ... | ... |
| 126 | கொண்டரம்பட்டி | ... | ... |
| 127 | ஈச்சம்பாடி | ... | ... |
| 128 | ஊமளூர் | ... | ... |
| 129 | ஊத்தங்கரை | ... | ... |
| 130 | அட்டயம்பட்டி | சேலம் | ... |
| 131 | மாநியம்பட்டி | ... | ... |
| 132 | மருத்வாம்பாடி | மதுராந்தகம் | செங்கல்பட்டு |
| 133 | பெருங்குழி | ... | ... |
| 134 | கம்மாளம்பூண்டி | ... | ... |
| 135 | ஆயகுளத்தூர் | காஞ்சீபுரம் | ... |
| 136 | பெதுகுப்பா | கல்யாணதுர்க் | அனந்தபூர் |
| 137 | பாமிடி | குத்தி | ... |
| 138 | கீழ்நல்லாத்தூர் | திருவள்ளூர் | செங்கல்பட்டு |
| 139 | குண்டுபெரும்பேடு | காஞ்சிபுரம் | ... |
| 140 | மலைப்பட்டு | ... | ... |
| 141 | சாலூர் | செங்கல்பட்டு | ... |
| 142 | பிச்சிவாக்கம் | காஞ்சிபுரம் | ... |
| 143 | கன்னார்தாங்கல் | ... | ... |

* வேலைசெய்யும் விஸ்தீரணம் சேலம்ஜில்லாமுழுவதும்.

## 1908வரு ஜூலை மீ 1உயிலிருந்து 1909வரு ஜூலை மீ முடிய பதிவு செய்துக்கொள்ளப்பட்ட புதிய சங்கங்களின் ஜாபிதாவின் தொடர்ச்சி.

| நம்பர். | சங்கங்களின் பெயர். | தாலூகா. | ஜில்லா. |
|---|---|---|---|
| 144 | எடையார்பாக்கம் | ... | செங்கற்பட்டு |
| 145 | பெரியகுளம் | பெரியகுளம் | மதுரை |
| 146 | கப்பார் சோட்டேர் | காஞ்சீபுரம் | செங்கற்பட்டு |
| 147 | வடமலைபுரம் | சாத்தூர் | திருநெல்வேலி |
| 148 | கள்ளக்குறிச்சி | கள்ளக்குறிச்சி | தென் ஆற்காடு |
| 149 | மணிமங்கலம் | காஞ்சீபுரம் | செங்கற்பட்டு |
| 150 | ச கரபுரம் | கள்ளக்குறிச்சி | தென் ஆற்காடு |
| 151 | * சேலம் டிஸ்டிரிக்ட் பாங்க் | ... | சேலம் |
| 152 | சிலவட்டம் | மதுராந்தகம் | செங்கற்பட்டு |
| 153 | ராவத்த நல்லூர் சண்டிகை | ... | ... |
| 154 | மேல்தண்டரை | ... | ... |
| 155 | சேரப்பாக்கம் | ... | ... |
| 156 | மானம்பதி கண்டிகை | ... | ... |
| 157 | கருவேப்பம்பூண்டி | ... | ... |
| 158 | நெல்வாய் | ... | ... |
| 159 | நாஞ்சிபுரம் | ... | ... |
| 160 | ஓரத்தூர் | ... | ... |
| 161 | பல்லிவாடா | குடிவாடா | கிருஷ்ணா |
| 162 | மேல்பாக்கம் | மதுராந்தகம் | செங்கற்பட்டு |
| 163 | அருமந்தண்டலம் | ... | ... |
| 164 | வள்ளுவம்பாக்கம் | வாலாஜாபேட்டை | வடஆற்காடு |
| 165 | நெய்க்காரபட்டி | சேலம் | சேலம் |
| 166 | கடியம்பட்டி | ... | ... |
| 167 | மல்லிக்குண்டம் | ... | ... |
| 168 | பள்ளிபட்டி | ... | ... |
| 169 | துளசம்பட்டி | ... | சேலம் |
| 170 | ஞானக்குறிச்சி | கள்ளக்குறிச்சி | தென் ஆற்காடு |
| 171 | மாமுண்டி. | திருச்செங்கோடு | சேலம் |
| 172 | சமுத்திரம் | ... | ... |
| 173 | சின்னப்பம்பட்டி | சேலம் | ... |
| 174 | பன்னப்பட்டி | ... | ... |
| 175 | ஓரகடம் | செங்கற்பட்டு | செங்கற்பட்டு |
| 176 | வாங்கூர் | வாலாஜாபேட்டை | வடஆற்காடு |
| 177 | கல்யாணதுர்க் | கல்யாணதுர்க் | அனந்தபூர் |
| 178 | * குளித்தலை டிஸ்டிரிக்ட் அர்பன் பாங்கு | ... | திருச்சிறாப்பள்ளி |
| 179 | கோவக்குடி | முசிரி | ... |
| 180 | அப்பணநல்லூர் | ... | ... |
| 181 | புத்தூர் | உப்பினங்காடி | தென்கன்னடம் |

* வேலைசெய்யும் விஸ்தீரணம் திருச்சி ஜில்லா முழுவதும்.



## 1908-ம்வரு ஜூலை மீ 1உயில் இருந்த ரிஸர்வ்பண்டுகளின் ஸ்டேட்மெண்டு.

| சொஸைடியின் ரிஜிஸ்டர் நெம்பர். | சொஸைடியின் பெயர். | ஜில்லா. | 1908-ம் ஜூன் மீ 30உ யிலிருந்த ஆபத்தனம். | | | ஆபத்தனத்தோடு சேர்க்கும்படி சொல்லப்பட்ட தொகை. | | | ஆபத்தனத்தின் மொத்தம். | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. | அ. | பை. | ரூ. | அ. | பை. | ரூ. | அ. | பை. |
| 1 | திரூர் | செங்கல்பட்டு | 105 | 3 | 4 | 74 | 15 | 4 | 180 | 2 | 8 |
| 2 | கீழச்சேரி | ... | 685 | 4 | 9 | 234 | 13 | 8 | 920 | 2 | 0 |
| 3 | காஞ்சீபுரம் | ... | 782 | 15 | 9 | 435 | 3 | 11 | 1218 | 3 | 8 |
| 4 | காவேரிபாக்கம் | வடஆற்காடு | 660 | 2 | 9 | 473 | 8 | 8 | 1130 | 11 | 5 |
| 5 | தாமல் | செங்கல்பட்டு | 235 | 12 | 7 | 297 | 3 | 1 | 532 | 15 | 8 |
| 6 | விளாத்திகுளம் | திருநெல்வேலி | 279 | 8 | 10 | 223 | 11 | 8 | 503 | 4 | 6 |
| 7 | சீடாமங்கலம் | தஞ்சாவூர் | 571 | 0 | 10 | 483 | 1 | 7 | 1054 | 2 | 5 |
| 8 | நிக்கல்ஸன் அர்பன் | ... | 80 | 2 | 0 | 94 | 10 | 10 | 174 | 12 | 10 |
| 9 | மேலட்டூர் | ... | 402 | 12 | 2 | 269 | 15 | 0 | 672 | 11 | 2 |
| 10 | நந்தலூர் | கடப்பை | 378 | 1 | 4 | 193 | 12 | 0 | 571 | 13 | 4 |
| 11 | நெம்மேலி | செங்கல்பட்டு | 138 | 15 | 0 | 110 | 0 | 9 | 248 | 15 | 9 |
| 12 | வடநங்கூர் | வடஆற்காடு | 180 | 4 | 11 | 153 | 9 | 0 | 333 | 13 | 11 |
| 13 | நம்பிபுரம் | திருநெல்வேலி | 180 | 11 | 5 | 154 | 2 | 0 | 334 | 13 | 5 |
| 14 | பக்கபட்டணம் | அனந்தபூர் | 267 | 7 | 9 | 142 | 6 | 3 | 409 | 14 | 0 |
| 15 | திருவல்லிக்கேணி ஸ்டோர்சு. | மதிராசு | 1726 | 13 | 2 | 2647 | 1 | 2 | 4373 | 14 | 2 |
| 16 | அழிஞ்சிவாக்கம் | செங்கல்பட்டு | 69 | 0 | 5 | 84 | 4 | 2 | 153 | 4 | 7 |
| 17 | சாலவேடு | வடஆற்காடு | 295 | 0 | 7 | 134 | 6 | 2 | 429 | 6 | 9 |
| 18 | மதிராஸ் ஸென்ட்ரல் | மதிராசு | 211 | 8 | 9 | 554 | 14 | 11 | 766 | 7 | 8 |
| 19 | நாமக்கல் அர்பான் | சேலம் | 233 | 13 | 4 | 170 | 4 | 10 | 404 | 2 | 2 |
| 20 | வேலூர் | ... | 510 | 0 | 8 | 462 | 3 | 11 | 972 | 4 | 7 |
| 21 | காஞ்சீபுரம் நெசவுக்காரர்கள். | செங்கல்பட்டு | 71 | 12 | 0 | 3 | 4 | 0 | 75 | 0 | 0 |
| 22 | தெனாலி அர்பன் | குண்டூர் | 495 | 14 | 0 | 368 | 4 | 9 | 864 | 2 | 9 |
| 23 | ஸோமரபல்லி | ... | 260 | 0 | 0 | 261 | 2 | 4 | 521 | 2 | 4 |
| 24 | கூடூர் | நெல்லூர் | 375 | 3 | 6 | 419 | 6 | 6 | 794 | 10 | 0 |
| 25 | சேலம் அர்பன் | சேலம் | 525 | 8 | 6 | 654 | 1 | 5 | 1179 | 9 | 11 |
| 26 | கோயம்புத்தூர் ஸ்டோர்சு. | கோயம்புத்தூர் | 208 | 0 | 6 | 193 | 0 | 1 | 401 | 0 | 7 |
| 27 | மன்னார்குடி அர்பன் | தஞ்சாவூர் | 320 | 1 | 0 | 326 | 14 | 0 | 646 | 15 | 0 |
| 28 | மதுரை ஸ்டோர்சு. | மதுரை | 496 | 4 | 0 | 625 | 12 | 4 | 1122 | 0 | 4 |
| 29 | திருமங்கலம் அர்பன் | ... | 72 | 0 | 6 | 216 | 1 | 3 | 288 | 1 | 9 |
| 30 | லால்குடி | திருச்சிறாபள்ளி | 269 | 13 | 0 | 469 | 8 | 0 | 739 | 5 | 0 |
| 31 | அனைக்காடு | தஞ்சாவூர் | 194 | 0 | 0 | 114 | 6 | 0 | 308 | 6 | 0 |
| 32 | கொத்தகோட்டா | அனந்தபூர் | 87 | 1 | 2 | 111 | 10 | 11 | 198 | 12 | 1 |
| 33 | தொழூர் | செங்கல்பட்டு | 28 | 0 | 8 | 45 | 0 | 9 | 73 | 1 | 5 |
| 34 | கந்துகூரு | நெல்லூர் | 47 | 9 | 0 | 120 | 2 | 0 | 167 | 11 | 0 |
| 35 | ராஜாமடம் | தஞ்சாவூர் | 55 | 0 | 0 | 76 | 1 | 0 | 131 | 1 | 0 |
| 36 | ஹூவினஹடகல்லி | பெல்லாரி | 85 | 8 | 6 | 64 | 3 | 4 | 99 | 11 | 10 |
| 37 | ஜமீன் தங்கம்பாக்கம். | செங்கல்பட்டு | 26 | 6 | 3 | 30 | 9 | 9 | 57 | 0 | 0 |

1908-ம் ௵ ஜூலை மீ 1உ-யில் இருந்த ரிஸர்வ்பண்டுகளின் ஸ்டேட்மெண்டு

| ஸொஸைட்டியின் ரிஜிஸ்டர் நெம்பர் | ஸொஸைட்டியின் பெயர். | ஜில்லா. | 1908-ம் ௵ ஜூன் மீ 30உ யிலிருந்த ஆபத்தனம். | | | ஆபத்தனத்தோடு சேர்க்கும்படி சொல்லப்பட்ட தொகை | | | ஆபத்தனத்தின் மொத்தம். | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. | அ. | பை. | ரூ. | அ. | பை. | ரூ. | அ. | பை. |
| 38 | தெனாலிஸ்டோர்ஸ் | குண்டூர் | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... |
| 39 | தம்மபூடி | ... | 90 | 8 | 2 | 389 | 15 | 6 | 480 | 7 | 8 |
| 40 | பொரஹுராமபூர் அர்பன் | கஞ்சம் | ... | ... | ... | 198 | 2 | 11 | 191 | 2 | 11 |
| 41 | உத்தரமல்லூர் | செங்கல்பட்டு | 168 | 7 | 0 | 1047 | 14 | 8 | 1215 | 5 | 8 |
| 42 | களியாம்பூண்டி | ... | 25 | 11 | 0 | 177 | 5 | 0 | 203 | 0 | 0 |
| 43 | பாக்கல்பட்டி | சேலம் | 37 | 11 | 0 | 335 | 9 | 0 | 373 | 4 | 0 |
| 44 | பனமரத்தபட்டி | ... | 72 | 0 | 0 | 289 | 15 | 3 | 361 | 15 | 3 |
| 45 | பரமகுடி அர்பன் | மதுரை | 143 | 15 | 2 | 91 | 15 | 3 | 235 | 14 | 5 |
| 46 | திண்டிவனம் அர்பன் | தென் ஆற்காடு | 476 | 2 | 6 | 423 | 6 | 10 | 899 | 9 | 4 |
| 47 | தர்மாவரம | அனந்தபூர் | 20 | 2 | 0 | 182 | 6 | 0 | 202 | 8 | 0 |
| 48 | மேல்மலையனூர் | தென் ஆற்காடு | 20 | 2 | 0 | 172 | 8 | 4 | 192 | 10 | 4 |
| 49 | மதராஸ் டெயிலரிங் ஹௌஸ். | மதராஸ் | 1 | 2 | 2 | 8 | 2 | 2 | 9 | 4 | 6 |
| 50 | கண்ணண்டஹல்லி | சேலம் | 102 | 11 | 1 | 406 | 2 | 0 | 508 | 13 | 1 |
| 51 | கள்ளிபட்டு | செங்கற்பட்டு | 48 | 0 | 0 | 172 | 18 | 0 | 220 | 18 | 1 |
| 52 | மதிராஸ ரயில்வே எம்ப்ளாயிஸ் | மதராஸ் | 16 | 14 | 7 | 47 | 0 | 7 | 63 | 15 | 2 |
| 53 | பியபள்ளி | கர்நூல் | 33 | 8 | 0 | 112 | 6 | 11 | 145 | 15 | 1 |
| 54 | வச்சிரகரூர் | அனந்தபூர் | 54 | 9 | 6 | 207 | 8 | 1 | 262 | 1 | 7 |
| 55 | குண்டக்கல் | ... | 68 | 4 | 10 | 285 | 4 | 4 | 353 | 9 | 2 |
| 56 | நாகய்யலங்கா | கிருஷ்ணா | 13 | 6 | 0 | 362 | 0 | 3 | 375 | 6 | 3 |
| 57 | திம்மண்சர்லா | அனந்தபூர் | 49 | 12 | 11 | 320 | 8 | 8 | 370 | 5 | 7 |
| 58 | கர்நூல் ஸ்டோர்ஸ் | கர்நூல் | ... | | | 118 | 8 | 0 | 118 | 8 | 0 |
| 59 | சித்தூர் ஸ்டோர்ஸ் | N ஆர்காடு | ... | | | 32 | 3 | 7 | 32 | 3 | 7 |
| 60 | உரவக்கொண்டா | அனந்தபூர் | ... | | | 45 | 6 | 2 | 45 | 6 | 2 |
| 61 | பாண்டவாக்கம் | செங்கற்பட்டு | 11 | 4 | 0 | 241 | 1 | 0 | 252 | 5 | 0 |
| 62 | குண்டூர் ஸ்டோர்ஸ் | குண்டூர் | ... | | | 84 | 9 | 10 | 84 | 9 | 10 |
| 63 | மதனபள்ளி ஸ்டோர் | கடப்பா | ... | | | 7 | 15 | 7 | 7 | 15 | 7 |
| 64 | அனக்காவூர் | N ஆர்காடு | ... | | | 10 | 6 | 9 | 10 | 6 | 9 |
| 65 | காடியம் | கோதாவரி | ... | | | 7 | 11 | 0 | 7 | 11 | 0 |
| 66 | மகலம் | பெல்லாரி | ... | | | ... | | | ... | | |
| 67 | ஹிரேஹடகல்லி | ... | ... | | | 39 | 0 | 6 | 39 | 0 | 6 |
| 68 | ஜெயங்கொண்டசோழபுரம் | திருச்சி | ... | | | 89 | 3 | 0 | 89 | 3 | 0 |
| 69 | பெரம்பலூர் | ... | ... | | | 40 | 14 | 0 | 40 | 14 | 0 |
| 70 | வட்லம்மாறு | கிருஷ்ணா | ... | | | 5 | 6 | 4 | 5 | 6 | 4 |
| 71 | முடியனூர் | S ஆர்காடு | ... | | | 73 | 10 | 9 | 73 | 10 | 9 |
| 72 | சென்னிமலை | கோயம்புத்தூர் | ... | | | 53 | 1 | 6 | 53 | 1 | 9 |
| 73 | புதுப்பாளையம் | ... | ... | | | 29 | 13 | 10 | 29 | 13 | 10 |
| 74 | எர்ரபெம்மனஹல்லி | அனந்தபூர் | ... | | | 18 | 7 | 0 | 18 | 7 | 0 |



1908-ம் ௵ ஜூலை மீ 1உ-யில் இருந்த ரிஸர்வ்பண்டுகளின் ஸ்டேட்மெண்டு

| ஸொஸைட்டியின் ரிஜிஸ்டர் நெம்பர் | ஸொஸைட்டியின் பெயர். | ஜில்லா. | 1903-ம் ௵ ஜூன் மீ 30உ யிலிருந்த ஆபத்தனம். | ஆபத்தனத்தோடு சேர்க்கும்படி சொல்லப்பட்ட தொகை. | | | ஆபத்தனத்தின் மொத்தம். | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ரூ. | அ. | பை. | ரூ. | அ. | பை. |
| 75 | ஜம்மனஹல்லி | சேலம் | ... | 190 | 0 | 2 | 190 | 0 | 2 |
| 76 | செங்காலிபுரம் | தஞ்சாவூர் | ... | 79 | 1 | 8 | 79 | 1 | 8 |
| 77 | தாடிகுண்டபள்ளி | கடப்பா | ... | 0 | 1 | 8 | 0 | 1 | 8 |
| 79 | வன்னுவக்குடி | தஞ்சாவூர் | ... | 11 | 1 | 0 | 11 | 1 | 0 |
| 80 | வெள்ளியம்பாக்கம் | N ஆர்காடு | ... | 14 | 5 | 6 | 14 | 5 | 6 |
| 81 | ஒத்தக்கடை | மதுரை | ... | 80 | 0 | 0 | 80 | 0 | 0 |
| 82 | பௌண்டரீகபுரம் | தஞ்சாவூர் | ... | 15 | 6 | 0 | 15 | 6 | 0 |
| 83 | கௌதாராம் | கிருஷ்ணா | ... | 14 | 14 | 7 | 14 | 14 | 7 |
| 84 | வெங்கடபுரம | ... | ... | 5 | 14 | 9 | 5 | 14 | 9 |
| 90 | ஹரிஸமுத்திரம் | அனந்தபூர் | ... | 11 | 8 | 1 | 11 | 8 | 1 |
| 91 | திருப்பத்தியூர் | செங்கற்பட்டு | ... | 7 | 4 | 0 | 7 | 4 | 0 |
| 92 | மொளசூர் | ... | ... | 4 | 13 | 0 | 4 | 13 | 0 |
| 93 | திருமலைவாடி | திருச்சி | ... | 20 | 14 | 0 | 20 | 4 | 0 |
| 94 | ஆத்தூர் | சேலம் | ... | 11 | 4 | 1 | 11 | 4 | 1 |
| 95 | வளர்புரம் | செங்கற்பட்டு | ... | 0 | 4 | 1 | 0 | 4 | 1 |
| 96 | ஒங்கோல் அர்பன் | குண்டூர் | ... | 15 | 9 | 2 | 15 | 9 | 2 |
| 97 | அக்கமாபுரம் | செங்கற்பட்டு | ... | 5 | 15 | 3 | 5 | 15 | 3 |
| 98 | ஷோலிங்கர் அர்பன் | N ஆற்காடு | ... | 1 | 15 | 0 | 14 | 15 | 0 |
| 99 | நரசிங்கபுரம் | செங்கற்பட்டு | ... | 4 | 4 | 0 | 1 | 4 | 0 |
| 100 | கருங்குழி ராஜகோபாலாசாரி | ... | ... | 0 | 9 | 3 | 0 | 9 | 3 |
| | | மொத்தம் | 18017 8 0 | 18126 | 6 | 2 | 81143 | 9 | 2 |

1909–1910-ம் வருஷத்து ஸ்டேட் லோன் என்ற கடன்களைத் திருப்பி செலுத்தியதன் பட்டி.

| நெம்பர். | ரிஜிஸ்டர் நெம்பரும் | ஸொஸைட்டியின் பெயரும். | ஜில்லா. | அசல் தொகை முதல் வாயிதா | அசல் தொகை 2-வது வாயிதா | வட்டி மொத்தம். ரூ. | அ. | பை. | கட்டவேண்டிய தேதி. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ரூ. | ரூ. | | | | |
| 1 | 14 | புக்கபட்டணம் ... | அனந்தபூர் ... | 85 | ... | 34 | 0 | 0 | 29—7—09 |
| 2 | 16 | அழிஞ்சிவாக்கம் ... | செங்கற்பட்டு ... | 15 | ... | 6 | 0 | 0 | 27—8—09 |
| 3 | 1 | திரூர் ... | ,, ... | ... | 40 | 14 | 6 | 5 | 30—8—09 |
| 4 | 2 | கீழச்சேரி ... | ,, ... | ... | 200 | 72 | 0 | 0 | 7—9—09 |
| 5 | 17 | சாலவேடு ... | வடஆற்காடு ... | 135 | ... | 54 | 0 | 0 | 26—9—09 |
| 6 | 20 | வேலூர் ... | சேலம் ... | 200 | ... | 80 | 0 | 0 | 10—11—09 |
| 7 | 3 | காவேரிப்பாக்கம் ... | வடஆற்காடு ... | ... | 200 | 72 | 0 | 0 | 24—12—09 |
| 8 | 5 | தாமல் ... | செங்கற்பட்டு ... | ... | 195 | 70 | 3 | 2 | 19—1—10 |
| 9 | 23 | லூத்ரேபள்ளி ... | குண்டூர் ... | 200 | ... | 80 | 0 | 0 | 21—1—10 |
| 10 | 6 | விளாடிகுளம் ... | திருநெல்வேலி ... | ... | 85 | 30 | 9 | 7 | 30—1—10 |
| 11 | 7 | கீடாமங்கலம் ... | தஞ்சாவூர் ... | ... | 200 | 72 | 0 | 0 | 5—2—10 |
| 12 | 9 | மெலட்டூர் ... | ,, ... | ... | 115 | 41 | 6 | 5 | 11—2—10 |
| 13 | 24 | கூடூர் ... | நெல்லூர் ... | 200 | ... | 80 | 0 | 0 | 19—2—10 |
| 14 | 10 | நந்தலூர் ... | கடப்பை ... | ... | 120 | 43 | 3 | 2 | 14—3—10 |
| 15 | 11 | நெம்மிலி ... | செங்கற்பட்டு ... | ... | 40 | 14 | 6 | 5 | 18—4—10 |
| 16 | 30 | லால்குடி ... | திருச்சி ... | 200 | ... | 80 | 0 | 0 | 1—5—10 |
| 17 | 12 | வடகாங்கூர் ... | வடஆற்காடு ... | ... | 100 | 36 | 0 | 0 | 6—5—10 |
| 18 | 13 | சம்பிபுரம் ... | திருநெல்வேலி ... | ... | 45 | 16 | 3 | 2 | 30—6—10 |
| | | | மொத்தம் ... | 1035 | 1340 | 896 | 6 | 4 | |

# மதிராஸ் புல்லடீன் ஆப் கோவாபரேஷன்.

வால்யூம். I.] டிஸம்பர், 10௳, 1909. [நெ. 2.

## சென்னை இராஜதானியில் ஐக்கியநாணயச் சங்கங்களின் விர்த்தி.

1904-வருஷத்திய 10வது இந்திய ஆக்டை அமுலுக்குக் கொண்டுவர மதராஸ் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட ரிஜிஸ்திரார் அவர்கள் 1904௵ சூலைமீ॰ த்தில் தமது உத்தியோகத்தை ஏற்றுக்கொண்டார். அதுமுதல் இப்போது ஐந்து வருஷங்கள் ஆயின. இதுவரையில் ஆனவிர்த்தியை அடியில் சுருக்கி காட்டியிருக்கிறது:—

| | | 1904—05 | 1905—06 | 1906—07 | 1907—08 | 1908—09 |
|---|---|---|---|---|---|---|
| ரிஜிஸ்டரான சங்கங்களின் சங்கிலை. | சென்டிரல் சங்கங்கள். | 0 | 1 | 0 | 0 | 2 |
| | நகரச்சங்கங்கள். | 2 | 7 | 12 | 2 | 2 |
| | நாட்டுப்புறச்சங்கங்கள். | 8 | 9 | 24 | 36 | 76 |
| | மொத்தம். | 10 | 17 | 36 | 38 | 80 |
| வருஷக்கடைசியில் இருந்த மெம்பர்களின் சங்கிலை... | | 883 | 2,733 | 6,439 | 9,537 | 15,597 |
| வருஷக்கடைசியில் இருந்த பங்குத்தொகை ... | | ரூ. 4,765 | 31,448 | 75,875 | 1,22,297 | 2,09,266 |
| ஆரம்பஇருப்பு நீக்கி வரவு மொத்தம் ... | | 18,550 | 2,42,125 | 9,72,524 | 13,65,807 | 32,74,530 |
| கடைசிஇருப்பு நீக்கி செலவுமொத்தம் ... | | 14,823 | 2,32,366 | 9,56,005 | 13,48,167 | 32,65,194 |
| வருஷத்தில் தேறிய நிகரலாபம் ... | | 259 | 4,540 | 17,744 | 28,103 | 45,581 |
| வருஷக்கடைசியில் சேர்ந்த சேமநிதி மொத்தம்... | | ... | 950 | 3,369 | 1,278 | 29,270 |
| வருஷத்தில் பட்டுவாடா செய்த கடன்கள். | சங்கிலை... | 190 | 1,263 | 4,194 | 5,146 | 9,316 |
| | தொகை... | 13,145 | 94,370 | 3,85,692 | 4,85,173 | 9,71,021 |

OFFICE OF THE REGISTRAR OF BOOKS REGISTERED JUN 1910 MADRAS.



2. சங்கங்கள் ஸ்தாபனம்செய்ய முன் வருபவர்களுக்கு சங்கங்களை வேலைநடத்தி வைப்பதற்குத் தகுதியென்று அவர்களுக்கு தோற்றுகிறவித மாய் விதிகளை செய்து கொள்ளும்படி அவர்கள் இஷ்டத்துக்கு எவ்வளவு குறைவுநேராதபடி அதிகாரம் கொடுக்கப்பட்டது. ஆனால் அவர்கள் தங்க ளுக்காக ஏற்படுத்தும் விதிகள் ஆக்டுக்கும் அதையனுசரித்து கவர்ன்மெண் டார் ஏற்படுத்தியிருக்கும் ரூல்களுக்கும் விரோதப்படக்கூடாது. முதல்முத லில் இவ்விராஜதானியில் ஸ்தாபனமான சங்கங்களில், சங்கஸ்தாபகர்த்தர்கள் சென்னைராஜதானியில் இருக்கிறநிதிகளின் முறைகளைப் பின்பற்றி தங்கள் சங் கங்களை ஏற்படுத்த விரும்பினார்கள். ராபிசன் (Rapfesin) முறையுடன் பங்குத் தொகையையும் சேர்த்து ஏற்படுத்தப்படுகிற சங்கமே இப்போது எல்லாரும் விரும்புவது. சின்னாளைக்கு முன் சில சங்கங்கள் பங்குத்தொகையை படிப் படியாய் அதிகரித்துக் கொண்டுவரும் லூஜாட்டி (Luzatte) முறையை கைக் கொண்டுவருகின்றன.

3. சங்கங்களுக்கு வேண்டிய திரவியமெல்லாம் உள்ளூரில் கிடைக்கும் பணத்தாலும் ஸென்டிரல் பாங்குகள் கொடுக்கும் கடன்களாலும் சேகரிக்கப் படுகிறது. ஆரம்பத்தில் ஸென்டிரல்பாங்குகளின் உதவியால் தான் சங்க களுக்கு பெரும்பாலும் பணம் கிடைக்கிறது. ஸென்டிரல் பாங்குகள் ரிஜிஸ் தரான சங்கங்களுக்கு மாத்திரந்தான் கடன் கொடுக்கலாமென்று கட்டுப்படுத் தப்பட்டிருக்கின்றன. ஸென்டிரல் பாங்குகளில் பணம் கட்டிவைப்பதில் இருக் கும் பந்தோபஸ்தை மஹாஜனங்கள் கெட்டியாய் தெரிந்துகொண்டிருக்கிறார் கள் அதுபற்றி அவர்கள் தாராளமாய் டிபாசிட்டுகள் கட்டிவருகிறார்கள். ஸ்தா பனமான ஒரு சங்கம் வளரவளர, உள்ளூரார் அதில் தங்கள் பணத்தைக்கட்டி வரமுந்துகிறார்கள். இவ்வகையால் சங்கம் தான் ஸென்டிரல்பாங்கில் வாங்கியி ருக்கும் கடனைப் படிப்படியாய்க் குறைத்துவருகிறது.

4. சங்கங்கள் தங்கள் மெம்பர்களுக்கு மாத்திரம் தான் கடன் கொடுக் கும். அக்கடன்களும் உபயோக்கரமான காரியங்களுக்கு மாத்திரந்தான் கொடுக்கப்படுகின்றன. சாதாரணமாய் சங்கங்கள் வாங்கும்வட்டி வருஷம் 1 க்கு 100 க்கு 9½. ஐக்கிய நாணயச்சங்கங்கள் வேலை ஆரம்பித்த சொற் பகாலமாகிய ஐந்து வருஷத்துக்குள்ளேயே, விவசாயிகளுக்கும் கைத்தொழி லாளிகளுக்கும் மேற்சொன்ன அநுகூலமான வட்டி வீதத்துக்கு வருஷம் 1- க்கு ரூ 9, 70,000 க்கு மேலேயே கடன் கொடுத்து உதவிசெய்யும் சக்தி சங் கங்களுக்கு உண்டாயிற்று. முக்கியமாய் நாட்டுப்புறவாசிகள் ஐக்கிய நாணய இயக்கத்தின்பலனை நன்றாயறிந்து கொண்டு புதிய சங்கங்களை ரிஜிஸ்தர் செய் யும்படி விண்ணப்பங்களை அதிகமாய் அனுப்பி வருகிறார்கள்.

5. எல்லா நாட்டுச்சங்கங்களிலும் நகரசங்கங்கள் சிலவற்றிலும் நிர்வாக கர்த்தர்கள் பிரதிபலனை எதிர்பார்க்காமலே வேலைசெய்து வருகிறார்கள். மென் மேலும் புதிய மெம்பர்களைச் சேர்த்துக்கொள்வதிலும் கடன் சாங்க்ஷன்

செய்வதிலும் அநாவசியமாய் அதிக ஜாக்கிரதையை சங்கங்கள் கையாடி வருவது தான் அவைகளில் முக்கியகுறை.

6. ஐக்கிய நாணயஇயக்கம் வென்றியிலே பெற்றிருக்கிறதென்று கெட்டியாய்ச் சொல்லக்கூடும். ஏற்கனவே அநேக சங்கங்கங்கள் ரிஜிஸ்தராயிருக்கின்றன. புதிய சங்கங்களுக்காக இன்னும் அநேக விண்ணப்பங்கள் விசாரணை முடிவடையாமலிருக்கின்றன நாட்டில் அங்கங்கே இருக்கும் நிலைமைக்கு தக்கபடி எம்மாதிரி வழியைப்பற்றின சங்கங்கள் ஒத்தனவோ அவைகள் அநேகமாய் கண்டுபிடித்து விடப்பட்டன. ஆனால் இன்னும் நாம் சித்திபெற உருவு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டிய விஷயம் சங்கங்களுக்கு வேண்டிய பணத்தை எப்படி சம்பாதிப்பது சங்கங்களை எப்படி மேல்விசாரணை செய்வது என்பனதான். ஐக்கிய நாணயங்சங்கங்களில் பணம் கட்டிவைப்பதில் பந்தோபஸ்து இருக்கிறதென்று நடுத்தர ஜனங்கள் இன்னும் விசேஷமாய் அறிந்து கொள்ளுவார்களானால் அவர்கள் தாராளமாய் தங்கள் பணங்களை அவைகளில் கட்டிவைப்பார்கள். ஆனால் ஏழையின்சுவற்ப மிகுதிப்பணத்தைஇச்சங்கங்களில் கட்டிவைக்கும் விஷயத்தை இனி கவனிக்கவேண்டியிருக்கிறது. சங்கங்களை மேல்விசாரணைசெய்து பரிபாலிக்கும் விஷயத்தை சிக்கறுப்பது மேற்சொன்னதிலும் கஷ்டமாயிருக்கிறது. இதனைச் சிக்கறுத்து நடவடிக்கைக்கொத்ததாயும் திறமானதாயும் இருக்கும் வழியை கண்டுபிடிக்க நாட்டாரின் புத்திசாலித்தனம் போதாதென்று சொல்ல சாத்தியமில்லையாகையால் அதற்கும் வழி ஏற்படுமென்று நம்பப்படுகிறது இப்போது வேண்டியதென்னவெனில், இந்த இயக்கத்தை பரவச்செய்து அதன்விர்த்தியை கண்ணேணக்கமாய் பார்த்துவருவதற்கும், அஸ்திவாரம்முதல் உச்சிவரையில் வெளிவேஷமில்லாமல் அந்த இயக்கத்தை உறுதிப்படுத்துவதற்கும், மகாஜனங்களில், அவர்கள் நன்மையின் பொருட்டு, ஆவலோடு சலிப்பில்லாமல் வேலைசெய்யக் கூடிய உழைப்பாளிகள் வேண்டும்.

# பம்பாய் மஹா நாடு.

---

1908-வது டிசம்பர் மாதம் 15, 16, 17, 18 தேதிகளில் பம்பாயில் ஐக்கிய கூட்டுறவினரின் மஹா நாடு ஒன்று கூடிற்று. பம்பாய் ராஜதானியின் கவர்னராகிய மாக்ஷிமை தங்கிய கனம் ஸர். ஜியார்ஜ் எஸ். கிளார்க் ஜி. ஸி. எம். ஜி., ஜி. ஸி. ஐ. இ., அவர்கள் அம்மஹா நாட்டின் நடவடிக்கைகளை ஆரம்பித்து அடியில் வருமாறு பேசினார்:—

"கனவான்களே இவ்விராஜதானியிலிருக்கும் பெரும்பாலரின் ஜீவனோபாய தொழில் முயற்சிக்கும், அம்முயற்சியையே பூராய் நம்பியிருக்கும் பெரும்பாலரான ஜனங்களுக்கும், இம் மஹா நாட்டின் உத்தேசம், அவை செழிக்க. அவ்வளவு முக்கியமென்று நான் கருதுகிறபடியால், இன்று உங்களோடு கலந்துறவாட நான் வந்தேன். விவசாயிகளுக்கு ஒத்தாசை பண்ண செய்யக்கூடிய எதுவும் எல்லா ஜன சமூகத்துக்கும் நன்மை உண்டு பண்ணும்.

"தொழில் செய்வோர் பலர் கூட்டாய்ச் சேர்ந்து தங்கள் காரியங்களை நடத்துவார்களானால் அவர்கள் ஒவ்வொருவராலும் அவருக்கும் அவர் கூட்டத்தைச் சேர்ந்த மற்றவர்களுக்கும் நன்மை உண்டாகுமென்று (அதாவது ஒருவர்க்கொருவர் பரஸ்பர நன்மை உண்டாகுமென்று) மேல் நாட்டிலுள்ள அதி ஊக்கமுடைய சில ஜனங்களின் மனதில் சில நாளாய் உதித்திருந்தது. அம்மேனாட்டில் அவ்வாறு கூட்டுறவின் முயற்சி படிப்படியாய் பல வழியில் விர்த்தியடைந்து பல வேறு சித்தியை யடைந்து இருக்கிறது. அந்த முயற்சி ஸ்திரப்பட்டு வருகிறது என்பது நிச்சயம். தனக்குத் தானே உதவிசெய்து கொள்ளுதல் என்னும் பெரிய கோட்பாட்டை அது ஆகாரமாய் கொண்டிருப்பதால், வருஷம் ஆக ஆக அது பலப்பட்டு தற்காலத்தைய நாகரீக கொள்கையினர் இன்னதற்கு வழி இன்னதென வெளிப்படுத்த முடியாத கஷ்டமான கிருத்தியங்களுக்கு வழி கண்டுபிடிக்க அது உதவிசெய்யும் என்பதில் சந்தேகமில்லை. இதார்களுக்கு உதவி செய்வதற்கு ஏற்படக் கூடிய வழிகளில் சிறந்த வழி எது வென்றால், தங்களுக்கு தாங்களே எப்படி உதவி செய்து கொள்ளுதல் என்பதை ஜனங்களுக்குக்காட்டி அந்த வழியில் ஒவ்வொருவரும் எந்த சித்தியை அடைவதற்கும் அவரவருடைய திறமையையே நம்பியிருக்கும்படிக்கும், ஜன சமூகத்தில் அவரவர்க்கு கிடைத்திருக்கும் கண்ணியத்தை காப்பாற்றிக்கொள்ளும் படிக்கும் தைரியத்தோடு சுக ஜீவிகளாய் வாழும் ஜனங்களாக எண்ணுவதற்கு வேண்டிய இதர நற்குணங்கள் என்னவோ அவற்றை கைக்கொள்ளும் படிக்கும் செய்வது தான் சிறந்தவழி. இது தான் ஐக்கியச் சங்கங்களின் நோக்கம், அச்சங்கங்களை விர்த்தி செய்யத் தான் நாம் இங்கு கூடியிருக்கிறோம். நாம் கூடியிருக்கும் இம்மஹா நாடு போன்ற கூட்டங்கள் ஒழுங்காய்க் காலந்தோறும் கூட்டப்படுமென்றும், அக் கூட்டங்களில் ஐக்கிய இயக்கத்தில் அக்கறை எடுத்துக்கொண்டு உழைத்து ராஜதானியின் மூன்று டிவிஷன்களிலுமுள்ள ஜனங்களின் பிரதிநிதிகளாயுள்ளவர்கள், கவர்ன்மெண்டு உத்தியோகப் பற்றுள்ளவர்களாயிருந்தாலும்

சரி அப்பற்றில்லாதவர்களாயிருந்தாலும் சரி, அம்மஹா நாட்டுக்கு வந்த தங்கள் முன்வரும் விஷயங்களை கவலையுடன் தர்க்கித்து முடிவு செய்வார்களென்றும் நம்புகிறேன்.

இம்மஹாநாட்டில் நீங்கள் கவனிக்கவேண்டியவிஷயங்கள் ஐக்கிய இயக்கத்தின் சித்திக்கு மிகு முக்கியமானவையாக இருக்கின்றன. இப்போது வேலை செய்து வருகிற சங்கங்களில் அனுபவம் அடைந்துள்ள மனிதர்கள் அவ்விஷயங்களை தாராளமாய்ப் பேசிதர்க்கித்தால் அதனால் நிச்சயமாய் சாதித்து அடையக்கூடிய நன்மையுண்டாகும்.

“சென்ற ஜூன்மாதம் கடைசிவரையில் திரட்டிய கணக்குகளைக்கொண்டு அளவிட்டுப்பார்க்கும்போது ஐக்கிய இயக்கத்தின் நிலைமை நம்மிராஜதானியில் அடியிற்காட்டியவண்ணம் இருந்தது:—அதுவரையில் ரிஜிஸ்தர்செய்யப்பட்ட சங்கங்கள் 145 அவைகளில் 46 நகரச்சங்கங்களும் 99 நாட்டுச்சங்கங்களுமாம் இந்தச்சங்கங்கள் 15 ஜில்லாவில் பரவி இருக்கின்றன. எல்லாச்சங்கங்களின் கணக்குகளைச்சேர்த்துபார்க்கும்போது, அவைகளில் இருக்கும் மெம்பர் 8477 சங்கங்கள் வேலை செயவதற்கு உபயோகப்படுத்தல் படும் தனம் ரூ 3,69,880, பிரஸ்தாப வருஷத்திற்கு கிடைத்த நிகரலாபம் ரூ 15,327, அதாவது 100 க்கு 4.0, சங்கங்களின் கடன்களுக்குமேல் அவற்றிற்கு அதிகமாய் நிற்கும் ஆஸ்தி ரூ 14,836, இத்தொகையில் க்ஷேம நிதியில் கட்டப்பட்டிருக்கும்;தொகை ரூ 7,936, என்று தெரியவரும்.

“ஐக்கிய இயக்கம் இன்னும் குழந்தைப்பருவத்திலேயே இருக்கிறதென்பதை கவனிக்கும்போது மேற்சொன்ன எண்ணிக்கைகள் ராஜதானியின் அநேகபாகங்களில் ஐக்கியமத்யத்தின் நன்மை ஜனங்கள் மனதில் நன்றாய்ப்பதிந்திருக்கிறதென்று காட்டுகின்றன, மேலும் அவைகள் நாணயத்தினால் சாதிக்கவேண்டிய கிருத்தியங்களை செய்து முடிக்க இந்தியாவின் நிலைமையிலுங்கூட கூட்டுறவின் கோட்பாடுகளைக் கொண்டு சித்திபெறலாமென்று நிதரிசனமாக்குகின்றன ராஜதானிமொத்தத்திலுமுள்ள விவசாயிகளுக்கு நாணயத்தை உண்டுபண்ணிக்கொடுக்கும் பெரிய விஷயத்தை நாம் கவனிப்பதற்கு உதவி செய்கிற ஐக்கிய இயக்கத்தை இன்னும் பரவச் செய்யலாமா என்பதையும் சிறிய சங்கங்களுக்குப் பண உதவி செய்வதற்கு பெரியபாங்குகள் ஸ்தாபனம் செய்யும் விஷயத்தை இப்போது கவனிக்கலாமா வென்பதையும் இவ்விஷயத்தில் மேல்நாட்டார்கைக்கொண்டிருக்கிற மாதிரியை இந்தியாவின் நிலைமைக்குத்தக்கபடி மாற்றிக்கொள்ளவேண்டுமாவென்பதையும், இது போன்ற மற்ற அரியவிஷயங்களையும் நீங்கள் பரியாலோசனை செய்து சித்தாந்தப்படுத்துவீர்களென்று நம்புகிறேன் நம்மிராஜதானியில் நாம் வெகுவாய் விசனிக்கவேண்டிய விஷயம் எதுவென்றால் விவசாயிகள் பட்டிருக்கும் தினே தினே வளர்ந்துகொண்டுபோகிற மிதமற்ற கடன் தான் விசாரத்தைத்தரும் இந்த கெடுதியினின்றும் அவர்களை மீட்கும் வழி எது வென்று மிகுந்த கவலையோடு யோசனைசெய்து பார்த்தேன் என்பதை நீங்கள் நம்பலாம் விவசாயிகளின் கடன் நிலைமை பெருத்ததாயும் தேசமெங்கும் பரவியிருப்பது பற்றி அதனை மீட்டு கண்டுபிடிப்பது மிகுந்த கஷ்டமாயிருக்கிறது. ஐக்கிய நாணய இயக்கம் பரவினால் அதனால் காலக்கிரமத்தில் இப்போது அவர்களிருக்கும் கடன் பளு குறைவடைந்து விவசாயிகளின் பணநிலைமைக்கு ஒரு வைரமான அடிவாரம் ஏற்பட்டுவிடும் சங்கங்களை அங்கங்கே ஸ்தாபனம் செய்ய பிரதி பிரயோசனத்தை எதிர்பாராமல் வேலைசெய்தவர்களுக்கெல்லாம் இந்த சமயத்தில் எல்லாருமறிய நான்வந்தனமளிக்கின்றேன். கவர்ன்மெண்டாரும் ராஜதானியின் ஜனங்களும் அவர்களை மிகவும் புகழவேண்டியவர்களாயிருக்கிறார்கள். ஏனென்றால் நாம் அடைந்திருக்கும் சித்திக்கு அவர்கள் முயற்சி



தான் காரணம். ஆனால் கவர்ன்மெண்டாருக்கும் ஜனங்களுக்கும் அவர்கள் போன்ற அநேக தேசாபிமானிகள் வேண்டும். மிஸ்டர் காம்பெல்துரை தனது ரிப்போர்ட்டுகள் ஒன்றில் “நமக்குத் தேவைமனிதர்கள்தான்” என்று தகுதியாய் எடுத்துக்காட்டியிருக்கிறார். ஐக்கிய இயக்கம் ஸ்திரமாயும் தேசமெங்கும் பரவி செழிப்பதற்கு, கிராமாந்தர ஜனங்கள் மனதில் அதன்வேர்கள் ஊன்றி தனக்குத்தானாகவே வளருவதாய் அதாவது ஜனங்கள் தங்களுக்குத்தாங்களாகவே பிறர் உதவியில்லாமல் உண்டுபண்ணிக்கொள்ளுவதாய் இருக்கவேண்டும். கவர்ன்மெண்டார் தங்கள் சக்தியிலிருக்கும் எல்லா விதங்களிலும் உதவிசெய்யக்கூடும். அப்படி அவர்கள் செய்யவும் செய்வார்கள். ஆனால் கவர்ன்மெண்டாருக்கு ராஜதானியில் இருக்கும் அநேக ஆயிரக்கணக்கான கிராமங்களிலெல்லாம் இந்த இயக்கத்தை பரவச்செய்ய வேண்டிய அவ்வளவு வசதிகளையும் ஏற்படுத்த இயலாது.

“கூட்டுறவின் பத்ததியை அறிவது அவ்வளவு கஷ்டமானதல்ல. கூட்டுறவின் கோட்பாடுகளை தகுந்தபடி எடுத்துச் சொன்னால் விவசாயிகள் அவைகளை கிரகிக்கிறார்களென்று நாம் அனுபவத்தில் அறிந்திருக்கிறோம். அங்கங்கே உள்ளூரிலேயே ஏற்படுத்த நாம் நோக்கங்கொண்டிருக்கிற சங்கங்களை கிராமத்தார்களே திறமாய் நிர்வகிக்கக் கூடுமென்றும் அறிந்திருக்கிறோம். நாம் மேல்நோக்கிச் செல்வதற்கு இந்த சங்கங்கள் தான் நம்மை தூண்டுபவை. மேலும் அவை கிராமாந்தர ஜனங்களுக்கு இயற்கையாய் அமைந்திருக்கும் அறிவின் தன்மையைக் காட்டும் ஆச்சரியமான சாக்ஷி பூதங்களாகவுமிருக்கின்றன. ரிஜிஸ்திரார் தனது ரிப்போர்ட்டுகள் ஒன்றில் ஜொலிக்கும் சித்தியை யடைந்திருப்பதாய் காட்டக்கூடிய சங்கங்களென்று ராஜதானியின் தூரபாகத்திலிருக்கும் சிலகிராமச் சங்கங்களின் பெயரை சுட்டிச்சொல்லியிருக்கிறார். கல்வி அநுகூலத்தோடு தேசாபிமானங்கொண்டிருக்கிற இந்தியர்களுக்கு, உண்மை தேசாபிமானத்தால் இழக்க நேரிடும் சுயநலமாகிய ஊதியத்தை கருதாது முன் வந்து வேலைசெய்ய இதோ இந்த இயக்கத்தில் நல்லவேலை அதிகம் இருக்கிறது. அப்படி வேலை செய்வதினாலேயே தீவிரத்தில் ஆச்சரியமான பலன் கைகண்டதாய் உண்டாகமாட்டாது. ஜனசமூகத்துக்கு நன்மைவிளைக்கிற இந்த இயக்கத்தில் வேலைசெய்கிறவர்கள் போதுமான அளவுக்கு அதிகப்படுவார்களானால், விர்த்தியும் துரிதமான வேகத்துடன் கிடைக்கும். ஓரிடத்தில் நன்றாய் வேலைசெய்கிற ஒருசங்கம் அதற்கு சுற்றிலுமுள்ள இடங்களுக்கு ஒரு மத்தியஸ்தானமாகி ஐக்கிய மத்தியத்தின் பலனைப்பற்றிய அறிவுதானாய் பரவும். நாமாய் கொடுக்கிற ஒரு தூண்டுகோலின் நிர்ப்பந்தத்தால் ஸ்தாபிக்கிற அநேக சங்கங்கள் நம்பிக்கை யற்றவைகளாயும் விஸ்வாஸ பங்கமுள்ளவைகளாயும் போகும்.

“நமக்கு இப்போது மிகுதிதேவை யாயிருப்பதெது வென்றால் தேசத்தில் தங்களை நன்றாய் அறிந்தபாகத்தில் இங்குமங்கும்போய் ஐக்கியத்தின் கோட்பாடுகளை ஜனங்களுக்குத் தெளிவாய் எடுத்துச்சொல்லி சங்கங்களை ஸ்தாபித்துக் கொடுக்கமுன்வர இஷ்டப்படுகிற கல்விநலம் வாய்ந்த பிரதிபிரயோசனத்தை எதிர்பாராத மனிதகூட்டம் வேண்டும். ஆரம்பத்தில் அவர்கள் தாங்களே கற்றுக்கொள்ளுபவர்களாயிருக்க வேண்டும். முதல் ரிஜிஸ்திராராயிருந்த மிஸ்டர் மாக்நெயில்துரைக்கும் மிஸ்டர் காம்பெல்துரைக்கும் இவ்விராஜதானியின் ஜனங்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். மிஸ்டர் காம்பெல்துரை உண்மையாய் விசாரிப்பவர்களுக்கு சங்கத்தின் கோட்பாடுகளையும் அவைகளை வேலை நடத்தும் மாதிரியையும் தெளிவுபெற சொல்வதற்கு எப்போதும் விருப்பமுடையவராயிருப்பார். காலக்கிரமத்தில் நாமே இவ்விஷயங்களை படித்தறிந்து கொள்வதற்கு ஏராளமான புஸ்தகங்கள் கிடைத்துவிடும்,

கவர்ன்மெண்டார் அவைகளை பரவச்செய்ய முயல்வார்கள்; அவைகள்-செய்ய ஏற்றுக் கொண்ட மனிதர்களின் செய்யவேண்டுமென்கிற ஆசையுடன் செய்யும் வேலையால் மனிதர்ன்பெரு முயற்சியினால் ஏற்கனவே எவைசெய்து முடிக்கப்பட்டனவென்றும் எவை செய்து முடிக்கப்படலாகுமென்றும் இரண்டு விதத்தையும் ஒருங்கே எடுத்துக் கூறும்.

இந்தியாவில் காணப்படும் நாம் அருவருக்கிற சில குறிகள் ஜனங்களுக்கு கிடைத்த கல்விநலத்தால் தோன்றியவை என்றும், படித்தவர்களுக்கு போதுமான அளவுக்கு கவர்ன்மெண்டு உத்தியோகம் கிடைக்காமையாலும் அல்லது இதர நன்மை பயக்கக் கூடிய வழிகளில் அவர்கள் பிரவேசிக்க மார்க்கமில்லாமையாலும், தங்கள் யோக்கியதைக்குறைவாய் அவர்கள் நடந்து கொள்ளுகிறார்கள் என்றும் சிலசமயங்களில் சொல்லப்படுகிறது.

சிறிது அவகாசம் கிடைத்திருக்கிற கல்வி நலம்பெற்ற இந்தியர்கள் ஊக்கத்தை செலவழித்து வேலைசெய்வதற்கு ஐக்கிய இயக்கத்தை பரவச்செய்வதையல்லாமல் வேறே மேலானதொழில் இருப்பதாக எனக்குத்தெரியவில்லை.

"உண்மையான எல்லா தேசாபிமானிகளையும், தங்களோடு வாசம்செய்யும் நாட்டு வாசிகள் க்ஷேமப்பட்டுவாழ்வதை விரும்பும் எல்லோரையும், வீணானதும் குறும்புள்ளதுமான வம்புகள் பேசுவதைவிட்டு நன்மைபயக்குகிற காரியங்கள் செய்ய விரும்பும் எல்லோரையும், இந்த இயக்கத்துக்கு உதவிசெய்யும்படி நான் வேண்டுகிறேன். ஒருவர் மனதுக்கு உண்மையான சந்தோஷமுண்டாவதற்கு வழி எதுவென்றால், பிறர் பொருட்டு பாடுபட்டு அதனால் அவர்களுக்கு நன்மைவிளையச் செய்வதுதான். ராஜதானியிலுள்ள பொறுமையோடு வாழ்ந்துவரும் விவசாயிகளின் க்ஷேமத்தை உயர்த்த அநுஷ்டிக்கப்படுகிற இயக்கத்தில் தங்கள் அவகாசத்தையும் புத்தியையும் செலுத்துகிற மனிதர்கள் ஏராளமானதும் நிலையுள்ளதுமான புகழ்ச்சியாகிய கைமாற்றைப் பெறுவார்கள்."

# இந்திய கவர்ன்மெண்டாரின் சட்ட நிரூபணசபை.

---

1909 ஸ்ரீ மார்ச்சு மீ 29உ இந்திய கவர்மெண்டின் சட்ட நிரூபணசபை கூடினபோது ஆனரேபிள் மிஸ்டர் ஜே. ஓ. மில்லர், ஸி. எஸ். ஐ., தமது பேச்சில் ஐக்கியத்தைப்பற்றி அடியில் வருமாறு குறிப்பிட்டு சொன்னார்:—

"நடந்தவருஷத்தில் விவசாய இலாகாவின் ஒருகிளை எல்லோருடைய கவனத்தையும் விருப்பத்தையும் முன் வருஷங்களைவிட அதிகமாய் கவர்ந்தது. அது எதுவென்றால் ஐக்கிய பாங்குகளில் வளர்ச்சியும் விவசாயிகளுக்கு பொதுவாய் நாணயத்தை உண்டாக்கிக் கொடுத்தலும். இந்த பெரியசங்கதி ஐக்கியமத்யவழியைப் பின்பற்றியும் அவ்வழியை பின்பற்றாமலும் பரியாலோசிக்கப் படலாம். ஆனால் நான் ஐக்கியமத்ய வழி தெளிவாயிருப்பதுபற்றி அதைக்குறித்து மாத்திரம் சொல்லப்போகிறேன். சில வருஷங்களுக்கு முன்தான் ஐக்கிய பாங்குகளை ஸ்தாபிக்க அதிகாரம் வகித்துக்கொண்டபோது, கவர்ன்மெண்டார் அந்த பாங்குகளால் சீக்கிரத்தில் சித்திகிடைத்துவிடுமென்று எதிர்பார்க்க முடியாதென்று நினைத்தார்கள். அப்போதே இந்தபாங்குகளுக்கு அதிகமாய் திரவியசகாயம் செய்ய கவர்மென்மெண்டாருக் கியலாதென்று சொன்னார்கள்; அதனால் கவர்ன்மெண்டாரின் நல்லெண்ணம் மாறாய் அர்த்தம் செய்யப்பட்டு கவர்ன்மெண்டார் இந்த விஷயத்தை விளையாட்டு சங்கதியாய் பாவிக்கிறார்களென்றும், அவர்களுக்கு அதில் அக்கறையில்லையென்றும், கவர்ன்மெண்டார்மீது குறைசொல்லப்பட்டது. அப்படி குறைகூறுவது முன்போல அவ்வளவு அடிக்கடியில்லாவிட்டாலும் இப்போதும் சில சமயத்தில் சொல்லப்படுகிறது. விவசாயிக்கு மிகத்தேவையாயிருக்கிற முதற்பணத்தை, தம் திரவியமுறையில் ஏதோ ஒரு முறையை அநுசரித்து மிகச் சுலபமாய் கவர்ன்மெண்டார் கொடுக்கலாம் என்று அதன் நடவடிக்கைகளில் பிழை கண்டுபிடித்துச் சொல்வோர் சொன்னார்கள். கவர்ன்மெண்டார் சகாயத்தை ஜனங்கள் விருப்பத்தோடு ஏற்கிறார்கள். ஆனால் நாம் அநுபவத்தில் கண்டறிந்தபடி அந்த சகாயம் ஸ்திரமாயிருக்க முடியாது. எல்லாதேசங்களிலும் இருக்கும் உற்பத்தி செய்வோர் எல்லோரையும்போலவே, விவசாயிக்கு தனது தொழிலுக்கு முதல் வேண்டும். அதை அவன் தற்காலத்தில் மிகு அதிகமானவட்டிக்கு அல்லாமல் பெறமுடியாது. தெரியாமைபற்றியும் தனித்திருப்பது பற்றியும் அவன் பலமற்றவனாயிருக்கிறான். தனக்குக்கடன் கொடுப்பவனுடன் அவன் சமானமாயிருந்து நிபந்தனைகள் ஏற்படுத்திக் கொள்ள சக்தியற்றவனாயிருக்கிறான் இந்த பலவீனத்தை நிவிர்த்திசெய்யத்தான் கவர்ன்மெண்டார் முன்வந்தது. ஜனங்களிடத்தில் காணப்படும் அறியாத்தன்மையை நிவிர்த்திசெய்து அதற்குப்பதில் வேலையை ஒழுங்குடன் செய்வதில் கொஞ்சம் அறிவை அவர்களுக்கு புகட்டுதலும், ஜனங்கள் தனித்து தனித்து காரியம் செய்வதைவிட்டு பலர்சேர்ந்து ஒரு ஒழுங்கை அநுசரித்து நடத்தும் விதத்தை காட்டுதலும் ஆகிய வைகளைச்செய்ய இந்தியாவின் நிலைமைக்குத்தக்கபடி ஒருமுறையைக் கைக்கொள்ள

கவர்ன்மெண்டார் முயன்றார்கள். அவர்கள் தனித்திருப்பவன் பலவீனத்தை கூட்டாய் வேலைசெய்வோர் பலருடைய சங்கத்தின் பலத்தால் போக்கடிக்க விரும்பினார்கள், வீணாக கவர்ன்மெண்ட் சகாயங்களால் ஐக்கியஇயக்கத்துக்கு தடையுண்டாவதை மறந்தார்கள். ஆனால் உண்மையிலேயே அவர்கள் எவ்வளவுடன் நிற்கவேண்டுமோ அவ்வளவுடன் சகாயம் செய்தார்கள். சங்கங்களுக்கு திரவியசகாயம் செய்யமறுத்தது போல் குணத்தினாலல்ல வென நான் சொல்லுவது அநாவசியம் சென்றவருஷத்தில் ஐக்கிய மகாணத்தில் மாத்திரம் விவசாயிகளுக்கு விவசாயத் தொழிலுக்கு இரண்டு கோடிக்கு மேற்பட்ட ரூபாய்கள் கவர்ன்மெண்டார் கடன் கொடுத்திருக்கிறார்கள். இந்த ஐக்கியச்சங்கங்களுக்குக் கூட, தாங்கள் அப்படிச்செய்வதால் அந்த சங்கங்களுக்கு கடைசியாய் நன்மைவிளையுமென்று அவர்கள் அபிப்பிராயப் பட்டிருந்தால், அவ்வளவு ஆயத்தமாகவே பணம் உதவியிருப்பார்கள். ஆனால் இதர தேசங்கள், கவர்ன்மெண்டார் இந்த இயக்கத்துக்குச்செய்த சகாயம் அந்த இயக்கத்துக்கு கெடுதலாய் முடிந்திருப்பதாய் காட்டியிருக்கின்றன. இந்தியா தேசத்திலும் கூட முன்செய்த அவ்வித ஒரு முயற்சி அவ்வியக்கத்துக்கு கெடுதலாய் முடிந்தது. கூட்டுறவு என்னும் செடி தன்னைத்தான் நம்பியிருக்கும் குணமாகிய பூமியில்தான் செழிக்கும். கூட்டுறவு விருத்தியாக வேண்டுமானால் கூட்டுறவினர் தங்கள் திறமையாலேயே தங்களுக்கு வேண்டியதைச்செய்து கொள்ளவேண்டும். பிறர் தங்களுக்குச் சுலபமாய் உதவிசெய்ய வேண்டுமென்று நினைப்பது பிசகு. இந்தகாரணம் பற்றியே கவர்ன்மெண்டார் சங்கங்களை அவைகள் முயற்சிகொண்டே பெரும்பாலும் அவைகளுக்கு வேண்டியதைச் செய்துகொள்ளும்படி செய்திருக்கிறார்கள். அவைகளுக்கு தம்மை தாமே நிலைநிறுத்திக்கொள்ளுவது சாத்தியப்படாமல் கூட்டுறவை நிலைநிற்கும் உறுதியுடையதாகச் செய்ய முடியாவிட்டால், அவைகள் கெட்டுப்போக வேண்டியவைகள். இன்னொரு விஷயத்திலும் கூட சங்கங்களுக்கு விசேஷமான சகாயம்செய்ய மறுத்துவிட்டார்கள். சங்கங்களுக்கு வரவேண்டிய பணங்களை கவர்ன்மெண்ட் முகாந்தரத்தால் வசூல் செய்து கொடுக்க இடங்கொடுக்க வேண்டுமென்று பலமான முயற்சி செய்யப்பட்டது. வசூல் விஷயத்தில் கவர்ன்மெண்டார் பொறுப்பு ஏற்றுக்கொண்டால், சங்கங்களுக்கு உடனே அதிக வசதியுண்டாகி இப்போது கிடைக்கிற வட்டி வீதத்தை பார்க்கிலும் மிகவுங்குறைந்தவட்டி வீதத்துக்கு பணம் கிடைக்கக்கூடும். இத்தகைய சகாயம் கொடாமலிருப்பது ஒப்பத்தகுந்ததல்லவென்று பலர் நினைக்கிறார்கள். இதுவரையில் அப்படி அந்த சகாயத்தைச் செய்யாமலிருந்தது, சரியென்று நான் நினைக்கிறேன். கவர்ன்மெண்டார் சகாயம் செய்யநேர்ந்தால் கவர்ன்மெண்டார் மேற்பார்வை அதிகமாகிவிடும். கவர்ன்மெண்டாரே வாஸ்தவத்தில் காரியநிர்வாகிகளாய் விடுவார்கள். அப்படியாய் விட்டால் அது ஐக்கிய இயக்கத்தின் இலக்ஷணத்தையே அடியோடு மாற்றிவிடும். மேலும் நாம் நிலைப்படுத்த விரும்புகிற குணங்களில் பலவற்றை உடனே அகற்றிவிடும். நாம் மேற்சொல்லியவந்த கண்டிப்பான நியதிகளுக்கு விரோதமாக பரிஷ்காரத்துக்குரிய சமயங்கள் நேரக்கூடும். நான் சொல்லுவதே சரியென்று எவரும் அவ்வளவு பெருமை கொண்டிருக்க வேண்டாம். ஆனால் நாம் இதுவரையில் கவர்ன்மெண்ட் முகாந்தரத்தால் வசூல்செய்வதென்னும் கோட்பாட்டைஒப்புக்கொள்ள மறுத்து வருகிறோம். இந்தியாவின் நிலைமையை அநுசரித்து கூட்டுறவைப்பற்றி பலதரத்தவர்களின் அபிப்பிராயம் நாம் இதுவரையில் கைக்கொண்டிருக்கிற கோட்பாட்டுக்கு அநுகூலமாய் இருப்பதாய்த் தெரிகிறது.



மொத்தமாய்ப் பேசுமிடத்து சங்கங்களுக்கு கவர்ன்மெண்டார் பணஉதவி செய்யவில்லை. இந்த சங்கங்களில் கவர்ன்மெண்டாருக்கு இருக்கும் சம்பந்தமென்னவென்றால், சங்கங்களுக்கு வேண்டிய புத்திமதிகளைச் சொல்லுதலும், அவைகளுக்கு வழிகாட்டிக் கொடுத்தலும், அவைகளின் கணக்குகளை சோதனை செய்தலும் ஆகிய இவற்றை தங்கள் ரிஜிஸ்திரார்கள் மூலமாய்ச் செய்வது மாத்திரந்தான். ரிஜிஸ்திரார்கள் தங்கள்வேலையில் மிகுந்த உற்சாகத்தோடு பிரவேசித்திருக்கிறார்கள். கடைசியாய் இந்த இயக்கம் கைகூடுவது நிச்சயமென்று அவர்கள் நம்பியிருக்கிறார்கள். ஏற்கனவே கிடைத்திருக்கும் அதிசயமான சித்தியால் அவர்கள் அப்படி நம்பியிருப்பது நியாயம்தான்,

சென்றவருஷத்தில் சங்கங்களின் சங்கியை 843 லிருந்து 1201-க்கு உயர்ந்தது. மெம்பர்களின் சங்கியை 91,000 லிருந்து 149,000 க்கும், மெம்பர்கள் டிபாசிட் 5½ லக்ஷத்திலிருந்து 9 லக்ஷத்துக்கும், மொத்த முதற்பணம் 23½ லக்ஷத்திலிருந்து 44 லக்ஷத்துக்கும் உயர்ந்தன. இந்த எண்ணிக்கைகள் பல பயன்கள் விளைந்திருக்க வேண்டுமென்று அறிவிக்கின்றன. இந்த எண்ணிக்கைகளை விட நான் இவைகளில் விசேஷமென்று கருதுவது இவ்வியக்கத்தில் உத்தியோகப் பற்றில்லாத ஜனங்களுக் குண்டாயிருக்கும் அக்கறைதான். அது வாஸ்தவத்தில் இவ்வியக்கத்தில் கிடைத்த உற்பத்தியென்று கருதப்படுகிறது. அது இந்தியாவின் க்ஷேமத்தை உள்ளத்தில் கொண்டிருக்கிற எல்லா ஜனங்களின் கவனத்தையும் கவரத்தக்கது. லேவாதேவி வர்த்தகம் செய்வோரும் இதரவழியில் வர்த்தகம் செய்யும் உலகத்தினரும் அதை கவலையுடன் ஆலோசித்து புகழ்ந்திருக்கிறார்கள். நாட்டில் பிரகரிக்கப்படும் சமாசாரப் பத்திரிகையில் கூட்டுறவு அடிக்கடி பேசப்படுவதும், சிம்லா பம்பாய் நகரங்களில் கூடிய மகாநாடுகளில் காட்டப்பட்ட உற்சாகமும், பண்டிதர் லீஸ் ஸ்மித்துரை, கூட்டுறவை அநுசரிப்பதால் கிடைக்கும் மிதச்செலவு ஊதியத்தையும் சன்மார்க்க நெறி பழக்கத்தையும் ஆய்ந்து தெளிவாய் எடுத்து உரைத்திருப்பதும், இதுவரையில் ஐக்கிய இயக்கத்தில் நமக்குக் கிடைத்திருக்கும் சித்தியின் அளவை, பல ரிப்போர்ட்டுகளிலிருந்து திரட்டிய இலக்கங்களைப் பார்க்கிலும், நன்றாய் அறிவிக்கும் குறிகளாயிருக்கின்றன.

"மேற்சொன்னவாறு இவ்வியக்கத்தைக் குறித்துப் பேசி தர்க்கிப்பது மிகுந்த பிரயோசனத்தைத் தந்திருக்கிறது; பொதுஜன அபிப்பிராயத்தை அது வாரச் செய்திருக்கிறது; நாம் ஆலோசித்துசெய்யவேண்டிய திருத்தங்களின்பலனை மிகவும் நன்றாய் நினைத்து உணரும்படிசெய்ய உதவியிருக்கிறது; அப்படி உணர்ந்திருப்பது இவ்வியக்கத்தை சந்தேகமுள்ள வழிகளில் அவசரப்பட்டு புகுத்தும்போது அதைத் தடுக்க உபயோகமாயிருக்குமென்று நம்புகிறேன். மேலும் கவர்ன்மெண்ட் உத்தியோகப்பற்றில்லாத ஜனங்களிடமிருந்து உதவியைக் கொண்டுவந்து கொடுத்திருக்கிறதென்று ரிஜிஸ்திரார் ரிப்போர்ட்டுகள் பலவற்றில் புகழ்ச்சியாய் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். இம்முறையின் ரகசியங்களை வெளிப்படுத்துவதில் அது மிகுந்த பிரயோசனகாரமாயிருக்கும். கிராமச்சபைகளை உயிர்ப்பித்து நடவடிக்கைக்கு கொண்டுவரவேண்டுமென்று ஜனங்கள் முன்னிலையில் அதிகமாய் பேசப்படும் இக்காலத்தில், ரிஜிஸ்திரார்களில் ஒருவர் சொல்லிய அடியிற்கண்ட தொடர்மொழிகளை இங்கெடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

கிராமத்தில் ஸ்தாபிக்கப்படும் பாங்கானது, கிராமத்திலிருக்கும் பல கிராமங்களில் ஒன்றாய் உடனே மதிக்கப்பட்டு எல்லாருடைய கவனத்தையும் ஒருங்கே கவர்கிறது. கிராமத்தில் இருக்கும் ஜனங்களில் மிக நல்லவர்களை யெல்லாம் ஒன்று

கூடும்படி செய்கிறது. தாங்கள் தான் ஆட்சிக்காரர்கள் என்றஉண்மை உணர்ச்சியை அவர்கள் மனதில்உதிக்கச்செய்கிறது. கெட்ட நடவடிக்கையுள்ள மனிதனை திருந்தும்படி செய்கிறது. தீர்வை அல்லது வாரம் செலுத்த தவறியவனை கிராமங்களில் மெம்பராய்சேரும் பாத்தியதையை வகித்து தனது வாரம் அல்லது தீர்வை செலுத்தும்படி செய்கிறது."

"ஐக்கிய விஷயத்தில் அவர் சொல்லும் சங்கதியை பிரமாணமாகக்கொள்ளும் பெருமைவாய்ந்த பிரசித்திபெற்ற மிஸ்டர் உல்ப் (Wolff) துரை சிலநாளைக்கு முன் எழுதிய ஒரு கடிதத்தை இந்த சபையார் பார்த்திருக்கலாம். அவர் அதில்—

"ஐக்கிய பாங்கானது இந்தியாவில் ஆனதுபோல் வேறெங்கும் அதன் ஆரம்ப காலத்தில் அவ்வளவு சீக்கிரத்தில் வேரூன்றி அவ்வளவு விர்த்தியடையவில்லை" என்று சொல்லியிருக்கிருர்.

"ஆரம்பத்தில் இன்னும் வேகமாய் விர்த்திஉண்டாகக்கூடிய வழியில், ஆனால் நாம் உசிதமுள்ளதென்று நினைக்காதவழியில், இந்த பாங்குகளுக்கு ஒத்தாசை செய்யாமலிருந்தபோதே இம்மாதிரி விர்த்தி உண்டானது நமக்கு மிகத்திருப்தியைக் கொடுக்கிறது. ரிஜிஸ்திரார்கள் மேற்பார்வை செய்வதற்கு இயலாதவிதமாய் சங்கங்கள் இப்போது அதிகமாகி வருகின்றன. அவைகள் இன்னும் விர்த்தியாகும் விஷயம் நாம் மிகுந்த யோசனையோடு கவனிக்கவேண்டியிருக்கிறது. இக்கிராமச்சங்கங்களை நாம் அடுத்தபடி ஒவ்வொரு தொகுப்புகளாய் சேர்க்கவேண்டியதென்று எல்லாக்குறிகளும் காட்டுகின்றன. அப்படிச்செய்தால் தனிச்சங்கங்கள் ஒவ்வொன்றுக்கும் கூட்டுறவு உண்டாகும். அதனால் அவைகளுக்கு நாட்டிலிருக்கும் இதாலேவாதேவி சங்கங்களோடு வியாபாரம்செய்ய அந்தஸ்து உண்டாகும். ஏற்கனவே இந்த வழியில் சிறிது முயற்சி செய்யப்பட்டு போதுமான சித்திகிடைத்திருக்கிறது

"கிராமாந்தர ஜனங்களின் வாழ்க்கையில் இந்த ஒரு வழியில் உண்டாகிய கூட்டுறவு இன்னும் இதரவழியிலும் அதை கையாடவிடலாம் என்று இடம் சொல்லுகிறது. சிறுவிவசாயிகளின் கூட்டத்துக்கு கூட்டுறவு அவசியமென்பதை இதர அனேக தேசத்தின் அனுபவத்தால் அறிந்திருக்கிறோம். இந்த விஷயத்தைக்குறித்து நான் இப்போது பேசப்புகவில்லை. இப்படி இதர காரியங்களுக்கும் கூட்டுறவை கையாடும் விஷயமாய் சிறு அளவில் செய்யப்பட்டிருக்கும் முயற்சிகள் அநேக வுற்றன், ஸர். டானியல் ஹாமில்டன் துரை சமீபத்தில் சந்தர்பான்ஸில் பயிரிடுவதற்காக ஆரம்பித்த ஐக்கிய முறையை குறிப்பிட விரும்புகிறேன். விவசாயத்தொழில் செய்வோர் முன்னுக்கு வரவேண்டுமென்றும் அக்கறை இந்த துரைக்கு எவ்வளவு இருக்கிறதென்னும் சங்கதி இந்த சபையாருக்கு நன்ருய்த் தெரியும்".

---

## பண்டிதர் லீஸ் ஸ்மித் துரையின் பிரசங்கம்.

செட்டுத்தன்மை அல்லது இல்லோம்பும்முறையை கற்பித்துக்கொடுக்கும் லண்டன் கலாசாலையைச்சேர்ந்த பண்டிதர் லீஸ்ஸ்மித்துரையை மேல்தரசிக்கனத்துக்கும் வர்த்தகத்துக்கும் உரியசங்கதிகளைக்குறித்து முறையாய் பிரசங்கம் செய்துவரும்படி பம்பாய் கவர்ன்மெண்டார் ஏர்படுத்தினர்கள். அவர்செய்த பிரசங்கத்தில் 4-வது 5-வது பிரசங்கங்கள் ஐக்கிய பாங்கிகளைப்பற்றி பேசுகின்றன, அந்த பிரசங்களின் சாராம்சம் கீழே எழுதப்படுகிறது:



### பிரசங்கம் IV.

தொழில் முயற்சியில், ஒன்ருடொன்று மல்லுக்கட்டி போராடுகிற இரண்டு முக்கிய ஏற்பாடுகள் இருப்பதுபோல, விவசாயத்திலும் இரண்டு விதமான ஏற்பாடுகள் இக்காலத்திலிருக்கின்றன என்று பண்டிதர் சொன்னர். இந்தியாவில் கைப்பற்று பாத்தியம் என்று சொல்லப்படுகிற நிலப்பாத்திய ஏற்பாடு இருக்கிறது நிலத்தைதானே நேராய் உழுகிறவனே, கையால் ஆகவேண்டிய வேலையை யெல்லாம்தானே செய்துகொள்ளுகிறவனே, விவசாயத்துக்கு வேண்டிய முதலைதேடிக்கொள்ளுகிருன். அவனுக்கே நிலம் நேராய்ச் சொந்தம் அல்லது அவன் நிலத்துக்குடையவனிடம் குத்தகைக்கு வாங்கி தானே விவசாய காரியங்களெல்லாம் நேராய் நடத்துகிருன். இங்கிலாந்து தேசத்திலோ, இதற்குமாருய், விவசாயத் தொழில்செய்பவன், தொழில் யந்திரசாலைகளில் வேலை செய்பவனைப்போல, கூலிக்கு அமர்ந்தவன்; விவசாயத்துக்குவேண்டிய முதலும்காரியங்களைநடத்தும் முறையும் இவைகளுக்கு வேண்டியவூக்கமும் நிலத்துக்குடையவனுல் அல்லது அவனிடம் குத்தகைக்குப்பெற்ற பெரியகுடியானவனுல் உதவப்படுகின்றன. இங்கிலாந்தில் அநுஷ்டிக்கப்படுகிற பின்சொன்ன முறையில் அநேக நன்மையிருக்கின்றது. ஆனல் இங்கிலீஷ் ராஜ தந்திரிகள் இந்தியாவின் முறையாகிய கைப்பற்றுச் சொந்தமாகிய முறையை அநுஷ்டிக்க விரும்புகிருர்கள். பெரிய குடியானவனையும் பெருப்பூமிதாரனையும் நிவிர்த்தித்து உழுபவனையே நிலத்துக்குரியவனுய் சிறுபகுதிகளையுடைய குடியானவனுய்ச் செய்ய வேண்டுமென்று கிரேட் பிரிடனில் ஜனங்கள் கூக்குரலிட்டு கேட்கிருர்கள். என்ருலும், உழுபவன் நிலத்துக்குச் சொந்தக்காரனுயிருக்கும் முறை அநுஷ்டிக்கப்படுகிற ஐரோப்பாவில் எந்த தேசத்திலாவது அல்லது இந்தியாவிலாவது அது வேலை செய்யும் நிலைமையை சோதித்துப் பார்க்குமிடத்து அந்த முறையினுல் கிடைக்கும் என்று எதிர் பார்த்தவைகளை யெல்லாம் அடைவதற்கு இயலாமல் அதில் ஒருமுதன்மையான கஷ்டமிருக்கிறது என்று தெரியவரும். அதாவது வேண்டிய முதலை சம்பாதிக்கும் விதம் தான். இதைத் தவிர இன்னும் இதர அநேக கஷ்டங்களும் உண்டு. ஆனல் அவைகளெல்லாம் இந்த முதன்மையான கஷ்டத்தினின்று தோன்றுபவைகள். இந்த தேசத்தில் சாதாரண குடியானவன் உபயோகப்படுத்தும் சாதாரண முதல் எவ்வளவு இருக்குமென்று அவர் கூடுமான வரையில் ஒரு கணக்கிட்டுப் பார்த்தார். அந்த முதல், பத்து ஷில்லிங்கிலிருந்து 25 பவுனுக்கு மத்தியில் இருக்கிறது. ஐரோப்பா கண்டத்தின் இந்த மாதிரி முறை அநுஷ்டிக்கப்படுகிற தேசத்தில் உபயோகப்படுத்தப்படும் முதலைக்காட்டிலும் இங்கே உபயோகப்படுத்தப்படும் முதல் குறைந்து போய்விடவில்லை.

---

## குடியானவனுடைய கடன்.

---

விவசாயத் தொழில் விசேஷ ஏற்றத்தாழ்ச்சிக்கும் விசேஷ வழியில் செலவிடுவதற்கும் இழுத்துவிடக்கூடிய ஒருதொழில் அது காரியங்கள் இயல்பாய் நடக்கும் வழியில் சாதாரண விவசாயியையும் ஏதோ ஒரு காரணத்தைக்கொண்டு பலனற்ற வருஷங்களில் கடன் வாங்கசெய்யும் கிராம லேவா தேவிக்காரன் நிந்திக்கப்பட்டாலும் வேறு யாராவது செய்யவேண்டிய தொழிலை தான் அவன் செய்கிருன் என்றும் அவ

ளை நிவிர்த்தித்து அவன் செய்யும் தொழிலை செய்வதற்குத் தகுந்த உபாயம் இன்னதென்று எடுத்துச் சொல்லும் வரையில் அவனை நிந்திப்பதில் யாதொரு பிரயோசனமில்லையென்றும் அவர் படித்த விவசாயத்தைப்பற்றிய இந்தியாவின் ரிப்போர்ட்டுகளில் உறுதிச் சொல்லப்பட்டிருக்கின்றன வென்று சொன்னார். இந்தியாவிலிருக்கும் விவசாயின் நிலைமையை பிரான்ஸ்தேச விவசாயின் நிலைமையோடும் அதனையொத்த ஐரோப்பாவின் இதர தேச விவசாயின் நிலைமையோடும் ஏன்வல் கூடியவரை அவர் ஒத்துப்பார்த்தார். தான் ஆராய்ந்து பார்த்த ஆதாரங்களை அநுசரித்து... ஆகவே அந்த ஆதாரங்கள் நிச்சயமாய் ஒரு முடிவுக்கு வர செய்யக்கூடியவைகள் அல்ல—ஜர்மனி, பிரான்ஸ் இதர ஐரோப்பிய தேசம் இவைகளில் இருக்கும் விவசாயியைப் போல் இந்திய விவசாயி அவ்வளவு கடன்பட்டிருக்கவில்லை. ஐரோப்பிய தேசங்களுக்கு ரிபோர்ட்ட கணக்குகள் மொத்த விஸ்தீரணத்தில் 100-க்கு 80 பங்கு நிலம் அடமானம் வைக்கப்பட்டிருந்தனவென்று காட்டின. ஆனால் இந்தியாவில் சேகரித்த கணக்குகள் எவ்வளவு நிலத்தின்பேரில் கடன்வாங்கப்பட்டனவென்று சேகரிக்கப்படவில்லை. எத்தனை ஜனங்கள் கடன்பட்டிருக்கிறார்கள் என்று கணக்கிடப்பட்டது. இக்கணக்குகளிலிருந்து இந்த தேசத்தின் விவசாயிகளில் சுமார் மூன்றில் இரண்டு பங்கு ஜனங்கள் கடன்பட்டிருக்கிறார்கள் என்று சாதாரணமாய் முடிவுக்கு வரலாம். இதனால் இந்தியாவின் விவசாயினுடைய நிலைமை ஐரோப்பா விவசாயியின் நிலைமைக்கு சற்றேறத்தாழ சமமாயிருக்கிறது என்று காணலாம். உலகத்தில் எங்கிருக்கும் நிலப்பாத்தியதையை யுடையவர்களாயிருக்கும் ஜாயின்ட் ஸ்டாக் பாங்குகளில் விதவட்டிக்கு ஏன் கடன்வாங்க முடிகிறதில்லையென்றும் விதமற்ற வட்டிக்குக் கொடுக்கும் லேவாதேவிக்காரனிடம் அவன் ஏன் போகவேண்டி வருகிறதென்றும் கேள்வி பிறக்கிறது. ஜனங்களில் இந்த வகுப்பாருடைய சௌகரியத்துக்கு தகுந்தபடி ஜாயின்ட் ஸ்டாக் பாங்குகள் அமைக்கப்பட்டிருக்கவில்லை. அந்த பாங்குகள் குறிப்பிட்ட விதிகளின்படி நடத்தப்படுகின்றன. நிலப்பாத்தியதையை யுடைய சிறு குடியானவனுக்கு அவசியமானபடி சிறுதொகைகளாக பல முறை பணம் கடன் கொடுக்க அந்த பாங்குகள் தயாரிருக்க முடிகிறதில்லை. இதற்கு மாறாக, தனி லேவாதேவிக்காரனோ, கடன்வாங்கும் குடியானவன் இருக்கும் இடத்தில் அவனுமிருக்கிறான்; கடன் வாங்குபவர்களோடு தினந்தோறும் சம்பாஷித்துக் கொண்டு அவர்கள் பேரிலும் அவர்கள் தொழிலின் பேரிலும் கண்ணோக்கமாயிருக்கிறான். அவர்களுக்கு தேவையானபடி பெருந்தொகைகளாகவும் சிறு தொகைகளாகவும் கடன்கொடுக்க சம்மதிக்கிறான். பிரசங்கியார் விசாரணை செய்ததில் விவசாயிகளின் கடன் தினம் தினம் அதிகப்பட்டுக் கொண்டு போவதல்லாமல் குறையவில்லை என்று பொது அபிப்பிராயம் இருப்பதாகக் கண்டார். மற்ற தேசங்களோடு ஒப்பிட்டு பார்ப்பதற்கு திரட்டிய கணக்குகள் இல்லை. உலகத்தின் மற்ற பாகங்களிலிருக்கும் நிலையையும் இந்த தேசத்திலும் சில தலை முறைகளில் செய்த சட்டங்களையும் நோக்கும்போது, அம்மாதிரி சட்டங்கள் செய்வது யாரும் எதிர்பார்க்கக் கூடியதேதான். விவசாயின் பொருட்டு செய்யப்படும் சட்டங்களின் வழி விவசாயிக்கு நிலத்தில் குத்தகைப்பாத்தியதையை ஸ்திரப்படுத்திக்கொடுப்பதிலும் கைப்பற்றுபாத்தியர் என்று சொல்லப்படுகிற நிலப்பாத்தியதையை சம்பாதித்துக் கொடுப்பதிலும் பின்பற்றியிருக்கும். அந்த சட்டங்களினால் குத்தகைப் பாத்தியம் நிச்சயமாய் ஸ்திரமானதும், குடியானவனின் நிலம் அதன்மேல் கடன்வாங்கக்கூடிய முன்னிலையிலும் விலையுள்ள ஆஸ்தியாகிவிட்டது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
7 JUN 1910
MADRAS.

## கெடுதிக்கு பரிகாரம்.

மேற்சொன்ன கஷ்டங்களை நிவிர்த்திசெய்ய பலமுறைகள் அநுஷ்டிக்கப்பட்டன. அவைகளிலெல்லாம் நேரானவழி விவசாயியை தனது நிலத்தை ஈடுவைக்க முடியாதபடி தடுத்ததுதான். ஐரோப்பாதேசத்தில் இந்த வழிகையாடப்பட்டது. இந்த தேசத்திலும் 1900 வருஷத்து பஞ்சாப்பாண்ட் அலியனேஷன் ஆக்ட் என்று சொல்லப்படும் சட்டத்தினாலும் இந்தவழி அநுசரிக்கப்படுகிறது. எந்த உத்தேசத்தோடு ஒருகாரியம் செய்யப்படுகிறதோ அந்த உத்தேசத்தை நிறைவேற ஒட்டாதபடிசெய்ய அந்தகாரியமே உபயோகப்படுகிறது என்பதற்கு உதாரணமாக மேற்சொன்ன ஆக்ட்டைச் சொல்லலாம். விவசாயி கடன்வாங்க கூடியிருக்கும் ஆஸ்தியை குறைத்ததின் பலனாக, அவன் லேவாதேவிக்காரனிடம் கடன்வாங்குதல் குறையாமல் அதன் முன் வாங்கினவட்டி வீதத்தைவிட அதிகவட்டிக்கு கடன் வாங்கிக்கொண்டே போனான். விவசாயின் கஷ்டங்களை நிவிர்த்திக்க இன்னொருவழி என்னவென்றால் கவர்ன்மெண்டார் முன்வந்து லேவாதேவிக்காரனுக்குப்பதில் தாங்களே கடன்கொடுப்பது. இந்தவழி மற்றவைகளைவிட சித்தியுண்டாக்கிற்று. இந்தவழியை அநுஷ்டிக்க எடுத்துக்காட்டிய ஆதாரங்கள் நியாயத்துக்குட்பட்டவைகளாயிருந்தன. ஆனால் இந்த முறையில் சில ஆபத்துக்களிருந்தன. அவைகளில் முக்கியமானது விவசாயிதான் எவ்வளவு கடன்வாங்கக்கூடுமோ அவ்வளவும் கடன்வாங்கி விடக்கூடும். காலக்கிரமத்தில் அவன் வருஷம் 1 க்கு 100க்கு 8 வட்டிக்கு 100 பவுன் கடன்பட்டிருந்தது போய் வருஷம் 1 க்கு 100 க்கு 4 வட்டிக்கு 200 பவுன் கடன்பட்டிருப்பான். ஆகையால் கவர்ன்மெண்ட் கடன் உபயோகப்படுத்தப்படும் காரியங்களை குறைப்பது அவசியமாயிற்று. அப்படிச்செய்தும், நியாயமான வட்டிக்கு கவர்ன்மெண்டாரிடம் வாங்கின கடன் அதிகரித்ததோடு மிதமிஞ்சின வட்டிக்கு லேவாதேவிக்காரனிடம் வாங்கின வட்டியும் அதிகரித்தது. இதனால் செய்யவேண்டியது என்ன? நமக்குத் தேவையானது என்னவென்றால் (1) சுலபமான நிபந்தனைகளின்பேரில் கடன்கொடுக்கவும் (2) ஒவ்வொரு விவசாயின் சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி பெருந்தொகைகளாகவும் சிறு தொகைகளாகவும் கடன்கொடுக்கவும் (3) வாங்கினகடன் கிரமமாய் உபயோகப்பட பார்க்கவும் (4) கொடுத்தகடன் நிச்சயமாய் திரும்பிவரும் என்று உறுதியோடிருக்கவும் (5) விவசாயின் வாழ்க்கையில் தினந்தோறும் ஈடுபட்டு நெகிழவும்கூடிய காரிய நிர்வாக கர்த்தர்கள் வேண்டும். கவர்ன்மெண்டார் கொடுக்கும் கடன்முறை மேற்சொன்ன அவசியங்களில் முதல் நாலையும் கைகூட்டிவைத்தன ஆனால் அவைகளில் மிகு முக்கியமான 5 வது சங்கதியில் தவறிவிட்டது. இந்த அவசியத்தையும் கைகூட்டிக் கொடுக்கக்கூடிய நிர்வாகசக்கம் ஒன்றுண்டு. அதில் லேவாதேவிக்காரர்கள் கடன்முறையில் இருக்கும் சல்லீசும் கவர்ன்மெண்டார் முறையில் இருக்கும் வட்டிக்குறைச்சலும் இரண்டும் கலந்திருக்கும். அந்த சங்கம்தான் ஒரு கிராமத்தில் வசிக்கும் குடிகளடங்கிய கூட்டம். இந்த கூட்டுறவு விவசாய பாங்குகளின் முறைதான் ஜர்மனிதேசத்தில் பரவி தனி லேவாதேவிக்காரனை நிவிர்த்திசெய்தது. அது அவனை நிவர்த்திசெய்த தீவிரம் மிகுந்த வியப்பை தந்தது. இந்த முறை

ஜர்மனி தேசத்தில் அநுஷ்டிக்கப்பட்டு நெடுநாளாய் விடவில்லை. ஆனால் இப்போது அந்த தேசத்தில் 11,000 பாங்குகள் இருக்கின்றன. அவைகளில் கொஞ்சக்குறைய 10,00000 மெம்பர்களிருக்கிறார்கள்.

## முக்கியமான ராஜ்ய நிர்வாக பலன்.

இந்த முறையின் செட்டுத்தன்மையின் பலனைப்பற்றி இன்னும் அதிகமாய் அப்போது பேசப்போவதில்லையென்றும் மற்றுமொரு பிரசங்கத்தில் அந்த பலனின் விரிவைப்பற்றி சொல்ல இச்சைகொண்டிருப்பதாக பண்டிதர் சொன்னார். கூட்டுறவு விவசாய பாங்குகளை நாடெங்கும் பரவச்செய்வதால் காலாந்தரத்தில் ஜனங்களுக்கு இந்த ராஜ்யத்தை நிர்வகிக்க திறமையுண்டாவதோடு செட்டுத்தன்மையின் பலனும் கிட்டும் என்றும் முக்கியமான சங்கதியை நாம் எதிர்பார்ப்பதில் அர்த்தமென்று நினைக்கக் கூடாது. ஜனங்களின் பிரதிநிதிகள் கார்யநிர்வாகம் செய்வதற்கு இந்த பாங்குகள் தான் ஆரம்பம் என்று சொல்லலாம். பிரதிநிதிகள் சங்கத்தை நிர்வகிக்க ஜனங்கள் திறமையடைவதற்கு ஜனங்களுக்கு அந்த சங்கங்களை கொடுப்பதில்மாத்திரம் யாதொரு பிரயோசனமில்லை. பிரதிநிதிகளை தெரிந்தெடுக்கும் சாதாரண ஜனங்களுக்கு, அந்த பிரதிநிதிகள் சங்கத்தை நடத்துவதில், தாங்களும் உழைக்க சமயங்கள் தொடர்ச்சியாய் நேர்ந்துவர இடந்தரவேண்டுமென்று ராஜதந்த்ர தத்வ ஞானிகள் எல்லோரும் வற்புறுத்த நாம் கண்டிருக்கிறோம். அந்த அந்த இடங்களின் காரியங்களை அந்த அந்த இடத்தின் ஜனங்களை நிர்வாகம் செய்யவேண்டுமென்னும் ஏற்பாட்டின் முக்கியநோக்கம், அந்த ஜனங்கள் ராஜ்யநிர்வாக திறமையைக் கற்றுக்கொள்ளவேண்டுமென்பதே யல்லாமல் அவர்கள் அப்போதே திறமாய் நிர்வகிக்க வேண்டுமென்பது அவ்வளவு முக்கியமல்லவென்று லார்ட்மார்லி பேசினது யாவருக்கும் ஞாபகமிருக்கலாம். தங்களுக்குத் தாங்களை ஆட்சிசெய்துகொள்ளுவதற்கு ஒரு தேசத்தின் ஜனங்கள் தகுதியுள்ளவர்களா என்பதற்கு கவர்ன்மெண்டார் செய்ததையல்லாமல், அந்த ஜனங்கள் தங்களுடன் பிறந்த அறிவைக்கொண்டு தாங்களே நிர்வகிக்கும் சங்கங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்களாவென்பதுதான் அறிகுறி. கிரேட் பிரிட்டனில் சுயராஜ்யம் சித்தியடைந்ததற்கு காரணம் என்ன ? பிரிடிஷ் குடியானவனும் வேலைக்காரன் தனக்குத் தானாகவே உண்டாக்கிக்கொண்ட, ஐக்கியச்சங்கங்கள், வர்த்தகயூனியன்கள், சிநேககூட்டுச் சங்கங்கள், வேலைக்காரர் சங்கங்கள் இவைபோன்றபெருத்தசுயாட்சி சங்கங்களை இரவு இரவாயும், வாரம் வாரமாயும், மாத மாதமாயும் வருஷமுழுவதும் தனது காலத்தை செலவிட்டு நடத்தி சித்தியடைந்ததுதான். இந்த ஐக்கியபாங்குகளின் காலாந்தரபலன், பின்னால் இந்த தேசம் நிர்வகிப்படும் மாதிரியில் விசேஷித்திருக்கும் என்று தன்னால்கூடிய அளவு புலமாய்சொல்ல பண்டிதர் விரும்பினார். கிராம ஐக்கியச் சங்கங்களில் சுய ஆட்சிக்குக்கிடைக்கும் கற்பனை கவர்ன்மெண்டார் கொடுக்கும் சுய ஆட்சிச்சங்கங்களில் கிடைக்கும் கற்பனையைப் பார்க்கிலும் நிச்சய பலனைத்தருவதாயும் முக்கியமானதாயிருக்குமென்றும் பண்டிதர் அபிப்பிராயப் படுவதாகச் சொன்னார்.

இந்தியர்கள் சுயஆட்சி சங்கங்களை நடத்த தகுதியுள்ளவர்களாக வேண்டுமென்று இங்கிலாந்து எதிர்பார்க்கிறபடி அவர்கள் தகுதியுள்ளவர்களானார்களா என்பதை அறிவதற்கு இந்த கிராமசுயாட்சி சங்கங்களை நடத்தி சித்தியடைவது சாக்ஷியமாயிருக்கும்.



### பிரசங்கம் V.

முதலில், ஐக்கிய நாணயச்சங்கங்கள் சுயாட்சி சங்கங்களென்று யாவரும் அறிந்து கொள்ளும்படி பண்டிதர்சொன்னார். ஜர்மனி தேசத்தில் இருக்கும் மாதிரிச்சங்கம், என்று பின்பற்றக் கூடிய ஒருகிராம சங்கத்தில் முதலில் சங்கத்தைச்சேர்ந்த எல்லாரும் கூடிய ஒரு மகாசபை உண்டு. அந்த மகாசபைக்குள், மகாசபையாரால் தெரிந்தெடுக்கப்படுகிற மேல்விசாரணைக் கமிடி என்று ஒன்று உண்டு. அந்த மேல்விசாரணைக் கமிட்டிக்குள், அந்த கமிட்டியைவிட சிறிதாகிய ஒருசபை உண்டு. அதற்கு அத்தியக்ஷர்கள் சபையென்று பெயர். அந்த அத்தியக்ஷர்கள் தான் சங்கத்தை ஆரம்பித்து காரியங்களை நடத்துபவர்கள். இங்கிருப்பனபோலவே ஜர்மனிதேசத்திலும் விவசாய நாட்டுக்கு கிராமச்சங்கங்களும் பட்டணங்களுக்கு நகரச்சங்கங்களும் உள்ளன. கிராமச் சங்கங்களுக்கு வழிகாட்டியாய் பெரும்பெயர் எடுத்தவர் ராபீசன் (Raiffeisen) என்பவர். நகரச்சங்கங்களை கண்டுபிடித்து ஸ்தாபனம் செய்தவர் ஷல்ஸ் டிலிட்ஸ் (Schulze-Delitzsch) என்பவர். இந்த சங்கங்களை உற்பத்திசெய்யும் அபிப்பிராயம், இங்கிலீஷ் பிரண்டிலி சொஸைடிஸ் என்னும் சங்கங்களிலிருந்து உண்டாயிற்று என்று தன் சொந்த தேசத்திற்குப் பெருமையாய் சொல்லக்கூடுமென்று பண்டிதர் சொன்னார். ஜர்மனி தேசத்திலிருக்கும் விவசாயச்சங்கங்களில், அனுபவத்தை எடுத்தும் பேசும்போது, பங்குத்தொகை இல்லையென்று சொல்லவேண்டும். அவைகள் தங்களுக்கு வேண்டிய பணத்தையெல்லாம் டிபாசிட் மூலமாகவேபெற்றன. அந்தசங்கங்கள் ஐக்கியநாணயத்தை பெரும் கோட்பாடாக உட்கொண்டிருக்கிறதென்னும் சங்கதி அவைகளில் பணம் பந்தோபஸ்தாய் வைக்க இடங்கொடுத்தது. கவர்ன்மெண்ட் ஆதாரவுகளில் பணத்தை எவ்வளவு நம்பிக்கையுடன் வைப்பானோ அவ்வளவு நம்பிக்கையுடனேயே இந்த விவசாய சங்கங்களிலும் சாதாரண குடியானவனும் தனது மிகுதிப்பணத்தை கட்டிவைத்தான். ஏனெனில் அனுபவத்தில் தனதுபணம் அவன்போக்கடித்துக் கொள்ளவில்லை இந்தவழியாய் கிடைத்தபணம் பலமாதிரியால் கடன் கொடுக்கப்பட்டன. அப்படிக் கொடுத்த கடன்களுக்கு வாங்கினவட்டி சராசரி 100 க்கு 4 முதல் 5 வரையில் இருந்தன. அந்த கடன்களில் பெரும்பாகத்துக்கு ஒப்புக்கொண்ட கடன் ஆதாரம் வாங்குபவனுடைய காண்ய ஆதாரம்தான். ஆனால் அவனுக்கு சிநேகிதர்களான ஒன்று அல்லது இரண்டு மனிதர்கள் கடன்வாங்கினவன் கொடுக்கத்தவறினால் தாம் கொடுப்பதாய் ஜாமீன் ஏற்றுக்கொண்டார்கள். இப்படிச்செய்ததின் பலன் என்னவென்றால் அவன் தான் வாங்கினபணத்தை பிரதி பிரயோசனம் கிடைக்கும்படி செலவழிக்க பார்ப்பதற்கு அவன் பக்கத்திலேயே ஒன்று அல்லது இரண்டுமனிதர்கள் இருந்து எப்போதும் அவனைக் கவனித்து வந்தார்கள். வாஸ்தவத்தில் அவர்கள் சங்கத்தின் காவல் ஆள்கள் போல அவனைக்காத்தார்கள்.

## சன்மார்க்க அம்சம்.

ஜர்மனி தேசத்தின் முறையில் ஒரு அம்சம் இப்போது இந்ததேசத்தில் வேண்டுமென்றே அநுஷ்டானத்துக்கு கொண்டுவரப்படவில்லை. ஒரு மனிதன் லக்ஷாதிபதியாயிருந்தாலும், அந்த எவ்வளவு பந்தோபஸ்துள்ள ஆதாரைக் கடனுக்குக் கொடுத்

தாலும் அவன் தகுந்த மனுஷனுயில்லாவிட்டால் அவனை ஒரு சங்கத்தில் சேர்க்கக்கூடாது என்று Raiffeisen ராபீசன் சொல்லியிருக்கிறார். ஆகையால் ராபீசன் முறையை அநுசரிக்கிற சங்கத்தில் ஒருவன் மெம்பர் என்று சொன்னால் அதுவே அவன் நல்ல நடத்தையுள்ளவன் என்று கொடுத்த நற்சாக்ஷிபத்திரம். ராபீசன் எப்போதும் சமயக்கோட்பாட்டுடன் வேலைசெய்தார். அவர் சங்கங்களின் முதல் கோட்பாடு மெம்பர்களுடைய பொருள்நிலைமையும் சன்மார்க்க நெறிநிலைமையும் விர்த்தியாகவேண்டுமென்பது. நகரச்சங்கங்கள் விஷயத்தில் சங்கத்தில் ஒவ்வொரு மெம்பர் ஒரு பங்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்றும் ஷல்ஸ்டிலிட்ஸ் ஏற்பாடு செய்தார். ஆனால் பங்குகள் சிறிது சிறிதாய்க் கொடுக்கப்பட்டுவரலாம். அப்படி கொடுக்கவேண்டிய குறைந்ததொகை பெரியதல்ல. நகரச் சங்கங்கள் ஏற்றுக்கொண்ட டிபாசிட்டுகளில் பெரும்பாகம் சிறு மிகுதித்தொகைகள். அந்த சிறுதொகைகளுக்கு இந்த சங்கங்கள் கொடுத்த வட்டி எவ்வளவு குறைந்தவட்டி பாருங்கள்! அந்தவட்டி 100 க்கு 3 முதல் $3\frac{1}{2}$ வரையில் இருந்தது, இந்த குறைந்தவட்டி அச்சங்கங்களில் பணம் எவ்வளவு பந்தோபஸ்துள்ளதென்று காட்டுகிறது. ஜர்மனிதேசத்து சங்கங்கள் தாங்கள் கொடுத்தகடனுக்கு வசூலித்தவட்டி சராசரி 100 க்கு 5 க்கு கொஞ்சம் அதிகமானதாகப் பண்டிதர் சொன்னார். இந்த தேசத்திலிருக்கிற ஐக்கியநாணயச் சங்கங்களை கவனிக்கும்போது இந்த தேசத்தின் நிலைமைக்கும் ஜர்மனிதேசத்தின் நிலைமைக்கும் இருக்கும் வித்தியாசத்தை முன்னர்த் தெரிந்து கொள்ளவேண்டும். இங்கிருக்கும் சங்கங்கள் உருவடைந்த மாதிரியும் ஐரோப்பிய தேசசங்கங்கள் உருவடைந்த மாதிரியும் ஒரே தன்மையுடையனவல்ல. இந்த இரண்டு தேசங்களின் நிலைமையை ஒப்பிட்டுப்பார்த்த ஒருவர்க்கு உறுதி தோன்றக்கூடியது என்னவென்றால், இந்தியாவின் சந்தருப்பங்களை அநுசரித்து ஐரோப்பிய தேசங்களைப் பார்க்கிலும் இந்தியாதான் அந்த சங்கங்கள் செழிப்பதற்கு மிக தகுதியான இடமென்றுபடும். ஐரோப்பா தேசத்தில் இந்த சங்கங்கள் எந்த வகுப்புஜனங்களுக்குள் விர்த்தியடைந்ததோ அந்த வகுப்புஜனங்கள் தான் இந்தியாவின் குடிகளில் மிகப்பெரிய பாகத்தவர். ஐரோப்பா தேசத்தில் நிலப்பாத்தியதையுடைய குடியானவர்கள் அதிகபெயர் இருந்தபோதிலும், அவர்கள் முடிவில் ஜனங்களில் மிகு முக்கியமான வகுப்பாராயில்லை. இந்தியாவிலோ ஜனங்கள்யாவரும் நிலப்பாத்தியதையையுடைய குடியானவர்கள். அவர்கள் நன்மை ஒருவன் கவனித்தால் தேசத்து ஜனங்களின் மூன்றில் இரண்டுபங்கு ஜனங்களை கவனித்தாய்விடும். ஐக்கிய நாணயச்சங்கமுறை இந்தியாவில் இன்னும் சிறு அளவிலேயே இருக்கிறது, அது இன்னும் குழந்தைப் பருவத்திலேயே இருந்தபோதிலும், சென்ற 12 மாதங்களில் கிடைத்தபலனை, மாத்திரம் கவனிக்கிறபோதே, இனிவருங் காலத்தில் அதன் சாதனை அதிகப்படுமென்பதை பூர்த்தியாய் நம்பலாமென்று காட்டுகிறது. 1906-ம் வருஷ கடைசியில் 740 கிராமச்சங்கங்களிருந்தன. அவைகளில் 54,000 மெம்பர்களிருந்தார்கள். 1907-ம் வருஷக் கடைசியில் 1201 கிராமச்சங்கங்கள் ஆயின. அவைகளில் 93,000 மெம்பர்கள் இருந்தார்கள்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
7 JUN 1910
MADRAS.



## சில வேறுபாடுகள்.

மேற்சொன்ன எண்ணிக்கைகள் ஐக்கியநாணயம் தொடர்ந்து விர்த்தியாய் வருவதாய்த் தெரிவிக்கின்றன. மேலும் இனிவருங்காலத்தில் அந்த விர்த்தி இன்னும் பூர்த்தியாய் விஸ்தரிக்குமென்பதையும் காட்டுகின்றன. இந்தியாவில் அநுசரிக்கப்படும் முறையைக்குறித்து ஒருவன் விசாரிக்கும்போது உடனே அவனுக்குத்தோன்றும் ஒரு வேறுபாட்டை பண்டிதர் எடுத்துச்சொல்லவிரும்பினர். அதாவது, ஐரோப்பிய நாட்டில் ஜர்மனி தேசத்திலாவது இதரதேசத்திலாவது, இந்த ஐக்கிய இயக்கத்தை ஆரம்ப முதல் கடைசிவரையில் ஜனங்கள் தங்களுக்குத் தாங்களாகவே தூண்டப்பட்டு தனித்தனியாய்செய்து கொண்டதின் பலமாயிருக்கிறது; ஆனால் இந்தியாவிலோ, இந்த இயக்கத்தை கவர்ன்மெண்டார் ஆரம்பமுதல் ஆரம்பித்து கடைசிவரையில் செய்கிறார்கள். ஜர்மனிதேசத்தில் இந்த சங்கங்களில் மனத்தாழ்மையுள்ள யாவரும் அறிந்த அநேகமனிதர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள், இந்தியாவிலோ, ராபிசன்போல பெரும்பெயர் எடுத்த மனிதர்கள் இல்லாமற்போன போதிலும், எடுத்துக் கொண்டவேலையை பூர்த்தியாய் நிறைவேற்ற வேண்டுமென்றும் விரதம்பூண்ட ஜனங்கள் இருக்கிறார்கள். ஜர்மனிதேசம் போலவே இந்தியாவிலும் கிராமச்சங்கங்களில் பங்குத்தொகை வசூல் செய்வதில்லை. ஆனால் இவைகளில் வரையறுக்கப்படாத பொறுப்பு உண்டு. அதனோடு ஐக்கியநாணயம் என்னும் பெரும்கோட்பாட்டை ஆதாரத்துக்குக் கொண்டுவருதல் உண்டு, இவைகளினால் உண்டான பலன் என்னவென்றால் சங்கங்கள் பூரணமாய் நிலைக்காத இப்போதைய நிலையிலுங்கூட இச்சங்கங்களில் பணம்கட்டுவது மிக பந்தோபஸ்தென்று ஜனங்கள் நினைத்துவிட்டார்கள். சராசரி இந்த சங்கங்கள், ஜர்மனிதேச சங்கங்களுக்குக் கிடைக்கும் 3 முதல் $3\frac{1}{2}$ வட்டிக்கு மாறாய், 6 முதல் 7 வரையில் உள்ள வட்டிக்கு பணம் சம்பாதிக்கும். ஜர்மனிதேச சங்கங்கள் கொடுக்கும் வட்டி 100-க்கு 5-க்குக்கொஞ்சம் அதிகத்துக்குமாறாய் பம்பாய் இராஜதானியில் உள்ள சங்கங்கள் 9-முதல் 13-வரையில் வட்டிக்கு கடன் கொடுக்கின்றன. ஜர்மனி தேசத்தோடு இவைகளை ஒப்பிட்டுப்பார்ப்பது அவ்வளவு திருப்தியைக் கொடுக்கிறதில்லை. இந்த சங்கங்கள் கொடுக்கும் வட்டிவீதத்தை இந்த சங்கங்களில்லாத கிராமந்தர ஜனங்கள் வாங்கும் கடனுக்கு கேட்கப்படும் வட்டிவீதத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது தெரியக்கூடிய சங்கதி வியப்பைத்தரும். இந்த சங்கங்கள் வாங்குகிற 100-க்கு 9-முதல் 13 வரையில் போகிற வட்டி வீதத்துக்குமாறால், கிராமந்தர ஜனங்கள் இந்தேசத்தில் லேவாதேவிக்காரர்களிடம் வாங்கும் கடனுக்குக்கொடுக்கும் வட்டி சராசரி 100க்கு $37\frac{1}{2}$- ஆகிறது. இந்த சங்கங்களில் ஜனங்களுக்கு நம்பிக்கை வளர்ந்து ஜர்மனிதேசத்தில் ஆனது போல் அவ்வளவு சமுசயமாயில்லாமல் கிராமச்சனங்கள் இவைகளில் தங்கள் பணத்தை கட்டிவைக்க வேண்டும் என்பது இந்த தேசத்தின் க்ஷேமத்திற்கு மிகுஅவசியம். இப்போது இந்ததேசத்தில் சிக்கறுக்கவேண்டிய விஷயம் என்னவென்றால் இந்த சங்கங்கள் பணவைப்புக்கு மிக்க பந்தோபஸ்தான இடமென்று ஜனங்கள் உணரவும் ஜனங்களுடைய மிகுதிபணத்தையெல்லாம் இழுப்பதற்குத் தகுந்தவிதமாய் அவர்கள் இச்சங்கங்களை உற்பத்திசெய்யவும் ஜனங்களுக்குப் போதிக்கவேண்டும்.

இந்தியாவில் இவ்வியக்கத்தை பரவச்செய்வதற்கு ராபிசன் போன்ற மனிதனுக்கு வசதி இருக்கிறது. அம்மாதிரி மனிதனுடைய ஒத்தாசை வேண்டுமென்றும் கோரப்படுகிறது. அப்படி முன்வரும்மனிதன் இளம்பிராயத்தோடு அவகாசத்தையும் உடை

யவனும் வாழ்க்கைக்கு தன்னூதியத்தை எதிர்பார்க்கக்கூடியவனல்லனாயுமிருந்தால், அவன் இந்தியன் ராபீஸன் என்று பெயரெடுக்க பார்க்கலாம். அந்தவேலையை எடுத்துக்கொள்ளும் எந்த மனிதனும் மட்டாய்ச்செலவிடும் செட்டுத்தன்மைக்கு திருத்திக்கொண்டுவருபவனாயிருப்பதோடு சன்மார்க்கநெறியில் கொண்டுவர ஜனங்களை திருத்துபவனும் ஆகிறான். எப்படியெனில் இந்த சங்கங்கள் கிராம ஜனங்களின் நடத்தையை அடியோடே திருப்பிவிடுகிறது. மேலும் அவன் சன்மார்க்கநெறியை மாத்திரம் உண்டுபண்ணினவனாகமாட்டான். அவன் காலக்கிரமத்தில் சுயஆட்சி சங்கங்களை இன்னும் ஒருபடி உயர்ந்த அந்தஸ்தில் ஸ்தாபிப்பதற்கு, ராஜதந்திரிகளாய் மாத்திரம் இருக்கும் பன்னிரண்டுபெயர் ஒன்றுசேர்ந்து செய்வதைவிட, அதிகம் செய்வான்.

---

# செங்கல்பட்டுஜில்லா கூட்டுறவினர் முதல் மஹாநாடு.

---

இந்தியா கவர்ன்மெண்டு 1904௵த்திய 10-வது ஆக்ட்டு அமுலுக்குவந்து அதிக வருஷங்களாகாவிட்டாலும், சென்னை ராஜதானியில் ஐக்கிய நாணயச்சங்கங்கள் விர்த்திபெற்று நடந்தேறிவருகிற சங்கதி எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. இம்மாதிரி ஐக்கியநாணயம் விருத்திபெற்று ஓங்கி வளர்வதற்கு காரணம் யாதெனில் கவர்ன்மெண்டார் ஜனங்கள் விருத்தியைத் தோற்றுதலும், கவர்ன்மெண்டாருடைய முக்கிய உத்தியோகஸ்தர்கள் மேற்படி சட்டத்தின் நிபந்தனைகளை ஊர்ஜிதமாயும் நீதியோடும் அமுலுக்குக் கொண்டுவருவதேயாகும்.

2. நமது கிராமங்களில் ஐக்கியநாணய முயற்சி கைகூடிவருவதற்கு அனேக கஷ்டங்களிருக்குமென்று ஒருகாலத்தில் நினைத்திருக்கக்கூடும். ஆனால் அப்பேர்க்கொத்த பிரயத்தனமாவது அல்லது வேறே எந்த பிரயத்தனமாவது ஜனங்களுக்கு பொதுநன்மையை உண்டாக்கத் தக்கதென்று கிரமப்படி எடுத்துரைக்கும் பக்ஷத்தில் நமது கிராமவாசிகளும் அப்பேர்க்கொத்த பிரயத்தனங்களை இலகுவாய் அங்கீகாரம் செய்வார்களென்று பின்னிட்டு விளங்குகிறது. நமது ராஜதானியில் மற்றைய ஜில்லாக்களைக்காட்டிலும், செங்கல்பட்டு ஜில்லாவில்தான் ஐக்கிய நாணயச்சங்கம் அவசியமென்றும், ஜனங்களுடைய குறைகளுக்கு ஏராளமான பரிகாரமென்றும் தோன்றுகிறது. தற்காலம் செங்கல்பட்டு ஜில்லாவில் அனேக ஐக்கிய நாணயச்சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இம்மாதிரி சங்கங்கள் ஏற்பட்டதால், இச்சங்கங்களை பாதுகாக்கும்பொருட்டும், இவைகளின் விர்த்தியை பரவச்செய்யும்பொருட்டும், "ஐக்கியநாணயக் கூட்டுறவினர் சங்கம்" என்று ஒருசங்கம் உண்டாவது சகஜமே. இம்மாதிரி ஐக்கிய நாணயக் கூட்டுறவினர்கள் ஏற்பட்டு கவர்ன்மெண்டாருடைய பிரஸ்தாப பிரயத்தனத்தை கை [illegible] கவர்ன்மெண்டார் கருத்துக்கிசைந்த தொழிலோடும்



மேற்படி உறவினர் சங்கம் ஏற்பட்டதனாலேயே, ஐக்கியநாணயக் கூட்டுறவினர்களெல்லோரும் வருஷவாரியில் ஒருதடவை ஓரிடத்தில் சேரவேண்டியதென்கிற எண்ணம் கதாவில் சம்பவிக்கிறது. நமது நண்பர்கள் கீழ்ச்சேரியிலிருக்கும் ம-ா-ா-ஸ்ரீ கா. அருணையநாயுடுவும், உத்தரமல்லூரிலிருக்கும் ம-ா-ா-ஸ்ரீ வெங்கடநாதய்யங்காரும் மேற்படி எண்ணத்தை உட்கொண்டு நாளது 1909-வருஷம் பிப்ரவரிமாதம் 21-தேதியில் இந்த ஜில்லாவிலிருக்கும் ஐக்கியநாணய உறவினர்களுடைய மஹாநாடு காஞ்சிபுரத்தில் கூட்டிவைக்கவேணுமென்று அபிப்பிராயப்பட்டார்கள். இந்த அபிப்பிராயத்தில் மற்றையவர்களும் கலந்தார்கள். 1909வருஷம் பிப்ரவரிமாதம் 4-தேதியில் காஞ்சிபுரத்தில் ஒரு விசேஷ மீட்டிங்கு நடந்தது. இந்த மீட்டிங்கில் பின்னிட்டு நடக்கப்போகிற மஹாநாடுக்கு வரும் பிரதிநிதிகளைத் தக்கபடி விசாரித்து உபசரணைசெய்ய ஒரு உபசரணை கமிட்டி நியமிக்கப்பட்டது. செங்கல்பட்டு ஜில்லாவில் அனேக கிராமங்களில் ஏற்பட்டிருக்கும் ஐக்கியநாணயச் சங்கங்களிலிருந்து பிரதிநிதிகள் மஹாநாடுக்கு வரவேணுமென்று மேற்படி சங்கங்களுக்கு லிகிதமூலமாய் சங்கதி தெரிவிக்கலாயிற்று. இதர ஜில்லாக்களிலுமிருக்கும் வியாபகம்பெற்ற சில ஐக்கியநாணய உறவினர்களையும் மஹாநாடுக்கு வரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளப்பட்டது. கடைசியாக மஹாநாடுக்கு விஜயஞ்செய்த பிரதிநிதிகள் சங்கியையும், இதரகனவான்களுடைய சங்கியையும் உபசரணை கமிட்டியாருடைய அபேக்ஷைக்கு அதிகரித்துப்போன விஷயத்தைக்குறித்து உபசரணை கமிட்டியார் நிரம்பவும் சந்தோஷப்படுகிறார்கள். காஞ்சிபுரத்திலிருக்கும் பச்சையப்ப முதலியார் பாடசாலையோ மஹாநாடு கூடுவதற்கு எவ்விதத்திலும் தகுந்த இடமாயிருந்தது. நிரம்பவும் நீண்டு விசாலம் பொருந்திய ஒரு சத்திரத்தில் பிரதிநிதிகளுக்கு உபசரணைக் கமிட்டியார் தங்களாலியன்றவரையில் சௌகரியங்களை ஏற்படுத்தினார்கள்.

4. பிரஸ்தாப மஹாநாடுக்கு ம-ா-ா-ஸ்ரீ ராவ்பஹதூர் எம். ஆதிநாராயணய்யா அவர்கள் அக்கிராசனாதிபதியாக வீற்றிருந்த விஷயத்தை அதிர்ஷ்டவசமாகவே சொல்லவேண்டும். பொதுநன்மை காரியங்களில் இந்த கனவானுடைய ஊக்கமும், பாடும் எல்லோருக்கும் தெரிந்தவிஷயமே. இவர் சனிக்கிழமை ராத்திரி காஞ்சிபுரம் வந்தார்; பிரதிநிதிகளில் அனேகர் ரெயில்வே ஸ்டேஷனுக்குச்சென்று ஷை யாருக்கு மாலை மரியாதை செய்து சங்கீத பாணவேடிக்கைகளுடன் ஊர்கோலமாய் இவர் தங்குமிடம் சேர்த்து இவருடன் நெடுநேரம் கலந்து வார்த்தையாடி, பிறகு தங்களுடைய இருப்பிடம் சேர்ந்தார்கள்.

5. 1909௵ பிப்ரவரி௴ 21௳ பகல் 12மணிக்கு ஐக்கிய நாணய கூட்டுறவினர் மஹாநாடு காஞ்சிபுரம் பச்சையப்பமுதலியார் பாடசாலையில் கூட்டப்பட்டது. நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு முந்தியே பிரதிநிதிகளும் இதர கனவான்களும் விசேஷ மனோற்சாகத்துடன் வந்து சேர்ந்தார்கள். ஒவ்வொரு சங்கத்திலிருந்து ஒன்று அல்லது ஒன்றுக்கதிகமாகவே பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். நடவடிக்கைகளை ஷையார்கள் அதிக ஆவலுடன் கவனித்தார்கள். உபசரணை கமிட்டியின் பிரசிடெண்டு ம-ா-ா-ஸ்ரீ ராவ்சாஹெப் என். வெங்கடபதிநாயுடு அவர்கள் சிலஅசந்தர்ப்பத்தால் மீட்டிங்குக்குவரக்கூடாமையால் இவருக்கு பதிலாக ஐக்கியநாணய உறவினர் சங்கத்திற்கு விசேஷமாய் பாடுபட்டுவரும் ம-ா-ா-ஸ்ரீ கா. அருணய்யநாயுடு அவர்கள் நியமிக்கப்பட்டார். இவரால் உபசரணைகமிட்டி பிரசிடெண்டின் உபந்யாசம் படித்தபிறகு, ம-ா-ா-ஸ்ரீ ராவ்பஹதூர் எம். ஆதிநாராயண அய்யா அவர்கள் எல்லோரும் மனக்களிப்படைய அக்கிராசனாதிபதியாக வீற்றார். இவருடைய மசோதா உபந்யாசம் இங்கிலீஷ்பாஷையில் எழுதப்

பட்டபோதிலும், இதை இவர் தமிழில் சபையாருக்குத் தெரியும்பொருட்டு விசேஷ திருஷ்டாந்தங்களுடனும், வியாக்கியானங்களுடனும் சொன்னார். இவரால் சொல்லப்பட்ட விஷயங்களை சபையார் மனக்களிப்புடன் அடிக்கடி கைகொட்டி ஆமோதித்தார்கள். நமது விவசாயர்களுடைய நிலைமையை எடுத்துச்சொல்லி, நாணயத்தினுடைய விசேஷத்தையும் குறிப்பிட்டார். ஸ்வயஒத்தாசையாதி மூலதனத்தை சேகரம் செய்யவேண்டியது அவசியமென்று எடுத்துரைத்தார். ஐக்கியநாணயசங்கங்களில் செய்யப்பட்டுவரும் கிரமங்களை நன்கு தெரிந்தவராய், தன்னுடைய உபந்யாசத்தை விசேஷ சூசனங்களுடன் முடித்தார். நமது ரிவின்யூபோர்டு (Revenue Board) மெம்பர்களில் ஒருவரும் ஐக்கியநாணயச் சங்கங்கள் விர்த்தியில் ஊக்கமுள்ளவரான கனம், மிஸ்டர் ஸ்வேர்ட்துரை அவர்களிடமிருந்தும், இந்தராஜதானியில் ஐக்கியநாணயச்சங்கங்களுக்கு முதலில் ரிஜிஸ்தாராயிருந்த கனம், திவான்பஹதூர் பி. ராஜகோபாலாசாரியர் C. I. E., அவர்களிடமிருந்தும் வந்த லிகிதங்கள் மனக்களிப்புடன் படிக்கப்பட்டன.

6. ஐக்கியநாணய யூனியன்களைப்பற்றி நமது ரிஜிஸ்தரார் ம-ள-ள-ஸ்ரீ ஆர். ராமசந்திரராவ் அவர்கள் ஒரு உபந்யாசம் படித்தார். திரவியசகாயத்தையும் கவர்ன்மெண்டையும் தாங்களே தேடிக்கொள்ளும்பொருட்டு ஐக்கியநாணயசங்கங்கள் ஆங்காங்கு யூனியன்களாகச் சேரவேண்டியது அவசியமென்று எடுத்துக்காண்பித்தார். திருவல்லிக்கேணியில் ஐக்கியநாணய பண்டசாலை ஏற்படுத்தின விஷயத்தில் நிரம்பவும் பாடுபட்டு ஷை பண்டசாலையை விசேஷ ஊக்கத்துடன் நடத்திவரும் ம-ள-ள-ஸ்ரீ டி. எஸ். சுப்பிரமணிய அய்யர், ம-ள-ள-ஸ்ரீ டி. கே. அனுமந்தராவ் இவர்கள் பிரசங்கம் செய்தார்கள். பட்டணங்களிலிருக்கும் சங்கங்களுக்கும் கிராமங்களிலிருக்கும் சங்கங்களுக்கும் கலப்பிருப்பதனால் விளையும் அனுகூலங்களை விவரமாய்ச் சொன்னார்கள். ம-ள-ள-ஸ்ரீ டி. கே. அனுமந்தராவ் அவர்களுடைய பிரசங்கம் நகைப்பை விளைவிக்கச் செய்ததும் தவிர, சபையாரால் கவனமாயுங்கேட்கப்பட்டது. பின்னிட்டு உபசரணை கமிட்டியாரால் தக்க ஏற்பாட்டின் கீழ் தயார்செய்யப்பட்டிருந்த சிற்றுண்டி நிமித்தம் சபை கலையப்பட்டது. சபை திரும்பி சேர்ந்தவுடன் ம-ள-ள-ஸ்ரீ கா. அருணய்யநாயுடு அவர்கள் செங்கல்பட்டு ஐக்கியநாணயக் கூட்டுறவினர் சங்கத்தைப்பற்றியும் அதனுடைய நிபந்தனைகளைப் பற்றியும் பிரசங்கம்செய்தார். ம-ள-ள-ஸ்ரீ சாமிகோவிந்தநாயுடு அவர்கள்தான் ஆதியில் ஐக்கியநாணயசங்கங்கள் ஏற்படுத்தி அதில்பட்ட சிரமங்களை எடுத்துக்கூறினார். மதுராந்தகம் தாலூகாவில் ஐக்கியநாணய சங்கங்கள் ஏற்படுத்தியதில் தான் எடுத்துக்கொண்ட முயற்சியைப்பற்றி ம-ள-ள-ஸ்ரீ உத்தரமல்லூர் வெங்கடநாத அய்யங்கார் அவர்கள் பேசினார். நெசவுகைத்தொழில் செய்கிறவர்களுடைய நிலைமையைப்பற்றி ம-ள-ள-ஸ்ரீ பி. ராமசந்திர சாஸ்திரியார் ஒரு உபந்யாசம் படித்தார். நூதனமாய் காஞ்சீபுரத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் நெசவுகைத்தொழில்காரர்களுடைய யூனியனைப்பற்றி பிரசங்கம்செய்தார். இவர்களுடைய நிலைமையோ கடினமானது. இந்த விதமாய்ப் பரிகாரம் தேடலாமென்று சுலபத்தில் நிறுவிக்கக்கூடாத விஷயமாயிருக்கிறது. ஆனாலும் ம-ள-ள-ஸ்ரீ பி. ராமசந்திர சாஸ்திரியாரைப்போல் ஏகமுகமாய் விடாமுயற்சியுடன் பாடுபடுகிறவர்கள் ஏற்பட்டால் ஷை யார்களுடைய கஷ்டங்களும் கைகூடிவருமென்று தோன்றுகிறது.

8. நீடாமங்கலத்திலிருந்து காஞ்சீபுரம் மஹாநாடுக்கு வந்திருந்த ம-ள-ள-ஸ்ரீ சேதுராமய்யர் அவர்கள் ஐக்கியநாணய சங்கங்களை விர்த்திக்குக் கொண்டுவருவதில் சம்பவிக்கும் சில கஷ்டங்களை எடுத்துக்காண்பித்து கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர் ஐக்கியநாணயச் சங்கங்களில் ஷேர்கள் எடுத்துக்கொள்ளக் கூடாதென்றும் டிபா-



சிட்டுகள் செய்யக்கூடாதென்றும், இந்தியா கவர்ன்மெண்டாரால் பிரசுரஞ் செய்யப்பட்ட உத்திரவினால் அனேக இடையூறுகள் சம்பவிக்குமென்றுங் கூறினார். இப்போர்க்கொத்த உத்திரவை அமுலுக்கு கொண்டுவரக் கூடாதென்று கவர்ன்மெண்டாரை கேட்டுக்கொள்ள வேணுமென்று சபையாரால் ஒரு தீர்மானமும் செய்யப்பட்டது. நமது ரிஜிஸ்தரார் அவர்கள் ஐக்கியநாணயச் சங்கங்களின் வேலைகளை தினந்தோறும் நடத்துவதில் கவனிக்கவேண்டிய உபாயங்களைப் பிரதிநிதிகளுக்கு தெரியும்படி எடுத்துக்காண்பித்தார். பிறகு ஒவ்வொரு சங்கத்திலிருந்தும், வந்த பிரதிநிதிகள் தங்களுடைய சங்கத்தின் விர்த்தியையும், வேலையையும் பற்றி ஒரு ரிபோர்ட்டு படித்தார்கள். இந்த ரிபோர்ட்டுகளை சபையாருக்குப் படித்துக் காண்பிக்கவேணுமென்கிற ஆவலானது ஒவ்வொரு பிரதிநிதிகளின் முகத்தில் நன்கு விளங்கிற்று. கிராமங்களில் ஏற்கனவேயிருக்கும் ஆதாயங்களின் பலத்தின்பேரில் ஐக்கியநாணயச் சங்கங்கள் நிலைபெற்று விர்த்தி அடையுமென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. இவைகளெல்லாம் முடிந்தபிறகு அக்கிராசனாதிபதி அவர்கள் பிரதிநிதிகள் அவசியமாய்த் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்களைச்சொல்லி சபையை முடிவுக்குக்கொண்டுவந்தார். நமது மஹாகனம் பொருந்திய சக்கிரவர்த்தி அவர்களுக்கு சபையோர்கள் ஏகோபித்து வந்தனம் அளித்து அக்கிராசனாதிபதி அவர்களுக்கும் வந்தனம் அளித்தார்கள். பகல் 12 மணிமுதல் இரவு 9 மணிவரையில் மீட்டிங்கு நடந்தபோதிலும், பிரதிநிதிகள் யாவற்று நடவடிக்கைகளையும் ஊக்கத்துடன் கவனித்துவந்தார்கள்; ஆரம்பமுதல் கடைசிவரையில் தமிழ் பாஷையில் யாவத்தும் நடத்தப்பட்டன. முதல் மஹாநாடோ உபசரணை கமிட்டியார் அபேக்ஷைக்கு மீறி ஜயம்பொருந்தி நடந்தேறிற்று. உபசரணை கமிட்டியின் காரியதரிசியாகிய ம-ள-ள-ஸ்ரீ வி. வேங்கடாசாரியர் அவர்கள் யாவத்து வேலைகளையும் நேரில் பார்த்து சிரத்தையுடன் முடித்தார். மஹாநாடுக்கு கனவான்களை வரவழைக்க கடிதங்கள் எழுதுகிற வேலைமுதல் பிரதிநிதிகளுக்கு தக்கபடி உபசரணைசெய்யும் வேலைவரையில் யாவத்துசங்கதிகளையும் நேரில் நடத்தியிருக்கிறார். அக்கிராசனாதிபதி கோரிக்கைப்படி அடுத்தவருஷம் மஹாநாடு கூடும்போது இன்னும் அதிக ஜயமுண்டாகவேணுமென்றும் ஐக்கிய நாணயச் சங்கங்கள் இன்னும் அதிகரித்து ஓங்கிவளர வேண்டுமென்றும் எல்லோரும் கோருகிறோம்.

இந்த நடவடிக்கைகளின் விவரமான ரிப்போர்ட்டு இங்கிலீஷிலும் தமிழிலும் பிரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன. காஞ்சீபுரம் தாலூக்கா கீழச்சேரியிலிருக்கும் செங்கற்பட்டு கூட்டுறவினர் சங்கத்தின் காரியதரிசிக்கு எழுதி ஒரு அணா கொடுத்து ரிப்போர்ட்டு காபிகள் பெற்றுக்கொள்ளலாம்.

## பொது கற்பனைகள்.

1909-வருஷம் பிப்ரவரிமாதம் 21-தேதி காஞ்சீபுரத்தில் கூடிய செங்கற்பட்டு கூட்டுறவின் முதல் மகாநாட்டில் ஆஜரிருந்த பிரதிநிதிகளுக்குக் கீழ்வரும் சங்கதிகளை ரிஜிஸ்திரார் விவரமாய் எடுத்துச்சொன்னார்.

1. அனேக மெம்பர்கள் க்ஷேமநிதி இருக்கவேண்டிய அவசியம் என்னவென்று கேட்கிறார்கள். ஒரு சங்கத்திற்கு க்ஷேமநிதியிருப்பது அந்த சங்கம் நன்றாகவும் திறமையாகவும் நிர்வாகஞ்செய்யப்பட்டு வருகிறதென்பதை நனக்குத்தானாகவே அறிவிக்கிறது; க்ஷேமநிதி எதிர்பாராத நஷ்டத்துக்கு ஈடாவதோடு பணம்போட்டு வைப்பதற்கு பெரும் பந்தோபஸ்தாய் நம்பிக்கை யுண்டுபண்ணுகிறது. நிர்வாகக்குறைவினால் நஷ்டம் வந்தாலும், நன்றாகச் சேர்க்கப்பட்ட க்ஷேமநிதியை மீறி நஷ்டம் வரும்போது ரெஜிஸ்டிரார் பிரவேசித்து நஷ்டத்தைத் தடுப்பது சாத்தியமாகும்.

2. க்ஷேமநிதியை குன்றந்தவட்டிக்கு நூற்றுக்கு (ஐந்து வீதம்) சென்டரல்பாங்கில் தான் போட்டுவைக்க வேண்டுமென்றும் தங்களுடைய சங்கங்களிலே அதிகவட்டிக்குக்கொடுத்து ஏன் வைத்துக்கொள்ளக் கூடாதென்றும் கேட்கப்படுகிறது, எவருக்கும் தெரியாதபடி க்ஷேமநிதியை திருப்பிவாங்கிக் கொள்ளக்கூடாது என்பதுதான் க்ஷேமநிதி யென்பதற்கு அர்த்தம். நிர்வாகக்குறைவினால் நஷ்டம் நேரிட்டால் க்ஷேமநிதியும் அந்த சங்கத்தில் இருந்தால் நஷ்டப்பட்டுபோகும். அதனால் அது ஏற்பட்ட காரியத்துக்கு உதவாமல் போகும் பெரியபாங்குகள் அவைகளின் க்ஷேமநிதிகளை சொற்பவட்டிக்கு கவர்மெண்டு பத்திரங்களில் போட்டுவைக்கின்றன.

3. சங்கங்கள் மெம்பர்களிடமிருந்து வருஷத்திற்கொருதரம் வட்டி வாங்குகின்றனவென்றும் ஆனால் மதராஸ் சென்டரல்பாங்கில் ஆறுமாதத்திற் கொருதரம்வட்டி கேட்கப்படுகிறதென்றும் சிலர் குறை சொல்லுகிறார்கள். சென்டரல் பாங்கானது தனக்கென்றும் பிரத்தியேகமாகவிதிகள் ஏற்பாடுசெய்து கொண்டிருக்கிறது, அது அவைகளின்படி நடக்கக் கடமைப்பட்டிருக்கிறது. சென்டரல் பாங்கிக்குக்கொடுக்கவேண்டிய முதல் ஆறுமாதத்திய வட்டியை பைசல் செய்ய அந்த ஆறுமாத காலத்துக்குள் சங்கத்தின் விஷயத்தில் ஜனங்களுக்கு மதிப்பு உண்டாகி சங்கம் டிபாசிட்டு பெறக்கூடிய ஸ்திதியில் வந்துவிடுமாகையால் அதனால் சங்கங்களுக்கு இருக்கும் கஷ்டம் இன்னதென்று விளங்கவில்லை. அப்படி டிபாசிட்டு கிடைக்காதபக்ஷத்தில் செண்டிரல் பாங்கு வட்டியைக் கொடுக்கும்பொருட்டு செண்டரல் பாங்கிலேயே கடன் வாங்கலாம்.

4. சென்டரல் பாங்கானது இரண்டுவருஷத் தவணைக்குக் கடன் கொடுக்கிறதென்றும் இந்தத் தவணை குறைந்ததவணையென்றும் சங்கங்கள் குறை கூறுகின்றன. நீண்டகால தவணைக்குக்கடன் கொடுத்து பணத்தை அடைத்துவைப்பது ஒழுங்கான வேலைசெய்யும்விதியல்ல. சிறியதவணைக்குக்கடன்கொடுத்து அவசியமானகடன்களுக்கு தவணை அதிகப்படுத்துதல் தான் நல்லவிதி, ஒரு சங்கம் நன்றாய் வேலைசெய்து அது வேலையில் சுறுசுறுப்பாயிருப்பதோடு வட்டியைத் தவறுதலில்லாமல் அனுப்பிவிடுகிற பக்ஷத்தில் அதற்கு மறுபடியும் கடன் வாங்குவதற்காகவாவது பழையகடனை புதுப்பிப்பதற்காவது கஷ்டமில்லாமலே அனுமதி கொடுக்கப்படும். சொற்பகால தவணையானது சங்கத்துக்கு வரவேண்டிய கடனை தவறுதலில்லாமல் வசூல் செய்யும் நல்ல வழக்கத்தை சங்கம் கற்றுக்கொள்ள ஏது உண்டுபண்ணுகிறது. மேலும் சங்கம் அந்த நல்ல வழக்கத்தை அனுசரித்த உடனே அது தனது வேலையை நன்றாய்ச் செய்கிறதென்று அதன் விண்ணப்பம் கவனிக்கப்படவேண்டும் என்னும் நிச்சயத்தை ஏற்படுத்திக்கொடுக்கிறது.

5. மெம்பர்களுக்குக் கொடுக்கிறகடனுக்குத் தவணையை ஜாக்கிரதையாய்க் குறிப்பிடவேண்டும். கடன்வாங்குகிறவன் திருப்பிக்கொடுப்பதற்கு எப்பொழுது அனுகூலமாயிருக்குமோ அதற்கனுகூலப்படி தவணை நிர்ணயஞ்செய்யவேண்டும், கடன் எந்த காரி



யத்துக்கு வாங்கப்பட்டதோ அந்த காரித்துக்குத் தக்கபடி தவணை ஏற்படுத்தவேண்டும். உதாரணமாக, கடனானது விதைவாங்குவதற்காகவாவது சர்க்கார் கிஸ்தி செலுத்துவதற்காகவாவது கொடுத்தால் அதற்கு தவணை ஒரு வருஷத்துக்குட் பட்டிருக்கவேண்டும். சாதாரணமாய் அதற்கு கெடுவு அதிகப்படுத்தக் கூடாது. இதர காரியங்களுக்கும் கொடுத்த கடன்களுக்கும் தவணை ஒரு வருஷத்திற்குட் பட்டிருக்கவேண்டும். ஆனால் கடன்வாங்கினவன் யோக்கியதையிலும் ஆஸ்தியிலும் குறைவுபடாமலிருந்து வருவானானால், கடன் தவணையை தாராளமாய் நீட்டிக்கலாம். ஆனால் அப்படி நீட்டிக்கு முன் வட்டியையும் அசலில் ஒருபாகத்தையும் வசூல் செய்துகொள்ள வேண்டும். ஏனென்றால் கடனை பிரதி பிரயோசனமுள்ள காரியத்தில் உபயோகப்படுத்தி அந்த லாபத்திலிருந்து வாங்கின கடன் அடைந்துவிட வேண்டுமென்பது நீதி; ஆகையால் அப்படி வரும் லாபத்தை இதர காரியங்களுக்கு உபயோகப்படுத்தாமல் வாங்கின கடனுக்கே கொடுக்கவேண்டும். இதரகாரியங்களுக்கு பணம் வேண்டுமானால் புதுக் கடன்கள் வாங்கவேண்டும்.

6. கிராமங்களில் குடியிருப்பவர்களிடமிருந்து டிபாசிட்டு 1 க்கு ரூ 20-க்கு குறையாமல் குறைந்தது 6 டிபாசிட்டுகள் பெறுவது ஒவ்வொரு சங்கத்தின் கடமை. இந்த டிபாசிட்டர்களுக்கு அதன் பிறகு சங்கத்தின் நன்மையில் அக்கறையுண்டாகிவிடும். சங்கத்தின் நிர்வாகத்தின் மீது இவர்கள் மேல்விசாரணை கர்த்தர்களாக தங்களுக்குத் தாங்களே ஆகிவிடுவார்கள் தங்கள் காரியங்களை இந்த டிபாசிட்டர்கள் கவனிக்கிறார்கள் என்ற சங்கதி அறிந்துகொண்டு நிர்வாகசபையார் தங்கள் காரியங்களை ஒழுங்காய் நடத்துவார்கள்.

7. அக்கிராசனாதிபதி அவர்கள் உண்டிபெட்டி மூலமாய் டிபாசிட்டுகள் வசூலிக்கும் வழியை எல்லோருக்கும் எடுத்துச்சொன்னார். முடிவாக ஐக்கிய சங்கத்துக்கு வேண்டிய பணமெல்லாம் அந்தந்த ஊரில் வரும் மிகுதி பணங்களாகவே இருக்கவேண்டும். மிகுக்கும் பணங்களாய் வாங்குவதினாலேயே ஏழைகள் சிக்கனம் என்னும் குணத்தைக் கற்றுக்கொள்ளுவார்கள்.

8. ஒவ்வொரு மாதத்தின் வரவு செலவை திட்டப்படுத்தி அந்த ஸ்டேட்மெண்டைப் பிரதி மாத பஞ்சாயத்து மீட்டிங்கில் வாசித்துக்காட்டவேண்டும். அப்படிச் செய்தால் பஞ்சாயத்தார் சங்கத்தினின்று நீங்கிப்போகிறவர்களைக் குறித்தும், வேலை மெதுவைக் குறித்தும் கவனிக்கவும் சங்கத்தின் விர்த்தியில் ஊக்கங்காட்டவும் இடமுண்டாகும்.

9. கவர்ன்மெண்ட் விவசாயிகளுக்குக் கொடுக்கும் கடன் சட்டத்தின்படி சங்கங்கள் கூட்டாய்க் கடன் வாங்கலாம். பஞ்சகாலத்தில் அமுலிலிருக்கும் விதிகளின்படி சங்கங்கள் தாராளமாய்க் கவர்ன்மெண்டிலிருந்து கடன்வாங்கலாம்.

பஞ்சம் என்று ஏற்பட்டபோது அந்த காலத்தில் வசூலாகவேண்டிய கடன்களை வசூலிக்காமல் சங்கங்களின் யுக்தபடி நிறுத்திவைக்கலாம்.

10. சங்கங்கள் தங்கள்மெம்பர்களை இதர இடங்களில் கடன்பெறவிடாமல் அவர்களுக்குவேண்டிய எல்லாக் கடன்களையும் தாங்களே கொடுக்கவேண்டுமென்று அக்கிராசனாதிபதி அவர்கள்சொன்னது நிரம்பவும் உசிதமானபடியால் சங்கங்கள்அவ்வாறு செய்வதுநலம். கடன்பெற்ற ஒரு மெம்பர் சக்தி இன்மையாலோ சங்கத்திற்கு இஷ்டமின்மையாலோ அவன் வாஸ்தவத்தில் சகாயத்திற்குப் பாத்திரனாயிருந்தும் தனக்கு வேண்டியதொகையில் ஒரு பகுதியை சவுகாரிடத்தில் கடன் வாங்கும்படி நேர்ந்தால்

சவுகார் கடூரமான நிபந்தனைகளை அவன்மேல் ஏற்றுவான் என்பது நிச்சயம். பல்லாரி ஜில்லாவில் ஐக்கியநாணயச் சங்கத்தின் ஒரு மெம்பருக்கு இருக்கும் எல்லா முன் கடனையும் அந்தந்த சங்கம் முதலில்கொடுத்து அவனைக் கடன்காரர்களிடமிருந்து விடுவிப்பது வழக்கத்திலிருக்கிறது.

## சில கெடுதிகள்.

சேலம் தாலூக்காவிலிருக்கிற ஐக்கியநாணயச் சங்கங்களை நான் சிலதினங்களுக்கு முன் இன்ஸ்பெக்ஷன் செய்துவந்ததில் எனக்கு தோன்றின இரண்டொரு அம்சங்களை கீழே குறிப்பிடுகிறேன்.

1. கடன் வாங்கினதொகை எவ்வளவாயிருந்தபோதிலும், கடன் வாங்கினகாரியம் எதுவாயிருந்தபோதிலும், வாங்கினகடனைத் திருப்பிக்கொடுக்கக் கொடுத்த தவணை ஏறக்குறைய எல்லாவிடத்திலும் 12 மாதங்களாயிருக்கக் கண்டேன். இந்த விஷயத்தில் யுக்த்தை அநுசரிக்கவேண்டியது அவசியமென்று பஞ்சாயத்தார் மனதில் படும்படி என்னால் கூடியமட்டும் சொன்னேன். நீண்டதவணைக்குக் கொடுக்கப்படும் கடன்கள் பணத்தை சுழலவொட்டாமல் நிறுத்திவிடுகிறது. கடன்கொடுத்த காலம் மறுபடியும் திரும்பிவரும் வரையில் சங்கத்திற்கு "வரவு" ஒன்றும் வருமென்று எதிர்பார்க்கப்படுவதில்லையாகையால் டிஸ்டிரிக்ட் பாங்குக்குக் கொடுக்கவேண்டிய வட்டியை கொடுப்பதற்கு சில சமயங்களில் சங்கங்களுக்குப் பணமிருப்பதில்லை. இம்மாதிரி அசந்தருப்பம் 107 ஓமலூர் சங்கத்திற்கு 106 தொளூர் சங்கத்திற்கும் சம்பவித்தது, மேலும் அப்படிச்செய்வது பாங்கின் வேலைகளை உயிரில்லாதனபோல் அடியோடு நிறுத்தாவிட்டாலும் இடைவிட்டு இடைவிட்டு செய்யும்படி செய்கிறது பல சங்கங்கள் டிஸ்டிரிக்ட் பாங்கில் சில ஆயிரரூபாய்கள் கடன்பெற்று உடனே அவைகள் கடன்கள் ரூபமாக எல்லாக்கடன்களையும் 12மாத தவணைக்கு—பங்கிட்டுவிட்டு அடுத்த சிலமாதங்கள்வரையில் டிஸ்டிரிக்ட் பாங்கில் மறுபடியும் பணம் வருகிறவரையில் எல்லா வேலைகளையும் நிறுத்திவிடுகின்றன. 117 முத்துநாயகன்பட்டி சங்கத்தில் கடந்த 8 மாதகாலத்தில் 3 மீட்டிங்குகள் தான் நடந்தன. அந்த மீட்டிங்குகளும் டிஸ்டிரிக்ட் பாங்கில் பணம் வாங்கும்பொருட்டு தான் கூட்டப்பட்டன. 106 தொளூர் சங்கம் செய்தவேலை மேற்சொன்னதிலும் கீழ்ப்பட்டது. அது ஒருமுறை ரூபா 5,000 கடன் வாங்கிக்கொண்டது. அதன்பின் எல்லாவேலைகளையும் நிறுத்திவிட்டது. நாள்தோறுமில்லாவிட்டாலும் ஒருவாரத்தில் இரண்டு மூன்று நாட்கள் சங்கம்வரவு செலவுசெய்தும், வாரத்துக்கொருமுறையோ பக்ஷத்துக்கொருமுறையோ மீட்டிங்குகள் சேர்ந்தும், உள்ளூர் ஜனங்களின் மிகுதி பணங்கள் எவ்வளவு சிறு தொகைகளாகவிருந்தாலும் அவைகளை சங்கத்தில் கட்டிவைக்கும் மார்க்கமாக அப்போதைக்கப்போது புதுமெம்பர்களை சேர்த்தும் சங்கத்தை உயிருடன் இருப்பதாக காட்டுவது நமது சங்கங்களில் பல உணரவில்லை என்று தோற்றுகிறது. ஆடிட்வேலை முடிந்தபிறகு அசைவற்ற நிலையிலிருக்கும் இந்த சங்கங்களுக்கு போதிக்கும்படி தாங்கள் ஒரு இன்ஸ்பெக்டரை அனுப்ப முடியுமானால் நானும் அவருடன் கூடச்சென்று என்னாலியன்றவரைத்தும் செய்வேன்.



2. பல சங்கங்களில் கடன் பெற்றவர்களிடமிருந்து கடனுக்கு அப்போதப்போது சிறு தொகைகளாக திருப்பிச் செலுத்தும்படி முயற்சி செய்யப்படுகிறது. நான் போகுமிடமெல்லாம், இப்படிச்செய்வதின் அவசியத்தை பஞ்சாயத்தார் உணரும்படி செய்கிறேன். அநேக கிராமங்களில் நான் கடன் பெற்றவர்களைவரவழைத்து அவர்களுக்கு தனித்தனியாகவும் அவர்கள் கூட்டமாய் சேர்ந்திருந்தபோதும் கடனுக்கு பகுதிகளாய் திரும்பிச்செலுத்துவதன் நன்மையைச்சொன்னேன். அம்மாதிரி ரயத்துகள் சுலபமாய்க் கடனை அடைக்கும்வழியை கைக்கொள்ள அவர்களை தூண்டாவிட்டால், அவர்கள் வாங்கினகடனை ஒரே மொத்தமாய்க் கொடுக்கநேரும். கடனில் 4ல் 1 பாகமும் ஏழை விவசாயிகளுக்கு பெருந்தொகைதான். முன் கடன்வாங்கினவர்களுக்குக் கடனைத்திரும்பிச் செலுத்தவேண்டிய தேதியிலேயே மறுபடியும் அந்த கடனை பூர்த்தியாய்க் கொடுக்க—இம்மாதிரிகொடுக்க உடன்படுவது மிகவும் நிந்தனைக்கு இடமான செயல்—பஞ்சாயத்தார் இதற்குடன்படாவிட்டால் கடன்வாங்கினவர்கள் கிராம லேவாதேவிக்காரனிடம் போகவேண்டிவரும் பழையகடனை நிவிர்த்திக்க புதுகடனைப் புஸ்தகங்களில் பதிவதுபோலிச்செயல்போல் இருக்கிறது.

3. இப்போது நடந்துவருகிற இன்னுமொருகெடுதியைச் சொல்லிவிட்டு நிறுத்துகிறேன். அநேக சங்கங்களில் "டெம்பரரி" பிக்சட் டிபாசிட்டுகள் இருக்க கண்டேன். சொல்லளவிலேயே ஒன்றிற்கு ஒன்று முரண். (டெம்பரரி என்றால் அநித்தியமான அல்லது சொற்பகாலத்துக்குரிய என்று அர்த்தம்) இம்மாதிரி டிபாசிட்டுகள் சிலசமயங்களில் நல்லெண்ணத்தோடேயே வைக்கப்படுகிறது. எப்படியிருந்தபோதிலும் இந்த டிபாசிட்டுகள் ஆக்ஷேபிக்கக் கூடியவைகள் தான். அச்சடித்தரிப்போர்ட்டுகளில் படிக்கும்போது படிப்பவனை சங்கம் வெகுநேர்த்தியாய் வேலைசெய்கிறதென்றும் தப்பபிப்பிராயத்தில் கொண்டுவிடுகிறது. அதை ஆய்ந்துபார்க்கும்போது, இந்த சொற்பகால அட்வான்ஸுகள் சங்கத்தின் அக்கிராசனாதிபதியால் அடிக்கடி செய்யப்படுகிறது. அவர் அப்படி டிபாசிட்டு செய்யும்போது அநேகமாய் ஒருமாதத்திற்கு டிபாசிட்செய்கிறார்; அதன் பின் 2½ மாதகாலம் வரையில் சங்கத்தில் அதை இருக்கச்செய்து வட்டிஎடுத்துக் கொள்ளுகிறார். இப்படி நடத்தியதற்கு பஞ்சாயத்தாரின் உத்தரவை இன்ஸ்பெக்டரோ அல்லது வேறு எந்த உயர்ந்த உத்தியோகஸ்தரோ நடவடிக்கை ஈனத்தை எடுத்திய காட்டியபிறகு பஞ்சாயத்தாரிடமிருந்து பெற்றுக்கொள்ளுகிறார். மேற்சொன்ன சொற்பகாலடிபாசிட்டுகள் இன்னுமொரு காரணத்தைக்கொண்டும் ஆக்ஷேபனைக் கிடங்கொடுப்பவை. அநேகமாய் அக்கிராசனாதிபதிகளே சங்கத்தின் பொக்கிஷதாரர்கள். ஒரு சங்கமானேஜரை வாஸ்தவத்தில் இல்லாத ஒரு டிபாசிட்டை வைத்ததாகவும் இன்ஸ்பெக்டர் வரும் சந்தருப்பம் அறிந்து அதைவட்டியுடன் திரும்பி வாங்கிக் கொண்டதாகவும் புஸ்தகத்தில் தாக்கல்செய்து லாபமடையாதிருக்க தடுப்பது எது? இம்மாதிரி செய்யப்படுகிறதென்று நான் நிச்சயமாய்ச் சொல்லவில்லை. ஆனால் அம்மாதிரி செய்யப்படலாமென்று எவர்மனதிலும் உதிக்கலாம்.

# க்ஷேமநிதி கட்டிவைத்தல்.

சங்கத்தின் க்ஷேமநிதிகள் கீழ்கண்ட நிபந்தனைகளுக் குட்பட்டு மதராஸ், சேலம், குழித்தலை இந்த ஸெண்டிரல்பாங்குகளில் கட்டிவைக்கப்படுகின்றன:—

(a) ரிஜிஸ்திராருடைய உத்தரவில்லாமல் க்ஷேமநிதி டிபாசிட்டுகளை பூர்த்தியாகவாவது பாகமாகவாவது திரும்பிவாங்கக் கூடாது. ரிஜிஸ்திரார் திரும்பிவாங்க உத்தரவு கொடுக்கும்போது ஸெண்டிரல் பாங்குகளுக்கு சாதாரணமாய் ஒருவருஷ நோட்டீஸ் கொடுக்கவேண்டும்.

(b) டிபாசிட்டுகளில் அணுவும் பைசாக்களும் கலந்திருக்கலாம்.

(c) டிபாசிட்டுகளுக்கு குறிப்பிட்ட தவணைவரையறை கிடையாது.

(d) ஒருமாதத்தில் 4 தேதியிலிருந்து கடைசிதினம் வரையில் இருந்த தொகைகளுக்கு அதாவது ஒரு மாதத்தின் 5 ல் ஈடுமுன் செலுத்தி அடுத்தமாதம் முதல் தேதிக்குமுன் வாங்காத தொகைகளுக்கு ஐந்து அல்லது ஐந்தை பெருக்கிவரும் தொகைகளுக்கு வருஷம் 1 க்கு 100 க்கு 5 வீதம் வட்டி கொடுக்கப்படும்.

(e) ஒவ்வொரு வருஷமும் செப்டெம்பர்மாதம் 30 ம்தேதி டிஸ்டிரிக்ட் பாங்கு டிபாசிட்டுகளுக்கு வட்டிகணக்கிட்டு அந்த சங்கத்திற்கு இருக்கும் கடைசி இருப்புத்தொகையோடு வட்டியை சேர்த்துவிடும்.

(f) எந்த சங்கமும் டிபாசிட்டுக்குத் தவணை முதிர்ந்த சங்கதியை தெரிவிக்க வேண்டியதில்லை.

(g) ஒவ்வொரு வரவு செலவு நேரும்போதும் ஸெண்டிரல்பாங்கு சம்பந்தப்பட்ட சங்கத்திற்கு நடந்த வரவு செலவின் விவரத்தையும் கடைசியிருப்பையும் கண்டு ஒரு கடிதம் எழுதும். டிபாசிட்டு ரசீது பாரத்தில் ரசீது கொடுக்கப் படமாட்டாது.

2. சங்கங்கள் மேற்சொன்னநிபந்தனைகளைக் கவனமாய்க்குறித்துக் கொள்ளவேண்டும். க்ஷேமநிதியின் வட்டி ஜனரல்பண்டுடன் சேர்க்கப்படுவதால்,



சங்கங்கள் ஸெண்டிரல்பாங்கு வட்டிகொடுத்ததை அறிவித்தவுடனே தங்கள் கணக்குகளில் செலவின்கீழ் "ஸெண்டிரல்பாங்குக்கு க்ஷேமநிதியின் பொருட்டு அநுப்பியது" என்றும் வரவின் கீழ் "வட்டிவரவு" என்றும் எழுதவேண்டும்.

3. க்ஷேமநிதி செலுத்த வேண்டியதென்று ஆடிட் உத்தரவு சங்கங்களுக்குக் கிடைத்தவுடனே சங்கங்கள் உடனே அந்த தொகையை அநுப்பிவிட கடமைப்பட்டிருக்கின்றன. உத்தரவு கிடைத்ததன் பின் வரும் வட்டிகளிலிருந்தும் கடனைத் திருப்பிச் செலுத்திய தொகைகளிலிருந்தும் இப்படி வரும்தொகைகள் உடனே கிடைக்காவிட்டால் டிபாசிட்டுகள் வாங்கியாவது இதரகடன் வாங்கியாவது சங்கங்கள் க்ஷேமநிதித் தொகைகளை அநுப்பிவிடவேண்டும். சாங்கிஷன் செய்த கடன் தொகையிலிருந்து சங்கங்கள் செலுத்தவேண்டிய க்ஷேமநிதி தொகைகளை அந்த சங்கங்களைக் கேளாமலே பிடித்துக் கொள்ளும்படி ஸெண்டிரல் பாங்குகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

4. இந்த புல்லெடின் 1 வது வால்யூம் 1 வது நெம்பரில் குறிப்பு 8 ன் கீழ் பிரசுரித்த நிபந்தனைகள் இனி கட்டப்படும் க்ஷேமநிதிகளுக்கு சம்பந்தப்படாது.

# குறிப்புகள்.

1. எல்லாக்கடிதங்களிலும், சங்கத்தின் பெயரும் ரிஜிஸ்தரான நெம்பரும் கடிதத்தின் நெம்பரும் தேதியும் தலைப்பில் குறிக்கப்படவேண்டும். சங்கத்தின் விதிகளால் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிற நபர்கள் கடிதத்தில் கையெழுத்துசெய்து சங்கத்தின் சீலும் அதில் போடவேண்டும். செலுத்தும் பணத்திற்குக் கொடுக்கப்படும் ரசீது ஒன்றன்பின் ஒன்றாய் வரும் வரிசையை அநுசரித்திருக்கவேண்டும். வரவுசெலவுகள் அதிகமாயிருந்தால் பிக்ஸட் டிபாசிட்டுகளுக்கும் ரிகர்ரிங் டிபாசிட்டு முதலியவைகளுக்கும் தனிப்புத்தகங்களுள்ள ரசீதுகள் கொடுக்கப்படவேண்டும்.

2. ஸெண்டிரல் பாங்குகளில் கடன் கேட்கும்போது, விண்ணப்பத்தோடு கடன் வாங்கவேண்டுமென்று பஞ்சாயத்தார் செய்த தீர்மானத்தின் ஒரு நகலும் அனுப்பப்படவேண்டும். இவைகளுடன் அனுப்பப்படும் கடிதத்தில் கீழ்கண்ட அம்சங்களைக்குறித்தும் தெரிவிக்கவேண்டும்:—

(a) விண்ணப்பத்தேதியில் சங்கத்திலிருக்கும் மெம்பர்களின் மொத்த சங்கியை ;

(b) விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்ட கடனுக்கு முன்வாங்கின கடன் கிரமமாய் உபயோகப்படுத்தப்பட்டதா ? இன்னின்னகாரியங்களுக்கு இவ்வளவிவ்வளவு தொகை கொடுக்கப்பட்டனவென்பதையும் இன்னின்ன ஆதாரங்களின்பேரில் இவ்வளவிவ்வளவு தொகைகொடுக்கப்பட்டனவென்பதையும் காட்டும் ஒரு ஜாபிதாவையும் அனுப்பவேண்டும்.

(c) சங்கத்தின் விதிகள் ஏற்பட்டிருக்கிறபடி அல்லது சங்கம் கடைசியாய்த் தீர்மானித்திருக்கிறபடி சங்கம் வாங்கக்கூடிய கடன்களின் உயர்ந்த அளவு ;

(d) விண்ணப்பத் தேதிவரையில் டிபாசிட்டுகள் வழியாகவும் இதர கடன் வழியாகவும் வாங்கப்பட்டு சங்கத்தின் பேரில் பாக்கியிருக்கிற தொகை ;

(e) வந்திருக்கும் கடன் விண்ணப்பங்கள் எத்தனை ? அவைகளின் மொத்த தொகை எவ்வளவு ? அவைகளில் சாங்க்ஷனான விண்ணப்பங்கள் எத்தனை ? தொகை எவ்வளவு? சாங்க்ஷனை எதிர்பார்த்து சாங்க்ஷனாகக்கூடிய விண்ணப்பங்கள் எத்தனை ? தொகை எவ்வளவு ?

(f) சங்கத்திலும் போஸ்டாபிசிலும் இருக்கும் கையிருப்புத்தொகை எவ்வளவு ?

(g) ஏற்கனவே சங்கத்தில் கடன்வாங்கியிருக்கும் மெம்பர்கள் எத்தனை பெயர் ? இப்போது முதல்கடனாக வாங்க விரும்பும் மெம்பர்கள் எத்தனை பெயர் ?

மேற்சொல்லிய அம்சங்களைக்குறித்துப் போதுமானபடி தெரிவித்தால், ரிஜிஸ்திரார் அவர்கள் ஆபிசில் கடன் விண்ணப்பங்களை சீக்கிரமாய்ப் பைசல் செய்யக்கூடும். சேலம் டிஸ்டிரிக்ட்பாங்கு அதைக் கடன் கேட்கும்போது உபயோகப்படுத்தவேண்டிய பாரத்தை இப்படி என்று காட்டியிருக்கிறது. சேலம் ஜில்லாவிலிருக்கிற சங்கங்கள் அந்தபாங்கில் கடன்கேட்கும்போது அந்தபாரத்தைத்தான் உபயோகப்படுத்தவேண்டும்.

3. இந்தபுல்லெடினின் முதற்சஞ்சிகையில் செங்கற்பட்டு கூட்டுறவின்சங்கத்தின் அமைப்பையும் அதன்வேலையையும்பற்றி ஒரு விஸ்தாரமான நோட்டீஸ் வெளியாயிற்று. அந்த சங்கம் 1908-09வருஷத்திய வருஷாந்திர ரிப்போர்ட்டை வெளியிட்டிருக்கிறது. உபயோகசாமானவேலை அதிகமாய்ச் செய்யப்பட்டிருப்பதாக ரிப்போர்ட்டில் தெரிகிறது. அச்சிட்ட அந்த ரிப்போ-



ர்ட்டின் காபிகள் கீழச்சேரியிலிருக்கும் அதன் காரியதரிசியிடம் கிடைக்கும்; அதில் இதுவரையில் சேர்ந்திருக்கும் மெம்பர்கள் கொஞ்சம் பெயர்தான். சங்கம் செய்யும்வேலை நன்றாய் அறியப்பட்டவுடனே அந்த மெம்பர்களின் சங்கியை மிக்க உயரும் என்று நம்பப்படுகிறது. அதன் சந்தா பளுவான தொகையல்ல. வருஷம் 1-க்கு ரூபாய் ஒன்றுதான். மதுராந்தகம் தாலூக்கா கூட்டுறவினர் சங்கம் என்னும் பெயரால் ஒரு கிளைச்சங்கமும் ஸ்தாபனமாயிருக்கிறது. அதன் பிரதானஸ்தலம் உத்தரமல்லூர். அதன் அமைப்பு, நோக்கம், வேலைசெய்யும் முறையெல்லாம் தாய்ச்சங்கத்தைப் போன்றதே. அதன் வருஷசந்தா அணா நான்கு.

4. நெல்லூர் ஜில்லாவிலிருக்கும் 24 நெ. கூடூர் சங்கம் 17-ஏ என்னப்படும் ஒரு புது விதியை உண்டாக்கியிருக்கிறது. அதன்படி கிஸ்துகாலத்தில் ரூபா 50-க்கு மேற்படாத கடன்களை அக்கிராசனாதிபதியும் காரியதரிசியும் சாங்க்ஷன்செய்து பட்டுவாடா செய்யலாம். ஆனால் அப்படிக்கொடுக்கப்படும் கடன்களையெல்லாம் பஞ்சாயத்தார் அடுத்துக்கூடும் மீட்டிங்கில் சாங்க்ஷன் செய்யவும் மறுக்கவும் கூடும்.

5. தஞ்சாவூர் ஜில்லாவிலிருக்கும் 7 நெ. நீடாமங்கலம் விவசாய பாங்கின் அக்கிராசனாதிபதி 1907-08வருஷத்திய வேலையை அடியிற்கண்டபடி சுருக்கி யெழுதுகிறார்:—

"இவ்வருஷவேலையில் திருப்திகரமான அம்சம் என்னவென்றால் கொடுத்தகடனை வசூலிக்க கோர்ட்டில் ஒரு கேசும் தாக்கல் செய்யப்படவில்லை. ஜனங்கள் மனதில் முக்கியமாய் டிபாசிட்டர்கள் மனதில், பாங்கு நம்பிக்கை உண்டாக்கியிருக்கிறது. சென்ற மூன்றுவருஷங்களாய் இங்கே இந்த பாங்குநிலைத்து இங்கே வழக்கத்திலிருக்கிற கடுவட்டி நிபந்தனைகள் சிலவற்றிற்கு ஹானியை உண்டுபண்ணியிருக்கிறது. வாங்கப்படும் வட்டிவீதம் குறைக்கப்பட்டால், குறைந்தது கடன் வேண்டியவனுக்கு நினைத்தபோது வாங்கவும் நினைத்தபோது கட்டவும் சௌகரியமான தொடர்ச்சிக் கணக்கு ஏற்பாடுசெய்துகொடுத்தால், ஜனங்கள் பாங்கை இன்னும் மிகுதியாய் ஆதரிப்பார்களென்று நான் அபிப்பிராயப்படுகிறேன்".

6. திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலுள்ள 30 நெ. லாலுகுடி சங்கத்திற்கு சிலவேலைகளில் வருஷம் 1-க்கு 100-க்கு 6-க்கும் குறைந்த வட்டிக்கு டிபாசிட்டு கிடைக்கிறது என்றுசொல்ல ரிஜிஸ்திரார் அவர்களுக்கு மிகச்சந்தோஷமாகிறது. சங்கத்தின் விதிகள் ஆரம்பத்தில் அந்தவட்டி 100-க்கு 5 ஆக இருக்கவேண்டுமென்று விதித்தன. அதனினும் குறைந்தவட்டிக்கு சங்கம் பணம் சம்பாதிக்கும் நிலைமையிலிருப்பதால், குறைந்த வட்டிக்குப் பணம் பெறுதல் சாத்தியமாகும்படி விதிகள் திருத்தப்பட்டன.

7. 3 நெ. காஞ்சீபுரம் டவுன் பாங்கு, 1907-08ஷு வருஷத்தியதன் வேலையைக்குறித்து அடியிற்கண்டபடி சுருக்கி எழுதுகிறது:—

"எல்லாவழிகளிலும் பாங்கு நிலையாய் விர்த்தியடைந்திருக்கிறது.

1. 87 மெம்பர்கள் அதிகமானார்கள்.

2. பங்குத்தொகை ரூ. 6385 லிருந்து ரூ. 7,177 க்கு உயர்ந்தது.

3. உள்ளூர் ஜனங்களுக்கு பாங்கில் நம்பிக்கை உண்டாய் அதனால் குறைந்தவட்டிக்கு பாங்கு கடன் வாங்குதல் சாத்தியமாயிற்று.

4. பாங்கு கொடுக்கும் கடன் வரவு செலவு மிகவும் அதிகப்பட்டது.

5. சிறு கடன்கள் அதிகப்பட்டன, இதனால் பாங்கு ஏழைக்கு நேசமாயிருக்கிறதென்பது வெளிப்படை.

6. முன்வருஷத்தில் 15 மாதத்திற்கு கிடைத்த லாபம் ரூ. 1,300—4—1 க்கு மாறாய், இவ்வருஷத்திய 12 மாதத்தில் ரூ. 1314-6-11 லாபம் கிடைத்தது.

7. மெம்பர்கள் தங்கள் கடனை திரும்பிச்செலுத்துவதில் கிரமமாய் இருந்தார்கள். அதுபற்றி கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட பாங்கின் வக்கீலிடம் கொடுக்கப்பட்டிருக்கிற முடிவுகட்டிய இரண்டு கடன் கணக்குகளும் நடவடிக்கை நடத்தவேண்டிய இரண்டும் டிக்கிரிகளும் தான் பாக்கியிருந்தன.

8. நிர்வாகசபை மீட்டிங்குகள் ஒழுங்காய் நடந்தேறின; முன்வருஷத்தில் வேலை நடத்தாமல் கலைந்த 16 மீட்டிங்குகளுக்குப்பதில் இவ்வருஷத்தில் 4 மீட்டிங்குகள் தான் அம்மாதிரி கலைந்தன.

9. க்ஷேமநிதி ரூ. 782—15—9 க்கு உயர்ந்தது."

8. 1907—08 வருஷத்திய வருஷாந்திர ரிப்போர்ட்டின் 6 வது பாராவில் 3 நெ. காஞ்சீபுரம்டவுன் பாங்கு உள்ளூர் கடன்களைப்பற்றிக் கீழ்கண்டபடி சொல்லுகிறது:—

"உள்ளூரில் வாங்கும் இதர கடன்களால் கிடைக்கும் நன்மை யென்னவென்றால் (1) ஸெட்டிரல்பாங்கு கடனுக்கு கேட்கப்படும் வட்டியைப்பார்க்கிலும் குறைந்த வட்டிக்கு கிடைக்கிறது (2) ஸென்டிரல்பாங்கு கடன் வாங்கப்படும்போதும் அது வாபசுசெய்யப்படும் போதும் நேருகிற செலவு இவைகளில் இல்லை. (3) ஸென்டிரல்பாங்கில் செய்யப்படுவதுபோல் ஒரு மாதத்திற்கு குறைந்த பின்னத்தை ஒரு முழுமாதமாக இவைகளில் பாவிக்கப்படுவதில்லை (4) இவைகளுக்கு எழுதிக் கொடுக்கப்படும் பத்திரங்கள் ரிஜிஸ்தர் செய்யப்பட வேண்டுமென்று கட்டாயப் படுத்தப்படுவதில்லை. ஆனால் இவைகளுக்குமாறாக ஸென்டிரல்பாங்கு சில நன்மைகளைக் கொடுக்கிறது. அவைகள் உள்ளூர் கடன்களால் கிடைக்கமாட்டா! அவைகளாவன:—

(1) கடன் சிறுதொகைகளாகச் செலுத்தப்படலாம்,



(2) மிகு அவசரம் நேர்ந்தபோது கடன்கள் தீவிரமாய் பட்டாடா செய்யப்படுகின்றன.

(3) வட்டி வீதம் சமயத்துக்குத் தகுந்தபடி மாற்றப்படுவதில்லை.

உள்ளூரில் கடன் வாங்குவதால் உண்டாகும் முக்கியநன்மை யென்னவென்றால், கொடுப்பவன் பாங்கின் சமீபத்தில் வசிக்கிறான். அதுபற்றி அதன் நடவடிக்கைகளைக் கவனிக்கக்கூடும். அவைகளில் ஏதாவது தவறுதல் இருப்பதாக கண்டாலும் அல்லது அநுமானித்தாலும் தனதுசொந்த நன்மையைக் கருதி நிர்வாகக் கர்த்தர்களிடம் தனக்கிருக்கும் செல்வாக்கை செலுத்தி சரிப்படுத்தவாவது ரிஜிஸ்திராருக்கு தெரிவிக்கவாவது செய்வான்.

9. 1907—08 வருஷத்திய 3 நெ. காஞ்சீபுரம் டவுன் பாங்கின் கணக்குகளைக்குறித்த தனது ஆடிட் ரிபோர்ட்டில் இன்ஸ்பெக்டர் அடியில் வருமாறு சொல்லுகிறார்:—

"தவணைகடந்த கடன்களை வசூலிப்பதில் பாங்கு, முன் வருஷத்தைப் போலவே, பிரஸ்தாப வருஷ ஆரம்பத்திலும் எவ்வளவும் கண்டிப்பாயில்லை. ஆனால் ரிஜிஸ்திரார்செய்த கண்டிப்பான உத்தரவின் பலனாய், வருஷத்தின் பின்பாகத்தில் வசூலிப்பதில் மிகவும் கவனம் செலுத்தப்பட்டது. அதனால் இன்றைக்கு, ஏற்கனவே சொன்னதுபோல், தவணை தவறியவர்கள் அதிகமாயில்லை. தவணை தவறிய கடன்களை ஜரூராய் முடிவுகட்டித் தாமதம் செய்யாமல் கோர்ட்டுக்குப்போனால் பாங்கை ஜனங்கள் ஆதரிக்க மாட்டார்களென்று ஒரு சமயம் நிர்வாகசபை மெம்பர்களுள் சிலர் நினைத்தார்கள். அவர்கள் இப்போது தங்கள் சொந்த வருஷாந்தர ரிப்போர்ட்டைக் கொண்டே ஒரு வருஷத்திற்குமுன் பாங்கு இருந்த நிலையைவிட இன்றைக்கு ஜனங்கள் பாங்கின் உதவியை மிக நாடியிருக்கிறார்களென்று அறிந்து கொள்ளக்கூடும்.

நாம் ஒரு ஸ்திரமானவழியை பின் பற்றுவதற்கு வழிகாட்டியாய் மேற்சொன்ன உதாரணத்தை நாம் அநுபவித்து கண்டறிந்தபின், வரவேண்டிய கடனை வசூலிப்பதில் கண்டிப்பாயிருக்க சங்கங்கள் எவ்வளவும் பின்வாங்க மாட்டாவென்றும் அப்படிக் கண்டிப்பாய் வசூல்செய்து அதனால் இன்ஸ்பெக்டர் அறிந்தபடி ஜனங்கள் சங்கங்களை மிகவும் நாட இடங்கொடுக்கப்படுமென்றும் நாம் நம்புகிறோம். ஆனால் கண்டிப்பாய் வசூல் செய்வதின்றுன யுக்தா யுக்தத்தை அநுசரித்து, தவணையை நீட்டுதல்செய்ய அவசியமானால் அதைச்செய்யவேண்டும். ஒரு சங்கத்தின் கண்ணியத்தை போக்கடிப்பது என்னவென்றால், எல்லோரிடத்தும் ஒரே ரீதியாய் கண்டிப்பாயிராமல் அடிக்கொரு நினைவாய் சிலரிடத்துக் கண்டிப்பும் சிலரிடத்து அதில்லாமையும் செய்யும் பக்ஷபாதமேயாம்.

10. குடகு தேசத்து வருஷாந்தர ரிப்போர்ட்டில் வாங்கப்படும் வட்டி வீதமென்று காட்டப்பட்டிருக்கிற அடியில் கண்ட உதாரணத்தைக் கொண்டு, ஐக்கியநாணயச் சங்கங்கள் சித்தியோடு வேலைசெய்வதற்குத் தக்க இடமிருக்கிறதென்று சொல்லலாம்.

(a) நெல்மாசூல்—3 பட்டி நெல்லின் சாதாரண விலை ரூ. 4. ஜனவரிமாதத்தில் ஒரு பட்டி ரூ. 2-4-0 லிருந்து ரூ. 2-8-0 வரையில் விற்கிறது. ஒரு பட்டியின் விலை ரூ. 2-.-0 ஆக எடுத்துக் கொண்டால், ரூ. 4 க்கு பதிலாக ரூ. 7-2-0 நமக்கு வரும். அதாவது 100 க்கு 78¼ லாபம் கிடைக்கிறது. வயல்கள் பயிர் முற்றுதிருக்குங் காலமாகிய அக்டோபர் மாதத்தில் சாதாரணமாய் குடியானவர்களுக்கு பணம் கடன் கொடுக்கப்படுகிறது. அந்தக் கடன்கள் அடுத்த ஜனவரி மாதத்தில் தானியத்திற்கு வரும் விலை மிகக் குறைந்திருக்கும்போது வாப்சு செய்யப்பட வேண்டுமென்றும் நிபந்தனையின் பேரில் கொடுக்கப்படுகின்றன. ஆகவே நான்கு மாதத்திற்கு கிடைக்கும் வட்டி 100 க்கு 78¼ ஆகிறது. அதாவது வருஷம் 1 க்கு 100 க்கு 234¾ இவ்விதமாய் குடியானவன் மிகவும் நஷ்டப்படுகிறான் என்பது வெளிப்படை. மாசூல் அறுவடையான வுடனே தனது தானியத்தை கொடுத்துவிட வேண்டுமென்றும் உடன் படிக்கையினால் அவன் கட்டுப் பட்டில்லாவிட்டால், ஜனவரிமாதத்திற்கு பிறகு ஒரு பட்டிக்கு ரூ. 3 முதல் ரூ. 3-8-0 வரையில் அவன் பெறக் கூடும். இவ்விதமாக முன் சொன்ன நஷ்டத்தையல்லாமல் இந்த நஷ்டத்தையும் அதிகமாக அடைகிறான்.

(b) நல்ல ஆதாரவின்பேரில் பெருந்தொகைகள் செப்டெம்பர் மாதத்தில் கொடுக்கப்படுகின்றன. அந்த கடன்கள் ரூ. 25 க்கு 15 பட்டிகள் வீதம் அடுத்த ஜனவரிமாதத்தில் திரும்பிக் கொடுபடவேண்டும். ஜனவரிமாதத்தில் ஊர்விலை 36 ரூ. க்கு 15 பட்டியாதலால், குடியானவன் 4 மாதத்திற்காக ரூ. 25 க்கு ரூ. 11 அல்லது 100 க்கு (4×11) 44 அல்லது வரு1-க்கு 100 க்கு (3×44) 132 நஷ்டப்படுகிறான். மாசூல் பலன் குறைந்துபோய் அதனால் கடனை அந்தவருஷமே தீர்க்க முடியாவிட்டால், அடுத்த வருஷத்தில் பாக்கிநின்ற ரூ. 1க்கு ஒருபட்டி வீதம் அதிகம் தானியம் சேர்த்துக் கொடுக்க வேண்டும்.

சென்னை ராஜதானியில் மேற்காட்டிய உதாரணங்கள் போல் காட்ட இல்லாமற்போகவில்லை. தென்கன்னட ஜில்லாவில் நெல் மாசூலும் கடப்பை கர்நூல் பல்லாரி ஜில்லாக்களில் பருத்திமாசூலும் நல்ல உதாரணங்களாகும்.



11. பங்குத்தொகையுடன் வேலைசெய்கிற நாட்டுச் சங்கங்களின் மெம்பர்கள் அவர்கள் பங்குத்தொகையாகச் செலுத்தியிருக்கும் பணத்திற்கு ஏதாவது ஒரு வீத வருமானம் இருக்கவேண்டுமென்று பலமாய் நினைக்கிறார்கள். சங்கத்தின் விதிகள் எவ்வளவு பங்குகள் எடுத்துக் கொள்ளலாமென்று விதிக்கின்றனவோ அவ்வளவு பங்குகளையும் ஒரு மெம்பர் சாதாரணமாய் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அப்படிச்செய்தால்தான் சங்கம் எவ்வளவு உயர்ந்ததொகை ஒரு மெம்பருக்கு கடன் கொடுக்ககூடுமோ அந்த தொகையை அவர் கடன்பெறலாம்; இப்படி அவர் கொடுக்கும் பங்குத் தொகை சில சமயத்தில் மிகப்பெரியதொகையாயிருக்கும். கடன் வாங்காத மெம்பர் செலுத்தியிருக்கும் பங்குத்தொகைக்கு அவருக்கு ஒருவிதலாபமுமில்லை. ஆக்டின்படி பங்குத்தொகைக்கு லாபத்தில் பங்கீடுசெய்து கொடுப்பதற்கில்லை. மேலும கூட்டுறவின் சரியான கோட்பாடுகளின்படி அப்படிக் கொடுக்கவும் கூடாது. அப்படிக்கொடுத்தால் இந்தபங்கீடு லாபத்திற்காகவே கடன்பேரில் வாங்கப்படும் வட்டி வீதத்தை குறைக்க பங்குக்காரர்கள் உடன்படார்கள். மெம்பர்களுக்கு அவர்களுக்கிருக்கும் பங்கு 1க்கு ஒரு சிறிய தொகை வெகுமானமாகக் கொடுக்க ஆக்ஷேபனையில்லை. அப்படிக் கொடுக்கப்படும் சங்கத்தின் விதிகளால் இவ்வளவென்று கண்டிப்பாய் நிர்ணயிக்கப்படவேண்டும். அந்தத்தொகை கொடுத்த தொகையின்பேரில் 100க்கு 6 முதல் 7½ வரையில் ஏற்படக்கூடிய வட்டியாயிருக்கலாம். ஒரு காலண்டர் வருஷத்தின் ஜூலைமீ 1உ யிலிருந்து அடுத்த வரு ஜூன்மீ 30உ வரையில் ஒரு பங்குக்காரன்பேரில் விடாமலிருந்த ரூ. 5கொண்ட ஒவ்வொரு பங்குக்கும் அணா ஆறு வீதம் கொடுக்க தஞ்சாவூர் ஜில்லாவிலிருக்கிற 7 நெ. நீடாமங்கலம் சங்கம் தனது விதிகளைத் திருத்திக்கொண்டிருக்கிறது. அப்படிக் கொடுக்கப்படும் தொகைவருஷம் 1க்கு 100 க்கு 7½ வீதம் வட்டியாகிறது. சேலம் ஜில்லாவிலிருக்கிற 20 நெ வேலூர் சங்கமும் செங்கற்பட்டு ஜில்லாவிலிருக்கிற 41நெ உத்தரமல்லூர் சங்கமும் மேற்சொன்ன வெகுமானவழியைப் பின்பற்றியிருக்கின்றன.

12. சடங்குகளின் நிமித்தம் கேட்கப்படும் கடன் விண்ணப்பங்களை ஐக்கிய நாணயச்சங்கங்கள் பைசல்செய்யும் விஷயத்தில் அவைகள் நடந்துக் கொள்ளவேண்டிய மாதிரி பம்பாய் ராஜதானியின் ரிஜிஸ்திரார் அடியில்வருகிறபடி சுருக்கி எழுதுகிறார்:—“ ஒரு சங்கத்தில் ரூபா 200 வரையில் கல்யாணத்திற்குக் கடன்கொடுக்கலாமென்று இருக்க, மற்றொன்றில் கல்யாணத்திற்குக் கடன் அடியோடே கொடுக்கக்கூடாதென்று இருக்கக் கண்டேன். என்னளவில், இரண்டிற்கும் மத்தியவழியை அநுசரிப்பது நலமென்று நினைக்கிறேன். அதாவது சடங்குசெய்ய நிர்ப்பந்தப் பட்டிருக்கிறவர்களுக்கு அடியோடே இல்லையென்றுமறுத்து சாவகாசிடத்தில் போகும்படி செய்யாமல் அப்படி நிர்ப்பந்தத்திலிருப்பவர்களுக்குச் சாத்தியமானவரையில் குறை

ந்த தொகைகள் கொடுத்துச் சடங்குகளில் குறைத்துச் செய்யும்படி தூண்டி அதற்கு ஒவ்வும்படி பொதுஜன அபிப்பிராயத்தை மாற்றுதல் செய்யவேண்டும்.

எந்தக் காரியங்களுக்காக கடன்கள் வாங்கப்பட்டனவோ அவைகளை முக்கியமாய் அநுசரித்து கடன்கள் திருப்பிக்கொடுபடவேண்டிய தவணைகளை நிர்ணயிப்பதில் பஞ்சாயத்தார் அநுசரிக்கவேண்டிய கோட்பாடுகளை 1907-08வருஷத்திய யுனைடெட்பிராவின்ஸெஸ் ரிப்போர்ட்டிலிருந்து எடுத்த அடியில்எழுதிய வாக்கியங்களில் தெளிவுபெறக்காணலாம் :—

13. "தவணை தவறாது கடன்கள் திரும்பிவருவதற்கு கொடுக்கப்படும் ஒவ்வொரு கடன் இன்னகாரியத்துக்கென்று நன்றாய் வரையறுத்து கொடுக்கப்படவேண்டும் என்றும் அதன்பின் அது அக்காரியத்துக்கு உபயோகப்படுத்தப்பட்டதாவென்று பார்க்கவேண்டுமென்றும் கிராமச்சங்கங்களின் பஞ்சாயத்தார்களுக்கு அடிக்கடி மனதில் பதியும்படி சொல்லப்பட்டிருக்கிறது. இந்த முக்கியமானசங்கதிக்கு மிகுந்த கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. விவசாயச்செலவின் நிமித்தம் வாங்கப்படும் கடன்கள் விவசாயகாலம் ஆரம்பத்தில் கொடுக்கப்பட்டு அந்தகாலம்முடிவில் திருப்பிக் கொடுபடவேண்டியிருந்ததுபோய் இப்போது வேண்டியபோது ஒவ்வொருபயிருக்காகவும் கடன் கொடுக்கப்பட்டு அந்த பயிர் அறுவடையானவுடனே அந்தக்கடன் திரும்பிவாங்கிக்கொள்ளப்படுகிறது. ஜூலைமுதல் செப்டெம்பர் மாதவரையில் களைபிடுங்குதற்காகக் கொடுக்கப்படும் கடன் நவம்பர்மாதத்திலும், அக்டோபர்மாதத்தில் கேழ்வரகு விதைக்கக்கொடுக்கும் கடன் அடுத்த ஏப்ரல்மாதத்திலும், மார்ச்சுமுதல் ஜூன்வரையில் கரும்புநடுவதற்கும் களைஎடுப்பதற்கும் ஜலம் பாய்ச்சுவதற்கும் கொடுக்கும் கடன் ஜனவரி பெப்ருவரிமாதங்களில் வெல்லம் விற்கும்போதும் திருப்பிக்கொடுபடவேண்டியன.

ஏறக்குறைய எல்லாப் பழையசங்கங்களிலும் மெம்பர்களுக்கு சாவுகார்களிடம் இருக்கும் கடன்களைப்பற்றி அறிய விசாரணைநடந்தும் இன்னும் நடத்தப்பட்டும் வருகின்றன. அவைகளைத் தீர்த்துவிடுவதற்கு முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. இப்படி முன்கடனை தீர்ப்பதற்காகக் கொடுக்கப்படும் கடன்கள் இரண்டு, மூன்று, நான்கு அல்லது ஐந்து வருஷத்தில் தவணைத் தொகைகளாகத் திருப்பிச்செலுத்தப் படவேண்டும். புதுச்சங்கங்களில் பழையகடன்களைத் தீர்த்துவிடவேண்டியது சங்கத்தை ரிஜிஸ்தர்செய்வதற்கு அவசியமான ஒரு முன் நிபந்தனையாய் அநுசரிக்கப்படுகிறது. ஆடு [illegible] வாங்குகிறதற்குக் கொடுக்கப்படும் கடன்கள் சாதாரணமாய் நான்கு [illegible] தவணையில் திருப்பிச் செலுத்தப்படவேண்டும். [illegible] [illegible]திற்கும் மற்றும் குடும்ப சடங்குகளுக்கும் கடன் கொடுக்கப்படு[illegible]கிறன.



பிரதிப்பிரயோசனமுள்ள காரியங்களுக்கும் அப்பிரயோசனமில்லாத காரியங்களுக்கும் கடன் கொடுக்க அநேக சங்கங்களின் முதல் இன்னும் போதுமானதல்ல. ஆனால் முன்னதற்குதான் விசேஷமாய்க் கொடுக்கப்படுகிறது. கடன்வாங்குபவனுடைய நியாயமான எல்லாச் செலவுகளுக்கும் உதவப்பணம் இருக்கவேண்டுமென்றும் அவன் சங்கத்தினிடத்திலேயே தனது லேவாதேவியை நிறுத்திக்கொள்ளவேண்டுமென்றும் ஒரு கோட்பாட்டை அநுசரிக்கமுயற்சி செய்யப்படுகிறது".

---

## இன்ஸ்பெக்டர்களுக்கு

---

கிராமசங்கங்களுக்காக கொடுக்கப்பட்ட விண்ணப்பங்களைக் குறித்து விசாரிக்கையில் அடியிற்கண்ட அம்சங்களை கவனித்து விசாரணை செய்து ரிப்போர்ட் செய்யவேண்டும்:—

1. விண்ணப்பத்தில் கையெழுத்து செய்தவர்களும் கிராமத்தார்களில் வரக்கூடிய மற்றவர்கள் எவ்வளவு பெயர் உண்டோ அவ்வளவு பெயர்களும் சேர்ந்த ஒரு மீட்டிங்கு முதலில் கூட்டப்படவேண்டும். அந்த மீட்டிங்கு ஒரு பொது இடத்தில் கூடவேண்டும். அதாவது ஒரு மரத்தின் கீழாவது ஒரு சத்திரத்தின் தாழ்வாரத்திலாவது கூடவேண்டும். எந்த சந்தர்ப்பத்திலும் வெளியாருக்கு பிரவேசிக்க சாத்தியமில்லாத உள் கட்டடங்களில் கதவை யடைத்து மீட்டிங்கு சேரலாகாது. விவசாயிகள் அந்த மீட்டிங்குகளுக்கு வர சௌகரியமானபடி மீட்டிங்கு கூடும் நேரம் அமைக்கவேண்டும். சாதாரணமாக காலை வேளை தகுந்ததாயிராது. இராக்காலங்கள் விசேஷமாய் சௌகரியத்துக்கு உகந்ததாக விருக்கும்.

2. ஐக்கிய நாணய விர்த்தியில் கவர்ன்மெண்டார் கொண்டிருக்கும் நல்லெண்ணங்களையும் கூட்டுறவின் கோட்பாடுகளையும் விவரமாய் எடுத்துச்சொல்லவேண்டும். இன்ஸ்பெக்டர்களுக்கு தாங்கள் எடுத்துச் சொல்வதற்கு வேண்டிய விஷயங்கள் மூன்று மாதத்துக்கொருமுறை வெளிவரும் இந்த பத்திரிகையில் யதேஷ்டமாய் கிடைக்கும். ஆனால் அவ்விஷயங்களை அதிலிருந்து அப்படியே எடுத்துப் படிக்கக்கூடாது. மீட்டிங்கில் கூடியிருக்கும் ஜனங்களை விளங்காத விஷயங்களைக் குறித்து கேள்விகள் கேட்கும்படி தூண்டி அவைகளுக்கு சாவதானமாய்ப் பொறுமையுடன் பதில் தெரிவிக்கவேண்டும்.

3. வரையறுக்கப்படாத பொறுப்பின் கோட்பாட்டை கூடியிருப்பவர்கள் மனதில் நன்றாய் உறுத்தும்படி அவ்வளவு விவரமாய்ச்சொல்லவேண்டும். சங்கம் ஒழுங்கு தவறி வேலை செய்யுமானால் அந்த பொறுப்பின் பயங்கரமான பலன் இன்னதென்று அவர்கள்நன்றாய் அறியச்சொல்லவேண்டும். ஒருசங்கத்தின் ஒவ்வொரு மெம்பரும் தன்னையொத்த இதர மெம்பர்கள் செய்யும் வேலையை கண்ணோக்கமாய்க் கவனித்துவருவது அவரது வேலையென்றும் அதை அவர்கட்டாயம் செய்துவரவேண்டு[illegible]

சொல்லவேண்டும். இந்தப்பொறுப்பை ஏற்றுக்கொள்ள கிராமத்தார்கள் முன்பின் யோசித்து மயங்குகிறார்களா வென்று இன்ஸ்பெக்டர் கவனிக்கவேண்டும். அப்படி அவர்கள் செய்தால் ஐக்கிய நாணயச்சங்கத்துக்கு அந்த கிராமம் தகுந்ததல்ல. நஷ்டம் வராதபடி தடுக்க அந்த சங்கத்தில் ஏற்பட்டிருக்கும் பந்தோபஸ்துகள் இன்னதென இன்ஸ்பெக்டர் விளக்கவேண்டும். அவை:—

(a) சங்கத்தின் வியவகார எல்லை மிகச்சிறியதாயிருப்பது;

(b) அந்த எல்லைக்குள்ளிருக்கும் மெம்பர்களின் விஷயம் ஒவ்வொன்றும் யாவரும் நன்றாய் அறிந்திருப்பது;

(c) மெம்பர்களைச் சேர்த்துக்கொள்ளும் விஷயத்திலும் அவர்களுக்கு கடன் கொடுக்கும் விஷயத்திலும் சங்கம் யுக்தத்தை அநுசரித்து நடப்பது. அப்படி நடந்தபின் அந்த யுக்தத்துக்கு முன் கடன்கோரும் மெம்பர் செல்வாக்கு செல்லாமை;

(d) வாங்குகிற கடன் எந்த காரியத்துக்கென்று கடன் கேட்பவன் சொல்ல கட்டுப்பட்டிருப்பது;

(e) துர்விநியோகப்படுத்தினால் கொடுத்த கடனை உடனே வசூலிக்க அதிகாரம்;

(f) கடன்கள் குறுகின தவணைகளுக்குக் கொடுக்கப்படுவது. ஆனால் கடன் வாங்கினவன் நல் நடத்தை யுள்ளவனாயிருந்து வந்தால் அந்த தவணை நீட்டிக்க அதிகாரமிருப்பது.

(g) கவர்ன்மெண்டார் இனமாய்க் கணக்குகளை சோதனை செய்வது.

இவைகளைக் குறித்து எடுத்துச் சொன்னபிறகு ஜனங்கள் வரையறுக்கப்படாத பொறுப்பின் அபாயகரத்தைப் பூர்த்தியாய் அறிந்து கொண்டார்களா வென்றும் சங்கத்தின் வேலையில் அவர்கள் ஜாக்கிரதையாயிருந்தால் நஷ்டம் வராமல் பார்த்துக்கொள்ளக்கூடும் என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டார்களா வென்றும் இன்ஸ்பெக்டர் கவனிக்கவேண்டும்.

4. இன்ஸ்பெக்டர் பிறகு பின்பற்றக் கூடிய சங்கத்தின் ஒருவிதிகளை படித்து அவைகளுக்கு விவரமாய் அருத்தம் சொல்லி அந்த ஊர் சந்தர்ப்பத்துக்கு ஒத்ததுபோல் அவைகளில் மாறுதல் அவசியமாவென்று அறிந்துகொள்ளவேண்டும். சாதாரணமாய் ஒரு சங்கத்தின் வியவகார எல்லை ஒரு ரிவின்யூ கிராமத்திலேயே அடங்கியிருக்கவேண்டும். ஒரு கிராமத்திற்கு மேலே அந்த எல்லை அதிகப்படுத்த வேண்டுமென்று பிரேரேபிக்கப்பட்டால் கிராமங்கள் இருக்கும் தூரத்தையும் கிராமத்தார்களுக்குள் தினந்தோறும் போக்கு வரவு உண்டாவென்பதையும் ஒவ்வொரு கிராமத்திற்கும் தனித்தனி ஒரு சங்கம் வைக்க முடியாதா என்பதையும் பற்றித் தெரிவிக்கவேண்டும். சங்கத்தின் மேல் விலாசம் முதல் விதியில் எழுதப்படவேண்டும். பங்குத்தொகை எவ்வளவு சிறிய தொகையாக வைத்தல் சாத்தியமோ அவ்வளவு சிறிய தொகையாக அமைக்கவேண்டும். சாதாரணமாய் அது ரூ 1 அல்லது 2க்கு அதிகப்படவேண்டாம். பணக்காரர்கள் வசிக்கும் கிராமத்தில் பஞ்சாயத்தாருக்கு நிர்வகிப்பு விஷயத்தில் அனுபவம் வராததற்கு முன்னமே ஆரம்பத்திலேயே அதிக மெம்பர்கள் சேர்ந்து விடுவார்கள் என்ற பயமிருந்தால் மேற்சொன்ன பங்குத் தொகையை விட அதிகமாக ஏற்பாடு செய்யலாம். முதல் வருஷத்தில் அதிகமாய்ச் செலவாகிற கண்டின்ஜென்ட் செலவை செய்வதற்கு பங்கு 1-க்கு நாலணா அல்லது எட்டணா பிரவேச கட்டணம் ஏற்படுத்தவேண்டும். பிரவேச கட்ட



ணம் சங்கத்திற்கு லாபமாகிற வருவாய் என்றும் பங்குத்தொகை சங்கம் திருப்பிக்கொடுக்கவேண்டிய கடன் என்றும் விவரமாய்ச் சொல்லவேண்டும். ஒரு மெம்பர் எடுத்துக்கொள்ளக்கூடிய எல்லா பங்குகளையும் எடுத்துக்கொண்டால் சங்கம் அவனுக்குக் கொடுக்கக் கூடிய உயர்ந்த கடன் தொகை அவனுக்குக் கிடைக்கும்படி ஒரு மெம்பர் எடுத்துக்கொள்ளக் கூடிய மொத்த பங்குகளை நிர்ணயிக்கவேண்டும். சாதாரண நிலையிலிருக்கிற நாணயமுள்ள கிராமவாசி ஒருவனுக்கு அவசியமாய்க் காணப்படுகிற தொகையை அநுசரித்தும் அவனுக்கு பந்தோபஸ்தாய் கொடுக்கக் கூடிய தொகையை அநுசரித்தும் கிராமத்தின் சந்தருப்பத்தை அநுசரித்தும் ஒரு மெம்பருக்குக் கொடுக்கக்கூடிய உயர்ந்த கடன் தொகையை நிர்ணயிக்கவேண்டும். ஒரு சிறு பட்டாதாரன் விதை வாங்குகிறதற்காகவோ கிஸ்தி செலுத்துவதற்காகவோ எவ்வளவுதொகை கடன் வாங்க நேருமோ அதை அநுசரித்து பங்குக்கு கொடுக்கும் கடன் அளவை நிர்ணயிக்கவேண்டும். கிராமத்தார் நகைகளின்பேரில் கடன்கொடுக்க பிரேரேபித்தால், நகைகளை மதிப்பு போடுவதிலும் அவைகளைக் காப்பாற்றுவதிலும் இருக்கும் கஷ்டங்களை விவரமாய் எடுத்துச் சொல்லவேண்டும். பிரதிப் பிரயோசனமில்லாமல் சங்கத்தை நிர்வகிக்க வேண்டுமென்பதிலும் க்ஷேமநிதியைப் பங்கிட்டுக்கொள்ள சாத்தியப்படாது என்னும் சங்கதியிலும் இருக்கும் நுட்பங்களை விளக்கி அவைகளுக்கு ஒத்துக்கொள்ளச் செய்யவேண்டும். பணத்தினாலோ கண்ணியத்தினாலே பெயர்போன கிராமவாசிகளின் பெயர்களைத் தெரிந்துகொண்டு அவர்கள் விண்ணப்பத்தில் கையெழுத்துப் போட முயற்சி செய்யவேண்டும்.

5. விதிகளை விவரமாய் எடுத்துச் சொன்ன பிறகு இன்ஸ்பெக்டர் கவர்ன்மெண்டார் கொடுத்திருக்கும் மதிக்கக்கூடிய சகாயங்கள் இன்னவை யென்று எடுத்துக் காட்டவேண்டும். அவை ஸ்டாம்பு ரிஜிஸ்திரேஷன் கட்டணங்களினின்று நிவாரணையும் வருமான வரி இல்லாமையும், கவர்ன்மெண்டார் இனமாய்க் கணக்குகளை சோதனை செய்வதும் போன்றவை. ரிஜிஸ்திரார் சாங்ஷன் செய்வாரானால், சங்கங்களுக்கு செண்டிரல் பாங்கு கடன் கொடுக்கும் என்னும் சங்கதியையும் சொல்லவேண்டும். அப்படிக்கொடுக்கப்படும் கடன்கள் கவர்ன்மெண்டார் பணம் அல்லவென்றும் ஜனங்களுடைய பணம் என்றும் ஸ்பஷ்டமாய் சங்கங்களுக்கு சொல்லப்படவேண்டும்.

6. ரிஜிஸ்திராருக்கு அனுப்பும் ரிப்போர்டில், இன்ஸ்பெக்டர் அடியில் கண்ட விஷயங்களைக்குறித்து ரிப்போர்ட் செய்யவேண்டும்.

(a) கிராமத்தில் கக்ஷிகள் உண்டா?

(b) ஒரு ஐக்கிய சங்கத்தின் வேலை கக்ஷி பிரதி கக்ஷிகளின் பிளவால் கெடக்கூடுமா? சங்கம் வேலை செய்து வருவதால் சிறு கக்ஷிகள் நீங்குகின்றன. ஆனால் சங்கம் ஏற்படும் இலாகாவில் சங்கம் புதிதானால், இதில் மிகுந்த ஜாக்கிரதை வேண்டும்.

(c) சங்கத்தை நடத்த மனிதர்கள் உண்டா? கிராமத்தலைவர்கள் சம்பளமில்லாமல் சங்கத்தை நிர்வாகம் செய்யவேண்டும். சங்கத்தின் வியவகார எல்லைக்குள் நடத்த யோக்கியதையுள்ள படித்தவர்கள் இருக்கிறார்களா வென்றும் அவர்கள் பிரதி பிரயோஜன மில்லாமல் வேலை செய்ய உடன்படுகிறார்களா வென்றும் தெரிந்து கொள்ளவேண்டும்.

(d) கிராமத்தில் இருக்கும் யாவருமறிந்த மனிதர்களெல்லாம் விண்ணப்பத்தில் சேர்ந்திருக்கிறார்களா? அப்படிச் சேர்ந்திராவிட்டால், சேராமல்

தார் நிற்கிறவர்களிடம் தனியாய்க் கலந்து அவர்கள் ஆக்ஷேபனை யெ ன்ன வென்று அறிந்து கொள்.

(e) விண்ணப்பம் செய்து கொண்டவர்களில் இந்த முயற்சி காரண கர்த்தாவி லிருந்து நடத்துபவர் யார்? அவர் எல்லோராலும் நன்கு மதிக்கப் பட்டவராயும் சுய நலத்தை எவ்வளவும் கருதாதவராயும்,தன்னைப்போ ன்ற கிராமத்தாருக்கு நன்மை செய்யவேண்டுமென்ற ஆசை யொ ன்றே இம்முயற்சியில் வேலை செய்ய முன் வந்ததற்கு தூண்டுதல் பெற்றவராயும் இருக்கவேண்டும். மேலும் அவர் சுபாவத்தில் வழ க்குக்கு இடம் கொடுக்காதவராயும் இருக்கவேண்டும்.

(f) கிராமத்தில் இந்த சங்கத்திற்கு என்ன அவசியம்? விண்ணப்பம் செய்து கொண்டவர்களின் கடன் நிலைமையைக் குறித்து தாராயமாய் இ ன்ஸ்பெக்டர் விசாரித்துக் கண்டறிய வேண்டும். அவர்களுக்கு முன் கடன்களை யெல்லாம் தீர்த்து விடும்படி சங்கம் பர்தோபஸ் தாய்க் கடன் கொடுக்கக் கூடுமோ என்பதைப் பற்றி ரிப்போர்ட் செய்ய வேண்டும். உள்ளூரில் கடன்களுக்கு வாங்கப்படும் வட்டி வீதங் களை ரிப்போர்ட் செய்யவேண்டும்.

(g) உடனே இல்லாவிட்டாலும், நாலைந்து வருஷ காலத்தில் மதிக்கக் கூடிய அளவுள்ள தொகையாய் உள்ளூரில் டிபாசிட்டாய் மிருதிப் பணங்கள் கிடைக்குமா என்றும் ரிப்போர்ட் செய்யவேண்டும்.

7. இன்ஸ்பெக்டர் யாவரும் தன்னிடத்தில் வரும்படி அவ்வளவு நல்ல மாதிரியா ய் நடந்து கொள்ளவேண்டும். பெண்களிடத்திலும் குழந்தைகளிடத்திலும் சமாசாரம் அறிந்துகொள்ளவேண்டும். ஜனங்களிடத்தில் சாதுர்யமாய் நடந்து நம்பிக்கை உண் டுபண்ணிக் கொள்ளவேண்டும். அதன் பின் தனது சிபாரிசை ரிஜிஸ்திராருக்கு அனுப்பவேண்டும்.

## 1909ளு டிசம்பர்மீ 1உ வரையில் ரிஜிஸ்தர் செய்யப்பட்ட சங்கங்களைத் தெரிவிக்கும் ஸ்டேட்மெண்டு.

### செக்ஷன் A. ஸெண்டிரல் பாங்குகள்

இந்தபாங்குகளெல்லாம் வரையறுத்த பொறுப்பையுடையன.

| ஜில்லா. | சங்கியை. | வியவகார எல்லை. |
|---|---|---|
| மதராஸ | 1 | ராஜதானி முழுவதும் |
| சேலம் | 1 | சேலம் ஜில்லா |
| திருச்சிராப்பள்ளி | 1 | திருச்சிராப்பள்ளி ஜில்லா |
| மொத்தம் | 3 | |



### செக்ஷன் B நகரபாங்குகள்.

| ஜில்லா. | வரையறுத்த பொறுப்பின் பேரில் | வரையறுக்காத பொறுப்பின் பேரில் | மொத்தம். |
|---|---|---|---|
| வடஆற்காடு | 1 | 1 | 2 |
| தென் ஆற்காடு | 1 | ... | 1 |
| செங்கற்பட்டு | 1 | 1 | 2 |
| கோயமுத்தூர் | 1 | ... | 1 |
| கடப்பை | 1 | ... | 1 |
| கஞ்சம் | ... | 1 | 1 |
| குண்டூர் | 3 | ... | 3 |
| கர்நூல் | 2 | ... | 2 |
| மதராஸ் | 3 | ... | 3 |
| மதுரை | 3 | 1 | 4 |
| சேலம் | 3 | ... | 3 |
| தஞ்சாவூர் | 2 | ... | 2 |
| மொத்தம் | 21 | 4 | 25 |

### செக்ஷன் C. கிராம பாங்குகள்.

| ஜில்லா | வரையறுத்த பொறுப்பின் பேரில் | வரையறுக்காத பொறுப்பின் பேரில் | மொத்தம் |
|---|---|---|---|
| அனந்தபுரம் ... | 1 | 44 | 45 |
| வட ஆற்காடு ... | 1 | 13 | 14 |
| தென் ஆற்காடு ... | ... | 6 | 6 |
| பல்லாரி ... | ... | 3 | 3 |
| தென்கன்னடம் ... | ... | 1 | 1 |
| செங்கற்பட்டு ... | 3 | 53 | 56 |
| கோயமுத்தூர் ... | ... | 7 | 7 |
| கடப்பை ... | 1 | 1 | 2 |
| கோதாவரி ... | ... | 5 | 5 |
| குண்டூர் ... | ... | 3 | 3 |
| கிருஷ்ணா ... | ... | 6 | 6 |
| கர்நூல் ... | ... | 1 | 1 |
| மதுரை ... | ... | 4 | 4 |
| நெல்லூர் ... | ... | 2 | 2 |
| சேலம் ... | ... | 60 | 60 |
| தஞ்சாவூர் ... | 2 | 7 | 9 |
| திருச்சிராப்பள்ளி ... | ... | 23 | 23 |
| திருநெல்வேலி ... | 2 | 3 | 5 |
| விசாகப்பட்டணம் ... | ... | 2 | 2 |
| மொத்தம். | 10 | 244 | 254 |

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
7 JUN 1910
MADRAS.

160952

# 1908-1909 வருஷத்திய

# வரவு செலவு

# ஸ்டேட்மெண்டு.

## (சங்கம்வாரியாக.)

JL
XMm211,N09
N09.1

| ஜில்லா. | சங்கத்தின் பெயர். | | பங்குத் தொகை. | | | பிரவேச கட்டணம். | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | | | 4 | | |
| | | | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. |
| அனந்தபுரம் ... | புக்கபட்டணம் | 14 | ... | ... | ... | 11 | 0 | 0 |
| | சொத்தகோட்டா | 32 | ... | ... | ... | 2 | 0 | 0 |
| | தர்மாவரம் | 47 | 108 | 0 | 0 | 27 | 0 | 0 |
| | வஜ்ரகரூர் | 54 | ... | ... | ... | 3 | 0 | 0 |
| | குண்டக்கல் | 55 | ... | ... | ... | 5 | 0 | 0 |
| | திம்மன்செர்லா | 57 | 40 | 0 | 0 | 1 | [illegible] | 0 |
| | உரவகொண்டா | 60 | ... | ... | ... | 74 | [illegible] | 0 |
| | எர்ரபொம்மனஹள்ளி | 74 | 60 | 0 | 0 | 5 | 0 | 0 |
| | நிம்பகள்ளு | 88 | ... | ... | .. | 50 | 0 | 0 |
| | ஹரேசமுத்திரம் | 90 | 240 | 0 | 0 | 15 | 0 | 0 |
| | பெனுகுப்பா | 136 | ... | ... | ... | 66 | 0 | 0 |
| | பாமிடி | 137 | ... | ... | ... | 55 | 0 | 0 |
| | கலியாண்துர்க்கம் | 177 | ... | ... | ... | 90 | 0 | 0 |
| வடஆர்க்காடு ... | காவேரிபாக்கம் | 4 | 3639 | 0 | 0 | 14 | 0 | 0 |
| | வடஞங்கூர் | 12 | 136 | 0 | 0 | 2 | 0 | 0 |
| | சாலவேடு | 17 | 120 | 0 | 0 | ... | ... | ... |
| | சித்தூர்ஸ்டோர்ஸ் | 59 | 115 | 0 | 0 | 5 | 12 | 0 |
| | அணக்காவூர் | 64 | 120 | 0 | 0 | 6 | 0 | 0 |
| | வெள்ளியம்பாக்கம் | 80 | 44 | 0 | 0 | 0 | 8 | 0 |
| | சோளிங்கபுரம் அர்பன் | 98 | 635 | 0 | 0 | 31 | 12 | 0 |
| | சந்திரகிரி | 103 | 200 | 0 | 0 | 50 | 0 | 0 |
| | தலங்கை | 113 | 148 | 0 | 0 | 37 | 0 | 0 |
| | வாங்கூர் | 176 | 64 | 0 | 0 | 16 | 0 | 0 |
| | வள்ளுவம்பாக்கம் | 164 | 103 | 0 | 0 | 25 | 12 | 0 |
| தென்ஆர்க்காடு... | திண்டிவனம் அர்பன் | 46 | 3235 | 0 | 0 | 323 | 8 | 0 |
| | பயல்மலையனூர் | 48 | 100 | 8 | 0 | 1 | 8 | 0 |
| | முடியானூர் | 71 | 445 | 0 | 0 | 22 | 4 | 0 |
| | கள்ளக்குறிச்சி | 148 | 780 | 0 | 0 | 39 | 0 | 0 |
| | சங்கராபுரம் | 150 | 362 | 0 | 0 | 45 | 4 | 0 |
| பெல்லாரி ... | ஹவினஹடகள்ளி | 36 | ... | ... | ... | 20 | 0 | 0 |
| | மாகலம் | 66 | 234 | 0 | 0 | 12 | 8 | 0 |
| | ஹிரஹடகள்ளி | 67 | 404 | 0 | 0 | 28 | 8 | 0 |
| [illegible]கற்பட்டு... | திரூர் | 1 | 10 | 0 | 0 | ... | ... | ... |
| | மேழச்சேரி | 2 | 200 | 0 | 0 | 10 | 0 | 0 |

வரவு.

| ஜில்லா. | சங்கத்தின் பெயர். | | மெம்பர்களின் டிபாசிட்டுகள். | | | இதர கடன்கள். கவர்ன்மெண்டு. | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 5 | | | 6 | | |
| | | | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. |
| அனந்தபுரம் ... | புக்கபட்டணம் | 14 | ... | ... | ... | ... | ... | ... |
| | கொத்தகோட்டா | 32 | ... | ... | ... | ... | ... | ... |
| | தர்மாவரம் | 47 | ... | ... | ... | ... | ... | ... |
| | வஜ்ரகரூர் | 54 | ... | ... | ... | ... | ... | ... |
| | குண்டக்கல் | 55 | 50 | 0 | 0 | ... | ... | ... |
| | திம்மன்செர்லா | 57 | ... | ... | ... | ... | ... | ... |
| | உரவகொண்டா | 60 | ... | ... | ... | ... | ... | ... |
| | எர்ரபொம்மனஹள்ளி | 74 | ... | ... | ... | ... | ... | ... |
| | நிம்பகல்லு | 88 | ... | ... | ... | ... | ... | ... |
| | ஹமீரசமுத்திரம் | 90 | ... | ... | ... | ... | ... | ... |
| | பெலுகுப்பா | 136 | ... | ... | ... | ... | ... | ... |
| | பாமிடி | 137 | 100 | 0 | 0 | ... | ... | ... |
| | கலியாண்துர்க்கம் | 177 | ... | ... | ... | ... | ... | ... |
| வடஆர்க்காடு ... | காவேரிபாக்கம் | 4 | ... | ... | ... | ... | ... | ... |
| | வடஞங்கூர் | 12 | 73 | 0 | 0 | ... | ... | ... |
| | சாலவேடு | 17 | ... | ... | ... | ... | ... | ... |
| | சித்தூர்ஸ்டோர்ஸ் | 59 | 195 | 0 | 0 | ... | ... | ... |
| | அனக்காவூர் | 64 | ... | ... | ... | ... | ... | ... |
| | வெள்ளியம்பாக்கம் | 80 | ... | ... | ... | ... | ... | ... |
| | சோளிங்கபுரம் அர்பன் | 98 | 627 | 0 | 0 | ... | ... | ... |
| | சந்திரகிரி | 103 | ... | ... | ... | ... | ... | ... |
| | தலங்கை | 113 | ... | ... | ... | ... | ... | ... |
| | வாங்கூர் | 176 | ... | ... | ... | ... | ... | ... |
| | வள்ளுவம்பாக்கம் | 164 | ... | ... | ... | ... | ... | ... |
| தென்ஆர்க்காடு.. | திண்டிவனம் அர்பன் | 46 | 21718 | 0 | 0 | ... | ... | ... |
| | மேல்மலையனூர் | 48 | ... | ... | ... | ... | ... | ... |
| | முடியானூர் | 71 | 68 | 0 | 0 | ... | ... | ... |
| | கள்ளக்குறிச்சி | 148 | ... | ... | ... | ... | ... | ... |
| | சங்கராபுரம் | 150 | ... | ... | ... | ... | ... | ... |
| பெல்லாரி ... | ஹீவினஹாடகள்ளி | 36 | ... | ... | ... | ... | ... | ... |
| | மாகலம் | 66 | ... | ... | ... | ... | ... | ... |
| | ஹிரஹாடகள்ளி | 67 | ... | ... | ... | ... | ... | ... |
| செங்கற்பட்டு... | திரூர் | 1 | ... | ... | ... | ... | ... | ... |
| | வீழ்ச்சேரி | 2 | 2138 | 0 | 0 | ... | ... | ... |



வரவு.

| ஜில்லா. | சங்கத்தின் பெயர். | | இதர கடன்கள். இதர சங்கங்களிடமிருந்து. | | | இதர கடன்கள். மெம்பரல்லாதவர்களிடமிருந்து. | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 7 | | | 8 | | |
| | | | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. |
| அனந்தபுரம் ... | புக்கபட்டணம் | 14 | ... | ... | ... | ... | ... | ... |
| | கொத்தகோட்டா | 32 | ... | ... | ... | ... | ... | ... |
| | தர்மாவரம் | 47 | ... | ... | ... | 2000 | 0 | 0 |
| | வஜ்ரகரூர் | 54 | ... | ... | ... | ... | ... | ... |
| | குண்டக்கல் | 55 | ... | ... | ... | ... | ... | ... |
| | திம்மன்செர்லா | 57 | ... | ... | ... | ... | ... | ... |
| | உரவகொண்டா | 60 | 7000 | 0 | 0 | 97 | 0 | 0 |
| | எர்ரபொம்மனஹள்ளி | 74 | 600 | 0 | 0 | ... | ... | ... |
| | நிம்பகல்லு | 88 | 5000 | 0 | 0 | ... | ... | ... |
| | ஹமீரசமுத்திரம் | 90 | 3500 | 0 | 0 | ... | ... | ... |
| | பெலுகுப்பா | 136 | 4000 | 0 | 0 | ... | ... | ... |
| | பாமிடி | 137 | 2000 | 0 | 0 | ... | ... | ... |
| | கலியாண்துர்க்கம் | 177 | 5000 | 0 | 0 | ... | ... | ... |
| வடஆர்க்காடு ... | காவேரிபாக்கம் | 4 | 1500 | 0 | 0 | 7 | 0 | 0 |
| | வடஞங்கூர் | 12 | ... | ... | ... | ... | ... | ... |
| | சாலவேடு | 17 | ... | ... | ... | ... | ... | ... |
| | சித்தூர்ஸ்டோர்ஸ் | 59 | ... | ... | ... | ... | ... | ... |
| | அனக்காவூர் | 64 | 1000 | 0 | 0 | ... | ... | ... |
| | வெள்ளியம்பாக்கம் | 80 | 2000 | 0 | 0 | ... | ... | ... |
| | சோளிங்கபுரம் அர்பன் | 98 | 2000 | 0 | 0 | 1715 | ... | ... |
| | சந்திரகிரி | 103 | 3500 | 0 | 0 | ... | ... | ... |
| | தலங்கை | 113 | 2500 | 0 | 0 | ... | ... | ... |
| | வாங்கூர் | 176 | 2000 | 0 | 0 | ... | ... | ... |
| | வள்ளுவம்பாக்கம் | 164 | 3000 | 0 | 0 | ... | ... | ... |
| தென்ஆர்க்காடு.. | திண்டிவனம் அர்பன் | 46 | 10000 | 0 | 0 | 16527 | 0 | 0 |
| | மேல்மலையனூர் | 48 | 1000 | 0 | 0 | ... | ... | ... |
| | முடியானூர் | 71 | 3000 | 0 | 0 | ... | ... | ... |
| | கள்ளக்குறிச்சி | 148 | 3000 | 0 | 0 | ... | ... | ... |
| | சங்கராபுரம் | 150 | 3000 | 0 | 0 | ... | ... | ... |
| பெல்லாரி ... | ஹீவினஹாடகள்ளி | 36 | 4000 | 0 | 0 | ... | ... | ... |
| | மாகலம் | 66 | 5000 | 0 | 0 | ... | ... | ... |
| | ஹிரஹாடகள்ளி | 67 | 6000 | 0 | 0 | ... | ... | ... |
| செங்கற்பட்டு... | திரூர் | 1 | ... | ... | ... | ... | ... | ... |
| | வீழ்ச்சேரி | 2 | ... | ... | ... | 3607 | 4 | 7 |

வரவு.

| ஜில்லா. | சங்கத்தின் பெயர். | | மெம்பர்களால் திருப்பிச் செலுத்தப்பட்ட கடன் தொகைகள். | | | இதர சங்கங்களால் திருப்பிச் செலுத்தப்பட்ட கடன் தொகைகள். | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 9 | | | 10 | | |
| | | | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. |
| அனந்தபுரம் ... | புக்கபட்டணம் | 14 | 1794 | 0 | 0 | ... | ... | ... |
| | கொத்தகோட்டா | 82 | 1459 | 0 | 0 | ... | ... | ... |
| | தர்மாவரம் | 47 | 3608 | 0 | 0 | ... | ... | ... |
| | வஜ்ரகரூர் | 54 | 1362 | 0 | 0 | ... | ... | ... |
| | குண்டக்கல் | 55 | 2836 | 0 | 0 | ... | ... | ... |
| | திம்மன்செர்லா | 57 | 1758 | 0 | 0 | ... | ... | ... |
| | உரவகொண்டா | 60 | 1864 | 0 | 0 | ... | ... | ... |
| | எர்ரபொம்மனஹள்ளி | 74 | 1501 | 0 | 0 | ... | ... | ... |
| | சிம்பகள்ளு | 88 | ... | ... | ... | ... | ... | ... |
| | ஹரோசமுத்திரம் | 90 | 468 | 0 | 0 | ... | ... | ... |
| | பெலுகுப்பா | 136 | ... | ... | ... | ... | ... | ... |
| | பாமிடி | 137 | ... | ... | ... | ... | ... | ... |
| | கலியாண் துர்க்கம் | 177 | ... | ... | ... | ... | ... | ... |
| வடஆற்காடு ... | காவேரிபாக்கம் | 4 | 11635 | 0 | 0 | ... | ... | ... |
| | வடணங்கூர் | 12 | 2998 | 0 | 0 | ... | ... | ... |
| | சாலவேடு | 17 | 4392 | 0 | 0 | ... | ... | ... |
| | சித்தூர்ஸ்டோர்ஸ் | 59 | 1230 | 0 | 0 | ... | ... | ... |
| | அனக்காவூர் | 64 | 366 | 0 | 0 | ... | ... | ... |
| | வெள்ளியம்பாக்கம் | 80 | 2115 | 0 | 0 | ... | ... | ... |
| | சோளிங்கபுரம்அர்பன் | 98 | 886 | 0 | 0 | ... | ... | ... |
| | சந்திரகிரி | 103 | 165 | 0 | 0 | ... | ... | ... |
| | தலங்கை | 113 | 50 | 0 | 0 | ... | ... | ... |
| | பள்ளிபட்டி | 124 | 19 | 8 | 3 | ... | ... | ... |
| | கம்பைநல்லூர் | 125 | 28 | 7 | 8 | ... | ... | ... |
| | கொண்டான்பட்டி | 126 | 20 | 2 | 5 | ... | ... | ... |
| | ஈச்சம்பாடி | 127 | 25 | 2 | 9 | ... | ... | ... |
| | ஓமலூர் | 128 | 21 | 12 | 2 | ... | ... | ... |
| | ஊத்தங்கரை | 129 | 28 | 10 | 6 | 1 | 8 | 0 |
| | ஆட்டையாம்பட்டி | 130 | 27 | 7 | 9 | 0 | 8 | 0 |
| | மதியம்பட்டி | 131 | 38 | 2 | 0 | ... | ... | ... |
| | சேலம் டிஸ்டிரிக்டு பாங்கு | 151 | 115 | 13 | 9 | 114049 | 8 | 8 |
| | நெய்காரப்பட்டி | 165 | 15 | 0 | 0 | ... | ... | ... |
| | காடையாம்பட்டி | 166 | 18 | 9 | 6 | ... | ... | ... |
| | மல்லிகுந்தம் | 167 | 12 | 9 | 0 | ... | ... | ... |
| | பள்ளிப்பட்டி | 168 | 8 | 13 | 0 | ... | ... | ... |
| | தொளசம்பட்டி | 169 | 16 | 15 | 6 | ... | ... | ... |
| | மாமுண்டி | 171 | 15 | 7 | 6 | ... | ... | ... |
| | சமுத்திரம் | 172 | 20 | 10 | 9 | ... | ... | ... |
| | சின்னப்பம்பட்டி | 173 | 18 | 8 | 0 | ... | ... | ... |
| | பன்னப்பட்டி | 174 | 17 | 6 | 6 | 4 | 0 | 0 |
| தஞ்சாவூர் ... | கீடாமங்கலம் | 7 | 122 | 14 | 8 | 100 | 11 | 6 |
| | நிகல்சன் டவுன்பாங்கு அர்பன் | 8 | 271 | 8 | 6 | 132 | 11 | 9 |
| | மெலட்டூர் | 9 | 71 | 8 | 9 | 5 | 1 | 1 |
| | மன்னார்குடி அர்பன் | 27 | 285 | 15 | 11 | 64 | 10 | 0 |
| | ஆனைக்காடு | 31 | 3 | 12 | 9 | 1 | 11 | 9 |
| | இராஜாமடம் | 35 | 3 | 15 | 0 | 57 | 0 | 0 |
| | செங்காலிபுரம் | 76 | 31 | 6 | 6 | 0 | 2 | 8 |
| | வன்னுவகுடி | 79 | 8 | 10 | 6 | 0 | 4 | 0 |
| | புண்டரீகபுரம் | 82 | 2 | 4 | 0 | ... | ... | ... |
| | திட்டே | 78 | 14 | 5 | 0 | ... | ... | ... |
| | அனக்குடி | 89 | 19 | 2 | 0 | [illegible] | 12 | 0 |
| திருநெல்வேலி | விளாத்திகுளம் | 6 | 42 | 0 | 3 | 1 | 8 | 4 |
| | நம்பிபுரம் | 13 | 42 | 15 | 8 | ... | ... | ... |
| | கடம்பூர்புரம் | 147 | 14 | 0 | 0 | ... | ... | ... |





| ஜில்லாக்கள். | சங்கத்தின் பெயர். | | க்ஷேமநிதிக்குச் செலுத்தியது. | | | மொத்த செலவு. | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 15 | | | 16 | | |
| | | | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. |
| சேலம் ... | தர்மபுரி | 122 | ... | ... | ... | 4769 | 9 | 9 |
| | அதிகாரப்பட்டி | 123 | ... | ... | ... | 3161 | 15 | 6 |
| | பள்ளிப்பட்டி | 124 | ... | ... | ... | 6)78 | 6 | 3 |
| | கம்பைநல்லூர் | 125 | ... | ... | ... | 4108 | 7 | 8 |
| | கொண்டான்பட்டி | 126 | ... | .. | ... | 1770 | 14 | 5 |
| | ஈச்சம்பாடி | 127 | ... | ... | ... | 5547 | 10 | 9 |
| | ஓமலூர் | 128 | ... | ... | ... | 4158 | 10 | 2 |
| | ஊத்தங்கரை | 129 | ... | ... | ... | 8ŏ01 | 2 | 6 |
| | ஆட்டையாம்பட்டி | 130 | ... | ... | ... | 15923 | 10 | 9 |
| | மதயம்பட்டி | 131 | ... | ... | ... | 5971 | 12 | 0 |
| | சேலம் டிஸ்டிரிக்டு பாங்கு | 151 | ... | ... | ... | 326715 | 6 | 5 |
| | நெய்காரப்பட்டி | 165 | ... | ... | ... | 5641 | 4 | 0 |
| | காடையாம்பட்டி | 166 | ... | ... | ... | 2693 | 9 | 6 |
| | மல்லிகுந்தம் | 167 | ... | ... | ... | 3162 | 9 | 0 |
| | பள்ளிப்பட்டி | 168 | ... | ... | ... | 1068 | 13 | 0 |
| | தொளசம்பட்டி | 169 | ... | ... | ... | 8556 | 15 | 6 |
| | மாமுண்டி | 171 | ... | ... | ... | 2610 | 11 | 6 |
| | சமுத்திரம் | 172 | ... | ... | ... | 2229 | 10 | 9 |
| | சின்னப்பம்பட்டி | 173 | ... | ... | ... | 2238 | 3 | 0 |
| | பன்னப்பட்டி | 174 | ... | ... | ... | 4267 | 6 | 6 |
| தஞ்சாவூர் ... | கீடாமங்கலம் | 7 | 488 | 1 | 7 | 12036 | 6 | 8 |
| | நிகல்சன் டவுன்பாங்கு (அர்பன்) | 8 | 97 | 11 | 0 | 23617 | 8 | 4 |
| | மெலட்டூர் | 9 | 269 | 15 | 0 | 13358 | 15 | 10 |
| | மன்னார்குடி அர்பன் | 27 | 326 | 14 | 0 | 33296 | 12 | 8 |
| | ஆனைக்காடு | 31 | 114 | 6 | 0 | 3775 | 8 | 6 |
| | இராஜாமடம் | 35 | 76 | 1 | 0 | 1626 | 6 | 11 |
| | செங்காலிபுரம் | 76 | 80 | 0 | 0 | 4640 | 11 | 1 |
| | வன்னுவகுடி | 79 | 11 | 1 | 0 | 2577 | 7 | 6 |
| | புண்டரீகபுரம் | 82 | 15 | 6 | 0 | 9259 | 12 | 0 |
| | திட்டே | 78 | ... | ... | ... | 6012 | 9 | 10 |
| | அனக்குடி | 89 | ... | ... | ... | 2730 | 2 | 0 |
| திருநெல்வேலி | விளாத்திகுளம் | 6 | 253 | 4 | 6 | 7855 | 13 | 9 |
| | நம்பிபுரம் | 13 | 154 | 8 | 5 | 2378 | 2 | 10 |
| | கடம்பூர்புரம் | 147 | ... | ... | ... | 1407 | 8 | 0 |

சேலவுகள்.

| ஜில்லாக்கள். | சங்கத்தின் பெயர். | | கடைசி கையிருப்பு. | | | கையிருப்பு உள்பட மொத்த செலவு. | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 17 | | | 18 | | |
| | | | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. |
| சேலம் ... | தர்மபுரி | 122 | 1140 | 3 | 9 | 5909 | 13 | 6 |
| | அதிகாரப்பட்டி | 123 | 40 | 0 | 6 | 3202 | 0 | 0 |
| | பள்ளிப்பட்டி | 124 | 2 | 5 | 5 | 6080 | 11 | 8 |
| | கம்பைநல்லூர் | 125 | 207 | 5 | 1 | 4315 | 12 | 9 |
| | கொண்டான்பட்டி | 126 | 0 | 1 | 2 | 1770 | 15 | 7 |
| | ஈச்சப்பாடி | 127 | 179 | 13 | 8 | 5721 | 8 | 5 |
| | ஓமலூர் | 128 | 198 | 14 | 9 | 4357 | 8 | 11 |
| | ஊத்தங்கரை | 129 | 69 | 8 | 9 | 8670 | 10 | 9 |
| | ஆட்டையாம்பட்டி | 130 | 545 | 5 | 8 | 16469 | 0 | 5 |
| | மதியம்பட்டி | 131 | 140 | 13 | 8 | 6112 | 9 | 3 |
| | சேலம் டிஸ்டிரிக்ட் பாங்கு | 151 | 20 | 0 | 0 | 326735 | 6 | 5 |
| | நெய்க்காரப்பட்டி | 165 | 20 | 7 | 6 | 5661 | 11 | 6 |
| | காடையாம்பட்டி | 166 | 36 | 2 | 6 | 2729 | 12 | 0 |
| | மல்லிகுந்தம் | 167 | 6 | 3 | 0 | 3168 | 12 | 0 |
| | பள்ளப்பட்டி | 168 | 15 | 9 | 0 | 1084 | 6 | 0 |
| | தொளசம்பட்டி | 169 | 519 | 4 | [illegible] | 9076 | 4 | 0 |
| | மாமுண்டி | 171 | 45 | 0 | [illegible] | [illegible] | 12 | 3 |
| | சமுத்திரம் | 172 | 4 | 5 | 3 | 2234 | 0 | 0 |
| | சின்னப்பம்பட்டி | 173 | 29 | 5 | 0 | 2367 | 8 | 0 |
| | பன்னப்பட்டி | 174 | 1236 | 10 | 6 | [illegible] | 1 | 0 |
| தஞ்சாவூர் ... | கீடாமங்கலம் | 7 | 15 | 7 | 0 | 18051 | 13 | 8 |
| | நிகல்சண்டவுன்பார்கு (அர்பன்) | 8 | 208 | 3 | 0 | 23825 | 11 | 4 |
| | மெலட்டூர் | 9 | 418 | 8 | 0 | 13777 | 7 | 10 |
| | மன்னார்குடி அர்பன் | 27 | 1505 | 9 | 11 | 34802 | 6 | 7 |
| | ஆனைக்காடு | 81 | 12 | 12 | 6 | 3788 | 5 | 0 |
| | இராஜாமடம் | 85 | 46 | 2 | 10 | 1672 | 9 | 9 |
| | சங்கராவிபுரம் | 76 | 46 | 0 | 3 | 4695 | 11 | 4 |
| | வள்ளுவகுடி | 79 | 80 | 15 | 6 | 2658 | 7 | 0 |
| | புண்டரீகபுரம் | 82 | 39 | 10 | 6 | 9299 | 6 | 6 |
| | திட்டை | 78 | 36 | 6 | 2 | 6040 | 0 | 0 |
| | அணைக்குடி | 89 | 37 | 4 | 9 | 2767 | 6 | 9 |
| திருநெல்வேலி | விளாத்திகுளம் | 6 | 1088 | 14 | 11 | 8894 | 12 | 8 |
| | நம்பிபுரம் | 18 | 411 | 1 | 8 | 2790 | 4 | 6 |
| | வடமலைபுரம் | 147 | 0 | 6 | 2 | 1407 | 14 | 2 |



செலவுகள்.

| ஜில்லாக்கள். | சங்கத்தின் பெயர். | | பங்குத் தொகை வாப்சு. | | | டிபாசிட்டுகள் வாப்சு. | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | | | 4 | | |
| | | | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. |
| திருச்சினாப்பள்ளி | லாலுகுடி | 30 | 90 | 0 | 0 | 203 | 0 | 0 |
| | ஜெயங்கொண்ட சோழபுரம் | 68 | ... | ... | ... | 20 | 0 | 0 |
| | பெரம்பலூர் | 69 | ... | ... | ... | ... | ... | ... |
| | திருமழவாடி | 93 | 25 | 0 | 0 | ... | ... | ... |
| விசாகப்பட்டணம் | குருப்பம் | 101 | ... | ... | ... | ... | ... | ... |
| | மங்கவரம் | 102 | ... | ... | ... | ... | ... | ... |
| | மொத்தம். | | 18061 | 5 | 9 | 411851 | 6 | 2 |

## செலவுகள்.

| ஜில்லாக்கள். | சங்கத்தின் பெயர். | | திருப்பிக் கொடுக்கப்பட்ட கடன்கள். | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | கவர்ன்மெண்டுக்கு. | | | இதர சங்கங்களுக்கு. | | |
| 1 | 2 | | 5 | | | 6 | | |
| | | | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. |
| திருச்சிராப்பள்ளி | லாலுகுடி | 30 | ... | ... | ... | ... | ... | ... |
| | ஜெயங்கொண்ட சோளபுரம் | 68 | ... | ... | ... | 1750 | 0 | 0 |
| | பெரம்பலூர் | 69 | ... | ... | ... | 1000 | 0 | 0 |
| | திருமலவாடி | 93 | ... | ... | ... | 300 | 0 | 0 |
| விசாகப்பட்டணம் | குருப்பம் | 101 | ... | ... | ... | ... | ... | ... |
| | மங்கவரம் | 102 | ... | ... | ... | ... | ... | ... |
| | மொத்தம். | | 1340 | 0 | 0 | 5[illegible]640 | 0 | 0 |



## செலவுகள்.

| ஜில்லாக்கள். | சங்கத்தின் பெயர். | | திருப்பிக் கொடுக்கப்பட்ட கடன்கள். | | | மெம்பர்களுக்குக் கடன். | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | மெம்பரல்லாதவர்களுக்கு. | | | | | |
| 1 | 2 | | 7 | | | 8 | | |
| | | | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. |
| திருச்சிராப்பள்ளி | லாலுகுடி | 30 | 4699 | 0 | 0 | 12355 | 0 | 6 |
| | ஜெயங்கொண்ட சோழபுரம் | 68 | ... | ... | ... | 4345 | 0 | 0 |
| | பெரம்பலூர் | 69 | ... | ... | ... | 2189 | 0 | 0 |
| | திருமலைவாடி | 93 | ... | ... | ... | 3725 | 0 | 0 |
| விசாகப்பட்டணம் | குருப்பம் | 101 | ... | ... | ... | 2475 | 0 | 0 |
| | மங்கவரம் | 102 | ... | ... | ... | 3153 | 0 | 0 |
| | மொத்தம். | | 271891 | 11 | 0 | 971021 | 3 | 1 |

## செலவுகள்.

| ஜில்லாக்கள். | சங்கத்தின் பெயர். | | இதர சங்கங்களுக்குக் கடன். | | | கடன்களுக்கும் டிபாசிட்டுகளுக்கும் கொடுத்த வட்டி. | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 9 | | | 10 | | |
| | | | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. |
| திருச்சினாப் பள்ளி | லாலுகுடி | 30 | ... | ... | ... | 408 | 12 | 0 |
| | ஜெயங்கொண்ட சோழ புரம் | 68 | ... | ... | ... | 486 | 14 | 3 |
| | பெரம்பலூர் | 69 | ... | | ... | 334 | 4 | 0 |
| | திருமலைவாடி | 98 | ... | ... | ... | 206 | 4 | 0 |
| விசாகப்பட்ட ணம் | குரும்பம் | 101 | ... | ... | ... | 75 | 0 | 0 |
| | மங்கவாரம் | 102 | ... | ... | ... | 75 | 0 | 0 |
| | மொத்தம். | | 654025 | 0 | 0 | 45225 | 10 | 8 |



## செலவுகள்.

| ஜில்லாக்கள். | சங்கத்தின் பெயர். | | டிவிடெண்டு போனஸ் தொகை. | | | சரக்கு கொள் முதல். | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 11 | | | 12 | | |
| | | | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. |
| திருச்சினாப் பள்ளி | லாலுகுடி | 30 | ... | ... | ... | ... | ... | ... |
| | ஜெயங்கொண்ட சோழ புரம் | 68 | ... | ... | ... | ... | ... | ... |
| | பெரம்பலூர் | 69 | ... | ... | ... | ... | ... | ... |
| | திருமலைவாடி | 93 | ... | ... | ... | ... | ... | ... |
| விசாகப்பட்ட ணம் | குருப்பம் | 101 | ... | ... | ... | ... | ... | ... |
| | மங்கவாரம் | 102 | ... | ... | ... | ... | ... | ... |
| | மொத்தம். | | 6383 | 5 | 11 | 452062 | 11 | 8 |

செலவுகள்.

| ஜில்லாக்கள். | சங்கத்தின் பெயர். | | சிப்பந்தி, சாதல்வார் செலவு. | | | இதர செலவுகள். | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 13 | | | 14 | | |
| | | | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. |
| திருச்சினாப்பள்ளி | வாளுகுடி | 30 | 128 | 7 | 3 | 46 | 8 | 0 |
| | ஜெயங்கொண்டசோழபுரம் | 68 | 37 | 6 | 5 | 450 | 0 | 0 |
| | பெரம்பலூர் | 69 | 14 | 15 | 10 | ... | ... | ... |
| | திருமலைவாடி | 93 | 17 | 2 | 6 | ... | ... | ... |
| விசாகப்பட்டணம் | குருப்பம் | 101 | 15 | 13 | 7 | 0 | 8 | 0 |
| | மங்கவரம் | 102 | 28 | 9 | 6 | 2 | 0 | 0 |
| | மொத்தம். | | 21722 | 15 | 3 | 329584 | 11 | 1 |



செலவுகள்.

| ஜில்லாக்கள். | சங்கத்தின் பெயர். | | க்ஷேமநிதிக்குச் செலுத்தியது. | | | மொத்த செலவு. | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 15 | | | 16 | | |
| | | | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. |
| திருச்சினாப்பள்ளி | வாளுகுடி | 30 | 469 | 8 | 0 | 18490 | 3 | 3 |
| | ஜெயங்கொண்டசோழபுரம் | 68 | 80 | 3 | 0 | 7178 | 7 | 8 |
| | பெரம்பலூர் | 69 | 40 | 14 | 0 | 3570 | [illegible] | 10 |
| | திருமலைவாடி | 93 | 20 | 14 | 0 | 4294 | 4 | 6 |
| விசாகப்பட்டணம் | குருப்பம் | 101 | ... | ... | ... | 2566 | 5 | 7 |
| | மங்கவரம் | 102 | ... | ... | ... | 3258 | 9 | 6 |
| | மொத்தம். | | 16454 | 5 | 2 | 3265194 | 5 | 4 |

சேலவுகள்.

| ஜில்லாக்கள். | சங்கத்தின் பெயர். | | கடைசி கையிருப்பு. | | | கையிருப்பு உள்பட மொத்த செலவு. | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 17 | | | 18 | | |
| | | | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. |
| திருச்சினாப்பள்ளி | வாலுகுடி | 30 | 41 | 3 | 0 | 16581 | 6 | 3 |
| | ஜெயங்கொண்ட சோழபுரம் | 68 | 96 | 11 | 0 | 7275 | 2 | 8 |
| | பெரம்பலூர் | 69 | 234 | 0 | 2 | 3804 | 2 | 0 |
| | திருமலைவாடி | 93 | 293 | 11 | 10 | 4588 | 0 | 4 |
| விசாகப்பட்டணம் | குருப்பம் | 101 | 258 | 0 | 1 | 2824 | 5 | 8 |
| | மங்கவரம் | 102 | 14 | 14 | 0 | 3273 | 7 | 6 |
| | மொத்தம். | | 57197 | 11 | 0 | 3322892 | 0 | 4 |

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
- SEP 1910
MADRAS.

# மதிராஸ் புல்லடீன் ஆப் கோ-ஆபரேஷன்.

வால்யூம் 1.] மார்ச்சு மீ 10௳, 1910. [நெ. 3

## கோஆபரேடிவ் பாங்குகளில் பணம் போட்டுவைத்தல்.

1908-ம் ௵ டிசம்பர் மீ 11 தேதிய 'பயோனேர்' பத்திரிகையில் மேற்குறித்த விஷயமாய்க்காணும் சுடிதத்திலிருந்து யுக்தி யுக்தமான பகுதியொன்றை அடியில் பிரசுரித்திருக்கிறது:—

"இந்திய மகாஜனங்கள் மொந்தைகளில் போட்டுவைத்து வீணுகக் கிடக்கும் பணங்களை லேவாதேவி மூலமாய் நடமாடச் செய்யவேண்டுமென்று இதுவரை அங்கங்கே சிலர்மட்டும் சொல்லிவந்தார்கள். இப்பொழுதோ வென்றால், இந்த விஷயத்தில் இந்தியாவெங்கும் எல்லா ஜனங்களுக்கும் அக்கரையதிகரித்து வந்திருக்கிறது. மகாஜனங்களுடைய க்ஷேமலாபங்களை விசாரிப்பவர்கள் இந்தியாவில் வெகு கொஞ்சம் பெயர் தானென்பது வாஸ்தவம். பெரும்பாலார்க்குப் பொது நன்மையைக் குறித்து ஒன்றும் சொல்லத் தெரியாது. என்றாலும் தங்களவர்களாகிய விவேகிகள் சிலர் சொல்லுவதைப் பெரும்பாலார் சுலபமாய் ஒப்புக்கொண்டு நடக்கிறார்கள். ஆதலால் விவேகிகளாகிய இச்சில பெயருக்கு மட்டுமே நாம் செல்வம் பெருகு முபாயங்களைச் சொல்லிக்கொடுக்க வேண்டும். ஆகவே வைசிகமென்னும் செல்வநூலின் முக்கிய அம்சங்களை விவேகிகளான இச்சிலருக்குத் தெளிவிப்பது நமக்குப் பெரும்பாரமல்ல. இப்பொழுது சிறிது காலமாகத் தினவர்த்தமானிகளாகிய பத்திரிகைகளில் இந்தியப் பாங்குகள், மாணபண்டுகம்பெனிகள் முதலிய சாதனங்கள் விளம்பரமாகி, அவற்றைப் புகழ்ந்து பேசக் கேட்கிறது. ஆகையால், மொந்தைப்பணம் லேவாதேவிக்கு உதவும் படிக்கு [illegible] விஷயத்தில் மேனாட்டுமுறை பிரபலமாகும்

படிக்கும், பிரயத்தனம் பலமாக நடந்து வருவது வெளியாகிறது. மேனாட்டு முறைப்படி பார்க்குமிடத்து, சிலவிற்கு வேண்டிய பணத்தை யாரும் ரொக்கமாகக் கையில் வைத்துக்கொண்டேயிருப்பதில்லை. ஆகவே மேற்சொல்லிய பாங்குகள், மாணபண்டுகம்பெனிகள் முதலியன வெல்லாம் தங்களாலியன்ற மட்டில் உபகாரஞ்செய்யக் கூடியவை தாம். ஆக்ஷேபமில்லை. என்றாலும், இவைகள் செழித்து வருவதும், இவைகளில் பணம் போட்டால்மோசமில்லையென்ற நம்பிக்கையும், பெரிய பட்டணவாசிகள், நகரவாசிகள், ஆகிய சிலருக்கு மட்டும் தான் தெரியும். ஏனெனில் பட்டணவாசிகளுக்கு மேனாட்டு அபிப்பிராயங்களும், பழக்கங்களும், தினம் கொஞ்சமாக எப்படியோவந்து சேருகின்றன. இவர்களை விலக்கிவிட்டு, கிராமங்களையும், அங்குள்ளவராகிய பெரும்பாலாரையும் குறித்து யோசிப்போமானால், அப்பொழுது தான் இவ்விஷயத்தில் காணக்கூடிய கஷ்டம் வெளியாகிறது. 'மொந்தைப் பணம்' அநேகமாய்க் கிராமங்களில் தான் சிறு தொகைகளாகவோ, பெருந் தொகைகளாகவோ, கட்டி வீணாகித் தூங்குகிறது. இதை வெளிவரச்செய்து, லேவாதேவிக்கு உபயோகப்படுத்துவதெப்படி யென்பதுதான் விவேகிகள் யோசிக்கவேண்டிய விஷயம். (உதாரணமாக,) கல்கத்தாவிலிருந்து சணல் விளையும் கிராமப்பிரதேசங்களுக்கு லக்ஷம் லக்ஷமாக ரூபாய்கள் போய்க் கொண்டே யிருக்கின்றன. ஆனால் இப்படிப்போகிற தொகையில் திரும்பக் கல்கத்தாவுக்கு நடமாடிவருவது எவ்வளவென்று யோசிக்குமிடத்து வெகு கொஞ்சமென்று நிச்சயப் படுகிறது. ஆதலால் ஒவ்வொரு வருஷமும் டன் கணக்காக ரூபாய்கள் நடமாடுவதொழிந்து, கிராமவாசிகள் கையிலடக்கமாகி, மறுபடி வெளிவாமலே போய்விடுகிறது. இதை யோசிக்குபோது, இந்தியாதேசமெங்கும் நடமாடிக் கைமுதலாகக்கூடிய பணம் வெகு அதிகமாய் மொந்தைகளிற் சேர்ந்து விடுகிறதென்பதும் நிச்சயப்படுகிறது. பலதுளி பெருவெள்ளம். ஆகையால் அங்கங்கே சில்லரையாய், நாம் லக்ஷியஞ் செய்யாமல், கிடக்கும் இப்பணங்களை மொத்தம் போட்டுப்பார்த்தால், பெருந் தொகையாகிவிடு மென்பதிற் சந்தேகமேயில்லை. அதினாலும், பணக்காரர்களுக்குள் கட்டிப்போட்டு வைக்கும் வழக்கத்தை மாற்றி, அம்மாதிரி வீணாகக் கிடக்கும் பணத்தைத் தொழிலாளிகளுக்கு உதவும்படி தாருசாக நடமாடச் செய்வது சாத்தியமானால் அதினாலும், இத்தேசத்தில் தொழில்களும் தழைத்து, செல்வமும் விசேஷமாகச் செழிக்கும். இதற்கு முக்கிய சாதனமாகக் கோ ஆபரேடிவ் பாங்குகள் வெகு நன்றாய் உதவுகின்றனவென்று பலதிக்குகளிலிருந்தும் வதந்தியுண்டாகி வருகிறது. ஆதலால் இப்பாங்குகள் பிரபலித்து வருவதையும், இவற்றின் பிரயோஜனங்களையும் தேசமெங்குமுள்ள ஜமீன்தார்கள், சாவுகார்கள் முதலியோருக்குத் தெரிவிக்க வேண்டிய உபாயங்களை யெல்லாம் நாம் தேடவேண்டுவது அவசியம். ஏனெனில் இவர்கள் மனது வைத்துத்தான் இக்காரியம் நிறைவேறவேண்டும். இம்மாதிரிப் பாங்குகளுக்குத் திரவிய சகாயம் இவர்கள்தான் செய்து உபகரிக்கவேண்டும். தவிர



OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 8- SEP 1910 MADRAS

இவ்வகைப்பாங்குகள் ஏற்படுவதினாலுண்டாகும் பிரயோஜனங்களின் சாமான்னிய ரீதியும்படி, இவர்கள்தான் சளையாமலும், சோம்பற்படாமலும், காரியத்தில் (மேற்சொல்லியபடி பணத்தைப் போட்டுக்) காட்டியும், விடாமல் பேசியும், வரவேண்டும்.

எந்தக்காரியத்திற்கும் இந்தியாவில் ஒருபெரிய உபத்திரவமிருக்கிறது. அதாவது சர்க்கார் சகாயத்தை வேண்டுவதாம். இதனால் விளையும் குணதோஷங்கள் இந்தியரைமட்டுமேயன்றி, இங்குதங்கியிருக்கும் ஐரோப்பியரையும் வாதிக்கின்றன. ஆனால் இந்தப்பாங்குகளுக்குமட்டும் சர்க்கார் உதவி கூடியமட்டில் இல்லாமலே பார்க்கவேண்டும். ஏனெனில் பாங்குகள் இந்தமுறையாகப் பிரபலிக்கவேண்டுவதில் நமது நோக்கம் மூவகைத்தாம். அவைகளில் முதலாவது, குடித்தனக்காரருக்கும் மற்றுமுள்ள (சாமான்னிய) ஜனங்களுக்கும் நியாயமாய் ஆகவேண்டிய காரியங்களுக்கு, கிரமமானவட்டி விகிதத்துடன், வேண்டியபோது பணம் உதவுவது இரண்டாவது, இந்தப்படி செய்து, கிராமவாசிகளான ஏழைகள் சாவுகார்கையில் அகப்பட்டு விழிக்காமல் பார்த்துக் கொள்ளுவது. மூன்றாவது, இத்தேசத்திய ஜமீன்தாரிடத்திலும், வேறு பிரபுக்களிடத்திலும் கட்டித்தூங்கும் பணத்தை வெளிப்படுத்தி, அது தாருசாய் நடமாடி நற்பயனைக்கொடுக்கச் செய்வது.

இப்பொழுதிருக்கிற ரீதிக்கு, இம்மாதிரி யாகவேண்டியகாரியங்களைக் குறித்து, டிபார்ட்மென்டு உத்தியோகஸ்தரைத் தவிர வேறு ஜனங்கள் பிரஸ்தாபிப்பது விசேஷமாக நமது காதில் விழுவதில்லை. வேறுமாகாணங்களில் எப்படியோ நாமறியோம். பங்காளத்தைப் பொறுத்தமட்டில் இதுவாஸ்தவம். டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தருக்கு ஆக்கிரகமும், பக்தியுமிருப்பது மெத்தவும் மெச்சத்தக்கது தான். இந்த (பங்காள) மாகாணத்தின் அதிபதியான ஸர். எட்வேர்டு. பேகரும், அவர்போன்ற மற்ற அதிபதிகளும் இந்த விஷயத்தை விசேஷசிரத்தையுடன் கவனித்து உழைத்துவருவது வெகு நலம். ஏனெனில் கோ ஆபரேஷன் தழைக்கவேண்டுமானால், ஜனங்களுக்குள் உற்சாகம் எவ்வளவிற்கும் அதிகரிக்கலாம். உத்தியோகஸ்தர் (சாமான்னியருக்குள்) இவ்விஷயமாய் எவ்வளவு உற்சாக மூட்டினாலும் தகும். சந்தேகமில்லை. நாளது தேதிவரை வந்திருக்கும் ரிபோர்ட்டுகளெல்லாம் திருப்திகரமாகவே யிருக்கின்றன. காரியமும் நாம் விசாரித்ததற்குக் குறைவில்லாமல் சீராகவே நடந்து வந்திருக்கிறது.

என்றாலும் இதில் முற்றிலும் புதிதாக ஒன்றும் புலப்படவில்லை. விசாரிக்குமிடத்து, பலவிஷயங்களில் காரியம் நடக்கும் மாதிரிமட்டும் வித்தியாசப்படுகிறதே யொழிய சங்கதி புதிதல்ல. ஏனெனில், இந்தியர்கள் தொன்று தொட்டு எக்காலத்திலும் இம்மாதிரி, பரஸ்பரசகாயங்கொண்டு காரியம் நடத்திவருபவர்கள். தவிர, கிருஷி காரியங்களுக்கு உபகாரமாகச் சர்க்காரிடமிருந்து தக்காவிப் பணம் முதலியன வாங்கியும் இவர்களுக்கு

அநுபவமிருக்கிறது. ஆனால் தக்காவிக்குச் சிலதோஷங்களுண்டு. இந்த முறையாகப் பணம் சில சந்தர்ப்பங்களில் மட்டுமே கிடைக்கும். கிடைப்பதும் நிச்சயமில்லை. தவிர ஜனங்களுக்குள் தந்தமக்காக வேண்டியதைத் தாமே தேடியடைவதாகிய பெருத்த ரகசியம் வேரூன்றுவதற்கிடமில்லை. கோஆபரேடிவ் முறையிலோ வென்றால், இதுதான் முக்கியமானதும், முதலுடையதுமான பெரும் பிரயோஜனம். ஆனால், இந்தப்படிக் கிராமப்பாங்கு மெம்பர்கள் அன்னியருதவி வேண்டாமல், தமக்கு வேண்டியதைத் தாமே ஒருவாருகத் தேடியடைவதற்கும், பாங்குகளுக்கு வேண்டும் மூலதனத்தைத் தாமே மீந்து உதவுவதற்கும், இனிக்கொஞ்சகாலம் செல்லும். அதுவரை அவர்கள் பணம் வாங்க வருவார்களே யல்லது கொடுக்க வரமாட்டார்கள். ஆதலால் இப்போது பாங்குகள் நடக்கவேண்டுமானால், பணம் அன்னியமனுஷ்யரிட மிருந்தே வரவேண்டும். ஆகவே பணத்தை மொத்தையிற்போட்டு வீணுக்குபவருக்கு, இப்பொழுது நல்ல தருணம் வாய்த்திருக்கிறது. அவர்கள் அந்தப் பணங்களை இம்மாதிரிப் பாங்குகளுக்கு உதவியிருத்திறதாலும் நன்மையடையலாம்.

குடித்தனக்காரரை எப்படியாவது ஒருமுறை சாவுகார் கையினின்றும் விடுவித்து, அவர்களுக்கு வேண்டிய திரவியத்தை உதவி, அந்தத் திரவியத்தை உத்தம வழியில் செலவுசெய்து பயனடையச் சௌகரியமு மேற்படுத்திக் கொடுத்து விடுவோமாகில், அதனாலுண்டாகும் நன்மையைத் தேசத்திலுள்ள சகலரும் சீக்கிரத்தி லடைவார்கள். ஆனால் இப்பாங்குகள் விஷயத்தில் ஒரு ரகசியமட்டும் நாம் எப்போதும் மறவாமலிருக்க வேண்டும். அதாவது, (நாம் மேற்கூறியபடி) இவைகளில் ஒவ்வொன்றும் தத்தமக்கு வேண்டிய சகாயத்தைத் தமது யோக்கியதையைக் கொண்டே அடைவதாம். இப்படி யில்லாவிட்டால், பாங்குகள் தாம் பிழைக்கமாட்டாமற் போவது மட்டுமேயன்றி, அவைகளால் மெம்பர்களுக்கும் உபகாரங் குறையும். ஆகவே இம்மாதிரியில் பாங்குகளை ஆரம்பிப்பது அவசரப்பட்டு ஆவதன்று. நிதானித்தே ஓடவேண்டும். எடுத்தவைகளை ஸ்திரப்படுத்திய பிறகு தான் புதுப் பாங்குகள் ஆரம்பம் செய்யவேண்டும். ஏனெனில், பாங்குகள் அதிகமில்லாவிட்டாலும், இருப்பவைகளைச் சீராக நடத்தி, அன்னியோன்னிய சகாயமென்னும் பெரிய தருமத்தைப் பலப்படுத்தி, வியாபாரம் கிரமப்படி நடந்துவரச் செய்தால், அதுதான் சரியான காரியம். அதனால் தான் சாசுவதமான நன்மை கிடைக்கும். இதைவிட்டுப் பாபரவென்று தாறுமாறாக எங்கும் பாங்குகளை ஆரம்பித்து விடுவதில் பிரயோஜனம் சிறிதுமில்லை.

நாம் (இதுவரை) பேசிவரும் பாங்குகளுக்கு கோஆபரேஷன், (என்றால், பரஸ்பரசகாயம்) என்பது முதலாகக் காணும் லக்ஷணம். ஏனெனில் இவை ஜாயின்டு ஸ்டாக்குக் கம்பெனிகளல்ல. இக்கம்பெனிகளில் காரியம் எவ்வளவு சீராய் நடந்தாலும், மூலதனப் பங்குள்ளாருக்கு மட்டும் தான்



அதனாலுண்டாகும் நற்பயன் உபயோகப்படும். ஆனால் கோஆபரேடிவ் பாங்குகளிலோ, மெம்பர்களுக்குப் பொறுப்பு இவ்வளவுதானென்று கிறிட்டுச் சொல்லுவதற்கில்லை. ஆகவே காரியம் சீராகநடக்க வேண்டுமென்கிற அக்கரை எல்லா மெம்பர்களுக்கும் இருந்து தீரவேண்டும். ஆதலால் எல்லா மெம்பர்களும் காரிய நிர்வாகிகளாகி, ஜாக்கிரதையாய் நடக்க வேண்டியது பெருங்கடமையாகிறது. இப்போது சர்க்கார் சேவிங்க்ஸ் பாங்குகளில் (பணம் போட்டிருக்கும்) இந்தியர்கள் சுமார் லக்ஷம் பெயரிருக்கிறார்கள். ஆனால் இவர்களில் 20000 பெயர் கூடக் குடியானவரல்லர். இப்படி யிருப்பதற்கு என்ன காரணம்? குடியானவனுக்கு எப்போதும் கைம்முதலாவது (சாவுகாரிடத்திற் பட்டிருக்கும்) கடனேயாம்! ஏதாவது ஒருவருஷம் விளைச்சல் கூடிக்கண்டால், முட்டுவழிக்குப் பணங்கொடுத்த சாவுகார் அதை வாயிற் போட்டுக் கொள்ளவென்று காத்திருக்கிறான். அனியாயவட்டி கொடுக்க வேண்டியிருக்கும்வரை குடியானவனுக்கு மீட்சியேயில்லை. என்றாலும், வெகுகாலமாகக் கஷ்டப்பட்டு, எல்லாத்துக்கங்களையும் பொறுத்து வந்திருக்கும் இந்தியக் குடியானவனுக்கு, இனியாகிலும் நல்லதசை கிடைக்குமென்று நாம் நம்புகிறோம். அப்படி யவனுக்குத் தசைமாறினால், இந்தியாவிலுள்ள சமஸ்தமான ஜனங்களுக்கும் தசைமாறும். கிருஷித்தொழிலும் தழைக்கும். பல்வகைச் செல்வமும் செழிக்கும். தடையேயில்லை."

---

## மற்ற மாகாணங்களுடைய 1908-09 வருத்திய ரிபோர்ட்டுகளிலிருந்து சேகரித்த விஷய விசேஷங்கள்.

---

### I. பஞ்சாப்.

---

லாந்தர் டிஸ்திரிகட்டில் உள்ள 89 ஸொஸைட்டிகளில், 70 ஸொஸைட்டி மெம்பர்கள் தமக்கு வேண்டிய பணத்தைப்பாங்குகளிலேயே வாங்கியும் கொடுத்தும் வருகிறார்கள். அனேக கிராமங்களில் சாவுகார் என்பவருடைய தலையே காணவில்லை. பழங்கடன் தொலைந்து, சாவுகாருக்கு அடைமாற்ற பூமிகளெல்லாம் திரும்பக் குடிகள் கைவந்துசேருகின்றன. தங்களுடையவையென்று சொல்லிக்கொள்ளும் பூமிகளில் இப்பொழுதுதான் மகருல்கள் குடியானவருக்கு உதவுகின்றன. [illegible] பாங்குமெம்பர்களை [illegible] "பண்டங்களை"

அதிகமாக வாங்கி, நல்லஜாதி விதையும் சம்பாதித்துக் கிருஷிசெய்து வருகிறார்கள். வியாச்சியம் தொடருவதும் மட்டுப்பட்டு வருகிறது. சில்லரைவழக்குகளுண்டாவதை மெம்பர்களே மத்தியஸ்தராகிப் பைசல்செய்து விடுகிறார்கள். கிராமங்களில் துஷ்டராயிருப்பவர் மெம்பராகும்வரை அவர்களுக்குப் பணம்கிட்டுவதில்லை. மெம்பராகியும், அவர் துர்க்குணம் மாறும்வரை அவர்களுக்கு நிர்வாகப்பதவி கிட்டுவதில்லை. இப்படியாகவே, துஷ்டர்களுக்கு மனமிருந்தாலும் இல்லாவிட்டாலும், நல்வழியையே அனுசரிக்கவேண்டி வந்திருப்பதாக என்னிடம் அநேகர் உறுதியாய்ச் சொல்லியிருக்கிறார்கள்.

2. ஒரு ஸொஸைட்டிக்காரர் அறுப்புயந்திரமொன்றை விலைக்குவாங்கியிருக்கிறார்கள். பணம் பெயரக்கூடிய கிராமங்களிலெல்லாம் இவ்வாறு தாராளமாய்ச்செய்து கிருஷித்தொழில் முன்னுக்குவரவேண்டி, பரஸ்பரம் உதவிசெய்துகொள்ளலாம்.

*　　　*　　　*　　　*

3. எந்தக்கிராமங்களில் குடிகள் கடன்பட்டு நொந்துபோயிருக்கிறார்களோ, அங்கேதான் கோஆபரேஷன் முறைகள் நன்றாகப்பலிக்கின்றன. தாங்களாக லேவாதேவிசெய்து லாபமடைவதற்கு இவ்விடங்களில் வகையில்லாததால், கிராமப்பாங்குகள் உண்டாவதில் இச்சனங்களுக்குப் பலவகையாலும் லாபமேதவிர, ஒருவகையாலும் நஷ்டமில்லை. இம்மாதிரிப்பாங்குகளில் நியாயமான வட்டிக்குக் கடன்வாங்கி, அம்மூலமாய் அதிகவட்டி வாங்கும் சாவுகாருடைய பழங்கடனைத்தீர்ப்பது இவர்கள்செய்யும் முதற்காரியம். இவ்வாறு அவன் வலையினின்றும் விடுவித்துக்கொண்டால், பிறகு தமது மகசூல்களை அவனுக்கு அனியாயவிலைக்கு அளந்து கையிழந்துபோகும் கஷ்டம் நீங்கிவிடுகிறது. ஆகவே அவர்கள் மகசூல்களை எப்பொழுது தருணமோ, எப்பொழுது விலைகூடுமோ, பார்த்திருந்து, மனம்போல் விற்று லாபமடைகிறார்கள். இவ்வாறு கூடும் லாபத்தொகையைக்கொண்டு, பாங்குகளில் முட்டுவழிக்காக வாங்கிய தொகையை அசல் வட்டிசகிதம் பலதவணைகளில் சில்லரையாகக்கொடுத்துத் தீர்த்துவிடுகிறார்கள். கடன் சுமைநீங்கவே, குடியானவனுக்குப் பிழைக்கலாமென்கிற தைரியம் உண்டாகிறது. ஆகவே மறுபடிவேண்டியபோது கொஞ்சம் கடன்வாங்கி, கிருஷிசெய்து, மகசூலிலிருந்து லாபம் மற்றும் பெருகும்படி செய்துகொள்ளுகிறான்.

---

## II· பர்மா.

பொறுப்பு வரையறுமல், கிராமப் பெரியதனக்காருடைய அதீனமாகி, கடன்வாங்கவேண்டிய காரியங்கள் இன்னவையென்றும் விதிகளேற்பட்ட கிராமப்பாங்குகளை விடச் சிறந்த உபாயம் கிருஷிகருக்குத் திரவியசகாயம் செய்யும் விஷயத்தில் நாம் அறிந்ததில்லை.　　*　　*　　*

5. இப்பொழுதிருக்கிறபடி, ஸொஸைட்டிகளில் அநேகமாய் ஒவ்வொரு மெம்பரும் வருஷம் தப்பாமல் கடன்வாங்கிவருகிறார். ஆதலால் லூஸிரட்டி பாங்கு * முறைப்படி, ஒவ்வொருமெம்பரும் பங்குக்காக வருஷம் இவ்வளவுகொடுத்துத்தீரவேண்டுமென்றுள்ள நிபந்தனையினுல் உபயோகம் ஏதோ இருப்பதாகப் பிரமையே தவிர வாஸ்தவத்தில்இல்லை. மெம்பர்கள் பாங்குமூலதனத்திற்குப் போடும் தொகையைவிட அதிகமாகக்க

* இதன்பொருளை 113-வது பக்கம் பார்த்தறிந்து கொள்க.



டன் வாங்கி வருமளவும், பாங்குத்தொகைக்காகச் செலுத்தும் பணம் வட்டிச்சுமையோடு கூடிப் பாரம் அதிக்கரிப்பது தான் கண்டபலன். வேளாண்மைத்தொழில் செய்பவனுடைய பணத்தை இம்மாதிரி ஸொஸைட்டிகளில் போட்டு வைப்பதை விடப் பூமியிலும், பண்டங்களிலும், போட்டு வைப்பது நலமென்று சிலர் வாதிக்கலாம். இது வாஸ்தவம், அல்லது வாஸ்தவமாகத்தான் வேண்டும். ஆகவே ராபேஸன் முறையில் சீராக நடக்கும் பாங்கு, லூஸாட்டி முறையில் சீராக நடப்பதைக் காட்டிலும் சிரேஷ்டமென்று ஏற்படுகிறது. ஏனெனில், சில வருஷம் கழிந்து, ஆஸ்தி மொத்தம் போட்டால், முற்சொல்லியதில் மெம்பர்களுக்கு உடைமை அதிகரித்துக்காணும். லூஸாட்டி பாங்கு மெம்பர்களுக்குத் தங்கள் ஸொஸைட்டித்துப்பட்டுப் பணம் அதிகரித்துக்காணும். மற்றதிலோ, மெம்பர்களுக்கு ஸொஸைட்டி உடைமையைத் தவிர்த்து ஆஸ்தி ஆதிகரித்துக்காணும். பொறுப்பு வரையறுமலிருப்பதிலும், ராபேஸன் முறைதான் சிறந்ததென்னலாம். ஆனுல் லூஸாட்டி முறைக்கு இந்த ஒரு விஷயத்தில் குணம் அதிகம். அதாவது ஜனங்களுடைய மனதை இது அதிவேகமாய்க் கவர்கிறது. பணம் சேரவேண்டுமானால், (எவனுக்கும்) தன் பாங்குக்கணக்குப் புஸ்தகத்தைப் பார்க்கப் பார்க்க எப்படி ஆக்கிரகமுண்டாகுமோ, அப்படி "நல்ல வீடு" (முதலிய உடைமைகளால்) ஆக்கிரகம் உண்டாகாது. ஏனெனில் மெம்பர்களுக்கு உள்ள ஸேவிஙு பாங்கில் போடுவதினுல் கொஞ்சம் மட்டுப்படுமாகிலும், பிரத்தியேகம் ஒவ்வொருவருக்கும் வரக்கூடிய ஆபத்துகளுக்கிடமற்ற, நிதியாகஇருப்பது (யாருங்காணக்கூடியது.) தவிர ஒவ்வொரு வருஷமாகக் கழியக்கழிய, மெம்பர்கள் பாங்கில் போடும் மூலதனமும் அதிகமாகிறது. ஆகவே காரியம் சீராக நடக்கவேண்டிய அக்கறை ஒவ்வொருவருக்கும் விடாமலதிகரித்தே வரவேண்டும்.

6. இந்த வருஷத்திய நடவடிக்கைகளிலெல்லாம் முக்கியமானது, ரங்கூன் பாங்கு இந்த ஸொஸைட்டிகளுக்கு வேண்டியபடி திரவிய சகாயம் செய்வதாக ஒப்புக்கொண்டதாம். ஆதலால் கீழ் பர்மாவில் வேண்டிய பணத்திற்கு இதுவே சாதனமாகிவிட்டது. டிபாஸிட்டுப் பணங்களை எப்போது கேட்டாலும் கொடுத்து விடுவதாகப் பாங்குக்காரர் ஒப்புக்கொண்டிருக்கிறார். இதுவரை காலாவதியை வெகு ஜாக்கிரதையாக நிதானித்து, தான்னியங்களை அறுவடையான பிறகு விற்றுவிடுவதற்கு இத்தனை மாசமாகுமென்பதை நுட்பமாய்க் கவனித்து, நடவடிக்கையும் அப்படி யெண்ணியபடியே நடந்து வரவேண்டியிருந்தது. இல்லாவிட்டால் ஸொஸைட்டிகளில் பணம் வீணுகிக்கிடக்கும். இனி இந்த உபத்திரவம் மேற்சொல்லிய காரணங்கொண்டு நீங்கிவிட்டது.

7. ஸொஸைட்டிகள் (புதிதாக) ஆகவேண்டுமென்று பாடுபடும் தருமகர்த்தர்களே தாங்கள் விசாரித்துப் பிரயாசைப்பட்டு உண்டாக்கிய பாங்குகளுக்கு மேலதிகாரிகளாகிக் காரியத்தைச் சீராய் நடத்துவது சகஜம். ஆனுல் ஸொஸைட்டிகளை முதன் முதல் உண்டாக்குவதற்குப் பாடுபடுவது சந்தோஷகரமாயிருக்கிறது. உண்டானதை ஜாக்கிரதையாக இரவும் பகலும் காத்து, தப்பிதம் நடக்கவொட்டாமல் திருத்தி வருவதோ ருசியற்ற காரியம். ஆதலால் இந்தச் சப்பைக்காரியத்திற்கு ஜனங்கள் தீவிரமாய் வருவதில்லை. மற்றதற்கோவென்றால் வேண்டிய சகாயம் கிடைக்கிறது.

## III. ஆக்ரா—அயோத்திய—ஐக்கியமாகாணங்கள்.

8. காசி கோஆபரேடிவ் ஸொஸைட்டி அவ்விடத்திலுள்ள பெனாரீஸ் ஜாயிண்டு ஸ்டாக்கு பாங்கு என்னும் நிதியுடன் கலந்து நல்ல ஏற்பாடு ஒன்று செய்திருக்கிறது. அதின்படி, மேற்கண்ட நிதியிலிருந்து ஸொஸைட்டிக்கு வேண்டியபோது, வேண்டிய அளவு பணம் பெற்றுக்கொள்வதென்றும், அன்றாடம் கணக்குப் பார்த்துக்கடன் மொத்தங்கண்டு, அந்த மொத்தத்திற்கு வட்டி 100-க்கு 7-வீதம் சேர்த்து நிதி வாப்ஸ் பெற்றுக் கொள்வதென்றும் ஒப்பந்தமாகி யிருக்கிறது. இம்மாதிரி வரவு செலவுக்கணக்கு வெகு நல்லதென்று வேறு ஸொஸைட்டிகளுக்கும் நான் சிபார்சு செய்திருக்கிறேன். ஏனெனில் இந்த முறைப்படி ஸொஸைட்டிகளுக்கு அவசியமானபோதெல்லாம் பணம் வெகு சுலபமாய்ப் பெயருவதுடன், அனேகம் டிஸ்திரிக்ட்டு பாங்குகள் பணம் செலவாகாமல் படும் உபத்திரவம் நின்றுவிடும்.

9. டிஸ்திரிக்டு பாங்குகளுக்கு என்ன குறைகளிருந்த போதிலும், கோஆபரேஷன் விர்த்தியடைவதற்கு இவைகள் வெகு முக்கியமானவும், அவசியமானவுமான சாதனங்கள். ஜாயிண்டுஸ்டாக்கு பாங்குகளுடையவும், (அவைகளில்) டிபாசிட்டு வைக்கும் சாமான்னியருடையவும், பணத்தை கிராமப்பாங்குகளுக்கு உதவும்படி செய்ய இவைகள் தான் சாதனங்களாகயிருக்கின்றன. இவைகளில்லாவிட்டால் கிராமப்பாங்குகள் சர்க்கார் உதவிபெற்று, வியாபாரமுதல் போதாமல், ஏதோ தருமார்த்தமாக உழைத்து வரும் (ஜீவகளையற்ற) சங்கங்களாகத்தீர்ந்து விடும். தவிரக் கடன்வாங்கும் (கோஆபரேடிவ்) ஸொஸைட்டிகளுடைய காரியங்கள் சரிவர நடக்கின்றனவாவென்று இவைகளே பார்த்து வருவதால், டிபார்ட்மெண்டாருக்கு அம்மட்டில் வேலை கம்மியாகிறது. இவர்கள் வகை இன்ஸ்பெக்டர்கள் தருமத்திற்காக உழைப்பதால் சர்க்காருக்கு இதை முன்னிட்டுக் கால் அணா கூடச் செலவாவதில்லை. இவ்வருஷத்தில் நடந்த காரியங்களிலெல்லாம் முக்கியமானதாக இன்ஸ்பெக்ஷன் விஷயமாய்ப் பூராவாக வேலை செய்யும்படி ஒரு கூட்டம் உத்தியோகஸ்தர் நியமனமானதைச் சொல்லலாம். ஆகவே இப்பொழுது "பாராபாங்கி" ஒன்று தவிர, மற்றபாங்குகளிலெல்லாம் சம்பளம் பெற்று உழைக்கும் மானேஜர்களோ, அஸிஸ்டெண்டு மானேஜர்களோ, இன்ஸ்பெக்டர்களோ, ஏற்பட்டிருக்கிறார்கள். அனேகமாய் அவர்கள் உள்ளூர்க்காரர்கள். டைரெக்டர்கள் தாம் அவர்களை நியமிப்பது. ஆனால் டிபார்ட்மெண்டாரும் சம்மதிக்க வேண்டும். இவர்களுக்கு இன்ஸ்பெக்டர் தரபில் 25 ரூபா மாதச் சம்பளமாக ஆரம்பித்து, மானேஜர் பதவிக்கு ரூபா 75 வரை சம்பளத் தராதரமேற்பட்டிருக்கிறது. இவர்களுக்கு, கடன் வாங்கும் ஸொஸைட்டிகளுடைய கணக்குகளை அங்கங்கே அடிக்கடி போய்த் தனிக்கைசெய்வதும், மொத்தத்தில் காரியம் நேர்வழியில் நடக்கிறதாவென்று பார்த்துக்கொள்ளுவதும், முக்கிய காரியமாம். ஸொஸைட்டிகள் ஆரம்பித்துத் [illegible] தான் ஆவதால், இம்மாதிரிப்பலவிதமாகவும் விசாரணை இருந்து தீரவேண்டும். இல்லாவிட்டால் காரியம் கெட்டுப்போம்.

10. மெம்பர்கள் ஒரே கிராமத்தில் சேர்ந்து ஒருங்கு கூடிவாழ்வதே ஸொஸைட்டிகளுக்கு க்ஷேமமென்றும், பெரிய வட்டங்களில் சிதறுண்டு கிடப்பது நல்லதல்லவென்றும், இவ்வருஷத்திய அனுபவத்தையுங் கொண்டு நிஷ்கர்ஷையாய்ச் சொல்லலாம். பரஸ்பரசகாயம் என்னும் உறவு ஜனங்கள் ஒருங்கு சேர்ந்திருந்தால் அதிகரிக்கத்தான் வேண்டும். ஸொஸைட்டி நிர்வாக காரியத்தில் மெம்பர்களுடைய [illegible]ரம் அக்கறை அதிகரிக்கவும் வேண்டும். ஏனெனில் மெம்பர்களில் எல்லாருக்கும்



எல்லாருடையவும் ரகசியங்கள் தெரியும். வியாபாரவட்டம் பெருத்து, மெம்பர்கள் சிதறியிருந்தால், எல்லோருக்கு மிருக்கவேண்டிய பொறுப்பு பலங்குறைந்து, நிர்வாக காரியம் யாராகிலும் ஒருவர்கையில் வந்தடைகிறது. ஆதலால் ஒரே கிராமத்தில் கூடுமானால் இரண்டு அல்லது அதிகப்பட்ட ஸொஸைட்டிகள் இருக்கலாமென்றும், அப்படியிருப்பதே நலமென்றும் சிபார்சு செய்து வந்திருக்கிறேன். இவ்விஷயத்தில் எனக்கு ஆலசியஞ்சிறிது மில்லை. ஒரே ஸொஸைட்டியில் மெம்பர்கள் தொகை பெருகி, காரியநிர்வாகம் சீர் கெடுவதை விட இது பலவகையாலும் திறமே. இவைகளை (இங்கொன்றும், அங்கொன்றுமாயிராமல்) கூடியமட்டில் அடுத்திருக்கும்படி பார்ப்பதும், போக்குவரவு சுலபமான ஸ்டேஷன்களிலிருக்கச் செய்வதும், இன்னும் திறமாம். ஏனெனில் இவ்விருவகைச் சௌகரியங்களு மிருக்கும் அளவிற்கு, தணிக்கை செய்வது சுலபமாவதுடன், ஒரு ஸொஸைட்டியின் அனுபவம் மற்றவைகளுக்கும் நன்றாய் உதவுகிறது. இந்த மாகாணங்களில் ஸொஸைட்டி மெம்பர்கள் ஜாதி விஷயத்தில் ஒற்றுமை வேண்டுவதில்லை. பஞ்சாயத்துகளில் மெம்பர்கள் நானாகோத்திரங்களாகவே யிருக்கிறார்கள். ஆகவே ஸொஸைட்டி மெம்பர்கள் பல ஜாதியாராகிலும், அதன் க்ஷேமலாபத்தைப்பொறுத்தமட்டில், எல்லோரும் ஒருவிதமாகவே பாவித்து நடந்து வருகிறார்கள்.

11. பணம் வாங்குவதில் இன்னகாரியத்திற்காக வென்பது. கடன் வாங்கும்போது காரியமின்னதென்பதைத் தீரவிசாரித்து அம்மூலமாய்க் கோஆபரேஷனுக்குள்ள நலங்கள் கெடாமல் பார்த்துக்கொள்வது அவசியமென்று இவ்விஷயத்தைக் குறித்தெழுதுபவரெல்லோரும் வற்புறுத்திவருகிறார்கள். இவ்வகையான பந்தோபஸ்துகளில்லாமல், பணத்தைச் சலீசுவட்டிக்குக்கடன் கொடுப்பது இவைகளுக்கு வாஸ்தவத்தில் கெடுதியையே விளைவிக்கிறதென்று ஐரோப்பிய தேசங்களில் அனுபவங்காணுகிறது. இவ்விஷயத்தில் இன்ஸ்பெக்டர்களும், மானேஜர்களும் விடாமல் புத்திசொல்லியேவருகிறார்கள் என்றாலும் பஞ்சாயத்தார்களுக்கு இன்னும் புத்தக[illegible] அதிகரித்துத்தான் காணுகிறது. அடியிற்கண்டவைப் போன்ற மோசங்கள் சாதாரணமாகக் காணுபவை. ஏருதுகள் வாங்குவதற்காகப் பெறும்பணத்தைப் பலதவணைகளில் செலுத்துவது சாமான்னிய வழக்கம். விதைக்கும் தண்ணீருக்கு[illegible] மகளுக்கு உத்தேசித்துக்கடன் வாங்குகிறார்களோ அது அறுவடையாகி, விற்றுமுடிந்த பின் அந்தமூலமாகச் செல்லாகவேண்டியது. வாங்கியபணத்தைப் பலதவணைகளில் செலுத்தச் சௌகரியம்வேண்டி, ஒருமெம்பர் தான் வாங்கும்பணத்திற்கு ஏருதுவாங்குவது காரியமென்று எழுதிவைத்து, வாங்கியபணத்தை விதை, கீர்க்கூலிவகைகளில் செலவிடுவது சாதாரணம். மொத்தமாகப்பார்க்குமிடத்து இதில் விசேஷ நஷ்டமில்லையென்பது வாஸ்தவந்தான். ஏனெனில் இருவகைக்கடன்களும் ஆவசியகமேயன்றி வேறல்ல. ஆனால் கோஆபரேடிவ் தருமத்தைபபேக்ஷித்து இவ்விதமாக ஏமாற்றுதல் இல்லாமலே பார்க்கவேண்டும். இல்லாவிட்டால் பஞ்சாயத்தாருடைய அதிகாரம் குறைவுபடுவதுடன் கோஆபரேஷனுக்கு மூலாதாரமான [illegible] வாடிக்கையும் தவறுகிறது. அனேகஸொஸைட்டிகளில் பழங்கடன் தீருவதற்காகக் கடன் கொடுத்திருக்கிறது. ஸொஸைட்டிகள் புதிதாக உண்டானால், முதன் முதல் செலவாகும்பணம் இதற்காகவே தான் உபயோகப்படுகிறது. அனேகம் குடித்தனக்காரர், தங்கள் பூமி அடைவுபோமல் தப்பியதற்கும், வேறு அனேகர் பூமியைவிட்டு ஓடாமலாவது, பூமிஜப்தியாகாமலாவது, தப்பித்துக்கொண்டதற்கும், தங்கள் ஸொஸைட்டியிலிருந்து தருணத்தில் வந்து உதவிய பணமே காரணமாயிருக்கிறது. இம்மாதிரிக் கேசுகளில், வாங்கும்தொகை மோசக் [illegible]தென்று பார்த்துக்கொள்ளுவதற்காக, கூடியமட்டில் பத்திரங்களைக் [illegible] உபயோகிக்கும்படியே தீர்ப்பந்தமிருந்து வருகிறது. என்றாலும், பழங்கடன்தீருவது

காலக்கிரமத்தில் தானாகவேண்டும். ஏனெனில் மெம்பர்களில் அனேகர் கடன் அபாரமாய்ப்பட்டிருக்கிறார்கள். இம்மாதிரி ஜனங்களுக்கு அவர்கள் பட்டகடனையெல்லாம் தீர்க்கப்புகுவது கெட்டகாரியம். இதைச்செய்து நிறைவேற்றவேண்டிய பணம் ஸொஸைட்டிகளுக்குக் கிட்டுமென்றாலும், இது நல்லதல்ல. கடன்வாங்குவது அனேகமாய் வேளாண்மைக்காகத்தான். ஆனால் கல்யாணச்செலவு போன்ற, ஆவசியகமென்றாலும் வியர்த்தமாகிற செலவிற்கும் பணம்கொடுப்பதில்லை யென்றில்லை. இப்பொழுது திருத்தி வழங்கிவரும் கணக்குப் புஸ்தகங்களில் கடன்வாங்குவது இன்னகாரியத்திற்கென்று விவரங்குறிப்பிட ஒருகலம் சேர்த்திருக்கிறது. * * *

12. இந்த மகாணங்களிலுள்ள கோ ஆபரேடிவ் கிராமப்பாங்குகளுக்குள், சாஸ்திரப்படி எல்லாலக்ஷணங்களும் அனேகமாய் அமைந்திருப்பது பெனரீஸ் டிஸ்திரிக்கட்டிலுள்ள ஷாபூர் ஸொஸைட்டி யென்னலாம். இதில் சுமார் ஐம்பது லேவாதேவி மெம்பர்களிருக்கிறார்கள். ஷாபூரிலுள்ள எல்லாக் குடும்பங்களிலும் இவர்கள் சம்பந்தப்பட்டவர்கள். ஸொஸைட்டிக்கு மூலதனம் இப்போது ரூபா 1000. இது அனேகமாய் அந்தக் கிராமத்தாரிடமிருந்தே வந்து சேர்ந்தது. டிபாசிட்டு வேண்டுமானால் வைக்கலாம். அப்படிக் கட்டாயமொன்று மில்லாமலே ரூபா 500 டிபாசிட்டாகி வந்திருக்கிறது. அதற்கு 100-க்கு $6\frac{1}{4}$ வட்டி வீதித்திருக்கிறது. அவ்விடத்தில் சென்ற மூன்று வருஷங்களாக விளைச்சல் குறைந்து வந்த போதிலும், 1907ஆ நவம்பர் மாதத்தில் ஸொஸைட்டி ஆரம்பமானது முதல் நாளது வரை பாக்கிதாருடைய தகாதா வொன்றுமில்லை. பஞ்சாயத்தார் எல்லோரும் குடித்தன ஜீவனம். கிராமத்திலுள்ள எல்லா வகையாருக்கும் பிரதிநிதிகள் உண்டு. ஸ்ரீமான் மங்களப்பிரசாத பாபு அவர்கள் அக்கிராசனாதிபதி. பக்ஷமொருமுறை பஞ்சாயத்து கூடி ஜாதிநியாயங்கள், கிராமத்தகாரார்கள் இவைகளைப் பைசல் செய்துகொண்டும், பாங்குவிஷயமாய் அதற்கென்றேற்பட்டிருக்கும் வேலையைச்செய்துகொண்டும் வருகிறது. இது ஆரம்பமாகிய பின் ஷாபூர் குடியானவனொருவனும் சிவில், கிரிமினல் கோர்ட்டுகளில் வியாச்சியந்தொடரவே யில்லையென்று நான் கேள்விப்பட்டேன். வேறுவகையிலும் இந்த ஸொஸைட்டி வெகு சாமர்த்தியமாய் வேலைசெய்து வருகிறது. க்ஷாம காலத்தில் மெம்பர்கள் பணம் வீதப்பட்டி கொடுத்து கிராமத்திலுள்ள ஏழைகள் எட்டுப் பெயரை மூன்று மாதம் ஆதரித்து வைத்திருந்தார்கள். கிராமப் பூமிகளில் புதுப்பயிர் சாகுபடிசெய்து பார்க்கவும் பிரயத்தனம் நடந்திருக்கிறது. ஹஜாரிபாக்கம் நெல்லையும், முஜாபர்நகர் கோதுமையையும் இவ்விடத்தில் போட்டுப் பார்த்தார்கள். அக்கிராசனாதிபதி, மேஸ்டன் ஏர் என்பது இப்பொழுது திருத்தமடைந்துள்ளபடி ஒன்றைச் சொந்தத்தில் வாங்கி, மற்ற மெம்பர்களுபயோகிக்க விட்டிருக்கிறார். மெம்பர் வேண்டுகோளுக்கிசைந்து நான் கிருஷி டிபார்ட்மெண்டாரிடமிருந்து நிலக்கடலை விதை கொஞ்சம் வாங்கிக் கொடுத்தேன். இந்தப்பரீக்ஷைகளாலுண்டாகும் நன்மையை நாம் வெகு ஆக்கிரகத்துடன் பார்த்து வருவோம். இந்தச்சிறுஸொஸைட்டியின் காரியங்களை இவ்வளவு விவரமாக நான் எழுதியதற்கு இது காரணம். அதாவது, புத்திமான்களாயச் சில குடியானவர்கள் சேர்ந்து கோ ஆபரேஷன் முறையிலுழைத்தால், அதனால் எவ்வளவு பெரிய காரியங்களாகக் கூடுமென்று இதனால் செம்மையாக வெளியாகிறது.

13. சாவுகார்களுக்கு இவ்விஷயத்திலுள்ள நோக்கம்:—லேவாதேவியையே தொழிலாகக் கொண்டிருக்கும் சாவுகார்களுடைய பணம் இதுவரை கோ ஆபரேஷன் ஸொஸைட்டிகளுக் குதவியாக வரவில்லை. அதற்கு மாறாக, கிராமங்களில் செட்டிமார்கள் இதற்கு விரோதமே அதிகமாகச் செய்து வருகிறார்கள். இதனால் இந்த முறையில் வேலை எவ்வளவிற்குச் சீராக நடந்து வருகிறதென்பது வெளியாவதாக



ஒருசமயம் வைத்துக்கொள்ளலாம். ஸொஸைட்டி மெம்பர்களாகும் தனது வாடிக்கைக்காரர்களை மறுபடி தன்னிடத்தில் பற்று வரவு வேண்டியதில்லையென்று சொல்லி நிறுத்துவது தான் சாவுகாருக்கு ஸொஸைட்டி விஷயத்திலிருக்கும் வயிற்றெரிச்சலுக்குச் சாமான்னியமான சாக்ஷியம். ஆனால் இதில் அதிசயமென்பது சிறிதுமில்லை. ஸொஸைட்டிகள் முன்னுக்கு வரவேண்டியதற்கு ஏற்பட்டதசைகளில் இதுவும் ஒன்றென்பது எனது அபிப்பிராயம். ஒரு ஸொஸைட்டி தனக்குத்தாயாதியாகி, வாடிக்கையாய்ப் பற்றுவரவுள்ளவர்களைக் கலைத்துச் சேர்த்துக்கொண்டும், கோர்ட்டுகளில் வழக்குத் தொடர்ந்தால், பிரதிவாதியின் ஆஸ்தியில் பிரதம பாத்தியம் பாராட்டியும் வந்தால், அந்த ஸொஸைட்டி விஷயத்தில் சாவுகாருக்கு எப்படி விரோதமில்லாமலிருக்கும்? மற்றபக்ஷத்திலோ, இதுவரை அவனுக்கு லாபம் விசேஷமாகக் குறையவுமில்லை. தன் பணத்தை இந்த ஸொஸைட்டிகளிற் போடலாமென்பதற்கு, இவைகள் இன்னும் ஸ்திரப்பட்டதாகக் காணுவதுமில்லை இந்த முறை யின்னும் பிரபலித்து வேரூன்றுமாகில், ஒருசமயம் சாவுகார் தன்னுடைய க்ஷேமத்தையே கோரி, இவைகளில் பணம் போட்டாலும் போடுவான். எந்த வகையிலும் நாம் அதைத்தான் உத்தேசமாகவைத்து நடக்க வேண்டும். ஜனங்கள் அனேகமாய் எண்ணியிருக்கிறபடி, சாவுகார்களுக்குச் சாமான்னியமாய் லாபம் பொலிவதில்லையென்பதற்கு இந்த ஒருசாக்ஷியம் போதும். அதாவது, ஸொஸைட்டி மெம்பர்கள் கணக்கில்காணும் தகாதா மொத்தத்தைப் பலவகையில் குறைத்துத் தருவதாகச் சொன்னாலும், அத்தொகைகளை அவன் சந்தோஷமாய்ப் பெற்றுக்கொண்டு, கணக்கைப் பைசல்செய்து விடுகிறானென்பதாம்.

---

## IV. கஷ்டங்களும் அவலமும்.

14. கோர்ட்டு முன்பாகப்போன மூன்று மகாமோசமான கேசுகள் என் தாக்கலுக்கு வந்தது. ஒருகேசில் மூன்று கிராமவாசிகள் நெல் மணு ரூ 6-க்கு விலையிருக்கையில், ஒரு மணு நெல் கடன்வாங்கி யிருந்தார்கள். பணம் ரொக்கமாகக் கொடுக்க வகையில்லாமல், ரூ 7-க்கு நோட்டு எழுதி, மூன்று மாதத்திற் கொருமுறை வட்டியை அசலுடன் சேர்த்து விடுவதாகவும் 1-க்கு $1\frac{1}{2}$ விழுக்காடு ஷாரத்து வட்டியும் கண்டு அதில் கையொப்ப மிட்டிருந்தார்கள். ஆகவே மூன்று வருஷத்திற்குள் பத்திரத்தின் வட்டியும் முதலும் ரூ 300-க்கு அதிகமாயிற்று! கடன்காரன் வெகுதயவாக ரூ 100 தள்ளிக்கொடுத்து, மீதி ரூ 200-க்கு பிராது தாக்கல் செய்தான். பிரதிவாதிகள் பத்திரமெழுதிக் கொடுத்தது உண்மைதானென்றும், ஆனால் வயிற்றுக்கில்லாத கொடுமையினால், கடன்காரன் சொல்லியபடி யெல்லாம் ஒப்புக்கொள்ள வேண்டிவந்த தென்றும், எதிர்வாதம் செய்தார்கள். முன்சீபு பத்திர மொத்தத்திற்கே தீர்மானம் செய்துவிட்டார்! இன்னொருகேசில் மூன்று கிராமவாசிகள் வாதியிடமிருந்து துணி வாங்கியதற்காக ரூ 9 க்கு பத்திரமெழுதிக் கொடுத்து, 3-மாதத்திற்கொருமுறை வட்டியை அசலுடன் சேர்த்துவிடுவதாகவும், வட்டி 100-க்கு $187\frac{1}{2}$ வீதம் கொடுப்பதாகவும் ஷரத்துகண்டு எழுதிக்கொடுத்திருந்தார்கள். அதே முன்சீபு அசல் தொகையுடன் 100 க்கு 75 வீதம் சாமான்னிய வட்டிசேர்த்து டிக்கிரி செய்தார்! மூன்றாவது கேசில் இருவர்சேர்ந்து 15-ரூபாய் கடன் வாங்கினார்கள். அதற்கு வட்டி தினம் 1-க்கு ரூபாய். 1. ஆகவே நூற்றுக்கு வருஷத்திற்கு $2433\frac{1}{3}$ வீதம் கூடிற்று! மூன்று வருஷம் கழிந்து அவர்கள்பேரில் ரூ 999 க்கு தாவா பிறந்தது. வாதி பாக்கியைத் தருமத்திற்கென்று தள்ளி விட்டதாகச் சொல்லிக் கொண்டான். வாஸ்தவத்

தில் அது ஸ்டாம்பு செலவைக் கொடாமலிருப்பதற்காக பிரதிவாதிகள் எதிர்வாதம் ஒன்றும் சொல்லவரவில்லை. முன்சீபோ இந்தத் தலை கீழ்வட்டி விதத்தைக்குறித்து ஒன்றும் யோசியாமல் பிராதுமொத்தம் அனைத்திற்கும் கொடுக்கவேண்டியதாக ஒரு தலைப்பக்ஷமாகத் தீர்ப்பெழுதி விட்டார். ஆதலால் கோஆபரேடிவ் முறையில் எங்கெங்கே பாங்குகள் வேலையாரம்பித்துச் செழித்து விட்டனவோ, அவ்விடங்களில் வட்டிவீதம் குறைந்து வருவதாகிய ஓர் உபகாரமும் ஒருவாறாக வந்து சேருகிறதென்பதைக் கேட்கத்திருப்திகரமாயிருக்கிறது. * *

15. சாவுகார்கள், தருமபுத்தியுள்ளவர்கள் ஆகிய இவர்களிடமிருந்து வந்திருக்கும் டிபாசிட்டுகளல்லாமல், பலவகைப்பட்ட பொதுப்பணங்களும், உத்தியோகஸ்தரிடமும், சாமன்னியக் கிரகஸ்தரிடமும் உள்ள வேறுவகைப் பணங்களும் (இந்தப் பாங்குகளில்) வந்து சேர்ந்திருக்கின்றன. சென்றவருஷத்திய ரிபோர்ட்டில் இவைகளிலனேகத்தை நான் குறிப்பிட்டிருக்கிறேன். ஸ்ரீமான் லூக்கு துரையின் மகம்மதியக்கல்வி பண்டு இப்போது ரூ 3563 கூடியது, டிபாசிட்டிலிருந்ததை வாங்கி, மறுபடி பாரித்பூர் பாங்கில் டிபென்சர்களாகப் போட்டிருக்கிறார்கள். மைமென்ஸிங்கு காலேஜ் தருமகர்த்தர்கள் பயோனேர்ஸென்ட்ரல் பாங்கில் மாசம் ரூ 100-வட்டிக்கு, ரூ 14,000 கொண்டு சேர்த்திருக்கிறார்கள். டிபாசிட்டைக்கெடுவில் கொடாமலாவது, கெடுவானவுடன் வட்டி செலுத்தாமலாவது, ஒரு ஸொஸைட்டியு மிருக்கவில்லை. ஆஸாம் பிரிவுக்கு ஏற்பட்ட என்னுடைய அசிஸ்டண்டு (ரிஜிஸ்திரார்) காமரூப் ஜில்லாவிலிருந்து ஒரு சங்கதி எழுதியிருக்கிறார். அதனுல் கிராமவாசிகளுக்கு இந்தச் சங்கங்களுடைய காரியத்தில் விசுவாசம் அதிகரித்து வருகிறதென்றும், இவைகளில் பணம்போடுவது சுலபமென்றும், நிர்ப்பயமாகப் போடலாமென்றும், தெரிந்துகொள்வதாக வெகுநன்ருய் ஏற்படுகிறது. இவர் ஒரு கிராமப்பாங்கைத் தணிக்கைசெய்துவிட்டு ஒரு நாள் இருட்டானபின் வந்துகொண்டிருந்தார். வழியில் ஒரு கிழவன் ஒரு மரத்தடியில் பையொன்றைக் கையில்வைத்து உட்கார்ந்திருக்கக் கண்டார். அவன் இவருக்கு அந்தப் பையைக்காட்டித் தான் ஆயுட்காலமெல்லாம் உழைத்துச் சேர்த்துவைத்த ஆஸ்தியெல்லாம் அந்தப் பையிலிருப்பதாகவும், அதை மோசமில்லாமல் எங்கு டிபாசிட்டு வைக்கலாமென்று கேட்டறிவதற்காக என் அசிஸ்டண்டுக்கு ஒழிவுகிடைக்கும் வரை நாள் பூராவும் அவருடைய சமுகம் எதிர்பார்த்திருந்ததாகவும் சொன்னுன். இது காலம்வரை அவன் அந்தப்பணத்தைக் குழிதோண்டிப்புதைத்து வைத்திருந்தான். ஆனுல் 20 வருஷமாகத் தானே அதற்குக் காவலாக இருந்து வரவே, அந்த வேதனையும் உபத்திரவமும் இனித் தன்னுல் பொறுக்கமுடியவில்லை. அந்தக் கிராமத்தில் நடக்கும் கோஆபரேடிவ் பாங்கைப்பற்றி அனேகர் புகழ்ந்து பேசக்கேட்டிருந்ததால், தன் பணத்தை அதில்போட்டு வைப்பதினுல் தோஷமொன்று மில்லையாவென்று என் அசிஸ்டண்டைக்கேட்டு, அவருடைய யோசனைப்படி நடக்கலாமென்றிருந்ததாகச் சொன்னுன். என் அசிஸ்டண்டு தைரியம் சொன்னதின் பேரில், அவன் அந்தத்தொகை முழுதும், அதாவது ரூபா 500ம், ஸொஸைட்டியில் டிபாசிட்டு வைத்துவிட்டு, இனித்தன் ஆஸ்தி பத்திரமாகிவிட்டதாலும், தன் குழந்தைகளுக்கு நிச்சயமாய் உதவுமாதலாலும், தான் சுகமாய்த் தூங்கலாமென்றும், திருப்தியுடன் ஜீவனைவிடலாமென்றும், மனப்பூர்வமாய்ச் சொன்னுனும்.



160952

## பங்காளா.

இந்த இரண்டு சங்கங்களுடைய நசையை அனுசரித்துத்தான் [illegible] வேண்டிய காரியம் உருப்படும். இவைகள் தழைத்தால், நாம் எல்லா இடங்களிலும், இக்காரியத்தைப் பிரபலப்படுத்தலாம். இவைகள் உபயோகப்படா விட்டால், வேறு வகைகள் தேடி நாம் ஆரம்பிக்கவேண்டும். இவைகளிரண்டும் இப்பொழுதுதான் ஆரம்பமானவைகள். ஆதலால் இவைகளுக்கு நல்வழி காட்டுவதும், உற்சாக மூட்டுவதும், வெகுவாகத்தான் வேண்டும். ஆனுல் இப்போது இம்மாதிரிப் பரீக்ஷையினுல் நாமேதாவது ரகசியத்தை உள்ளபடி யறியவேண்டுமானுல், அவைகளே எப்படியாவது தட்டுக்கெட்டுத்தடுமாறிப் பிழைத்துக்கொள்ளும்படி பார்க்கவேண்டுவது அவசியம். சுற்றிலுமிருக்கும் பணக்காரர்கள் இவைகளில் பணம் போடும்படி செய்துகொண்டு, வேண்டிய பணத்தைத் தங்களுடைய யோக்கியதையைக் கொண்டே பெற்று, தங்கள் அதீனமாகியிருக்கும் ஸொஸைட்டிகளையும் கோணுமல் நடக்கச் செய்து வருமளவிற்கு, இவைகள் காலக்கிரமத்தில் நிலையாக நிற்பவைகளென்னலாம். இவற்றிற் கேற்பட்ட விதிகள் வெகு தெளிவானவைகள். அவற்றில் யாருடையவும் கை வலுப்பதற்கிடமில்லை. ஆதலால் இவற்றுள் பரஸ்பர சகாயத்திற்கும், தமக்குவேண்டியதைத் தாமே தேடியடைவதற்கும் வேண்டிய சௌகரிய மிருக்கிறது. கோ ஆபரேஷன் விஷயத்தில் இந்திய மகா ஜனங்கள் அனைவரும் ஏகோபித்து உழைத்து, அது முன்னுக்கு வருவதற்கு இந்தியாவில் இடமுண்டா, இல்லையா வென்பதை ருசுப்படுத்த வென்றே இவ்விதிகள் ஏற்பட்டுள்ளன. ஆகவே இந்த இரண்டு சங்கங்களும் (இடம், பொருள், ஏவல்) வித்தியாசப்பட்டுள்ள இருவகைப் பிரதேசங்களில் ஒரேமுறையில் வியாபாரம் நடத்திவருவதில், இந்தியாவின் காலதேசவர்த்தமானங்களுக்கு இந்தமுறை கூடுமா கூடாதா வென்பது திவ்வியமாய்த் தெளிவாகிவிடும். தவிர எந்த அம்சங்களில் நாம் சமயத்திற் கேற்றபடி மாற்றிவிடவேண்டுமென்பதும் வெளியாகும். இரண்டும் முழுமோசமாகப் போயிற்றென்றாலும் நஷ்டமில்லை. இனி இவ்விஷயத்தில் புதிதாகச் செய்யவேண்டிய பிரயத்தனங்களில் இன்னது கூடாதென்றாவது நாமறிந்து கொள்ளலாம்.

18. இவைகள் விஷயத்தில் நான் காணும் முக்கிய தோஷம் இது. இவைகள் மிகவும் சிறியவைகளாதலால் கிராமத்தாருடைய லேவாதேவிகாரியத்தில் இவைகளால் விசேஷமாறுதல்களாவதில்லை. ஆகவே பெரிய சங்கங்கள் செழித்து வருவதனுல் ஜனங்களுக்குக் கோ ஆபரேஷன் விஷயத்தில் பக்தி அதிகரிப்பது போல சீக்கிரத்தில் இவைகளால் பலன் சித்திப்பதில்லை. மெம்பர்களுக்கு டிபாசிட்டு வைப்பதிலுள்ள ரகசியம் உள்ளபடி விளங்குவதில்லை. கடன்வாங்குவது இன்னத்திற்காக வென்னும் விஷயத்தில் கிஸ்துவஜா செய்வதற்காக வென்று குறிப்பிடுவது எப்போதும் யுக்திசாலித்தனமாவதில்லை. கடன் தொகை வசூலாகும் போது, அதில் ஒருபகுதியாவது மெம்பர்களுக்கு மேல் வரும் அத்தியாவசியகமான பிரகிருதங்களுக்காக மீத்துவைப்பதில்லை. வந்தபணத்தைப் பஞ்சாயத்தார் உடனே பூராவாகச் செலவிட்டுத் தற்கால அவசரங்களுக்கு விநியோகம் செய்துவிடுகிறார்கள். இவைகளெல்லாம் போதாமல், வியாபாரத்தில் லாப நஷ்டம் காணக்கூடாத காரியங்களுக்கும் பணம் கொடுக்கிறார்கள். இவற்றையெல்லாம் பார்க்கையில், கோ ஆபரேஷனுக்குள்ள ரகசியம் இந்தச்சனங்களுக்கு இன்னும் நன்ருய் மனதிற் பதியவில்லை யென்றே தெரிகிறது. ஆனுல் இது நமக்குத்தெரிந்ததே தவிரப் புதிது அல்ல. என்றாலும் மெம்பர்களுக்கு இந்தமுறையினது முக்கிய காரியங்களும் அம்சங்களும் தெரியும். ஸொஸைட்டிப்பணம் சோரசு உபயோகப்பட்டு வரு

XMm211,N09
N09:1

கிறதா வென்பதையும் அவர்கள் கவனித்து வருவதாகத்தான் காணுகிறது. மூலதனம் கிரமமாகக் கைமாறியே வருகிறது. வாங்கியவர் கொடுக்கத் தவறியதாகப்பேச்சே இல்லை. இவைகள் சாமான்னியமாய் நடவடிக்கை நடத்துவது சரியென்றாலும், பல விஷயங்களில் படாடோபம் பலமாயிருக்கிறது. ஆனால் மெம்பர்கள் இது விஷயத்தில் புத்தியைச் செலுத்துகிறார்களென்றும், வேறு ஸொஸைட்டிகள் முன்னுக்கு வருவதைக் கவனிக்கிறார்களென்றும் சொல்ல ஆஸ்பதமிருக்கிறது. இந்த ஸொஸைட்டிகள் பிரபலிக்கின்றனவென்பதற்கு அடையாளமாவது தேசிய பாஷைகள் கற்பிக்கும் பள்ளிக்கூடங்கள் தேவையென்று காணுவதாம். நம்முடைய (ஸொஸைட்டிகளுள்ள) கிராமங்களில் அனேக இடங்களில் இராப்பள்ளிக்கூடங்கள் ஆகியிருக்கின்றன. மெம்பர்களில் அனேகர் அவ்விடங்களில் எழுதப் படிக்கக் கற்று வருகிறார்கள்.

ஸொஸைட்டிகளெல்லாவற்றினுடைய விதிகளைப்படித்தால், அந்தவாசகப்படி மெம்பர்கள் அனைவரும் கூடிய மகாசபைகளுக்கே சர்வாதிகார மிருப்பதாகக் காணும். நிர்வாக அதிகாரத்திற்கென்று பஞ்சாயத்துகளும், அவைகளுக்கு உதவியாக மெம்பர்களிலிருந்து பிரதிநிதிகளாக ஏற்பட்டு, அவர்களுக்குப் பொறுப்பு ஒப்புக்கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தமுமுள்ள சூபர்வைசர் சங்கங்களும் இருக்கின்றன. ஆனால் செயர்மென்களுக்குத்தான் செல்வாக்கு அதிகரிப்பது—அதில் சந்தேகமேயில்லை. அவர் சுறுசுறுப்பாயிருந்தால் ஸொஸைட்டி அவர் சொன்னபடி ஆடும். சோம்பேரியாயிருந்தால், காரியமெல்லாம் தூங்கும். ஒரே மனிதன் சர்வாதிகாரமும் வகித்து நடத்துவதில் ஒருபெரிய அபாயம் காணுகிறது. அவர் மாண்டாலும், அவரைப் புறம்பாக்கினாலும் காரியம் சீர்குலைந்து ஸொஸைட்டி பிழைக்கமாட்டாமல் தவிக்கிறது. இந்த அபாயமில்லாமலும், ஸொஸைட்டியின் காரியம் ஆற்றொழுக்காக நடந்து வரவேண்டியுமிருந்தால், மெம்பர்கள் அனைவரும் ஏகோபித்துக் காரியம் நடத்திவரவேண்டும், இன்ஸ்பெக்ஷன் ஆகும் போதெல்லாம் நாம். இந்தரகசியத்தை மெம்பர்களுக்கு வற்புறுத்தியே வருகிறோம். ஆனாலும் (பெரியதனக்காரனாகிய) ஒருவனுடைய செல்வாக்கு எப்போதும் ஆக்கிரமித்துதான் காணும். மொத்தத்தில் பஞ்சாயத்தார் அனைவரும் இஷ்டப்பட்டு, ஒருங்குசேர்ந்து, பகிரங்கமாய் நடவடிக்கை நடத்துவதே பழகிவருகிறதென்பது தான் எனக்குக் காணும் சங்கதி. மெம்பர்களனைவரும் கூடிய மகாசபை ஸொஸைட்டி காரியங்களை நிர்வகிப்பதென்பது இன்னும் வெகுவாய்க் குறைந்து காணும் லக்ஷணம். அது இன்னும் வெறும் சாஸ்திரமே தவிர அனுபவத்தில் காணுவதன்று. ஏதோ இரண்டோரிடங்களில் மெம்பர்களுக்குப் பொறுப்பு இவ்விஷயத்தில் சுமாராகக் கண்டாலும், மொத்தத்தில் மெம்பர்கள் இந்தப் பொறுப்பைத் தங்களுடைய கடமையாகப் பாவிக்கச்செய்வது வெகுபிரயாசமாக எனக்குக் காணுகிறது. இந்த விஷயத்தை வற்புறுத்தி, மெம்பர்களுக்குச் சாமான்னியமாய்த் தெரியும்படி சங்கதிகளைத் தேசிய பாஷைகளிலெழுதி, எல்லா ஸொஸைட்டிகளுக்கும் பத்திரிகைகள் அனுப்பலாயிருக்கிறது. வியாபாரத்திற்கு வேண்டுமளவு பணம் தேடியாக வேண்டிய லக்கத்திலும், மெம்பர்களுக்கு அக்கறை பலவிடங்களிலதிகரித்து வந்திருக்கிறது. மாதாந்தரப் பஞ்சாயத்து மீட்டிங்குகளில் இவர்களும் வந்திருப்பது சாதாரணம். பஞ்சாயத்தாருக்கு யோக்கியதை குறைந்திருப்பது கண்டு அவர்களை நீக்கி (வேறு ஆசாமிகளை ஏற்படுத்தியதாகவும்\ உதாரணங்கள் தெரியும். நெல்லூர், மிட்னபூர், முதலிய சில ஜில்லாக்களில், மகாசபைகள் பலமுறை கூடியிருக்கின்றன. என்றாலும், இம்மாதிரி மகாஜனங்கள் ஸொஸைட்டிகளின் காரியங்களைத் தனிக்கை செய்வது இனிக் கொஞ்சகாலம்வரை சாஸ்திர ரீதியென்றுதான் சொல்லிக் கொள்ளவேண்டியிருக்கும்.



ஆனால் மெம்பர்களெல்லோரும் அக்கறையுடன் ஒருமனப்பட்டு உழைத்தாலொழியக் கோஆபரேஷன் என்பதின் ரகசியம் வாஸ்தவமாகப் பிரபலிக்காது. அது பிரபலிக்காவிட்டால் இந்த முறையும் தானாகப்பிரபலிக்க இடமிராது. * * *

20. இப்பொழுதிருக்கிறபடி தேசிய முதல் சுமார் ரூ 68000 வரை கூடியிருப்பதாகச் சொல்லலாம். ஆனால் இதில் முக்கால்வரிசை தர்பங்கா, காசிம்பஜார் இவ்வகை மகாராஜாக்கள், ஜமீன்தார்கள் இவர்களிடமிருந்து வந்தது. இது வெகு நல்ல உதவியென்பதில் தடையில்லை. என்றாலும் கோஆபரேஷன் வாஸ்தவத்தில் பிரபலிக்க வேண்டுமானால், சில்லரையாகப் பல பெயரிடமிருந்து, ஸொஸைட்டிகளுக்குப் பணம் வந்து கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிலும் சாமான்னிய ஜனங்கள் வேண்டிய மட்டிலிருக்கிறார்கள். ஸொஸைட்டிகளுக்குச் சுற்றிலுமிருப்பவர்கள் அவைகளை விசுவாசித்து வருமளவிற்கு, அவர்களுடைய பணமும் தாராளமாய் அவற்றிற்கு வந்து உதவும். தான்போடும் பணத்தைக்கிரமமான வழியில் செலவாக்கி வருகிறார்களாவென்று பணம் போடுபவன் விசாரித்து வருமளவிற்கு, ஸொஸைட்டியின் காரியம் சீராக நடக்கும். (பெருஞ்) சங்கங்களின் முக்கிய நோக்கங்களில் ஒன்று இம்மூலமாய் முதற்பணம் சம்பாதித்து, சில்லரை ஸொஸைட்டிகளுக்கு அவற்றை ஏற்பிப்பதாம்.

21. கடன்வாங்கும் காரியத்தை அனுசரித்து மறுபடி தொகைசெலுத்துவதற்குச் மேற்படுத்த சௌகரியத வேண்டி, இப்போதிருப்பதை விட யுக்தியுக்தமாய் நிபந்தனைகள் உண்டாக்க பிரயத்தனம் நடந்துவருகிறது. இதுவரை காரியம் எதுவாயிருந்த போதிலும் வாங்கும் கடனை வருஷ ஆகைருக்குள் செலுத்தி விடவேண்டியதென்பது பொதுவாக நியமமாயிருந்து வந்திருக்கிறது. இந்த நியமம் ராபேசன் முறைப்படியில்லையென்பது நிசம். அந்த முறைப்படி பணம் வாங்குபவர் அதை உபயோகித்து அடையும் லாபத்திலிருந்தோ, அந்த வியாபாரத்தில் தாங்கள் மீத்துவைக்கும் பணத்திலிருந்தோ, தமது கடனை வாப்ஸ் செய்வது நியமம். என்றாலும் ஆரம்பத்தில் இந்தப்படி கண்டிதமாக வசூல் செய்யவேண்டியது அவசியம். ஏனெனில் இந்த ஜனங்களுக்குப் புத்தி போதாதாகையால் பிழைக்கும் வழியையும், கெடுதவறாமல் வாக்கியதைக் கொடுக்கும் அப்பியாசத்தையும் கற்பித்தாகவேண்டியிருக்கிறது. ஆனால் கடன் தொகை பலவகையாகவும், வாங்குவது பலதினுசாகவும், பெருகப்பெருக இந்த நியமத்தைப் காப்பாற்றுவது சாத்தியமில்லாமல் போகிறது. இப்படிப் பெருகியபின், எதாகிலும் ஒரு மகசூலை உத்தேசித்து வாங்கும் கடன், அம்மகசூல் அறுவடையான பிறகுதான் வாப்ஸ் வரும். வருஷவாரி முட்டுவழிக்குவேண்டிய பணம் வருஷமுடிவதற்குள் வசூலாகும். வேறுவகைக் காரியங்களில் லாபந்தேறுவதற்குச் சாவகாசமதிகரித்தால், அவைகள் பல கிஸ்துகளில் இரண்டு மூன்று வருஷங்களில் தான் வசூலாகும். பழங்கடன் தீர்ப்பதற்கு வாங்கும் தொகைகளோ, நாலு வருஷத்திற்குள்ளாக எக்காலத்திலாவது வாப்ஸ் வரும். அது கடன் மொத்தத்தையும், வேறு அவசரங்களையும் பொறுத்து வசூலாக வேண்டியதாம். நாம் ஸொஸைட்டிகளறிய வேண்டி வற்புறுத்திவரும் பொதுவிதி இது:—அதாவது, பஞ்சாயத்தார் தொகை வாப்ஸ் வரவேண்டி கெடுக்கட்டுவதில், கடன் இன்னகாரியத்துக்காக வென்பதையும், கடனாளியின் அவசரங்களையும் நன்றாக நிதானித்துப்பிறகு கெடுக்கட்டும்படிக்கும், ஒரு முறை இந்தத்தவணைகள் நிஷ்கரிஷையாகி விட்டால், பிறகு ஆலசியஞ் செய்யாமல் குறித்த தவணைகளில் பணம் வந்தே தீரும்படி பார்க்கும்படிக்கும் போதித்து வருவதாம்.

22. டிபாசிட்டு என்பதற்குச் சரியான அர்த்தம் ஒரு சுமாராக மிட்னபூர் என்னும் ஒரு ஜில்லாவில் மட்டுமேதான் புலப்பட்டிருப்பதாகக் காணுகிறது. அவ்விடத்தில்

மெம்பர்கள் தாங்கள் டிபாசிட்டு வைக்கும் தொகையைவிட அதிகமாக வாங்குவதென்கிற ஒரே நிபந்தனையுடன் பணம் போடுவதில்லை. மெம்பர்களுக்கு மீத்துவைப்பதற்குப் பணமேதாகிலும் கூடும்போதெல்லாம், அந்தச் சில்லரைத் தொகைகளை ஸொஸைட்டிகளில் வைத்து வைப்பதுதான். நிர்ப்பயமாகவும், அதிலாபகரமாகவும் தாங்கள் செய்யக் கூடியதென்று கண்டு, அப்படியே செய்து வருகிறார்கள். மெம்பர்களுக்கு விவேகம் அதிகமாயிருப்பதுடன், ஸொஸைட்டிகளின் மெம்பர்களும் பலதினுசு ஜனங்களாயிருக்கிறார்கள். ஆதலால் மீட்ஜூரில் இவ்வகை யநுபவம் பிரபலித்து வருகிறது. மெம்பர்கள் ஒரே நியமத்திற்குக்கட்டுப்பட்டு, அனேகமாய் எல்லோரும் தரித்திரர்களாயிருக்கும் வேறு ஜில்லாக்களில், இம்மாதிரி தாமே வலிய வந்து டிபாசிட்டு செய்வதற்கு இன்னும் அனேக வருஷங்கள் செல்லும். இது காலக்கிரமத்திலாக வேண்டியதே தவிர ஓட்டக்கூடியதல்ல. சில ஸொஸைட்டிகளில் குறித்த தவணைகளில் மெம்பர்கள் டிபாசிட்டுவைத்துத் தீரவேண்டுமென்று ஒருகட்டாய விதிவைத்துப் பார்த்தார்கள். ஆனால் அது உபயோகப்படவில்லை. ஒன்று, மெம்பர்கள் டிபாசிட்டு வைப்பதில்லை. இல்லாவிட்டால், இந்த விதியை யநுசரித்துத் தீரவேண்டுமென்று நிர்ப்பந்திக்குமிடத்து, இந்த டிபாசிட்டுகளை வரிகொடுப்பதாகப்பாவித்து மனஸ்தாபப்படுகிறார்கள். கட்டாயப்படுத்துவது நல்லதன்று என்பது எனக்கும் நியாயமாகக் காணுகிறது. ஆனபோதிலும், மெம்பர்களில் ஒவ்வொருவரும் ஏதோ கிட்டியதைச் சிறிதுசிறிதாக டிபாசிட்டு வைத்துப் பழகுவது முன்னுக்கு வருவதற்கு நன்றாயேற்றமார்க்கமென்றும், ஸொஸைட்டிகளின் காரியநிர்வாகம் சீராக நடக்க அமைந்த நல்ல உபாயமென்றும் தோன்றுகின்றது. ஸொஸைட்டிகளுக்கெல்லாம் டிபாசிட்டு வாங்குவதுதான் க்ஷேமகரமென்று நாம் விடாமல் சொல்லித்தான் வருகிறோம். சொன்னவரெல்லாம் வாக்குப்பரிபாலனம் செய்தால், சீக்கிரத்தில் நமக்குப் பணம் பெருகவேண்டும். புதிதாக ஸொஸைட்டிகள் உண்டாவதில் டிபாசிட்டு மூலமாய்ப் பணத்திற்கு வகை யுண்டாகுமென்று நான் அடிக்கடி பார்த்து மன்றாடியும் வருகிறேன்.

28. மொத்தமாய்ப் பேசுமிடத்து இந்த வருஷம் மகா ஜனங்களும், பத்திரிகைகளும் கோஆபரேஷன் விஷயத்தில் தங்களுக்கு இதுவரை யிருந்ததைவிட அதிக அக்கரையிருப்பதாக ருசுப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் காரியமாக வேண்டியதற்கு ஏற்ற ஜனசகாயமும் உற்சாகமும் இன்னும் குறைந்தேதான் காணுகிறது. கோஆபரேஷன் என்பது வாஸ்தவத்தில் மகா ஜனங்களுக்குள் ஐகமத்தியமுண்டாகி யல்லது வேறுவகையில் வேரூன்றக் கூடியதன்று. அதற்கு இத்தேசத்தில் விசேஷ சக்தியுங்காணாது. அந்த சக்திமட்டும் நிச்சயமென்று அநுபவத்திலறிந்து விட்டோம். சர்க்கார் இவ்விஷயத்தில் மார்க்கதரிசிகளாகி, இப்படி ஜனங்கள் ஒன்று சேருவதால் எத்தனை விதமான மங்களங்களுண்டாகலா மென்பதைத் தெளிவாக்கி யிருக்கிறார்கள். இதற்குமேல் ஒவ்வொன்றுக்கு ஆகிவரும் ஸொஸைட்டிகளை யெல்லாம் முடிவுபோகத் தாங்கிக்கொண்டே போவதும், அவைகளைவிடாமல் எச்சரித்து வருவதும் அவர்களால் முடியாத காரியம். இந்திய மகா ஜனங்களுக்கு உற்சாகம் பொங்கி அவர்கள் அனேகமாயிரமாய் வந்து கைகொடுக்கும்வரை இந்த முறையில் காரியம் கொஞ்சமாகத்தானடக்கும். மகாஜனங்களையெப்படி சேர்ப்பதென்பது தான் இதிலுள்ள கஷ்டம். முக்கியமான காலேஜுகளுக்கெல்லாம் நாம் நம்முடைய கதைகளை விவரித்திருக்கிறோம். யூனிவர்ஸிட்டி பரிக்ஷைகளில், வைசியமென்னும் செல்வநூல் விஷயத்தில் கோஆபரேடிவ் பாங்கும் சேர்ந்திருக்கிறது. பட்டணத்தில் நாம் செய்திருக்கும் வேலையும், செய்யக்கூடியதும், இப்போது தனவான்களிலும் சிலருக்கு உற்சாகமூட்டலாம். ஜில்லாக்களில் அப்பியாசமுள்ளவர் [illegible]



கள் கூடுவதும் உபகாரமே. எல்லாவற்றையும் விட டிஸ்திரிக்டு உத்தியோகஸ்தரும், சப்டிவிஷன் உத்தியோகஸ்தரும், ஸொஸைட்டிகளை யுண்டாக்கிப்பாலிக்கக்கூடிய யோக்கியதை பொருந்திய பெரிய மனிதர்களைத்தேடிப் பிடித்து, அவர்களுக்கு இவ்விஷயத்தில் ருசியுண்டாக்கி, வெகுதூரம் உபகரிக்கலாம். ஒவ்வொரு ஜில்லாவிலும், வேலையாரம்பிப்பதற்கு வேண்டிய உற்சாகமும், ஆரம்பித்ததைப் பாலித்து வருவதற்கு வேண்டிய பொறுமையும், பெருந்தன்மையும் கூடி அனேகம் பெயர்வேண்டும். அதிலும் அவர் விசேஷமாய் இந்தியர்களாகவே யிருக்கவேண்டும்.

## VI. மத்திய மாகாணங்கள்.

அர்பன் ஸொஸைட்டிகளுக்கு விசேஷத்து ஒரு தோஷம் காணுகிறது. கடன் வாங்கும் மெம்பர்கள் வரிசை வரிசையாக வெகு ஜாஸ்தி பெயரிருக்கிறார்கள். கோஆபரேஷனுக்குள்ள விசைகுறைந்து போகிறது. கடனாளியைக் கம்மிட்டியார் பணத்துக்குத் தகாதாவொன்றுஞ் செய்வதில்லை. தவிர இந்த அர்பன் பாங்குகளில் பொறுப்பு சாமான்னியமாய் வரையறுத்திருக்கிறது. இந்த நியமம் சிலசமயங்களில் தகாததாக எனக்குக் காணுகிறது. ஏனெனில் இதனால் மெம்பர்களுக்கு இதில் இருக்கவேண்டிய அக்கரை குறைந்துபோகிறது. அர்பன் ஸொஸைட்டிகளில் நிர்வாக மெம்பர்கள் வெகு துருசாய் வேலைசெய்ய வேண்டுமென்பது (மேற்குறித்த காரணத்தால்) விளங்கும். கிராமப்பாங்குகளில் (ஏதோ) 20 பெயரிருந்துகொண்டு செய்யும் சாமான்னிய வேலைக்கும்; பெரியபட்டணத்திலிருந்து உழைக்கும் ஸொஸைட்டியின் காரியத்திற்கும் வெகுபேதம். பட்டணத்தாருடைய நிர்வாகக் கம்மிட்டிகள் "வாராப்புள்ளிகளால்" உபத்திரவ முண்டாகாமலும், தங்களுடைய பற்றுவரவில் நாணயம் கெடாமலுமிருக்க வேண்டுமானால், கணக்குகளை எப்போதும் பரிசோதித்தும், வரவுகளை ஜாக்கிரதையாய் வசூலித்தும் வருவதன்றி, ஸொஸைட்டியின் க்ஷேமலாபத்தைக்குறித்து மெம்பர்களுடன் வாதித்தும் வரவேண்டும். இந்த அம்சத்தைச் சாமான்னியமாய் மெம்பர்கள் தக்கபடி கவனிக்கிறதில்லையென்று எனக்கு அபிப்பிராயம். 10 அல்லது 20 மெம்பர்கள் கூடிய ஒரு கோஆபரேடிவ் ஸொஸைட்டிக்கு நாணயம் எவ்வளவு கூடிவிடுகிறதென்று யாரும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். தடையில்லை. அது சரியே. ஆனால் கோஆபரேஷனுக்குப் பிராணநாடியாயுள்ள (பரஸ்பரசகாய) தருமமும், அதனாலுண்டாகிற நிர்வாக சக்தியும் ஸொஸைட்டி பெருக்கப் பெருக்கக்குறைந்து விடுகிறதென்பதை மட்டும் ஜனங்கள் மறந்துவிடுகிறார்கள். ஆகவே (அனேக ஸொஸைட்டிகளுக்கு) கோஆபரேடிவ் நாணய சங்கங்களுக்கென்று பிறந்திருக்கும் சட்டத்தை யநுசரித்து ரிஜிஸ்தராகி யிருக்கும் ஒருபெருமை தான் உள்ளது. பரீக்ஷையென்கிற வியாஜத்தின்பேரில் ஸொஸைட்டிகளை யுக்திக்கொட்டியபடி யெல்லாம் எங்கும் ஆரம்பிப்பது சரியன்று. என்றாலும், அர்பன் வட்டத்தில் (கீழேகாணும்) ஒருவகையான ஆரம்பம் செய்து பார்ப்பதில் அனுகூல முண்டென்று எனக்குக்காணுகிறது. அதாவது, ஒரே தொழிலைக்கொண்டிருப்போராவது, ஒரே ஜாதியாராவது, ஒருங்கு சேர்ந்து, தமக்கு வேண்டிய கைம்முதலை ஒரு ஸெண்ட்ரல் பாங்கு அல்லது அர்பன் பாங்கிலிருந்து பெற்றுவருவதாம். இதனால் கோஆபரேடிவ் சக்தி சாஸ்திர சம்மதமாக இருக்கவேண்டியபடி ஊர்ஜிதப்படுவதுடன், வாங்கிய பிறகு பணத்தை மறுபடி தகாரில்லாமல் கெடுவில் செலுத்திவருவதற்கும் பலம் ஏற்படுகிறது. சிறு ஸொஸைட்டிகளெல்லாம் ஸெண்ட்ரல் பாங்குகளில் பங்காளிகளாகவு மிருந்தால், அப்பொழுது (ஸொஸைட்டிகளில் [illegible]) பணம் கட்டித் தாங்குகிறதென்கிற விவகாரமும் ஒரு சமயம் அவசிய மில்லாமலிருக்கலாம்.

இந்த யோசனைக்கு அனேகர் தோஷம் காணலாமென்பது எனக்குத் தெரியும். ஏனெனில் இப்படிச்செய்வதில் காரியம் வளருகிறது. சில்லரைப் பற்றுவரவுக்கணக்குகள் பெருகுகின்றன. ஆனால் இந்த ஆக்ஷேபம் வியர்த்தம். ஏனெனில், இப்படிச் சில்லரை விஷயங்கள் பெருகாமலும், சிறு ஸொஸைட்டிகள் அனேகமாகிப் பெருத்த ஸொஸைட்டிகள் சிலவற்றிற்கு அதீனமாய்க் கட்டுப்படாமலு மிருந்தால், கோஆபரேஷன் முறையில் காரியம் நின்றுவிடும். வெகு சீக்கிரத்திலேயே நின்றுவிடும். இனி காலக்கிரமத்தில் இப்பெருத்த ஸொஸைட்டிகளுள் ஏதேனுமொன்று கை வெகுவாய் வலுத்துப் பணம் நடமாடும் விசித்திரங்களைப் பூராவாகத்தானே கவனித்துச் சலீசாக வேண்டுமளவிற்கு வேண்டியபோது எங்கிருந்தாகிலும் பணத்தைக் கவரச்சக்தி பூரணமாக்கிக்கொள்ளும் வரை இப்படித்தான் காரியம் நடக்கவேண்டும்.

25. கிராமப்பாங்குகளிலும், டவுன்பாங்குகளிலும் முதற்பணம் கையாடிவருவதை ஒத்துப்பார்ப்பது வெகு ருசிகரம். பிற்பட்டதில் வருஷாந்தரத்தில் கைம்முதலைவிடக் கடன்பாபத்தில் தொகை வெகுதூரம் அதிகரித்துக்காணுகிறது. கிராமப்பாங்குகளிலோ கடன்வகை வெகுவாய்க்குறைந்து காணுகிறது. அர்பன் ஸொஸைட்டிகளில் கடன் காலாவதி வெகு குறைச்சல். ஆனால் கிருஷிகர்களுக்கோ, முந்தி நாம் போதுமென்றெண்ணியதைவிட அவதி யதிகரித்தாகவேண்டுமென்றும், (கொடுக்கும் பணம் பாபரவென்று வசூலாகாதென்றும்) இப்பொழுது தெளிவாகிக் காணுகிறது. குடியானவன் உழுவது முதல் அறுவடை யீறாக உள்ள கிருஷிகாரியத்தை மட்டுமே உத்தேசித்துப்பணம் வாங்குவதாகக் காணவில்லை. இம்மாதிரித்தாரதம்மியம் பார்ப்பது இப்பொழுது வெறும் யுக்திவாதமாக்காணலாம். ஆனால் இது எப்போதாவது மாறுமோவென்பது சந்தேகம். ஏனெனில் குடியானவர் தங்கள் மகசூல்களை விலையுயருமட்டும் விற்கக்கூடாதென்கிற ரகசியத்தை அறிந்து வருகிறார்கள்.

26. மெம்பர்களுடைய சம்பாத்தியத்திலிருந்து டிபாசிட்டுகள் கட்டாயமாய்ப் போடவேண்டுமென்கிற நிர்ப்பந்தம் இங்கு இல்லாவிட்டாலும், அனேகக்கிராமப்பாங்கு மெம்பர்கள் தங்களிடமுள்ள சில்லரைகளை, இந்தப் பாங்குகளில் போட்டுவைக்கும் வழக்கம் அதிகரித்தே வருகிறது. பாலா கட்டத்தில் இந்த பாபத்துப்பணம் கூடிவருகிறது. பிபர்ஜாவில் மெம்பர்கள் தங்களுக்கு வீதித்துள்ள லாபத்தை இன்னும் செலவுக்காக வாங்குவதில்லை யென்றிருக்கிறார்கள். இன்னும் பல ஸொஸைட்டிகளிலிருந்தும் இதேமாதிரி ரிபோர்ட்டுகள் வருகின்றன.

27. இப்போது (நடக்கிறபடி) இன்ஸ்பெக்டர்கள் ஸொஸைட்டிகளைத் தனிக்கை செய்யப்போனால், அதுகொண்டு அவற்றிற்கு உபத்திரவங்களொன்று மில்லையென்பதை நான் குறிப்பிடுவது தகுமென்னுகிறேன். ஆடிட்டருக்கு வாஸ்தவத்தை விசாரிக்கையில் உபதேசத்தொழில்தான் முக்கியமென்று சொல்லிவிடலாம். கணக்குகள் கிரமப்படி பூராவாக எழுதியிராவிட்டால், தானே அதை யெழுதி முடிக்கும்படிக்கும், அவ்வாறுதான் செய்வதற்குள்ள நியாயங்களை மெம்பர்களுக்கு விளக்கும்படிக்கும், அவருக்கு உத்திரவு கொடுத்திருக்கிறது. ஆக்ஷேபகரமான பாபத்துகள் கண்டால், தன்னாலானமட்டும் அவைகளைப் பரிகரித்து விடவேண்டுமென்றும் அவருக்குஉத்திரவு. கிராமப்பாங்குகள் எதற்கும் ஆடிட்டர்காணும் தோஷங்களைக் குறிப்பிட்டு (மெம்பர்கள்) "தப்புசெய்து சொன்னபடி யாடவேண்டும்" என்று உத்திரவு அனுப்புவதில்லை. பெருத்த பாங்குகளுக்கு மட்டும் ஆடிட்டர் ரிமார்க்குகளுக்குக் காபி அனுப்புவதுண்டு, கிராமப் பாங்குக் கணக்குகளை ஒழுங்காக்கி, மெம்பர்களுக்குத் தான்சொல்லிவைத்த விஷயங்களை மட்டும் இன்ஸ்பெக்ஷன் புஸ்தகத்தில் எழுதிவிட்டு வந்த பிறகு, அந்த ஸொஸை



ட்டிக்கு மறுபடி கடிதமுதலியது எழுதி உபத்திரவமுண்டாக்குவதில்லை. இதேமாதிரி கூடியமட்டில் அதிக உபத்திரவமில்லாமல் தான் ரிஜிஸ்திராரும், அவருடைய அஸிஸ்டெண்டும் தனிக்கை செய்வது. சட்டப்படி இன்ஸ்பெக்ஷன் நடக்கவேண்டிய உத்தேசமெல்லாம் ஸொஸைட்டிப் பணம் ஹஸ்தாந்தரமாகாமலும், உள்ள பணத்தை மெம்பர்கள் கிரமப்படித்தாராளமாய் உபயோகித்து வரும்படிக்கும் பார்த்துக்கொள்வதென்று தானிருக்கவேண்டும். இது வாஸ்தவமாகில், அந்த உத்தேசம் இன்ஸ்பெக்டர்களுடைய நல்வார்த்தையினால் ஆவது சுலபமேயன்றிக் குற்றங் கூறுவதினாலாவதன்று.

28. மற்றைய பக்ஷத்தில், ஸென்ட்ரல் பாங்குகளும் யூனியன்களும், சென்ற வருஷத்திய ரிபோர்ட்டில் யாருடைய உதவிவேண்டிற்றோ, அந்தச் (சாவுகார்) வகுப்பாருக்கு, தாங்கள் ஆயிரம் காலம் இருந்து பெருக வந்தவைகளென்று வெகு சீக்கிரத்தில் ருசுப்படுத்திவருகின்றன. ஆகவே(இந்தியாவிலுள்ள) ஐரோப்பியப்பாங்குகளும், தேசீயப்பாங்குகளும் மற்றபடி ஜாயிண்டுஸ்டாக்கு வகையில் உழைப்பவைகளெல்லாம், (கோ ஆபரேடிவ்) ஸென்ட்ரல் பாங்குக்குச் சலீசாகப்பணம் கொடுக்கத் தயாராயிருக்கின்றன. அதேபிரகாரம், நாணயமாய் லேவாதேவிசெய்துவரும் சாவுகாரக்கம்பெனிகளின் மெம்பர்கள் தத்தம் பணங்களை இவைகளில் டிபாசிட்டாக வைத்து வருகிறார்கள், இம்மூலமாக இவைகள் விஷயத்தில் தமக்கிருக்கும் கருத்தையும் விசுவாசத்தையும் அவர்கள் விளக்கி வருகிறார்கள். என்றாலும், சில சந்தர்ப்பங்களில் கிராமங்களிலுள்ள சாமான்னிய சாவுகார்களும், பல பெரிய நைக்காரர்களும், இந்த முறையை லக்ஷியம் செய்து அதற்கு விரோதந் தேடவேண்டுமென்று வருவதில்லை யென்பதாகக் கேள்விப்படுகிறோம். ஆனால் இந்த எண்ணம் முதன் முதல் ஸொஸைட்டிகள் ஆரம்பமாகிப் பரீக்ஷைக்காக நடத்தி, ஜீவகளையற்றுக்காணும் சில ஸொஸைட்டிகளிருக்கு மிடங்களில் தான் காணுவது. ஜப்பல்பூர், பாலாகாட் முதலிய இடங்களில், கிரகஸ்தர்களான சாமான்னிய சாவுகார்கள் இந்த ஸொஸைட்டிகளுக்குத் தாம் என்ன இடையூறு செய்தாலும் செழிக்குமென்பதைக்கண்டு கொண்டு, இவைகளில் பணம் போடுவதில் தமக்கு உபத்திரவமொன்று மில்லாமல் லாபம்வந்து கொண்டிருக்குமென்றறிந்திருக்கிறார்கள். கோஆபரேடிவ் பாங்குகள் பிரபலிப்பதற்கு நியாயமாக, முதலாவது சாவுகாரை எங்கு மில்லாமலே ஓட்டுவதென்றும், பிறகு பிழைக்கமாட்டாத குடியானவனுக்கெல்லாம் சலீசாகக் கடன் கொடுப்பதென்றும் கூறுவது தப்பு. வாஸ்தவமென்னவென்றால், சாவுகாருடைய பணம் தூங்காமலிருப்பதற்கு இது ஒருநல்ல சாதனமாகிறது. இம்மூலமாகச் சாவுகார் பணம், சாமான்னியக் கிரகஸ்தான குடியானவருக்கு, அவசர மிருக்கும்போது, நியாயமான வட்டிக்குப்போய் உதவுகிறது. இந்த முறைப்படி பார்க்குமிடத்து, கொஞ்சம்பணத்தை வைத்துக்கொண்டு, குடிமுழுகும் வட்டிவாங்கி பணவியாபாரத்தில் சீக்கிரம் கொழுக்கும் நரபக்ஷணிக்கு இதில் இடமேயில்லை யென்பது வாஸ்தவமே. ஆகிலும், பாப புண்ணியத்திற்குப் பயந்து நடக்கும் பெரிய சாவுகார்களுக்கு இதில் வேண்டிய காரியமிருக்கிறது. இந்த வருஷம் முடியுமுன், ஸொஸைட்டிகளில் பிக்ஸெட் டிபாசிட்டுத்தொகை வெகுதூரம் அதிகரித்துக் காணும்.

29. மகாஜனங்கள் இந்த விஷயத்தை எவ்வளவிற்கு உபசரிக்கிறார்களென்பதில் அபிப்பிராயம் பலவகைப்பட்டே காணுகிறது. எந்த ஜில்லாவிலும் ஆரம்பத்தில் இது சாத்து இல்லாமலும், சில முக்கியஸ்தர் வேண்டுமென்று தாங்கியும், தானாகவேண்டும். ஆதலால் இப்படிப்பட்ட தருணத்தில் மகாஜனங்கள் இதைப்பற்றி அசட்டையாயிருப்பதும், இத்தேசத்திற்குதவாததோர் விளையாட்டென்று இதைச்சொல்லிப் போவதும் சகஜமாம். இதற்குக் கொஞ்சம் ஜீவகளைவந்தாலோ, சாவுகாருக்குப் பயமுண்டாகி

றது. உடனே அவனும் அவன் இஷ்டரும் கட்டுப்படுத்திக்கொண்டு இதைத் தொலைக்க முயல்கிறார்கள். அதே தருணத்தில் மகாஜனங்களில் மற்றையோரும் இதென்னவென்று பார்க்கிறார்கள். (ஸொஸைட்டிக்கு) கைவலுத்து வேரூன்றிய பின்னிட்டு, இது ஒருசமயம் தனக்கும் உபயோகப்படக் கூடியது தானென்றும், தான் என்ன செய்தபோதிலும் இதை நாசஞ்செய்வது முடியாத காரியமென்றும் சாவுகார் ஒப்புக் கொள்ளுகிறான்.

---

## VII. பம்பாய்.

ஒரு கோஆபரேடிவ் நாணயச்சங்கம், பங்குகள், லாபத்தொகைவீதங்கள் முதலிய, அங்கங்களுடன், வர்த்தகமுறை வழுவாமல் நடந்துவந்தால், கோஆபரேஷன் என்பது சாஸ்திரப்படி சதுரமாயிருக்க வேண்டுமேல்லது, கூர்ச்சேறியக்கூடாதென்பதை மெம்பர்கள் சீக்கிரத்தில் மறந்து விடுவது சகஜம்.* என்றால், இதில் யாரெல்லாம் காரியம் நிர்வகித்துவருகிறார்களோ அவர்களுக்கெல்லாம் லாபத்திலும் பங்கு இருக்கவேண்டும். டிபாசிட்டர்களுக்கு 'நடப்பு' வட்டிக்குலோபம் சிறிதுமில்லாமல் கிடைக்கவேண்டும். கடன் கொடுப்பவருக்கு நியாயமான வட்டிவீதம் தேறவேண்டும். கடன் வாங்குபவனே எவ்வளவிற்கு வட்டிவகைரா சிலவுகுறைந்து வாங்கலாமோ அவ்வாறு வாங்கவேண்டும். லேவாதேவி யிரண்டும் சமபக்ஷமாயிருக்க வேண்டும். கொள்வதிலாவது கொடுப்பதிலாவது நலமோகவொன்றுமிருக்கக்கூடாது. பங்குக்காரன் (ஸொஸைட்டிக்குள்ள நாலு அங்கங்களில் ஒருவன் மட்டுமேயாதலால், ஸொஸைட்டி ஸ்திரப்படவேண்டியும் அதன் எல்லா அங்கங்களும் க்ஷேமமடையவேண்டியும், லாபத்தைத்தானே வாரிக்கட்டிக் கொள்ள வேண்டுமென்கிற ஆக்கிரகத்தைச்சற்று தணித்துக்கொள்ள வேண்டும். வாஸ்தவமென்ன வென்றால், அர்பன் பாங்குகளில் பிரதிவருஷம் சட்டப்படி க்ஷேமதனத்திற்காக லாபத்தில் கால்பங்கு இருந்து தீரவேண்டுமென்று நிர்ப்பந்திப்பதில், அந்தக்கால்பங்கு அதமபக்ஷமென்பதையும் (அதற்கு அதிகப்பட்டிருப்பது தான் நலமென்பதையும்) மெம்பர்கள் மறந்துவிடுகிறார்கள். (ஆனால் இது சகஜம்). தவிர லாபத்தொகையை வீதிப்பதில் இவ்வளவிற்கதிகம் கொடுப்பதில்லையென்ற தாங்களாக உத்தமபக்ஷ நியம மேற்படுத்திக்கொள்ளலாமென்பதையும் அவர்கள் கவனத்தில் வைப்பதில்லை. அல்லாமலும், எந்த ஸொஸைட்டிகளில் பங்குக்காகப் போட்டிருக்கும் பணத்திற்கு மேற்பட்ட பொறுப்பில்லையென்று ஏற்பட்டிருக்கிறதோ, அவைகளில் டிபாசிட்களும், "மூன்றாவது" கக்ஷியாரிடமிருந்து பெறும் கடன்களும் அதிகரிக்க அதிகரிக்க, மேற்கண்ட பொறுப்பு வரையறை மீறிப்போவது சுலபம். அவ்வாறாகும்போது க்ஷேமதனம் அதிகரித்து வரும்படி செய்வது, ஆபத்திற்குதவக்கூடிய முக்கியசாதனம். ஆனால் இவைகளை இவர்கள் கவனிக்காமலே யிருக்கிறார்கள். இம்மாதிரியிருக்கும் அபாயங்களைத் தெளிவாக்குவது அவசியம் ஆகவேண்டிய காரியம். * *

31. சாலியர் விஷயத்தில் நாம் அநுபவத்தில் கண்டபிரகாரம், (அம்மாதிரி ஜனங்களுடைய) அன்னவஸ்திராதிகளுக்கு உதவி, அவ்விஷயத்தில் அவர்களுக்குள்ள குறைகளை முதலில் நீக்கி, பிற்பட்டுத்தான் அவர் தொழில்களில் காணும் தோஷங்களைப் பரிகரிக்க வேண்டிய பெரிய பிரயத்தனங்கள் செய்வது விவேகம்.

---

* என்றால், அதனாலுண்டாகும் பிரயோஜனத்தை மெம்பர்களெவரும் அடையவேண்டுமேயொழிய ஒருவன்மட்டும் அன்று, என்று அர்த்தம்.



32. கடன் காலாவதி விஷயம் இன்னும் திருப்திகரமாய் ஏற்படவில்லை. ஆனால் அது சகஜமே. எல்லோருக்கும் ஒரே கணக்காக்கி, கடன் கொடுக்கும் தொகை விஷயத்திலும் அப்படியே செய்ய இஷ்டமிருப்பதாகக் காணுகிறது. ஜீவகளையற்று நடக்கும் ஸொஸைட்டிக்கு ஒரு சோம்பேறி செகரெட்டெரியு மேற்பட்டால், அவர் வாப்ஸ் வரவேண்டியதொகையை வரவு வைத்து, மறுபடி அதே பேருக்குச் செலவெழுதி விடுவார். வைசிக தருமம் கொஞ்சம் கற்றவருக்குத்தான் கடன்வாங்கும் காரியத்தை அனுசரித்துக் காலாவதியைக் குறுக்கியோ, நீட்டியோ விடத்தெரியும். ஆனால் இது காலக்கிரமத்தில் அடையவேண்டிய பலன். இப்பொழுது நடைபெறும் சம்பிரதாயப்படி வெகு மோசமான லக்ஷண மெதுவென்றால், ஒரே நாளில் பணம் முழுவதும் செலவாவதும், மறுபடி யேதோ ஒருநாளில் அவ்வளவும் வாப்ஸ் வருவதுமாம். இந்த மத்தியில், யாராவது உறவின் முறையார் வருகிறார்கள். ஒருமாடு சாகிறது. ஒரு குழந்தைபிறக்கிறது. பள்ளிக்கூடச்சம்பளம் வேண்டிவருகிறது. ஆனால் இம்மாதிரி அவசரமொன்றிற்காகிலும் தருணத்தில் பணம் உதவுவதற்கு ஸொஸைட்டியினால் ஆவதில்லை. சாவுகாரால் ஆகும். அவர் செய்யவும் செய்கிறார்.

33. தார்வார் ஜில்லாவில் ஒரு உள்ளூர்சாவுகார் பணம்கொடுப்பதற்கு இசைந்து அதற்குப்பிரதியாகக் கணக்குகளை ஜட்டிபார்க்கத் தனக்குப் பாத்தியமிருக்கவேண்டுமென்கிறார். இதுநியாயமென்றே நானும் சம்மதித்திருக்கிறேன். வாஸ்தவத்தில் ஸொஸைட்டிகளின் கணக்குகளைத் தனிக்கைசெய்வது அதின் க்ஷேமலாபத்தில் அக்கறையிருப்பவர்களுக்குத்தான் ஆகவேண்டிய முதற்காரியம். சர்க்கார் தனிக்கையோ வென்றால், புதிதாக ஆரம்பமான காரியம் சீராக நடந்து வருகிறதென்று மகா ஜனங்களுக்கு அறிக்கை யிடுவதற்காக வென்று அறியவேண்டும்.

---

## VIII. சிந்து.

34. சென்ற மார்ச்சுமீ நான் கணக்குகளைப் பரிசோதித்துப் பார்க்கையில், கம்மிட்டியார், ஒரு உள்ளூர் வணியன் ஸொஸைட்டிக்கு 100க்கு வருஷம் 1க்கு ரூபா 6 வீதம் வட்டி வீதித்துக் கடனாக ரூபா 1000 ஒரு வருஷகெடுவுக்குக் கொடுப்பதாகச் சொல்லிய பிரஸ்தாபம் என் காதில் விழுந்தது. இதன் ரகசியத்தை விசாரித்ததில், கம்மிட்டியார், சாமான்னிய ஜமீன்தாருக்குக் கொடுக்கும் பணத்திற்கு மாசம் ரூபா 2, அதாவது, வருஷத்திற்கு 100-க்கு 24, வீதம் வட்டிபோட்டு வாங்குவது அவ்விடத்தில் வழக்கமென்றார்கள். அப்படியானால் சாவுகாருக்கு ஸொஸைட்டி விஷயத்தில் இவ்வளவு தயவுக்குக் காரணமென்னவென்று கேட்டதில், அவர் ஒரு மீட்டிங்குக்கு வந்திருந்ததாகவும், மெம்பர்கள் வாங்கிய கடன் தொகைகளை அன்றையதினம் கெடுத்தவறாமல் எல்லோரும் ரொக்கமாக எண்ணிக்கட்டிக்கொண்டு வந்து போட்டதை அவர் பார்த்ததாகவும் தெரிந்தது. அதுவே இந்தத் தருமபுத்திக்குக் காரணமாயிற்று!

# ஐர்லாந்து கிருஷி உருப்படி ஸொஸைட்டி லிமிடெட்.

---

மேற்கண்ட சங்கத்திய 1908-ம் ஞு ஜூன் மீ 30 தேதியுடன் முடிவாகிற வருஷாந்தர ரிபோர்ட்டிலிருந்தெடுத்த நாணய சங்கங்களைக் குறித்த பகுதியை, இவ்விடத்திலுள்ளவர்களும் ருசியுடன் படிப்பார்களென்று கீழே எழுதுகிறோம்.

“நமது பெருங்காரியத்தில் கோஆபரேடிவ் நாணயமென்னும் அம்சம் எம்மட்டில் பெறுகிறதென்று விசாரிக்கையில், பழைய ஸொஸைட்டிகள் வலுத்துப் பெருகியதனால் அவை பிரபலித்து வந்தனவேயொழிய, இவ்வருஷத்தில் புதியனவாகப்பிறந்தவைகளாலன்று. என்றாலும் பதினான்கு ஸொஸைட்டிகள் புதிதாக உண்டாயின. மெம்பர்கள் சங்கை, மூலதனம், க்ஷேமதனம் முதலிய அம்சங்களெல்லாம் வளர்ந்தே வந்திருக்கின்றன.

ஐர்லாந்தில் கோஆபரேடிவ் நாணயம் வெகுநாளாகப்பரவி, அனுபவமுற்றிப் பிரபலித்திருப்பதால், அதன் உபயோகத்தைக்குறித்து விசேஷித்துப்பேசுவது அனாவசியம். அதைவிட்டு, இப்போதுள்ள ஸொஸைட்டிகள் தாங்கள் செய்யக்கூடியமட்டில் வேலை செய்து பயனடையாமலும், கோஆபரேடிவ் அம்சம், லேவாதேவிக்கே சிறந்துள்ள அம்சம், ஆகிய இவ்விரண்டு அம்சங்களிலும் அவைகளுக்கு உண்டாகக்கூடிய பலன் கைகூடாமலும், இருப்பதற்குக் காணும் பலகாரணங்களையும் விளக்கி அவைகளை உயிர்ப்பிப்பது சிரேஷ்டமாகக்காணுகிறது. ஆனாலும் இப்போது நாம் குறிப்பிடும் தோஷங்கள் ஸொஸைட்டிகள் அனைவற்றிலும் காணுகின்றனவென்பதற்கில்லை; அப்படிச்சொல்வது அநியாயம். அவற்றில் சில சங்கங்கள்தான் இப்படித்தூங்குகின்றன. இவற்றுள்ளும் சிலவற்றிற்கு இரண்டோரம்சங்களில் முன்னுக்குவருவது சாத்தியமன்று. பெரும்பான்மையாகச் சங்கங்கள் அனுபவத்தில் குட்டுப்பட்டுத்தேறி, காலக்கிரமத்தில் முன்னுக்கு வருகின்றன.

சில ஸொஸைட்டிகளில் பத்திரங்களைப் புதுப்பிக்கும் துர்வழக்கம் இன்னும் காணுகிறது. அனுபவத்தில் இது கெட்டதென்று கண்டும், இவைகளுக்குப் புத்திவருவதில்லை. கடன் வாங்குபவன், அந்த வியாபாரத்தினால் தனக்குக் கிடைக்கக்கூடிய லாபத்தை அடையவேண்டி, கெடுவைத் தள்ளிவைக்கக் கேட்டால் அப்படிச்செய்வது சில சமயங்களில் நல்லகாரியமென்று நாம் ஒப்புக்கொள்ளலாம். சில சமயங்களில் கடனாளிக்கு “வேளை பொல்லாததாக,” அதனால் அவனுக்குக் கொஞ்சம் சாவகாசம் கொடுக்க வேண்டியும் வரலாம். உதாரணமாக, இந்தவாரம் சந்தையில், தன்பசுக்களை நல்ல வியாபாரமாகச் செய்துவிடலாமென்றிருந்து, சந்தைக்குப்போனபின், இன்னொருமுறைதான் விற்பது லாபகரமென்றும், இல்லாவிட்டால் விற்று நஷ்டப்பட்டுப் போகவேண்டுமென்றும் காணலாம். என்றாலும், மொத்தத்தில் பேசமிடத்து, பத்திரங்களை புதுப்பிப்பது பிசகென்று நாம் எவ்வளவுமுந்த வேண்டுமானாலும், எத்தனை அழுத்தமாக



வேண்டுமானாலும் சொல்லலாம். இரண்டாமுறை புதுப்பிப்பதென்பதைக் கம்மிட்டியார் கண்டிப்பாய் விலக்கிவிடவேண்டும். கம்மிட்டியார் 1-வருஷம் கெடுக்கண்டு கடன் கொடுத்துவிட்டு, வாய்தா வந்தவுடன் பத்திரத்தை வருஷாவருஷம் புதுப்பித்து வந்ததற்குச் சாக்ஷியம் நமக்குத் தாக்கல் வந்திருக்கிறது. சில கேசுகளில் பணம் வாப்ஸ் வந்திருக்கிறது. ஆனால் அதே தினத்திலோ, அல்லது அடுத்த கட்மிட்டி மீட்டிங்கிலோ, வேறு அவசர காரியமொன்றும் புதிதாகக்காணாமல், அந்தப்பணம் மறுபடி வெளியே போயிருக்கிறது. இம்மாதிரிக் கடன்கொடுப்பது, கைம்முதலை வீணாக்குவதற்கும், கடன் பணத்தைத் தாறுமாறாக்குவதற்கும் ஏதுவென்று நாம் சொல்லாமலே விளங்கும். தவிர இம்மாதிரிக் கடனுக்கு வட்டிகொடுப்பவன் பிழைக்கும் வழியை அனுசரிப்பவனல்லவென்றும் விளங்கும். அல்லாமலும், இம்மாதிரி செலவாகும் பணம் சில பெயர் கையிலேயே வெகுகாலம் தங்குகிறது. மற்றைய மெம்பர்கள், ஸொஸைட்டியானது இந்தச் சிலருடைய க்ஷேமத்திற்காகத்தானென்று நம்பிக் கடன்கேட்கவே யோசிக்கிறார்கள்.

பசுக்களைக் கொஞ்சம் விலைவாசி கூடினால் விற்கலாமென்று யோசிப்பவருக்குக் கொடுக்கும் கடன்கள் வெகு தீர்க்கமாய் யோசித்துச் செய்யவேண்டியவை. இந்தக் கடன் தொகையைக்கொண்டு பல சமயங்களில் ஜனங்கள் தாங்கள் ஷாப்புகளில் வைத்திருக்கும் பற்றுவரவுகளைப் பைசல் செய்து வருகிறார்கள். பிறகு பலதவணைகளில் பத்திரங்களைப் புதுப்பித்தும், கடைசியாகப் பார்க்கையில் கடனாளிதான் முதன் முதல் வாங்கியபோது எந்த ஸ்திதியிலிருந்தானோ அதே ஸ்திதியிலிருப்பதும் வெளியாகிறது. இம்மாதிரி கேசுகளில் இப்படித்தான் செய்யவேண்டுமென்று வரையறுப்பது சாத்தியமன்று. ஏனெனில், கடனாளி தன் பசுக்களுக்குத்தக்க விலை கூடிவருமளவும் காத்திருப்பது நல்லலாபத்திற்கு விற்றுக்கடனைத் தீர்ப்பது சகஜம். இவ்வாறு செய்வதற்கென்று வாங்கிய கடன், கிராமச் சாவுகார்கையில் மறுபடி. அவன் அகப்படாமலிருக்கும்படி உதவுமானால், அது முற்றிலும் சாஸ்திர சம்மதமே. ஒவ்வொரு கேசாக வாவரப்பார்த்து அதன் பல அம்சங்களையும் தீர்க்கமா யாலோசித்து, யோக்கியதாபக்ஷம் போல் தீர்மானிக்க வேண்டும். முக்கியமாகப் பார்க்கவேண்டியவை இரண்டு விஷயம். கடன் வாங்குபவன் ஒருதகாதாவை யொழிக்கவேண்டி, மற்றொன்றிற் பிரவேசிக்கிறானா வென்பதும், அதனால் அவனுக்கொரு பிரயோசனமுமில்லாமல், ஸொஸைட்டிக்கு ஒரு சமயம் ஏதாகிலும் அபாயமட்டும் நேரிடுகிறதா வென்பதுமே. இவ்விரண்டு துர்லக்ஷணமு மில்லாவிட்டால் தான் கடன் கொடுப்பதற்குக் கமிட்டியார் உடன்படவேண்டும்.

சில ஸொஸைட்டிகளில் கெடுப்படி தொகை வசூலாகாமலிருப்பது அடிக்கடி காணும் குறைவு. கடன் கொடுப்பதில் கெடு ஏற்படுவது நன்றாய் யோசித்தாக வேண்டிய விஷயம். கடனாளிக்கு அதனால் தனக்குக் கிடைக்கக்கூடிய லாபத்தைப் பூராவாக அடைவதற்கு வேண்டிய காலாவதி அகத்திய மிருக்கவேண்டும். அதற்கதிகமாக மட்டும் கூடாது. எந்தக்கேசிலும் கம்பெனி ரூல்களில் காணும் உத்தமபக்ஷ அவதியை மீறி அது போகவே கூடாது. குறித்த தவணை வந்ததும் பணம் வாப்ஸ் வந்து தீரவேண்டும் எந்தக் கேசுகளில் இந்த நிர்ப்பந்தத்தினால் உபத்திரவம் பொறுக்க முடியாமற் போகுமோ, அவைகளில் மட்டும் கொஞ்சம் தயை, தாக்ஷிண்ணியம் பார்க்க வேண்டும். கெடுத்தவறாமல் பணம் வாப்ஸ் வருவதும், பத்திரம் புதுப்பியாமலிருப்பதும் சாத்தியமானால், ஸொஸைட்டிகளால் மெம்பர்களுக்குக் கிடைக்கும் நற்பயன் இரட்டிக்கும். அதனால் மெம்பர்களுக்கு நற்குணமும், நல்லறிவும் இவ்வளவு அதிகரிக்கு மென்பதற்கில்லை.

ஸொஸைட்டிகளுக்கு நஷ்டம் இன்னவகையில் உண்டாகலா மென்பதையும், காரிய நிர்வாகத்தில் மற்றுள்ள தோஷங்களையும் யோசிப்பதில், ஒவ்வொரு ஸொஸைட்டியும் தனது கணக்கு வழக்குகளை அப்போதப்போது தனிக்கை செய்வித்தும், குண தோஷங்களை விளக்குவித்தும் வரவேண்டியது வெகு முக்கிய மென்றும் உபயோககரமென்றும் ஏற்படுகிறது. இப்போதேற்பட்டிருக்கும் விதிகளில், இதற்காக ஒரு விசாரிப்புக் கவுன்ஸில் உண்டாவதற்காக ரூல் இருக்கிறது. ஆனால் அனேகமாய்ப் பெரும்பான்மையோர், வாஸ்தவத்தில் இம்மாதிரிக் கவுன்ஸில்கள் உண்டாக்குவதில்லை. சில ஸொஸைட்டிகளில் மகாசபை கூடும்போது ஐ-ஏ-ஓ-எஸ் என்னும் ரிஜிஸ்தாரான ஸொஸைட்டி உத்தியோகஸ்தரைக் கொண்டு இந்தக் காரியத்தை நடத்துகிறார்கள். இந்தச் சங்கத்தாருடைய ஆடிட்டரும், நிர்வாகிகளும், இவ்விதமாகப் பேருபகாரம் செய்து வருவது வாஸ்தவமே. என்றாலும், உள்ளூர்க்காரராக, கோ ஆபரேஷன் விஷயத்தில் சிரத்தையுள்ள சி[illegible]சேர்ந்து கவுன்சிலாகி இந்த விஷயத்தில் உதவி புரிந்து வரக்கூடாதென்பதற்கு யா[illegible]ாரு நியாயமுமில்லை. அவர்கள் இதுவும் செய்யலாம். ஸொஸைட்டிகளை எச்சரித்து வியாபாரங்களெல்லாம் வியாபார தருமங்களை அனுசரித்தே நடக்கும்படி விடாமல் உபதேசித்தும் வரலாம். இந்தக்காரியம் ஆரம்பித்து வருபவர்கள் ஸொஸைட்டிகளின் க்ஷேமத்திற்காகப் பாடுபடுவதுடன், மற்றவர்களும் (சக்தியானுசாரம்) மேற்குறித்த உபகாரத்தைச் செய்து வருவாராகில், கோ ஆபரேஷனுக்கு அது பெரிய நன்மையைச் செய்யும். இந்த ஸொஸைட்டிகள் மூலைக்காடுகளிலிருக்கும் கிராமவாசிகளுக்கு, வியாபாரம் லேவாதேவி விஷயங்களில் அறிவு பெருகி, பிழைக்கும் வழிகளும் திருந்தி, முன்னுக்கு வரவேண்டுமென்று இவ்வளவு தூரம் முயன்றிருக்கின்றனவாதலால், நாம் மேற்குறித்த கவுன்சில் உண்டாவதில் அந்தப்பிராந்தங்களிலுள்ள பெரியதனக்காரரே முயன்று உழைத்து வருவாராகில், ஸொஸைட்டிகளின் உபயோகம் வெகுவாய் அதிகரித்து, வேரூன்றி மேலுமேலும் பிரபலத்திற்கு வருமென்பதில் தடையில்லை.

# வியாபார முதல் சேகரிப்பது.

1906-07 ஸூ ஐக்கியபஞ்சாப் அட்மினிஸ்ட்ரெஷன் ரிபோர்ட்டில் ஒரு வகை ஸொஸைட்டியை இப்படி வருணித்திருக்கிறது:—"பஞ்சாபில் இப்போது ஜனங்களுக்குப் பிரியமாகி வருவது, இத்தலியில் ஸ்ரீமான் லூஸாட்டியவர்கள் ஜனங்களுக்குள் பிரபலமாக்கிய ஸொஸைட்டி முறையிலிருந்தெடுத்ததாம். இவருடைய சம்பிரதாயப்படி, ஒவ்வொரு ஸொஸைட்டியிலும் மெம்பர்களாயிருப்பவர் ஒருவர் தவறாமல் எல்லோரும், பத்து மாதாந்தரத் தவணைகளில், ஸொஸைட்டி மூலதனப் பங்குகளில் ஒன்றாவது உருப்படும்படி செய்து கொண்டு, அதன் க்ஷேமலாபத்தில் ஒவ்வொரு மெம்பரும் அக்கறை யுண்டாக்கிக்கொள்ள வேண்டுமென்றும், சம்பாத்தியத்தில் ஏதோ கொஞ்சம் மீத்துவைக்கும் வழக்கம் மெம்பர்களுக்குப் பிடிபடவேண்டுமென்றும், நிர்ப்பந்த முண்டாகிறது. லாபத்தொகையை வீதிப்பதில் கொஞ்சம் தாராளமாகவேவிட்டு, அம்மூலமாய் எல்லாவகை மனுஷியரிடமிருந்தும், வியாபார முதலுக்காகப்பணம் வரவழைக்கப் பார்க்கிறது. பஞ்சாபில் புதிதாக ஏற்படும் ஸொஸைட்டிகளில், ஒவ்வொரு மெம்பரும் சக்தியானுசாரம் ஒன்றோ, அதிகப்பட்டோ பங்குகள் எடுத்துக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தமுண்டு. ஆனால் இத்தலியில் 10 மாதாந்தரத் தவணைகளில் பங்குத்தொகை செல்லாகவேண்டியிருக்க, இவ்விடத்தில் 10-வருஷாந்தரத் தவணைகளில் செல்லாகவேண்டும். அனேகம் ஸொஸைட்டிகளில் வருஷத்தில் அதமபக்ஷம் ரூபா 5-கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தமிருக்கிறது. வேறு அனேக இடங்களில் இந்த நிர்ப்பந்தமில்லை. முதல் பத்து வருஷம் கழிந்தபின், க்ஷேமதனம் ஸொஸைட்டியின் விலலங்கங்களுக்கு இவ்வளவுமட்டி லிருக்கவேண்டுமென்கிற விவகாரத்தை ரூல்படி சரிபார்த்துக்கொண்டு மீதியுள்ளதை லாபமாக வீதிக்கப்படும். வருஷவாரியில் பங்குக்காக வசூலாகும் தொகையைவிட அதிகமாக லாபத்தொகை பட்டவாடா ஆகவேண்டுமானால், ஸொஸைட்டியின் விலலங்கத் தொகைகளின் வட்டி 100-க்கு வருஷம் 1-க்கு ரூ. 6 வரை இறங்கவேண்டும். இப்போதுள்ளபடி பங்கு வாங்குவதற்காக வருஷவாரி கொடுக்கும்பணத்தை 10 வருஷமானவுடன் உடையார் வேண்டினல் கொடுத்துவிடல் ஆகும். என்றாலும் பங்குக்காரருடைய வட்டி வகைப்பணமும், லாபத்தொகை வீதிப்பதில் கிடைப்பதும், அவர்களுக்குக் கொடுத்தாகவேண்டும். ஸொஸைட்டி ஸ்திரப்படுமென்கிற நம்பிக்கையும், அதனாலுண்டாகும் நன்மைகளை அறியும் சக்தியும் அதிகரிக்குமளவிற்கு, இந்த ரூல் மாறுமென்று நான் நம்புகிறேன். ஆனால் இது மாறாவிட்டாலும், இந்த முறையில் வியாபாரம் நடக்கும். ஒரு ஸொஸைட்டியில் 80 மெம்பர்களிருப்பதாக வைத்துக்கொள்ளுவோம். அவர்கள் பிரவேசதனமாக ரூ. 1 ஒவ்வொருவரும் கொடுக்கிறார்கள். இந்த ஸொஸைட்டிமெம்பர்கள் வருஷம் 1-க்கு ரூ. 1000 பங்குக்காகச் செலுத்[illegible], அப்படிவரும் தொகைகளைக் கிரமமாக 100-க்கு வருஷாந்திர வட்டி ரூ. 9-[illegible] வியாபாரம் செய்வதாக இருக்கட்டும். (இதுதான் மாமூல்வட்டி வீதம்.) 10 [illegible] ஸொஸைட்டிக்குச் சுமார் ரூ. 6,866 லாபம்சேரும். இந்த [illegible] சுமார் ரூ. 800 ஆவதால், இதில் ரூ. 450 லாபத்

துகையாக வீதித்தும், ரூ. 150 க்ஷேமதனமாகவும்போகும். இது இரண்டும் வருஷப் ஏற ஏற அதிகமாகும். இம்மாதிரி லாபம்தான் அதமபக்ஷமென்னலாம். ஏனெனில் ஸொஸைட்டிகள் சீராக நடக்குமளவிற்குச் சர்க்காரிடம் வாங்கும் தொகைகள், கெடுக்குறுகிய டிபாசிட்டுகள், ஆகிய இவ்வகைகளில் அதிகலாபம் பெறுவதுடன், லேவாதேவி செய்பவருக்கெல்லாம் இவைகளுடைய நாணயம் சரியாகப் புலப்படும்போது, 100-க்கு 5 அல்லது 6 வீதம் வேண்டியபணம் சுலபமாய்க்கிடைக்கும். ஸொஸைட்டிகளில் பெரும்பான்மைக்குள், பத்துவருஷமானதும் பங்குத்தொகைப்பணத்தை வாப்ஸ் செய்யும்படி ஏற்பட்டரூல்கள் இனி ரத்தாகிவிடுமென்றே நான் எண்ணியிருக்கிறேன். அப்படியேயாகும்பக்ஷத்தில் ஸொஸைட்டிகளுக்கு வெகு நல்லதசையிருப்பது நிஜம். இம்மாதிரி ஸொஸைட்டிக்கு இரண்டு பெரிய அம்சங்களில் நலம் காணுகிறது. முதலாவது ஒவ்வொரு மெம்பருக்கும் இதனால் ஸொஸைட்டி க்ஷேமவிஷயத்தில் வாஸ்தவத்தில் பற்று உண்டாகிறது. மத்தியஸ்தர் கொடுக்கவேண்டிய கடன்களை, பூமித்தீர்வைப்பணம்போல பாவித்து வசூலிப்பது முடியாதென்று சர்க்கார் தீர்மானமாகச் சொல்லிவிட்டதால், ஸொஸைட்டிகளைச் சில தனிகர்மட்டும்கூடிப் பணம்போட்டோ, அல்லது அவற்றுள் நிர்வாக காரியத்தை ஆக்கிரமித்தோ வந்தால், அவற்றிற்கும் சாவுகார்கள் அவரவர் வியாபாரத்தைப் பிரத்தியேகமாய் நடத்தி வருவதற்கும் தோஷங்கள் ஒருவகைத்தேயாம். ஸொஸைட்டிக்கு க்ஷேமமாவது, மெம்பர்களெல்லோரும் ஒருங்குகூடி அதன்காரியங்களைச் சூக்ஷித்து வருவதாம். அதிலும் பணவிஷயமான பற்று ஒவ்வொருவருக்கும் இருக்குமாகில் ஸொஸைட்டியின் நடவடிக்கைகளை ஒவ்வொருவரும் கருத்தாக விசாரிக்க நியாயம் வெகுவாய் வலுக்கிறது. இரண்டாவதும், இதைவிடச் சிறந்ததுமாக ஒருலாபமுண்டு. ஸொஸைட்டிக்குப் பணம் வேண்டியபோது அதிகவட்டி கொடுக்கவேண்டாமல், சலீசாகப் பணம் பெயருமளவிற்கு அதன் க்ஷேமலாபமும் அதிகரிக்கும். இதற்கு மூலாதாரம் சமர்த்தாக வியாபாரம் செய்தலேயாம். பஞ்சாபில் ஜனங்களைச் சட்டாகவிருக்கும்படி உற்சாகமூட்டுவது மீன்குட்டிக்கு நீச்சம்பழக்கப் பிரயத்தனப்படுவது போலும். ஆனாலும், அந்த குணத்தை உபயோகிக்கவேண்டிய கிரமமான வழிகளின்னவையென்பதில் பஞ்சாபிக்குத் தெரியவேண்டியது அதிகம் உண்டு. செலவு சுருக்குவது அவனுக்கு சகஜம். என்றாலும், சொற்ப சந்தாயமுள்ள பஞ்சாபிக் குடியானவனைப் போல் தான் மீத்துவைத்த பணத்தைத் தப்புவழிகளில் இறைப்பவர் இப்பூமண்டலத்திலேயே இல்லையென்னலாம். மகசூல் அறுவடையாகும்வரை, அவன் சாமான்னியமாய் வாயுபக்ஷணம் பண்ணுவதாகவே சொல்லிவிடலாம். சொகுசுக்காக அவன் ஒருகாசுகூடச் செலவிடுவதில்லை. மகசூல் கைக்குவந்துவிட்டாலோ, ஒன்று, கிடைத்த லாபத்தொகையைப் புதைத்துவைக்கிறான். அல்லது (அது கையிலிருக்கும்வரை) தன்னைக் கோடீசுவரனாக எண்ணிக்கொள்ளுகிறான். பெரும்பாலார் இப்படித்தான் நடப்பது. தன் பெண்டு பிள்ளைகளுக்கு நகைகள் வாங்கி விடுகிறான். அடுத்த சந்தையில் தான் பல மாதங்களாகப் பட்டினிகிடந்து மீத்ததையெல்லாம் சூரையிட்டு விடுகிறான். இப்படியிறைத்தோ, புதைத்தோ விடுவதற்குக்காரணம், மீத்ததுகையை எங்காவது போடலாமென்பதற்கு ஆசையுண்டாக்கக்கூடிய சாதனமொன்றும் இல்லாததாம். ஆதலால் இவனுக்கென்று ஒருதினுசு கோஆபரேடிவ் ஸொஸைட்டி வேண்டும். அம்மூலமாய் அவனுக்குச் சமர்த்தாகப்பிழைக்க வழியுண்டாவதுடன், தான் மீத்துவைக்கும் தொகையை அதிற்போடுவதற்கும், அதை மறுபடி வாப்ஸ் வாங்க மனம்வராமலிருப்பதற்கும் இடமுண்டாகவேண்டும். சிறிது சிறிதாக டிபாசிட்டுகள்வைத்து அம்மூலமாய்க் காலக்கிரமத்தில் தன் பற்றுவகையில் பணம்கூடிக் காணும்படி செய்வதென்றால் அது அவனுக்கு ருசிப்பதில்லை. அதைவிட்டு, தன்னுடைய ஸொஸைட்டியில் பங்குக்காரனாகி, தனக்கும் தன்புத்



திர பௌத்திர பாரம்பரைக்கும் சாசுவதமாகப் பென்ஷனென்று ஏற்படுத்திக் கொள்வதென்றால், அதுசங்கதியே வேறாகிக்காணுவதாம். பத்துவருஷங்கழிந்து தான் வாங்கப்போகிற லாபத்தொகை வீதத்தை அவன் தனக்குப் பென்ஷனாகப் பாவிக்கிறான். இதைப் பெறுவதற்கென்று அவன் தன் சொகுசுச்செலவுகளெல்லாவற்றையும் நிறுத்திவிடுகிறான். இப்படிச் செய்துவருகையிலேயே, ஒரு ஸொஸைட்டி ஸ்திரமாக ஏற்படுவதற்கும் தான் வகைதேடி, அதில் தனக்கு வேண்டியபோதெல்லாம், நியாயமான வட்டிக்குப் பணம் பெயருவதும் சாத்தியமானால், தான் இதற்காகச் சந்தா செலுத்துவதில் இரட்டை சந்தோஷமுண்டாகிறது. இந்த யுக்தியினால் கிடைக்கக்கூடிய லாபம் பஞ்சாபிக் குடியானவனுக்குத்தான் விசேஷித்து அனுகூலகரமாகக் காணுகிறது. அனேகர் தங்கள் கந்தாயத்தொகை யெவ்வளவோ அவ்வளவு பங்குத்தொகையாகவும் போட்டுவருகிறார்கள். இதனால் பத்துவருஷத்திற் கப்புறம் தங்களுடைய பூமிக்கு ஒரு சுமாராகக் கந்தாயத்தினுடைய உபத்திரவமில்லாம லிருக்கலாமென்பதும், பிறகுக் காலக்கிரமத்தில் பூராவாகவே இல்லாமலிருக்கலா மென்பதும் அவனுடைய நம்பிக்கை. அனேகர் தங்கள் மனைவிகளுடையபேரால் பணம்போடுகிறார்கள். இதனால் அவர்களுக்கு வைதவ்வியம்வந்தால் அக்காலத்தில் ஏதோ ஒருவகையாக அவர்களுடைய கஷ்டம் பரிகாரமாகவேண்டுமென்பது அவர் தாற்பரியம். அனேகம் பெண்டுகள் நகைக்குப்பதிலாகப் பணமே ஸ்திரீதனம் வேண்டுமென்று மன்றாடுகிறார்கள். அப்படிக் கிடைத்தபணத்தை ஸொஸைட்டிகளில் போட்டுவைக்கிறார்கள். லயால் பூரிலிருக்கும் ஸொஸைட்டியில் கிராமத்திலுள்ள ஸ்திரீகளெல்லோரும் சேர்ந்து விட்டார்கள். ஆனால் இம்மாதிரி ஸொஸைட்டிக்கு ஓராக்ஷேபம் கூறலாம். அதாவது, பஞ்சாபிலிருக்கும் சில கிராமங்களில், வருஷந்தோறும் சில ஸொஸைட்டி மெம்பர்களுக்கு வரவுதொகையைவிடக் கடன்தொகையே அதிகமாகிக்கொண்டுவருவதில், இம்மாதிரிச்சங்கம் இவர்களுக்கு உபயோகமே இல்லையென்று. ஆனால் நாம் மேற்கூறிய ஸொஸைட்டிக்கு, அதற்குவேண்டிய மூலதனம் போடுகிறவர்களுடைய அவசரத்திற் குதவுவதுதான் முதல் தருமம். இது நியாயமே. அவர்களுடைய அவசரங்கள் ஒழிந்தபின், பங்குப்பணம் போடாத மெம்பர்களுடைய கஷ்டநிஷ்டூரத்தை விசாரிப்பதற்குத் தடையேயில்லை. எந்தக் கிராமங்களில் எல்லாக்குடியானவரும், அல்லது ஏறக்குறைய எல்லோரும், தாங்கள் கொடுக்கவேண்டிய வட்டியைச் செலுத்தியபிறகு, பிரதி வருஷமும் கடன் தொகைகளைச் செலுத்தமுடியாமல் பாக்கி நிறுத்திவிடுகிறார்களோ, அவ்விடங்களில் இம்மாதிரி ஸொஸைட்டிகளிருந்து உபயோகமில்லைதான். இதற்குச் சந்தேகமே கிடையாது. ஆனால் (இம்மாதிரி யிடங்களில்) ஏதோ சில அபூர்வமான கேசுகளைத்தவிர, சாமான்னியமாய் ஒருவிதமான (கோ ஆபரேடிவ்) ஸொஸைட்டியும் செழிக்காதென்பதுதான் என்கக்ஷி. உதாரணமாக, கிருஷி வலுக்காததோர் ராஜபுத்திரக் கிராமத்தில், நிமித்தயாத்திரத்திற்கு 100-க்கு 37½ வீதம் வட்டியென்றிருப்பதைவிட்டு, தப்பாமல் கொடுத்தாகவேண்டியதாகிய 9-வீதம் ஏற்படுத்துவதில் லாபமுண்டாகுமே, அது கொண்டு வருஷவாரியில் கடனிருந்தே வருவதைக் குறைத்துக் கிரமமாக முதல் சேரும்படி செய்வது சாத்தியமன்று. ஏனெனில், கடன் வாங்குவது மட்டும் அதிகரிக்கும். வாங்கிய பணமோ லாபம் தேறும்படியான வகையில் உபயோகப்படுவதற்குமாறாக, லக்ஷியமின்னதென்றில்லாத ஆராதாரிவழியில் செலவாகிவிடும்.

2. மேற்கண்ட முறைப்படி, ஸொஸைட்டிகள் பர்மாவிலாகி வருகின்றன. 1907-8-ம் வருஷத்திய அட்மினிஸ்டிரேஷன் ரிப்போர்ட்டில், இந்த ஸொஸைட்டி “பரீக்ஷைக்காகவே ஏற்பட்டிருப்பதாகவும், ராபேசன் முறையில் ஏற்படும் ஸொஸைட்டிகள் விஷயத்தில், கோஆபரேடிவ் முறையாக வேலை நடந்துவரும் இடங்களில், ஆரம்ப

முதல் மெம்பர்களுக்கு மீத்துவைக்கச் சௌகரிய முண்டாயிருக்கும் பக்ஷத்தில் அதை யனுசரித்து உபகரிப்பதற்கு இடமில்லையென்றும்". காணுகிறது. இந்தப் பர்மா லெது ஸொஸைட்டியிலோ, வருஷம் 1-க்கு ரூ. 10 வீதம் பத்து வருஷத்தில் ரூ. 100 பங்குள்ளதை வேண்டியமட்டில் மெம்பர்கள் சம்பாதித்துக்கொள்ள வகையிருக்கிறது. பத்து வருஷங்களை பங்கு வாங்குவோருக்கு லாபத்தொகை விநியோகமில்லை. லாபம் அனைத்தும் க்ஷேமதனத்துடன் சேருகிறது. பத்துவருஷமானதும் பங்குத்தொகை வாபஸ் வேண்டியதானால் வரலாம். பதினேழாம் ஆண்டில் ஸொஸைட்டிக்கு வேண்டிய வியாபாரமுதல் மூன்று வகையில்தேறும். அவை, பத்துவருஷம் பூர்த்தியாகாமல், ஸொஸைட்டி ஆரம்பமானபின் இரண்டுமுதல் தற்காலம்வரைப் பங்குக்காகச் செல்லாகிவரும் தொகைகள், பத்துவருஷ வியாபாரத்தில் கிடைத்தலாபம், (க்ஷேமதனம்.) கடனாக வாங்குபவைகள் ஆகிய இவைகளாம். பதினேழாம் ஆண்டு நிறைந்ததும், அவ்வருஷத்திய லாபம் இரண்டாகப்பிரியும். ஒன்று க்ஷேமதனத்துடன் சேரும். மற்றது பூராவாகப் பங்குத்தொகை செலுத்தியிருப்பவருக்கு விநியோகிக்கப்படும். இதற்கு வாஸ்தவத்தில் அர்த்தமென்னவென்றால், பங்குத்தொகை பூராவாகச் செலுத்தியவர்கள் இதற்கப்புறம் ஸொஸைட்டியுள்ளவரை ஒருவாறு பென்ஷன் வாங்கி வருவார்கள் என்பது.

3. மேற்கண்ட வகையில் ஸொஸைட்டிகளாவதினால் கைம்முதல் சிறிது சிறிதாகக்கூடி வருவதாகிய ஒரு சிறந்த லக்ஷணம் அவற்றிற்குக்காணும். (இது கொஞ்சம் தாமதப்பட்டு ஆகிறதென்பதில் சந்தேகமில்லை.) என்றாலும் காலக்கிரமத்தில் முதல் பெருகுகிறது. ஸொஸைட்டியில் சம்பந்தமில்லாதவரிடமிருந்து பணத்தை (டிபாசிட்டு வகையா மூலமாக)க் கொடுவது, எந்த ஸொஸைட்டிக்கும் பூஷணம்தான். அதன் மெம்பர்களுக்கு அதைப்பற்றிப் பெருமை கொள்ளவும் படலாம். தவிர ஆரம்பத்தில், இம்மாதிரி 'மூன்றாவது' மனுஷியருடைய பணத்தைக்கொண்டே வேலையாக வேண்டி வருவதும் வெகு அவசியமானதுதான். என்றாலும், சாஸ்திரப்படி எல்லாமேக்கப்பெற்றதையும் பொருந்திய ஸொஸைட்டிக்கு இந்த லக்ஷணம் வேண்டும். அதாவது ஸொஸைட்டியிருக்கும் கிராமத்தில் மீந்துவருகிற ஒவ்வொரு பைசாவும் அதன் கஜானாவில் வந்து விழவேண்டும். இப்படிச் சேருகிற தொகைகளை கோவாப்பரேடிவ் தருமத்தை யனுசரித்து மெம்பர்களுக்காக வேண்டிய காரியங்களுக்காக அவசரம் வரும்போது சிறு தொகைகளாகக் கொடுத்து உதவி வருவதாம். இதை உத்தேசமாக வைத்து, சமூகவிடாமலும் மறவாமலுமிருக்கும்வரை, இந்த உத்தேசம் எந்த மார்க்கத்தைப்பற்றி வருமென்பதை நாம் விசாரிக்க வேண்டியதில்லை. நான் சிலமார்க்கங்களைக் கீழே குறிப்பிடுகிறேன்.

(a) ஒன்று மேலே குறிப்பிட்டபடி மெம்பர்கள் குறித்த கெடுக்களில் டிபாசிட்டு செய்வது. இது நிதிகளில் காணும் முறை போன்றது. ஆனால் பங்குத்தொகை முடிவு பெறும்படி நிர்ப்பந்த மிருப்பது கூடாது. கவேரிப்பாக்கம் ஸொஸைட்டி (கெ-4) யும், வேறு ஸொஸைட்டிகளும் இந்த முறையை மாசபண்டு டிபாசிட்டென்று பெயர்வைத்துக் கையாண்டுகொண்டிருக்கின்றன.

(b) இரண்டாவது, லாபத்தொகையில் ஒரு பகுதியைப் பங்குத்தொகைக்கு மிகுதிப்பணமென்று வைத்து பட்டாவாடாசெய்தல். இதில் ரொக்கமாகக் கொடுக்கவேண்டிய தொல்லையில்லை. ஆனால் இது நாமத்தின் பேரில் ஆவது. மெம்பர்களும் தான் ஏதோ மீத்துவைப்பதாக நினைப்பதில்லை. இது திருவல்லிக்கேணி ஸொஸைட்டியின் வழக்கம். (கெ/15)



(c) மூன்றாவது, கடன் வாங்குபவனெவ்வொருவனும் வாங்கிய பணத்தில் ஒரு பகுதியை டிபாசிட்டாக வைத்துத் தீரவேண்டுமென்பது. இது (சாவுகார்) கணக்குப்படி தப்பென்று கண்டாலும், கோ ஆபரேஷன் முறைப்படி வெகு யோக்கியமானது.

(d) எல்லாவழிகளையும் விடச் சிறந்தது. மெம்பர்கள் சிரத்தையோடு போய் எல்லோருக்கும் சமர்த்தாய்ப் பிழைப்பதனாலுண்டாகும் நலங்களையும், ஸொஸைட்டி யிருப்பதனால் சம்பாத்தியத்தில் மீத்து வைப்பதற்குக் காணும் அனுகூலங்களையும், விளக்கிக்காட்டி, கிராமப்பாங்கில் கிராமத்திலுள்ள ஒவ்வொரு 'புத்தியறிந்த' ஆணும் பெண்ணும், தாங்கள் மீத்து வைக்கக்கூடிய ஒவ்வொரு அணாவையும் போட்டு வைக்கும்படி செய்ய வேண்டியது. சில்லறை யென்று எதையும் வேண்டாமென்னல்கூடாது. வெருசாய் இத்தச் சில்லரைப் பணங்களை உடையார் வேண்டும்போது கிட்டாமலிருக்கும்படி நிர்ப்பந்தப்படுத்தினால், அவர் கள்ளுக்கடைக்குப் போவதும் நின்றுவிடும். 'மீறும்பணத்திய டிபாசிட்டு' என்று பெயர் வைத்து, இம்மாதிரிப் பணங்களைச் சேர்க்கச் சௌகரியம் சேலம் ஸொஸைட்டி ரூல்களில் (கெ/25) காணும்.

(e) தெர்ழுத்த கிராமங்களில் ஆரம்பத்திலேயே பங்குத்தொகை இவ்வளவு வந்ததாக வேண்டுமென்று நிர்ப்பந்திக்கலாம்.

4. இம்மாதிரிச் செய்வதின் உத்தேசங்கள், ஒவ்வொரு மெம்பரையும் ஸொஸைட்டியின் க்ஷேமலாபத்தில் தனக்கும் 'ரக்த' சம்பந்த மிருப்பதாகப்படும்படி அவரை நிர்ப்பந்தப்படுத்தி, அவரை பாங்கின் உடைமைக்காரரில் ஒருவராக்கி, அவருக்கு அந்த பாத்தியம் நன்கு யுறைக்கும்படி செய்வது மட்டுமேயன்று. பணத்தைப் போட்டு வைப்பதற்கும், பணம் சிறிது சிறிதாகப் பெருகுவதற்கும் சௌகரிய மேற்படுத்தி வழி காட்டியும், கிராமத்தில் நான் முன்னே, நான் முன்னே யென்று முன்னுக்கு வரவேண்டிய ஆசையை அதிகரித்தும் வருவதாம். இப்படி யெந்தப் பாங்கு புஷ்டியாகிறதோ, அது வாஸ்தவத்தில் கிராஜனங்களுடைய பாங்காகி உள்ளூராரே மானேஜர்களாகவும், உள்ளூர்ப்பணமே வியாபாரமுதலாகவும், ஆகி, பிழைப்போமென்ற தைரியம் வளர்த்து, அண்டினவர்களுக்குப் பிழைக்கும் வழி காட்டியும், நாணயஸ்தருக்குச் சலபமாய்ப்பணம் உதவியும், சீமேழி வாழ்வதோர் சாதனமாம்.

# (கோஆபரேடிவ்) பாங்குகளை நடத்தி வரவேண்டுவதற்குரிய குறிப்புகள்.

---

கீழே பிரசுரித்திருக்கும் ஸர்க்கியுலர் ஐக்கியமாகாண ரிஜிஸ்திரார் அவர்கள் எழுதி வாவிடுத்தது. அதில் வாசக விஷயத்தில் மட்டும் சிலமாறுதல்கள் செய்திருக்கிறது. பல உபயோகசரமான சங்கதிகள் காணுவது கொண்டு, அதை இன்ஸ்பெக்டர்களும் பஞ்சாயத்துகளும் வெகு ஜாக்கிரதையாய்ப் படித்தறிய வேண்டும்:—

I. **தருமங்கள்.**—கோஆபரேடிவ் முறையில், பாங்குகள் உண்டாவதற்குக் காரணமாவது, இந்நாட்டிலும், வேறு நாடுகளிலும் உள்ள பெரும்பாலார்க்கு, கிருஷி முதலிய வியாபாரங்களுக்குக் கடன் வேண்டியே யிருக்கிறது. என்றாலும் அவ்வாறு வேண்டியதை வாங்குவதில், ஈடுகாட்டுவதற்குச் சரியான ஐவேஜு ஒன்றுமில்லை. ஆதலால் இம்மாதிரி ஜனங்கள் ஒன்றுசேர்ந்து எல்லோருடையவும் நாணயத்தைக் கூட்டி ஈடாக்கி, வரும் வில்லங்களுக்கெல்லாம் பொறுப்பு ஏற்றுப் பணம் பெயரும்படி செய்து கொள்ளுகிறார்கள். காலக்கிரமத்தில் தங்களுடையதாகவே மூலதனம் வெகுவாகிச் சேர்த்து விடலாமென்று அவர்களுக்கு நம்பிக்கை. அவர்களுடைய முதற் காரியம் சாமான்னியருக்கும் ஏழைகளுக்கும் நாணயத்தின் பேரில் பணம் பெயரும்படி செய்வதாம். பிறகு காலக்கிரமத்தில் பாங்குகளால் கிடைக்கும் வேறு நன்மைகளையும் இவர்களுக்குக் கிட்டும்படி செய்வதாம். இவ்விரண்டு உபகாரங்களும், ஜனங்கள் நாணயஸ்தராயும், பாடுபடுவோராயுமிருந்து, இவ்வகை நன்மைபெறுவதற்கு யோக்கியதையிருப்பதாக நிஷ்கரிஷை யிருக்கும் வரை, (இவர்களுக்கு இம்மூலமாய்க்கிட்டத்தான் வேண்டும்.) பாங்கில் வியாபாரம் செய்து நற்பயனையடைய உபகரிப்பதல்லாமல், இப்பாங்குகள், இப்போது பாங்கு என்னும் பெயரையே கேட்டிராதவர்களுக்கு, அவற்றின் அருமை பெருமைகளைத் தெளிவிக்கின்றன. தவிர அவைகள், ஆகவேண்டிய காரியங்களுக்குத் தைரியமாய்க் கடன்வாங்கும்படிக்கும், குடி முழுகிப்போம் வியாபாரங்களில் கடன் பெருகாமலிருக்கும் படிக்கும், ஜனங்களை நிர்ப்பந்திக்கின்றன. மேற்சொல்லிய காரியங்களுக்காகப் பலர் சேருவதில் ஒரு பெரிய சக்தி யுண்டாகிறது. அதை ஸர் எப் நிக்கல்ஸன் துரை இவ்வாறு விவரித்திருக்கிறார்:—"(இப்படிச் சேருவதனால்,) தனியாகப் பிழைக்க மாட்டாமலும், தீர்க்க திருஷ்டி யில்லாமலும், விஷயந் தெரியாமலு மிருக்கும் ஏழைக்கு (அந்தத் தோஷங்கள் நீங்கி,) பத்துப்பெயர் சேர்ந்து (தங்களுடைய க்ஷேமத்திற்காக) ஏற்படும் நிர்ப்பந்தங்களுக்குக் கட்டுப்பட்டு, அம்மூலமாகத்தாங்கள் செய்யும் காரியங்களிலெல்லாம், தீர்க்க திருஷ்டி, ஜாக்கிரதை, காணயம், பலம், காரிய சித்திக்கு உதவும் தைரியம் இவைகள் அதிகரித்து உபகரிக்கின்றன. இவ்வகையாக இவர்கள் வேண்டும் நாணயமென்பது சுலபமாய்ப் பணம் பெயரும் நாணயமட்டு மல்ல. (பெயரும் பணத்தையும் அதற்கு மூலாதாரமான) நாணயத்தையும் கிரமப்படி உபயோகிக்கத் தெரியாதவரை, சுலபமாய்ப்பணம் பெயருவதற்குள்ள சக்தி உபத்திரவகரமே யென்பது ஐரோப்பாவில் கண்டிருக்கும் அனுபவம். ஆதலால் இந்த



REGISTRAR OF BOOKS
REGISTERED
SEP 1910
MADRAS.

நாணயத்தை உபயோகிப்பவருக்குத் தீர்க்க திருஷ்டியும், வரவு செலவு நிதானமறிந்து நடக்கும் விவேகமும் வேண்டும். இப்படி யிருந்தால் அந்த நாணயசக்தி பிரபலிப்பதற்கு வேண்டிய நிர்ப்பந்தங்களும், ரக்ஷைகளும் ஏற்பட்டு (கிரமமாக நல்வழிகளில் வேறூன்றி பிரபலிக்கும்.)"

*II.* **முக்கிய அம்சங்கள்.**—சாஸ்திர சம்மதமான கோ ஆபரேடிவ் ஸொஸைட்டிக்கு இருந்தாக வேண்டிய அம்சங்களாவன:—

(1) மெம்பர்கள் பரஸ்பரம் நல்ல பரிசயமுள்ளவர்களாகி, ஒருவரை யொருவர் நம்பி, பொறுப்பு எல்லோருக்கு மிருப்பதை நன்றாயறிந்திருப்பது;

(2) மெம்பர்களெல்லோரும் ரூபரூபிலோ, அல்லது தாங்கள் தேர்ந்தெடுத்த பஞ்சாயத்தாராவது ரூபரூபிலோ, ஸொஸைட்டி காரியங்களை நிர்வகித்து வருவது.

3. பாங்கு தங்களுடைய சொந்தமென்று தங்களுக்கிருக்கும் நம்பிக்கையைப் பாங்கில் டிபாசிட்டுகள் முதலியன வைத்து ருசுப்படுத்தல்.

முதலாவது அம்சத்தைப் பொறுத்தமட்டில், பலகிராமவாசிகள், பலஜாதியார்கூடி உண்டாக்கியிருக்கும் ஸொஸைட்டிகளில், மெம்பர்களுக்குப் பரஸ்பரம் ரகசியங்கள் நன்றாய்த் தெரிந்திருப்பது சாத்திய மன்றென்று சுலபமாய் விளங்கும். அவ்வாறிருக்கையில், ஒருவருடைய வில்லங்கங்களுக்கு மற்றவர் உடன்பட வேண்டிவந்தால் அதற்கு அவர்கள் வாஸ்தவத்தில் சம்மதிக்கத்தான் மாட்டார்கள். தவிர பிராம்மணனொருவன் ஏராளமாகக் கடன்பட்டு, கெடுப்படி செலுத்த முடியாமற் போனால், அதற்குப் பரிகாரம் தேடுவதும், அவரைச் செலுத்தும்படி கட்டாயப்படுத்துவதும் பஞ்சமனுக்குச் சாத்தியமன்று. அப்படியிருக்கும் வரை அந்தப் பஞ்சமன் இந்தக்கடன் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வாஸ்தவத்தில் இஷ்டப்படுவா னென்பதற்கும் இடமில்லை. ஆதலால் ஸொஸைட்டிகள் வாஸ்தவத்தில் கோஆபரேடிவ் முறையில் செழிக்கவேண்டுமானால், ஒரே கிராமத்தவர் சேர்ந்து ஆகவேண்டும். தவிர மெம்பர்கள் சற்றேறக்குறைய ஒரே ஜாதியாரா யிருக்கவேண்டும். இந்த நிர்ப்பந்தங்களுக் குடன்படாவிட்டால், ஸொஸைட்டிகள் எப்பொழுதாவது வாஸ்தவத்தில் வேரூன்றுமோ வென்பது சந்தேகம். வெகுசாய் அடைதக்கடைசியாகக் கலைத்துவிடவேண்டிவரும். அல்லது நிர்வகிக்கக்கூடிய சிறுசுகளாக அதைப் பகுக்கவேண்டிவரும் (இந்தத்தசை வாராமலிருக்க வேண்டுமானால்) ஒவ்வொரு ஜாதியாருக்கும், கிராமத்தில் ஒவ்வொரு பகுதிக்கும் பிரதிநிதிகளிலிருந்து தீரவேண்டுமென்று நிர்ப்பந்தித்துப் பஞ்சாயத்தை நல்ல பிரதிநிதியாக்கி, நிர்வாக சக்தி அதிகரிக்கச் செய்வதும் ஒரு சாத்தியப்பட்ட வழியாம்.

(2) - ல் காணும் தோஷமே இந்த (ஐக்கிய) மாகாணங்களில் ஏற்பட்டிருக்கும் ஸொஸைட்டி களுக்குள் காணுவது. உள்ளூரில் செல்வாக்கு நிரம்ப உள்ளவர்கள், பொது நன்மையென்னும் சிலாக்கியமான உணர்வை முன்னிட்டுக் கோஆபரேஷன் முறையில் பாங்குகளைப் பலமுறை ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால் அவைகள் சாஸ்திரப்படி நிற்கவேண்டிய நிலையின்னதென்று அறியாமல், மெம்பர்களுக்குச் சுகமுண்டாகட்டுமென்று அவர்களுக்காகத் தாங்களே அவைகளை நடத்தி நிர்வகித்துவந்திருக்கிறார்கள். வாஸ்தவத்தை விசாரிக்குமிடத்து, இவர்கள் சாமான்னியர்களை நிர்வாகப்பதவியிலமர்த்தி, பாங்குகளை அவர்களே நடத்திவரும்படி புத்திபுகட்டிமட்டும் வரவேண்டும். முக்கியமாகக்கவனிக்க வேண்டியவையாவன:—

பஞ்சாயத்தாருடைய உத்தரவன்றியில், ஒரு ஸொஸைட்டியிலும் யாதொரு காரியமும் நடக்கக்கூடாது.

(b) டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தர் வந்து [illegible] அவருடைய ரிப்போர்ட்டை பரிசோதித்து [illegible] பிரகாரம் தேடவேண்டி ஒரு மகாசபை கூட்டவேண்டும்.

(c) ஜூலைமாதத்தில் மெம்பர்களெல்லோரும் சேர்ந்து வருஷாந்தர மீட்டிங்கு கூடவேண்டும்.

(d) இந்த மீட்டிங்கில் பஞ்சாயத்தார் மெம்பர்களுக்கு, (ரிஜிஸ்திரார் பார்வை யிட்டனுப்பிய பிரகாரம்) ஸொஸைட்டியின் பற்று வரவு மொத்தங்களையும் [illegible] படித்துக்காட்டவேண்டும். தவிர ஒருவருஷமாகச் செய்த வேலையை விவரித்து ஒரு ரிபோர்ட்டும், [illegible] வும், அந்த லாபத்தை இன்னப்படி செலவுசெய்ய [illegible] மென்று விவரமும், அந்தச்சபையில் வெளியாகவேண்டும்.

(e) தவிரவும், பஞ்சாயத்தார் இந்த மீட்டிங்கில், எல்லாமெம்பர்களுமறியும் படி, வியாபாரமுதலை அதிகமாக்கவேண்டியோ, கடன்கொடுப்பதில் காணும் நிபந்தனைகளை மாற்றவேண்டியோ, அல்லது இதுபோன்ற வேறுகாரியங்களை வேண்டியோ, தங்களுக்கிருக்கும் அபிப்பிராயங்களை விளக்கவேண்டும்.

(f) பிறகு மெம்பர்கள் மேல்வருஷத்திற்குப் பஞ்சாயத்தாரை நியமிக்கவேண்டும்.

(g) பஞ்சாயத்தார் கூடி நடத்தும் நடவடிக்கைகளும், மெம்பர்களெல்லோரும் கூடும் மகாசபை நடவடிக்கைகளும், க்ரமமாகப் புஸ்தகத்தில் பதியவேண்டும்.

(3) ஐரோப்பிய கிராமபாங்குகளில் ஸேவிங்க்ஸ் பாங்கு டிபார்ட்மெண்டுகள் இருந்துவருகின்றன. அவைகளில் மெம்பர்கள் பற்றுவரவுப் புஸ்தகங்கள் வைத்து வருவதும் சாதாரணம். (எனக்குத் தெரிந்தவரை) இந்தியாவில் கிராமப்பாங்குகளிலொன்றும், (போஸ்டு ஆபீஸ் ஸேவிங்க்ஸ் பாங்குகளில் நடப்பதுபோல்) இம்மாதிரிப்பே ரேடுவைத்துப் பற்றுவரவு கணக்கெழுதக் காணோம். இம்மாதிரிக் கணக்குகள் இல்லாமலேயிருக்கவேண்டுமென்பதற்கு நியாயம் ஏதுமொன்றும் காணவில்லை. பேரே டேடுத் தாராளமாய்ப் பெருக்கி, அந்தக் கணக்கில் பணம் போடுபவர்களுக்கு உபய வட்டியாக 100க்கு 8½ வீதம் கொடுத்துவரலாம். இப்படிவைக்கும் கணக்கு எப் போது கேட்டபோதும் வைசலாகவேண்டியதுதான். (ஆனால் ஒருவாரம் [illegible]) [illegible]:—



வந்துசேருவதற்கு எல்லா உபாயங்களும் செய்தல் தகும். அவசியமா ளுல், இவைகளுக்கு வட்டிவீதம் 100க்கு 5 அல்லது 6 வரை உயர்த்தி வரவழைக்கலாம், தவிர

(b) பாங்கு மெம்பர்கள் சில பருவங்களில் டிபாசிட்டுகள்வைப்பது. இவர்கள் ஏர் 1க்கு அணு 8 வீதமோ, அல்லது கடனுகவாங்கும் தொகைக்கு இம்ம ட்டென்று ரூலில் கண்டிருக்கும் வீதமோ வரும்.

அனேகமாய்ப் பாங்குகளிலெங்கும் பற்றுவரவுப் பேரேடு முறைப்படி கணக்கு கள் இன்னும் காணவில்லையாதலாலும், பிக்ஸெட் டிபாசிட்டுகள் வைப்பதற்குவேண்டிய யோக்கியதையுள்ள பணக்காரர்கள் மெம்பர்களுள் இல்லையாதலாலும், மெம்பர்கள் தங் களுக்குப் பாங்கு விஷயத்திலுள்ள அக்கரையையும், விசுவாசத்தையும், மேற்சொல்லிய படி சிலபருவங்களில் டிபாசிட்டு வைப்பதாக ஒப்புக்கொண்டுதான் வெளிப்படுத்தவேண் டும். இந்தவகைப்பணங்களைக் கடன்வாங்கிய தொகைகளிலிருந்து வஜாசெய்துவிடலாமா தலால், போட்டபணம் வாப்ஸ்வருவது வெகுசுலபம். அதனுல் ஒருவருக்கும் ஒரு உபத் திரவமுமில்லை. இதை ஒருவிதஇன்ஷூரன்ஸ் பணமென்றே அல்லது பணம் சம்பாத்தியத்திலிருந்து எப்படியாவது மீத்துத்தீரவேண்டுமென்கிற நிர்ப்பந்தமூலமாக உண்டாகும்வரும்படியென்றே,அல்லது ஸொஸைட்டியானது காலக்கிரமத்தில்தனக்கு வேண்டிய வியாபாரமுதலை மெம்பர்களிடமிருந்தே சேகரித்துக்கொண்டு, அன்னியரு டைய சகாயம் வேண்டிவராமல் செழிக்க ஏற்பட்ட ஒரு உபாயமென்றே, சொல்ல லாம். இவ்வகை டிபாசிட்டுகளின்பேரில் அவை 1ரூ. ஆனதுமுதல் வட்டிகொடுத்துத் தாளுகவேண்டும் வட்டிவிகிதம், பணம்வந்த பிற்பட்டு அடுத்துவரும் கால்வருஷஆங்களை முதல் கணக்காகலாம். (அதாவது ஜனவரி, ஏப்பிரல், ஜூலை, அக்டோபர் ஆகிய மாத ங்களின் கடைசிதினங்கள்.) ரூபாய் 1க்கு அணு 1, அதாவது, வருஷத்திற்கு 100க்கு 6¼ ரூபா வீதம் சாமான்னியமாய் நல்ல வட்டி யென்னலாம்.

III. வேறு முக்கிய அம்சங்கள்.—இன்ஸ்பெக்ஷன் செய்வதில் கீழே காணும் சில அம்சங்களையும் கவனிப்பது உபயோககரம்:—

(1) ஸொஸைட்டியானது அதன் மெம்பர்களுக்கு அவசியங்காணும் போதெ ல்லாம் உபகரிக்க வேண்டி முயன்றுவருகிறதா? ஒருவனுக்குச் சா மான்னியமாய்ச் சாகுபடி வாரக்கம் ரூ. 20 வேண்டியிருந்தால், அதை அவன் சாவகாரிடம் வாங்காமலிருக்கவேண்டுமென்று அவனுக்கு ஸொஸைட்டியிலிருந்து ரூ. 10 கடன் கொடுப்பதில் உபயோகமே இல்லை. மற்றபக்ஷத்தில், மெம்பர்களெல்லோரும் பிரவேசதனம் கொடு த்தானபின், ஒருவனுக்குமட்டும் அவன் வேண்டுவதெல்லாம்கொடுத்து மற்றொருவனுக்குக் கொடாமலிருப்பதும் சாத்தியமன்று. இதுவரை மெம்பர்களெல்லோருக்கும், அவரவர் அவசரங்க ளெல்லாவற்றிற்கும் சளையாமல் கடன்கொடுத்து வியாபாரம் செய்யவேண்டியதற்கு முதல் கூடிய ஸொஸைடிகள் அனேகமாயில்லை யென்னலாம். ஆதலால் அப் படி வியாபாரமுதல் சேருமளவும் புதிதாக மெம்பர்களைச் சேர்க்காமலி ருப்பது நலம். (மேற்கண்டபடி நடக்கமுயன்ற சில ஸொஸைடிக ளின் அனுபவத்தைப் பார்க்குமிடத்து, சாமான்னியமாய்த் தலைக்கு ரூ. 50 தான் வேண்டிவரும் பணமென்று காணுகிறது.) மெம்பர்களில் செத்தும் கெட்டும் சங்கைகுறைந்தால், பத்துப் பெயருக்குக் குறை யாமலிருக்கும்வரை, அவர்களுக்குப் பிரதியாக மெம்பர்களை நியமிக்கக்

கூடாது. வேண்டியமட்டில் பணம் பாங்கிலில்லாவிட்டால், இன்ஸ்பெக்டர் ஒருசமயம் அதற்குவேண்டியபணம் சம்பாதித்துக் கொடுத்து உபகரிக்கும்படியாயிருந்தாலும் இருக்கலாம்.

(2) பணம் கெடுத்தவருமல் வாப்ஸ்வருகிறதா? இது வெகுமுக்கியமான அம்சம். யாரேனுமொருவருக்கு வாய்தா மீறிப்போகவோ, பணம்சரியாய்ச்செலுத்தாமலிருக்கவோ, இடங்கொடுத்தால், அது சீக்கிரத்தில் பெருவாரியாகிவிடும். மெம்பர்களுக்குத் தாங்கள் கெடுவில் தொகை செலுத்தாவிட்டாலும் பாதகமில்லையென்று மனதிற்பட்டுவிட்டால், பாங்கு வாழ்ந்தாற்போலத்தான். தீராமல் வந்தால் ஒருசமயம் மறுபடியொரு கெடுக்கட்டிக் கடன்முதல் அதுவரை வசூலாகாமலிருக்கும்படி பஞ்சாயத்தார் உத்தரவு செய்யலாம். ஆனால் எந்தவகையிலும் வட்டி வசூலாகித்தீரவேண்டும். குத்தி பாக்கிகள் நின்றால் அப்படியாவதற்குக் காரணங்களை நன்றாயறியவேண்டும்.

(3) பணம் வாப்ஸ்வரவேண்டி கெடுக்கட்டுவதில், வாங்குபவனுடைய சௌகரியத்தைக் கவனித்துக் கட்டுகிறார்களா?

இந்த விஷயத்தை அனேகமாய் (ஸொஸைட்டிகள்) கவனிப்பதில்லை. வாபஸ் வருவதற்குக் காலாவதிகள் மனம்போனபடி ஏற்படுகின்றன. கடன்வாங்கும் ஒவ்வொருவனும், அப்படி வாங்கும் காலத்தில் ஹிந்து பஞ்சாங்கப்படியோ, அல்லது வேறு பஞ்சாங்கமுறையாகவோ தெளிவாக இன்னதேதியில் அதை வாப்ஸ்செய்யத் தன்னால் ஆகுமென்பதைச் சொல்லும்படி செய்யவேண்டும். கடன் ரிஜிஸ்தரில் இந்தத்தேதி பதியவேண்டும். பணம் வாப்ஸ்வந்தால் அது பாங்கில்கட்டித் தூங்கக்கூடாது. அனேகமாய் எல்லா இடங்களிலும் சில மெம்பர்கள் வருஷத்தில் எப்பருவத்திலும் கடன்வாங்கவேண்டியவர்களாயிருப்பது சகஜம். அவர்களுக்குக் குடும்பச்செலவோ, மாடு கன்று வாங்கவேண்டிய அவசரமோ, அல்லது பழங்கடன் தகாதாவோ இருந்தேயிருக்கிறது.

IV. முந்திநடந்த இன்ஸ்பெக்ஷன்:—ஆடிட்டர்கள் அப்போதப்போதுபோய்த் தனிக்கை செய்துகொண்டே வருகிறார்கள். தவிர டிபார்ட்மெண்டு இன்ஸ்பெக்டர்களும், ரிஜிஸ்திராரும் அப்போதப்போது பரிசீலனைசெய்து வருகிறார்கள். இன்ஸ்பெக்டர் தனக்குத் தாக்கல்வந்த விசேஷ குணதோஷங்களைப் பஞ்சாயத்தாருக்குத் தெரியவேண்டி தேசிய பாஷைகளிலேயே குறிப்பிட்டுப்போகிறார்.

ஒரு இன்ஸ்பெக்ஷன் சமயத்தில் குறிப்பிட்ட தோஷங்களை மறுபடி தனிக்கை செய்கையில் காணுவது சாதாரணம். வாஸ்தவத்தில் இந்த இன்ஸ்பெக்ஷன் ரிமார்க்குகளைப் பஞ்சாயத்தார் கவனிப்பதேயில்லை. ஆதலால் இதற்குப்பட்டபாடு வியர்த்தமாகிறது. இனிமேல் இப்படியாகாமலிருப்பதற்காக, ரிஜிஸ்திராருடைய ரிமார்க்குகள் வந்தவுடன் மகாசபை கூடவேண்டுமென்றும், அதில் பஞ்சாயத்தார் இன்ஸ்பெக்டருடைய குறிப்புகளையும், ரிஜிஸ்திராருடைய ரிமார்க்குகளையும், படித்து இவ்வாறு டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தர் சொல்லியிருப்பதில் மேல் நடக்கவேண்டிய தின்னதென்று சொல்லும்படி அவர்களைக் கேட்கவேண்டும். டிஸ்திரிக்டு (யூனியன்) மெம்பர் வந்து தனிக்கை செய்துவிட்டுப் போனபிறகும் இவ்வாறே நடக்கவேண்டுவது அவசியம்.

V. கணக்குகள்:—சாமான்னியமாய் நடப்பிலிருக்கும் புஸ்தகங்கள் இவை:—

(1) தினசரி வரவுசெலவுப் புஸ்தகம் (ரோஜ்நாமா)—இதில் அந்தந்தபாபத்தில் விவரமாக வரவுசெலவுக் கணக்குத் தினசரியாகக்காணும்.



(2) லெட்ஜர் அல்லது (கடாமணி)—இதில் ஒவ்வொரு மெம்பருடையவும் பேரேடுகாணும். அதில் அவருடைய கடன் பாபத்துகளும் டிபாசிட்டு வகையராவும் காணும்.

(3) வரவேண்டிய கடன் பாக்கிப்பட்டி—இதில் பணம்வாப்ஸ் வரவேண்டிய தேதிகளும் மற்றவிவரங்களும் காணும்.

(4) மெம்பர் ஜாப்தா—இது தினசரி ஒட்டிபார்த்துக் சரியாக இருக்கவேண்டும். இந்த ரிஜிஸ்டர்களுக்கெல்லாம் நமூனாக்கள் ரிஜிஸ்திராரிடமிருந்து போகின்றன. மெம்பர் ஜாப்தாவும், கடன் பாக்கிப்பட்டியும் அகத்தியமாக வேண்டியவைதான். இவற்றைத்தவிர,

(a) வரவு செலவு மொத்தங்களை விவரித்து ஸ்டேட்மெண்டுகளும்.

(b) வருஷ ஆகைராவில், ஸொஸைட்டிக்கிருக்கும் ஆஸ்திகள், வில்லங்கங்கள், இவைகளை விவரித்துக்காட்டும் ஸ்டேட்மெண்டுகளை ரிஜிஸ்திரார் வேண்டுகிறபடி போட்டனுப்பவேண்டும். அதனால் ஸொஸைட்டியின் வருஷாந்தர வியாபாரமும், அதனால் அதற்குக்கிடைத்த லாபமும் தெளிவாகும்.

VI. இன்ஸ்பெக்ஷன்கள்:—ஐரோப்பாவில், ஏதேனும் ஓர் ஜில்லாவில் கிராமப் பாங்குகள் ஆரம்பிப்பதானால், இந்தமுறை பிரபலிக்க வேண்டுமென்று ஆக்கிரகமுள்ள அனேகர் முன்னாடி அங்கங்கேசென்று, வேண்டியமட்டில்தங்கிப் பொறுமையுடன் (ஜனங்களுக்கு விஷயத்தை விளக்கி) கோஆபரேடிவ் நாணயத்தின் தருமங்களையும், ஸொஸைட்டிகள் இவற்றையனுசரித்து நடக்கவேண்டிய முறைகளையும், பற்றிப் பிரசங்கித்து ஜனங்களைச் சித்தப்படுத்துவார்கள். இப்படித்தான் ஷுல்ஷ் டீலிஷ், ராபேஸன், ஆகிய இவர்கள் ஜர்மானியாவிலும், லூஸாட்டி, வோல்லம்போர்க்கு, ஆகியவர்கள் இத்தாலியாவிலும் செய்தது. மேலே நாம் குறிப்பிட்டபடி, இந்தியாவில் ஸொஸைட்டிகளில் மெம்பராயிருப்பவர்கள் இம்மாதிரி கற்பிக்கப்பட்டு, ஸொஸைட்டிகளைத் தாங்களே நிர்வகித்துவர யோக்கியதை யடைந்துள்ள கேசுகள் வெகு அபூர்வம். ஆகவே பிறர் உதவியில்லாமல் தங்கள் காரியங்களைத் தாங்களேபார்த்துக்கொண்டு செழிக்கும் ஸொஸைட்டிகள் வெகுகொஞ்சம். யாராகிலும் ஒருவிவேகி, இவ்விஷயத்தில் பிரேமையுடன், கோஆபரேடிவ் தருமத்தை நன்றாயறிந்துகொண்டு, ஸொஸைட்டியில் உள்ள சாமான்னிய மெம்பர்களுக்கு நிர்வாகசக்தி வரும்படி அவர்களையெல்லாம் முறையே மாறிமாறி நிர்வாகிகளாகும்படிவிட்டு, தான்மட்டும் கீர்த்தியைவேண்டாமல் உள்ளிருந்து சூத்திரதாரனாகி, வேண்டிய உபதேசஞ்செய்து, ஸொஸைட்டி முன்னுக்குவரும்படி பார்த்தாலொழிய, (இம்மாதிரி மகான்கள் அபூர்வத்திலும் அபூர்வம்,) கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தரோ, அல்லது கோஆபரேஷன் விஷயத்தில் பக்தியுள்ள உத்தியோகஸ்தரல்லாத கிரகஸ்தரொருவரோ, அப்போதப்போது வந்து தனிக்கைசெய்துவிட்டுப்போவது ஸொஸைட்டிக்கு வெகு உபகாரகரம். இந்தக்கேசுகளில் நடக்கும் இன்ஸ்பெக்ஷனுக்கும், சாமான்னியமாயுள்ள மற்ற கவர்ன்மெண்டு தாபுகளில் நடக்கும் இன்ஸ்பெக்ஷனுக்கும் வெகுபேதம். இன்ஸ்பெக்டர், பாங்குகள் வியாபாரம் நடத்தவேண்டிய மார்க்கங்களைச் சுட்டி, அவைகளுக்குத் தாக்கீதுகள் அனுப்பும்படியான பதவியில் தான் இல்லையென்பதைக் கவனித்து நடக்கவேண்டும். அவருடைய நோக்கம் முதன்முதலிருக்கவேண்டியது இது. அதாவது (1) சர்க்கார் அந்தப்பாங்கு செழிக்கவேண்டியவிஷயத்தில் ஆக்கிரகப்பட்டிருப்பதாக மெம்பர்கள் தெரிந்துகொள்ளும்படி செய்யவேண்டுமென்பது; (2) பாங்கு வியாபாரம்நடத்தும் முறையையும், அதனால் அதன்

உத்தேசம் எம்மட்டில் கைகூடிவருகிற தென்பதையும், பூராவாகத் தெரிந்துகொள்வது; (3) தோஷங்களைப் பரிகரித்துக் குணங்களைப்பெருக்கி வரவேண்டி, தெரிந்த யோசனைகளைச் சொல்லிவருவது. பஞ்சாயத்தாருடனும், சிரமங்கொடாமல் பேட்டி செய்து கொள்ளக்கூடிய மற்ற மெம்பர்களுடனும், இன்ஸபெக்ட்டர் அதிகார தோரணையில்லாமல் கலந்து நேர்ந்தபடி பேசிவருவதனால்தான் உத்தமபலன் கிடைக்கும். வெகு அபூர்வமாக நடக்கவேண்டிய கேசுகளிலொழிய, சாமான்னியமாய் ஸொஸைட்டியின் கணக்கு வழக்குகளை கஸ்பாவுக்கு வரவழைக்கக் கூடாதென்பதையும், அவற்றை ஸொஸைட்டி ஆபீசிலிருந்து கொண்டுபோகக் கூடாதென்பதையும், இன்ஸ்பெக்ட்டர்கள் கவனிக்கவேண்டும். இன்ஸபெக்ஷன் ஆகவேண்டி, ஸொஸைட்டி ஆபீசைவிட்டுக் கொஞ்சதூரத்தில் உத்தியோகஸ்தர் முகாம்செய்திருக்கும் இடத்திற்கு ரிகார்டுகளை மெம்பர்சகிதம் வரும்படிசெய்வதைவிட, ஒருஸொஸைட்டிக்குக்கேடு வேறு வேண்டுவதில்லை. எல்லா ஸொஸைட்டிகளிலும் இப்போது பார்க்கவருபவருக்கென்று புஸ்தகங்கள் இருக்கின்றன. அவ்வாறுவரும் ஸ்ரீமான்கள் மேற்கண்ட குறிப்புகளைக்கவனித்தால், இன்னபாபத்துகளில் தாங்கள் ஷரா எழுதவேண்டுமென்று தெரிந்துகொள்ளலாம். இம்மாதிரி ஷராக்கள் வெகு சுருக்கமாக இருக்கவேண்டும். இவைகளை இங்கிலீஷில் எழுதுவோர், பஞ்சாயத்தாருடைய உபயோகத்திற்காகப் பக்கத்தில் தேசியபாஷையிலு மெழுதிவிடவேண்டும். ஒவ்வொரு பக்கத்திலும் ஒருபுறம் இங்கிலீஷில் எழுதவும், மற்றது தர்ஜுமாவுக்கும் உபயோகப்படவேண்டும்.

**VII. புது ஸொஸைட்டிகள்.** ஐரோப்பாவில், கிராமப்பிராந்தங்களில் புதிதாக ஸொஸைட்டிகள் ஆரம்பிக்குமுன் இந்தமுறையை முதன்முதல் பழக்கத்திற்குக் கொண்டுவரவேண்டி யுழைத்தவர்கள், அவ்வவ்விடம்போய், மெம்பர்களாகவேண்டி வந்தவர்களுக்குக் கோஆபரேடிவ் தருமங்களையும், முறைகளையும், வெகுதீர்க்கமாயும், கஷ்டப்பட்டும் விளக்கிவந்தார்களென்று மேலே குறிப்பிட்டோம். இவ்விடத்திலோ இம்மாதிரி உபதேசங்கள் இல்லாததுகொண்டுதான் அனேகம் ஸொஸைட்டிகள் உருப்பட்டும், பிழைக்கமாட்டாமற்போனதும், வேறு அனேகம் ஸொஸைட்டிகள் அதிருப்திகரமாக வியாபாரம் செய்துவருவதும் இதை நாம் மேலே குறிப்பிட்டோமல்லவா? இதனால்நாம் அறிந்துகொள்ளவேண்டியது என்னவென்றால், இந்த ரகசியங்களைக் கவனியாமல், புதிதாகவும், தனித்துள்ள இடங்களிலும் ஸொஸைட்டிகள் ஆரம்பமாகக்கூடாதென்பதாம். அதாவது, அவ்விடத்தில், உத்தியோகஸ்தராலும், சாமான்னியக் கிரகஸ்தராலும் யாராவதொருவர் அவ்வாறு ஆரம்பமாகும் ஸொஸைட்டியைப் பாலிக்கவேண்டிய அறிவும் ஆக்கிரகமும் கூடியிருக்கவேண்டும். தவிர இவர், ஸொஸைட்டியின் நிர்வாகவிஷயத்தில் தானே நேராய் விசேஷமாகப் பிரவேசியாமல், மெம்பர்களுக்குத் தெரியவேண்டியதைமட்டும் பின்னுக்கிருந்து சொல்லிக்கொடுத்து வரவேண்டும். ஆதலால் இன்ஸ்பெக்ட்டர்கள் ஒரு புதிய ஸொஸைட்டி உண்டாவதற்கும், அதை ரிஜிஸ்தர் செய்வதற்கும், மகஜர் அனுப்புமுன், இவ்விஷயத்தை நன்றாய் விசாரித்து, ரிஜிஸ்திராவதற்குமுன் மெம்பர்களுக்கு விஷயம் தெரிவிக்க என்ன ஏற்பாடுகள் இருந்தனவென்றும், ஸொஸைட்டியானபின் அதைக்கிரமமாக விசாரித்துவர என்னசாதனங்கள் இருக்கின்றனவென்றும் தெரிவிக்க வேண்டும். ரிஜிஸ்திரார் இதன் பிறகு இவ்வாறு ஸொஸைட்டியாவதற்குக் காரணர்களாகி வருபவருடன் கலந்துயோசித்து, ஸொஸைட்டி செழிப்பதற்கிருக்கும் அனுகூலங்களை யறிந்து திருப்திபடுத்திக்கொண்டு, அவைகள் எல்லாம் நன்றாயிருந்தால் ரிஜிஸ்தர்செய்து, பிறகு வேண்டியதெல்லாம் செய்வார். இந்த மாகாணத்தில் பலவிடங்களில் இப்போதுண்டாயிருக்கும் சாமான்னிய நாணய ஸொஸைட்டிகள், இவ்விடத்திற்கு எந்த முறை



நன்றாயேற்றது, எந்தச்சாதனங்கள் நன்றாய் உதவுவது, என்பதைப் பரீக்ஷிக்கப்போதுமானவை. இவைகளைத் தனிக்கைசெய்து தப்புவழியில் போகவொட்டாமல் காப்பாற்றுவதற்கு ரிஜிஸ்திராருடையவும், அவருக்குக் கீழ்ப்பட்ட இன்ஸபெக்டர்களுடையவும், காலம் சரியாய்ப்போகிறது. ஆதலால் புதிதாக உண்டாகும் ஸொஸைட்டி யொவ்வொன்றும், இவர்களுக்கு வேலையதிகமாக்கும். ஏனெனில் இந்தமுறை இப்போதிருக்கிற ரீதிக்கு,ஒரு ஸொஸைட்டியையாவது தன்பாட்டைப்பார்க்கட்டுமென்று விடுவதற்கில்லை. ஆதலால் இம்மாதிரி ஸொஸைட்டிகள் ஆகவேண்டுமானால், எவ்விடத்தில் இவைகளிருக்க வேண்டுமென்று ஜனங்கள் வருந்தி, அக்கரையுடன் கேட்டுக்கொள்ளுகிறார்களோ, எவ்விடத்தில் இதற்கு முகாமையாயிருப்பவர் மேற்சொல்லிய நிபந்தனைக்குட்படுகிறாரோ, அவ்விடத்தில் தான் உண்டாகவேண்டும். மற்றபக்ஷத்தில், கோஆபரேடிவ் முறையில் விதைவிஷயமாகப் பரஸ்பர சகாயத்தை முன்னிட்டு ஸொஸைட்டிகளுண்டாவதற்கு இடம் வெகுவாயிருப்பதாகக் காணுகிறது. இம்மாகாணத்திற்குமட்டும் உபயோகமாக நூல்களும், ஸொஸைட்டிகள் ஆரம்பமாவதற்குவேண்டிய விதிகளும் இப்பொழுது தயாராயிருக்கின்றன. இவ்விஷயத்தில் சிரத்தையுள்ளவர்களெல்லோரும், ரிஜிஸ்திரார் ஆபீசிலிருந்து காபிகள் வாங்கிக்கொள்ளலாம். இந்த அம்சத்தில் தான் காரியம் துருசாக வேண்டியதும், அனுபவம் வேண்டியதும். முட்டுப்பாடுகுறைவதற்கு வேண்டிய யந்திரங்களை வாங்குதல், சர்க்கரையாக்கும் யந்திரங்கள், எருக்கள், முதலியனவற்றை வாங்குதல், ஆகிய இக்காரியங்களிலும் கோஆபரேஷனுக்கு நல்ல தசையிருக்கிறது. எல்லா இடங்களிலு மில்லாவிட்டாலும், கிருஷி வலுத்துவருமிடங்களில் அப்படித்தான். ஆனால் மற்றராச்சியங்களில் கிடைத்திருக்கும் அனுபவத்தைக்கொண்டு பார்த்தால், கோஆபரேடிவ் நாணயச் சங்கங்கள் தழைத்து வேரூன்றுமளவும், வேறுவகைக் கோஆபரேடிவ் சங்கங்கள் வெகுதூரம் முன்னுக்கு வராதென்றுதான் காணுகிறது.

# மதிராசு ஸெண்ட்ரல் அர்பன் பாங்கு
# (லிமிடெட்)

---

### நிர்வாக சபையார்.

திவான்பஹதூர் கே. கிருஷ்ணசாமிராவ் அவர்கள், ஸி. ஐ. ஈ., பிரசிடெண்டு.

கனம், நவாப் சையத் மகம்மது பஹதூர், வைஸ் பிரசிடெண்டு.

கனம், ராவ்பஹதூர். பி. தியாகராய செட்டியாரவர்கள், பி. ஏ.

மாஹதி ஹூஸேன் அவர்கள்.

ஸர். வி. ஸி. தேசிகாசாரி, நைட், செகர்டெரி.

### வருஷாந்தர ரிபோர்ட்டும் கணக்கும்.

மதிராசு ஸெண்ட்ரல் அர்பன் பாங்கு (லிமிடெட்) ஆகிய இதன் லாப நஷ்டங்களை விவரித்து, (ரிஜிஸ்திரார்) தணிக்கையுடன், 1909-ம் வரு ஜூன்மீ 30 தேதியோடு முடிவாகிற வருஷாந்தர ரிபோர்ட்டை நிர்வாக சபையார் சந்தோஷமாகச் சமர்ப்பிக்கிறார்கள்.

| | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| இவ்வருஷத்திற்குக் கைக்கெட்டிய லாபமொத்தம். | ... | 6,255 | 5 | 3. |

இதை நிர்வாக சபையார் அடியில் வருமாறு விநியோகித்திருக்கிறார்கள்:-

| | | | | |
|---|---|---|---|---|
| ரூல் நெ/ 17-ன் படி க்ஷேமதனத்திற்காக | ... | 1,563 | 13 | 4 |
| ஷை ரூலின்படி அஸிஸ்டண்டு செகர்டெரிக்கு தக்ஷிணை | ... | 781 | 14 | 8 |
| சென்ற வருஷத்திற்கு 100-க்கு வரு-1-க்கு 10-வீதம் பங்குலாபம் | ... | 1,213 | 11 | 10 |
| பாக்கி ... ... ... | ... | 2,695 | 13 | 5 |
| மொத்தம் | | 6,255 | 5 | 3 |



பாக்கிதுகையில் காணும் ரூ. 2,695-13-5ல், 100-க்கு 2-வீதம், 1909-வரு ஜூன்மீ 30-தேதிக்கு முற்பட்டு, பங்குத்துகை டிபாசிட்டுகள் செலுத்தின பங்குக்காரர்களுக்கு உபகாரதனமாக வீதித்துக் கொடுக்கலாமென்று நிர்வாக சபையார் அபிப்பிராயப்படுகிறார்கள். இதில் ரூ. 90 செலவாகி விடும். மீதி ரூ 2,605-13-5. இதை (முந்தியுள்ள) ரூ. 696-14-11 உடன் சேர்த்து, பங்குலாபம் சரிவரச் செய்வதற்குள்ள (க்ஷேம) தனத்துடன் சேர்க்கவேண்டுமென்பது நிர்வாக சபையார் அபிப்பிராயம்.

**பங்குத்தனம்.**—1908-ம் வரு ஜூன்மீ 30-தேதிக்குள் முதலில் வெளிவிட்டிருந்த 50-பங்குகளுக்கும் கிராக்கி யேற்பட்டுப் போனதால், புதிதாக 50—பங்கு மறுபடி வெளிவிடப்பட்டது. இதைப் பத்திரிகையில் விளம்பரம் செய்யவில்லை யென்றாலும், 134 பங்குகள் வேண்டுமென்று அப்பிளிகேஷன் வந்தது. 27 பழைய மெம்பர்கள் கூடி 61-பங்குகள் வேண்டினார்கள். 23-புதியவர்கள் 73 பங்குகள் வேண்டு மென்றார்கள். இப்படி வந்த 50-பேயருக்கும் தலைக்கு 1-பங்கு வீதிக்கப்பட்டது.

**பங்கு மாற்று.**—இந்த வருஷத்தில் 7-பெயர் பங்குகளை மாற்றிவிட்டார்கள். இவைகளில் 2-விற்றதில் 100-க்கு 30-வீதம் லாபம் கிடைத்தது. பங்கு வேண்டுமென்று ஜனங்கள் ஆக்கிரகப்பட்டதால் தான் இப்படி நேர்ந்தது.

**நிர்வாக சபையில் மாறுதல்.**—13-ம் நெ/ ரூல்படி எல்லோரும் நிர்வாக சபைவிட்டு நீங்கினார்கள். ஸ்ரீமான் டி. வி. சேஷகிரி அய்யர், பி. ஏ., பி. எல்., அவர்களைத்தவிர மீதியெல்லோரும் மறுபடி நியமனம் பெற்றார்கள். அவருக்குப்பிரதியாக டிப்டி கலெக்டர் ஸ்ரீமான்-மாஹதி ஹூஸேன் அவர்கள் நியமனம் பெற்றார்கள்.

**வந்தனம்.**—நிர்வாக சபையார், ரிஜிஸ்திரார் திவான்பகதூர் ஸ்ரீமான் ஆர். ராமசந்திரராயரவர்கள், பி.ஏ., ஸ்பெஷல் டிப்டிகலெக்டர் ஸ்ரீமான் கே. விஜயராகவாசாரியாரவர்கள், எம். ஏ., ஆகிய இவ்விருவருக்கும், இந்தப் பாங்கின் க்ஷேமவிஷயத்தில் அவர்களுக்கிருந்த அக்கரைக்காகவும், விடாமல் அவர்கள் உபகரித்து வந்ததற்காகவும், வந்தன மளிக்கிறார்கள்.

(நிர்வாக சபையாருத்தரவுபடி.)

### மதிராசு கோஆபரேடிவ் ஸொஸைட்டிகளின் ரிஜிஸ்திராருடைய
### தணிக்கை உத்தரவு.

1909-ம் வரு ஜூலைமீ 21-தேதி 1909—ம் வருத்திய
வி. நெ/ 1172-ன் பேரில் (குறிப்பு.)

மதிராசு ஸெண்ட்ரல் அர்பன் பாங்கு (லிமிடெட்) ஆகிய இந்நிதியின் ஜூன்மீ 30-தேதியுடன்முடிகிற வருஷாந்தரக் கணக்குகளை, ஸ்பெஷல் டிப்டி கலெக்டரவர்கள் சப்ஜாடாவாகத் தணிக்கைசெய்து, இத்துடன் சேர்த்திருக்

கும் மூன்று ஸ்டேட்மெண்டுகளைத் தயாராக்கி யிருக்கிறார். அவையாவன, (a) வருஷத்தில் வரவு பாபத்துகளும் செலவுவகைகளும்; (b) வருஷத்தில் கிடைத்த லாபநஷ்டங்கள்; (c) ஜூன் 30-தேதியில் (ஸொஸைட்டியின்) உரிமைகளும், வில்லங்கங்களும்; ஆகிய இவைகளை விளக்குபவனவாம். பாங்குக்குக் கைக்கெட்டிய லாபம் ரூ. 6,255-5-3. பாங்கின் நிர்வாக நிபந்தனையை யனுசரித்து இதில் காற்பங்கு, அதாவது, ரூ. 1,563-13-4, க்ஷேமதனத்திற்குச் சேருகிறது. சென்றவருஷம் பொதுவகையில் சேர்ந்திருக்கும் பை-8ம் சேர்ந்து, க்ஷேமதனம் ரூ. 1,563-14-0 ஆகிறது. பாங்குக்காரர் தயவுசெய்து இதைப் போஸ்டு ஆபீசில் சேர்த்து விடவேண்டும். ரூல் 17-ன் படி ரூ. 781-14-௨, அதாவது கைக்குக் கிட்டிய லாபத்தில் எட்டிலொருபங்கு, நிர்வாக சபையாருடைய இஷ்டத்தைப் பொறுத்து, செகர்டெரிக்கோ, அஸிஸ்டண்டு செகர்டெரிக்கோ கொடுத்துவிடவேண்டும். இதுபோக மீந்தது ரூ. 3,909-9-3 இருக்கிறது. இதைப்பாங்குக்காரர் வீதித்துக்கொள்ளவோ, வேறு வகையாகவோ விநியோகிக்கலாம்.

2. ரிபோர்ட்டுக்குரிய வருஷத்தில் பாங்கு பிரபலித்தது ஆச்சரியகரம். வியாபாரம் முன்னிருந்ததற்கு மும்மடங்கு பெருகியிருக்கிறது. கடன் வேண்டுமென்று வந்த மனுக்களை நிமிஷத்தில் பைசல் செய்திருக்கிறார்கள். இன்ன இடங்களில் ஸொஸைட்டிகளாக வேண்டுமென்றும், வியாபாரம் இப்படி நடக்க வேண்டுமென்றும் நிஷ்கரிஷிப்பது டிபார்ட்மெண்டார் செய்யும் காரியம் தான். என்றாலும், ஆரம்பமான பாங்குகளுக்கு வேண்டிய திரவிய சகாயம் செய்தது ஸென்ட்ரல் பாங்கின் உபகாரமென்றும், இந்த நிதியில்லாவிட்டால், கோ ஆபரேடிவ் முறை இங்கு பெயருக்கு மாத்திரம் ஏதோ நடந்து வருவதாகக் காணுமல்லது, இப்பொழுதிருப்பதில் பத்திலொரு அம்சங்கூடச் செழித்திராதென்றும், ரிஜிஸ்திரார் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளத்தான் வேண்டி வருகிறது. பாங்கு இப்பொழுது வெகு நேர்த்தியாக வேலைசெய்து வருகிறது. அஸ்திவாரம் வெகு வலுவானது. அதிலிருந்து போயிருக்கும் பணத்திற்கெல்லாம் தகுந்த ஈடுகள் அமைந்திருக்கின்றன. மகா ஜனங்களும் இதில் டிபாசிட்டுவைக்க மன்றாடுகிறார்கள். நிர்வாக சபையார் தனக்குச் செய்த உபகாரங்களுக்காக ரிஜிஸ்திரார், அவர்களுக்கு மனப்பூர்வமாய் வந்தனம் செலுத்துவதுடன், செகர்டெரியாகிய ஸர். வி. ஸி. தேசிகாசாரியார், நைட், அவர்களுக்கு, இந்தப்பாங்கைச் சீராகவும், துருசாகவும், தயையுடனும் நடத்திவந்து, (கோ ஆபரேஷன்) விஷயத்தில் எக்காலத்திலும் தயாராகவிருந்து உபகரிப்பதற்காக, விசேஷித்து வந்தனம் செலுத்துகிறார்.

கோ ஆபரேடிவ் நாணயப்பாங்கு
ரிஜிஸ்திரார் கச்சேரி,
மதிராசு-1909-ம்ஹு ஜூலை-மீ 21-தேதி.

ஆர். ராமசந்திரராவ்,
ரிஜிஸ்திரார்.

---

# மதிராசு ஸென்ட்ரல் அர்பன்பாங்கு (லிமிடெட்.)

## இதன் யோகக்ஷேம விவரம்.

### 1909-ம் ஹு ஜூன்-மீ 30-உ வரை வரவு செலவு.

வரவு.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| பங்குத்தொகை ... | 7,500 | 0 | 0 |
| பங்குத்தொகை டிபாசிட்டு | 10,500 | 0 | 0 |
| பிக்ஸெட் டிபாசிட்டு | 4,03,163 | 10 | 11 |
| மற்றபடி வாங்கியது ... | 19,000 | 0 | 0 |
| பிரவேசம், மாற்று வகை | 285 | 0 | 0 |
| வாப்ஸ்வந்த கடன்தொகை | 1,44,350 | 0 | 0 |
| வட்டி வசூல்வகை ... | 17,640 | 14 | 5 |
| அதிகவட்டியும் சில்லரையும் ... | 266 | 8 | 7 |
| மொத்தம் ... | 6,02,706 | 1 | 11 |
| சென்றவருஷ மீதி ... | 1,992 | 14 | 10 |
| ஒட்டு மொத்தம் ... | 6,04,699 | 0 | 9 |

செலவு.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| டிபாசிட்டுவாப்ஸ் ... | 1,44,500 | 0 | 0 |
| மற்றவகைக்கடன் வாப்ஸ். | 9,000 | 0 | 0 |
| வட்டிகொடுத்தவகை. | 8,923 | 4 | 8 |
| கடன்கொடுத்தவகை. | 4,31,000 | 0 | 0 |
| ஆபீசுசிப்பந்தி ... | 281 | 12 | 11 |
| சாதல்வார் ... | 250 | 13 | 9 |
| சில்லரை ... | 205 | 3 | 6 |
| லாபத்திலிருந்துகொடுத்தது | | | |
| (a) க்ஷேமதனம் | 554 | 15 | 0 |
| (b) பங்குலாபம் வீதித்தது | 747 | 0 | 3 |
| (c) செகர்டெரிக்கு தக்ஷிணை | 277 | 7 | 5 |
| | 1579 | 6 | 8 |
| மொத்தம் | 5,95,740 | 9 | 6 |
| நாளை வருஷத்திற்காக | 8,958 | 7 | 3 |
| ஒட்டுமொத்தம் ... | 6,04,699 | 0 | 9 |

### 1909-ம் ஹு ஜூன் மீ 30உ கண்ட பாலன்ஸ் ஷீட்டு.

ஆஸ்தி.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| வரவேண்டிய கடன் ... | 4,61,700 | 0 | 0 |
| ஷை கடன்வகையில் வரவேண்டிய வட்டி ... | 8,245 | 14 | 2 |
| நாளை வருஷத்திற்காக மீந்தது ... | 8,958 | 7 | 3 |
| சென்ற 3ஹுத்திய க்ஷேமதனம் ... | 770 | 11 | 9 |
| மொத்தம் | 4,79,675 | 1 | 2 |

கடன்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| பங்குத்தனம் ... | 15,000 | 0 | 0 |
| பங்குவகை டிபாசிட்டு. | 10,500 | 0 | 0 |
| பிக்ஸெட் டிபாசிட்டு ... | 4,25,203 | 10 | 11 |
| வேறுவகையில்வாங்கியது | 10,000 | 0 | 0 |
| கொடுக்கவேண்டியவட்டி. | 11,220 | 5 | 8 |
| சிப்பந்தி (கொடுக்கவேண்டியது) ... | 28 | 0 | 0 |
| க்ஷேமதனத்தில் போ-ஆ. ஸேவிங்க்ஸ் பாங்கியில் கொடாதது ... | 0 | 0 | 8 |
| பங்குலாபம் சரிப்படுத்தும் பண்டு ... | 696 | 14 | 11 |
| கைக்கெட்டியலாபம் ... | 6,255 | 5 | 3 |
| மைலாப்பூர் போ-ஆ. ஸேவிங்க்ஸ் பாங்கியில் க்ஷேமதனம் ... | 770 | 11 | 9 |
| மொத்தம் ... | 4,79,675 | 1 | 2 |

1909-ம் ஞூ ஜுன்மீ 30உ தேதியோடு முடிந்த வருஷத்திற்கு லாப நஷ்ட விவரம்.

**லாபம்.**

| | ரூ. அ. ப. | ரூ. அ. ப. |
|---|---|---|
| வட்டி வந்தது... | | |
| a இந்த வருஷம் வசூலானது ... | 17,640 14 5. | |
| b வருஷக்கடைசியில் வசூலாகாமல் நின்றது. ... | 8,245 14 2 | |
| மொத்தம்... | 25,886 12 7 | |
| c வருஷ ஆரம்பத்தில் நின்றதுநீக்கி | 3181 12 9 | |
| பாக்கி | | 22,704 15 10 |
| பிரவேசதனமும் மாற்றுவணையும் | | 285 0 0 |
| அதிகவட்டியும் செல்லரையும்... | | 61 5 1 |
| மொத்தம்... | | 23,051 4 11 |

**நஷ்டம்.**

| | ரூ. அ. ப. | ரூ. அ. ப. |
|---|---|---|
| வட்டிகொடுத்தது | 8923 4 8 | |
| வட்டி கொடுக்கவேண்டியது... | 11220 5 8 | |
| மொத்தம்... | 20143 10 4 | |
| வருஷ ஆரம்பத்தில் வசூலாகாமல் நின்றது நீக்கி... | 3894 5 4 | |
| பாக்கி... | | 16249 5 0 |
| சிப்பந்தி செலவு... | | 295 12 11 |
| சாதல்வார்... | | 250 13 9 |
| கைக்கெட்டிய லாபம்... | | 6255 5 8 |
| மொத்தம்... | | 23051 4 11 |

# சேலம் டிஸ்டிரிக்ட் அர்பன்பாங்கு லிமிடெட்டின் 1908-09 வருஷத்து ஆடிட் ரிபோர்ட்.

ஐக்கிய நாணயச்சங்கங்கள் இனிஸ்பெக்டர் மாகா-ஈ-ஈ-ஸ்ரீ., A. இராமானுஜாசாரியாரவர்களிடமிருந்து.

ஐக்கிய நாணயச்சங்க ரிஜிஸ்திராரவர்களுக்கு.

ஐயா,

NO. 151, சேலம் டிஸ்டிரிக்ட் அர்பன் பாங்கு லிமிடெட்டின் 1908—1909 வருஷத்திய கணக்குகளைப் பரிசோதித்து பின்வருமாறு ரிப்போர்ட்டு செய்கிறேன்.

2. மதராஸ் ராஜதானியில் முதல் முதல் ஜில்லா ஸெண்ட்ரல் பாங்காக ஏற்பட்டது இது தான். கவர்ன்மெண்ட்டாரால் 1909-ம் வருஷம் ஜனவரிமாசம் 6-ம் தேதியுள்ள 39 வது நெம்பர், ரிவினியூ, உத்தரவில் ரிஜிஸ்ட்டர் செய்யப்பட்டு அதே மாதம் 26 தேதியில் வேலை துடங்கிற்று. சேலம் ஜில்லா முழுமையும் இப்பாங்கின் விவகார எல்லையிற் சேர்ந்தது. சேலம் ஜில்லாவிலுள்ள எல்லாச் சங்கங்களுக்கும் கடன் கொடுக்கவும், அவைகளின் விவகார விஷயத்தில் மேல்விசாரணை செய்யவும், தக்கபடி போதிக்கவும் ஏற்பட்டது. ஜில்லாவின் முக்கியபட்டணமாகிய சேலத்திலேயே ஸ்தாபிக்கப்பட்டிருப்பதினால் சுய காரியமாய் சேலத்திற்கு வரும் இதர சங்கங்களின் பிரதி நிதிகளை சந்தித்து மேற்சொன்ன காரியங்களை நிறைவேற்ற பல சந்தர்ப்பங்கள் இப்பாங்குக்கு நேரிடுகின்றன.

3. பிரஸ்தாப கோ ஆபரேட்டிவ் வருஷத்தில் இப்பாங்கு 5 மாத காலம் தான் வேலை செய்தது. 103 பேர்கள் மெம்பராய்ச் சேர்ந்தார்கள். அவர்களில் 12 பேர் வாய்தா காலத்திற்குள் பங்குத்தொகையை செலுத்தவில்லை. ஆகையால் வருஷ கடைசியில் 91 மெம்பர்களிருந்தார்கள். இவர்கள், பாங்கின் நிபந்தனையில் கூறியிருக்கும் 200 பங்குகளையும், எடுத்துக்கொண்டார்கள். ஒரு மெம்பர் எடுக்கக்கூடிய பங்கின் சங்கியை 5 ஆகையால் ஒவ்வொரு மெம்பரும் சராசரியில் 2·2 பங்குகளை எடுத்திருப்பதாய்ப் பாவிக்கவேண்டும். பங்கெடுத்தவர்கள் ஜில்லாவிலுள்ள 9 தாலூகாவில் 6 தாலூகாக்களில் வாசம் செய்பவர்கள். இவர்களின் தொழில் பலவாறு. சிலர் உத்தியோகஸ்தர்களாயும், சிலர் வர்த்தகர்களாயும், சிலர் விவசாயிகளாயும் இருக்கிறார்கள். பங்குகள் யாவற்றும் விரைவில் எடுத்துக் கொள்ளப்பட்டன வென்பதும், இன்னும் பங்குகளுக்காக ஜனங்கள் இடைவிடாமல் விசாரிப்பதும், அவர்கள் இவ்விஷயத்தில் எடுத்திருக்கும் ஊக்கத்திற்கு அறிகுறியாயிருக்கிறது.

4. ஒவ்வொரு மெம்பரும் பங்கொன்றுக்கு எடுத்துக்கொண்டிருக்கும் பொருப்பு ரூ. 500/ ஆகிறது. அவற்றில் ரூ. 250/ ஐ தவணையில் தவணை 1 க்கு ரூ. 50/ வீதம்

செலுத்தவேண்டியது. இப்பொழுது முதல் தவணையாகிய ரூ. 50/ தான் நிர்வாக சபையாரால் செலுத்த கேட்கப்பட்டு, இவ்வகையில் ரூ. 10,000/ வசூலிக்கப்பட்டது.

5. புதிதாய் ஸ்தாபிக்கப்பட்ட கிராம சங்கங்களுக்கு ஆரம்பத்திலேயே ஏராளமாய் கடன்கொடுக்க வேண்டியிருந்தது. இக்கடன்களைக்கொடுக்க இந்தியன் பாங்காரிடமிருந்தும் இப்பாங்கார் உதவி பெற்றார்கள். உள்ளூராரிடமிருந்தும் டிபாசிட்டுகளும் பெற்றார்கள். டிபாஸிட்டு வகையில் மெம்பர்களிடமிருந்து ரூ. 10,570-ம் இதரர்களிடமிருந்து ரூ. 15,462-4-8-ம் ஆகமொத்தம் ரூ. 26,212-4-8 பெற்றார்கள். பிரஸ்தாப வருஷத்தில் இதரர்களுடைய டிபாஸிட்டில் ரூ. 6,200/ திருப்பிச் செலுத்தப்பட்டதுபோக வருஷகடைசியில் நின்ற டிபாசிட்டு தொகை ரூ 20,012-4-8, இப்பாங்கே சேலம் ஜில்லாவிலுள்ள சங்கங்களின் பேரில் அதிகாரம் செலுத்தும் பொருட்டு மதிராசு ஸெண்ட்ரல் அர்பன்பாங்கு சேலம் ஜில்லாவில் பல சங்கங்களுக்குத் தாம் கொடுத்திருந்த ரூ. 90,800/ கடன்களை மாற்றி விட்டது. இந்தியன் பாங்கும் அப்போதைக்கப்போது கடன்கள் கொடுத்து தற்காலம் மொத்தம் ரூ. 80,000/ ஆயிருக்கிறது. டிபாஸிட்டும் இதர கடன்களும் சேர்ந்து மொத்தக்கடன் ரூ. 1,90,812-4-8. இந்த பாங்கு 2 வருஷகாலத்திற்கும் அதற்கு மேற்பட்ட காலத்திற்கும் வைக்கப்பட்ட டிபாசிட்டு தொகைகளுக்கு 100 க்கு வருஷத்திற்கு ரூ (6) (ஆறுரூபாய்) வட்டி விகிதமும், 1 வருஷத்திற்கு மேற்பட்ட டிபாஸிட்டுகளுக்கு 5½ ரூபாய் வட்டி விகிதமும் கொடுத்தது. இந்தியன் பாங்கிக்கு வருஷத்திற்கு 100/க்கு 6½ வீதமும் ஸெண்ட்ரல் பாங்குக்கு 7½ வீதமும் வட்டி கொடுத்தது.

6. ஜூன் மாதம் 30-ந்தேதியில் இவ்வகையில் கொடுக்கவேண்டிய வட்டி அடியிற் கண்டவாறு:—

| | | | | |
|---|---|---|---|---|
| மெம்பர்களுடைய டிபாஸிட்டின் பேரில் | ... | 170 | 11 | 0 |
| இதரர்களுடைய டிபாஸிட்டின் பேரில் | ... | 282 | 14 | 0 |
| மதராஸ் சென்டிரல் பாங்கின் கடன்கள் | ... | 1645 | 12 | 0 |
| இந்தியன் பாங்கின் கடன்கள் ... | ... | 1085 | 1 | 8 |

இந்தியன் பாங்குக்குக் கொடுக்கவேண்டிய தொகையில் ரூ. 325/ செலுத்தப்பட்டது

7. சில்லரை வருமானம்.— பங்கொன்றுக்கு ரூ. 3/வீதம் 654 ரூ. பிரவேச கட்டணமாய் வசூலிக்கப்பட்டது. இதில் மெம்பர்களால் இழக்கப்பட்ட 18 பங்குகளின் கட்டணமும் சேர்ந்திருக்கிறது. கடன் தொகைகளை தபால்மூலமாய் அனுப்பிய செலவின் பொருட்டு கிராம சங்கங்களிடமிருந்து ரூ. 11-7-0 வசூலிக்கப்பட்டது.

8. சேலம் ஜில்லாவில் 42 சங்கங்களுடன் இப்பாங்கு லேவாதேவி செய்தது. மதராஸ் ஸெண்ட்ரல் பாங்கால் கொடுக்கப்பட்ட கடன்களுடன் 125 கடன்கள் கொடுக்கப்பட்டன. அவற்றில் இரண்டு கடன்கள் வாபஸ் வந்தன. கடன் லேவாதேவிகள் அடியிற் கண்டவாறு:—

| | | | | |
|---|---|---|---|---|
| கடன் கொடுத்த மொத்தம் ... | ரூ. | 2,06,025 | 0 | 0 |
| பூராவாய் வசூலித்தது ரூ. 2,500 / பாகமாய் ஷை ரூ. 2,850 ... | ,, | 5,350 | 0 | 0 |
| | க்ஷி. | 2,00,675 | 0 | 0 |



இவைகளில் ரூ. 3000 கொண்ட நான்கு கடன்கள் ஜூன்மீ 30உக்குள் கொடுபடவேண்டியிருந்தது. அவைகளை அத்தேதிக்குள் வசூலிக்கவில்லை. இப்பால் வசூலிக்கவேண்டிய நடவடிக்கைகள் நடத்தப்படுகிறது.

9. சங்கங்களுக்குக்கொடுக்கும் எல்லா கடன்களுக்கும் 100 க்கு வருஷத்திற்கு ரூ. 7½ வீதம் வட்டி வசூல் செய்யப்படுகிறது. 1909 ஞு ஜூன் மீ 30உ வரைக்கும் இவ்வகையில் வரவேண்டிய வட்டி ரூ. 3,754-1-6 இவற்றில் ரூ. 188-2-0 பிரஸ்தாப வருஷத்தில் வசூல் செய்யப்பட்டது. மிகுந்த தொகையில் ரூ. 1200 ஜூன்மீ 30உ முன்னமே வாய்தா தவறியும் வசூல் செய்யப்படவில்லை. ரூ. 267-8-0 மாத்திரம் பிறகு வசூல் செய்யப்பட்டு மிகுதியை வசூல் செய்யவேண்டிய நடவடிக்கை செய்யப்படுகிறது. கடன் வாயிதா குறிக்கும் ரிஜிஸ்தர் ஒன்று இப்பொழுது வைக்கப்பட்டிருக்கின்றது. இனிமேல் வாய்தாக்குள் கடன் தொகைகளை வசூலிக்க தாமதமிராது.

10. சிப்பந்தி:—தற்காலம் ஒருவித சிப்பந்தியும் இல்லை. 5 ரூபாயின் பேரில் ஒரு அட்டெண்டர் சிலகாலம் வேலை செய்தான். அவன் தற்காலம் வேலையிலில்லை இவனுக்காக ரூ. 12-8-0 சம்பளம் பட்டுவாடா ஆயிருக்கிறது.

11. சாதர்வார்ச் சிலவு:—இச்சிலவுகளெல்லாம் டைரக்டர்களின் ஸாங்க்ஷன் பெற்றும் சரியான ரசீதுகளுடனும் செய்யப்பட்டன.

இந்த சிலவுகள் நியாயமாயும் தவிர்க்கக்கூடாததாயும் இருந்தன. இச்சிலவுகள் அடியில் வருமாறு:—

| | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| தபால் சிலவு ... ... | ... | 25 | 2 | 3 |
| கணக்குப் புஸ்தகங்கள் கிரயம் ... | ... | 9 | 0 | 0 |
| சேலம் டவுன் சொஸைடியில் கரெண்ட் கணக்கு வைப்பதற்காக கொடுத்த கட்டணம். | ... | 1 | 0 | 0 |
| வீட்டுக்குடிக்கூலி ஜனவரியிலிருந்து ஜூன் வரைக்கும் | ... | 25 | 0 | 0 |
| அச்சுக்கும் காகிதம் வகையறாக்களுக்கும்... | ... | 24 | 13 | 6 |
| பைண்டிங் சார்ஜ் ... ... | ... | 3 | 11 | 0 |

இவ்வருஷக்கடைசியில் இவ்வகையில் கொடுபடவேண்டிய தொகை ஒன்றுமில்லை.

12. அட்ஜஸ்டிங் ஷேட்:—இப்பாங்குக்கு, மதராஸ் ஸெண்ட்ரல் பாங்காரும், சேலம் டவுன் பாங்காரும் தம் தம் பத்துவரவுகளை மாற்றியகாலத்தில், அவர்களுக்கு அக்காலம்வரைக்கும் வரவேண்டிய வட்டிக்காக ரூ. 2146-2-0 இப்பாங்காரால் முன்பணமாக இரண்டு பாங்கார்களுக்கும் கொடுபட்டது. அவற்றில் ரூ. 1801-2-0 வசூலிக்கப்பட்டது. பாக்கி ரூ. 345-0-0 நடவரும் வருஷத்தில் வசூலிக்கப்படும்.

13. நிர்வாக ஸபை:—தற்கால சபையார் பாங்கின் விஷயத்தில் சிறிது பிரயாசை எடுத்துக்கொள்ளுகிறார்கள். இன்னும் ஸ்திரமான வேலைகளைச்செய்து வரவேண்டிய சந்தர்ப்பங்கள் உள. இப்பொழுது பாங்கானது தனக்கு வேண்டிய பணங்களை வெளி ஊராரிடமிருந்தே பெறவேண்டியிருக்கிறது. உள்ளூர் டிபாஸிட்டுகள் இன்னமும் பெறவேண்டிய முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டியது. விசாரித்ததில் இந்த ஜில்லாவில் அநேக பணக்காரர்களிருக்கின்றார்களென்றும், அவர்கள் பணத்தை இதர இடங்களில் போட்டிருப்பதை, இப்பாங்கில் போடும்படி செய்யக்கூடுமென்றும் தெரிய வருகிறது.

14. இந்த பாங்கு இதர ஸொஸைட்டிகளுக்குக் கடன் கொடுப்பதுமன்றி, முன்னமே சொல்லிய பிரகாரம் ஷை ஸொஸைட்டிகளின் நடவடிக்கைகளின்மேல் விசாரணையுமுண்டு. ஆகையால் அந்த ஸொஸைட்டிகளை நிர்வாக சபையார் அப்போதைக்கப்போதுபோய்ப் பார்ப்பது அவசியம். இவ்விஷயத்தில் இதுவரைக்கும் திருப்திகரமான வேலை நடத்தவில்லை. இந்த வேலையைக் கிரமமாய் நடத்த நிர்வாக சபையார் 1909-1910 கோ ஆபரேட்டிவ் வருஷத்தில் வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டியது அவசியம்.

15. அப்பாங்குக்கு வரும் கடிதங்களின்பேரில் துரிதமாகவே நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப் படுகின்றன. அவைகளில் அனேகமாய் பரிவர்த்தனமாய்த் தீர்க்கப் படுகின்றன. இரண்டு மகாசபையும் எட்டு நிர்வாகசபையும் கூடி நடவடிக்கைகள் நடந்தன. மொத்தத்தில் பிரஸ்தாப வருஷத்தில் நல்லவேலை நடந்தது. அதற்கு நிர்வாக சபையார் புகழ்பெற அருகராகிறார்கள்.

16. பாங்கின் பிரஸ்தாப வருஷத்து வரவு செலவு கணக்குகள் பின்வருமாறு.

| வரவுகள். | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| பங்குத்தொகைகள் ... ... ... ... | 10,000 | 0 | 0 |
| பிரவேச கட்டணம் ... ... ... ... | 654 | 0 | 0 |
| மெம்பர்களின் டிபாஸிட்டுகள் ... ... ... | 10,750 | 0 | 0 |
| இதர ஸொஸைட்டிகளினின்று கடன்கள் ... ... | 90,800 | 0 | 0 |
| மெம்பரல்லாதவர்களிடமிருந்து கடன்கள் ... ... | 95,462 | 4 | 8 |
| இதர ஸொஸைட்டிகளால் கடன்கள் திருப்பிச் செலுத்தப்பட்டது ... ... ... ... | 5,850 | 0 | 0 |
| வட்டி வருலித்தது ... ... ... ... | 183 | 2 | 0 |
| அட்ஜெஸ்டிங்ஹெட் ... ... ... ... | 1,13,524 | 8 | 9 |
| இதர வரவுகள் ... ... ... ... | 11 | 7 | 0 |
| மொத்தம் வரவு ... ... | 3,26,785 | 6 | 5 |
| வருஷ ஆரம்ப இருப்பு ... ... ... ... | 0 | 0 | 0 |
| மொத்தம் ... | 3,26,785 | 6 | 5 |

| செலவுகள். | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| மெம்பரல்லாதவர்களுக்குத் திருப்பிச்செலுத்தியகடன் தொகை. | 6,200 | 0 | 0 |
| இதர ஸொஸைட்டிகளுக்கு கடன் கொடுத்தது ... ... | 2,06,025 | 0 | 0 |
| கடன்களுக்கும் டிபாஸிட்டுகளுக்கும் கொடுத்த வட்டி ... | 325 | 0 | 0 |
| சிப்பந்திச்செலவும், சாதர் வார் செலவும் ... ... | 115 | 13 | 9 |
| அட்ஜஸ்டிங்ஹெட் ... ... ... ... | 1,14,049 | 8 | 8 |
| மொத்த செலவு ... | 3,26,715 | 6 | 5 |
| கையிருப்பு ... | 20 | 0 | 0 |
| மொத்தம் ... | 3,26,785 | 6 | 5 |



17. இப்பாங்கு நிகர லாபம் ரூ 1,219-4-1 பின்வருமாறு பெற்றது.

| லாபம். | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| பிரஸ்தாப வருஷத்தில் சேர்ந்த வட்டித் துகை ரூ ... | 3,754 | 1 | 6 |
| இதர லாபங்கள் ... ... ... ... | 665 | 7 | 0 |
| மொத்தம் ... | 4,419 | 8 | 6 |

| நஷ்டம். | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| வட்டித்தொகை கொடுத்ததும் கொடுக்கவேண்டியதும் ... | 3,084 | 6 | 8 |
| சிப்பந்தி செலவும் சாதர்வார்த் செலவும் செய்ததும் செய்யவேண்டியதும் ... ... ... | 115 | 13 | 9 |
| மொத்தம் ... ... | 3,200 | 4 | 5 |
| நிகரலாபம் ... | 1,219 | 4 | 1 |

இத்தொகையில் நான்கிலொருபங்கு, அதாவது ரூ 304-13-03, க்ஷேமநிதிக்குச் செலுத்தவேண்டும்.

எட்டிலொருபங்கை, அதாவது ரூ 152-6-6ஐ, காரியதரிசிக்குக்கொடுத்து ரசீது பெறவேண்டும். மிகுந்ததுகை ரூ 762-0-7 மெம்பர்களுக்கு லாபபாகமாக பிரித்துக் கொடுக்கலாம். இத்துகை, கொடுக்கப்பட்ட பங்குத்துகையில் 100-ல் 30 ஆகிறது. நிர்வாகசபையார் மெம்பர்களுக்கு 100 க்கு 9 விகிதம் லாபத்தை பிரித்துக் கொடுக்க சிபார்சுசெய்ய தீர்மானித்திருப்பதாய் பாங்கின் அட்மினிஸ்ட்ரேஷன் ரிபோர்ட்டில் தெரிய வருகிறது. நிர்வாக சபையார் மேலும் பிரஸ்தாப வருஷத்தில் கிடைத்தலாபத்தில் மெம்பர்களுக்கு பாகிக்கும்பொருட்டு நிற்கும் துகையை பின்வருமாறு பாகிக்க தீர்மானித்திருக்கிறார்கள்.

| | | |
|---|---|---|
| (a) | 15-2-09 தேதிக்குள் பங்குத் துகையை கட்டியவர்களுக்கு | $4\frac{1}{2}$ |
| (b) | 15-3-09 ... ... ... ... ... | $3\frac{1}{2}$ |
| (c) | 15-4-09 ... ... ... ... ... | $2\frac{1}{2}$ |
| (d) | 15-5-09 ... ... ... ... ... | $1\frac{1}{2}$ |
| (e) | 31-5-09 ... ... ... ... ... | 1 |

மேற்கூறிய காலங்களில் வசூலிக்கப்பட்ட துகைகள் ரூ 2,550, ரூ 1,650, ரூ 4,500, ரூ 500 & ரூ 800, 100 க்கு 9 விகிதம் பகுத்துக்கொடுக்க வேண்டிய துகை ரூ 226-6-0; அதாவது பங்கு 1க்கு அணா 6 ஆகிறது. மிகுதி துகை ரூ 536-10-7யும் லாபபிரிவை சமப்படுத்தும் நிதித்துகையொன்றை ஏற்படுத்தி அதில்சேர்க்கவும்.

18. 1909ளு ஜூன் மீ 30உயில் பாங்கின் ஆஸ்தியும் கடனும் பின்வருமாறு நின்றன.

| ஆஸ்தி. | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| கையிருப்பு ... ... ... ... ... | 20 | 0 | 0 |
| இதர ஸொஸைட்டிகளினின்று வரவேண்டிய கடன் தொகைகள் | 2,00,675 | 0 | 0 |
| ஷை கடன்களின்பேரில் வசூலிக்கவேண்டி வட்டி தொகை ... | 8,570 | 15 | 6 |

**இதர ஆஸ்திகள்.**

| | | | |
|---|---|---|---|
| வசூல்செய்யவேண்டிய முன்பணங்கள் ... ... ... | 345 | 0 | 0 |
| சேலம் டவுன் பாங்கிலுள்ள தொகை ... ... ... | 179 | 15 | 11 |
| மொத்தம் ... | 2,04,790 | 15 | 5 |

**பொறுப்பு.**

| | | | |
|---|---|---|---|
| இதர ஸொஸைட்டிகளினின்று பெற்ற கடன் தொகைகள் | | | |
| மதராஸ் ஸெண்ட்ரல் அர்பன் பாங்கு லிமிட்டெட் ... | 90,800 | 0 | 0 |
| மெம்பரல்லாதவர்களிட மிருந்து பெற்ற கடன்கள்.— | | | |
| இந்தியன் பாங்கு ... ... ... ... | 80,000 | 0 | 0 |
| மெம்பரல்லாதவரிடமிருந்த டிபாஸிட்டுகள் ... ... | 9,262 | 4 | 8 |
| 30-6-09 தேதியில் ஷை கடன்களுக்குச் செலுத்த வேண்டிய வட்டி ... ... ... | 2,588 | 11 | 8 |
| பங்குத்தொகை ... ... ... ... ... | 10,000 | 0 | 0 |
| மெம்பர்களின் டிபாஸிட்டுகள் ... ... ... | 10,750 | 0 | 0 |
| மெம்பர்களின் டிபாஸிட்டுகளுக்குக் கொடுக்கவேண்டிய வட்டி | 170 | 0 | 0 |
| மொத்தம் ... | 2,03,571 | 11 | 4 |
| லாபம் ... | 1,219 | 4 | 1 |
| | 2,04,790 | 15 | 5 |

(Sd.) A. RAMANUJACHARIAR,

Senior Inspector of C. C. S.



# ஆடிட்டு உத்திரவு.

---

ஜெ. 151. சேலம் டிஸ்டிரிக்ட் அர்பன் பாங்க் லிமிடெட்டின் 1908-09 வருஷத்திய கணக்குகளை, இன்ஸ்பெக்டர் மகா-ள-ள-ஸ்ரீ. இராமானுஜாசாரியாரவர்கள் பரிசோதித்து எழுதிய ஆடிட் ரிபோர்ட்டு ஒப்புக்கொள்ளப்படுகின்றது. இந்த பாங்க் பிரஸ்தாப வருஷத்தில் 5 மாதகாலந்தான் நடவடிக்கைகள் நடத்தி, லாபம் ரூ. 1,219-4-1 அடைந்தது. 19-வது விதிப்பிரகாரம் லாபத்தில் நான்கில் ஒரு பங்கை க்ஷேமநிதிக்கு சேர்க்கவேண்டியது. அதன்படி க்ஷேமநிதிக்கு கட்டவேண்டிய தொகை தான் டிபாஸிட்டாகப் பெற்றுக்கொள்ளுகிறபடியால், ஷை பாங்கில் சேலம் டிஸ்ட்ரிக்ட் அர்பன் பாங்கார் ரூ. 305-3 100 க்கு வருஷத்திற்கு வட்டி ரூ. 5 விகிதம் இரண்டு வருஷத்திற்கு பிக்ஸெட் டிபாஸிட்டாக க்ஷேமநிதியின் பொருட்டு கட்டி வைக்கவேண்டியது. லாபத்தில் எட்டிலொரு பங்கை காரியதரிசிக்கு வெகுமான பணமாகக் கொடுக்கவேண்டியது. அதற்காக ரூ. 152-6-6 அவருக்கு கொடுத்து ரசீது பெறவும். மிகுந்த தொகை ரூ. 761-13-7-3 நிர்வாக சபையாரின் யுக்தானுசாரமாய் லாபபாகமாய்ப் பிரித்துக்கொடுக்கலாம். ஷை நிர்வாக சபையார் இன்ஸ்பெக்டரவர்களுடைய சிபார்சுகளையும் லாபப்பிரிவை சமப்படுத்தும் நிதித்தொகையொன்றை ஏற்படுத்தவேண்டிய முக்கிய அவசியத்தைக் குறித்தும் கவனிக்கவேண்டும்.

2. இந்த பாங்க் இதர ஸொஸைட்டிகளுக்குக் கடன் கொடுப்பதும் தவிர, அந்த ஸொஸைட்டிகள் சரியாய் நடந்துவருகின்றனவாவென்று பார்க்கவும் அதிகாரம்பெற்றது. ஆயினும் ஜூலைமாதம் முதல் தேதியில் வாயிதா தவறிய அசல் தொகை ரூ. 3,000 க்கும் வட்டி தொகை ரூ. 1200 ம் வசூல்செய்யப் படாமலிருப்பதைக்கண்டு மகா-ள-ள-ஸ்ரீ, ரிஜிஸ்ட்ராரவர்கள் விசனப்படுகிறார். தாமதமின்மையை வற்புறுத்த வேண்டியது டிஸ்டிரிக்ட் பாங்காரின் முக்கியகடமை. பாங்கார் வாய்தாகாலத்திற்கு குறைந்தது இரண்டுவாரங்களுக்கு முன்னமே சங்கங்களுக்கு நினைப்பூட்டி, வேண்டிய நடவடிக்கைகள் நடத்தவேண்டியது. கிராமசங்கங்கள் தவறாய் நடக்கும் பக்ஷத்தில், அவைகளின் நடவடிக்கைகளுக்குத் தகுந்த பிரகாரம் கடன தொகைகளைத் திருப்பிச்செலுத்த மறு வாய்தா கொடுக்கப்பட மாட்டாதென்றாவது, அல்லது புதியகடன் கொடுக்கப்பட மாட்டாதென்றாவதுசொல்லி அவைகளைச்சீர்திருத்தவேண்டும். அவர்களுடைய நடவடிக்கைகள் அதிக தவறாயிருக்குமாயின் மகா-ள-ள-ஸ்ரீ, ரிஜிஸ்ட்ராரவர்களுக்கு ரிபோர்ட் செய்யலாம். கடன் தொகைகளைத்திருப்பிச் செலுத்தவேண்டிய வாய்தாகாலங்களைக் குறித்துவரும் ரிஜிஸ்ட்டர் புஸ்தகத்தை ஜாக்கிரதையாய் நாளது வரைக்கும் தாக்கல்செய்து வரவேண்டியது.

3. நிர்வாக சபையார் அட்மினிஸ்ட்ரேஷன் அதிகாரம், அதாவது இதரசங்கங்களின்பேரில் கொடுத்திருக்கும் அதிகாரம் செலுத்தும் விஷயமாய் தம்மாலியன்ற அளவு ஊக்கத்தைக் காட்டாமையை நோக்க மகா-ள-ள-ஸ்ரீ, ரிஜிஸ்ட்ராரவர்கள் விசனப்படுகிறார். மேலும் உள்ளூரிலேயே டிபாஸிட்டுகள் பெறவேண்டிய கஷ்டம் எடுத்துக்கொண்டதாகவும் காணப்படவில்லை. இதர ஸொஸைட்டிகளின் கணக்குகளைக்கூட அடிக்கடி பரிசோதிக்கவேண்டியது. அதனால் உண்டாகும் சரியான செலவை, அந்நிர்வாக சபையார் கேட்கும்பக்ஷத்தில் அவருக்குப் படிச்செலவாக போர்ட் ஆப் மானேஜ்மெண்ட் ஸாங்க்ஷன் செய்யலாம். போதுமானவும் பாங்கின்வேலையை சீராய் நிறைவேற்ற சக்தியுள்ளவும் சிப்பந்திகளை ஏற்படுத்திக்கொள்ளவும்.

4. பிரஸ்தாப வருஷத்தில் செய்தவேலைகளில் கண்டகுறைகளை எடுத்துச்சொன்னோம். ஆயினும் மொத்தத்தில் பாங்கின் நடவடிக்கைகள் நன்றாயிருக்கின்றனவென்று சொல்ல ரிஜிஸ்ட்ராரவர்கள் சந்தோஷப்படுகிறார். இந்த பாங்கு 5 மாதந்தான் வேலை நடத்தினது. மேலும் இது ஓர் நூதனமான பாங்க். ஆயினும் அதன்பங்குகள் மிக்க ஆவலுடன் எடுத்துக்கொள்ளப்பட்டன. அதிக லேவாதேவியும் நடந்திருக்கிறது. மகா-ா-ா-ஸ்ரீ, ரிஜிஸ்ட்ராரவர்கள் மேற்படி நிர்வாகசபையாரிடமிருந்து தாம் அதிக உதவிபெற்றதாக அறிவிக்கச் சந்தோஷப்படுகிறார். நிர்வாக சபையாரெல்லோரும் மகா-ா-ா-ஸ்ரீ, ரிஜிஸ்ட்ராரவர்களால் புகழப்படுகிறார்கள். அதில் முக்கியமாய் ரிஜிஸ்ட்ராரவர்களுக்குத் தெரிந்தவரையில், காரியதரிசி மகா-ா-ா-ஸ்ரீ, டி. ஆதிநாராயண செட்டியாரவர்கள் மேற்படி பாங்கின் விஷயத்திலும், சேலம் ஜில்லாவில் இதர கிராமச்சங்கங்கள் ஏற்படுத்துவதிலும் அதிகபிரயாசை எடுத்துக்கொண்டதினால் புகழப்படுகிறார். ஐக்கிய விருத்தியின் நன்மையைக்கோரி முன்பணம்கொடுத்து பலகிராம நாணயச்சங்கங்களை வேலை நடத்தும்படிசெய்த மதராசு ஸெண்ட்ரல் அர்பன் பாங்கு லிமிட்டெடுக்கும், இந்தியன் பாங்கு லிமிட்டெடுக்கும் வந்தனம் கொடுக்கப்படுகின்றது.

ஐக்கிய நாணயச்சங்க ரிஜிஸ்டிரார் ஆபீஸ், 1909௵ ஜூலைமீ 21௳. — R. RAMACHANDRA RAO, Registrar

---

# கோஆபரேடிவ் நாணய சங்கங்களுக்கு (சர்க்கார் செய்திருக்கும்) அனுகூலங்கள்.

---

1. 1904-ம் ௵ 10-வது ஆக்டின்படி அந்தந்தகாலத்தில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கும் யாதொரு கோவாபரேடிவ் க்ரெடிட் ஸொஸைடி என்னும் ஐக்கியநாணய சங்கத்தினாலாவது அந்த சங்கத்தின் பொருட்டாவது அல்லது அந்த சங்கத்தின் விவகாரங்களைக் குறித்து சங்கத்தின் உத்தியோகஸ்தராலாவது அங்கத்தினராலாவது பிறக்கும் தஸ்தாவேஜுகளுக்கு அந்தந்த காலத்தில் செலாவணியாய்க் கொண்டிருக்கும் ரிஜிஸ்ட்ரேஷனைக் குறித்த சட்டத்தின் பிரகாரம் செலுத்தத்தக்க எல்லாக்கட்டணங்களும் வஜாசெய்யப்படுகின்றன. ஆனால் பிரதேசகவர்ன்மெண்டார் அப்படிப்பட்ட நிவாரணையை அந்த சங்கத்தின் விஷயத்திலாவது எப்போதாகிலும் ரத்து செய்யலாம். (இந்தியா கவர்ன்மெண்டாருடைய விளம்பரம் நெ. 2620 பப்ளிக் 1908-ம் ௵ [illegible]மீ 6௳.)



2. 1904-ம் ௵ 10-வது ஆக்டின்படி அந்தந்தகாலத்தில் ரிஜிஸ்டர்செய்யப்பட்டிருக்கும் யாதொரு கோவாபரேடிவ் க்ரெடிட் ஸொஸைடி என்னும் ஐக்கிய நாணயச் சங்கத்தாராலாவது, அச்சங்கத்தின் சார்பில் எவராலாவது எழுதிக்கொடுக்கப்படும் தஸ்தவேஜுகளுக்காகிலும் அப்படிப்பட்ட யாதொரு சங்கத்தின் வேலைக்குச் சம்பந்தப்பட்டதாய் அச்சங்கத்தைச்சேர்ந்த யாதொரு உத்தியோகஸ்தராலாவது சந்தாதாரராலாவது எழுதிக்கொடுக்கப்படும் தஸ்தவேஜுகளுக்காகிலும் அந்தந்த காலத்தில் செலாவணியாய்க் கொண்டிருக்கிற யாதொரு சட்டப்படி முறையே விதித்து வாங்கத்தக்க முத்திரைத் தீர்வை வஜாசெய்யப்படுகின்றது. (விளம்பரம் நெ. 6220 S. R. 1904-ம் ௵ ஸெப்டம்பர்மீ 30௳)

3. 1904-ம் ௵ 10-வது ஆக்டின்படி அந்தந்த காலத்தில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கும் யாதொரு கோவாபரேடிவ் க்ரெடிட் ஸொஸைடி என்னும் ஐக்கிய நாணயச்சங்கத்தின் லாபத்தைக் குறித்தாவது லாபத்தின் பொருட்டு அச்சங்கத்தின் சந்தாதாரர்கள் பெற்றுக்கொள்ளும் ஈவுத் தொகைகள் முதலிய தொகைகளைக் குறித்தாவது செலுத்தத்தக்க வருமானவரி வஜாசெய்யப்படுகின்றது. (இந்தியா கவர்ன்மெண்ட் விளம்பரம் நெ. 6216 S. R. 1904-ம் ௵ செப்டம்பர்மீ 30௳)

4. 1904-ம் ௵த்திய 10-வது இந்தியா ஆக்டின்படி ரிஜிஸ்தரான கோஆபரேடிவ் நாணய சங்கங்கள் ஒன்றுக்கொன்று பணம் அனுப்பவேண்டியிருந்தால், சர்க்கார் கஜானாமூலமாக, ரவானா மாற்று ரசீதுகளை, அனுப்பும் தொகை மொத்தத்திற்கே வாங்கி அனுப்பலாம். (கவர்ன்மெண்டாருடைய ரிவினியூ நெ. 489, 1909-௵ செப்டம்பர்மீ 1-ம் தேதிய உத்திரவு.

5. கோ ஆபரேடிவ் நாணய சங்கங்களுக்கு போஸ்டு ஆபீசுகளில் தங்களுடைய மீதித்தொகைகளை வைத்து வைப்பதற்காக 'பொதுக்கணக்கு' வைத்துக்கொள்ள உரிமையுண்டு. ஹெட் ஆபீசுகளிலும், பிராஞ்சு ஆபீசுகளிலும் போஸ்டுமாஸ்டர்கள், கோஆபரேடிவ் ரிஜிஸ்திராரவர்கள் நேராகக் கேட்டாவது, அல்லது ஸொஸைட்டிகள் எழுதிக் கேட்பதை இண்டார்சு செய்தாவது 'பொதுக்கணக்குகள்' வேண்டினால், அவற்றை போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் அவர்களுடைய உத்தரவு வரும்வரை காத்திராமலே வைத்து விடும்படி உத்தரவு பெற்றிருக்கிறார்கள்.

(போஸ்டு ஆபீசுகளின் டைரெக்டர் ஜெனரலுடைய சர்க்கியுலர், ஸேவிங்க்ஸ் பாங்கு டிபார்ட்மெண்டு. நெ/6/5, 1907-ம் ௵ ஏப்பிரல் 11-தேதி.) சாமான்னியமாய் யாரேனும் ஒருவர் பேராலிருக்கும் கணக்குகளைவிடப் 'பொதுக்கணக்குகளுக்கு' சில விஷயங்களில் அனுகூலங்களுண்டு. அவை,—

(a) கோஆபரேடிவ் நாணய சங்கங்கள் ஆக்ட்டின்படி செக்ரெடரிகள், கஜான்ஜிகள், அல்லது ஸொஸைட்டி மானேஜர்கள், யார் வேண்டுமானாலும் கணக்குகள் வைக்கலாம்.

(b) இரண்டு அல்லது அதிகப்பட்ட பெயர்கள் கூடி டிபாசிட்டுகள் வைக்கக்கூடாதென்கிற நிர்ப்பந்தம் பொதுக் கணக்குகளுக் கில்லை.

(c) வருஷாந்தரத்தில் ரூ. 200-க்கு மேற்படக் கூடாதென்றும், டிபாசிட்டுகளுக்கு உத்தமபக்ஷத்தில் ரூ. 2000-க்கு மேற் படக்கூடாதென்றும், வட்டிக்கணக்குப் போடுவதற்கும் ரூ. 2000-க்கு மேற்படக்கூடாதென்றும் இருக்கும் நிபந்தனை கள், பொதுக்கணக்குகளுக்கில்லை. ஆனால் எந்தப் பொதுக் கணக்கிலும் நடப்பு வருஷவட்டிக்கு உதாரமானது போக, ஸொஸைட்டிக்குச் சேரவேண்டியது ரூ. 10,000க்கு அதிகப் படக்கூடாது. அவ்வாறு ரூ. 10,000 க்கு அதிகப்பட்டு நிற்கும் தொகைக்கு வட்டியும் கிடைக்க மாட்டாது.

(d) இம்மாதிரி டிபாசிட்டுகளிலிருந்து, 'உடையார்வேண்டும்போது' எடுக்கக்கூடிய வகைப்பணத்தில், பொதுக்கணக்கு வைப்ப வர் ஒரு காலந்தர் மாசத்தில் ரூ. 1,000 க்கு அதிகம் வாங் கக் கூடாதென்பது சாமான்னிய நிபந்தனை. ஆனால், அதிகம் வேண்டியிருந்தால், கணக்கு யார் பேரிலிருக்கிறதோ அவர், எந்தப் போஸ்டாபீசிலிருந்து பணம் வரவேண்டுமோ அத ற்கு எழுதித்தான் இவ்வாறு அதிகப்பணம் வாங்கப் போவ தாகத் தெரிவிக்கவேண்டும். இவ்வாறு நோட்டீசு கொடுப் பதில், இவ்வளவு வேண்டுமென்று எழுதுவதும், பணம் வேண்டியகாலத்திற்கு ஒருமாதாந்தரமாவது இடையிருக்கும் படி பார்த்து, போஸ்டுமாஸ்டருக்கு சாமான்னிய கடிதமொ ன்றெழுதுவதும், இந்தக்கடிதத்தில் பணம் இன்னதேதி யில் வாங்குவதாக உத்தேசமென்று காணுவதும், அவசிய மாம். இரண்டு அல்லது அதிகப்பட்ட தவணைகளில் பணம் வாங்குவதானால், இந்த நோட்டீசில், இத்தனை தவணைகள், இன்ன தேதிகள், இவ்வளவு மொத்தங்கள், என்னும் விவரங் களை யெல்லாம் தெளிவாகக் காட்டவேண்டும். "ஆறுமாதம் முன் நோட்டீசு கொடுத்து" வாங்கவேண்டிய டிபாசிட்டு வகைகளிலோ, பணம் வாப்ஸ் எந்த வகையில் வாங்கவேண் டுமானாலும், ஆறுமாதம் நோட்டீசு கொடுத்தே தீரவே ண்டும்.

6. எந்தக் கோஆபரேடிவ் நாணயச்சங்கத்திற்கு, தனது பணத்தையும், [illegible]யும், கவர்ன்மெண்டு ஸேவிங்க்ஸ் பாங்கிலே, அல்லது வேறுவகை யில் பத்திரமாகவோ, வைப்பதற்கு விபரீதச்செலவு செய்யவேண்டி வருகிற தோ, அதற்கு அதன் பூட்டுப் பெட்டியைச் சர்க்கார் கஜானாக்களில் வைத்து



வைப்பதற்கு உரிமையுண்டு. ஆனால் பின்வரும் நிபந்தனைகளுக்கு அது உட்படவேண்டும். ஸொஸைட்டி நிர்வாக சபையார், வியாபார அவசரத்திற் குத் தினசரி வேண்டியதைத் தமது ஆபீசிலேயே வைத்துக்கொண்டு, அவ சரமிராத பணத்தை மட்டும் கஜானாவில் வைக்க வேண்டுமென்பது சர்க்கார் நோக்கம். தவிர,

1. பூட்டுப்பெட்டி பூதாகாரமாயில்லாமல், சாமான்னிய பருமனுக வும், நல்ல பூட்டுப் பூட்டியும், சரியாக அரக்கு முத்திரை போட்டுமிருக்க வேண்டும்.

2. கஜானா உத்தியோகஸ்தரைக் கஜானா திறக்கவேண்டு மென்று அடிக்கடி உபத்திரவிக்கக் கூடாது.

* (க-ஆ-நெ/ 799, ரிவினியூ, 1905-௵, ஆகஸ்டு௴ 30 தேதி.)

கோஆபரேடிவ் நாணய சங்கங்களுடைய கஜானா பெட்டிகளை சர்க்கார் கஜானாவில் வைத்து வைக்கும்படி உத்தரவு செய்வதற்குக் கலெக்டர்களு க்கு அதிகார மிருக்கிறது.

(க-ஆ-நெ/1198, ரிவினியூ, 1909-ம் ௵ மே௴ 4-தேதி.)

7. கிராமப்பாங்குகள், எந்த ஜில்லாவைச் சேர்ந்தனவோ, அந்த ஜில்லா கெஜட்டுகளைக் கிரயமில்லாமல், அவைகளுக்குக் கொடுத்து வரும்படி உத் தரவாயிருக்கிறது. (க-ஆ-நெ/681, ரிவினியூ, 1907-ம்௵ மார்ச்சு௴ 22-ௗ.) இந்த உரிமையை, ரிஜிஸ்திராருக்கு இஷ்டமிருந்தால், அர்பன் நாணய சங்கங் களும் அடையலாம். (க-ஆ-போர்டார் நடவடிக்கை நெ/ 77, 1908-௵ மார் ச்சு௴ 11 தேதி.)

8. கோஆபரேடிவ் நாணய சங்கங்களுக்குச் செலவொன்றுமில் லாமல், தங்கள் வரவு செலவு வட்டமாகிற கிராமங்களின் சர்வே நக்ஷா க்கள், செட்டில் மெண்டு ரிஜிஸ்தர்கள், ஆகிய இவைகள் கிடைக்கும். இந்த அனுகூலம் யாருக்குத் தேவையோ, அந்த ஸொஸைட்டியார் ரிஜிஸ்திரா ருக்கு எழுதிக் கேட்டுக் கொள்ளவேண்டும். அவருக்கு இது சரியென்று கண்டால், ஜில்லாகலெக்டருக்கு எழுதி, இவ்வாறு சப்ளை செய்ய வேண்டி யதை ஆகச் செய்வார். § (போ-ந.-நெ/371, 1907-௵ நவம்பர்-௴ 21-தேதி.)

9. கோ ஆபரேடிவ் ரிஜிஸ்திரார் கலெக்டர்களுக்கு அனுப்பும் கோஆபரேடிவ் சங்க வருஷாந்தரக் கணக்குகளையும், ஆடிட்டர் ரிபோர்ட்டு களையும், செலவில்லாமல் அந்தந்த ஜில்லா கெஜட்டுகளில் பிரசுரஞ் செய்ய வேண்டுமென்று கவர்ன்மெண்டார் தயை கூர்ந்து உத்தரவளித்திருக்கிறார் கள். (போ-ந.-நெ/ 34, 1906-ம் ௵ பிப்ரவரி-௴ 7-தேதி.)

---

* என்றால், கவர்ன்மெண்டு ஆர்டர்.

§ என்றால், போர்டார் நடவடிக்கைகள்.

10. இந்த ராஜதானியில், கோ ஆபரேடிவ் முறையைப் பிரபலிக்க வேண்டி, ரிஜிஸ்திராரவர்களுடைய இஷ்டத்தை யனுசரித்துச் சம்பளமில்லாமல் உழைக்கும் எல்லாவகை ஏஜெண்டுகளுக்கும், சிவில் உத்தியோகஸ்தருக்குள்ள விதிகளை அனுசரித்து, வழிச் செலவு பணம் கொடுக்கப்படும் (க-ஆ-நெ/ 136, பணவகை (பிணன்ஷியல்), 1907-௵ பிப்ரவரி-மீ 26-உ.)

11. 20-வது பிரிவின் நிபந்தனைகளுக் குட்பட்டு சங்கத்தின் மூலதிரவியத்தில் ஒரு சந்தாதாரருக்குள்ள பங்கு அல்லது சுதந்தரமானது அந்த சந்தாதாரருக்கு நேரிட்ட யாதொருகடன் அல்லது பொறுப்பின் விஷயமாக நீதி விவகாரக்கோர்ட்டார் பிறப்பித்த யாதொரு டிக்ரி அல்லது உத்தரவின்படி ஜப்தி அல்லது விற்பனை செய்யப்படுவதற் குள்ளாகமாட்டாது. மேலும் அபிஷல் அஸைனி என்னும் உத்தியோகஸ்தராவது ஸிவில் ப்ரொஸீஜர் கோட் 20-ம் அத்தியாயப்படி நியமிக்கப்பட்ட ரிஸீவராவது ஷை பங்கு அல்லது சுதந்தரத்துக்குத் தாவாசெய்ய அர்ஹராகமாட்டார்.

12. நிலத்தீர்வை விஷயமாகவாவது நிலத்தீர்வையாக வசூல் செய்யத்தக்க யாதொரு தொகை விஷயமாகவாவது கவர்ன்மெண்டாருக்காகிலும், வாடகை விஷயமாகவாவது வாடகையாக வசூல்செய்யத்தக்க யாதொரு தொகை விஷயமாகவாவது பூமிக்குடையவருக்காகிலும் முற்பட்ட சுதந்தரமுண்டென்னும் ஷரத்துக்குட்பட்டு ஒரு சங்கத்தார்

(a) தற்காலம் சந்தாதாரரா யிருப்பவருக்காவது முன்னே சந்தாதாரராயிருந்து நீங்கினவருக்காவது விதை அல்லது ஒரு கிரயத்துக்கு வாங்கத் தொகை கடன் கொடுத்ததேதி முதற்கொண்டாகிலும் ஒரு வருஷத்திற்குள் எப்போதேனும் மேற்கண்டபடி முன்னதாகக்கொடுக்கப்பட்ட வஸ்துவிலாவது கடனிலாவது செலுத்தப்படாமலிருக்கும் பாகத்தைக்குறித்து ஷை சந்தாதாரருடைய பயிர் முதலிய விவசாய சம்பந்தமான சாகுபடியையும்.

(b) சங்கத்தார் சவதரித்த வஸ்துக்களைப்பற்றியாவது கொடுத்த கடனைப்பற்றியாவது இன்னும் செலுத்த வேண்டியதா யிருக்கும் கடனைக்குறித்து சங்கத்தாரால் மேற்கண்டபடி சவதரிக்கப்பட்டாகிலும் அவர்களால் கடன் கொடுக்கப்பட்ட தொகையைக் கொண்டு முழுமைக்கோ சிறிது மட்டிலோ கிரயத்துக்கு வாங்கப்பட்டாகிலும் இருக்கிற எவ்வித கால்நடை விவசாய சம்பந்தமான அல்லது கைத்தொழிலுக்குரிய கருவிகள் அல்லது கைத்தொழில் வேலைகளுக்கு வேண்டிய பண்படுத்தாத வஸ்துக்கள் ஆகிய இவற்றையும், மற்றக் கடன்காரர்களை விட முற்பட்டுத்தாவா செய்து கடனைப் பெற்றுக்கொள்ள அர்ஹராவார்கள்.



13. தற்காலத்தில் சந்தாதாரரா யிருப்பவருக்கோ முன்னே சந்தாதாரராக இருந்து நீங்கின வருக்கோ சேரவேண்டியதாயிருக்கும் டிபாஸிட் தொகைகளின் மேலும் மூலதிரவியத்திலே அவருக்குள்ள பங்குகள் அல்லது சுதந்தரத்தின் மேலும் சங்கத்தாருக்கு அவர் செலுத்த வேண்டிய யாதொரு கடன் விஷயமாக அவருக்குச் செலுத்தத்தக்க யாதொரு ஈவுத்தொகை அர்ஹார்த்தத்தொகை அல்லது லாபத்தின் மேலும் சங்கத்தாருக்குத் தாவா உண்டு. மேலும் அப்படிப்பட்ட சந்தாதாரருக்கு வரவு வைக்கப்பட்ட அல்லது செலுத்தத்தக்கதா யிருக்கிற யாதொரு தொகையை அவ்வகையான யாதொரு கடனைச் செலுத்தும் விஷயமாக ஈடு செய்து கொள்ளலாம்.

---

# குறிப்புகள்.

---

திருநெல்வேலி ஜில்லா 147-ம் நெ. 1 வடமலைபுரம் கிராம ஐக்கிய நாணயசங்கம், ரிஜிஸ்திரார் அவர்கள் சமூகத்திற்கு பின்வருமாறு எழுதுகின்றது.

" மஹாச் சக்கிரவர்த்தியாகிய எட்வர்ட் துரையவர்களின் பிறந்த நாளைக்கொண்டாடுவதற்காக 1909-ம் ௵ நவம்பர்மீ 9-ம்உ தேதி, அச்சங்கத்தின் மெம்பர்களால் ஒரு சபை கூட்டப்பட்டது. கவர்ன்மெண்டாருடைய காருண்ய சீர்திருத்தங்களை புகழ்ந்து ஒரு உபந்நியாசம் செய்யப்பட்டது. கோஆபரேடிவ் க்ரெடிட் ஸொஸைடீஸ் ஆக்டு அவர் நாளில் அங்கீகரிக்கப்பட்டதால், அச்சங்கம் அம்மஹாச் சக்கிரவர்த்தியின் பிறந்த நாளைக்கொண்டாடுவது அசியமாகின்றது. தீர்மானங்கள் சங்கத்தின் மினிட் புத்தகத்தில் பதிவுசெய்யப்பட்டன.

2. ஐர்லாந்து கிருஷி உருப்படி (லிமிடெட்) ஸொஸைட்டியின் பிரசிடெண்டாகிய, ஸர். ஹாரஸ் ப்ளங்கெட், கே. ஸி. வி. ஓ., அவர்கள் ஐர்லாந்திய கோஆபரேடிவ் ஒழுக்கத்தைப்பற்றி இவ்வாறெழுதுகிறார்:—

நம்முடைய கிருஷிகர்களுக்குள் யாதுகாரியத்திற்கும் ஒற்றுமையில்லாமலும் அதனால், அவர்களுடைய ஆசாரமுறை, ஜீவனமுறை, ராஜாங்கமுறை ஆகிய இவையெல்லாம் சீர்குலைந்தும், இருக்கின்றன. இதற்குக்காரணமென்னவென்றால், நம்முடைய ஸொஸைட்டியைச் சேர்ந்தவர்களும்கூட அதையேதோ இரண்டொரு காரியத்திற்குமட்டுமே சாதனமென்று பாவிப்பதுதானென்று தெரிகிறது. (நம்முடைய ஸொஸைட்டிபோன்ற) உருப்படியான ஸொஸைட்டிகள், (கிருஷியென்னும்) இந்தப் புராதன உத்தியோகத்தைப் புராதனரீதியாக இன்னும் நடத்திவருபவருக்கு எவ்வளவோ அனுகூலம் செய்யக்கூடும். அதனால் காரியாம்சத்தில் எவ்வளவோ லாபமுண்டு, ஆனால் இதை விவசாயத்தில் தேர்ந்தவரென்று சொல்லிக்கொள்ளும் சிலர் அங்கீகரிப்ப

தில்லை. என்றாலும் இவர்கள் தங்களுக்குத் தற்கால (முறையை யறிந்து) சொல்லிவருகிற இஷ்டர் பேச்சைக்கேட்பது நல்லது. அவர்களை எட்டுச்சுரைக்காய்களென்று இகழ்வது தப்பு. அவர்கள் விளைச்சலை மட்டுமே குறித்துப் பேசிக்கொண்டிருப்ப தில்லையென்பது மெய்தான். குடியானவருக்குள் காணவேண்டிய தருமத்தையும், ஆசாரவிவகாரங்களையும், (இன்னும் அநேக 'வேண்டாத' சங்கதிகளையும்) அவர்கள் இழுத்துக்கொள்ளுகிறார்களென்பதும் மெய்தான். என்றாலும் இவை அவர்களுக்குத் தோஷங்களென்பது பிசகு. ஏனெனில், இவர்கள், கிருஷிவிஷயத்தில் வேளாண்மையின் சயாஷ்ட மட்டும் விசாரிப்பதில்லை. என்றால் கிருஷியானது சாஸ்திரப்படி யிருக்கிறதாவென்றும், ஆதாயம் தேறுகிறதாவென்றும், விசாரித்து அம்மட்டோடு விட்டுவிடுகிறதில்லை. கிருஷிகர்களும் மற்றவரைப்போல மனிதராதலால், அவர்களுடைய இல்வாழ்க்கையையும் அதன் தருமத்தையும் விசாரிக்கிறார்கள். ஆகவே இவர்கள் தான் இந்தவிஷயத்தைச் சாங்கோபாங்கமாய் விசாரிப்பவர்கள். ஆதலால், 'பக்கா கிருஷிகர்' என்றுசொல்லிக்கொண்டு, வெள்ளாமை, விளைச்சல் தவிர வேறொருசங்கதியும் தெரியாதவர்களைவிட இவர்கள் சொல்லுவது வேளாண்மைக்குச் சிறந்த பலனைக் கொடுப்பதாம். கிருஷித்தொழில் கோஆபரேடிவ் முறையைப் பிரபலிக்க வேண்டுபவர்கள், தங்கள் நாளிலும் தங்கள் தலைமுறையிலும், தாங்கள் செய்யக்கூடிய உபகாரங்களிலெல்லாம் சிறந்தது எது? கிராமத்தாருக்குப் பழைய நாளிலிருந்த க்ஷேமத்தை மறுபடி அவர்கள் அடையும்படி செய்வதேயாம். இதை இந்த இஷ்டர் ஒப்பிடப்பது நமக்கு நல்ல சுபசகுனமென்பது என் அபிப்பிராயம்.

இந்தப்பிரஸ்தாபம் நாம் யாரை உத்தேசித்துச் செய்கிறோமோ, அவர்கள் நாம் பேசிவருவதற்கு அர்த்தமின்ன தென்பதைத் தெரிந்துகொண்டால் இதைப்புகழ்வார்களென்கிற நிச்சயம் நமக்குப் பூரணமாயுண்டு. ஏனெனில், சமீபகாலத்தில், கிராமங்களிலிருந்து ஜனங்கள் ஏராளமாய்ப் பட்டணங்களில் வந்தடைகிறார்களென்றும் இதனால் இந்த ராச்சியத்திற்கு என்னகேடுகளெல்லாம் வந்துவிடுமோவென்றும் விவேகிகளுக்குள் பயமுண்டாயிருக்கிறது. அவர்கள் இந்த ராச்சியத்திற்குச் சனம்பெருத்த பட்டணங்களால் உபத்திரவமுண்டாகாமல் பார்த்துக்கொள்ளவேண்டுமென்றும், அதற்காக விவசாயத்தில் ஆதாயம் கூடிவரவேண்டிய உபாயங்தேடி, கிருஷிகருக்குப் பிழைப்பு குஷாலாக நடக்கும்படி பார்க்கவேண்டுமென்கிற ஆக்கிரகம் வலுவாய்க்கொண்டிருக்கிறார்கள். (இதை யனுசரித்தே) டட்லி கம்மிஷனர்கள் ஐர்லாந்தின் மேற்குப்பகுதியில் சிறுகுடித்தனம் வலுக்கும்படி ஏற்பாடாக வேண்டுமென்று சிபார்சுசெய்திருக்கிறார்கள். ஆனால் இந்த வர்க்கத்தவருக்கு க்ஷேமங்கிடைக்கவேண்டு மென்றாலும், சிறுகுடித்தனம் செழிக்கவேண்டு மென்றாலும், கோஆபரேடிவ் முறைதான் அதற்கு ஏற்ற சாதனமென்று அவர்கள் ஏகோபித்து அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். ஆனால் கிராமங்களில் தொழில்கள் பரஸ்பரம் அனுகூலம்செய்து செழிக்கவேண்டுமானாலும், அவைகளெல்லாம் காலத்திற்குத்தக்க கோலம்கொண்டு நெடுங்காலம் பெருகிவாழவேண்டுமானாலும், மகாஜனங்கள் இவ்வாறு பேச்சுமாத்திரத்தில் ஒப்பியதுமட்டும் போதாது. சர்க்கார் இதற்கு மரியாதை தந்து, சகாயஞ்செய்தாலும் போதாது. கிருஷிகர்களும் அவர்களுக்கு வேண்டியவர்களும் மனதுவைத்து, நன்றாகவும், [illegible] உழைத்து வந்தால்தான், இந்தப் பெரியகாரியம் நிறைவேறும்.

3. "கோஆபரேடிவ் நியூஸில்" 1907ஆம் நவம்பர்மீ 27ம்தேதியில் [illegible] குறிப்பிட்டிருக்கிறோம். அதை இஷ்டர்கள் [illegible] படிப்பார்களென்று [illegible]:—



ஜெர்மனியாவில், மற்ற இடங்களிலானதுபோலவே, கோஆபரேடிவ் முறை பெருகி ஜனங்களுக்கு விவேகத்தை அற்புதமாய் அதிகரித்து, குடியானவர்களைப் பொறுத்தமட்டில் (வெகு நன்றாய்ச் செழித்திருக்கிறது.) குடியானவர்களுக்கு இப்பொழுதுதான் முதன்முதல் பணம் கொடுக்கல்வாங்கல் இன்னவகைத்தென்று தெரிந்துவருகிறது. அதிகவட்டி வாங்குபவருடைய உபத்திரவத்தினின்றும் அவர்கள் விடுபட்டுவருகிறார்கள். கோஆபரேடிவ் கிராமப்பாங்குகள் செழிப்பதற்கு மூலாதாரமாகிய ஜாமீன்முறையில் நாணயம் சிதறாது நடந்துவருவதற்கு பந்தோபஸ்தும் செய்திருக்கிறது. இந்தப்பதனமான கோஆபரேடிவ் முறையை ஆதாரமாகக்கொண்டு அவர்களே தங்களுக்குவேண்டியமட்டில் கொடுக்கல் வாங்கல் செய்யமுடியுமாதலால், இதுமூலமாக அவர்கள் கிருஷிக் கோஆபரேடிவ் ஸொஸைட்டிகளாக்கிக்கொண்டு, அவற்றின் உதவியால் தங்கள் குடித்தனவேலையை இன்னும் நன்றாகச்செய்து லாபமடையச் சௌகரியம் வந்திருக்கிறது.

இத்தனை அற்புதங்களும் சமீபகாலத்தில் நடந்தவைகள். ஏனெனில் 1901-ம்வருஷத்தில் 172 பாங்குகள் தானிருந்தன. மெம்பர்கள் 20,204பெயர். மூலதனம் பவுன் 93,000. 1908-ம் வருஷக்கடைசியிலோ, 2,410 பாங்குகளுக்குக் குறையாமல், 347,707 மெம்பர்களும், மூலதனம் பவுன் 21,00,000 மும் கூடியிருந்தன. இம்மாதிரிப் பெருக்கத்தைப்பற்றி நாம் மெத்தவும் பெருமைப்படவேண்டியதாம்.

4. 1909-ம்வருஷம் நவம்பர்மாதத்தில் கூடிய தஞ்சாவூர் ஜில்லா மகாநாடு, மூன்றாவது மீட்டிங்கில், ரிவின்யூ போர்டாரவர்களுக்கு செட்டில்மெண்டுவகையில் செகரடேரியாயிருந்து, இப்போது பென்ஷன்வாங்கும் ராவ்பஹதூர் ஸ்ரீமான் வி. கே. ராமானுஜாசாரியார் அவர்கள், கிராமப்பாங்குகள் கோஆபரேடிவ் முறையில் அதிகரிக்கவேண்டிய ஒரு தீர்மானத்தைப் பிரேரேபித்தார். "பௌண்டரீகபுரத்தில் சனம் ஸ்ரீமான் என். கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்களாலும், நீடாமங்கலத்தில் ஸ்ரீமான் சேதுராம அய்யரவர்களாலும், ஆரம்பமாகியவை போன்ற ஸொஸைட்டிகள் எவ்வளவு உபகாரமாகி யிருக்கின்றனவென்பதை அவர் விவரித்தார். வட்டிவிகிதம் வெகுசலீசு. லாபத்தையோ எல்லோரும் பங்கிட்டுக்கொண்டார்கள். சர்க்காரும் ஸ்டாம்பு, ரிஜிஸ்டரேஷன் முதலிய செலவுகளை மாப்புசெய்து, இம்மாதிரி ஸொஸைட்டிகளுக்கு உதவத் தயாராயிருக்கிறார்கள்" என்றார். ஸ்ரீமான் ஜி. டி. கிருஷ்ணமாசாரியார் இதை ஆமோதித்தார்.

ஹைகோர்ட்டு வக்கீல் ஸ்ரீமான் டி. ரங்காசாரியார் பிரசிடெண்டாயிருந்ததில், இவ்விஷயத்தைக்குறித்துப்பேசி, சர்க்கார் இந்த ஒரு ஆக்ட்டை ஜாரிக்குக்கொண்டுவந்ததனால் ஜனங்களுக்குத் தாங்கள் செய்யவேண்டியதைச் செய்தாயிற்றென்றும், இதனாலுண்டாகும் உபகாரங்கள் இப்படிப்பட்டவையென்று எல்லோரும் ஒப்புக்கொள்வார்களென்றும், நமது ஜனங்களுக்குள் பரஸ்பர விசுவாசக்குறைவே பெரியதோஷமென்றும், பஞ்சாயத்துகள் கிராமங்களிலில்லையென்றும், அகவிலை ஏறினால் ஜனங்களுக்கு உபகாரமாகத் தானிய கோளங்கள் இருக்கவேண்டுமென்றும், சொன்னார்.

இந்தத் தீர்மானத்தைப் பிரதிநிதிகள் அனைவரும் வெகு கோலாகலமாக ஒப்புக்கொண்டார்கள்.

5. பம்பாய் ரிஜிஸ்திரார் ஒரு கம்மிட்டி மீட்டிங்கைத் தான் கண்டவாறு வருணித்திருப்பதை யாரும் படித்துக்களிப்பார்கள்.

"ஒரு கம்மிட்டியார் மீட்டிங்கு கூடியிருக்கையில் நாமும் உள்ளேபோவோம். (இப்படியே ஒருமுறை நான் திடீரென்று சென்றேன்.) எங்கேபார்த்தாலும் ஜனங்கள் காரியத்தின்மேல் திருஷ்டியாயிருக்கிறார்கள். மேஜையின்பேரில் பணம் கொட்டிக்கிடக்கிறது. நல்ல பணம் சந்தேகமில்லை. செகரெட்டரியவர்கள் முடுக்கி முடுக்கி யெழுதுகிறார் அல்லது எதையோ காண்பிக்கவேண்டி யெழுந்திருக்கிறார். அல்லது எழுந்து ஏதாவது கேள்விகேட்கிறார். எல்லோரும் விஷயந்தெரிந்தவர்களாகவே காணுகிறார்கள். அதோ செயர்மென் இருக்கிறார். அவருக்கு இருபுறத்திலும் அவருக்குச்சகாயமாய் உழைப்பவர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். யாரோ ஒருவர் எழுந்துநிற்கிறார். அவருடைய டிபாசிட்டு ரூபா 100-ம் பாங்கு நிர்வாகசபையார் ஒப்புக்கொண்டு அவர் பெயரைத் தாக்கல்செய்து கொண்டாயிற்றென்று தெரியும்வரை அவர் நிற்கத்தான்வேண்டும். (நான்போனதினத்தில் ரூ. 1000 டிபாசிட்டு ஒருவர் கொண்டுவந்திருந்தார்.) அவர் போனதும், இன்னொருவர் 1 ரூபா.எடுத்துக்கொண்டு மெம்பராக வேண்டுமென்று கெஞ்சிவருகிறார். அவர் பங்கு மொத்தம் அந்த ரூபாய். இதன் பேரில் விவாதமுண்டாகிறது. அவர் எங்கே குடியிருப்பது, அவருக்கு என்னவேலை, அவர் பாட்டாளியா, இங்கேயே அவர் ஸ்திரமாயிருப்பாரா, யாராவது இவரை நன்றாயறிந்தவருண்டா, கடன் கொடுப்பதற்குவேண்டிய நாணயம் இவரிடமுண்டா, (என்றிப்படிக் கேள்விகளும் உத்தரங்களும் வளர்கின்றன.) அவரைப்பற்றித் தெரிந்தசங்கதிகளை விசாரிக்கிறார்கள். அவரால் வரக்கூடிய நயநஷ்டங்களைக் கவனிக்கிறார்கள். பெரும்பாலார் அவரை மெம்பராக்குகிறார்கள். அடுத்தவாரம் அவர்மறுபடி வருகிறார். ஆனால் பணம்போடுவதற்கன்று. வாங்குவதற்காக! அவர் கொண்டுவந்த ரூ. 1 ஸொஸைட்டிக்குத் திருப்தியுண்டாக்கிற்று. இப்பொழுது அவருக்கு ரூ 50 கொடுத்து ஸொஸைட்டி அவரைத் திருப்திசெய்யவேண்டும். இவருக்குத் தச்சுவேலை. கொஞ்சம் ஏனங்களும், மரமும் வாங்கவேண்டும். இவர்போனதும், ஒரு 'கொழுத்த' மெம்பர் வருகிறார். இவருக்குத்தன் ஷாப்புக் கடையைப் பெருக்குவதற்காக ரூ. 500 வேண்டும். இந்த சங்கதியை விசாரித்து, ஜாமீன் நபர்கள் இன்னாரென்றுகண்டு, இவருடைய வியாபார ரகசியங்களை யறிந்து, கடைசியாகப் பெரும்பாலாருக்கு, ரூ. 300 கொடுப்பது இவருக்குப் போதுமென்றும், அது கொடுப்பதில் தோஷமில்லை யென்றும், காணுகிறது. இத்துடன் நாம் அவர்களைவிட்டு விலகலாம். அவர்களோ, தங்களுடைய காரியமெல்லாம் கிரமமாக ரிகார்டாகி, கையெழுத்திட்டு, நடவடிக்கைகள், கணக்குகள், பத்திரங்கள் எல்லாம் தயாராகி முடிகிறவரையிருந்துதான்போகவேண்டும். வியாபாரம் சமர்த்தாக நடப்பதற்கும், எல்லாம் கிரகஸ்தமார்க்கமாயிருப்பதற்கும், பொறுப்பு அவர்களுடையதாயிருக்கிறது".

6 1907-8-ம் வருஷத்திய ரிபோர்ட்டில், ஐக்கிய மாகாண ரிஜிஸ்திரார், சிறு கிராமப்பாங்குகள் விஷயமாய் இவ்வாறு சிலாகித்து எழுதுகிறார் :—

" இப்படிப் பேசுகையிலேயே, எவ்விடங்களிளெல்லாம் சிறு கிராமப்பாங்குகள் ஆகக்கூடுமோ, அவ்விடங்களில் பெரிய ஸொஸைட்டிகள் வேண்டாமென்பது தான் என்தாற்பரியம். இவைகளை ஆரம்பிப்பதில் ஆகவேண்டிய காரியங்கள் சலிப்பையும் கஷ்டத்தையும் கொடுப்பவைகள் தாம். ஆனால் ஜனங்களுக்கு அறிவுபுகட்டுவதற்கும், இக்காரியத்தினால் கிடைக்கவேண்டிய பலன் சாசுவதமாய்க் கிடைப்பதற்கும், இவைதான் சிறந்தவை. கிராமப்பாங்கென்பது, கிராமங்களிலுள்ள மற்ற அம்சங்களுடன் ஒன்றாகி, திருஷ்டத்தில் எல்லோருக்கும் ஆசையையுண்டு பண்ணுகிறது. கிராமத்திலுள்ள யோக்கியரெல்லாம் ஒன்றுசேர்ந்து, இது தங்களுடைமையென்று பெருமைப்படுகிறார்கள். துஷ்டனையும் இது நோக்கிவிடுகிறது. குத்தகைகொடாமல் திரிகிற



வனை இது கிரகஸ்தனாக்கி, மெம்பராகிற பெருமையை அவன் இச்சித்து ஆக்கிரகப்படும்படிசெய்கிறது. (பேதாப்பூர் டிஸ்திரிகட்டு ரிபோர்ட்டிலிருந்து பகுதிகள் கீழே பிரசுரித்திருப்பதைப் பார்க்க.)

" மேற்படி ஸொஸைட்டிகளில் இரண்டு ஜாதியொற்றுமை கூடியவைகள் ஒரு ஸொஸைட்டி மெம்பர்கள் மூரேய் வகுப்பார், மற்றையோர் கோஸிகள். இந்த ஸொஸைட்டிகளின் பஞ்சாயத்தார், யாரேனுமொருமெம்பர் ஸொஸைட்டி விஷயத்தில் விசுவாசகாதகம் செய்தால், அவன் அந்தத் தோஷத்தைப் பரிகரித்து, கடன் தொகையைச் செலுத்தும்வரை அவனை ஜாதிக்குப் புறம்பாக்கிவைப்பதென்று தங்களுக்குள் தீர்மானித்திருக்கிறார்கள். ரிபோர்ட்டு எழுதிய வருஷத்தில், (மேற்கண்ட ஜாதிக்கொன்றாக) இரண்டு கேசுகள் ஆயின. இரண்டு பெயரும் ஸொஸைட்டிக்குக் கொடுக்கவேண்டிய பணம் செலுத்தும்வரை ஜாதிக்குப் புறம்பாக நின்றார்கள்".

ஆர்ந்தி ஸொஸைட்டி ஜாதிக்கட்டுக்குட்பட்டதல்ல. என்றாலும் அதன் மெம்பர்கள் இழிகுலத்தாராகிய இந்துக்கள். இப்பொழுது மகம்மதியராகி யிருப்பவர். ஆதலால், மெம்பர் ஸொஸைட்டிக்குக் கொடுக்கவேண்டிய கடனைச் செலுத்தும்வரை ஜாதியில் சேர்க்காமலிருக்கும் வழக்கம் அவர்களுக்குள்ளும் இருக்கிறது. இந்த ஸொஸைட்டியில் ஒரு அதிசயம் நான் கண்டுகளித்தேன். அதாவது, பஞ்சாயத்தார், பகீர்—உத்—தீன் என்னும் ஒரு விடுதலைக்கைதியைப் போலீசார் எப்போதும் குறிப்பிட்டிருப்பதையறிந்து, அவனைத்தருவித்து ஒருவருஷம் யோக்கியனாக இருக்கும்படிக்கும், இருந்தால், பிறகு அவனை மெம்பராக்கிக் கொள்ளுவதற்காகவும் சொன்னார்கள். பக்கீர்-உத்-தீனும் அப்படியேசெய்ததால், இப்போது அவன் ஸொஸைட்டி மெம்பராகியிருக்கிறான். இனிமேல் குற்றமொன்றுஞ் செய்வதில்லையென்று அவன் வாக்குக்கொடுத்ததன் பேரில் தான் அவனுக்கு இந்தப்பெருமை கிடைத்திருக்கிறது. இப்போது அவன் நல்ல கிரகஸ்தக் குடியானவனாக வேளாண்மைசெய்துகொண்டு, ஒருவருக்கும் தீங்குவிளைவிக்காமலிருந்து வருகிறான்."

" கடைசியாக, பஞ்சாயத்தார் ஜாமீன்பேரில் கடன்கொடுப்பது வெகுநன்றாய் நடந்து வருவதை நான் குறிப்பிடவேண்டும். இந்த வருஷம் ஒரு கோஸி மெம்பர் பாங்குக்குப்பணங்கொடுக்க வேண்டியிருந்த நிலை, தன் ஆஸ்திையெல்லாம் மெடுத்துக்கொண்டு அந்தப் பிராந்தத்தைவிட்டு ஓடுவதாக இருந்தான். ராத்திரியில் தப்பித்துக்கொண்டு போவதாக அவன் உத்தேசம். ஆனால் பஞ்சாயத்தாரும் உஷாராக இருந்ததனால், கொடுக்கவேண்டியதைக் காசுகுறையாமல் செலுத்தும்வரை அவனைப்போகவொட்டவில்லை. இவ்வளவு ஜாக்கிரதையும் ஆக்கிரகமும் மார்வாடி அல்லது ஜமீன்தாருடைய ஆள்களுக்கிருக்கவேமாட்டாது".

மேற்கண்டது கோஆபரேஷனுக்கும், ஜனங்கள் கூடிப்பொறுப்பை வகிப்பதற்கும் ஏற்ற உதாரணம். கடன்களை வாப்ஸ்வாங்குவதில் பஞ்சாயத்தார் அது தங்களுடைய பொறுப்பு என்று நினைத்துக்கொள்ளுவது வெகு சிலாக்கியம். ஆனால் பணம் கடனாகக் கொடுக்கவேண்டி வருகையிலும் மெம்பர்கள் அனேகமாய் எல்லோரும் சேர்ந்து, அந்தப்பணம் வருமென்று நம்பினாலொழியக் கடன் கொடுப்பதுமில்லை, என்பது இன்னும் விசேஷம்.

பஞ்சாப் ரிஜிஸ்திராரும் இதேமாதிரி உறுதி கூறுகிறார். 1906-7 ம் வருஷத்திய அவருடைய ரிபோர்ட்டிலிருந்து பின்வரும் பகுதியைப்பார்க்க.

"ஸொஸைட்டிகளிலெல்லாம் சிறந்ததும், திறமானதும் எதுவென்றால், ஒரே கிராமத்தில் மட்டும் வியாபாரத்தை வைத்துக்கொண்டோ, (அல்லது கிராமம் பெரிதாக இருந்தால்) அதன் பகுதியொன்றில் மட்டும் வைத்துக்கொண்டோ, நடத்து வருவதாம். (ஏனெனில்,) இப்படி நடந்து வருமளவும் அதை நிர்வகிப்பது சுலபம். நிர்வாகமும் திறமாய் நடக்கும். ஸொஸைட்டி மெம்பர்களுடைய சகல ரகசியங்களும் கம்மிட்டியாருக்குத் தெரியும். இது கொண்டும், அயோக்கியன் விஷயத்தில் சாமான்னிய ஜனங்களுக்கு ரோஷம் வெகுவாவது கொண்டும், 'வாராக்கடன்' விசேஷமாக இருப்பதே அபூர்வம். கடன்வாங்குவது (யோக்கியனுக்கு) வெகு சுலபம். டிபாசிட்டுகளும் நிர்ப்பயமாக வரும். கடன் வாங்குவதற்கோ, அல்லது சில்லரைகளை டிபாசிட்டு வைப்பதற்கோ, குடியானவர்கள் அனேகமாய் 2-மைல் தூரம் போகவேண்டியிராது. ஒரு கிராமத்திற்கு அதிகப்பட்டு வியாபாரம் நடத்திவரும் ஸொஸைட்டிகளெல்லாம், காலக்கிரமத்தில் ஒவ்வொன்றாகப் பிரிந்து விடுமென்றே நான் நம்புகிறேன். இது சுலபமாய் ஆவதற்காக நான் எல்லா ஸொஸைட்டிகளையும் ஒரு விசேஷ விதி யேற்படுத்திக் கொள்ளும்படி சொல்லியிருக்கிறேன். இதனால் ஒரு மவுஜே கிராமத்திற்குச் சம்பந்தப்பட்ட மஜராக்களில் எது வேண்டுமானாலும் தனியாக ஸொஸைட்டி யுண்டாக்கிக் கொள்ளலாம். மெம்பர்கள் கொடுக்கும் பங்குத்தொகை, டிபாசிட்டு முதலியவைகளை அது வாங்கிக்கொள்ளலாம். லாபத்தில் தங்களுக்குள்ளதை மூலசபையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். இப்பொழுதிருக்கிற ரீதிக்கு, ஸொஸைட்டிகளிலெல்லாம் சிறந்தவை ஒரே கிராமத்தில் வியாபாரம் நடத்தி வருபவையாம். இம்மாதிரி "ஸொஸைட்டி ஒன்று நன்றாக நடக்கக்கூடாத கிராமமே இல்லையாதென்னலாம். (கிராமம் எவ்வளவு சிறியதாகிலும் அதற்குத்தக்கபடி யொரு ஸொஸைட்டி வெகு நேர்த்தியாக நடந்து வரலாம், என்றபடி.)"

7. ஒவ்வொரு கிராமத்தையும் எல்லைகட்டி, ஸொஸைட்டி உண்டுசெய்வது அத்தியாவசியமென்று ரிபோர்ட்டு செய்வதில், இன்ஸ்பெக்டர், கிராமங்களின் க்ஷேமலாபத்தை யிவ்வாறு வர்ணிக்கிறார்:—

குடியானவரெல்லோரும் ஏழைகள். (ஆதலால்) அவர்கள் நாட்டுக்கோட்டைச்செட்டியென்னும் அனியாய வட்டி வாங்கும் சாவுகாரிடம் போகவேண்டி வருகிறது. இவன் இந்த மூன்று வருஷத்திற்குள், தாலூக்காவிலுள்ள அப்பாவிக்குடிகள் அனேகரை ஓட்டாண்டிகளாக்கிவிட்டான். அடியிற் காணுவது இவனுடைய லேவாதேவி முறைகளில் ஒன்று. ரூபாய் 100, ஒருவனுக்கு 10-மாதத்திற்குக் கடனாகக் கொடுக்கப்படுகிறது. வட்டி பேருக்கு மட்டும் 100-க்கு வருஷத்திற்கு 12-வீதம். ஆதலால் ரூ. 10, (என்றால், ரூ 100-க்குப் பத்து மாதத்திற்குக் கூடியவட்டித்தொகையை,) அப்பொழுதே எடுத்துக்கொண்டு மீதி ரூ. 90-தான் வாங்குபவனுக்குக் கொடுப்பது. கடன் வாங்குபவன் ரூ. 100-ம் பத்துத்தவணைகளில் மாதம் 10 ரூபாயாகக் கொடுக்கவேண்டியது நிபந்தனை. ஒவ்வொரு தவணையும் அமாவாசைதினம் பணம் செல்லவேண்டும். தவறினால், தாமதப்படும் ஒவ்வொரு நாளைக்கும் ரூ 1-க்கு பைசா 3-வீதம் ஷரத்து வட்டி யேற்படும். இதைக்கணக்குப் போட்டால் 100-க்கு வருஷம் 1-க்கு 670-க்கு [illegible]! குடியானவனுக்கு மாதாந்தரச் சம்பளம் ஒன்றுமில்லையென்பதும், [illegible] மாதம் மாதம் தவணைகளில் சரிவரச் செலுத்துவது அவனால் ஆகாதென்பதும், [illegible] தெரியும். ஆனால் மாதம் தவறாமல் பணம் செலுத்தாவிடில் [illegible] என்று அவன் நிர்ப்பந்திப்பதில்லை. ஆகவே பெரும் [illegible] ஷரத்து [illegible] பணத்தை வசூலிக்கப்பெறுகிறான். ஆரம்பத்தில் [illegible]



ஷரத்துக்கு உடன்படாவிட்டால், அவனுக்கென்று வட்டி 100-க்கு 36 முதல், 45-வரை யேற்படுகிறது. வேறுவகையில் பணம் அவசரத்திற்குப் பெயருவதில்லையாதலால், ஜனங்கள் இம்மாதிரி நிஷ்கண்டக வியாபாரியிடம் போய்க் கடன்வாங்குகிறார்கள். நான் (ஸொஸைட்டி வேண்டிய) மனுவைக்கிரமப்படி வாங்கியதற்கும், இத்துடன் அனுப்பியிருக்கும் மசோதாவிதிகளை ஆக்கியதற்கும், குடியானவர் இம்மாதிரி ஒருவழியுமற்றுப் பிழைக்கமாட்டாமல் தவிப்பதே காரணமென்று அறிக்கையிடலானேன்."

8. சேலம் ஜில்லாவில் வேலூர் கிராமப்பாங்கில் ஏற்பட்டிருக்கும் விசேஷவிதி நெ/ 26-ன் படி, ஸொஸைட்டியிலிருந்து பெயரும் கடன்களுக்கெல்லாம் மாதம் 1-க்கு ரூ. 1-க்கு 1½-பைவட்டி விதித்திருக்கிறது. மாசத்தில் பகுதி வந்தால் அது பூரா மாதமாகவே பாவனை. கொடுப்பது, கொள்வது இரண்டிற்கும் இதுவேவிதி.

31-வது விதியானது, கடன் தகாதா பைசலானபின், ஷரத்து வட்டி ஏற்படும் மாதிரியைக்காட்டுவது. இதன்படி வருஷம் 100-க்கு 12-வீதம் ஷரத்துவட்டி யேற்படுகிறது. இது கெடுத்தேதிமுதல் பணம் செல்லாகிற தேதிவரை விதிக்கப்படும். 30-வது ரூல்படி நிர்வாக சபையார் கெடுவானவுடன் தகாதாவைப் பைசல் செய்துவிடலாம். அல்லது அவர்களுக்கு யுக்தமென்று கண்டால், கெடுதீர்ந்து ஒரு மாதத்திற்குள் பைசல் செய்து விடலாம்.

வேலூர்பாங்கில் ரூல் 26-ன் படி, சாமான்னிய வட்டியும், ஷரத்து வட்டியும் வசூலாகிறது. ஆனால் ரூல் நெ/26-ம், 31-ம் கொஞ்சம் சந்தேகத்திற்கு இடங்கொடுத்தபடியால், அதற்கு அர்த்தம் விளக்கவேண்டுமென்று கேட்டதில், ரிஜிஸ்திரார் பாங்கு நிர்வாகசபையார் செய்தது சரியல்லவென்று தீர்மானித்து விட்டார். இந்த இரண்டு ரூல்களையும் எப்படி ஜாரிக்குக் கொண்டுவரவேண்டுமென்பது பின்வரும் குறிப்புகளால் விவரமாகும்:—

ஒரு மெம்பர் பிப்ரவரி 23-ம் தேதி ரூ 48-வாங்குகிறார். ஆகஸ்டில் வட்டிகொடுக்க வேண்டியதைச் செலுத்துகிறதில்லை 26 வது ரூல்ப்படி பிப்ரவரியில் சில நாள்கள் மட்டுமேயிருந்தாலும் மாசம் பூராகவாகத்தான் வைத்து வட்டிவாங்கவேண்டும். ஆதலால் பிப்ரவரிக்கு வட்டி ரூபா 0-6-0; அப்படியே மேல்நடக்கும் 6 மாதங்களுக்கும். ஆகஸ்ட்மாதம் 23-ம் தேதி கெடுத்தீருகிறது. 30-வது ரூல்ப்படி கம்மிட்டியார் ஆகஸ்ட்டு 31வது தேதிவரை வேண்டுமானால் பார்க்கலாம். தகாதாவைப்பிறகு பைசல் செய்யலாம். ஆகஸ்டு 31-ம் தேதியில் வரவேண்டிய மொத்தம் ரூ. 50-10-0. 31-வது ரூல்படி இந்த மொத்தத்தைக் கடன்மொத்தமாக்கி இதற்கு ஷரத்துவட்டி வாங்கவேண்டும்.

ஆனால் சில சந்தர்ப்பங்களில் கம்மிட்டியார் கடனாளியின் சௌகரியத்தைக் கவனித்துத் தாமதிப்பதற்கு மனமில்லாமல், வாய்தாவானவுடன் கணக்குப் பைசல்செய்துவிடவேண்டுமென்று வரலாம். மேற்கண்டகேஸில், ஆகஸ்டு 24-ம் தேதி யன்றைக்கே கணக்குப் பைசல்செய்து, கடன்மொத்தம் ரூ. 50-10-0 ஆக வைத்துக்கொண்டு, 24-ம் தேதிமுதலே அதற்கு ஷரத்து வட்டி கூட்டலாம். ஷரத்துவட்டி விதிப்பதில், பணம் செல்லாகும்வரை எத்தனைகாலம் வாஸ்தவத்தில் கழிகிறதோ அதற்குமட்டும் கணக்கேதவிர, மாதப்பகுதிகளைப் பூராவாகப்பாவித்துக் கணக்குப் போடுவதில்லை. சாமான்னிய வட்டிக்கோவென்றால், (மேற்சொல்லியபடி) முறைவேறாகும்.

9. அனேகமாய் எல்லா ஸொஸைட்டிகளிலும் ஒரு மெம்பருக்குக் கொடுக்கக் கூடியகடன் மொத்தம் இவ்வளவென்றுகாட்டும் விசேஷவிதியில் சமான்னியமாய்ப்பங்கு 1க்கு இவ்வளவு ரூபாய்வரையென்று நியமம் காணுகிறது. ஆனால் வழக்கத்தில் பஞ்சாயத்தார் எவ்வளவு கொடுக்கலாமோ அவ்வளவையும் கொடுக்கலாமென்று சிபார்சு செய்து வருவதுதான் ரிஜிஸ்திரார் அனேகமாய்க் குறிப்பிடுவது. இது ரூலுக்குவிரோதமில்லாவிட்டாலும் நிதிக்கு க்ஷேமகரமன்று. ரூலின்படி நாமறியவேண்டியதெல்லாம் கடன்தொகை இவ்வளவிற்கு மேற்படக் கூடாதென்பதேயாம். கடன்வாங்கும்போது இவ்வளவுவேண்டுமென்பது கடனாளியின் அவசரத்தைப் பொறுத்தது. (இவ்வளவு கொடுக்கலாமென்பதோ) வாங்குபவன் தான்சொல்லுகிறபடியே நடந்து, குறித்தகாரிய விஷயமாகவே அதைச்செலவழிப்பானென்கிற நிச்சயம் கம்மிட்டியாருக்கிருப்பதை யனுசரித்தது. கடனாளி எந்தகாரியத்திற்காக வாங்குகிறானென்பதையும், வாங்கினதை எப்படி உபயோகிக்கிறதாக உத்தேசமென்பதையும், உள்ளபடி சொல்லும்படிப் பஞ்சாயத்தார் அவனுடன் போராடவேண்டும். குறித்த காரியத்திற்கு அவன் கேட்கும்தொகை அத்தியாவசியமா வென்பதையும் அவர்கள் கவனிக்கவேண்டும். பணம் அதிகமென்று கண்டாலும், பஞ்சாயத்திற்குத் தெரிந்தவரை கடனாளிக்கு வேறுவகைகளில் பணமுதவலாமென்று கண்டாலும், கேட்டபடி கடனைப் பூராவாகக்கொடுக்க ஒப்புக்கொள்ளக்கூடாது. கொடுத்தகடன்கள் பத்திரங்களிற் கண்ட காரியங்களுக்கே உபயோகப்படுகின்றனவா வென்றும் பஞ்சாயத்தார் இடைவிடாமல் 'சூக்ஷித்து' வரவேண்டும். கோஆபரேடிவ் ஸொஸைட்டி க்ஷேமமாயிருக்க வேண்டினால், அதற்கு மூலாதாரமாகப் பஞ்சாயத்தாருடைய சொத்துகளும் க்ஷேமமாயிருக்கவேண்டிவருவதால், நாம் மேற்சொல்லிய குறிப்புகளை அவர்கள் வெகு ஜாக்கிரதையாகக் கவனிக்க வேண்டும். அவ்வளவிற்குத்தான், இரண்டும் பதனமாயிருக்கும்.

10. ஏற்பட்டுக்கொஞ்சகாலமாகியும், சிலஸொஸைட்டிகள் உள்ளூர் டிபாசிட்டுகளைக் கவர்வதற்குப் பிரயத்தனமொன்றும் செய்யாமல், பணம்வேண்டிய போதெல்லாம் ஸெண்ட்ரல் பாங்குகளுக்கு எழுதுவதைப்பார்க்குமிடத்து ரிஜிஸ்திராருக்கு விசாரமுண்டாகிறது. கோஆபரேடிவ் ஸொஸைட்டியானது செய்யவேண்டிய முக்கியகாரியங்களில் ஒன்று மெம்பர்களுக்குள் செல்வம் செழிக்கும்படியான மார்க்கத்தைத் தெரிவிப்பதாம். இனிமேல், யாதேனுமோர் ஸொஸைட்டி ஏற்பட்டு இரண்டு வருஷமாகியபின்னும் நபர் 1க்கு ரூ. 50 அல்லது குறைந்த தொகைகளாக வருஷத்தில் ரூபாய் 100, ஆகிலும் டிபாசிட்டாக வரவழைக்க முடியாவிட்டால், அதற்கு ஸெண்ட்ரல் பாங்கிலிருந்து பணம் கொடுக்கும்படி ரிஜிஸ்திரார் சிபார்சு செய்யமாட்டார். இதற்குத்தாற்பரியமென்னவென்றால், ஏழைக்குடியானவனுடையவும், ஏழைத்தொழிலாளியுடையவும் சில்லரை மிச்சங்களை ஸொஸைட்டியில் டிபாசிட்டு வைக்கும்படி கம்மிட்டியார் உழைக்க வேண்டும். ஆதலால் ஸொஸைட்டிகள் கடன் வேண்டுமென்று மனுச்செய்து கொள்ளும்போது, இந்தச்சஞ்சிகை 2-ம் நெம்பரில் 60-வது பக்கத்தில் காணும் விஷயங்களை விவரிப்பதுடன், ரூ 50, அல்லது குறைந்த தொகைகளாக எத்தனை நபர்கள் டிபாசிட்டு வைத்திருக்கிறார்களென்றும், மொத்தம் டிபாசிட்டு எவ்வளவென்றும் விவரிக்க வேண்டும்.

11. ஸெண்ட்ரல் பாங்குகள் 100க்கு $7\frac{1}{2}$வீதம் வட்டிக்குப் பணம் கொடுக்கின்றன. ஸொஸைட்டிகளோ, தங்களுடைய விசேஷ விதிகளின்படி டிபாசிட்டுகளுக்கு இம்மாதிரிவட்டி விதிப்பதற்கில்லை. என்றாலும் ஸொஸைட்டிகள் 'மற்றவைகள்' என்னும் தலைப்பில் இம்மாதிரி வட்டிவீதித்துப் பணம்பெற்றுக்கொள்ளுவதில் ரிஜிஸ்திராருக்கு ஆக்ஷேபமொன்றுமில்லை. ஆனால் பணம் சகாயம் செய்பவர்கள் ஸெண்ட்ரல் பாங்குகள்



எப்படியெல்லாம் ஸொஸைட்டிகளுக்கு உபகரிக்கின்றனவோ, அப்படியெல்லாம் உபகரிக்கவேண்டும். முதலாவது, கடன் வாங்கும் ஸொஸைட்டிக்கு, வாங்கிய மொத்தத்தில் எந்தப்பகுதியை வேண்டுமானாலும் வாப்ஸ் கொடுத்து விடுவதற்கு உரிமைவேண்டும். இரண்டாவது, கொடுப்பவர் இரண்டுவருஷம் கெடுவாவதற்கு முன் கொடுத்த தொகையில் எந்தப் பகுதியையும் வாப்ஸ் வேண்டி நிர்ப்பந்திக்கக்கூடாது. மூன்றாவது, இந்தக்கெடுத்தீர்ந்த பின்னும் கொடுத்தவர் (ஸொஸைட்டிவேண்டினால்) வாய்தா கூட்டிப் புதுப்பிப்பதற்குச் சாதாரணமாய் இணங்கவேண்டும். ஸொஸைட்டியும் இந்தக்கடனுக்கு வட்டியைக் கெடுக்களில் தவறாமல் செலுத்தியும், கொடுக்கவேண்டியகடன் மொத்தத்தில் பத்திலொரு பாகமாவது இச்சந்தர்ப்பத்தில் கொடுத்தும் விடவேண்டும். ரிஜிஸ்திரார் இம்மாதிரி பத்திரம் புதுப்பிக்க வேண்டியது சரியென்று சிபார்சு செய்யவும் வேண்டும். இம்மூன்று அங்கங்களும் இதற்கு இன்றியமையாதவைகளாம். ஆனால், டிபாசிட்டு வகையானாலும், வேறு எவ்வகையானாலும், ஸொஸைட்டிகள் கடனாக வாங்குவதற்கு 100-க்கு $7\frac{1}{2}$-க்கு மேல் வட்டி யாது காரணங் கொண்டும் அதிகரிக்கலே கூடாது.

12. திண்டிவனம் அர்பன்பாங்கின் 1908-9-ம் வருஷத்திய ஆடிட் ரிபோர்ட்டை அனுப்புவதில் இன்ஸ்பெக்டர் இவ்வாறு எழுதுகிறார்:—

கடன் இன்னத்திற்காகக் கொடுக்கப்பட்டதென்பதை, ஒவ்வொரு இசம்வாருக்கும் கடன் லெட்ஜரில் எழுதியேயிருக்கிறது. நிர்வாகக் கம்மிட்டியார் சாமான்னிய மெம்பர்கள் விஷயத்தில் உஷாராகவே யிருக்கிறார்கள். வாங்கியகடன் சொன்னப்படி உபயோகப்படும்படியாகவே அவர்கள் பார்க்கிறார்கள். கடன் வாங்கும் மெம்பர் அந்தத்தொகையைக்கொண்டு தன் பழங்கடனை தீர்க்கவேண்டி வாங்கினால், அந்தப்பழங்கடன்காரனைப் பாங்குக்காரார்தருவித்து, பாங்கு ஆபீசிலேயே அந்தக்கடனைச் செலுத்திப்பத்திரம் வாப்ஸ்வாங்கி அதைக்கடனுக்காக விண்ணப்பம் வந்திருப்பதுடன் சேர்த்து விடுகிறார்கள்.

13. ஒரு ஸொஸைட்டி ஏதேனுமோர் வருஷத்தில் செய்தவேலைக்காக சிரமதக்ஷிணைத்தொகையேற்படுவதை இன்ஸ்பெக்டர்கள் அனேக கேசுகளில் அதை அந்தவருஷமாக வேண்டியசெலவாக எண்ணி அந்த வருஷம் கடைசிநாளில் சிப்பந்திச்செலவென்று காட்டுவதை ரிஜிஸ்திரார் பார்த்து வருகிறார். இது சரியன்று. ஏனெனில், வருஷம் முடிந்த பிறகு (அடுத்த வருஷமுதலில்) பட்டவாடா ஆகவேண்டிய பணத்தை முடிவாகிற வருஷக்கடைசிநாளில் செல்லாகவேண்டிய பணமாகக் கணக்கெழுதுவது தப்பு. இந்த சிரமதக்ஷிணை வேண்டுமென்று சிலசமயங்களில் இன்ஸ்பெக்டர் சிபார்சு செய்கிறார். சிலகேசுகளில் மெம்பர்கள்கூடி மகாசபையார் பிரேரேபிக்கிறார்கள். வேறு கேசுகளில் ஸொஸைட்டியின் விசேஷவிதிகளிலேயே இதற்கு இடமிருக்கிறது. எந்த விதமாயாகிலும், இந்தவகையில் தொகை பட்டவாடா செய்வதற்கு ரிஜிஸ்திரார் சம்மதம் முன்னாடிப் பெறவேண்டும். ஏனெனில் ஆடிட் விஷயத்தில் அவருக்குத்தான் கடைசி பக்ஷத்தில் அதிகாரம். அவருடைய சம்மதமோ, எந்தவருஷத்துச் சம்மானம் வேண்டி வருகிறதோ, அது கழிந்தபின்தான் கொடுப்பது சாத்தியம். ரிஜிஸ்திரார் இந்தச்செலவைச்செய்யலாமென்று ஒப்புக்கொண்டபின், அந்த உத்தரவு எந்த வருஷத்தில்கிடைக்கிறதோ, அந்த வருஷத்திலேயே அதைச் செலவுசெய்து அந்தவருஷத்திய செலவாக அதைக் கணக்கெழுதவேண்டும். அந்தவருஷ ஆகைருக்குள் அது செலவாகாவிட்டால், அப்பொழுதுதான் அதை அந்த வருஷத்தில் கடைசிதினத்தில் ஆகவேண்டிய செலவா

கக்காட்டக்கூடும். இதே முறைப்படித்தான், பங்குக்காரர், நிர்வாகசபையார் ஆகிய இவர்களுக்குச் சேரவேண்டிய சம்மானங்களும், லாபவீதங்களும், கணக்கில் தாக்கலாக வேண்டும்.

14. 1904-ம் ௵ செப்டம்பர் 30-ம் தேதி எஸ். ஆர். நெ. 6220 கொண்ட இந்தியா கவர்ன்மெண்டு விளம்பரப்படி, 1904-ம் வருஷத்திய இந்தியா சட்டம் 10-வதின்படி ரிஜிஸ்தரான கோஆபரேடிவ் நாணயச்சங்கத்திற்கு எழுதிக்கொடுக்கும் அடமானதஸ்தாவேஜுகளுக்கு அவைகள் அந்தப்பாங்கு மெம்பர்களால், அதிலிருந்து வாங்கும் பணத்திற்கு, எழுதிக்கொடுப்பவைகளானால், அந்தந்தக்காலங்களில் ஜாரியிலிருக்கும் ஸ்டாம்புச் சட்டப்படிகொடுக்கவேண்டிய சாபாகாகிதச் செலவு கொடுக்கவேண்டியதில்லையென்று ஏற்பட்டிருக்கிறது. ஸொஸைட்டிகளுக்கு அடைவுவரும் ஸ்திதிகள் அவிபக்தமாயிருந்தால், அந்த அடைவுபத்திரம் எழுதுவதில், கடன்வாங்கும் மெம்பரோடு மற்ற பாத்தியஸ்தரும் சேர்ந்து கையொப்பமிடவேண்டுமென்று, ஸொஸைட்டி (நிர்வாகிகள்) அனேகமாய் வேண்டுகிறார்கள். இந்தப்பாத்தியஸ்தரும் மெம்பர்களானால் அவர்கள் ஒருங்குசேர்ந்து அடைவுவைப்பதாகவோ, அல்லது கடனாளிக்கு ஜாமீன்தாராகவோ, பாவிக்கலாம். இருவகையிலும், பத்திரத்திற்கு ஸ்டாம்பு செலவில்லை. மற்றபக்ஷத்தில், கூட்டுபாத்தியஸ்தர்கள் மெம்பராகாமலிருந்தால், அவர்கள் இந்தப்பத்திரத்தில் ஜாமீன்தாராகமட்டுமே சேரலாம். அப்படிச் சேருவதுதான் மேற்குறித்த விளம்பரத்திற்கு அனுசாரமாகும்.

இந்தக்கேசில் இதர பாத்தியஸ்தர், கடனாளி கையொப்பமிட்டான பிறகு பத்திரத்தில் தங்கள் கையொப்பங்களைப் பின்வருமாறு இடவேண்டும்:—

(கையொப்பம்) ஏ. பி. கடன்வாங்குபவர் "மேற்படியாருக்கு ஜாமீன்தாராக நாங்கள் அடியிற் கையொப்பமிடுகிறோம்".

| | | |
|---|---|---|
| (1) கூட்டுபாத்தியஸ்தர் | (1) ஸி. டி. | ஜாமீன்தார். |
| (2) ,, | (2) ஈ. எப். மற்றவர்களும். | |
| ,, | ,, | |

இப்படிச் செய்யாவிட்டால் ஸ்டாம்பு கட்டணம் கொடுக்காததற்காகப் பத்திரத்தை மாஜிஸ்ரேட்டார் கைப்பற்றி நடவடிக்கை நடத்தி விடுவார்கள். பங்காளிகள் மெம்பர்களல்லாவிட்டால், அவர்களுடைய பாகங்களை ஸொஸைட்டிக்கு அடைவாகக் கொடுப்பது சாத்தியமன்று.

# இன்ஸ்பெக்டர்களுக்கு.

---

கிராமப்பாங்குகள் ஆரம்பமாக வேண்டியதில், கிரமம் தெரிவதற்காகப் பின்வரும் குறிப்புகள் பிரசுரிக்கப் பட்டிருக்கின்றன:—

1. ஏதேனுமோர் ஸொஸைட்டி ரிஜிஸ்தரானதாக இன்ஸ்பெக்டருக்குச் சங்கதி தெரிந்ததும், ரிஜிஸ்திரார் கச்சேரியிலிருந்தோ அல்லது யாருக்கு அனுப்பப்பட்டதோ அந்த உத்தியோகஸ்தரிடமிருந்தோ, அவருக்கு நடவடிக்கைப் புஸ்தகமும் வரும். அவர் தனக்கு இந்தக் கிராமத்திற்கு எப்பொழுது போவது சாத்தியமென்று ஜாக்கிரதையாய்க் கவனித்து, முக்கியக் கையொப்பக்காரருக்கு முன்னடியே எழுதித் தெரிவிக்க வேண்டும். இப்படி இவர் குறிக்கும் முகூர்த்தம் சரிப்படாதென்று அவர்கள் 'உறைப்பான' காரணங்கொண்டு ரூபிக்காதவரை, குறித்த முகூர்த்தத்தில் அவர் தப்பாமல் அங்கு போகவேண்டும். அந்தக் கிராமத்தியவரல்லா விட்டாலும், அந்த ஸொஸைட்டி விஷயத்தில் யாருக்காகிலும் சிரத்தையிருந்தால், அவருக்கும் எழுதித் தெரிவித்து, நடக்கும் காரியங்களை அவரும் வந்திருந்துபார்க்கும்படி சௌகரியம் செய்யவேண்டும். சேலம் ஜில்லாவில், ஜில்லா பாங்குக்காரருக்குத் தெரிந்தே காரியமாக வேண்டும். 'பெருமாள் செட்டி அண்டு ஸன்ஸ்' என்கிற கம்பெனியாருக்கும் இன்ஸ்பெக்டர் வேண்டிய சாவகாசங்கொடுத்து எழுதி, ஸொஸைடிக்கு வேண்டும் கணக்குப் புஸ்தகங்கள் வரவழைக்க வேண்டும். எழுதுவதில், புஸ்தகங்கள் யாருக்கனுப்பவேண்டுமோ அந்த உள்ளூர்க்கிரகஸ்தருடைய விலாசமும் அவர்களுக்குத்தெரிவிக்க வேண்டும். புஸ்தகங்கள் எந்த மார்க்கமாய் இவர்கைவந்து சேருமோ அதையும் தெளிவாய்த் தெரிவிக்கவேண்டும்.

2. கிராமத்திற்குப் போவதற்கு இரண்டு நாளைக்குமுன், இந்தக்காரியத்தில் அக்கறையுள்ள கிராம முக்கியஸ்தருக்கு இன்ஸ்பெக்டர் மறுபடி ஞாபகமூட்டியெழுத வேண்டும்.

3. கிராமம்போய்ச் சேர்ந்ததும் இன்ஸ்பெக்டர் தன் வரவையும், வந்த காரியத்தையும் பகிரங்கப்படுத்த வேண்டும். எல்லாருக்கும் கிரமப்படி நோட்டீசு கொடுத்து, சௌகரியமான காலத்திலும், இடத்திலும் ஒரு மகாநாடு கூட்டவேண்டும். மகஜர்தார்களில் கிராமத்தில் ஆஜரிருக்கும் எல்லோரையும் அவ்விடம்வந்துசேரும்படி செய்ய வேண்டும். கிராமத்தவரில் வேறுயார் வேண்டுமானாலும் நடப்பதைப்பார்க்க வரலாம். அவர்களை விலக்குவதற்கு மாறாக, கிராமத்தவரில் அனேகமாய் யாரை யெல்லாம் வரவழைக்கலாமோ, அவரெல்லோரையும் இன்ஸ்பெக்டர் வரும்படி செய்யவேண்டும். சபையில் மகஜர்தார்கள் ஒரே கூட்டமாக உட்காரவேண்டும்.

4. கூடியவுடன், ஆஜரிருக்கும் மகஜர்தார்களில் ஒருவரை அந்தச் சபைக்கு அக்கிராசனாதிபதி யாக்கவேண்டும். பிறகு இன்ஸ்பெக்டர் ரிஜிஸ்தர் சர்டிபிகேட்டைப் படிக்கவேண்டும். இதானவுடன், அனாவசியமான சில்லரை விஷயங்களை யொழித்து, இன்ஸ்பெக்டரானவர், கோஆபரேடிவ் ஸொஸைட்டியின் வியாப்தியைச் சுருக்கிப்பின்வருமுறையில், வந்திருப்பவருக்குச் சொல்லி விளக்கவேண்டும்.

சாமான்னியக் குடித்தனக்காரன் தன் ஜீவனார்த்தமாகப் பணம் கடனாக வாங்கியே தீரவேண்டியிருக்கிறது. தனக்கு வேண்டிய பணத்திற்கு ஈடு ஏராளமாயிருந்தாலும், பெரிய மிராசுதாரனிடம் போய்ப்பணம் வாங்குவது சுலபமன்று. ஏனெனில், இவன் வேண்டும் தொகை சொற்பமாதலால், அவர் இதற்காக சிரமப்பட்டு விசாரித்துத் திருப்தி செய்துகொண்டு கொடுப்பதில்லை. ஆதலால் உள்ளூர் செட்டியிடம் போய் அவன் சொன்னபடியெல்லாம் இவன் ஆடவேண்டியவனாகிறான். இப்படியாவதில் செட்டியாருக்கு அநியாயவட்டி கொடுக்கவேண்டி வருகிறது. கோ ஆபரேடிவ் ஸொஸைட்டியின் நோக்கமெது வென்றால், குடியானவர் ஏழைகளாயினும், யோக்கியராயிருந்தால், அவர்களுக்கு வட்டி சகாயமாக அவசரங்களுக்குப் பணம் உதவுவதாம். வியாபாரம் இந்த விஸ்தீரணத்திற்குட் பட்டேத்தானென்று எல்லை யிட்டிருக்கிறது. பாங்கு காரிய நிர்வாகிகளோ, (பஞ்சாயத்தார்) உள்ளூர்க்காரர். ஆதலால், அவர்களுக்கு அவ்விடத்திலுள்ள சகலரையும் நன்றாய்த்தெரியும். கொடுத்த கடன் வாராப்புள்ளியில் சேருமென்கிற சந்தேகமிருந்தால், அந்த நபர்களுக்குக் கடன்பெயராது. தவிர பாங்கின் க்ஷேமத்திற்காக வேறு நிர்ப்பந்தங்களும் உண்டு. கடன் கொடுப்பது ஆதாயம் கூடும் காரியங்களுக்குத் தானென்றும், பாங்கு சீர்குலைந்தால், அந்த நஷ்டத்திற்கு எல்லா மெம்பர்களும் கூடிப் பூராவாக ஜவாபுசெய்ய வேண்டுமென்றும், இரண்டு முக்கிய நிர்ப்பந்தங்கள் உண்டு. இந்த இரண்டாவது அம்சம் இரண்டு விதமாக உபகரிக்கிறது. பஞ்சாயத்தாரும் பூரா ஜவாபு செய்ய வேண்டியவர்களில் சேருவதால், கடன் கொடுக்க ஒப்புக்கொள்ளுவதில் ஜாக்கிரதையாகவே யிருக்கவேண்டியவராகிறார்கள். தவிர, பொறுப்பு எல்லாரையும் நிர்ப்பந்திப்பதால், மெம்பரெல்லோரும் பஞ்சாயத்தார் செய்துவரும் காரியங்களைத் தனிக்கைசெய்ய வேண்டும். அவர்கள் தலைகால்தெரியாமல் பணத்தை இறைத்தாலும், கடன் வாங்கியவர் சொன்ன காரியத்தை விட்டு வேண்டாக்காரியங்களில் (வாங்கிய) பணத்தைச் செலவழிப்பது தங்களுக்குத் தெரிந்தும், அதைக் கவனிக்காமலிருந்தாலும், அவர்களுக்கு எச்சரிக்கை யுண்டாக்கிப் பார்த்துவர வேண்டும். இவ்வாறு நடத்துவதில் பாங்கும் அதன் காரியமும் வெகுபத்ரமாகி விடுகிறது. ஆதலால் இப்படி நடந்துவரும் சங்கங்களில் மகாஜனங்கள் வெகு தாராளமாயப் பணம் போட்டு வருகிறார்கள். ஸொஸைட்டியின் போக்கு மட்டும் அவர்களுக்கு விளங்கவேண்டும். உள்ளூர் மகாஜனங்கள் ஒரு சமயம் உடனே பணம் போடவரவில்லை யாகிலும், ஸெண்ட்ரல் பாங்குகளிலிருந்து வேண்டியபணம் வாங்கலாம். பலர்கூடுவதால் ஸொஸைட்டிக்குப் பலம் கூடுகிறது. பொறுப்பு இவ்வளவென்றில்லாததால் எல்லா மெம்பர்களும் உஷாராயிருக்க வேண்டிவருகிறது. ஸொஸைட்டியின் காரியம் கலகமின்றி ஒரே மாதிரி நடக்கவேண்டியது அவசியமாதலால், துஷ்ட ஜனங்களும், வியாச்சிய வியவகாரங்களிலேயே பிரியமுள்ள ஜனங்களும், மெம்பராகவாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஸ்டாம்பு, ரிஜிஸ்திரேஷன் முதலிய விஷயங்களிலாகும் செலவுகளைச் சர்க்கார் தயவுடன் மாப்புசெய்திருப்பதை மெம்பர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

5. மேற்சொல்லிய முக்கிய அம்சங்களை விளக்கி, இன்ஸ்பெக்டர் சபையோருக்கு இவைகளில் ருசியும் ஆக்கிரகமும் உண்டாகும்படி செய்து, கேட்ட கேள்விகளுக்கெல்லாம் தாராளமாய்ப் பதில் சொல்லவேண்டும். பிறகு இன்ஸ்பெக்டர் ஸொஸைட்டியின் விசேஷவிதிகளை ஒவ்வொன்றாகப் படித்து, அவைகளுக்கு அர்த்தம் செம்மையாய் விளங்கச் செய்யவேண்டும். இதானபின், மெம்பர்கள் பெயர்வாரி ரிஜிஸ்தரையெடுத்து, அதில் பதிவுகள் செய்யவேண்டும். கழுனாவில் அதற்கென்றேற் பட்டிருக்கும் ஸ்தலத்தில், மகஜர்தார்களுடைய கையொப்பங்களை முதலில் வாங்கவேண்டும். சபைக்கு வந்தவர்களில் யாரேனும் மெம்பராகவேண்டுமென்றால், மகஜர்தார்களை மொத்தத்தில் கேட்டு இவர் வருவதில் ஆக்ஷேபமுண்டாவென்று அறியவேண்டும். அப்படியொன்றுமில்லாவிட்டால், இந்தப் புது மனுதாருடைய பெயரையும் ரிஜிஸ்தரில் பதிவுசெய்து அவர் கையொப்பமும் வாங்கவேண்டும். இதைவிட்டு, மகஜர்தார்களில் யாராகிலும் ஒருவர் ஆக்ஷேபித்தாலும், மனுதாரனுக்கு, அவருடைய மனுவை ஸொஸைட்டி நிர்வாகத்திற்காக ஏற்படும் பஞ்சாயத்தார் பிறகு விசாரிப்பார்களென்று சொல்லவேண்டும். மெம்பர்களில் யாரேனும் தற்குறியென்றால், அவரிடும் கீறலுக்குச் சாக்ஷியமாக அந்த மீட்டிங்கு அக்கிராசனாதிபதியோ, வேறு முக்கியஸ்தரோ, கையொப்பமிடவேண்டும். பங்குத்தொகையை வசூல் செய்வதற்கு ஸொஸைட்டியின் விசேஷவிதிகள் இடங்கொடுத்து, அதன்படி யாராகிலும் மெம்பர் பணங்கொடுத்தால், இன்ஸ்பெக்டர் அப்படி வரும் பணத்தை வாங்கி, வரவு செலவுக்கணக்கில் அதைப்பதியவேண்டும். இல்லாவிட்டால் கடைசிபக்ஷமாக மறுநாள் அந்தப் பணத்தைக் கொண்டுவரும்படி மெம்பர்களுக்கு அவர் சொல்லவேண்டும். இதற்கதிகம் தாமதமிருக்கக்கூடாது. இப்படியே பிரவேச தன விஷயத்திலும். இதற்கப்புறம் விசேஷவிதிகளை அனுசரித்துப் பஞ்சாயத்தாரை நியமிப்பது சரி. ஆனால் இந்த முதல் மீட்டிங்கிலேதானே பஞ்சாயத்தார் எல்லோரையும் நியமிப்பது அனாவசியம். கிராமத்தில் செல்வாக்குள்ள கிரகஸ்தர்கள் காலக்கிரமத்தில் சேருவார்களென்று இன்ஸ்பெக்டருக்கு நம்பிக்கையிருந்தால், பஞ்சாயத்தில் சில நபர்களைக் காலியாக வைத்திருப்பது நலம். மெம்பராகி யிருப்பவரில் உத்தமர்களாகவும், நிர்வாக சக்தி நன்றாகவும், நடத்தை விஷயத்தில் தோஷம் சொல்வது கூடாதாகவும், இருப்பவர்களாகவே பார்த்துப் பஞ்சாயத்தாரைச் சேர்க்கவேண்டும். இதன்பிறகு மெம்பர்களைக் கடன் வேண்டுமாவென்றும், வேண்டுமென்றால், எதற்காகவென்றும் கேட்கவேண்டும். இவைகளைக் குறிப்பிட்டுப் பிறகு பஞ்சாயத்தார் இந்தக்கடன் மனுக்களைப் பைசல் செய்வார்களென்று மெம்பர்களுக்குச் சொல்லிவிடவேண்டும். இதற்குப்பின் அன்றைய மீட்டிங்கு கலைந்ததாகச் சொல்லி யனுப்பிவிடவேண்டும்.



6. நடவடிக்கைப் புஸ்தகத்தில் இந்த மீட்டிங்கில் நடந்ததையெல்லாம் இன்ஸ்பெக்டர் எழுதிவிடவேண்டும். இதில் ஆஜரிருந்த மகஜர்தார்களுடைய பெயர்களையும், அக்கிராசனாதிபதி நியமனத்தையும், ரிஜிஸ்தரான சர்டிபிகேட்டு, விசேஷவிதிகள், இவற்றைப்படித்ததையும், புதிதாக மெம்பர்கள் சேர்த்ததையும், பணம் வசூலித்ததையும், பஞ்சாயத்தாரை நியமித்ததையும், குறித்தால் போதும். இந்தக்குறிப்புகளுக்கு அக்கிராசனாதிபதி கையொப்பமிடவேண்டும்.

7. மறுநாள் பஞ்சாயத்தார் கூடவேண்டும். அச்சமயத்தில் இன்ஸ்பெக்டரும் ஆஜரிருக்கவேண்டும். பிரசிடெண்டு மீட்டிங்கை நடத்தவேண்டும். இன்ஸ்பெக்டர் பஞ்சாயத்தாரை எச்சரித்து அடியிற்காணும் விஷயங்களில் அவர்கள் செய்யவேண்டிய தின்னதென்று விவரமாய்த் தெரிவிக்க வேண்டும்:—அவை

(a) புது மெம்பர்களைச் சேர்த்தல்,

(b) கடன் கொடுக்கும்படி நியோகித்தல்,

(c) கணக்குகள் வைத்தல்.

(8) a. கிரகஸ்த மார்க்கமாயிருப்பவர் மட்டுமே மெம்பராகக்கூடியவர். கக்ஷிபேசுபவர்களும், வியாச்சியத்திலேயே பிரியமுள்ளவரும் இதில் சேராமற் பார்க்கவேண்டும். பணக்காரனென்கிற ஒரே நியாயத்தினால் எவனும் சேரக்கூடாது. 'இழிகுலத்தாரை' த்தாராளமாகச் சேர்க்கவேண்டும். ஏனெனில் முதலாவது, அவர்களுக்குத்தான் கோஆபரேடிவ் ஸொஸைட்டி வெகு அவசியமாக வேண்டியது. இரண்டாவது, அவர்களுக்கு வேண்டியதெல்லாம் வெகு சொற்பம். ஆதலால் கொஞ்சம் பணமிருந்தாலும் அதைக்கொண்டு வெகு பெயருக்குத் திருப்தியுண்டாக்கலாம். பஞ்சாயத்தார் ஒருவரைச் சேர்ப்பதிலும், தள்ளுவதிலும், எவ்விதத் தாக்ஷிண்ணியத்திற்கும் கட்டுப்படுபவரல்லவென்பது எல்லோருக்கும் தெரிந்திருக்க வேண்டும். தவிர துஷ்டர்களைச் சேர்த்தோ, அவர்களுக்குக் கடன் கொடுத்தோ, வந்தால், அதனால் தங்களுடைய சொத்துக்கு வரும் அபாயத்தை (இன்ஸ்பெக்டர்) பஞ்சாயத்தாருக்கு நன்கு விளக்கவேண்டும். பஞ்சாயத்தார் நியமனமாவதற்கு முன் யார் மெம்பராக வில்லையோ, அவர்கள் இதற்குப் பிறகு மெம்பராக வேண்டினால், பஞ்சாயத்தாருடைய உத்தரவின் பேரில் தான் அவர்களுக்குச் சேருவதற்கு யோக்கியதை வரும்.

(b) எந்த மெம்பருக்கும் ஸொஸைட்டியில் கடன் கொடுத்தே யாக வேண்டு மென்கிற பாத்தியம் பாராட்டுவதற்கிடமில்லை. சொன்ன கெடுவில் பணத்தை வாப்ஸ்செய்ய மெம்பருக்கு யோக்கியதை யில்லையென்றோ, இஷ்டமிராதென்றோ, இன்ன காரியத்திற்கென்று சொல்லி வாங்கிய பணத்தை அக்காரியத்திற்கே பிரயோஜனப் படுத்தாரென்றோ, சந்தேகம் பஞ்சாயத்தாருக்கு எள்ளளவாகிலுமிருந்தால், அந்த மெம்பருக்குப் பணம் கொடுப்பதில்லை யென்று கண்டிப்பாய்ச் சொல்லி விடவேண்டும். மெம்பர் எவ்வளவு கடன் வாங்கலாமோ அவ்வளவும் கொடுத்துத்தான் தீரவேண்டு மென்பதுமில்லை. கடன் கொடுக்கலாமென்று உத்தரவு செய்வதில் பஞ்சாயத்தார் இந்த விஷயங்களைக் கவனிக்கும்படி (இன்ஸ்பெக்டர்) அவர்களுக்குப் போதிக்க வேண்டும்:—அவை.



i. மனுதாரனுக்கு மறுபடி பணம் வந்தவுடன் வாங்கிய கடனைக்கொடுத்து விடுவானென்று நம்ப இடமுண்டா ?

ii. சொன்ன காரியத்திற்காகவே வாங்கிய பணத்தைச் செலவிடுவானா ?

iii. சொன்ன காரியத்திற்காக அவன் கேட்டபணம் அவ்வளவும் அவனுக்கு அவசியமா ?

iv. அவனுடையதென்று அவன் மாரிபத்தில் வேறுபணம் இல்லையா ? ஸொஸைட்டியிலிருந்து ஏன் அவன் பணம் வேண்டுகிறான் ?

v. கேட்டதில் ஒரு பகுதிகொடுத்தால் போதாதா ?

vi. கடனாளி பணத்திற்கு ஈடாகக் காட்டுவது யாது ? ஜாமீன் என்றால், ஜாமீன்தார்யார் ? அவர்கள் பெறுமான புள்ளிகளா ? ஸொஸைட்டி விசேஷ விதிகளில் உத்தம பக்ஷமாகச் சொல்லியிருக்கும் பணத்தைவிட இவன் கேட்பது அதிகமாவதில்லையா? ஈடு பூஸ்திதியானால், பழைய வில்லங்கங்களேதாகிலுமுண்டா?

பணம் வாப்ஸ் வரவேண்டிய கெடுவை ஜாக்கிரதையாய் யோசித்துக் கட்டவேண்டும். விதைவாங்குவது போன்ற சில கேசுகளில், வாங்கிய பணம் வருஷம் முடியுமுன் மறுபடி கைவந்து சேருகிறது. இம்மாதிரி விஷயங்களில், கடனாளிக்கு வெகு சௌகரியமான சமயத்தில், வருஷம் நிறைவேறுவதற்குள் பணம் வாப்சு வரும்படி நிர்ப்பந்தம் ஏற்படவேண்டும். பொதுவாய்ப் பேசுமிடத்து, இந்தக்கெடுவை நீட்டி விடக்கூடாது. வேறு சில சந்தர்ப்பங்களில், அதாவது, பூமிவாங்குவது முதலியவைகளில் ஒரு வருஷத்திற்குள் வாங்கிய பணம் கைகூடாது. அப்பொழுது கெடு ஒருவருஷம் என்று பத்திரத்தில் கண்டாலும், கெடுத்தள்ளி வைப்பது சாத்தியமென்று கடனாளிக்குத் தெரிவிக்கலாம். ஆனால், அவன் ஸொஸைட்டியின் விசேஷ விதிகளில் (இம்மாதிரி விஷயங்களுக்கு) என்னென்ன நிர்ப்பந்தங்கள் காணுகின்றனவோ, அவைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும். தவிர மெம்பருடைய கடத்தை (பஞ்சாயத்தாருக்குத்) திருப்திகரமாயிருக்க வேண்டும்.

9. பஞ்சாயத்தார் பணங்கொடுக்கலாமென்று உத்தரவு செய்வதில், வெகுதூரம் ஜாக்கிரதையாக பார்த்துத் தான் செய்யவேண்டும். தங்களுடைய நடவடிக்கைகளை புஸ்தகத்தில் பதிவு செய்யவேண்டும். அதில் கொடுப்பதாக ஒப்பிய பணம் இவ்வளவு, இன்ன காரியத்திற்காக, வாப்ஸ்வரும் கெடு, ஈடு இன்னவகைத்து, ஜாமீன் இன்னார், முதலிய இவைகள் காணவேண்டும். பழங்கடன்களைத்தீர்க்க வாங்கியதென்றால் ரத்தாகிய பத்திரத்தை வாப்ஸ் வாங்கி இந்தக்கடன் வகைக்குச்சேர்ந்த மற்ற ரிகார்டுகளுடன் பஞ்சாயத்தார் ஜாக்கிரதையாய்க் கட்டிவைக்க வேண்டும்.

10. கடனுக்காக வந்திருக்கும் விண்ணப்பங்களை யெல்லாம் பைசல் செய்த பிறகு, வேண்டிய பணமித்தனை யென்று கூட்டிப்போட்டு, இதில் எவ்வளவாகிலும் உள்ளூர் டிபாசிட்டு வகையால் சுதாரிக்கக்கூடுமோ வென்று பிரயத்தனம் நடக்கவேண்டும். இது நீங்க மீதியை ஸெண்ட்ரல் பாங்கில் வாங்க வேண்டுமென்று பஞ்சாயத்தார் தீர்மானிக்க வேண்டும். ஸெண்ட்ரல் பாங்கிலிருந்து பணம் வந்தால், அன்றையதினமே அதில் அனேகமாய் எல்லாம் உத்தரவான மனுதார்களுக்கு பட்டுவாடா ஆகிவிடவேண்டு மென்பதை பஞ்சாயத்தார் அறியவேண்டும். தப்பினால் மறுநாளாகித் தீரவேண்டும். தாங்கள் ஒப்பிய காரியங்களல்லாமல் வேறு காரியங்களுக்கு இந்தக்கடன் பணம் உபயோகப்படாமல் பார்த்துக் கொள்ளுவதும், அப்படி வேண்டாக் காரியங்களுக்கு இது உபயோகப் படுவதாகத் தெரிந்தால், இந்தக்கடன் மொத்தத்தைத் தங்களுக்கிருக்கும் அதிகாரத்தைக் கொண்டு அமுல் நடத்தி வசூலிப்பதும், பஞ்சாயத்தார் கடனென்று அவர்களுக்கு இன்ஸ்பெக்டர் விடாமல் சொல்லி வரவேண்டும். தாலூக்கா டவுன்களிலோ, அவற்றிற்குச் சமீபத்திலோ இருக்கும் ஸொஸைட்டிகளுக்கு சர்க்கார் கஜானா மூலமாகப் பணம் அனுப்புவதற்குக் கிடைத்திருக்கும் உரிமைகளையும் விவரிக்கவேண்டும்.

11. c. கணக்குகள் சரிவர வைப்பதற்குப் பஞ்சாயத்தாருக்கு இன்ஸ்பெக்டர் சிரமப்பட்டுச் சொல்லிக் கொடுக்கவேண்டும். முதல்நாள் பதிவாக வேண்டியதையும், ஒவ்வொரு ரிஜிஸ்தரிலும் முதல் சில பதிவுகளையும் இன்ஸ்பெக்டரே செய்வது நலம். பிற்பட்டு சிலபதிவுகள் செக்ரெடரியைக் கொண்டு இன்ஸ்பெக்டர் ரூபரூவில் இருந்து செய்விக்க வேண்டும். மெம்பராகச் சேர்த்தும் ரிஜிஸ்தரும், வரவு செலவுக்கணக்கும் மேலே விவரமாகியிருக்கின்றன. மற்ற புஸ்தகங்களின் லக்ஷணங்களையும் இன்ஸ்பெக்டர் விவரிக்கவேண்டும். பங்குத்தொகை வசூலானதும் பிரவேசதனமும், சேர்ந்து இரண்டொரு கடன் பாபத்துகளுக்குப் பட்டுவாடா ஆகவேண்டும். கணக்குப் புஸ்தகங்கள் வாங்கியதற்குப்பணம் இன்ஸ்பெக்டர் அனுப்பவேண்டும். [illegible] பாரங்கள் சில்லரையென்றாலும் பல தினுசுகளாயிருக்கின்றன. [illegible] கணக்குகள் வைப்பதில் பஞ்சாயத்தாருக்குத் தெரியவேண்டியவை



களைப் பரிஷ்காரப் படுத்துவதற்கு இன்ஸ்பெக்டருக்கு இம்மூலமாய் வேண்டிய சமயங்கள் கிடைக்கும். மாதாந்தரவரவு செலவு நமூனாக்கள் தயார் செய்யும்படிக்கும், அவைகளைப் பஞ்சாயத்தாருடைய மாதாந்தர மீட்டிங்குகளில் படித்து அவர்களுக்குச் செம்மையாய் விளக்கும் படிக்கும், செக்ரெடரிக்கு இன்ஸ்பெக்டர் சொல்லிக்கொடுக்க வேண்டும். இந்த நமூனாக்களுக்குக் காபிகள் தயாராகி, ஸொஸைட்டிக்குச் சேர்ந்த கிராம விஸ்தீரணத்தில், ஜனங்களுக்குக் கண்ணிற்படும்படியான இடங்களிலெல்லாம் இவைகளை ஒட்டி வைக்கவேண்டும். நடவடிக்கைகளைச் சரிவரப் புஸ்தகத்திற் பதியும்படி பிரஸிடெண்டுக்குச் சொல்லவேண்டும்.

12. இன்ஸ்பெக்டர் மெம்பர்களாகிய கிராமத்தவரிட ஆஸ்திச்சிட்டா ஒன்று தயார் செய்யவேண்டும். இதைத் தயார் செய்வதில் பஞ்சாயத்தாருடையவும், கிராமக்கணக்கு மணியகார் இவர்களுடையவும் உதவியை வேண்டிப்பகிரங்கமாயும் செய்யவேண்டும். இதனால் தப்பிதங்களேதாவதுண்டானால் திருத்துவதற்கிடமுண்டு. ஆஜரிருப்பவர் தப்புகளைத் திருத்தியோ, எழுதாமல் விட்டதைக் கூட்டியோ உதவிசெய்வார்.

இந்தக்கணக்குப் பின்வரும் கலங்களைக் காட்டவேண்டும்:—

1. நெப்பர்.
2. மெம்பரின் பெயர்.
3. அவருக்குள்ள பூஸ்திதி மொத்தம்.
4. ஜங்கம சொத்துகளின் மொத்தம்.
5. ஓட்டு மொத்தம்.
6. கடன்வகை நீக்கவேண்டியது.
7. மீதி வாஸ்தவத்திலுள்ள ஆஸ்தி.
8. மெம்பர்களுக்கு இதிலுள்ள பாத்தியம், பூராவுமா, அல்லது பங்குக்காரருண்டா? உண்டென்றால், மெம்பருக்கு எம்மட்டு உரிமை?
9. மெம்பர் கையொப்பம்.

இந்தக் கணக்கில் கிராம உத்தியோகஸ்தரும், பஞ்சாயத்து மெம்பர்களும் கையொப்ப மிட்டிருக்க வேண்டும். முழுமோசமாகப் பொய்க்கணக்கு எழுதாமற்படி, இன்ஸ்பெக்டரும் வேண்டிய விசாரணை செய்யவேண்டும்.

13. பணம் செலவாகாமல் அதிகமாகக் கையிருப்புக் கூடாதென்று பஞ்சாயத்தாருக்கு இன்ஸ்பெக்டர் தெரிவிக்க வேண்டும். பட்டுவாடாவுக்காகப் பணம் அவசரமாக வேண்டியிராவிட்டால், கையிருப்பு நூற்றுக்கணக்காகவிருந்தாலும், ஸெண்ட்ரல் பாங்குக்காரரிட மிருந்து தாங்கள் வாங்கியிருக்கும் தொகைக்கு உத்தாரமாக சில்லரையில் பஞ்சாயத்தார் செலுத்திவிட

வேண்டும். எங்கெல்லாம் சாத்தியமோ அவ்விடங்களில் பணம் போஸ்டாபீஸ் ஸேவிங்க்ஸ் பாங்குகளில் போட்டிருக்க வேண்டும். 'பொதுக்கணக்கு' வைப்பதற்காகக் கிரமமாகக் கையொப்பமிட்ட அதிகார பத்திரமும் தருவித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

14. இன்ஸ்பெக்டர் கிராமத்தில் மூன்று நான்கு தினங்கள் தங்கி, கிராமத்தின் குணதோஷங்களை நன்றாயுணர்ந்து, பஞ்சாயத்தாருடைய யோக்கியதைகளையும் அறிந்து கொள்ளவேண்டும். கிராமத்தை விட்டுப்புறப்படு முன், ரிஜிஸ்திராருக்கு ரிபோர்ட்டு எழுதி விடவேண்டும். (திருச்சினாப்பள்ளி செக்ஷனில், இந்த ரிபோர்ட்டு ஸ்பெஷல் டிப்டி கலெக்டர் மூலமாக வரவேண்டும்). இந்த ரிபோட்டுடன் வரவேண்டியவை:—

(1) மெம்பர்களின் ஆஸ்திக்கணக்கு.

(2) போஸ்டு ஆபீசில் 'பொதுக்கணக்கு' வைக்க வேண்டியதற்கு அதிகார பத்திரம்.

(3) ஸென்ட்ரல் பாங்கிலிருந்து பணம் வாங்க வேண்டுமென்று பஞ்சாயத்தார் தீர்மானத்திற்கு நகல்.

(4) புல்லடீனுக்குச் சந்தாதாராக விண்ணப்பம். இதில் எந்தப்பாஷையில் இது வேண்டுமோ அதையும், எந்த நெம்பர் முதல் வேண்டுமோ அதையும், தெரிவிக்க.

ரிபோர்ட்டில் மெம்பர் எத்தனைபெயர் சேர்ந்தாரென்பது தெரிவிப்பதுடன், ரிஜிஸ்திராருக்கு அந்தரங்கம் தெரியவேண்டி, புதிதாக உண்டான ஸொஸைட்டிக்குத் தீர்க்காயுசு இருக்க இடமுண்டாவென்பதில் இன்ஸ்பெக்டர் மனதார எண்ணியிருப்பதையும் சொல்லவேண்டும். கிராமம்விட்டுப் புறப்படுமுன், 'பெருமாள் செட்டி அண்டுஸன்ஸ்' என்னும் வர்த்தகச் சங்கத்திற்குக் கணக்குப் புஸ்தகங்களுக்காகச் செல்லவேணடிய கிரயத்தொகையை இன்ஸ்பெக்டர் அனுப்பி விடவேண்டும். தவிர அச்சங்கத்தவருக்கு ஒரு ரப்பர் முத்திரை செய்யும்படி மாதிரிகாட்டிய படத்துடன் ஒரு ஆர்டர் அனுப்பிவிடவேண்டும். ஸொஸைட்டியார் வேறு வர்த்தகரிடம் முத்திரை வாங்க வேண்டுமென்று ஆக்கிரகப்பட்டால், அவரிஷ்டம்போல் விட்டு விடலாம். முத்திரையில், ஸொஸைட்டியின் பெயர், அதன் நெம்பர், ரிவினியூ ஜில்லாவின் பெயர், இம்மூன்றும் காணவேண்டும். இன்ஸ்பெக்டர், இவைகளல்லாமல் நடவடிக்கைப் புஸ்தகத்திற்காக ரூபா 1-8-0 ம், புல்லடீனுக்கு ஒரு வருஷச்சந்தாதுகை 1-8-0ம் வசூலித்து, அப்படி வசூலித்ததை ரிபோர்ட்டு செய்யவேண்டும். இந்தத் தொகையை இன்ஸ்பெக்டர் அடுத்த முறையனுப்பும் சாதல்வார் கணக்கில் வஜா எழுதப்படும்.



1909-ம் ௵ ஜூலை௴ 1உயில் இருந்த ரிஸர்வ்பண்டுகளின் ஸ்டேட்மெண்டு.

| ஸொஸைடியின் ரிஜிஸ்டர் நெம்பர். | ஸொஸைடியின் பெயர். | ஜில்லா. | 1909-ம் ௵ ஜூன் ௴ 30௳ யிலிருந்த ஆபத்தனம். | | | ஆபத்தனத்தோடு சேர்க்கும்படி சொல்லப்பட்ட தொகை. | | | ஆபத்தனத்தின் மொத்தம். | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. | அ. | ப | ரூ. | அ. | ப | ரூ. | அ. | ப. |
| 1 | கிரூர் | செங்கல்பட்டு | 180 | 2 | 8 | 95 | 8 | [illegible] | 275 | 10 | 11 |
| 2 | கீழச்சேரி | ... | 920 | 2 | 0 | 352 | 5 | [illegible] | 1272 | 7 | 2 |
| 3 | காஞ்சீபுரம் | ... | 1355 | 15 | 11 | 716 | 13 | 5 | 2072 | 13 | 4 |
| 4 | காவேரிபாக்கம் | வடஆற்காடு | 1133 | 11 | 5 | 584 | 3 | 1 | 717 | 14 | 6 |
| 5 | தாமல் | செங்கல்பட்டு | 532 | 15 | 8 | 218 | 5 | 11 | 751 | 5 | 7 |
| 6 | விளாத்திகுளம் | திருநெல்வேலி | 503 | 4 | 6 | 235 | 4 | 5 | 738 | 8 | 11 |
| 7 | சீடாமங்கலம் | தஞ்சாவூர் | 1054 | 2 | 5 | 265 | 5 | 6 | 1319 | 7 | 11 |
| 8 | நிக்கல்ஸன் அர்பன் | ... | 174 | 12 | 10 | 85 | 10 | [illegible] | 260 | 6 | 11 |
| 9 | மேலட்டூர் | ... | 672 | 11 | 2 | 360 | 15 | 10 | 1033 | 11 | 0 |
| 10 | நந்தலூர் | கடப்பை | 571 | 13 | 4 | 331 | 4 | 1 | 903 | 1 | 5 |
| 11 | நெம்மேலி | செங்கல்பட்டு | 248 | 15 | 9 | 103 | 0 | 11 | 352 | 0 | 8 |
| 12 | வடநங்கூர் | வடஆற்காடு | 333 | 13 | 11 | 145 | 8 | 1 | 479 | 6 | 0 |
| 13 | நம்பிபுரம் | திருநெல்வேலி | 334 | 13 | 5 | 158 | 10 | 3 | 493 | 7 | 8 |
| 14 | புக்கபட்டணம் | அனந்தபூர் | 409 | 14 | 0 | 140 | 8 | 4 | 550 | 6 | 4 |
| 15 | திருவல்லிக்கேணி ஸ்டோர்சு. | மதிராசு | 4373 | 14 | 4 | 2358 | 8 | 10 | 6732 | 7 | 2 |
| 16 | அழிஞ்சிவாக்கம் | செங்கல்பட்டு | 153 | 4 | 7 | 99 | 11 | 9 | 253 | 1 | 4 |
| 17 | சாலவேடு | வடஆற்காடு | 429 | 6 | 9 | 155 | 11 | 5 | 585 | 2 | 2 |
| 18 | மதிராஸ் ஸென்ட்ரல் | மதிராசு | 766 | 7 | 8 | 1563 | 13 | 4 | 2330 | 5 | 0 |
| 19 | நாமக்கல் அர்பான் | சேலம் | 404 | 2 | 2 | 212 | 8 | 3 | 616 | 10 | 5 |
| 20 | வேலூர் | ... | 972 | 4 | 7 | 322 | 3 | 2 | 1294 | 7 | 9 |
| 21 | காஞ்சீபுரம் நெசவுக்காரர்கள். | செங்கல்பட்டு | 75 | 0 | 0 | 35 | 0 | 8 | 110 | 0 | 8 |
| 22 | தெனலி அர்பன் | குண்டேர் | 864 | 2 | 9 | 527 | 1 | 7 | 1391 | 4 | 4 |
| 23 | ஸாரேபல்லி | ... | 521 | 2 | 4 | 340 | 8 | 6 | 861 | 10 | 10 |
| 24 | கூடேர் | நெல்லூர் | 794 | 10 | 0 | 348 | 5 | 0 | 1142 | 15 | 0 |
| 25 | சேலம் அர்பன் | சேலம் | 1179 | 9 | 11 | 1215 | 3 | 9 | 2394 | 13 | 8 |
| 26 | கோயம்புத்தூர் ஸ்டோர்சு. | கோயம்பத்தூர் | 401 | 0 | 7 | 64 | 14 | 1 | 465 | 14 | 8 |
| 27 | மன்னார்குடி அர்பன் | தஞ்சாவூர் | 646 | 15 | 0 | 161 | 13 | 5 | 808 | 12 | 5 |
| 28 | மதுரை ஸ்டோர்சு | மதுரை | 1122 | 0 | 4 | 837 | 3 | 8 | 1959 | 5 | 7 |
| 29 | திருமங்கலம் அர்பன் | ... | 290 | 11 | 7 | 271 | 3 | 8 | 561 | 15 | 3 |
| 30 | லால்குடி | திருச்சினாபள்ளி | 739 | 5 | 0 | 633 | 3 | 0 | 1372 | 8 | 0 |
| 31 | அணைக்காடு | தஞ்சாவூர் | 308 | 6 | 0 | 217 | 12 | 9 | 526 | 2 | 9 |
| 32 | கொத்தகோட்டா | அனந்தபூர் | 198 | 12 | 1 | 95 | 13 | 11 | 294 | 10 | 0 |
| 33 | தொழூர் | செங்கல்பட்டு | 73 | 1 | 5 | 56 | 12 | 2 | 129 | 13 | 7 |
| 34 | கந்துகூரு | நெல்லூர் | 167 | 11 | 0 | 88 | 14 | 10 | 256 | 9 | 10 |
| 35 | ராஜாமடம் | தஞ்சாவூர் | 131 | 1 | 0 | 72 | 4 | 8 | 203 | | 85 |
| 36 | ஹீவினஹடகல்லி | பெல்லாரி | 99 | 11 | 10 | 103 | 5 | 4 | 203 | | 21 |

## 1909-ம் வருஷம் ஜூலை மீ 1உ யில் இருந்த ரிஸர்வ்பண்டுகளின் ஸ்டேட்மெண்டு.

| சொஸைடியின் ரிஜிஸ்டர் நெம்பர். | சொஸைடியின் பெயர். | ஜில்லா. | 1909-ம் வருஷம் ஜூன் மீ 30உ யிலிருந்த ஆபத்தனம். | | | ஆபத்தனத்தோடு சேர்க்கும்படி சொல்லப்பட்ட தொகை. | | | ஆபத்தனத்தின் மொத்தம். | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. |
| 37. | ஜமீன் நுங்கம்பாக்கம். | செங்கல்பட்டு | 57 | 0 | 0 | 51 | 13 | 10 | 108 | 13 | 10 |
| 38 | | | | | | | | | | | |
| 39 | தும்மபூடி | ... | 480 | 7 | 8 | 496 | 9 | 3 | 977 | 0 | 11 |
| 40 | பெரஹாம்பூர் அர்பன் | கஞ்சம் | 198 | 2 | 11 | 449 | 4 | 11 | 647 | 7 | 10 |
| 41 | உத்தரமல்லூர் | செங்கல்பட்டு | 1215 | 5 | 8 | 1402 | 5 | 4 | 2619 | 11 | 0 |
| 42 | களியாம்பூண்டி | ... | 203 | 0 | 0 | 218 | 8 | 6 | 421 | 8 | 6 |
| 43 | பாக்கல்பட்டி | சேலம் | 373 | 4 | 0 | 353 | 12 | 11 | 727 | 0 | 11 |
| 44 | பனமருத்துபட்டி | ... | 361 | 15 | 3 | 348 | 1 | 6 | 710 | 0 | 9 |
| 45 | பரமகுடி அர்பன் | மதுரை | 235 | 14 | 5 | 156 | 0 | 3 | 391 | 14 | 8 |
| 46 | திண்டிவனம் அர்பன் | தென் ஆற்காடு | 899 | 9 | 4 | 924 | 15 | 11 | 1824 | 9 | 3 |
| 47 | தர்மாவரம் | அனந்தபூர் | 202 | 8 | 0 | 292 | 11 | 4 | 495 | 3 | 4 |
| 48 | மேல்மலையனூர் | தென் ஆற்காடு | 192 | 10 | 4 | 271 | 0 | 0 | 463 | 10 | 4 |
| 49 | மதிராஸ் டெயிலரிங் ஹௌஸ். | மதராஸ் | 9 | 4 | 6 | 6 | 4 | 0 | 15 | 8 | 6 |
| 50 | கண்ணாண்டஹல்லி | சேலம் | 508 | 13 | 1 | 609 | 1 | 11 | 1117 | 15 | 0 |
| 51 | கள்ளிபட்டு | செங்கற்பட்டு | 220 | 13 | 0 | 190 | 12 | 7 | 411 | 9 | 7 |
| 52 | மதிராஸ்ரயில்வேஎம்பிளாயிஸ் | மதராஸ் | 63 | 15 | 2 | 55 | 5 | 11 | 123 | 5 | 1 |
| 53 | பியபள்ளி | கர்நூல் | 145 | 15 | 1 | 195 | 12 | 7 | 321 | 11 | 8 |
| 54 | வச்சிரகரூர் | அனந்தபூர் | 262 | 1 | 7 | 286 | 1 | 3 | 548 | 21 | 0 |
| 55 | குண்டக்கல் | ... | 353 | 9 | 2 | 348 | 5 | 6 | 701 | 14 | 8 |
| 56 | நாகய்யலங்கா | கிருஷ்ணா | 375 | 6 | 3 | 344 | 9 | 3 | 175 | 15 | 6 |
| 57 | திம்மண்சர்லா | அனந்தபூர் | 370 | 5 | 7 | 288 | 11 | 0 | 655 | 0 | 7 |
| 58 | கர்நூல் ஸ்டோர்ஸ் | கர்நூல் | 118 | 8 | 0 | 166 | 13 | 8 | 285 | 5 | 8 |
| 59 | சித்தூர் ஸ்டோர்ஸ் | N ஆர்காடு | 32 | 3 | 7 | 29 | 10 | 11 | 61 | 14 | 6 |
| 60 | உரவக்கொண்டா | அனந்தபூர் | 45 | 6 | 2 | 90 | 9 | 11 | 135 | 7 | 1 |
| 61 | பாண்டவாக்கம் | செங்கற்பட்டு | 252 | 5 | 0 | 362 | 5 | 6 | 614 | 10 | 6 |
| 62 | குண்டூர் ஸ்டோர்ஸ் | குண்டூர் | 84 | 9 | 10 | 14 | 15 | 6 | 56 | 10 | 4 |
| 63 | மதனபள்ளி ஸ்டோர் | கடப்பா | 7 | 15 | 7 | 16 | 7 | 8 | 24 | 7 | 8 |
| 64 | அனக்காலூர் | N ஆர்காடு | 10 | 6 | 9 | 64 | 12 | 4 | 75 | 3 | 1 |
| 65 | காடியம் | கோதாவரி | 7 | 11 | 0 | 81 | 2 | 8 | 88 | 13 | 8 |
| 66 | மகலம் | பெல்லாரி | | | | 58 | 14 | 6 | 58 | 14 | 6 |
| 67 | ஹிரேஹடகல்லி | ... | 39 | 0 | 6 | 255 | 7 | 4 | 294 | 7 | 10 |
| 68 | ஜெயங்கொண்ட சோழபுரம் | திருச்சி | 89 | 3 | 0 | 266 | 3 | 5 | 355 | 6 | 5 |
| | | | 40 | 14 | 0 | 137 | 2 | 0 | 178 | 0 | 0 |
| 69 | பெரம்பலூர் | ... | | | | | | | | | |
| 70 | வட்டமன்னுடு | கிருஷ்ணா | 5 | 6 | 4 | 125 | 0 | 4 | 180 | 12 | 8 |
| 71 | முழையனூர் | S ஆர்காடு | 73 | 10 | 9 | 255 | 6 | 7 | 329 | 1 | 4 |
| 72 | சென்னிமலை | கோயம்புத்தூர் | 58 | 1 | 9 | 188 | 15 | 0 | 187 | 9 | 0 |



## 1909-ம் வருஷம் ஜூலை மீ 1உ யில் இருந்த ரிஸர்வ்பண்டுகளின் ஸ்டேட்மெண்டு.

| சொஸைடியின் ரிஜிஸ்டர் நெம்பர். | சொஸைடியின் பெயர். | ஜில்லா. | 1909-ம் வருஷம் ஜூன் மீ 30உ யிலிருந்த ஆபத்தனம். | | | ஆபத்தனத்தோடு சேர்க்கும்படி சொல்லப்பட்ட தொகை. | | | ஆபத்தனத்தின் மொத்தம். | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. |
| 73 | புதுப்பாளையம் | ... | 29 | 13 | 10 | 206 | 10 | 6 | 236 | 8 | 4 |
| 74 | எர்ரபொம்மனஹல்லி | அனந்தபூர் | 18 | 7 | 0 | 60 | 11 | 5 | 79 | 2 | 5 |
| 75 | ஜம்மனஹல்லி | சேலம் | 190 | 0 | 2 | 235 | 0 | 5 | 425 | 0 | 7 |
| 76 | செங்காலிபுரம் | தஞ்சாவூர் | 79 | 1 | 8 | 99 | 1 | 9 | 178 | 3 | 5 |
| 77 | தாடிகுண்டபள்ளி | கடப்பா | 0 | 1 | 8 | 67 | 8 | 4 | 67 | 10 | 0 |
| 78 | திட்டை | தஞ்சாவூர் | | | | 36 | 12 | 6 | 36 | 12 | 6 |
| 79 | வள்ளுவக்குடி | தஞ்சாவூர் | 11 | 1 | 0 | 30 | 0 | 7 | 41 | 1 | 7 |
| 80 | வெள்ளியம்பாக்கம் | N ஆர்காடு | 14 | 5 | 6 | 42 | 11 | 8 | 57 | 1 | 2 |
| 81 | ஒத்தக்கடை | மதுரை | 80 | 0 | 0 | 176 | 1i | 1 | 256 | 11 | 1 |
| 82 | பௌண்டரீகபுரம் | தஞ்சாவூர் | 15 | 6 | 0 | 168 | 5 | 0 | 183 | 11 | 0 |
| 83 | கௌதாராம் | கிருஷ்ணா | 14 | 14 | 7 | 20 | 8 | 3 | 35 | 0 | 10 |
| 84 | வெங்கடபுரம் | ... | 5 | 14 | 9 | 112 | 5 | 5 | 118 | 4 | 2 |
| 85 | சவுளிபட்டு | ... | ... | ... | ... | 2 | 3 | 10 | 2 | 3 | 10 |
| 86 | சீதவகுப்பம் | கோதாவரி | ... | ... | ... | 3 | 5 | 0 | 3 | 5 | 0 |
| 87 | தமராங்கிபட்டணம் | ... | ... | ... | ... | 54 | 7 | 1 | 54 | 7 | 1 |
| 88 | கிம்மகள்ளு | அனந்தபூர் | ... | ... | ... | 54 | 0 | 0 | 54 | 0 | 0 |
| 89 | அனக்குடி | தஞ்சாவூர் | ... | ... | ... | 63 | 9 | 2 | 65 | 2 | 2 |
| 90 | ஹரிஸமுத்திரம் | அனந்தபூர் | 11 | 8 | 1 | 103 | 4 | 7 | 105 | 0 | 8 |
| 91 | திருப்பந்தியூர் | செங்கற்பட்டு | 11 | 4 | 0 | 80 | 11 | 1 | 91 | 15 | 1 |
| 92 | மொரளகூர் | ... | 4 | 13 | 0 | 120 | 9 | 2 | 125 | 0 | 2 |
| 93 | திருமலைவாடி | திருச்சி | 20 | 4 | 0 | 93 | 4 | 3 | 114 | 3 | 3 |
| 94 | ஆத்தூர் | சேலம் | 11 | 4 | 1 | 222 | 13 | 4 | 234 | 1 | 5 |
| 95 | வளர்புரம் | செங்கற்பட்டு | 0 | 4 | 1 | 90 | 14 | 0 | 91 | 2 | 1 |
| 96 | ஒங்கோல் அர்பன் | குண்டூர் | 15 | 9 | 2 | 46 | 3 | 10 | 60 | 13 | 0 |
| 97 | அக்கமாபுரம் | செங்கற்பட்டு | 5 | 15 | 3 | 20 | 8 | 0 | 26 | 7 | 3 |
| 98 | ஷோலிங்கர் அர்பன் | N ஆற்காடு | 14 | 15 | 0 | 85 | 0 | 5 | 99 | 15 | 5 |
| 99 | நரசிங்கபுரம் | செங்கற்பட்டு | 1 | 4 | 0 | 76 | 7 | 11 | 77 | 1 | 0 |
| 100 | கருசகுழி ராஜகோபாலாசாரி | ... | 0 | 9 | 3 | 43 | 2 | 5 | 40 | 11 | 8 |
| 101 | கருப்பம் | விசாகப்பட்டண | ... | ... | ... | 27 | 4 | 10 | 27 | 4 | 10 |
| 102 | மருகவரம் | விசாகப்பட்டண | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... |
| 103 | சந்திரகிரி | வடஆற்காடு | ... | ... | ... | 59 | 7 | 2 | 59 | 7 | 2 |
| 104 | தாரமங்கலம் | சேலம் | ... | ... | ... | 45 | 5 | 3 | 45 | 5 | 3 |
| 105 | ஒடவண்குறிச்சி | ஷை | ... | ... | ... | 16 | 15 | 5 | 16 | 15 | 5 |
| 106 | தோலூர் | ஷை | ... | ... | ... | 76 | 2 | 6 | 76 | 2 | 6 |
| 107 | ஓமலூர் | ஷை | ... | ... | ... | 102 | 3 | 8 | 102 | 3 | 8 |
| 108 | ஈமகிரிபேட்டை | ஷை | ... | ... | ... | 11 | 10 | 0 | 11 | 10 | 0 |
| 109 | கர்நூல் அர்பன் | கர்நூல் | ... | ... | ... | 23 | 0 | 8 | 23 | 0 | 8 |
| 110 | மேச்சேரி | சேலம் | ... | ... | ... | 75 | 9 | 5 | 75 | 9 | 5 |

1909-ம் ௵ ஜூலை௴ 1௳யில் இருந்த ரிஸர்வ்பண்டுகளின் ஸ்டேட்மெண்டு.

| சொஸைட்டியின் ரிஜிஸ்டர் நெம்பர். | சொஸைட்டியின் பெயர். | ஜில்லா. | 1909-ம் ௵ ஜூன்௴ 30௳ யிலிருந்த ஆபத்தனம். | | | ஆபத்தனத்தோடு சேர்க்கும்படி சொல்லப்பட்ட தொகை. | | | ஆபத்தனத்தின் மொத்தம். | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. |
| 111 | வனவாஸி | ... | ... | ... | ... | 108 | 2 | 10 | 108 | 2 | 10 |
| 112 | ராசிபுரம் | ... | ... | ... | ... | 29 | 9 | 6 | 29 | 9 | 6 |
| 113 | தலங்கை | வடஆற்காடு | ... | ... | ... | 44 | 0 | 5 | 44 | 0 | 5 |
| 114 | கன்னங்குறிச்சி | சேலம் | ... | ... | ... | 115 | 6 | 10 | 115 | 6 | 10 |
| 115 | பொட்டிபுரம் | ... | ... | ... | ... | 157 | 9 | 0 | 157 | 9 | 0 |
| 116 | ஜலகண்டாபுரம் | ... | ... | ... | ... | 88 | 14 | 11 | 88 | 14 | 11 |
| 117 | முத்துநாயக்கன்பட்டி | ... | ... | ... | ... | 89 | 2 | 6 | 89 | 2 | 6 |
| 118 | கிருஷ்ணகிரி அர்பன் | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... |
| 119 | பாலக்கோடு | ... | ... | ... | ... | 28 | 7 | 6 | 28 | 7 | 6 |
| 120 | கிருஷ்ணபுரம் | ... | ... | ... | ... | 15 | 0 | 6 | 15 | 0 | 6 |
| 121 | அதமன்கோட்டை | ... | ... | ... | ... | 14 | 13 | 0 | 14 | 13 | 0 |
| 122 | தர்மபுரி | ... | ... | ... | ... | 31 | 12 | 9 | 31 | 12 | 9 |
| 123 | அதிகாரப்பட்டி | ... | ... | ... | ... | 75 | 9 | 3 | 75 | 9 | 3 |
| 124 | பள்ளிபட்டி | ... | ... | ... | ... | 161 | 8 | 6 | 161 | 8 | 6 |
| 125 | கம்பயநெல்லூர் | ... | ... | ... | ... | 137 | 5 | 6 | 137 | 5 | 1 |
| 126 | கோண்டரம்பட்டி | ... | ... | ... | ... | 55 | 6 | 1 | 55 | 6 | 0 |
| 127 | ஈச்சம்பாடி | ... | ... | ... | ... | 223 | 11 | 0 | 223 | 11 | 9 |
| 128 | ஹளூர் | ... | ... | ... | ... | 103 | 10 | 7 | 103 | 10 | 6 |
| 129 | ஊத்தங்கரை | ... | ... | ... | ... | 63 | 14 | 9 | 63 | 14 | 0 |
| 130 | அட்டயம்பட்டி | ... | ... | ... | ... | 198 | 2 | 0 | 198 | 2 | 7 |
| 131 | மாதியம்பட்டி | ... | ... | ... | ... | 45 | 7 | 0 | 45 | 7 | 0 |
| 132 | மருத்வாம்பாடி | செங்கற்பட்டு | ... | ... | ... | 22 | 0 | 0 | 22 | 0 | 0 |
| 133 | பெருங்குழி | ... | .. | ... | ... | 26 | 5 | 9 | 26 | 5 | 9 |
| 134 | கம்மாளம்பூண்டி | ... | ... | ... | ... | 38 | 13 | 10 | 38 | 13 | 10 |
| 135 | ஆயகுளத்தூர் | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... |
| 136 | பெலுகுப்பா | அனந்தபூர் | ... | ... | ... | 62 | 1 | 0 | 62 | 1 | 0 |
| 137 | பாமிடி | ... | ... | ... | ... | 21 | 3 | 0 | 21 | 2 | 8 |
| 138 | கீழ்நல்லாத்தூர் | செங்கற்பட்டு | ... | ... | ... | 14 | 9 | 3 | 14 | 9 | 3 |
| 139 | குண்டுபெரும்பேடு | ... | ... | ... | ... | 9 | 11 | 10 | 9 | 11 | 10 |
| 140 | மலைப்பட்டு | ... | ... | ... | ... | 6 | 15 | 9 | 6 | 15 | 9 |
| 141 | சாலூர் | ... | ... | ... | ... | 27 | 13 | 0 | 27 | 13 | 0 |
| 142 | பிச்சிவாக்கம் | ... | ... | ... | ... | 34 | 14 | 8 | 34 | 14 | 8 |
| 143 | கன்னந்தாங்கல் | ... | ... | ... | ... | 2 | 12 | 3 | 2 | 12 | 3 |
| 144 | எடையார்பாக்கம் | செங்கற்பட்டு | ... | ... | ... | 4 | 8 | 6 | 4 | 8 | 6 |
| 145 | பெரியகுளம் | மதுரை | ... | ... | ... | 63 | 6 | 2 | 63 | 6 | 2 |
| 146 | கப்பாங்கோட்டூர் | செங்கற்பட்டு | ... | ... | ... | 10 | 12 | 2 | 10 | 12 | 2 |
| 147 | வடமலைபுரம் | திருநெல்வேலி | ... | ... | ... | 14 | 4 | 3 | 14 | 4 | 3 |
| 148 | கள்ளக்குறிச்சி | தென் ஆற்காடு | ... | ... | ... | 23 | 10 | 11 | 23 | 10 | 11 |
| 149 | மணிமங்கலம் | செங்கற்பட்டு | ... | ... | ... | 33 | 0 | 4 | 33 | 0 | 4 |



1909-ம் ௵ ஜூலை௴ 1௳யில் இருந்த ரிஸர்வ்பண்டுகளின் ஸ்டேட்மெண்டு.

| சொஸைட்டியின் ரிஜிஸ்டர் நெம்பர். | சொஸைட்டியின் பெயர். | ஜில்லா. | 1909-ம் ௵ ஜூன்௴ 30௳ யிலிருந்த ஆபத்தனம். | | | ஆபத்தனத்தோடு சேர்க்கும்படி சொல்லப்பட்ட தொகை. | | | ஆபத்தனத்தின் மொத்தம். | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. |
| 150 | சங்கரபுரம் | தென் ஆற்காடு | ... | ... | ... | 37 | 3 | 11 | 37 | 3 | 11 |
| 151 | சேலம் டிஸ்டிரிக்ட் பாங்க் | சேலம் | ... | ... | ... | 304 | 13 | 0 | 304 | 13 | 0 |
| 152 | சிலவட்டம் | செங்கல்பட்டு | ... | ... | ... | 64 | 0 | 0 | 64 | 0 | 0 |
| 153 | ராவத்த நல்லூர் கண்டிகை | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... |
| 154 | மேல்தண்டலை | ... | ... | ... | ... | 6 | 5 | 9 | 6 | 5 | 9 |
| 155 | சேரப்பாக்கம் | ... | ... | ... | ... | 2 | 2 | 5 | 2 | 2 | 5 |
| 156 | மானம்பதி கண்டிகை | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... |
| 157 | கருவேப்பம்பூண்டி | ... | | | | | | | | | |
| 158 | நெல்வாய் | ... | | | | | | | | | |
| 159 | காஞ்சிபுரம் | ... | | | | | | | | | |
| 160 | ஓரத்தூர் | ... | ... | ... | ... | 14 | 0 | 2 | 14 | 0 | 2 |
| 161 | பல்லிவாடா | கிருஷ்ணா | ... | ... | ... | 38 | 13 | 3 | 38 | 13 | 3 |
| 162 | மேல்பாக்கம் | செங்கற்பட்டு | ... | ... | ... | 0 | 8 | 2 | 0 | 3 | 2 |
| 163 | அநுந்தண்டலம் | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... |
| 164 | வள்ளுவம்பாக்கம் | வடஆற்காடு | ... | ... | ... | 17 | 6 | 6 | 17 | 6 | 6 |
| 165 | நெய்க்காரபட்டி | சேலம் | ... | ... | .. | 60 | 4 | 11 | 60 | 4 | 11 |
| 166 | கடியம்பட்டி | ... | ... | ... | .. | 22 | 6 | 4 | 22 | 6 | 2 |
| 167 | மல்லிகுண்டம் | ... | ... | ... | .. | 0 | 2 | 6 | 0 | 2 | 6 |
| 168 | பள்ளிபட்டி | ... | ... | ... | .. | 3 | 15 | 3 | 3 | 15 | 3 |
| 169 | துளசம்பட்டி | ... | ... | ... | .. | 36 | 13 | 8 | 36 | 13 | 8 |
| 170 | சூளன்குறிச்சி | தென் ஆற்காடு | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... |
| 171 | மாமுண்டி | சேலம் | ... | ... | ... | 51 | 14 | 2 | 51 | 14 | 2 |
| 172 | சமுத்திரம் | ... | ... | ... | ... | 1 | 12 | 2 | 1 | 12 | 2 |
| 173 | சின்னப்பம்பட்டி | ... | ... | ... | ... | 14 | 6 | 10 | 14 | 6 | 10 |
| 174 | பன்னைப்பட்டி | ... | ... | ... | ... | 31 | 15 | 5 | 31 | 15 | 5 |
| 175 | ஓரகடம் | செங்கற்பட்டு | ... | ... | ... | 4 | 2 | 1 | 4 | 2 | 1 |
| 176 | வாங்கூர் | வடஆற்காடு | ... | ... | ... | 6 | 15 | 4 | 6 | 15 | 4 |
| 177 | கல்யாணதுர்க் | அனந்தபூர் | ... | ... | ... | 77 | 11 | 0 | 77 | 11 | 0 |
| 178 | குளித்தலை டிஸ்டிரிக்ட் அர்பன் பாங்கு | திருச்சினாப்பள்ளி | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... |
| 179 | சேலக்குடி | ... | | | | | | | | | |
| 180 | அப்பணநல்லூர் | ... | | | | | | | | | |
| 181 | புத்தூர் | தென் கன்னடம் | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... |
| | | மொத்தம் | 31287 | 15 | 3 | 28775 | 9 | 5 | 60048 | 8 | 8 |

## விளம்பரங்கள்.

### பெரிய காஞ்சீபுரம் அர்பன் சாலியர் யூனியன்,
### ராஜாதெருவு, பெரிய காஞ்சீபுரம்.

(ஸ்தாபிதமானது டிசம்பர் 1905.)

உத்தேசம்:—சாலியர்களுடைய பிழைப்பையும் குணத்தையும் நோக்கு

வரும் லாபத்தை சாலிய மெம்பர்களுக்கு மட்டும் விநித்துக்கொடுக்கப்படுகிறது.

நன்றாக நெய்ததும், நாள்கூடி வருவதுமான வேஷ்டி, சோமன் வகைகள் இந்த யூனியனிடமிருந்து பின்வரும் விலை வீதத்திற்கு வாங்கலாம்.

| நூல் நெம்பர் | அகலம் | விவரம். | கஜம் 1-க்கு விலை. | | |
|---|---|---|---|---|---|
| 80 | 54 | சர்க்கம்பி, கோரஞ்சு அல்லது சாதா | 0 | 8 | 6 |
| 60 | 54 | ,, ,, ,, ... | 0 | 7 | 6 |
| | 49 | ,, ,, ,, ... | 0 | 6 | 6 |
| | 45 | ,, ,, ,, ... | 0 | 5 | 6 |
| 40 | 54 | ,, ,, ,, ... | 0 | 6 | 3 |
| | 49 | ,, ,, ,, ... | 0 | 5 | 9 |
| | 45 | ,, ,, ,, ... | 0 | 5 | 3 |

அஞ்சுகளுக்குப்பட்டு அல்லது சரிகைபென்றால் தக்கபடி விலை கூடும். வேறுவகை வேஷ்டிவகையறா கேட்பவரிஷ்டம்போல் செய்து கொடுக்கப்படும். வியாபாரமுறை:—ரொக்கம் அல்லது வால்யூபேயபிள் போஸ்டு.

யூனியன் பிறப்பித்திருக்கும் பத்திரங்கள் பங்கு முன்பேட அவைகளுக்கு ரூபாய் 1-க்கு அணா 1 வீதம், மேற்சொல்லிய விலை [illegible] குறைத்துக் கொடுக்கப்படும். மற்ற விவரங்கள் தெரிய [illegible] அடியிற் கையொப்ப மிட்டவருக்கு எழுதலாம்:—ஆதாவது, செக்ரெடரி.

## மதிராசு ஸென்ட்ரல் அர்பன் பாங்கு
## (லிமிடெட்.)

(1904-ம் வருஷத்திய இந்தியா ஆக்ட்டு 10 வதுப்படி ரிஜிஸ்தரானது.)

கணக்குகள்—மதிராசு கோஆபரேடிவ் நாணயச்சங்கங்கள் ரிஜிஸ்திரார் அவர்களால் தனிக்கை செய்யப்படுகிறது

கடன் கொடுப்பது ரிஜிஸ்திராருடைய விசேஷ உத்தரவின்படிதான்.

பாங்கு டிபாசிட்டுகள் வேண்டுகிறது - நிபந்தனைகள் அறியவேண்டுவோர் எழுதித் தெரிந்து கொள்ளவும்.

வேண்டியவர், செக்ரெடெரி, பத்மவிலாஸம், லஸ், மைலாப்பூர் S., என்றெழுதவும்.

மதிராசு புல்லடின் ஆப் கோஆபரேஷனில் விளம்பரம் செய்வோர் கொடுக்க வேண்டிய கட்டணவீதம்.

எப்போதாவது போடுவதற்கு:—

| | | |
|---|---|---|
| 1. பக்கம் | ... ... ... ... | ரூ. 12. |
| ½. பக்கம் | ... ... ... ... | ரூ. 6. |
| ¼. பக்கம் அல்லது குறைந்ததற்கு | ... ... | ரூ. 3. |

நாலு நெம்பர்களில் தொடர்ச்சியாய்ப் போடுவதற்கு:—

| | | |
|---|---|---|
| 1. பக்கம் | ... ... ... ... | ரூ. 40 |
| ½. பக்கம் | ... ... ... ... | ரூ. 20 |
| ¼. பக்கம் அல்லது குறைந்ததற்கு | ... ... | ரூ. 10 |

1904-வருஷத்திய 10-வது ஆக்ட்டுப்படி ரிஜிஸ்தரான ஸொஸைட்டிகளின் விளம்பரங்கள், ரிஜிஸ்திராரின் சந்தோஷத்தை யனுசரித்துக் கட்டணமில்லாமலே பிரசுரிக்கப்படும்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS.
REGISTERED
11 MAR 1911
MADRAS.

# மதிராஸ் புல்லடீன் ஆப் கோ-ஆபரேஷன்.

வால்யூம் 1.] ஜூன் மீ 10உ, 1910. [நெ. 4.

## இந்தியாவில் கோ ஆபரேடிவ் பாங்குகள்.

---

இங்கிலாந்தில் (இப்போது துரைத்தனத்தைவிட்டு விலகியிருக்கும்) கன்ஸர்வேடிவ் கக்ஷியாருடைய ஆசைகள் பல. (தாங்கள் மறுபடி துரைத்தனம் வகித்தால்) இன்னின்ன காரியங்களைச் செய்து சாதித்து விடுவோமென்று பலவகையாக அவர்கள் பேசிவருகிறார்கள். அவற்றுள் வியவசாய விஷயமாய் அநேக காரியங்கள் செய்து உத்தரிப்பதாகச் சொல்லிவருவது ஒரு அம்சம். இதையனுசரித்து மார்னிங்கு போஸ்டு பத்திரிகையில் ஒருவர் பிரஸ்தாபித்து எழுதுவதில், கோ ஆபரேஷன் முறையைச் சிலாகித்து, அந்தவழியில்தான் உழைப்பது அவசியமென்று வற்புறுத்தி, அது சம்பந்தமாக இந்தியாவில் நடப்பதைப் பார்த்துத் தங்கள் வகையாரும் தெரிந்துகொண்டு முன்னுக்கு வரவேண்டுமென்று இவ்வாறு கூறுகிறார்:—"இந்தியா கவர்ன்மெண்டாருடைய முயற்சிவிசேஷத்தால், கோ ஆபரேடிவ் கிராமப்பாங்குகள் இந்தியாவெங்கும் அற்புத வேகத்துடன் பரவிச்சென்ற சில வருஷங்களுக்குள் (எங்கும் தழைத்தும்,) வியவசாயிகள் வாங்கும் கடன்களுக்கு வட்டி விகிதத்தை அநேக பிராந்தங்களில் வாஸ்தவமாய்க் குறைத்தும் வந்திருக்கின்றன. இந்த விஷதை நம்மவருள் அநேகருக்குத் தெரியாது. என்றாலும் இது நடந்துள்ள சங்கதி.

### இந்தியக் குடியானவன்.

தலைமுறை தலைமுறையாக இந்தியக் குடியானவர், லேவா
செய்யும் செட்டிமாருடைய கைக்குள்ளடங்கியே வந்திருக்கிறார்கள்.
றும்) பிரிட்டிஷ் துரைத்தன மேற்படுவதற்கு முன், இதனால் வி

கூடிய கேடுகள் அதிகமாகப் பிரபலிப்பதற் கிடமிருக்கவில்லை. ஏனெனில் அக்காலத்தில் ஒவ்வொரு கிராமமும் பல அம்சங்களில் அவ்விடத்திய மகா ஜனங்களுடைய அதீனமாகியிருந்தது. ஆதலால் செட்டிமார் தங்கள் மனம்போனபடி நடத்தி (ஜனங்களை ஓட்டாண்டிகளாக்கினால்) அதை மகாஜனங்கள் பொறுத்தே காலங்கழிக்க மாட்டார்கள். செட்டிமார்களுக்குத் தக்கபடி தாங்களே புத்தி கற்பித்து விடுவார்கள். சந்தேகமேயில்லை. தவிர, சர்க்கார் வரி வகைகளும் விளைச்சலில் (ஏதோ ஒரு பகுதியாகச்) செலுத்துவது வழக்கமாதலால், அக்காலத்தில் ரொக்கமாகப் பணம் குடிகளுக்கு அதிகம் வேண்டி யிருக்கவுமில்லை. பிரிட்டிஷ் துரைத்தனத்தாரோ, தேசமெங்கும் கலக முதலியவற்றை அடக்கி, நீதி செலுத்தி, அவரவர் வேலையை அவரவர் பார்க்கும்படி செய்து, தேசக்ஷேமத்தை எவ்வளவோ பெருகச் செய்தாரென்றாலும், கிஸ்து வகைராவைப் பணமாகச் செலுத்தவேண்டுமென்ற நிபந்தனையை ஒருபுறமும், செட்டிமார் அனீதஞ்செய்து அதைக் கிராமத்திய மகாஜனங்கள் பொறுக்கமுடியாமற் போனாலும், அவர்களை யொன்றுஞ் செய்யவொட்டாமல் பந்தோபஸ்து ஒருபுறமும் செய்துவிட்டார்கள். இந்தியக் குடியானவன் வேளாண்மை வெகு நேர்த்தியாகவே செய்பவன். என்றாலும் அவனுக்கு வெள்ளி ரூபாய் செய்கிற செப்பிடுவித்தைகள் விளங்குவதேயில்லை. நாணயம் வளர்ந்து, (பாங்கு முதலிய சாதனங்கள் பெருகி) அதனாலுண்டாகக்கூடிய பணசம்பந்தமான அனுகூலங்களும் அவனுக்குத் தெரியாது. ஆதலால் அவன் (வெகு சுலபமாய்) அதிகவட்டி வாங்குபவர் கையிலகப்பட்டு விட்டான். பணம்வேண்டி யிருந்தால், அறுவடையாகவேண்டிய மகசூலை அடைவுவைப்பதும் வழக்கமாகிவிட்டது. செட்டிக்கோ பணத்தை இருகையாலும் வாரிக்கொள்ள இடமுண்டாயிற்று. கோதுமை, (முதலிய மகசூல்கள்) வெகு சலிசாக விற்கும் காலத்தில் வாங்கிக் களஞ்சியம் சேர்ப்பதும், விலை வெகுதூரம் ஏறியபின் விற்பதுமல்லாமல், அதிலேயே ஒரு பாகத்தைக் குடியானவருக்கு மறுபடி விதைக்காக (விலைகூட்டி) விற்பதுமாக, எல்லாவகையாலும் பணத்தைச் செட்டி வாரினான். வட்டி விகிதம் சில சமயங்களில் 'சரிக்குச்சரி'யாக விருக்கும். தவிர, விசேஷதோஷம் காணாமலிருந்தால், கணக்குப் பைசலாக வேண்டுமென்று காலாவதியாகு முன்னமே நிர்ப்பந்தித்து, பூமியைப் பிடுங்கிக்கொள்ளுவதும் சாமான்யமாகிவிட்டது. ஆகவே குடியானவன் இவ்வாறாகத் தனது பூமியென்பது போய்; ஆஸ்தியைப் பறிகொடுத்து வாரசாகுபடிக்காரனாகத் தலைப்பட்டான். இதனால் அவனுக்கு அன்றாடகக் காலக்ஷேபமும், நித்திய தரித்திரமும் கூடி, க்ஷாமகாலத்தில் ஜீவிக்கப் பழையபடி களஞ்சிய தானியமாவது, பணமாவது ஒன்றுமில்லாமல், திண்டாட்டப் பிழைப்பாகத் தீர்ந்தது."

## ஐக்கிய நாணயம்.

இப்படி விவசாயிகளுக்கு உண்டான கடன் கஷ்டத்தைப் பரிகரிக்க வேண்டிச் சர்க்கார் முதன் முதல் செய்த பல பிரயத்தனங்களை யொவ்வொன்



றாக எடுத்து, அவைகளிற் கண்ட குணதோஷங்களை விவரித்து விட்டு, பத்திரிகையி லெழுயதிவர் இவ்வாறு கூறுகிறார்:—

"இந்த உபாயங்களெல்லாம் இவ்விதமாகத் தள்ளுபடியாகவே, இந்திய கவர்ன்மெண்டார் மகா ஜனங்களுக்குள் அவர்கள் மூலமாகவே கோ ஆபரேடிவ் முறையில் நாணயம் பரவுவதற்கு வேண்டிய உற்சாகமூட்டலானார்கள். இந்த உபாயத்தை விட வேறுவகை காணாததால், இதையே அவர்கள் கையாடித் தீரவேண்டியதாயிற்று. 1892-ம் வருஷத்திலேயே மதிராசு கவர்ன்மெண்டார் ஸ்ரீமான் (இப்பொழுது ஸர்) எப். ஏ. நிக்கல்ஸன் துரையை இந்த விஷயத்தை விசாரித்து ரிபோர்ட்டு செய்ய வேண்டுமென்று நியோகித்தார்கள். அவரும் இதைப்பற்றிப் பெரிய மகா பாரதமாக ரிபோர்ட்டு ஒன்று எழுதினார். அது மூலமாய் ஐரோப்பாவிலுள்ள கோ ஆபரேடிவ் பாங்கு சம்பிரதாயங்களெல்லாம் ஜனங்களுக்குத் தெரியலாயிற்று. அந்த மட்டில் இந்த ரிபோர்ட்டு வெகு பெருத்த உபகாரத்தைச் செய்தது. இப்படியே பஞ்சாபிலும் ஸ்ரீமான் மேக்லாகன் காப்டேன் ஜெ. ஜி. கிராஸ்த்வெயிட்டு ஆகிய இரண்டு சிவில் உத்தியோகஸ்தர், ஒரு சிறிய 'தான்னிய கோளம்' ஆரம்பித்தார்கள். அந்த முறைப்படி கோளத்து மெம்பர்கள் அறுவடை காலத்தில் மீத்துவைக்கக் கூடிய தான்னியத்தைக் கோளத்தில் போட்டு வைத்து, மறுபடி விலை யேறியவுடன் விற்று, அப்படிக் கூடிய பணத்தை மெம்பர்களுக்குச் சலீசு வட்டிக்குக் கடனாகக் கொடுத்து வந்தார்கள்.

என்றாலும் இவர்களால் இந்தப் பெரிய காரியத்திற்குத் தக்க பரிகாரம் தேடி முடியவில்லை. கடைசியாக ஐக்கிய மாகாணத்தில் தான் இதற்குத் தக்க 'பரியாரி' அகப்பட்டார். ஏனெனில், இவ்விடத்திய சிவில் உத்தியோகஸ்தரில் ஒருவராகிய ஸ்ரீமான் எச். டுபேர்னெக்ஸ் என்பவருக்குப் பண விஷயத்தில் யூகம் அதிகம். ஆகவே இவர் அற்புதமான சிறு புஸ்தகமொன்றெழுதினார். அதில் ஜர்மானிய கோ ஆபரேடிவ் முறையை இந்தியாவின் அவசரத்திற்கு இன்னின்ன வகையாக அமைக்கலாமென்று விளக்கினார். (தவிர) இந்தியாவில் கிராமமென்பது அனாதியந்தமாய்க் கோ ஆபரேடிவ் ஸொஸைட்டியாகவே யிருந்து வந்திருப்பதை அவர் எடுத்துக்காட்டி, இப்போது அது எங்கே கெடாமலிருக்கிறதோ, அவ்விடங்களில், கிராமத்தின் சாகுபடி பூமியைக் கிராமத்தவர் 'பொத்தியில்' அனுபவித்து வருவதையும், கிஸ்துக்கு அவர்களெல்லோரும் 'பொத்தியில்' ஜவாபுதாரிகளாயிருப்பதையும் சுட்டிக் காட்டினார். அல்லாமலும் கிராமத்தினுடைய க்ஷேம லாபங்களையும் நய நஷ்டங்களையும், கிராமச் சபையாரே ரக்ஷித்து வருகிறார்கள். பிரிட்டிஷ் துரைத்தனத்தார் வேண்டாதபடி யெல்லாம் கிராம விஷயங்களில் பிரவேசித்து, தலைக்குத் தலைபண்ணாட்டை வளரச்செய்து வந்திருப்பது வாஸ்தவமென்றாலும், பழைய பந்தம் கிராமங்களில் இன்னும் பூராவாகப்போகவில்லை. ஆகவே இப்படி யிருக்கும் கிராம மாமூல்களை யொட்டி, ஜர்மானியாவில் காணும் ரயே

சன் பாங்குகளை இந்தியாவிற்கும் உபயோகப் படும்படி செய்வது சாத்தியமென்றும் ஸ்ரீமான் பேர்னெக்ஸ் துரை விளக்கினார். ராபேசன் பாங்குகளென்பவை கிராமத்தவர் மட்டுமே சேர்ந்தாகிய நாணயச் சங்கங்களென்றும், அவர்கள் தங்களுடைய சர்வ சொத்தையும் ஜாமீன் காட்டி, அதனால் பணம் கிடைக்குமிடங்களிருந்தெல்லாம் வெகு சலீசு வட்டிக்குவாங்கி, அதற்குச் சில்லரையாகக் கொஞ்சம் கூட்டி ஸொஸைட்டி மெம்பர்களுக்குமட்டுமே கொடுத்து வியாபாரம்செய்து வருபவைகளென்றும் அனேகமாய் எல்லோருக்கும் தெரிந்திருப்பதால் அவைகளைக்குறித்து அதிகம் எழுத வேண்டியதில்லை. இந்தமாதிரி கொடுக்கும் கடன்கள் ஆதாயம் கூடுகிற வியாபாரங்களுக்கு மட்டுமே பெயருகிறபடியாலும், முதலுக்கு மோசம் வாராமற்படி வேண்டியமட்டில் பந்தோபஸ்துகளிருப்பதாலும், ஐரோப்பில் இப்போது நடைபெறும் ஆயிரக்கணக்கான பாங்குகளில், 'திவாலி' யாய்ப்போனது ஒன்றுகூட இல்லையென்பது நிச்சயம். இந்த உபாயத்தினால் ஜர்மானியக் குடித்தனக்காரன் சாவுகார் வலையினின்றும் தப்பி, இப்போது வேளாண்மைத் தொழில் செய்து முன்னுக்கு வந்து கொண்டிருக்கிறான். இவைகளுக்கு (ஆரம்பத்தில் வேண்டிய) பணம் சம்பாதிப்பதற்காக, ஜர்மானிய கோ ஆபரேடிவ் முறையில் வேறொரு சம்பிரதாயப்படி 'பட்டணப் பாங்குகள்' ஆரம்பிக்கலாமென்றும், இப்படி யாரம்பமாகும் பட்டணப் பாங்குகளுடன் கிராமச் சங்கங்களை ஒட்டிவிடலாமென்றும், இவ்வாறு செய்வதால் ஆங்காங்கு பணம் நடமாடிப் பட்டணத்திலிருந்து கிராமங்களுக்கும், கிராமங்களிலிருந்து பட்டணத்திற்கும், சில வட்டங்களில் சுற்றி வருமென்றும், துரையவர்கள் சொன்னார்கள்.

(அக்காலத்தில் ஐக்கிய மாகாணக் கவர்னராயிருந்த) ஸர் அந்தோனி மக்டானல் துரையும் இதை ஆமோதித்து ஸ்ரீமான் பேர்னெக்ஸ் துரையையே நியோகித்து, (அக்காலத்தில் வடமேற்கு மாகாணங்களென்று வழங்கிவந்த) தமது மாகாணத்தில் பாங்குவேலையை ஆரம்பிக்கும்படி ஆக்ஞாபிக்க, அவரும் அப்படியேசெய்ததால், சீக்கிரத்தில் அப்பிரதேசத்தில் பல சிறு பாங்குகள் குஷாலாக வேலை நடத்திவந்தன. அனேகமாய் அவைகளெல்லாம் மொத்தத்தில் ஜர்மானிய முறையையே அனுசரித்து வந்தன. மெம்பர்கள் தங்களுடைய காரியங்களைத் தாங்களே நடத்திவந்தார்கள். அந்தக் காரியங்களெல்லாம் வெகு சுலபமானவை. ஆதலால் நடந்தமட்டில் எல்லாம் வெகு திறமாகவே நடந்துவந்தன. தவிர இந்த சம்பிரதாயம் தங்களுக்கு ஏற்றதென்று காணவே, அவர்கள் தங்களுடைய '[illegible]' இந்த பாங்குகளில் [illegible] வைத்து, அதனால் பாங்குகள் விஷயத்தில் தங்களுக்கு [illegible]மாயிருப்பதாக [illegible]. [illegible] காரியம் சித்தியானதாக [illegible] [illegible]



குக் கொண்டுவந்து, தான் முகாமையாக நின்று, இந்தச் சம்பிரதாயத்திற்குச் சட்டமூலமாகப் பலங்கட்டினார்.

## இம்முறை பரவிப் பிரபலித்தது.

இதுதான் கிரமமான ஆரம்பம். இப்படி யாரம்பமாகி யின்னும் எட்டுவருஷம் பூர்த்தியாகவில்லை. என்றாலும் இதற்குள் இந்தமுறை இந்தியா வெங்கும் பரவியிருக்கிறது. இன்னும் அற்புதமான வேகத்துடன் பரவியும் வருகிறது. 1908-ம்வருஷத்தில், 1201 கிராமப்பாங்குகளிருந்தன. அவற்றிற்கு 93,200 மெம்பர்கள். தவிர, 149 கோஆபரேடிவ் அர்பன் பாங்குகளும், அவற்றுள் 55,500 மெம்பர்களு மிருந்தார்கள். இவர்களுடைய வியாபாரமுதல் 44 லக்ஷம், என்றால், கால் கோடி பவுனுக்கு அதிகமாகவேயிருந்தது. 1907-ம் வருஷத்திலோ 89 அர்பன் பாங்குகளும், 740 கிராமப்பாங்குகளும் தான் இருந்தன. முதல் 23 லக்ஷம். இதிலிருந்து ஒருவருஷத்திற்குள் இந்த முறை எப்படி பெருகுகிறதென்பது விளங்கும். மேற்சொல்லிய 44 லக்ஷத்தில் 6½ லக்ஷம்தான் சர்க்கார் எல்லாவகையாலும் இச்சங்கங்களுக்கு உதவியது. 9 லக்ஷத்திற்கு மேலாகவே மெம்பர்கள் தாங்களாகப் போட்டிருக்கும் பங்குத்தொகையாம். 18 லக்ஷம் சாமான்னிய வியாபாரத்தில் வாங்கிய கடன்களும், சில்லரை நபர்களிடமிருந்து வாங்கியவையும். 12 மாதங்களுக்குள் மெம்பர்கள் 4 லக்ஷம் டிபாசிட்டு வைத்திருக்கிறார்கள். 1908-ம் வருஷத்தில் இந்தப்பாங்குகளில் டிபாசிட்டாக மெம்பர்கள் வைத்திருப்பது 9 லக்ஷத்திற் கதிகமாகவே யிருக்கிறது. க்ஷேமதனமோ ரூபா 78,000மும் சில்லரையுமென்று கணக்குக் காணுகிறது. சர்க்கார் இவ்விஷயத்தில் செய்தது இரண்டு முக்கிய உபகாரங்கள். முதலாவது ஜனங்களுக்கு இந்த முறையை விளக்கி, அவர்கள் இதில் அக்கரைப்படும்படி செய்தது. இதற்குப்பின் (வேலை யாரம்பமான பிறகு) கவர்ன்மெண்டு தரபில் ஆடிட்டுத் தணிக்கையைச் சங்கங்களுக்குச் செலவில்லாமல் செய்துவந்தது. அடைசியாக வந்த இந்தியத்தபாலில் 1909-ம் வருஷத்திய மொத்தக்கணக்குகள் வந்து சேர்ந்திருக்கின்றன. அவைகளைப் பரீட்சிக்கையில் இக்காரியம் கைகூடிவருகிற மாதிரியைப்பார்த்து யாரும் பிரமிக்கவேண்டும். ஏனெனில் கோ ஆபரேடிவ் முறையில், பட்டணவகை, கிராமவகை, ஆகிய இருவகைச் சங்கங்களுமாக ஈனது தேதியில் 2008 உருப்படிகளிருப்பதாகவும், ஆகவே சென்ற வருஷத்திய சங்கியைக்குமேல் 658 சங்கங்கள் கூடியிருப்பதாகவும் தெரிகிறது! மெம்பர் மொத்தம் 1,49,160-லிருந்து 1,84,897 ஆகியிருக்கிறது. வியாபாரமுதலோ இரட்டித்துவிட்டது. ஆகவே அது 81 லக்ஷமாகிறது. 1909-ம் வருஷத்திய கணக்குகளில் இந்த லட்சணம் நமக்கு வெகு திருப்திகரம். அதாவது, வியாபாரமுதலுக்காக சர்க்கார் உதவியது கொஞ்சம் ஆயிரக்கணக்கேயொழிய, அதிகமில்லை யென்பதாம். (ரூ. 6,51,186-லிருந்து ரூ. 6,86,143-வரை தான் ஏறியிருக்கிறது.) இதே காலத்தில் [illegible]

ரை நபர்களிடமிருந்து கடனாகவாங்கியது முன்வருஷத்தைவிட இரண்டு பங்குக்கு மேலாகி யிருக்கிறது. அதாவது ரூபா 12 லக்ஷத்திலிருந்து ரூபா 25 லக்ஷமாகியிருக்கிறது. இதனால் இந்தப் பாங்குகளுக்குப் பணம் நடமாடுமிடங்களில் நாணய மதிகரித்து வருகின்றன வென்றும், (ஒருவருடைய தயவும் வேண்டாமல்,) சாமான்னியமாய் லேவாதேவிசெய்து வேண்டிய பணம் பெறுகின்றனவென்றும் விளங்குகிறது.

## (வியாபார) முதலும் ராஜபக்தியும்.

இந்தியக் குடியானவன் எவ்வளவிற்கு மாமூலை யனுசரித்து நடப்பவனென்றும், இந்திய ஜனங்களுக்குள் பரஸ்பர விசுவாசம் எவ்வளவு குறைந்து போயிருக்கிற தென்றும் நாம் நினைத்துப் பார்ப்போம். (தவிர.) இந்தியக் குடியானவனுக்கு அனாதியந்தமாய்த்தெரிந்து வந்திருக்கிற பாங்கு 'மொந்தை' யொன்று தானென்பதையும், அதில் தான் மீத்து வைப்பதைப்போட்டுப் புதைப்பதொன்று, அல்லது தனது பெண்டிர் வகைக்குக் கைவளைகளாக்கிப் போட்டு வைப்பதொன்று, ஆகிய இரண்டு வகைகளை விட்டு வேறு விதத்தில் மீதித் தொகைகளை க்ஷேமித்து வைப்பது அவனுக்குத் தெரியா தென்பதையும் நாம் நினைவில் வைத்துக் கொள்ளுவோம். இவைகளை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு (இப்போது மேற்குறித்தபடி நடந்துவரும் காரியங்களை) விசாரித்தால், பழைய நிர்ப்பந்தங்கள் எவ்வளவு சீக்கிரம் அற்புதமான விதமாய் மாறித் தொலைந்து விடுகின்றன வென்பது நமக்குச் சரியாக விளங்கும். இந்த மாதிரிச் சங்கங்களெங்கே செழிக்கின்றனவோ, அவ்விடங்களில் இனிப் பணம் புதைபடா தென்பதும், வெள்ளியாக உருகி நகையாகா தென்பதும் தெளிவாகும். ஏனெனில் பணம் கிரமமாக எப்படி யுபயோகப்பட வேண்டுமோ அப்படியே உபயோகப்பட்டு, காலக் கிரமத்தில் ஒன்று, பத்து, நூறாக அறுவடையாகக் கூடிய பண மகசூலுக்கு ஏற்ற வித்தாக ஏற்படுகிறது. இப்படி யிருப்பதால், இந்தியாவில் புதைபட்டுக் கிடக்கும் பணம் இவ்வளவென்று யாரால் ஊகிக்க முடியும்? அல்லது, இப்படிப் புதைப்பட்டிருக்கும் பொருள் வெளிவந்து வியவசாயத்திற்கும், கைத்தொழில்களுக்கும், ஜீவகளை கொடுத்து வருமானால், அதனால் மகா ஜனங்களுக்குக் கிடைக்கக்கூடிய நன்மைகளைத் தான் யார் நிதானிக்க முடியும்? இப்போது நடக்கிற ரீதிக்கே இந்த முறை (மகா ஜனங்களுக்குள்) பெருகிவந்தால், இதனால் சமீபத்திலுண்டாகக் கூடிய நன்மைகளை நினைக்கையிலேயே தலை சுற்றும்! ஏனெனில், இந்த முறையானது இந்தியா வெங்கும் பாவி, இந்தச் சங்கங்களுடைய மெம்பர்களும், வியாபார முதலும் கோடிக்கணக்கில் குவிந்து விடும். ஆகவே க்ஷாம காலத்தில் ஜனங்கள் கஷ்டப்படாமற் பார்த்துக்கொள்ளுவதற்கும், சர்க்காரைத் தூஷிப்பவர்களுடைய வாயை அடைப்பதற்கும், வெகு நன்றாயேற்ற சாதனமாக இது தீர்ந்துவிடும். இந்தச் சங்கங்கள், ராஜத்துரோகிகள் கைவசப்பட்டு விட்டாலும் விடலாமென்று சிலர் சமுசயப்படுவது



வாஸ்தவமே. என்றாலும் இப்படி யெண்ணுவது விவேக மானதல்ல வென்று எளிதில் விளங்கும். எவனையும் ராஜபக்தியுள்ளவனாகச் செய்ய வேண்டுமானால், அவனுக்குக் கொஞ்சம் 'பசை', யுண்டாக்குவதைவிடச் சிறந்த மார்க்கம் வேறில்லை. ஏனெனில் (எந்த விதமான சந்தர்ப்பத்திலும்) தேச க்ஷேமத்தையே நாடி, அதில் கலக முதலிய விபரீதங்கள் பிரபலியாமல் பார்த்துக் கொள்வதற்கு உத்தமமான சாதனமாவது, அத்தேசத்தில் அந்த விபரீதங்களால் சிறிதேனும் நஷ்டப்படக் கூடிய ஜனங்களுடைய தொகுதியே யொழிய, (தேசத்திலிருந்தும் படுபாபாகி 'ஆண்டி யடித்தால் கந்தை பறக்கிறதென்று' சொல்லித் திரிபவரன்று.")

---

# பங்காளத்தில் ஐக்கிய நாணயம்.

———(:-:)———

[இந்தியன் பிளான்டர்ஸ் கெஜெட்.]

சாமான்னியச் சிறுவர்களுக்குள் செய்வதற்கு கிரகஸ்த மார்க்கமான வேலைமட்டும் கொஞ்சம் அதிகமாயிருந்தால், அவர்களுக்குள் இப்போது கண்டுவரும் குழப்பமும், ராஜத்துரோக சிந்தையும் அரை வரிசைக்குமேல் குறைந்து போமென்றே நாம் எப்போதும் சொல்லி வந்திருக்கிறோம். பள்ளிப் பிள்ளைகளில் அனேகர் தாங்கள் 'கொடுத்த' பரீக்ஷைகளுக்கு நியாயமாய் இன்னின்ன பதவிகள் தங்களுக்குக் கிடைத்திருக்க வேண்டுமென்று எண்ணிக்கொண்டு, அப்படிக் கிடையாமற் போகவே, ஆயிரக் கணக்காய் மெட்ரிகுலேஷன் பரீக்ஷைகொடுத்தவர் எவ்வித மோச காரியத்திற்கும் உடன்பட்டு, துரோகத்தொழில் கற்க அமைந்திருக்கிறார்கள். சென்ற ஐந்துவருஷகாலமாக இந்தியாவெங்கும் நடந்த முக்கிய காரியங்களை ஆராய்ந்தால், இத்தேசத்தில் கண்டுவந்த பெரிய குழப்பத்தில் இந்தச் சிறுவர் எவ்வளவு மட்டில் சம்பந்தப் பட்டிருக்கிறார்களென்பது விளங்கும். தவிர இவர்களுக்குக் கிரகஸ்த மார்க்கமாய் ஜீவனம் ஏற்பட்டாலொழிய, அவர்களால் வெகு பிரபலமான உபத்திரவங்களுண்டாகியே வருமென்பதும் எந்த முட்டாளும் தெரிந்துகொள்ளக்கூடியது. ஆதலால் இப்போது இம்பீரியல் லீக்கு என்று பிறந்திருக்கிற சங்கத்திற்கு நல்ல சமயம் கிடைத்திருக்கிறது. இந்தச் சங்கத்தின் மெம்பர்களெல்லோரும் செல்வமும் செல்வாக்கும் பெற்றுயர்ந்திருப்பவர். ஆதலால், இப்போது சர்க்கார் மேற்கொண்டிருக்கும் வெகு பெருங்காரியமாகிய கிருஷிவிமர்சனத்தில் இச்சிறு புத்திமான்கள் சேர்ந்து உபகரிக்கும்படி செய்வதற்காக அவர்களுக்கு ஏன் இச்சங்கத்தவர் திரவிய சகாயம் செய்யக்கூ

டாது? பங்காளங்கள் இரண்டு பாகங்களிலிருந்தும், ஐக்கியமாகாணங்களிலி
ருந்தும், கவர்னர்கள் இவ்வாறு முறையிட்டுவருகிறார்கள். இப்பெருங்காரி
யத்தை நாம் இவ்வளவு நன்றாய் ஆரம்பித்திருப்பதால், இதற்குத் தருமமாயு
ழைக்கப் பிரியமுள்ளவரெல்லாம் வரலாமென்று அவர்கள் கூவிவருகிறார்கள்.
இம்பீரியல் லீக்குக்காரர் வேண்டுமென்றால் இம்மாதிரித் தருமகாரியஸ்தர்க
ளைச் சன்னைகப்படுத்தி யனுப்பலாம். நூற்றுக்கணக்கான சிறுவர்கள் கல்வி
யில் தேர்ந்து பிழைக்கும்வழி தெரியாமல் மயங்கி, அது கிட்டாமற்போகவே
ஆரோகசிந்தையை மேற்கொண்டு கெட்டுப் போகிறார்கள். இவர்களுக்குக்
கொஞ்சம் திரவிய சகாயம் செய்யக் கூடுமானல் (காரியம் முடியும்.) ஏனெனில்
ரயித்துகளைக் கடனில் முழுக வொட்டாமலும் பைத்தியம் பிடிக்க வொட்
டாமலும் செய்வதற்கு ஏற்ற ஒரே உபாயமாகிய ஐக்கிய நாணய முறையைப்
பிரபலப் படுத்துவதற்கு எத்தனையோ பெயர் உழைக்கவேண்டும்.

இந்த சந்தர்ப்பத்தில் பரத்வான் மகா ராஜாவையும் அவருடன் சேர்ந்து
உழைப்பவர்களையும், மூன்று மாதத்திற் கொருமுறை வெளிவருவதாகிய
பங்காள வியவசாயச் சஞ்சிகையில், அக்டோபர் நெம்பரில் ஐக்கிய நாணய
விஷயமாய் எழுதியிருக்கும் வெகு நேர்த்தியான வியாஸத்தைப் படிக்க
வேண்டுகிறோம். அது பங்காள வியவசாய டைரெக்டராக வேலை பார்க்கும்
ஸ்ரீமான் டப்ளியூ. எச். புக்கான் துரை யெழுதியது. இவருக்கு வயது
சிறிதாகிலும் சிவில் உத்தியோகஸ்தரில் வெகு சாமார்த்திய சாலி. இந்தப்
பத்திரிகையில் இவர் ஐக்கிய நாணயச்சங்க ரிஜிஸ்திராராக இருந்து அமுல்
நடத்திய வைபவத்தைப் புகழ்ந்து பலமுறை நாம் எழுதியிருக்கிறோம்.
இப்படிப் பலவகையாலும் இந்த விஷயத்தை இவர் ஆழ்ந்தறிந்தவராதலால்,
இவர் பேச்சுக்கு விலை விசேஷித்து வைக்கவேண்டும். ஆகவே இவருடைய
வியாசத்தில் கடைசிப் பிரகரணத்தை இங்கு எடுத்து எழுதுகிறோம். அத
ற்கு உபசாரம் ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை யென்று நமக்குக் காணு
கிறது. பர்தவான் மகாராஜா, மகாராஜா பிரத்தியோத குமார தாகோர், முத
லிய மகா விவேகிகளுக்கும், மதியூகிகளுக்கும், இதில் ஒரு சேனை யுக்தி
களும் யோசனைகளு மிருக்கின்றன. அவைகளை ஆராய்ந்து காரியத்திற்குக்
கொண்டுவந்தால் வெகு உபயோகமுண்டு. ஸ்ரீமான் புக்கான் துரை எழுது
கிறார்:—"இப்போது நாம் சொல்லிவந்ததற் கெல்லாம் முடிவு என்ன வென்
றால், வியவசாயத்தில் கோ-ஆபரேஷன் முறை யென்பது வாய்ச் சளுவாகப்
பேசி ஆரம்பிப்பதல்ல வென்பதாம். ராபேசன் முறையை நாம் எடுத்தது
போல், ஏதோ ஒரு சம்பிரதாயத்தை முன்னிட்டு, அதைச் சிறிதும் விமரிசை
பார்க்காமல் இந்தியா வெங்கும் ஒரே முழுக்கில், தாரிக்குக் கொண்டுவருவது
கூடாத காரியம். ஏனெனில் எல்லாப் பிராந்தங்களுக்கும் ஒப்பி உதவக்கூடிய
பொது லக்ஷணங்கள் பொருந்திய சங்கமென்பது உலகத்தில் கிடையவேகி
டையாது. நாம் மனித ஜாதியைக்குறித்து மொத்தமாகப் பேசியும் சிருஷ்டி
சிலவற்றையும் அவ்வாறே உலகத்திற்குப் பொதுவாகப் பேசியும் வருவதால்



அது சரிதான். ஏனெனில், இப்படிப் பொதுவாக வியவகரிப்பதற்கு வேண்
டிய மட்டில் இரண்டு வகையிலும் லக்ஷணங்கள் உலக மெங்கும் ஒரு மாதிரி
யாகவே காணுவதாக ஒப்புக்கொள்ளலாம். ஆனல் நாம் இப்பொழுது
போராட வேண்டி யிருப்பதோ பலவகையிலும் சிக்குகள் கூடிய (இந்தியப்)
பண்டமாற்று ரகசியமும், அதற்குச் சாதனங்களான வியாபார முறைகளு
மாம். ஆதலால் ஒவ்வொரு பிராந்தத்திற்கு ஒன்றாகப் பல மாதிரிகளில் சங்
கங்கள் ஏற்படவேண்டும். ஒவ்வொன்றும் ஏற்படுவதற்கு முன், அந்தந்த
ப்பிராந்தங்களுடைய விசேஷ லக்ஷணங்களையும், சில்லரையாகக் காணும்
எல்லா நய நஷ்டங்களையும் தீர விசாரித்துப் பிறகு தான் ஏற்படவேண்டும்.

இப்படி யெல்லா மிருந்தபோதிலும், கிருஷி விஷயத்தில் கோ-ஆபரே
ஷன் செழிக்குமானல் அதனல் ரயித்துக்களுக்குக் கிடைக்கக் கூடிய நன்மை
கள் அபாரமானதால், எப்படியாவது அவைகளைக் குடிகள் அடையும்படி
மன்றுடுவது சரியேயாம். ஆதலால் இச்சங்கங்கள் வியவசாயம் சீர்ப்பட்டுச்
செழிக்க வேண்டியதற்காக அந்த டிபார்ட்மெண்டாருக்கு வெகு நன்றாய்
உதவி வரலாம். ஆகிலும் (இவைகளை நிர்வகிப்பதில்) இரண்டு விஷயங்கள்
தெளிவாய்த் தெரிகின்றன. முதலாவது, சர்க்கார் இந்த சங்கங்களை அடக்கி
யாளுவது சாத்தியமன்று. இவைகள் தங்களுக்குச் சுதாவில் உள்ள யோக்
கியதை யெவ்வளவோ அவ்வளவிற்குத் தான் செழித்துப் பிரபலிக்கும். ஆத
லால், (இச்சங்கங்களின்) காரியம் சீராக நடந்து வருவதற்காக, கைவலுத்த
பிராசுதார் மட்டுமே யன்றி, (சாமான்னியக் கிருஷிகரும்,) ஏழைகளும் இவற்
றில் மெம்பராகவேண்டும். இரண்டாவது, ரிஜிஸ்திராருக்கு இப்பொழுது
கிடைத்திருக்கும் சிப்பந்திகளைக் கொண்டு, இம்மாதிரி ஸொஸைட்டிகளை
யாரம்பிக்க வேண்டிய சங்கற்பங்களையும் செய்துகொண்டு, (ஆரம்பித்துள்ள
காரியங்களையும் நிர்வகித்து,) ஸொஸைட்டிகளைப் பெருக்குவது அசாத்தியம்.
ஆதலால், ஒன்று, சம்பளத்திற்காக உழைக்கும் சிப்பந்திகள் இவருக்குச்
சகாயமாக இன்னும் வெகு பெயர் கூடவேண்டும். அல்லது, உத்தியோகஸ்
தரைத் தவிர்த்து, மகா ஜனங்களில் பெரியதனக்காரராகித் தருமத்திற்குப்
பாடுபடும் கிரகஸ்தர்களை இன்னும் அதிகமாகச் சேர்த்து, அணிவகுத்து,
அவர் மூலமாய்ச் சங்கங்களை அடக்கியாள வேண்டும். இரண்டாவது முறை
சாத்திய மென்றால், அது தான் உத்தமபக்ஷம்".

### ஸர் ஜான் ஹியூவெட்டு துரையின் அபிப்பிராயம்.

ஐக்கிய மாகாணங்களுடைய அட்மினிஸ்ட்ரேஷன் ரிபோர்ட்டை யாராய்
ந்து எழுதுவதில், (கவர்னராகிய) ஸர் ஜான் ஹியூவெட்டு துரை ஐக்கிய நாண
யம் பெருகுவதால் வியவசாயிகளுக்குக் கிடைக்கக் கூடிய நன்மைகளை விவரி
த்து அந்த விஷயமாக ஸ்ரீமான் புக்கான் சொல்லிய முக்கிய அம்சங்களைச் சரி
யென்று தாமும் ஆமோதிக்கிறார். அவர் சொல்வது:—

"இந்த வருஷம் ஐக்கிய நாணயமுறையில் காரியம் நடந்து வந்திருப்பதைப் பார்க்க மனதுக்கு வெகு தூரம் தைரியமுண்டாகிறது. இவ்வருஷத்தில் வேலையாரம்பித்த சங்கங்கள் பல. ஆதலால், இவைகள் யாருக்கு உபகாரகரமோ அவர்கள் இவற்றின் அனுகூலங்களை முந்தியகாலத்தைப்பார்க்கிலும் நன்றாயறிந்து வருகிறார்களென்பது நிச்சயம். தனவான்களும் இந்த முறையை நல்லதென்று கண்டு, இதன் விஷயத்தில் இதுவரையிருந்த மாதிரியில்லாமல், கொஞ்சம் சௌம்மியமாகவேயிருப்பதைப்பார்த்து நாம் திருப்தியடைகிறோம். ஏனெனில், இவர்கள் இதற்கு முன் இந்த விஷயத்தில் வெகு அசிரத்தையாயிருந்தவர்கள். இந்த வருஷத்தில் ஸொஸைட்டிகள் இரட்டித்துப் பெருகிய போதிலும், இந்த மாகாணத்தில் உள்ள வியவசாயிகளாகிய மகா ஜனங்களுக்கு இவை வாஸ்தவத்தில் உபகாரமாக வேண்டுமானால், ஐக்கிய நாணயம் இந்தப் பிராந்தங்களில் இன்னும் வெகு தூரம் பரவ வேண்டும். அனேக கேசுகளில் ஸொஸைட்டிகளுக்கு வேண்டிய பணம் உள்ளூர் வியாபாரிகளிடமிருந்தே சிரமமில்லாமல் கிடைத்திருக்கிறது. வேறு அனேகமிடங்களில், பெரிய ஜாயிண்டுஸ்டாக்குக் கம்பெனிகளிடமிருந்து வியாபார முதல் கடனாக வாங்கியிருக்கிறது. இதனால் லேவாதேவிக்காரருக்கு கோ ஆபரேடிவ் முறை விஷயத்தில் பெருகி வரும் விசுவாசம் ருசுவாகிறது. நாட்டுப் புறங்களில், ராபேசன் ஸொஸைட்டிகளுடைய சங்கியை குறைந்து வருகிறது. (அதுவும் திருப்திகரமே.) இவற்றில் வியாபார முதல் யாரோ தருமிஷ்டர் ஒருவர் கொடுத்து உதவியதாக, இப்போது புதிதாக ஆரம்பமாகும் ஸொஸைட்டிகளும், பழைய ஸொஸைட்டிகளில் அனேகமும், பங்கு விகிதம் வைத்து முதல் சேகரிப்பதை நியமமாகக் கொண்டு வருகிறார்கள். இந்தப் பங்குகள் பல தவணைகளில் செல்லாக வேண்டியவை. இந்த முறையினால் ஒவ்வொரு மெம்பருக்கும் தனது ஸொஸைட்டி விஷயத்தில் அது முன்னுக்கு வரவேண்டுமென்கிற அக்கறை யதிகரிக்கிறது. இந்த வருஷத்திய அனுபவத்தினால், நாம் ஒரு ரகசியம் அறிகிறோம். அதாவது கட்டுமானம் கூடிய சிறிய கிராமங்களில், ஒவ்வொரு மெம்பரும் தன்னுடையவும், மற்ற மெம்பர்களுடையவும் பொறுப்பைப் பரஸ்பரமறிந்து தீரவேண்டி வருவதால், அம்மாதிரி ஸொஸைட்டிகளிருக்குமிடங்களில் தான் அவற்றினுடைய நற்பயன் பூரணமாகக் கிடைக்கிறதென்பதேயாம். பெனாரிஸ் ஜில்லாவிலிருந்து, கோ ஆபரேஷன் முறை முற்றுவதால் கிடைக்கக்கூடிய விசேஷப்பிரயோஜனமொன்று கைகூடியிருப்பதாக ரிபோர்ட்டு வந்திருக்கிறது. ஏனெனில், அவ்விடத்திய கிராம்ப்பாங்கு ஒன்று தனது மெம்பர்களுக்குப் பணம சலீசாக வாங்கிக் கொடுப்பதாகிய வேலையை மட்டுமே செய்து வந்ததல்லாமல், கிராமத்தில் கிருஷி விமரிசையாக வேண்டிய பெருங்காரியத்திலும் அக்கறைப்பட்டு மேற்கொண்டதாம்."

# கோ ஆபரேஷன் முறையில் எடுத்து நிர்வகிக்கக்கூடிய காரியங்கள்.

———:-:———

பாதிரி ஸ்ரீமான் ஜார்ஜ் தாம்ஸன் பாபட்லாவிலிருந்து நமக்கு இவ்வாறு எழுதுகிறார்:—

கோ ஆபரேடிவ் சங்கங்கள், எந்த மெம்பருக்கெல்லாம் நாணயமிருக்கிறதோ, அவர் நாணயமாய்க் கொடுக்கல் வாங்கல் செய்வதைச் சாத்தியமாக்கி உபகரிக்கப் பிரயத்தனப்படுகின்றன. 'கொடுக்கல்' 'வாங்கல்,' அல்லது 'வரவு' 'செலவு', என்கிற இரண்டு அங்கங்களில்லாமல் 'உலகத்தில் எந்தத் தொழிலும் நடந்து செழிக்கக் கூடியதல்ல. சர்க்கார் நடவடிக்கைகள் கூட லேவாதேவி முறையில் தான் நடப்பனவாம். எந்தத் தொழிலும் ஸ்திரப்பட்டு ஓங்குவதனால், அதற்கு நாணயமும் பலப்படுகிறது. ஏனெனில் அதை விசுவசித்தால் நஷ்டமொன்றுமில்லை யென்று அதன் நடவடிக்கையில் ருசுவாகிறது. இவ்வுலகத்தில் எத்தனையோ கோடி பெயர் எப்போதும் முன்னுக்கு வரக்கூடியவராயும், ஏதாவது தொழில்களைப் புதிதாகக் கண்டுபிடிப்பவராயும், வியாபாரங்களில் மேம்படுபவராயும் இருக்கிறார்கள். என்றாலும், இவர்களை எக்காலத்திலும் தரித்திரம் விடாமல் பிடித்துக் கொண்டிருக்கிறது. ஏனெனில், இவர்களுக்கு நாணயமென்பது இல்லை. ஆனால், இப்படித் தனியாகப் பிரயத்தனப்படும் நபர்கள் தங்கள் காரியத்தைச் சாதிப்பது நிச்சயமாயில்லை யென்றாலும், இம்மாதிரி நபர்கள் பலர் கூடிச் சங்கமாகச் சேர்ந்தால், அவர் காரியம் பலிப்பதும் சாத்தியம், பலித்தும் வருகிறது. ஏனெனில், கோ ஆபரேடிவ் முறைக்கு இது தான் சரியான பகுடப். அதாவது, "எல்லோரும் ஒருவருடைய க்ஷேமத்திற்காகவும், (ஒவ்)வொருவரும் எல்லோருடைய க்ஷேமத்திற்காகவும்," (பாடுபட வேண்டுமென்பதாம்.) விளக்கிக் கூறுமிடத்து, இதன் பொருளாவது, "சங்கத்தினுடைய 'பொத்தி' நாணய பலத்தினால், அதன் ஒவ்வொரு மெம்பருக்கும் நாணயம் வலுத்து விடுகிறது. ஆகவே அவர் தன் காரியத்தைத் தாராளமாய் நடத்தலாம். மற்ற பக்ஷத்தில், 'பல துளி பெருவெள்ளம்' என்பது போலவும், 'ஆயிரங்கட்டு ஆனைப் பலம்' என்பது போலவும், ஒவ்வொரு மெம்பருடையவும் 'துளி' நாணயமெல்லாம் கூடி, பல நபர் கூடிய சங்கத்திற்கு நாயணம் அபாரமாய்ப்பெருகும்படி செய்து விடுகிறது.

## கோ-ஆபரேஷன் நடையில் காணும் தினுசுவகைகள்.

ஒரு சங்கம் ஆரம்பிக்கையில் அது செய்யவேண்டிய காரியத்தைப் பார்க்குமிடத்து இந்தக் கேள்வி பிறக்கிறது:—எந்தக் காரியங்கள் நாம் எடுத்து நிர்

வகிக்கக் கூடியவை? சங்கங்களினுடைய கஜானக்களில் நியமமாக வந்து சேருகிற அனேக சிறு தொகைகளைக் கொண்டு நாம் எந்த வியாபாரம் செய்வது உத்தமம்? என்பதாம். இப்படி நாணயத்தை முன்னிட்டு வந்து சேருகிற தொகைகளைக் கொண்டு, அவற்றை வெகு தீவிரமாய் வேண்டுகிறவர்களுக்கு உதவப்பார்ப்பதில், ஐந்து மார்க்கங்கள் நலமென்று காணுகின்றன. இதில் முதலாவது தான் உத்தமமானதாகவும் காணுவது. அது ஐக்கிய நாணயப் பாங்கு. இதன் மூலமாய் வியவசாயிகள் தங்களுடைய அவசரங்களுக்கும் மற்றவர்களுக்கும் உதவ வேண்டி, தாங்களே பங்குத் தொகையாகப் பணத்தைப் போட்டோ, அல்லது தங்களிடமிருந்தும், வேறு புள்ளிகளிடமிருந்தும், கடனாக வாங்கிய பணத்தைப்போட்டோ, சமயங்களுக்கு உதவிவருவதே இப்பாங்குகளின் லக்ஷியம். வியவசாயிகளையும் மற்ற வகுப்பாரையும், இவ்வாறு ஜன்ம முள்ளவரை கடனாளிகளாகி வருந்தாமலிருக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் இந்தியா கவர்ன்மெண்டார் 1904-ம் வருஷத்திய பத்தாவது ஆக்ட்டு என்னும் கோ ஆபரேடிவ் நாணய சங்கங்கள் ஆக்ட்டை ஜாரிக்குக் கொண்டுவந்தார்கள். இந்த ஆக்ட்டின்படி, ஒரே பட்டணத்தில் அல்லது கிராமத்தில், அல்லது பல கிராமங்கள் சேர்ந்தாகிய ஒரு வட்டத்தில் குடியிருக்கும் பத்து அல்லது அதிகப்பட்ட பெயர்கள் சேர்ந்து ஒரு கோ ஆபரேடிவ் நாணயச் சங்கமாகி விடலாம். இம்மாதிரிச் சங்கங்களுக்கு கவர்ன்மெண்டார் எத்தனையோ வகையில் சகாயம் செய்திருக்கிறார்கள். ஆதலால் இம்மாதிரிச் சங்கங்கள் இந்த ராஜதானியில் ஒவ்வொரு தாலுக்காவிலுமிருந்து, அவ்வாறு ஏற்பட்ட சங்கங்களுக்குத் தாலூக்காவிலுள்ள பெரும் பட்டணங்களெல்லாவற்றிலும் கிளைகளுமிருந்து விட்டால் அதனால் அனுகூலம் இவ்வளவென்றில்லை.

இரண்டாவது மார்க்கமாவது, தொழிலுக்கு வேண்டிய (பருத்தி முதலிய) விளை பொருள்களை வாங்கிச் சேகரித்து வைப்பதற்காகச் சங்கங்கள். இம்மாதிரிச் சரக்குகளை மொத்தமாக மட்டும் வாங்கினால் எவ்வளவு சலீசாக வாங்கலாமென்பதைப் பரீக்ஷிக்கு மிடத்து அற்புதமாகக் காணும். பட்டணங்களில் ஏழையாயிருப்பவன் எவ்வளவு நாணயஸ்தனாகிலும், தனக்கு வேண்டிய சரக்குகளைத் (தானே வாங்கப்போனால்,) 'சரக்குக் கிரயத்திற்கு' வாங்குவதென்பது கூடாதகாரியம். ஆனால் தொழிலாளிகளெல்லாம் கூடிக் கோ-ஆபரேடிவ் சங்கமாகச் சேர்ந்தாலோ, சரக்குகளை வெகு சலீசாக வாங்கலாம் ஏனெனில் சங்கத்தில் வாங்கும்போது மொத்தமாக எடுப்பது சாத்தியம். எடுத்தபிறகு ஒவ்வொரு மெம்பருக்கும் அவசரத்திற்கேற்றபடி சிறிது சிறிதாகக் கொடுத்து வருவதில், விலை வெகுதூரம் குறைந்து விடுகிறது.

மூன்றாவது, 'சரக்குகளை விமரிசை யாக்குபவர் சங்கம்' என்பது. இதில் தொழிலாளிகளால் உற்பத்தியாகும் 'சரக்குகளும் 'பொத்தியிலாகின்றன.' அப்படியான பண்டங்களை விற்பதும், பொத்தியிலேயே' நடக்கிறது. இப்படி



நடந்து வருவதுதான் கோ-ஆபரேஷன் முறையில் உத்தமபக்ஷம். ஆனால் இந்த முறையைக் கைப்பற்றி நடத்துபவர் பெரிய நிர்வாக சாலிகளாகவும், தருமிஷ்டர்களாகவும், கிரகஸ்தர்களாகவும் இருந்தாலொழிய, காரியங்கள் சீராக நடப்பது சாத்தியமன்று. ஆதலால் வைசிகக்கலையில் நிபுணரான ஆந்திரு கார்னிகீ முதலிய தொழிற்றலைவர், முதலாளிகளையும், கூலிக்காரரையும் பரஸ்பர சகாயஞ் செய்விக்கப் பார்க்கிறார்கள். இதற்கு அமெரிக்காவில் உண்டாகி யிருக்கும் 'உருக்கு மகாசங்கம்' போன்ற பெரிய சங்கங்கள் ஏற்ற உதாரணம். இவைகளில் கூலிக்காரர் முதலாளிகளுடன் சேர்ந்துகொள்ளுகிறார்கள் ஆதலால் அவர்கள் தாங்கள் உழைக்கும் கம்பெனிகளில் வெறும் சிப்பந்திகளாயிருப்பது மட்டுமேயன்றி, கம்பெனியில் பங்குக்காரர்களுமாகி, அந்த வியாபாரத்திலுண்டாகும் நய நஷ்டங்களுக்கெல்லாம் ஜவாபுதாரிகளாகிறார்கள்.

நான்காவது, கோ-ஆபரேடிவ் ஸ்டோர்கள் என்பவை பரஸ்பர சகாயத்திற்கு வெகு நன்றா யேற்றமார்க்கதரிசிகள். இவைகளுக்குச் சில சமயங்களில் ராக்குடேல் ஸ்டோர்கள் எனப் பெயர் வழங்கும். ஏனெனில் இங்கிலாந்திலுள்ள ராக்குடேல் என்னுமிடத்தில் 1844-ம் வருஷத்தில் நிஷ்பக்ஷபாதிகளான பயோனேர் சங்கம் என்பது ஏற்பட்டு, கோ-ஆபரேடிவ் முறையில் கூலிக்காரருக்குப் பிரதிதினம் வேண்டிய படித்தரமளந்து வந்தார்கள். ஆரம்பத்தில் இவர்கள் 28 மெம்பர்கள். வியாபாரமுதல் ரூபா 420! என்றாலும் வெகு சீக்கிரத்தில் இவர்களுக்கு மெம்பர்கள் ஆயிரக் கணக்காகிச் சங்கத்தவருடைய வியாபார முதலும் அனேக லக்ஷங்களாகிவிட்டது. நாளது வரை இந்தக் கோ ஆபரேடிவ் சங்கத்தின் காரியங்கள் வெகு பிரபலமாக நடந்து வருகின்றன. ராக்குடேல் மட்டுமேயன்றி, கைத்தொழில் பிரபலித்து நடக்கும் வேறு அனேக மாயிரம் பட்டணங்களிலும், இந்தக்காரியம் சீராக நடக்கிறது.

கோ-ஆபரேடிவ் முறையில் ஆகக்கூடிய ஐந்தாவது காரியம் 'கட்டிடச் சங்கமாம்.' இச்சங்கங்கள் தங்களுடைய மெம்பர்களொவ்வொருவரிடமிருந்தும் வாரந்தோறும் சிறு தொகைகளாக வசூலித்து, அந்த மொத்தத்தைக் கொண்டு வீடுகள் கட்ட நிவேசனம் பெரிதாக வாங்கி, தெருக்களை அழகாயமைத்து, ஜலதாரைகளை நேராகக்கட்டி, நல்ல தண்ணீர், விளக்குக்கு வேண்டிய வாயு, ஆகிய இவ்விரண்டிற்கும் இரும்புக் குழாய்கள் வைத்து விட்டுப் பிறகு மெம்பர்களுக்குச் சில்லரையாகப் பிரித்து விடுகிறார்கள். மெம்பர்களோ தங்கள் நாணயத்தை முன்னிட்டு இந்த நிவேசனங்களைப் பெறுகிறார்கள். ஸொஸைட்டி மூலமாகவே கட்டிடங்களுக்கு நக்ஷாக்கள் தயாராகின்றன. கட்டிடங்களும் நிர்மாணமாகின்றன. பிறகு வீடுகள் கட்டித் தீர்மானமாகிய பின் அந்த வீடுகளையும் மெம்பர்களுக்குக் கொடுத்து, ஆன தொகைக்குப் பத்திரம் பெற்றுக் கொள்ளுகிறார்கள். காலக்கிரமத்தில்

மெம்பர்கள் சிறிது சிறிதாகச் செலுத்திவரும் தொகைகள் பெருகி, வீட்டின் பேரில் ஸொஸைட்டிக்கிருக்கும் அடமான பாத்தியத்திற்கு உத்தாரம் செய்யும் வரை அந்த பாத்திய மிருந்து வருகிறது. அவ்வாறு மீண்டவுடன், மெம்பர்களுக்கு வீடு 'சருவ வில்லங்க சுத்தியாகி' அவர்களுடைய நல்லுடைமையாகி விடுகிறது.

ஆதலால் இந்தப்பெரிய ராச்சிய மெங்கும் இவ்வைந்து விதமான பரஸ்பர சகாய முறைகளும் சீக்கிரம் பிரவேசித்து, தங்கு தடையொன்று மில்லாமல் பெருகி, இத்தேசத்தவராகிய மனுஷ்ய கோடிகள் பட்டண வாசிகளாயினும், நாட்டு வாசிகளாயினும், இருதிறத்தவரிலும், கிரகஸ்தரான ஒவ்வொருவருக்கும் பரஸ்பர சகாயத்தால் கூடும் நன்மைகள் கிடைக்கச்செய்துவிடுமென்று நாம் நம்பியிருக்கிறோம். ஏனெனில் அவர்களெல்லோரும் இப்பொழுது பரம ஏழைகளாய் இன்னது செய்வதென்றறியாமல் தவிக்கிறார்கள். அவர்கள் கிரகஸ்தர்களென்பது வாஸ்தவமாயிருக்கலாம். ஆனால் (பிரத்தியேகமாய் அவரவர் பாட்டை அவரவர் பார்த்து வருமளவும்) அவர்களுக்கு நாணயம் அதிகரிப்பதில்லை.

### துணிவதற்கேற்ற காரியங்கள்.

மேற்குக்கரை (மலையாளக்கரை) யிலிருந்து வந்ததோர் கடிதத்தைப் பார்த்தால், கோ ஆபரேஷனுக்கு இத்தேசத்தில் எவ்வளவு அகத்திய மிருக்கிறதென்பது விளங்கும். அத்தேசத்தை நன்றாயறிந்த ஸ்ரீமானொருவர் இவ்வாறு எனக்கு எழுதுகிறார்:—"பாதிரி ஐயாவே, தாங்கள் மதிராசு மெயிலில் எழுதிய கோ ஆபரேஷன் விஷயமான வியாசத்தை நான் கொஞ்சம் ஆசையுடன் தான் படித்தேன். அந்த சந்தர்ப்பத்தை யொட்டி, இப்போது விலைக்கு வந்திருக்கும் 2500 ஏகரா கூடிய சிரேஷ்டமான பாரஸ்டு பூமியொன்றைப்பற்றி எனக்குத் தெரிந்த சங்கதிகளைத் தங்களுக்கும் தெரிவிக்க வேண்டுகிறேன். கிறிஸ்துமஸ் பண்டிகை நாளில் உடமைக்காரர் வேண்டுகோளின்படி நான் அந்தப் பூமியைப் போய்ப் பார்த்தேன். அது 2500 ஏகரா பூராவாகவே யிருக்கிறது: நல்ல பாரஸ்டு. நல்ல விலையுயர்ந்த மரங்கள் அடர்ந்திருக்கின்றன. பூமியோ ரப்பர் மரம் வைத்து வளர்ப்பதற்கும், ஸிங்கோனா, ஏலம், மிளகு இவற்றிற்கும் வெகு நன்றா யேற்றதென்று சொல்லுகிறார்கள். மிளகு, ஏலம் இரண்டும் யதேச்சையாய் இப்பொழுது வளர்ந்து பலன்கொடுப்பது வாஸ்தவம். அந்தப் பூமிக்கு மூன்று புறத்திலும், இரண்டு வற்றாத ஓடைகள் பாய்கின்றன. தவிர மழைகாலம் இவ்விடத்தில் ஜூன் மாசத்தில் ஆரம்பமாகி அக்டோபர் மீ முடிவிலில், அந்த மாசங்களிலெல்லாம் இந்த ஓடைகள் பிரவகிக்கும். ஆகவே அக்காலத்தில் இங்கு 'அறுவடை' யாகக்கூடிய சாமான்களை வெகு சலீசாக வேறிடம் கொண்டு சேர்க்கச் சௌகரியமுண்டு. மேற்குக் கரையாய் மலைகளைப் பற்றியுள்ள பாரஸ்டுகள், பெரிய சாகுபடிப்



பிரதேசங்கள், இவைகள் விஷயத்தில் எனக்குள்ள அனுபவத்தைக் கொண்டு பேசுமிடத்து, இந்த பூஸ்திதி வெகு சிரேஷ்டமாகு மென்று காணுகிறது. ஏனெனில் மர மொன்று மட்டுமே இந்தப் பூமியின் கிரயத்தொகை, சாகுபடிச் சிப்பந்தி, முதலியவற்றிற்கு வேண்டியதைவிட எத்தனையோ மடங்குக்கு விற்றுப்போம்."

இப்படி இவர் எழுதுவதைப் பார்க்கையில் இந்தப் பாரஸ்டு பூமியானது கோ ஆபரேடிவ் முறையில் வேலை துணிந்து நடத்துவதற்கு வெகு லக்ஷணமாக ஏற்றதென்பது பிரத்தியக்ஷம். ரயித்து எவனும் இத்தனை பெரிய பூமியை வாங்குவதற்கு வேண்டிய பணம் வைத்திரான். வாங்கினாலும், அதற்கு மேல் முட்டுவழி போட்டு அதை லாபகரமாக்குவதும் அவனால் மாளாத காரியம். பணம் பெருத்தவனும் தானொருவனாக இதை வாங்க வேண்டுமென்றால் யோசிப்பான். ஆனால் நூற்றுக் கணக்காக மெம்பர்கள் சேர்ந்துண்டாகிய ஒரு கோ ஆபரேடிவ் ஸொஸைட்டியோ வென்றால், இந்த 'ஜன்மி'யுடன் கலந்துகொண்டு தங்களுடைய கோ ஆபரேடிவ் பாங்கிலிருந்தே வேண்டிய பணத்தை வாங்கி, இப்பெருங் காரியத்திற்கு வேண்டிய முட்டுவழிக்கெல்லாம் ஐவேசு செய்துகொண்டு, போட்ட பணத்திற்கு ஒன்றுக்குப் பத்தாக லாப மெடுப்பதன்றி, அனேகம் ஏழைக்குடிகளுக்கு சாசுவதமாக வரும்படி கிடைக்கவும் செய்யலாம். இவர்களெல்லோரும் இப்பொழுது இத்தேசத்தில அடிமைகளைவிட மோசமாயிருக்கிறார்கள். ஏனெனில், இவர்கள் செட்டிமார் கையி லகப்பட்டுக்கொண்டு தப்ப வழியற்று விழிப்பதால், இவர்கள் வாய்க்கும் ஒட்டாமல், வயிற்றுக்கும் ஒட்டாமலே ஜீவனம் செய்து வருகிறார்கள். மேற்குக் கரையிலுள்ள ஏழைக்குடிகள் எத்தனை யாயிரம் பெயருக்குக் கோ ஆபரேஷன் என்பது மோக்ஷங் கொடுக்கும்! ஏனெனில் கணவாய் மலைக்கு அருகில் தான் சாகுபடிக்குப் பூமி கிடைக்குமென்று எனக்கும் தெரியவருகிறது. இப்படிக் கிடைப்பதைத் துணிந்தெடுத்து சாகுபடி செய்து பலனடைய வேண்டினால், அதற்குக் கோ ஆபரேடிவ் முறையில் நடக்கும் பாங்கினால் தான் வேண்டிய பணம் பெயருவது சாத்தியம். மேற்குக்கரைப் பிரதேசத்தில் கல்வியிற்றேர்ந்து, தேசாபிமானம் மிகுந்து, பெருங் காரியங்களைத் துணிந்து செய்ய வல்லவர்களாய் அனேகர் இருக்கத்தான் வேண்டும். அவர்களுக்கு இந்த சங்கதி தெரிந்தவுடன், இப்பெரியகாரியத்தை அவர்கள் எடுத்து நடத்துவார்களென்றே (நம்புகிறேன்.)

நெசவு காரியமென்னும் பிர்ம்மாண்டமான பிரயத்தனத்தில் இந்தியாவுக்குக் கோ ஆபரேஷன் வேண்டும். மான்செஸ்டர் (நெசவு யந்திரக்காரர்கள்) இந்தியச் சாலியர் வாயில் மண்ணைப்போடவில்லை. இந்தியாவில் ஒற்றுமை குறைந்ததே அவர்களுக்கு மிருத்தியு வாயிற்று. பாபட்லாவுக் கருகிலுள்ள சாலியர் தங்களுடைய நெசவு தொழிலில் சாயம் மட்டும் போகாமல் செய்வதாக ஒப்பினால், அந்தத் துணிகளை எத்தனையோ ஆயிரம் ரூபாய்க்குத்

தான் வாங்கிக் கொள்ளத் தயாரென்று ஒரு ஸ்ரீமான் அவர்களுக்குச் சொல்லியனுப்பினர். ஆனால் அவர்களிலொருவரும் தைரியமாய் முன்னுக்கு வந்து, அவர் கேட்ட தரத்தில் நெய்து கொடுப்பதாக ஒப்புக்கொள்ள வில்லை. ஆகவே இத்தனை பெரிய வியாபாரம் அனியாயமாகப் போய்விட்டது. கொடுப்பதாகச் சொன்ன விலை இவர்களுக்குக் கட்டாதென்கிற குறைவு இல்லவே யில்லை. ஆனால் சாலியர் அந்தத் தரத்திற்குக் குறைந்த தரங்களில் வேலை செய்து விற்கப் பார்த்தார்கள். வியாபாரத்தில் பிழைக்க வேண்டுபவன் ஒருவனும் இதற்கு ஒப்பவே மாட்டான். ஆகவே இவ்விஷயத்தில் கோ ஆபரேஷன் முறை வந்து உதவ வேண்டும். இம்முறையில் நூலை வாங்கி, வேண்டுமானால் சாயமிட்டு, சங்கத்தின் மெம்பர்களாகிய சாலியருக்கு இதைச் சிறிது சிறிதாகப் பங்கிக் கொடுத்து, வேலைதீர்ந்த பின் அதைச் செலவு செய்யவேண்டும். இப்படியாகும் வியாபாரத்தில் தபா ஒன்றுக்கு சொற்பமாகக் கம்மிஷன் எடுத்தாலும், அம்மூலமாகப் பங்குக்காரருக்கு ஹுத்தில் நூற்றுக்கு 20 அல்லது 25 வரை லாபந்தேறுமென்று அனுபவத்தில் கண்டிருக்கிறோம். அம்மட்டேயன்றி சாலியருக்கு நெய்வதற்கு விலை சலீசாகவும், தரம் உயர்ந்தும், நூல் கிடைத்து வருகிறது. இதை விட்டு, உள்ளூரில் நூலைச் சில்லரையாக வாங்கப் போய், அவ்வாறு வாங்குவதற்கு வேண்டிய பணத்தை ஒரு உள்ளூர் சாவுகாரிடம் கடனாகவும் வாங்கி விட்டால், இந்தப்படி இருவகையிலும் அவர்களுக்கு நயமாகக் கிட்டுவது சாத்தியமே அன்று.

சாமான்களை ஆக்குபவரும், வாங்கி யனுபவிப்பவரும் பரஸ்பரம் சகாயித்து வந்தால், அதனால் வேண்டிய லாபம் கிட்டுமென்பதை ருசுப்படுத்துவது அனாவசியம். அமெரிக்கா சஞ்சிகையாகிய "ஓரல்ட்ஸ் ஓர்க்கு" என்பது 1909-ஹு டிசம்பர் மீ த்தில் இவ்வாறு கூறுகிறது:—"ராக்குடேல் கூலிக்காரர் 28 பெயர், தங்களுடைய கோ ஆபரேடிவ் ஸ்டோர்களை எவ்வளவு நேர்த்தியான வியாபார முறையில் ஆரம்பித்தார்கள்! இதனால் இப்பொழுது பூமண்டல மெங்கும் சுமார் 10-லக்ஷம் மெம்பர்கள் கூடி, வருஷம் 1-க்கு 100-கோடி பெறுமான வியாபாரம் நடத்தி வந்தாலும், காரிய நிர்வாக முறை மட்டும் அன்றைக்கிருந்த படியே அழியாமல் நடக்கிறது!" என்று. இந்தக் கணக்கு மட்டுமே பெரிதன்று. நடந்து வரும் காரியத்தில் இது ஒரு சில்லரை அம்சமே தவிர வேறன்று. ராக்குடேல் முறையில் கோ ஆபரேடிவ் ஷாப்புகள் இந்தியாவில் கொஞ்சம் தானிருக்கின்றன. தேசத்தில் பல விடங்களில் பட்டணங்கள் வலுத்து வருவதால், அனேக மாயிரம் ஸ்டோர்கள் கோ ஆபரேடிவ் முறையில் அங்கெல்லாம் ஏன் ஆரம்பமாகி நடக்கக் கூடாதென்பதற்கு நியாயம் காணவில்லை. இவை யாரம்பித்தால் நம்மூர் (வேலையற்றுத் திரிகிற) மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் வெட்டுண்டவர்களில் எத்தனை ஆயிரம் பெயருக்கு இதனால் கிரகஸ்த மார்க்கமானதும், குஷாலாய் ஜீவிக்கக் கூடியதுமான அலுவல் கிடைக்கும்! இவ்விஷயத்தில் சரக்குத் தயார் செய்பவர், அதை வாங்கி யனுபவிப்பவருடன் கலக்க வேண்டும். ஸர் பிர



டரிக்கு நிக்கல்ஸன் மீன் பிடிப்பதாகிய ஒரு தொழிலில் மட்டும் சரக்கை எத்தனை வகைகளில் தயார் செய்யக்கூடு மென்பதைப் பரீக்ஷை காட்டி வருகிறார். சமுத்திரத்தில் வெகு நேர்த்தியான மீன் எத்தனை ஆயிரம் டன் வேண்டுமானாலும் கிடைக்கும். ஆனால் இப்படி உணவிற்குச் சித்தமான வஸ்து ஏராளமாயிருக்கவும், ஜனங்களுக்குள் பசியால் வருந்தும் மனித கோடிகளுக்கு இதை உணவாக்க யாரும் ஒரு பிரயத்தனமும் செய்வதில்லை. கோ-ஆபரேடிவ் சங்கங்கள் செய்யக்கூடிய மகா காரியங்களில், மீன் விஷயம் வெகு சாதாரணமான அம்சம். உப்பிட்ட மீன் இந்தியாவில் வேண்டுமானால், இப்போதிருக்கிறபடி அது வேற்றாராரிடமிருந்து வாங்கியே அனேகமாய் ஆகவேண்டும். இப்படி இந்தியாவில் பகவான் கொடுத்தருளிய செல்வங்களை வெளிக்குக் கொண்டு வராமலும், தயாராக்காமலும் இருப்பதைப் பார்க்கும்போதெல்லாம், எத்தனையோ முறை நான் மனம் நொந்து, கோ-ஆபரேஷன் கொஞ்சம் இல்லாமற் போகிய குறைவைக் கடிந்து, "உங்களுக்கு வேண்டிய சகலமும் இந்தப் பூமியிலகப்படுவதா யிருக்க, வேற்றாரைத்தேடி ஏன் யாத்திரை போகிறீர்கள்?" என்று கதறி யிருக்கிறேன்.

கட்டிடச் சங்கங்கள் நான் கண்டவரை இந்துக்களுக்குத் தெரியவே தெரியாது. இந்த ராச்சியத்தில் ஒருபட்டணம் பெருகினால், பழையபடி எப்படியோ பல தினுசாக வளர்ந்து வருகிறது. ஒழுங்கு கிடையாது. சுகசாதனம் கிடையாது. சம்பிரதாயம் கிடையாது. கோ-ஆபரேடிவ் ஸொஸைட்டி யொன்று மட்டும் வரட்டும். எல்லாம் மாறிப்போகிறது. பல ஏகரா விஸ்தீரணமுள்ள நிவேசனத்தை நாம் வாங்குகிறோம். ஜாதி, சேர்க்கை, முதலிய பழக்கங்களுக்கு விரோதமின்றி அதைப்பங்கிடலாம். பங்குக்காரர் அதை ஏலத்தில் பல இனங்களாக எடுத்துக்கொள்ளுகிறார்கள். இதானவுடன் சொற்பகாலத்திற்குள், ஆரோக்கியம், சுசி, சுகசாதனங்கள், சௌக்கிய லக்ஷணங்கள் ஆகிய இவையனைத்துங் கூட்டிய புதுப்பட்டண மொன்றுண்டாகி லக்ஷ்மீகரமாக விருக்கிறது. இந்த அம்சத்தில் இந்தியாவுக்குக் கோ-ஆபரேஷன் பேருபகாரம் செய்ய விருக்கிறது. ஆதலால் இம்முறைகளில் ஏதாகிலும் காரியம் நடக்குமா? அனேக இடங்களில் ஆரம்பங்கள் ஆகிவருவதாக ஏற்கனவே கேட்டுவருகிறேன். ஆதலால் இத்தேசத்தில் அனேக இடங்களினின்றும் தரித்திரத்தையும் க்ஷாமத்தையும் கோ-ஆபரேஷன் முறை வலுத்துத் தொலைக்கக்காலம் சீக்கிரம்வந்து விடுமென்று நான் மனப்பூர்வமாய் நம்புகிறேன்.

மதிராசு மெயில்—12—3—10.

# கோ-ஆபரேஷன் விஷயமான சில குறிப்புகள்.

இந்த ராஜதானியில் முதல் ரிஜிஸ்தரானதும் 1-நெ. ஸொஸைட்டியுமாகிய திரூர் சங்கத்தின் பிரஸிடெண்டு ராவ்பஹதூர் எம்-ஆதிநாராயணய்யர் அவர்கள், செங்கற்பட்டு ஜில்லா 1909-ம் வருஷத்திய ஜில்லா கோ-ஆபரேட்டர்களுடைய முதல் மீட்டிங்கில் அக்கிராசனாதிபதியாக விளங்கியவர். இவர் இச்சங்கத்தின் 2-வது மீட்டிங்கில் 1910-ம் வருஷம் ஜனவரி 23-ம் தேதியன்று பின்வருமாறு பிரஸ்தாபம் செய்தார்:—

"1. இது நமது இரண்டாவது ஜில்லா மகாநாடு. நமது ஜனங்களுக்குள் கோ-ஆபரேடிவ் முறை (நாளதுவரை) ஆற்றொழுக்காகப் பெருகி வருவது நமக்கெல்லாம் வெகு திருப்திகரம். இந்தக் காரியத்தில் நம்முடைய முக்கியமான உத்தேசம் குடியானவர்களுடைய கடன் தகாதாவைப் பரிகரிப்பதாம். வேறு வகைகளிலும் இந்தக்காரியம் நடந்து வருவது மெய்தான். உதாரணமாகக் கூலிக்குத் தையல், நெசவு முதலிய வேலை செய்து பிழைப்பவர்களுக்குள் நாணயச் சங்கங்கள் ஆகி வருவதாம். பட்டணவாசங்களில் பண்டங்களைப் பகிர்ந்து கொள்வதற்காக கோ-ஆபரேடிவ் ஸ்டோர்ஸ்களாகி வருவதும் அப்படியே. ஆனால் ஆக வேண்டிய பெருங்காரியமோ, இப்போதிருக்கும் ரீதிக்கும், இனி நடக்க வேண்டிய முறைக்கும், கிருஷியையும் (கிருஷிகரையுமே) உத்தேசித்து நடப்பது. இதில் எற்கனவே நடந்தேறி வந்திருக்கும் காரியத்தைப் பார்க்கையில், இதற்குச் சில அம்சங்கள் தெளிவாகி யிருப்பதும், இதனால் இன்னாமுபாயங்களாகக் கூடுமென்று நாம் 'விசாரித்ததற்குக் குறைவின்றி நடக்கிறதா' வென்பதும் நமக்குக் கண்டு வருகிறது. இதையொட்டி எனக்குத் தோன்றும் சில குறிப்புகளை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

2. இச்சங்கங்களில் அனேகமாய் எல்லாம் 'பொறுப்பு வரையறுத' முறையை யனுசரிப்பனவாம். சில ஸொஸைட்டிகள் மட்டும் 'லிமிடெட்' சம்பிரதாயத்தை அனுசரிக்கின்றன. நாணயம் பெருகுவதற்குச் சாதனமாக விசாரித்தால், முற்கூறியது பிந்தியதை விட எவ்வளவோ சிறந்தது. வரக்கூடிய அபாயங்களை விசாரித்தாலும், சங்க மெம்பர்களுக்குத் தனித்தனியாக பாரம் முற்கூறிய முறையில் மற்றதைவிட அதிகம் காணும்படியான நிபந்தனைகள் இல்லை. ஏனெனில் இந்தச் சங்கங்கள் நேராய் நடக்கவேண்டி யேற்பட்டிருக்கும் நிர்ப்பந்தங்கள் வெகு பலமானவை. ஆரம்பத்தில் கோ-ஆபரேடிவ் முறையில் காரியம் இங்ஙனம் நாம் ஆகக்கூடுமென்பதும் அதன் உத்தேசம் இன்னதென்பதும் ஜனங்களுக்கு சரிவரத் தெரியவில்லை. [illegible] பல இடங்களில் ஒத்துமைப்படுத்து சங்கமென்று அவர்களுக்கு மனதிற் படவில்லை. இப்படிப்பட்ட இடங்களில் அந்தச் சந்தர்ப்பத்தில், ஒருவனுடைய சர்வ சொத்தையும் மற்றொருவனுடைய வில்லங்கங்களுக்கு உட்படுத்துவதென்றால் அது கொஞ்சம் விசித்திரமாகவே கண்டது. ஆதலால் ஜனங்கள் 'பொறுப்புவரையறாத' சங்கமென்றால் மிரள இடமுண்டாயிற்று. இந்தப் பயம் இப்போது சிறிது சிறிதாகக் குறைந்து வருகிறது. 'பொறுப்பு வரையறாத' கம்பெனிகளை நிர்வகித்து வருவதற்கு எற்பட்ட நிபந்தனைகளால், மெம்பர்களுக்குத் தனித்தனி யேற்படக்கூடிய அபாயமானது லிமிடெட் கம்பெனிகளில் காணக்கூடியதை விடக்குறைந்து போயிருக்கிறது. தவிர, இந்த ரகசியத்தை ஜனங்கள் இன்னும் நன்றாயறிந்து வர வர, லிமிடெட் முறையிலுழைத்து வரும் கொஞ்சம் ஸொஸைட்டிகளும் மற்றமுறையைக் கைப்பற்றி நடக்க வகை யேற்படுமென்றே நாம் நம்பலாம்.



3. சங்கம் எந்த முறையிலுழைத்தாலும், அதன் முக்கிய காரியம் இப்பொழுது ஒன்றுதான். அதாவது, தன் வியாபாரத்திற்கு வேண்டிய முதலை எங்கிருந்தோ, எப்படியோ, சம்பாதித்து, அதை மெம்பர்களுக்குக் கடனாக உதவி வருவதாம். கோ-ஆபரேடிவ் ஸொஸைட்டி தனது மெம்பர்களுக்குச் செய்யக்கூடிய உபகாரங்களில் இது ஒரு அம்சமே யொழிய அதிகமல்ல. தனக்கு மெம்பர்களாகி யிருக்கும் விவசாயிகளுக்கு அவசரமாக வேண்டியவைகள் அனேகம். நல்ல விதை, எருக்கள், அவரவர் குடிசைகளிற் செய்யக்கூடிய சில்லரைத்தொழில், அத்தொழில் மூலமாய் உண்டாகும் சரக்குகளுக்குத் தக்கவிலை, ஆகிய இம்மாதிரிக் காரியங்களை ஆகச்செய்வதில், சங்கங்கள் வெகுதூரம் உபகரிக்கலாம். ஆனால் இவைகளெல்லாம் கொஞ்சம் சிரமப்பட்டு உழைத்தாகவேண்டிய காரியங்கள். சங்கங்களுக்கோ இவற்றில் தலையிட்டுப் போராடவேண்டிய பலம் இன்னும் வரவில்லை. என்றாலும் இந்தப்பிரபல காரியங்களை நாம் செம்மையாய் மனதிற் பதியக் கொள்ளவேண்டும். சங்கங்கள் வேரூன்றி, நிர்வாகமும் நேர்த்தியாகு மளவிற்கு இவற்றையும் சிறுகச் சேர்த்து வரவேண்டும்.

4. சங்கங்கள் இப்போது லக்ஷியமாகக் கொண்டிருப்பதெல்லாம் முக்கியமாகத் தங்கள் மெம்பர்களுக்குப் பணம் உதவுவதே யாகிலும், அவ்விஷயத்திலும் கூட அவைகள் செய்து வரும் வேலையில் இரண்டு அம்சங்கள் குறைவாகக் காணுகின்றன. உள்ளூர் டிபாஸிட்டுகளை வரவழைப்பது போதாதது ஒன்று. கடன் கொடுப்பதில் காணும் மிதமிஞ்சிய நிர்ப்பந்தங்களும், கடன் வாங்கும் காரியங்களை அனுகூலமாய்த் தள்ளுபடி செய்வதுமாம். இவையிரண்டும் ஒன்றுடனொன்று பிணைந்திருப்பதைக் [illegible] கிறேன். வியாபாரம் சற்று தாராளமாகச் செய்யாவிட்டால், உள்ளூர் டிபாஸிட்டுகள் அதிகமாக மாட்டாவென்பது நிஜம். இப்போது நடக்கிற ரீதிக்கு, கடன் கொடுப்பதில் சங்கங்கள் செய்வதெல்லாம், ஒரு மெம்பருக்குத் தாராளம்போல் ஒன்று, இரண்டு அல்லது மூன்று வருஷத்திற்குக் கடனைக் கொடுத்து விடுவது. பிறகு கடன் வாபஸ் வரவேண்டிய கெடு வரும் வரை அவனைப்பற்றி ஞாபகமே யில்லாமலிருப்பது. கெடுவானதும், கொடுத்த பணத்தைப் பூராவாகவோ, அதைத்தவணையாகவோ வசூலித்து, நிற்பதற்குப் பத்திரம் புதுப்பித்து விடுவது. வாங்குகிறவன் [illegible] சுபாவமாகி விடுகிறான். அவன் வாங்கிய கடன் அனேகமாய்ச் சங்கத்தின் விசேஷ விதிகளை யனுசரித்து அவன் எவ்வளவு பெறக்கூடுமோ அவ்வளவும் கூடியிருக்கும். அதை அவன் பூராவாகச் செலுத்தும் வரை, சங்கத்திலிருந்து அவன் அவசரத்திற்கு வேறு உபகாரமொன்றும் கிடைப்பதில்லை. இம்மாதிரி சங்கத்தின் காரியம் நடந்து வருவதில், அதை அச்சங்க மெம்பர் தன் அவசரங்களுக்கெல்லாம் பற்றியப்

பட்டு உதவக்கூடிய உபகாரியாக பாவிப்பதற்காகாது. ஆகவே, இந்த மெம்பரும் சங்கத்திற்குப் புறம்பாக இருந்து வேலைசெய்யும் சாவுகாருக்குப் பாத்தியப்பட்டுக் கெடுகிற துர்வழக்கத்தை விடுவதற்காகாது. வருஷத்தில் அநேக சந்தர்ப்பங்களில் குடியானவனுக்குச் சிறிதாகப்பணம் வாங்கித் தீரவேண்டிய அவாந்தரங்கள் வந்து விடுகின்றன. ஆதலால் ஒவ்வொரு மெம்பருக்கும் இவ்வளவென்று அவர் யோக்கியதை போல விதித்து, அந்த மட்டில் அவர் அதிகமாக வாங்கலாமென்ற அனுமதி கொடுத்து, சிறு கடன்கள் அவசரத்திற்குதவும்படி பெயர்வதற்கு ஏதாவது உபாயம் நாம் செய்யாவிட்டால், (சங்கங்களால் மெம்பர்களுக்குப் பூராவாகப் பிரயோஜனமிராது.) இப்படி வாங்குவதற்கு இரண்டு அல்லது அதிகப்பட்ட மெம்பர்கள் கூடிப் பிணையாகவேண்டும். இதை நாம் எப்படியாவது அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். இல்லாவிட்டால் நாம் செய்துவரும் வியாபாரம் விறகு முறித்தாற்போலத் துண்டிக்குமே யல்லது, அவசரத்திற்கு வேண்டியபடி உருப்பட்டுச் சாதுவாகாது.

இப்போது நான் சொல்லுவது ஒவ்வொரு மெம்பருக்கும் சங்கத்தில் ஒரு பற்று வரவுக் கணக்கு ஏற்பட வேண்டுமென்பதே தவிர வேறன்று. இதில் ஒவ்வொரு நபருக்கும் இவ்வளவுக்கு மேற்படக் கூடாதென்று முன்னாடி நிஷ்கரிஷையாகி விடவேண்டும். இந்த மட்டில் அவர் பற்றுவரவு செய்யலாமென்று ஏற்படவும் வேண்டும். சங்கத்தின் விசேஷ விதிகளை யனுசரித்துப் பத்திரங்கள் பிறந்து அவற்றின் மேற்கொடுக்கும் பெருங்கடன்களல்லாமலே இந்தப் பற்று வரவு நடக்கவேண்டும். இம்மாதிரிப் புதுவழியில் வேலை செய்வதில் ஸொஸைட்டிகளுக்கு ஒரு பெரிய அனுகூலமுண்டாகிற தென்று என்வாதம். காலக்கிரமத்தில் மெம்பர்களுக்கு இவற்றை விட்டு வேறுகதி வேண்டாமலும், வேறொருவரை யாசிக்க மனம் வராமலும் ஆகிவிடும். மற்றொரு அனுகூலம் இதிலிருந்து உண்டாகும். அதாவது, மெம்பர்கள் இப்படிப் பற்று வரவு செய்வதில், சில்லரையாக வாங்குவதெல்லாம், சில்லரையாகவே வாப்ஸ் வந்து கொண்டிருப்பதில், கடன் வாங்குவோருக்குக் காலக்கிரமத்தில் தாங்கள் வாரம்வாரமாகவோ, தினம் பிரதியாகவோ, மீத்து வைக்கக்கூடிய 'சிலுவாணங்களையும்' சங்கத்தின் நிதியில் போட்டு வைக்கும் வழக்கம் ஊர்ஜிதப்பட்டு வரும். இதனால் ஜனங்கள், தாங்கள் மீத்து வைக்கக்கூடியது சில்லரை யாதலால், அதை யெப்படிக் கொண்டு வருவதென்று படும் சங்கோசத்தை அகற்றி, சிறு தொகைகளாக டிபாசிட்டு வைக்கும் நற்குணத்தைப் பழக்கலாம். இந்த வியாபாரங்கள் சில்லரை யென்று நாம் தள்ளி வைக்கு[illegible]வும், உள்ளூர் டிபாசிட்டு பெருகவும் செய்யாது, சங்கங்களுடைய உபகாரம் பூர்ணமாகவும் ஆகாது. சங்கங்களுக்கும் அவற்றில் வியாபாரம் செய்யும் மெம்பர்களுடைய நித்திய நயாஷ்டங்களுக்கும் இப்பொழுது சம்பந்தமே யில்லாமலிருப்பதால், இந்தப் பற்று வரவு சம்பிரதாயம் அந்தத் துர்லக்ஷணத்தை மாற்றும். அதுவும் இரண்டு வழிகளில் காணும். முதலாவது சில்லரைக்கடன் 'கைம்மாற்றாக' வாங்குவது பெருகும். சில்லரை டிபாசிட்டுகளும் இதற்கேற்றபடியே பெருகும். மெம்பர்களுக்கும் சங்கத்திற்கும் பரிசயம் அதிகமாகும். இப்படி யாகையில் உள்ளூர் சாவுகார்களும் தங்கள் பணத்தை ஸொஸைட்டிகளில் போட்டு வைப்பதினால் அனுகூலம் அதிகமாயிருப்பதைக் கண்டு கொண்டு, அப்படியே செய்வார்கள். ஏனெனில் தாங்களே செய்துவரும் வியாபாரத்தை ஸொஸைட்டிகள் மூலமாக நடத்தினால் (கிடைக்கும் பலன் அவர்களுக்குத் தெளிவாகும்.) பாரம்பரியமாக நாம் மொத்தையிற் போட்டு வைக்கும் வழக்கம் கிராமவாசிகளுக்குள் காணுவது மெய்யானால், இதனால் அது அற்



றுப்போக வகையேற்படும். அதன்றி, சங்கத்திற்குப் புறம்பாகக் கிராமங்களில் நடக்கும் வியாபாரங்களில் இப்போது காணும் அனியாய வட்டி விகிதமும் காலக்கிரமத்தில் குறைந்து விடும்.

5. இவ்வாறு பற்று வரவும் டிபாசிட்டும் சில்லரையாகப் பெருக ஏற்பாடு உண்டானால், அது கொண்டு சங்கஙகளில் எழுத்து வேலை கொஞ்சம் கூடத்தான் செய்யும். தவிர இப்போதிருக்கிற விசேஷ விதிகளும் கொஞ்சம் மாறவேண்டும். ஆனால் இந்த விதிகளைக் கொஞ்சம் ஜாக்கிரதையாக நியமித்து அனுஷ்டிப்பதில் அதிக சிரம மிராதென்று நம்புகிறேன் எல்லாச் சங்கங்களும் இந்த அதிக வேலையைச் சந்தோஷமாய்ச் செய்யப் பிரியப்படுவார்கள். இவ்விஷயத்தில் எனக்கு உறுதியுண்டு.

6 நமது ஸொஸைட்டிகள் உருப்படி யதிகமாகி வருகின்றன. வியாபார முதலும் விடாமல் அதிகரித்தே வருகிறது. ஆனால் இவைகளைக் கொஞ்சம் மிருதுவாக்கிக் குடித்தனக் காரருக்கு நித்தியமாக வேண்டிய காரியங்களுக்கு உதவச்செய்ய வேண்டும். (அதனால்) அவர்களுடைய சிலுவாணங்கள் டிபாசிட்டுகளாகி வரும்படியான நற்பழக்கத்தை இவர்களுக்குள் உண்டாக்கிப் பெருகச் செய்யவேண்டும். இப்பொழுதுள்ளபடி வியாபாரத்திற்கு வேண்டிய முதல் அனேகமாய் வெளியே யிருந்து வருகிறது. இது காலக்கிரமத்தில் குறைந்து தொலைந்து போகவேண்டிய அவசரம்.

7. நம்முடைய சங்கங்கள் மூலமாய் விவசாயிகளை யன்றோ நாம் உபகரிக்க உத்தேசிப்பது. இவர்களுள் மூன்றுவகுப்பார் காணுவார்கள்—(1) பூஸ்திதிமானாகிய குடித்தனக்காரர். (2) அயலானுடைய பூமியை வாரத்திற்கோ, குத்தகைக்கோ சாகுபடிசெய்பவர். (3) பூமியென்கிற பெயரில்லாமல் கூலிக்கு வேலை நிரந்தரமாகவோ, அகப்பட்டபொழுதோ, செய்து வருபவர். கடைசியாய்ச் சொன்னவருக்குக் கதிமோக்ஷம் இனி நெடுங்காலம் கழித்துத் தான் வரவேண்டும். ஏனெனில் இவருக்குக் கஷ்டம் விடிய வேண்டுமென்றால், இவர்களை வேலையிலமர்த்திவரும் யஜமானர்களுக்கு முதலில் விடியவேண்டும். வாரசாகுபடிக்காரன் பிழைப்பு இதைவிடச்சற்று உயர்ந்ததா மென்னலாம். என்றாலும், கரணம், தப்பினால் மரணம், என்னும்படியாகத்தா னிருக்கிறது. ஆகவே, நாணயஸ்தர் என்று ஏதோ உபாயமாயச் சொல்லிக் கொள்ளக்கூடியவர் பூஸ்திதிமான்களாகிய குடியானவரேயாம். இவர்களையன்றி, மற்ற வகுப்பாரையும் ஒட்டி நமது சங்கங்கள் வேலைசெய்ய இன்னும் புகவில்லை யென்பது என்னுடைய அபிப்பிராயம். நடவடிக்கையும் சாமான்னியமாய் அப்படித்தானிருக்கிறது. ஆனால் நமது சங்கங்கள் நான் மேற்கூறிய மூன்று வகுப்பாருடைய கஷ்ட நிஷ்டூரங்களையும் தீர்க்கவேண்டி முயன்று நல்லபயன் பெறுமளவும், வியவசாயமென்பது விமரிசையாகவும் திருப்திகரமாகவும் ஆனதாகச் சொல்லுவதற்கில்லை. ஏனெனில் விவசாயம் நேராகச் செழிக்க வேண்டுமானால், இந்த மூன்று வகுப்பாரும் கூடிச் செழிக்கவேண்டும். பூஸ்திதியற்ற படியாள்களும், அற்றைக் கூலிக்காரரும் சுகமாய்ப் பிழைக்கச் செய்வதென்றால், அதிலுள்ள உபத்திரவங்கள் அனேகம். ஆதலால் நமது சங்கங்களுக்கு, இதுவரையுள்ள அனுபவத்தையும், கிடைக்கக்கூடிய மூலியத்தையும் கொண்டு, இந்த அபாரமான காரியத்தை ஆரம்பிக்க யோக்கியதை போதாது. ஆனால் வெறும் குத்தகைக்கோ, வாரத்திற்கோ சாகுபடி செய்யும் வருக்கத்தவரை நம்முடன் சேர்த்துக்கொண்டு உபகரிக்க நாம் பிரயத்தனம் செய்யவேண்டுமென்று காணுகிறது. அவர்களுடைய பிழைப்பும் சுறுக்கிப் போகக்கூடியது தான். என்றாலும் பூமிக்குடையவராகிய மிராசுதாருக்கும் இவர்களுக்கும் பந்தம் கொஞ்சம் நீடித்திருப்பதாலும், இவர்கள் கொஞ்சம் கிரகஸ்தமார்க்கமாய் நடந்து

தீரவேண்டி யிருப்பதாலும், இந்த அம்சங்களில் இவர்கள் பிழைப்பு கூலிக்காரருடையதைவிட சிரேஷ்டம். இதை ஆதாரமாகக் கொண்டு நாம் காரியம் ஆரம்பிக்கலாம். இவர்களுக்குக் கொஞ்சம் போல உதவியும் வரலாம். கோ-ஆபரேஷன் என்பதன் சாரம் நாணயமும் விசுவாச யோக்யதையும் ஆதலால், எங்கெல்லாம் இது இருப்பது நிசமோ, அங்கெல்லாம் இதற்குப் பணம் உதவத்தான் வேண்டும்.

வாரசாகுபடிக் குடிகளும், பூமி கொஞ்சமாக வைத்திருக்கும் வியவசாயிகளும் தான் அன்னியாய வட்டி வாங்குபவருக்குப் பாப புண்ணியம் விசாரியாமல் வேட்டையாடித் தொம்சம் செய்ய ஏற்பட்ட இலக்குகள். இப்பொழுதிருக்கிற நிதிக்கு, பூமியற்ற வாரக்காரருக்கு நாம் எதாகிலும் செய்து உத்தரித்து விடுவோமென்கிற நம்பிக்கை எனக்கு அதிக மில்லாவிட்டாலும், (பூஸ்திதி யிருப்பவருக்கே நாம் செய்யும் ஒத்தாசை வெகு கொஞ்சம்,) மேல் நடக்கவேண்டிய காரியங்களைப் பலவகையிலும் விசாரித்துப் பார்க்க நியாயமுண்டு. ஆதலால் அவ்வாறு செய்யவேண்டுமென்று உங்களை நான் கேட்டுக்கொள்ளுவதில், நமது சங்கங்கள் தயவுசெய்து நான்மேற்குறித்த மார்க்கத்தவரில் சிலரைப் பொறுக்கியெடுத்து அனுகூலம் போல உதவிவரவேண்டுமென்று என் அபிப்பிராயம். இதில் நாம் சித்தியடைந்தால், இதனால் நமக்குக் கிடைக்கும் அனுபவம் எல்லோருக்கும் உதவும்.

8. மற்றொரு விஷயத்தைக் குறித்து எனக்குக் கொஞ்சம் பேசவேண்டுமென்றிருக்கிறது. அதாவது கோ ஆபரேடிவ் சங்கங்களை ஆங்காங்கு ஒன்று சேர்த்து யூனியன்களாக்க வேண்டுமென்கிற யோசனையாம். இந்த ராஜதானிக்குச் சம்பந்தபட்ட மட்டில், இந்த யோசனை யின்னும் கர்ப்பவாச மாயிருப்பதாகவே சொல்லவேண்டும். கீழ்ப் பங்காளத்திலோ ஏற்கனவே அவ்விடத்திய விவேகி[illegible] நம்மை முந்திவிட்டார்களென்று காணுகிறது. யூனியன்களாகச் சிலச் சங்கங்களை[illegible] கூட்டி விடுவதில் (இரண்டொரு காரியங்கள் காணுகின்றன.) அவை, யூனியனு[illegible] அங்கங்களான ஸொஸைட்டி களொவ்வொன்றினுடையவும் ஆஸ்தியையும், க[illegible] வழக்குகளையும் அடிக்கடி தணிக்கை செய்துவருவதும், அவைகள் வேலைசெய்வது [illegible] மார்க்கமாவென்று பார்த்து வருவதும் ஆகிய இந்த இரண்டுமாம். இத[illegible] இச்சங்களுக்கு 'வியாபார நாணயம் குறைவு படாமலும், உள்ளூர்க்காரக் காரருக்கும் இவைகளுக்கும் ரத்த சம்பந்தம்' நிலைத்து, இவைகளை அவர் கனமாகவும் ஜாக்கிரதையாகவும் பார்த்து வரும்படியாயும் வகையேற்படும். அப்படி யாகையில், சர்க்கார் தணிக்கைக்கு அவசரம் அதிகமாயிராது. தவிர அப்படியாகா விட்டால், காலக்கிரமத்தில் சங்கங்கள் அனேக மாயிரமாகப் பெருகிப்போக, சர்க்கார் தணிக்கையும் காலா காலங்களிலாக வேண்டிய சடங்குகளிலொன்றாகி, வெறும் தந்திரமாக முடியும். என் மனதிலுள்ளது இக்காரியம் வெகு நிதானமாயாகி வரவேண்டு மென்பதாம். சங்கங்கள் ஒவ்வொன்றிலும் அனுபவம் வேண்டுமளவிற்கு முதிரவில்லை. ஆதலால் எல்லாச் சங்கங்களிலிருந்தும் யூனியனுக்கு வேண்டிய யோக்கியதை கூடிய நல்ல மெம்பர்கள் முன்னுக்கு இடையறுது வருவார்களோ வென்பது சந்தேகம். வந்தவர்களும் யூனியன் [illegible] [illegible] [illegible] சந்தேகம். கோ ஆபரேடிவ் முறையில் காரியம் [illegible] [illegible] [illegible] யூனியன்களைப் [illegible] [illegible]



னால், அது ஒரு சமயம் நமக்கு விசாரத்திற்கு எதுவானாலும் ஆகலாம். தவிர யூனியன்கள் நமக்குள் பிறந்தாலும், பிறவா விட்டாலும், சர்க்கார் வருஷ மொருமுறை செய்துவரும் ஆடிட்டு வேலை எக்காலத்திலும் நிரந்தரமாய் நடக்க வேண்டுமென்பது என் அபிப்பிராயம். யூனியன்கள் உண்டாக வேண்டுமென்று இப்பொழுது உத்தேசிப்பது சங்கங்களுடைய உள்ளூர் ரகசியங்களை உட்புகுந்து அறிந்து தக்கபடி நடத்துவதற்கே யாதலால், இந்தக் காரியம் சர்க்கார் மூலமாய் எப்போதும் நடந்து வருவதற்காகாதென்பது மெய்தான். ஏனெனில் காரியம் வர வர அசாத்தியமாகி வளர்ந்து விடும். அப்படி யூனியன்கள் ஆகையில், அவைகளுக்கு விஸ்தீரணம் குறைந்தேயிருக்கவேண்டும். யூனியன் மெம்பரொருவருக்கும் மீட்டிங்குக்குப் போவதென்றால் ஐந்து மைலுக்கதிகமாய்ப் போகவேண்டிய நிர்ப்பந்தம் வரக்கூடாது. யூனியனுக்கு அங்கங்களாக ஸொஸைட்டிகளை அதிகமாய்ச் சேர்க்கவும் கூடாது. சாமான்னியமாய் ஆறு சங்கங்களுக்கு அதிகம் ஆகாது. இப்படிச் சிறுக ஏற்படுவதால், ஒவ்வொரு ஸொஸைட்டியும் வருஷத்திற்கு இருமுறையாகிலும் தணிக்கையாகித் தீரவேண்டிய சௌகரிய மிருக்கும். ஏனெனில் யூனியன்களைச் சாமான்னியமாய்த் தணிக்கைக் காரியங்களுக்கு மாதமொருமுறைக் கதிகமாகவிஜயம் செய்யச்சொல்வது தகுமென்றெனக்குத் தோன்றவில்லை. தவிர, நமது சங்கங்களுக்கு நாளதுவரையுள்ள ஜீவேஜா நெருக்கத்தையும் நாம் கவனித்தால், யூனியன்களுக்குச் சம்பளம் கொடுத்துச் சிப்பந்தி யேற்படுத்தப் பணம் வேண்டும் அவைகளைத் தாராளமாய்க் கேட்பது கூடியமட்டில் இல்லாமலே பார்க்கவேண்டும். எந்த வகையிலும், இன்னும் கொஞ்சகாலமாவது, சில்லரைச் சங்கங்களில் நடப்பதுபோல், தரும கர்த்தர்களாலேயே இக்காரியம் நடந்து வரவேண்டும்.

9. இந்தச் சில்லரைக் குறிப்புகளை இன்று உங்களுக்குத் தெரிவித்ததில் என் உத்தேசமெல்லாம் எனக்கு மனதிற்பட்ட சில சங்கதிகள் உங்களுக்கும் தெரிந்திருக்கவேண்டுமென்பதே. இவைகளில் எதாகிலும் சாதிக்கக்கூடியனவாகக் கண்டால், அவைகளைக் காரியத்தில் பரீக்ஷை செய்யலாம். அது எனக்குச் சந்தோஷம் தான். அதனால், மறுபடி நாம் கூடும் பொழுது நம்முடைய அனுபவம் பரஸ்பரமாக உபயோகப்படும்.

---

# கோ ஆபரேடிவ் சங்கங்கள்.

---

## இவைகளை எப்படி உருப்படச் செய்வது?

திராகு மெயிலில் சமீபத்தில் நான் பிரசுரித்த கோ ஆபரேஷன் விஷயமான வியாஸம் இந்த தேசத்தில் எங்கும் பரவி ஜனங்களுக்குள் வெகு அக்கரை யுண்டாக்கி விட்டது. ஏனெனில், பல விடங்களிலிருந்தும் எனக்குக் கடிதங்கள் ஏராளமாக வந்து கொண்டிருக்கின்றன: அனேகம் கேள்விகள் புறப்படுகின்றன. இதனால் அனேகர் இவ்விஷயத்தை சிரத்தையாய் விசாரிக்கிறார்களென்று வெளியாகிறது. கோ ஆபரேஷன் என்பது

எப்படிக் காரியத்தில் காணுமென்று தெரியவேண்டி அனேகருக்கு ஆக்கிரகம். தவிர
இப்பொழுது பிழைத்து வருபவர்களுக்கு லோபம் ஒன்றுமில்லாமலும், எல்லோரும்
யதேச்சையாய் வியாபாரம் நடத்துவதில் காணும் தருமங்களுக்கு விரோதம் சிறிது
மில்லாமலும், கோ ஆபரேஷன் முறையில் எந்தத் தொழில் ஆரம்பிப்பது சரி யென்
றும் அவர்கள் அறிய வேண்டுகிறார்கள். 'எடுக்கச்சே' ஒன்று நிச்சயம். அதாவது,
மற்ற கக்ஷியாருக்குப் போட்டியாகி, அவர்களை நாசமாக்கும் எண்ணத்துடன் ஆரம்பித்
தால், கோ ஆபரேஷன் எக்காலத்திலும் சித்திக்காது. எக்காலத்திலும் அது போட்டி
சமாசாரமன்று. கோ ஆபரேஷனுக்குள்ள முக்கிய நோக்கமாவது எல்லாருடையவும்
க்ஷேமத்தைக்கோரி அமைவதாம். தொழிலாளியானால், அவனைக்கொண்டு அத்
தொழிலை விமரிசையாய்ச் செய்விப்பதும், அவனுக்கு நாணய மிருந்தால், அந்த
நாணயத்திற்குள்ள மரியாதை கிடைக்கச் செய்வதும்; வியாபாரியானால் அவனைப் பின்
னும் திறமான வியாபாரியாக்குவதும், அவனுக்குச் சாக்குகளை இப்போது வாங்கு
வதை விடச் சலீசாக வாங்கி, அதிக லாபத்திற்கு விற்று நற்பயனடையச் செய்வதும்;
இதுபோன்ற காரியமே கோ ஆபரேஷனுக்குப் பலனாகும். ஏனெனில், இந்த முறை
யில் காரியம் ஆரம்பித்தால், முதல் தரமான சரக்குகள் ரொக்க விலைக்கு வெகு தரு
சாக விற்றுப்போம். குடியானவனையும் இது நல்ல தரமான குடியானவனுக்கு
கிறது. ஏனெனில் கோ ஆபரேஷன் என்பதற்கு அனுபவமென்பதே உட்கருத்து
இதனால் உலகிலுள்ள எல்லா ஜாதியாரிடமிருந்தும் நாம் அறிவை யடைகிறோம். இந்த
அறிவும் அனுபவமும் குடியானவனுக்கு உதவுகிறது, ஆகவே மற்றவர்கள் ஏமாந்ததைப்
பார்த்தும், சித்தி யடைந்ததைப் பார்த்தும், இவன் வேளாண்மையைச் சிறக்கச்செய்து
கொண்டு பயனடைய வழி யேற்படுகிறது. தவிர, கோ ஆபரேஷன் என்பது சர்க்
காரையும் பிரஜைகளையும் இணைக்கும் கருவியாம். ஏனெனில் இம்மூலமாய் இவ்விரு
திறத்தாரும் எவ்வெவ்வகையாக வெல்லாம் நெருங்குவது சாத்தியமோ, அப்படி வேறு
எந்த மூலமாயும் பழகி நடப்பது சாத்தியமன்று. 'மகாஜன வாக்கியமே தெய்வவாக்கி
யம்' (என்று பெரியோர் சொல்லியது) எவ்விஷயத்திலாவது வாஸ்தவ மென்றால்,
அது கோ ஆபரேஷன் விஷயத்தில் தான் பூராவாக நிசம். மற்ற பக்ஷத்திலோ, ஈசுவர
சங்கற்பத்தால் ஏற்பட்டுள்ள ராஜாக்களால் பிரஜைகளுக்குக் கிடைக்கக் கூடிய க்ஷேம
லாபங்களை அவர்களுக்குச் சேர்ப்பிக்கவல்ல சாதனம் கோ ஆபரேஷனேயாம். பல
பேச்சு வேண்டாம். கோ ஆபரேஷன் என்பது, காயும் பூமிக்குச் சூழ்கொண்ட மேகங்
களினின்றும் வருஷித்துச் சகல பூண்டுகளுக்கும் ஜீவாதாரமாகிற மழையென்பதிற்
சந்தேகமுமில்லை. இதனால் வெறும் பரப்பான மணலும் சிங்காரத்தோட்ட மாகிவிடும்.
என் ஜீவதசையில் நான் அனேகரிடமிருந்து அனேகம் கற்று வந்திருக்கிறேன்.
ஆனால் அவற்றில் இரண்டு ரகசியங்கள் வெகு முக்கியமானவை. மேனாட்டு முனி
யொருவரும், கீழ் நாட்டு ரிஷி யொருவருமாக இரண்டு பெரியோர்கள் அவற்றை என
க்குக் கற்பித்திருக்கிறார்கள். என்றாலும் அவற்றைப் பூராவாக நான் அறிந்தேனில்லை,
ஆகவே எனது ஆயுட்கால முழுதும் நான் அவற்றைச் சிந்தித்துத் திடப்படுத்திக்
கொள்ள வேண்டும். மேனாட்டவர் சொன்னார்:—"உங்களுக்கு வேண்டியதின்ன
தென்று முதலில் நிஷ்கரிஷித்துக் கொள்ளுங்கள். பிறகு அதையே பிடித்த பிடியாக
விடாமற் பற்றுங்கள்," என்று. கீழ் நாட்டவருடைய அனுபத்தை அனுசரித்து இந்
திய ரிஷி சொன்னார்:—"இவ்வுலகிலுள்ள மனிதரையும், மற்றுள்ள பிரபஞ்சத்தையும்,
உள்ளபடி யுணர்ந்து, அவற்றைக்கொண்டு உத்தமபலன் எது அடையக்கூடுமோ அதை
அடையுங்கள்," என்று. கோ ஆபரேஷனென்னும் பெரிய மண்டபத்திற்கு இந்த
இரண்டு ரகசியங்களே அஸ்திவாரமும் கூரையுமாம். இந்த அஸ்திவாரத்தின் பல



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
11 MAR 1911
MADRAS.

த்தை நம்பி, கோ ஆபரேடிவ் முறையில் துணிந்தாகக் கூடிய தொழில்களென்னும்
அறைகளைப் பிரித்துச் சுவர்கள் 'பொங்கி' யிருக்கின்றன. இவ்வறைகளுக் கெல்லாம்
ஆவரணமாகி நிற்கும் மேற்கூரையோ, மண்டபமனைத்தையும் வியாபித்து, நீர் இறங்
காமலும், நெருப்புப் பிடியாமலும், காக்கும் 'கோவர்த்தனமாம்'!

நல்லது, மேனாட்டு வியாபார தருமங்களில் நாம் முதன் முதலறியவேண்டிய
பாடம், "உங்களுக்கு வேண்டியதின்ன தென்று முதலில் நிஷ்கரிஷித்துக் கொள்ளுங்
கள். பிறகு அதையே பிடித்த பிடி விடாமற் பற்றுங்கள்," என்பதாம். பாபட்லா
ஜனங்களும், தாலுக்காவில் மற்ற இடங்களிலுள்ளவர்களும் (வெகு காலமாக) என்ன
வேண்டினார்களென்பது எனக்குத் தெரியும். அவ்விடத்திய சதுப்புப் பிராந்தத்தை
(பரிஷ்கரித்து) அதிற் பொன் விளைவிக்க வேண்டுமென்பது தான் நமது அபிப்பிரா
யம். அந்தச் சதுப்பைச் சாகுபடி செய்வதில் அனேக மாயிரம் ஏழைக்குடிகள் ஓட்
டாண்டிகளானார்கள். ஏனெனில் அவர்கள் தங்களுடைய சர்வசொத்தையும் மூட்டு
வழியாகப்போட்டு, எப்படியோ செல்விகமாய்த் தங்களுக்கு ஆதாயம் கூடி வருமென்று
நம்பினார்கள். ஆதாயமோ நழுவிப்போய்க் கொண்டே யிருந்தது. என்றாலும் இவர்
கள் அதைத் தழுவிக்கட்டப் பார்த்தார்கள். எப்படியாவது பிடித்த பிடி விடாமல்
சதுப்பைச் சாகுபடி செய்து கொண்டே வந்தால், கடைசியில் பலித்துத் தீரவேண்டு
மென்று இவர்களுக்கு நம்பிக்கை! ஆனால் என்னவாயிற்று? ஐயோ பாபம்! பிரதி வரு
ஷமும் மலைச்சாரலில் மழைபெய்தால், அங்கிருந்து வெள்ளம் பெருவாரியாகிப் பிர
வகித்து விடும். பிறகு குடியானவன் கதி அதோகதி தான். பயிரெல்லாம் பார்ப்
பவர் வயிறெரிய நாசமாகிவிடும். ஆகவே, எங்களுடைய கஷ்டம் இது. இந்தப் பெருங்
கேட்டுக்கு என்ன பரிகாரமென்று ஐந்து வருஷகாலம் (அமெரிக்கர் மறைபொருளாய்ச்
சொல்லுகிறபடி,) நாங்கள் 'மல்லுகட்டினோம்.' பிறகு இந்தக் காரியம் சாதகமாக
வேண்டுமென்றால், அதற்குக் கோ ஆபரேஷனே கதியென்று நான் தீர்மானித்தேன்.
1908-ம் வருஷ கிறிஸ்துமஸ் தினத்தில் பாபட்லாவிலுள்ள பெரியதனக்காரராகிய கிர
கஸ்தரொருவர் வீட்டில், அவ்விடத்திய ஸ்ரீமான்களில் உத்தமர்களை வரவழைத்து ஒரு
மீட்டிங்கு கூடினோம். ஆதாயம் கூடி வரும்படி கோ ஆபரேடிவ் சங்கமொன்றை எவ்
வாறு ஆரம்பிப்பதென்கிற சங்கதியை நாம் தீர விசாரித்தோம். இந்தப் பெரிய விஷ
யத்தின் நய நஷ்டங்களை யெல்லாம் நாம் உள்ளூறப் பிரஸ்தாபித்தோம். வெகு தூரம்
பரியாலோசனை செய்த பிறகு, கோ ஆபரேடிவ் சங்கமொன்று தான் சதுப்பு நிலத்தில்
பயிரை யழிக்க ஏற்பட்ட துஷ்டசாதனங்களை எதிர்த்துப் போராடி வென்று காரி
யத்தை முடிக்கும் என்று எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள். ஆகவே இந்தச் சங்
கத்திற்கு ஏழு பெயரை டைரெக்டர்களாக நியமித்துக் கம்பெனியையும் (பங்குக்கா
ருடைய பொறுப்பைப் பங்குத்தொகை யளவிற்கு வரையறுத்து) 'லிமிடெட்' கம்பெனி
யாக்கி அதற்கேற்பட்ட சட்டத்தின்படி ரிஜிஸ்தர் செய்தோம். 19)4-ம் வருஷத்திய
கோ ஆபரேடிவ் சட்டப்படி ரிஜிஸ்தர் செய்து கொள்ளுவதற்கு எங்களால் ஆகவில்லை
ஏனெனில், இந்தச் சட்டம் நாணய விஷயத்தை மட்டுமே ஏற்கிறது. இது அனியாயம்,
நாணயத்தைப் பெருக்கும் பாங்கு வியாபாரமட்டுமே யன்றி, வியவசாய விஷயத்திலும்
கோ ஆபரேஷன் முறையிலுழைக்கும் சங்கங்களை இந்தச் சட்டபடி ரிஜிஸ்தர் செய்
வதற்கு இடமில்லை. கைத்தொழில், வியாபாரம் முதலியன சேர்ந்தாலும் அப்படித்
தான். ஆதலால் மகா ஜனங்கள் இந்தக் குறைவை யறிந்து, இம்மாதிரி நிர்ப்பந்தங்
களைச் சட்டத்தினின்றும் பூராவாக நீக்கி விடும்படி முறையிடவேண்டும், மகா ஜனங்
கள் இவ்வாறு முன்னுக்கு வந்து உழைக்கத் தயாரென்று சர்க்காருக்கு மட்டும் தெரிக்

தால், உடனே அவர்கள் அவ்வாறு செய்வதற்கு விரோதமாயுள்ள நிர்ப்பந்தங்களைச் சட்டத்தினின்றும் நீக்கி, அனுகூலங்களையும் உண்டாக்கி, உபகரிப்பார்களென்பது நிச்சயம்.

ஆதலால் கோ ஆபரேடிவ் சங்கம் ஏற்படவேண்டுமென்று நாம் தீர்மானிப்பதில், நமக்கு லக்ஷிய மின்னதென்று விளக்கிக் கொள்வது அவசியம். இன்ன காரியமாக வேண்டுமென்பது (மெம்பர்களெல்லோருக்கும்) விசதமாக வேண்டும். மகா ஜனங்களுடைய நன்மையை நாடிப் பிறந்திருக்கும் சங்கங்களனேகத்திற்கு இந்த ஒரு குறைவு நான் பொதுவாகக் காணுவது. அதாவது, அவைகளுக்கு லக்ஷிய மின்னதுதானென்று விளங்குவதில்லை. பெரியகாரியம் சாதித்து விடுவதாகப் பிதற்றுவதெல்லாம் சரிதான். ஆனால் 'அகலமாய் உழ' ப்பிரயத்தனப் படுவோருக்கு 'ஆழமாய்' உழுவது சாத்தியப் படுகிறதேயில்லை. ஆங்காங்கு சில்லரையாகக் காணும் கஷ்டங்களை ஜாக்கிரதையாய்ப் பரிசோதித்து, அவைகளைப்பரிகரிக்கப் பிரயத்தனப்படுவது தான் (கிரமமாயாக வேண்டியகாரியம்.) ஆகவே, பாபட்லா கோ ஆபரேடிவ் சங்கம் தன் மூலமாய் ஆகவேண்டிய காரியங்களுக்கெல்லாம் ஆதாரமாகப் பின்வரும் நியமங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. மற்ற சங்கங்களும் அவ்வாறே மூலாதார நியமங்களின்னவை யென்று நிஷ்கரிஷித்துக் கொண்டால் நலம். தேச வித்தியாசங்களை யனுசரித்து வேண்டியபடி சில்லரையாகப் பேதங்களிருக்கத்தான் வேண்டும். என்றாலும், மொத்தத்தில் பாபட்லா சங்கத்தில் காணுவது (சரியென்று ஒப்பலாம்.)

(1) இது பங்குக்காரர் சேர்ந்து ஆகிய சங்கம். இதன் உத்தேசமாவது, வியவசாயம், கைத்தொழில், பாங்கு, வியாபாரம் முதலிய யாவும் கோ ஆபரேஷன் முறையில் நடந்தால், செல்வம் பெருகுவதுடன், மகா ஜனங்களுக்கும் நன்மையை விளைவிக்கிறதென்பதைக் காரியத்தில் ருசுப்படுத்துவதாம்.

(2) இந்தச் சங்கத்திற்கு பெயர்மாத்திரத்தில் பங்கு ரூபாய் 50,000. இது பங்கு 1-க்கு ரூ 50. வீதம் 1000 பங்குகளாகப் பிரிந்திருக்கிறது. யாவனும் இந்தச் சங்கத்தில் 50 பங்குக்கு அதிகமாயாவது, 1 பங்குக்குக் குறைந்தாவது, எடுக்கக் கூடாது. எடுத்த பங்குக்குத் தொகை வருஷம் 1-க்கு பங்கு 1-க்கு ரூ 5. ஆகப் பத்துத் தவணைகளில் செல்லாகவேண்டும்.

(3) வியவசாயம் புத்திசாலித் தனமாகவும், 'ஆழவுழுது' பயரிடும் முறைப்படியும், நடக்க வேண்டி, பூமி சம்பாதிப்பது இதன் காரியமாம். சர்க்காருடைய உதவியையும் அனுசரணையையும் தேடி யடைந்து, இந்தச் சங்கம் பரீக்ஷைக் காரியங்களில் பிரவேசிக்க வேண்டும். தவிர இந்த சங்கத்தின் மூலமாய்ப் பங்குக்காரருக்கு லாபகரமானதும், மகா ஜனங்களுக்கு நன்மை செய்யக் கூடியதுமான முறைகளில், பாங்குக் காரியமோ, கைத்தொழில்களோ, வியாபாரமோ, எது வேண்டுமோனாலும் நடத்தலாம். வேறு கம்பெனிகளில் பங்குகள் வாங்குவது மட்டும் சுத்தமாய்க் கூடாது.

(4) இச்சங்கம் ஈசுவராதீன மென்பது தெளிவாயிருப்பதால், தான் கொடுக்க வேண்டிய கடன்களைப் பைசல் செய்து, க்ஷேமதனத்திற்கு வேண்டியதையும் பிரித்து வைத்து விட்டு, மீதியுள்ள காரார் லாபத்தை நிஷ்கரிஷித்துக் கொண்டு, அதில் 10-ல் ஒரு பங்கு புண்ணிய காரியத்திற்கென்று எடுத்து வைக்கவேண்டும். இந்தத் தருமப் பணம் இவ்வாறாகப் பிரியவேண்டும். மேற்கண்ட தொகையில் மூன்றிலொருபங்கு



பள்ளிப் பிள்ளைகளில் ஏழைகளுக்குதவி யாகவும், மூன்றிலொரு பங்கு பாபட்லாவிலுள்ள பாப்டிஸ்டு கிறிஸ்தவ கோயில் பாதிரிமார் பஞ்சாயத்துக்கு, இழிகுலத்தவரை உத்தாரஞ்செய்ய எண்ணி அவர்கள் செய்துவரும் பிரயத்தனத்திற்குதவி யாகவும், மீதியுள்ளது டைரெக்டர்கள் தங்களுக்கு விஹிதமாகக் காணுவதை யனுசரித்து உபகரிக்க வேண்டியபோது ரிலீப்பண்டு ஆகவும் வேண்டும்.

(என்று இந்தப்படி நியமங்கள் ஏற்பட்டிருக்கின்றன.)

கீழ்நாட்டா ரெல்லோரும் தலைவிதியையே நொந்து கையை மடக்கிக்கொண்டிருப்பவரென்பது வாஸ்தவமன்று. இவ்வுலகத்தில் நாம் செய்துவரும் காரியங்களில் சாஸ்திர சம்மதமாக அறிந்து நாம் மேற்கொள்ளும் 'அதிருஷ்டம்' அல்லது 'தலைவிதி' யென்பது, நமக்குப் பெருநன்மையைக் கொடுப்பதாகிய ஓர் அரியநிதி யென்பதில் தடையேயில்லை. (என்றாலும், சாமான்னியர் இவ்விஷயத்தில் தப்பாகஎண்ணித் 'தலைவிதியை' அநேக சமயங்களில் நொந்து சோம்பேரிகளாகித் திரிவதுண்டு.) அந்தத் தப்பெண்ணம் இப்பொழுது ருஷிய-ஜப்பானிய யுத்தத்திற்குப் பிறகும், இந்தியா, சீனு முதலியதேசங்களில் மகாஜனங்கள் கண்விழிக்கத் தொடங்கிய பிறகும், அனேகமாய், மாறித் தொலைந்துவிட்டது. ஆதலால் 'இன்றைய' சமாசாரம் என்னவென்றால், கீழ்நாட்டார் "நாம் தூக்கத்தைவிட்டு எழுந்து நம்முடைய தருமத்தைக் கையாடுவோமாக", என்று எங்கும் முறையிடுவதாம். ஆகவே லாங்கு பெல்லோ என்னும் (அமெரிக்கக் கவி)யை அபசாரக்ஷமை கேட்டுக்கொண்டு அவருடைய செய்யுளைக் கொஞ்சம்போல மாற்றி அதையே இவர்கள் மனதிலுள்ள அர்த்தத்தை விளக்கும் ஸ்மிருதியாகக் கூறலாம். அது வருமாறு:—"பலஜாதி ஜனங்களிலும் நடந்துள்ள பெருங்காரியங்களைக் கவனிக்குமிடத்து, நாம் நமது நாட்டையும் பெருக்கச் செய்யலாமென்பது தெளிவாகிறது. அவ்வாறு பெருங்காரியங்களி லுழைத்துவிட்டு நாம் செலவு பெற்றுக்கொண்டு போகையில், காலமென்னும் அபாரமாகிய மணற்கண்டத்தில் நமது புண்ணிய கருமங்களாகிய அடிச்சுவடுகள் நாமிருந்ததற்கு அறிகுறிகளாகின்றன", என்பதாம். நல்லது இப்பொழுது, "இவ்வுலகிலுள்ள மனிதரையும், மற்றுள்ள பிரபஞ்சத்தையும் உள்ளபடியுணர்ந்து, அவற்றைக்கொண்டு உத்தமபலன் எது அடையக்கூடுமோ அதை அடைய" வேண்டுமென்று, 'தலைவிதியையே' நம்பியிருப்பவரும் ஒப்புக்கொண்டால், கோ ஆபரேஷன்முறையி லுழைப்பவர்களுக்கும் அதை ஒப்புக்கொள்ள இஷ்டந்தான். அம்மட்டேயல்லாமல் அதை அவர்கள் ஒப்புக்கொண்டானதாகவும், அன்னியருக்கு அதைப் போதித்துவருவதாகவும் கூடச்சொல்லிக்கொள்ளலாம். ஆகவே, இத்தேசத்திலுள்ள "மனிதர்களையும், மற்ற பிரபஞ்சத்தையும்" கொண்டு "உத்தமபலன்" எப்படி யடையலாம்? ஒரேவழியில்தான். அதாவது, தேசத்திலுள்ள தோஷங்கள் நீங்கி, குணங்கள் பெருகி, மகாஜனங்களனைவருக்கும் க்ஷேமம் விளைவதற்காக, எல்லோரும் கூடிப் பிரயத்தனம் செய்வதென்று தீர்மானித்து, அப்பெரிய பிரயத்தனத்தில் உழைப்பதற்கு இந்நாட்டு புத்திமான்களையும், பலவான்களையும் ஒன்று சேர்ப்பதனால்தான் ஆகவேண்டும். இப்படி யொன்று சேர்ப்பவர் யார்? 'விருத்த மந்திரிகளும், பாலவீரர்களும் தானே?' தெய்வாதீனம், இந்தியாவில் இக்காரியத்திற்கு வேண்டிய விருத்தருமிருக்கிறார்கள், பாலருமிருக்கிறார்கள். கோ ஆபரேடிவ் சங்கங்கள் நடக்கவேண்டிய முறைகளைப் போதித்துச் சரியாக நடத்துவதற்கு வேண்டிய 'மந்திரி மூப்பர்கள்', இத்தேசத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் பட்டணங்களிலு மிருக்கிறார்கள். அவர்களெல்லோரும் (சர்க்கார் நாபிலுழைத்து) பென்ஷன் வாங்குபவர்கள். ஆகவே அவர்களெல்லோரும் கட்டுக்கடங்கி வேலைசெய்து பழகியவர்கள். அதிலும் சிலர் வெகு பெரிய

நற்குணங்கள்கூடி எல்லாராலும் மரியாதை பெறவேண்டியவர்கள். இவர்கள் இந்தப் பிராந்தங்களில் காணுகிற காலதேச வர்த்தமானங்களை நன்றாயறிந்து, அவற்றை யனுசரித்து மகாஜனங்களுக்கு நலம்பெருகுவதற்கு ஏற்ற உபாயங்களையும் சொல்ல வல்லவர்கள். ஆதலால் கோ ஆபரேஷன் முறையில் காரியம் நடக்க வேண்டுவோர் இவர்களை முன்னிட்டு, இவர்களை டைரெக்டர்களாக்கி நடத்தவேண்டும். ஆரம்பித்த காரியங்களை நிர்வகித்துப் போராடவேண்டிய பலிஷ்டர்கள் யாரென்றால், இத்தேசத்தில் கல்வியயின்றோ, அப்பயிற்சியில்லாமலோ, இருக்கும் பாலபுருஷர்கள். இவர்களிலும் முக்கியமாய் ஏழைப்பிள்ளைகள். சர்க்கார் தரபில் தனக்கு உத்தியோகம் கிடைப்பது சாத்தியமேயில்லையென்பதை எத்தனையோ பெயர் கண்டுகொள்ளுகிறார்கள். அனேகர் கண்டிராக்ட்டர்களாகக்கூடப் போவதற்காவதில்லை. ஆனால் இவர்களில் ஒவ்வொருவனும் அபார சாமர்த்தியமுள்ளவன். அவனுக்குத் தேசாபிமானமுண்டு. இப்படியிருக்க இவர்களுக்குச் செய்வதற்குக் கிரகஸ்த மார்க்கமாகக் காரியம் ஒன்றும் ஏற்படாமல் சோம்பலாயிருக்கிற ஒரே காரணத்தால், இவர்களிலனேகர் ராஜத்துரோகிகளுடைய பதர்ப்பேச்சை வேண்டிக்கொண்டு மயங்கி, அனர்த்தங்களுக்கு இலக்காகிறார்களே, என்னபாபம்! இப்பொழுதோ கோ ஆபரேஷன் என்பது வேலையற்றவர்க்கெல்லாம் நாணயமாகப் பிழைக்கும் வழிகாட்டத் தயாராயிருக்கிறது. அம்மூலமாக அனேகம் பலிஷ்டரான வாலிபர் முயன்று, காரியத்தைச்செய்து கொடுத்துத் தங்களுக்கும் நற்பயனுண்டாக்கிக்கொண்டு, உலகத்திற்கும் நற்காரியஞ்செய்து பேரும் பெருமையுமடையலாம். எத்தனையோ மார்க்கங்கள் இவ்வழியாய்ப் போகிறவர்களுக்குக்காணும். இப்படித் திறந்துகிடக்கும் ராஜபாட்டைகளால் இவர்களும் பிரவேசித்து நன்மையடைவார்களா? செய்வார்களென்றுதான் நம்புகிறேன். அதுமட்டேயல்ல, செய்வார்களென்கிற நிச்சயமாயிருக்கிறேன். இவ்விடத்திலுள்ள ஜனங்களெல்லாம் கண்ணைத்திறந்து பார்த்து கோ ஆபரேஷன் முறையாகத் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய பெரும்பலன்களையறிந்து இன்னும் ஆகவேண்டிய பெருங்காரியங்களில் எல்லோரும் ஒன்றுசேர்ந்து நிர்வகிப்பதற்கு ஒருகாலம் நிச்சயமாய்வரும். அதை நான்கண்டு களிப்பேனென்றே எண்ணியிருக்கிறேன். இப்படியாக வேண்டிய பெருங்காரியங்களில் சிலவற்றை யின்னவையென்று வேறொரு சந்தர்ப்பத்தில் விளக்குவதாயிருக்கிறேன்.

(ஒப்பம்) ஜி. என். தாம்ஸ்ஸன் பாதிரியார்

மதிராசு மெயில், 5-2-10.

# கோ ஆபரேடர்களுடைய இரண்டாவது ஜில்லா மகாநாடு, செங்கற்பட்டுஜில்லா.

---

ஐக்கிய நாணயமுறை யென்கிற ரூபமாக, இந்நாட்டாருடைய பாரம்பரிய குணத்தையொட்டி வேலைசெய்வதாகிய இந்தப் பெருங்காரியத்தை இந்தியாவிலாரம்பித்துப் பரீக்ஷித்துவருவது தற்காலம் நம்மையாளும் துரைத்தனத்தாருடைய தருமகாரியமேயாம். இந்தப்பரீக்ஷை வெகு முக்கியமானது. இதன் பிரயோஜனமோ நம்முடைய புத்திர பௌத்திர பரம்பரைக்கெல்லாம் அனுகூலமாகி ஆயிரங்காலம் நன்றாய்ச் செழிக்கக்கூடியது. இந்த நாட்டிற்கு இந்தமுறை புதிதா, பழையதா வென்பதை நாம் வியவகரிப்பதிருக்கட்டும். இதை நாடெங்கும் பரவச்செய்யும் காரியத்தை நாம் பக்தி சிரத்தையுடன் மேற்கொண்டு நடத்தவேண்டியதுதான் இப்பொழுதாகவேண்டும். ஏனெனில் இதற்குக்காரணம் வெகு எளிதில் விளங்கும். இத்தேசமெங்கும் வேளாண்மை நடத்தும் அப்பாவிகளுக்கு இம்மூலமாகத்தான் க்ஷேமம் கிடைக்கும்.

2. இதுவரை நடந்ததில் பலன் திருப்திகரமாகவே கிடைத்திருக்கிறது. சந்தேகமேயில்லை. இனி நடப்பதிலோவென்றால், மகாஜனங்கள் (சர்க்கார்) தங்களிடம் விசுவாசம்வைத்து வருவதை அறிந்து, அதற்குத்தக்கவண்ணம் நடந்து மேற்சொல்லிய விசுவாசத்திற்குத் தங்களிடத்திலும் யோக்கியதை யிருப்பதாக ருசுப்படுத்து மளவிற்கு பலனும் அப்படியேதான் அதிகரித்துவரும். இந்தச் செங்கற்பட்டு ஜில்லாவில் ஜனங்களுக்குப் 'பசை' வெகுதூரம் குறைந்துள்ளது. அப்படியிருந்தும், இந்தப் பிரதேசத்தில் காரியம் நடந்தவரையில் தகராராவது, சில்லரை உபத்திரவங்களாவது இருக்கவில்லை. கோ ஆபரேஷன் எவ்வகையிலும் தயங்காமல் முன்னுக்குவந்து கொண்டிருப்பதாகவே சொல்லிவிடலாம். ஏனெனில், இந்த ஜில்லாவிலுள்ள கோ ஆபரேடிவ் நாணயச்சங்கங்களெல்லாவற்றினின்றும் பிரதிநிதிகள் வருஷவாரி (தப்பாமல்) கூடிவருவதினால், அதுவே இம்முறை கிரமமாகவும், ஒரே சுமாராகவும் பெருகிச் செழிப்பதற்கு வேண்டிய சாக்ஷியமாம். இந்த ராஜதானியில் செங்கற்பட்டு கோ ஆபரேட்டர்களுடைய சங்கமென்பதுதான் இவ்வகைக்கு முதன்முதலமைந்ததாம். அதற்குள்ள லக்ஷியமெல்லாம் இந்த முறையை மகாஜனங்களுக்குப் பரவச்செய்வதும், விஷயமறியாதவர்களுக்கு ஐக்கியநாணய மின்னதென்று விளக்கிவருவதுமேயாம். தவிர எல்லாக் கோ ஆபரேடிவ் ஸொஸைட்டிகளுடையவும் பிரதிநிதிகளை வரவழைத்து, ஒவ்வொருவருஷமும் ஜில்லா ஸொஸைட்டிகளின் பிரதிநிதிகளுடைய மீட்டிங்கு ஒன்று வைத்துவருவதும் இதன் உத்தேசமாம். ஏனென்றால், இப்படிச்செய்வதில் இந்தக்காரியம் பலபெயருக்குத் தெரியவரும். தவிர இப்படிச்சேருவதில் அங்கங்கேகாணும் அனுபவங்களைக் கோ ஆபரேட்டர்கள் பரஸ்பரமறிந்து உபயோகப்படுத்திக் கொள்ளலாம். தவிர, தினசரி நடக்கும் வேலைகளில்காணும் கஷ்டநிஷ்டூரங்களுக்குப் பரிகாரமாக ஒருவரெண்ணம் மற்றவருக்

கும உதவலாம். இப்படியெல்லாமாவதில், கோ ஆபரேஷன் முறையானது சாஸ்திரப்படி பெருகித்தழைப்பதற்குச் சர்க்கார்மட்டும் முயன்றால் போதாது, உத்தியோகஸ்தரல்லாத மற்றைய வர்க்கங்களிலும் யோக்கியதைகூடிய ஸ்ரீமான்கள் எல்லோரும் உழைத்துவந்தால் மட்டுமே இக்காரியம் பூராவாகப் பயன்பெறுமென்னும் பெரிய ரகசியமும் வெளியாகிறது.

3. முதல்ஜில்லா மீட்டிங்கு சென்றவருடம் பிப்ரவரிமாதம்கூடிக் காரியம் சீராய் நடந்தது. இரண்டாவது இப்பொழுதுதான்கூடிக் கலைந்தது. முதல்தடவை ஒரே நாள்தான் கூட்டமிருந்தது. இப்பொழுதோ இரண்டுநாளைக்குக் காரியமிருந்தது. அந்தமட்டில் போனமுறையைவிட இந்தத்தடவை பிரயோஜன மதிகரித்ததாகத் தாராளமாய்ச் சொல்லலாம். பிரதிநிதிகள் இவ்விஷயத்தில் எடுத்துக்கொண்ட அக்கறையையும் ஆக்கிரகத்தையும் பார்க்கும்போது, இக்காரியம் இந்த ஜில்லாவில் நன்றாக வேரூன்றி விட்டதாகத் தெரிந்தது.

4. வருஷவாரி மீட்டிங்கை நிர்வகித்துவரும் கோ ஆபரேடிவ் ஸொஸைட்டியாருடைய அபிப்பிராயமானது ஒவ்வொரு கிராமப்பாங்கிலிருந்தும் பிரதிநிதிகள் அதனுடைய யோக்கியதையை யனுசரித்துக் கூடியோ குறைந்தோ இருக்கவேண்டுமென்று இருந்தது. ஆனால் கிராமப்பாங்குகளுக்கு இம்மாதிரி நிர்ப்பந்தம் சரிப்படவில்லை. ஏனெனில் அவைகள் தங்கள்தங்கள் வகையில் பிரதிநிதிகளாக ஷை நிபந்தனையை யனுசரித்து வேண்டிய பேர்களை அனுப்பியதுமன்றி, வேறு அனேகரைப்போய் மீட்டிங்கிலிருக்கும் படிக்கும், நடவடிக்கைகளை பார்த்து வரும்படிக்கும் நியோகித்து விட்டார்கள். 51 சங்கங்களுக்கு 'ஓலை' போயிற்று. 44-லிலிருந்து 64 பிரதிநிதிகள் வந்தார்கள். சுமார் 50 மெம்பர்கள் மீட்டிங்கில் மேற் சொல்லியபடி சாக்ஷீயமாக வந்திருந்தார்கள். பிரதிநிதிகளும், மற்றபடி மீட்டிங்கைப்பார்க்க வந்த ஸ்ரீமான்களும் கூடி 300 பெயராயிற்று. அப்படிப்பார்க்க வந்தவர்களில், ஸ்ரீமான்கள் ஸர். வி. ஸி. தேசிகாசாரியார், நைட், ஆர். ராமசந்திரராவ், பி. ஏ. திவான் பஹதூர் எல். டி., சுவாமிக்கண்ணு பிள்ளை, எம். ஏ., பி. எல்., எல். எல். பி., ராவ் பஹதூர் எம். ஆதிநாராயண அய்யர், வி. பி. ராமசுவாமி அய்யர், பி. ஏ., பி. எல்., கே. விஜயராகவாசாரியார், எம். ஏ., சாவுகார் கோவிந்த தாஸ், ஸி. எம். சுப்பராய முதலியார், பென்ஷன் டிஸ்திரிக்டு ரிஜிஸ்திரார் எஸ். ரங்காசாரியார், முதலியோர் முக்கியஸ்தர். இவர்களெல்லோரும் விஜயம் செய்ததல்லாமல், மீட்டிங்கில் விஷயங்களை உறைக்கப் பேசியும் வந்து அம்மூலமாக மீட்டிங்கின் பிரயோஜனம் சித்திக்கும்படி செய்தார்கள்.

5. பிரதிநிதிகள் இவ்வூரில் தங்கியிருந்த காலத்தில் அவர்களுக்கு அன்ன ஆகாராதிகள், தங்குமிடம், முதலிய உபசாரணைகளில் யாதொரு அம்சமும் குறைவுகாணாதபடி, உபசாரணைக் கம்மிட்டியார் சித்தப்படுத்தியிருந்தார்கள். பிரதிநிதிகளில் வருணாசிரம நியமங்களை யனுசரித்து, அவரவருக்கு ஏற்ற வண்ணம் சாப்பாடு விஷயத்தில் ஏற்பாடாயிருந்தது. பார்க்க வந்தவர்களில் பெரிய மனிதர்களுக்கும், வேறு பிராந்தங்களிலிருந்து வந்த கோ ஆபரேட்டர்களுக்கும், விடுதிகள் பிரத்தியேகம் ஏற்பட்டிருந்தன. டவுனிலிருந்த தனவான்களும், விஷயத்தில் சிரத்தைகொண்ட வேறு ஸ்ரீமான்களும் கம்மிட்டியாருக்கு வெகு தூரம் ஒத்தாசைசெய்து, பிரதிநிதிகளுடைய சௌக்கியத்தை யபேக்ஷித்துச்செய்த காரியங்களை யெல்லாம் சுசடறச் செய்தார்கள்.



6. இந்த மீட்டிங்குக்கு அக்கிராசனாதிபதியாக கனம் ஏ. இ. காஸில்ஸ்ட்யூவார்ட் ஸ்ட்யூவார்ட், ஐ. ஸி. எஸ்., ஸி. எஸ். ஐ., அவர்களை அடைய வேண்டுமென்று இதை நிர்வகிக்க ஒப்புக் கொண்டவர் தாற்பரியப் பட்டார்கள். ஆனால், கச்சேரி அலுவல் ஜரூராக விருந்ததால் அவர் வரக்கூட வில்லை. ஆனால் அவர் மீட்டிங்கில் படிக்கும்படி அனுப்பிய கடிதத்தினால், இந்தக்காரியம் பிரபலித்து வருவதைக் கண்டு அவருக்கு மனப்பூர்வமாய் எவ்வளவு சந்தோஷமென்பது விளங்கிற்று தவிர இந்த ஜில்லாவில் உத்தியோகஸ்தரல்லாத இதர ஸ்ரீமான்கள் இவ்விஷயத்தி லுழைத்திருப்பதைக் மேற்படியார் நன்றாயறிந்து அதைதகுந்தபடி சிலாகித்திருப்பது கொண்டு, மேற்கண்ட வகையார் இனிவரும் காலத்தில் இன்னும் உறைப்பாக வேலை செய்வதற்கு இதுவே தகுந்தபடி பலங்கொடுக்கு மென்று நம்புவதற்கிட முண்டு.

7. ஆனால் அக்கிராசனத்தை வகிக்கவேண்டி, நாடெங்கும் பரவிய சக்தியும், இத்தேசமெங்கும் கோ ஆபரேஷன் பரவி வரவேண்டு மென்னும் ஆக்கிரகமும் கூடி, இவ்விஷயத்தில் விவேகமும் அக்கறையும் வெகுவாய்க் காட்டிவரும் ஸ்ரீமானொருவரைக் ஷையாருக்குப் பிரதியாகக்கண்டு பிடித்தது, இந்தக்காரியத்தின் புண்ணிய விசேஷமென்றும், இந்த மீட்டிங்கு இவ்வளவு தூரம் திருப்திகரமாக முடிந்தது இதனால்தானென்றும் தாராளமாய்ச் சொல்லலாம். இவர் யாரெனில், இந்த யூனிவர்ஸிட்டியில் கில்லத்து வார்கியவர்களில் முக்கியஸ்தராயும், ஹைகோர்ட்டு வக்கீல்களில் பிரமுகராயு மிருக்கும் ஸ்ரீமான் பி. ஆர் சுந்தர அய்யரவர்களேயாம். இவர் (தமது குணவிபவங்களால்) இந்நாட்டாராகிய நம்மவரனைவரும் தம்மை விசுவசிக்கவும், மரியாதை செய்யவும் தக்க பதவியை யடைந்திருக்கிறார். ஆதலால் கோ ஆபரேடிவ் முறை இந்நாட்டில் பரவவேண்டிப் பிறந்திருக்கும் பிரசங்க முதலியவற்றிற்கு, இவர் இச்சமயத்தில் பேசியதும் சேர்வதில் அதனால் நற்பயன் வெகு அதிகமென்பதில் தடையில்லை. ஐக்கியநாணயம் பரவவேண்டி யுழைப்பவர் இந்தப் பிரசங்கத்தைத் தமது ஞாபகத்தில் வைத்து உழைப்பார்களாகில், அது அவர்களுக்கு நல்ல நிதியாக உபயோகப்படும். இவருக்கு நாம் வேண்டியமட்டில் அவகாசம் கொடுக்கவில்லை. என்றாலும் அதைப்பரவா செய்யாமல் நாம் கேட்டதற்குச் சரியென்று அவர் ஒப்புக்கொண்டதைப் பார்க்குமிடத்து, இந்த அருங்காரியத்திற்குத் தம்மாலியன்றதைச் செய்ய வேண்டுமென்று அவர் மனதில் வலுத்திருந்த ஆக்கிரகம் வெளியாகும். ஆதலால் கம்மிட்டியார் தாங்கள் இவரைக் கேட்பதென்று தீர்மானித்த விஷயத்தில் மெத்தவும் பெருமைப்படுகிறார்கள். அவர் காஞ்சீபுரத்திற்கு ஜனவரி 22-ம் தேதி காலை 10 மணிக்கு வந்தார். முதலில் அவர் ரயில் மார்க்கமாய் வருவதாக எண்ணமிருந்தது. ஆனால் பிறகு அது மாறி அவர் மோட்டார் வண்டியில் வந்தார். இதனால் அவருக்கு மனதாற நல்வரவு கூறவேண்டுமென்னும் ஆக்கிரகம் நிறைந்து ரயில்வே ஸ்டேஷனில் கூடியிருந்த பிரதிநிதிகளனைவருக்கும் மனக்குறைவு மெத்தவும் உண்டாயிற்று. ஆனால் ரயில்வே ஸ்டேஷனில் அவருக்குச்செய்ய முடியாமற் போன உபசாரமனைத்தையும், அவர்கள் மீட்டிங்கு மண்டபத்தில் செய்தார்கள். ஏனெனில் அவ்விடத்திற்கு இவர் மேளதாள முதலிய சகல வரிசைகளுடனும் போகும்படி ஏற்பாடாகிக் கிரமமாக நிறைவேறிற்று.

8. உபசாரணைக் கம்மிட்டிக்குச் செயர்மென் இவ்வருஷம் மாஜி ஹைகோர்ட்டு வக்கீல் ஸ்ரீமான் எம். ஈ. ஸ்ரீ ரங்காசாரியாரவர்கள், பி. ஏ., பி. எல். இது இந்த மீட்டிங்குக்கு வெகு நல்ல அதிருஷ்டம். ஏனெனில், இவர் இவ்விடத்திய தனகனவான்களில் முக்கியஸ்தர். தம்மைச்சுற்றி நடக்கும் காரியங்களெல்லாவற்றையும் அவர் நேர

விசாரித்துக் 'கவைக்குதவு பவைகளை' மட்டுமே ஆதரிப்பவர். ஆதலால் எந்தக் காரியமாகிலும், அது நமக்கு உபயோகப்படுவது நிஷ்களிஷயாகி, அதனால் கிடைக்கக் கூடிய பயனும் பிரத்தியக்ஷமானாலொழிய, அவர் அக்காரியத்தில் பிரவேசிக்கச் சிறிதும் பிரியப்படமாட்டார். ஆதலால் அவர் இத்தருணத்தில் இந்தக்காரிய விஷயத்தில் இனித்தனக்கு யாதொரு சந்தேகமுமில்லையென்று பகிரங்கமாய் ஒப்புக்கொண்டது, அவருடைய மனதில் நிலையாக ஊன்றிய நல்லெண்ணத்திற்கும், அவருடைய பெருந்தன்மைக்கும், ஏற்ற சாக்ஷியமாம். பிரதிநிதிகளுக்கு நல்வரவு கூறி அவர் பேசியது எல்லோருக்கும் சம்மதம். கோ ஆபரேஷன் முறையில் காரியம்வகித்து நடத்திவருபவர் அனைவரும் இதில் காணும் அனேக யுக்தி யோசனைகளைக் கவனித்து நடப்பார்களாகில் அவருக்குச் சுகிர்தமுண்டு.

9. இந்த மீட்டிங்கு பச்சையப்பன் ஹைஸ்கூலில் பின்கட்டிலுள்ள மண்டபத்தில் கூடிற்று. ஏனெனில், முன்னுள்ளதைவிட இதில் ஸ்தலவிஸ்தீரணம் அதிகம். பிரதிநிதிகளுக்கும், பார்க்கவந்தவருக்கும் விடுதிகள் பிரத்தியேகமாய் ஏற்பட்டிருந்தன. துவக்கத்தில் உபசரணைக்கமிட்டி செயர்மேன் பிரதிநிதிகளுக்கு முகமன் கூறினார். பிறகு ஸ்ரீமான்கள் கீழச்சேரி வி. அருணையநாயுடு, உத்தரமேரூர் ஸி. எம். வெங்கடநாத அய்யங்கார், எரியமங்கலம் ஸ்வாமி கோவிந்தநாயுடு ஆகிய (இந்த ஜில்லாவில் இவ்விஷயத்தில் கைதேர்ந்த) கோ ஆபரேட்டர்கள், ஸ்ரீமான் பி. ஆர். சுந்தரய்யரவர்களை இந்த மீட்டிங்குக்குச் சபாநாயகராகக் காரியத்தைச் சீராக நடத்தவேண்டுமென்று முறையே பிரேரேபித்து, ஆமோதித்து, சம்மதித்து முடித்தார்கள். அப்படியே அவரும் அக்கிராசனாதிபத்தியம் வகிக்கச் சபையோர் ஜயகோஷ முழக்கினார்கள். மீட்டிங்குக்கு வரக்கூடாமற்போனதை முன்னிட்டு மனவருத்தமிருப்பதையும், மீட்டிங்கு சரிவர நிறைவேற வேண்டுமென்று தங்களுக்கிருக்கும் ஆக்கிரகத்தையும் விளக்கி வந்திருந்த பலகடிதங்கள் வாசிக்கப்பட்டன. மைசூர் சர்க்கார்தாபில் ஐக்கிய நாணய ரிஜிஸ்திரார் ஸ்ரீமான் சாமராவ், எம். ஏ., ராவ்பஹதூர் மெய்கண்ட தேவமுதலியார் (பங்களூர்), கல்லியாணதுருக்கம் தாசில்தார் ஏ பொன்னுசாமி அய்யரவர்கள் பி. ஏ., தொழில் வகை டைரக்டர் ஸி. டப்ளியூ. இ. காட்டன், இவர்கள் போன்ற அனேகரிடமிருந்து கடிதங்கள் வந்திருந்தன. பிறகு அக்கிராசனாதிபதி சபையோருக்கு விஷயத்தை விளக்கி இங்கிலீஷில் பேசினார். அதையே சுருக்கமாகத் தமிழிலும் சொன்னார்கள். இந்த ரிபோர்ட்டில வேறோரிடத்தில் இந்தப் பிரவசனம் பூராவும் பிரசுரித்திருப்பதால், அதை விஸ்தரித்து இவ்விடத்தில் விளக்க வேண்டுவது அனாவசியம். மொத்தத்தில் அதில் பல நல்லுபதேசங்களும், அரிய புது விஷயங்களும் நிறைந்திருந்தன வென்பது மட்டும் இங்கே சொல்வது போதும். கோ ஆபரேடிவ் முறைக்கு மூலாதாரமாயுள்ள மூன்று முக்கிய அம்சங்களும் இந்தப் பிரவசனத்தில் நன்கு விசாரிக்கப்பட்டு வற்புறுத்தப்பட்டன. அவை (1) நாணயம் முற்றுதல், (2) ஏழைகளுக்குபகாரம், (3) வாங்கிய கடனைக் கெடுப்படி கொடுத்தல், ஆகிய இவைகளாம். இதன்றி, கோ ஆபரேடிவ் பாங்குகளில் பணம் போடுவது நிர்ப்பயமான லேவாதேவியென்று பிரசிடெண்டவர்கள் தெளிவாக்கி, தானும் அது காரணப்பற்றித் தன் சொந்தப்பணத்தில் வெகு அதிகமாய் இப்பாங்கிலேயே டிபாசிட்டு வைத்திருப்பதை வெளியிட்டார்.

10. பிரசிடெண்டு அவர்களுடைய பிரவசனம் முடிந்ததும், செங்கற்பட்டு கோ ஆபரேடிவ் ஸொஸைட்டியின் யோகக்ஷேம ரிபோர்ட்டு முதலில் வாசிக்கப்பட்டது. [illegible] உத்தியோகஸ்தரல்லாத கனவான்கள் இவ்விஷயத்தில் [illegible] சேர்த்



தையாய் உழைத்து வந்திருக்கும் ரகசியம் வெளியாயிற்று. இந்த ரிபோட்டிலிருந்து இந்த ஸொஸைட்டி கோ ஆபரேடிவ் முறை பெருகவேண்டி யுழைத்திருப்பது டிபார்ட்மெண்டார் நினைத்திருந்ததை விட எவ்வளவோ மடங்கு அதிகமாகக் கண்டது. இந்த ஜில்லாவில் ஜனங்கள் கோ ஆபரேஷன் முறையில் காரியம் நடக்கவேண்டி ஆக்கிரகப்படுமளவிற்குத் துரிதமாய்க் காரியமாக வேண்டுமானால், அதற்காக ஒரு சிப்பந்தி வர்க்கம் தனியாக இந்த ஜில்லாவிற்கென்றே ஏற்பட வேண்டுமென்பது இந்த ரிபோர்ட்டைப் படிப்பவருக்கு வெளியாகும். சாமான்னிய விவேகங்கூடிய ஜனங்கள் 'பொறுப்புவரையறுபடாமல்' இருப்பதில் தங்களுக்கு நேரிடக்கூடிய அபாயங்களைச் செம்மையாயறிந்தும், அதற்கெல்லாம் பின்வாங்குவதில்லை. துணிந்து காரியம் நிர்வகிக்கத் தயாராயிருக்கிறார்கள். ஆகவே இக்காலத்தில், புதிதாக ஸொஸைட்டிகள் ஆகவேண்டுமென்றால்; அது சுலப சாத்தியமாயிராமல் தாமதப்படும் பக்ஷத்தில், அதனால் மகாஜனங்களில் இவ்விஷயமாயுழைக்கும் ஸ்ரீமான்களுக்கு உற்சாகம் குறைபடுமென்பது யாரும் சங்கிக்க வேண்டியதாம். தவிர, இந்த ஸொஸைட்டிகள் தங்களை அடக்கியாளும் சர்க்கார் சிப்பந்திக்கு நேரிடும் செலவுதொகையில் ஒருபகுதியைத் தாங்களே வீதித்துக்கொடுக்கத் தயாராயிருக்கின்றன. ஆதலால், இவ்விஷயத்தில் ஆகும்செலவைப் பூராவாகத் தாங்களேபோட்டு நடத்திக்கொள்வதும் காலக்கிரமத்தில் ஆகத்தீரவேண்டிய காரியம் இப்படியெல்லாமிருப்பதால், இந்தமத்தியில் சர்க்கார் தங்களுடைய சிப்பந்தியைச் சீக்கிரம் பெருக்கிக் காரியம் பிரபலிக்கும்படி செய்ய முயலவேண்டுமென்று நாம்கேட்பது நியாயமாகவே காணுகிறது.

11. காஞ்சீபுரம் டவுன்பாங்கு என்பது ஒன்றுதான் இந்த ஜில்லாவில் அர்பன் பாங்குவகையிலுபகரிப்பது. அதனுடைய யோகக்ஷேமம் இதற்கப்புறம் வாசிக்கப்பட்டது. இந்த பாங்கில் நடக்கும் வியாபாரம் நிர்வாகசபையாருடைய சக்தியை மீறிவிட்டது. கடன் வாப்ஸ்வகையிலும், மாதவாரி செல்லாகும் டிபாசிட்டு வகையிலும், ஆக இந்த இரண்டு வகைகளில்மட்டுமே மெம்பர்களிடமிருந்து மாசவார்வசூல் சராசரி சென்ற 6 மாதங்களில் ரூபா 5000-க்குமேல் ஓடிவிட்டது. மெம்பர் சங்கியை 1,158. இப்படி வேலை பெருகிவிட்டபோதிலும், இந்தப்பாங்கு கோ ஆபரேடிவ் தருமத்தைச் சிறிதும் நழுவவிடவில்லையென்று ரிஜிஸ்திரார் அவர்கள் ஒப்புக்கொடுத்திருப்பது நமக்கு வெகு சந்தோஷந்தான். இதில்சென்றவருடம்கொடுத்த 324 கடன் பாப்பத்துக்களில் 103-வரை ரூபா 50-க்கு அதிகப்படாத கேசுகளென்பதை நாம் நினைவில் வைத்துக் கொண்டால், ஏழைகளுக் குதவுவதென்னும் பெரிய அம்சத்தை இது மறக்கவில்லையென்பது விளங்கும்.

பிறகு கீழச்சேரிக் கிராமப்பாங்கு ரிபோர்ட்டு வாசிக்கப்பட்டது. அதுவும் கோ ஆபரேடிவ் தருமங்களை விட்டகலாது வேலைசெய்வதாம். உத்தரமல்லூர் கிராமச்சங்க ரிபோர்ட்டைக்கேட்கவே, அது எவ்வளவு பிர்ம்மாண்டமாகிவிட்டதென்பது விளங்கிற்று. அந்தப்பாங்குதான் சாஸ்திர சம்மதமானது. ஆதலால் மற்றபாங்குகள் அதன் சம்பிரதாயங்களையே அனுசரிப்பது மெத்தவும் க்ஷேமகரம். இந்த மீட்டிங்கில் படித்த ரிபோர்ட்டுகளில் எந்த ஸொஸைட்டியும் கடன்வாப்ஸ் விஷயத்தில் தாமதமாய்ப்போறென்றாவது, செல்லாகவில்லையென்றாவது பிராதுசொல்லவில்லை. பிரசிடெண்டவர்கள் சொல்லியபடி கிராமப்பாங்குப் பிரதிநிதிகளெல்லோரும், ஸொஸைட்டி காரியங்களைக் கிரமமானவழிகளில் நடத்தி நிர்வகிக்கவேண்டிய ஞானம் முதலிய யோக்கியதை நன்கு கூடியவர்களாகவே கண்டார்கள். தன் ஸொஸைட்டி ரிபோர்ட்டை வாசிப்பதற்காக அரங்கேறிய ஒவ்வொரு பிரதிநிதியிடமிருந்தும், ஸொஸைட்டி நிர்வாக விஷய

மான பல அம்சங்களிலும் பிரசிடெண்டவர்கள் 'வாக்குமூலம்' வாங்கினார்கள். இந்த ஸொஸைட்டிகளில் அனேகமாய் எல்லாம் 'பொறுப்புவரையறுத்த' முறையிலேயே நடந்துவருகின்றன. ஆதலால் பிரதிநிதிகளி லொவ்வொருவரும் தங்களுக்குள்ள பொறுப்பை நன்றாயறிந்திருப்பதும், தாங்கள் நிர்வாககாரியத்தை ஒப்புக்கொண்டதினால் தங்களுக்குண்டாகக்கூடிய அபாயங்களைப்பற்றிச் சிறிதும் அஞ்சுவதற்கு நியாயமில்லையென்று தைரியமாயிருப்பதும் எல்லோரும் மெச்சத்தக்க விசேஷ லக்ஷணங்களாம். இவ்வாறு ஆறு ஸொஸைட்டிகளின் ரிபோர்ட்டு வாசித்தானபிறகு மீட்டிங்கு 'இரண்டாம் வேளைக்காக'க் கலைந்தது.

12. மறுபடி கூடியவுடன், இந்த மீட்டிங்கில் சம்பந்தப்பட்ட மகாஜனங்கள், மாதச்சம்பளம் ரூபா 35 அல்லது அதிகம் வாங்குபவர் சர்க்கார் உத்தியோகஸ்தராக இருந்தால், அவர்கள் ஐக்கியநாணய சங்கங்களில் சேரவும்கூடாது, அவைகளில் டிபாசிட்டு வைக்கவுங்கூடாது, என்னும் கவர்ன்மெண்டு நிர்ப்பந்தத்தை ஒழித்துவிடவேண்டி மதிராசு கவர்ன்மெண்டாருக்கு மனுச்செய்ய வேண்டுமென்று ஒரு தீர்மானத்தை விசாரித்தார்கள். இந்த ராஜதானியில் இந்தவிதியை அமுலுக்குக்கொண்டு வராமலிருக்கவேண்டி, சென்ற வருடத்திய மீட்டிங்கில் ஒரு தீர்மானமாகி, அதைக் கவர்ன்மெண்டுக்கு அனுப்பியதற்கு, ஒரு ஜவாபும் நாளதுவரை வரவில்லை. ஆகையால் அதை மறுபடி விசாரிக்கவேண்டிய அவசரம். இந்தப்படி விசாரிக்கையில், இந்த ஸொஸைட்டிகள் விஷயத்தில் சர்க்கார் உத்தியோகஸ்தர் தமது அதிகாரத்தை அக்கிரமமாகச் செலுத்திக் கேடு விளைவிப்பதற்கு ஆகாதென்றும், அவர்கள்தான் டிபாசிட்டுகளை வருஷமெக்காலத்திலும் கிரமம் தவறாமல் வைக்கக்கூடியவர்களென்றும், அவர்களுடைய க்ஷேமத்தையே கோரிப்பார்க்குமிடத்து இந்த நிர்ப்பந்தத்திற்கு உட்படுவது அவர்களுக்கு நல்லதல்லவென்றும், செம்மையாய் விளங்கிற்று. என்றாலும், சர்க்கார் தரபில் உள்ள எல்லா வகை உத்தியோகஸ்தரையும் சமரசமாய்ச் சேர்ப்பது நல்லதாவென்பதில் அனேகருக்குச் சந்தேகமிருப்பதாகக்கண்டது. கடைசியில் மீட்டிங்கில் மொத்தமாகச் சம்மதித்தது இது:—சாமான்னியமாய்ச் சர்க்கார் தங்கள் சிப்பந்திகளையெல்லாம் இம்மாதிரிச் சங்கங்களில் தங்கள் மீதிப்பணத்தை (டிபாசிட்டு) வைக்க இடங்கொடுத்துவிட வேண்டுமென்றும், ஆனால், அவசியங்காணுமிடத்து, சிலவகை உத்தியோகஸ்தரை (உதாரணம், நியாயாதிபதிகள்) மட்டும், தங்கள் பரிசீலனைக்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள ஸொஸைட்டிகளில் வரவுசெலவு கூடாதென்று சட்டங்கட்டிவிடலாமென்றும், ஆகிய இந்த இரண்டு அம்சங்களுமாம். இதை எல்லோரும் ஏகோபித்து தீர்மானித்தார்கள்.

13. முதல்நாள் சாயரக்ஷையாகையில், பிரசிடெண்டவர்கள், வேறிடத்தில் தங்கியிருப்பதாக முன்னமே ஏற்றுக்கொண்டிருந்ததால், இரண்டாம் நாளும் தான் அந்தப்பதவியை வகிக்கச் சரிப்படாதென்று தெரிவித்தார். இதைக்கேட்டு எல்லோரும் விசாரப்பட்டார்கள். (ஆதலால்) அவர் மண்டபத்தைவிடுமுன், அவருக்குச் சபையோருடைய மனப்பூர்வமான வந்தனத்தையளித்து, ஹாரமும் போட்டார்கள். பிறகு உபசரணைக் கமிட்டி செயர்மென் அவருக்குப் பிரதியாகவே, மீதியுள்ள ஸொஸைட்டிகளின் ரிபோர்ட்டுகள் படித்துமுடிந்தன. 6-மணி 15 நிமிஷத்திற்கு முதனாள் காரியம் முற்றுப்பெற்றது.

14. மறுநாள் 12-மணிக்கு மீட்டிங்கு ஆரம்பமாயிற்று மேற்கூறியபடி உபசரணைச் செயர்மென் அவர்களே மறுபடி இதற்குப் பிரசிடெண்டானார். ஸர் வி. வி. தேசிகாசாரியார், நைட், ஸ்ரீமான் எல். டி. சுவாமிக்கண்ணுபிள்ளை (ரிவினியூபோர்டு)



800 008

இருவரும் இன்றையதினம் வந்திருந்தார்கள். முதனாள் படிப்பதற்கு ஆகாமல் நிறுத்தியிருந்த ஸொஸைட்டி ரிபோர்ட்டுகள் வாசித்துமுடிந்தன. பிரதிநிதிகளுக்கு இவ்விஷயத்தில் ஆக்கிரகமும், இந்த நடவடிக்கைகளால் உண்டாகக்கூடிய பிரயோஜனமின்னதென்கிற புத்தியும், சிறிதுங்குறைந்து காணவில்லை.

15. முதன்முதல் (வேறு அம்சங்களைப்பற்றிப்) பேசியவர் மதிராசு ஸென்ட்ரல் அர்பன் பாங்கு செகர்டெரியாகிய ஸர் வி. வி. தேசிகாசாரியார் அவர்கள். ஸென்ட்ரல் பாங்கு ஆரம்பமான கதையையும், அதற்கும் மற்ற சங்கங்களுக்கும் உள்ள சம்பந்தங்களையும் விவரித்து அவர் பேசினார். பிறகு இவ்விருதிறத்தாருடையவும் நயநஷ்டங்கள் ஒன்றேயன்றி, பின்னப்பட்டவை யல்லவென்று அவர் விளக்கினார். ஸென்ட்ரல் பாங்குமூலமாய்ப் பணம்பெயருவதானால் அதற்குவட்டி விகிதம் அனியாயமென்று முறையிட்ட அனேகம் பிரதிநிதிகள், மேற்படியார் தமதுபாங்கைப் பொறுத்தமட்டிலுள்ள கஷ்டநிஷ்டூரங்களை யிவ்வாறு தெளிவாயும், 'பூசிமெழுகாமலும்' சொன்னவுடன் திருப்தியடைந்தார்கள். ம-ா-ா-ஸ்ரீ ஏ. என். பொன்னுசாமி அய்யரவர்கள் கல்யாணதுருக்கம் தாசில்தார். அவர் அனந்தப்பூர் ஜில்லாவில் சங்கங்களேற்படவேண்டி வெகுதூரம் உழைத்திருப்பவர். இவ்வகையில் காரியம் நடக்கவேண்டிய உபாயங்களைச்சுட்டியொருவியாஸம் இவர் அனுப்பினார். அதைச்சுருக்கமாகத் தமிழில் விளக்கிச் சபையோருக்குத் தெரிவிக்கப்பட்டது. இதற்குப்பின் பேசியவர் முதல்வருஷ மீட்டிங்குக்குப் பிரசிடெண்டாகிய ராவ்பஹதூர் ஸ்ரீமான் எம். ஆதிநாராயண அய்யர் அவர்கள். இவருக்குக் குடிகளுடைய கஷ்டநிஷ்டூரங்கள் தெரிந்திருக்கிறபடி வேறு அனேகருக்குத்தெரியாது. கோ ஆபரேஷனுடைய பல அம்சங்களும் அப்படியேதான். ஆதலால் ஸொஸைட்டிகள் தழைக்கவேண்டி யின்னவகைகளில் உழைப்பது காரியத்திற்கேற்றதென்று அவர் யுக்தியுக்தமான சில குறிப்புகளைச் சபையோருக்கு விளக்கினார். ஸொஸைட்டிகள் இந்த முதல்தரமான யோசனைகளை மனதில்வைத்து, அவ்வாறே நடக்கும்படி பார்த்தால் மெத்தப்பிரயோஜனமடையும். ரிவினியூ செட்டில்மெண்டு கம்மிஷனருக்கு செகர்டெரியாகிய திவான்பஹதூர் ஸ்ரீமான் சுவாமிக்கண்ணு பிள்ளையவர்கள், மேனாட்டில் கோ ஆபரேஷனுக் கேற்பட்டுக்காணும் தருமங்களையும், நமது நாட்டிலேற்பட்டிருப்பவைகளையும் 'நிறைபோட்டுப்பார்த்து', ஆஜரிருந்த பிரதிநிதிகளை எச்சரித்து, இம்முறைக்கு மூலாதாரமாகிய தருமங்களைமட்டும் எவ்வகையிலும் மறந்துவிடவேண்டாமென்று வெகுதூரம் வற்புறுத்தினார். பிறகு பச்சையப்பன் ஹைஸ்கூல் தலைமை உபாத்தியாயர் ம-ா-ா-ஸ்ரீ என். பரமசிவஅய்யர் பி-ஏ. இவ்விடத்தைய ஸொஸைட்டிகள் காரியம் நடத்திவரும் முறைகளில் காணும் பலதோஷங்களை விளக்கி அவைகள் போவதற்கேற்ற வழிகளையும் காட்டினார். கடைசியில் பெரியகாஞ்சீபுரம் அர்பன் சாலியர் யூனியன் செகர்டெரியாகிய ஸ்ரீமான் பி. ராமச்சந்திர சாஸ்திரியார், கோ ஆபரேடிவ் முறையில் கிருஷி, நெசவு இவைகளைப்பற்றியும், கோ ஆபரேடிவ் முறைகளின் பரஸ்பர சம்பந்தங்களையும் விளக்கி ஒருவியாஸம் படித்தார்.

16. இந்தப் பிரசங்கங்கள் எல்லாம் முடிந்தவுடன், பிரசிடெண்டவர்கள் கனம் ஸ்ரீமான் ஏ-இ. காசில் ஸ்டூவார்ட் ஸ்டூவார்ட் ஐ-ஸி-எஸ்., ஸி-எஸ்-ஐ., அவர்களிடமிருந்து, மீட்டிங்கு கூட்டியவர்களுடைய லக்ஷியங்களைப் பொறுத்தமட்டில் தனக்கும் ஆக்கிரகம் வலுத்திருப்பதைச் சுட்டி யெழுதிய பெரிய கடிதத்தைப் படித்தார். பிறகு பிரசிடெண்டு அவர்கள், இந்த மீட்டிங்கில் பேசியவர்களையும், உபசரணைக் கமிட்டியார் வேண்டுகோளுக் கிசைந்து மீட்டிங்குக்கு விஜயம் செய்து அபிமானித்த மற்ற ஸ்ரீமான்களையும், புகழ்ந்து அவர்களுக்கு வந்தனமளித்து, இரண்டாம் நாளை

நடவடிக்கைகளை முடித்தார்கள். உத்தர மேரூர்க்காரராகிய ஸ்ரீமான் வெங்கடகிருஷ்ண அய்யாவர்கள், உபசரணைக்கம்மிட்டி செயர்மெனுக்கும், பச்சையப்பன் தருமகர்த்தர்களுக்கும் வந்தனமளித்தார். மகாராஜச் சக்ரவர்த்தியவர்களுக்கு எல்லோரும் மனப்பூர்வமாக மூன்றுமுறை வாழி கூறியபின் மீட்டிங்கு கலைந்தது.

17. இந்த மீட்டிங்கு இவ்வளவு சீராக நடந்ததைப் பார்க்குமிடத்து, கோ ஆபரேடிவ் காரியத்தைப் பிரபலப் படுத்துவதில், உத்தியோகஸ்தரல்லாத மகாஜனங்களில் (யோக்கியதையுள்ளவர்) ஆக்கிரகத்துடன் உழைத்து வருவது இதற்கு எவ்வளவு அனுகூலமென்பது விளங்குகிறது. ஆதலால் செங்கற்பட்டு கோ ஆபரேடர்களுடைய சங்கத்திற்கு இன்னும் பலர்கூடிப் பணவிஷயமான சகாயம் வேண்டிய மட்டில் செய்து ஊர்ஜிதப்படுத்த வேண்டும். அது சாசுவதமாக ஏற்பட்டால் இந்த ஜில்லாவில் கோ ஆபரேஷன் இன்னும் தழைப்பதற்கு உறுதமொழி எழுதிவாங்கியது போலாகும். ஆதலால் இந்த ஜில்லாவிலுள்ள ஒவ்வொருவரும் அதற்கு மெம்பராகி, அதைப் பலப்படுத்தி வரவேண்டியது தருமமாம், சந்தாத் தொகை ஏதோ பெயருக்கு மட்டுமிருக்கும் சில்லரை. வருஷத்திற்கு ரூ. 1. மட்டுமே தவிர அதிகமில்லை. ஜமீன்தார் ம-ா-ா-ஸ்ரீ வெங்கடராகவ ரெட்டியாருக்கு விசேஷ வந்தனம் அளிக்கவேண்டும். ஏனெனில் இந்த மகா சபைக்கு ஆகும் செலவிற்காக அவர் ரூ. 200-கொடுத்து ஆதரித்திருக்கிறார். கவர்ன்மெண்டாரிடமிருந்து வருஷ வாரியாக இதற்கு உதவ வேண்டியேதாகிலும் சிபார்சு செய்ய வேண்டுமென்று ரிஜிஸ்திராரைக் கேட்டிருக்கிறோம். இந்த வகையில் சர்க்கார் உதவுவது ரொம்ப நியாயமென்றே காணுகிறது. ஏனெனில் இந்த ஸொஸைட்டி யானது சில அம்சங்களில் ரிஜிஸ்திராருடைய காரியங்களையே செய்து வருகிறது. ஆதலால் மூன்றாவது மீட்டிங்கு ஆகுமுன், கோ ஆபரேட்டர்களின் சங்கத்திற்கு மெம்பர் சங்கையை வெகுதூரம் அதிகரித்துக் காணுமெனறும் நம்பி நாம் ஈசுவரனைப் பிரார்த்திக்கிறோம்.

மகா ராஜாவைப் பகவான் காத்து ரக்ஷிப்பாராக.

# ஸ்ரீமான் பி. ஆர். சுந்தர அய்யாவர்களுடைய பிரவசனம்.

---

1910-ஞு ஜனவரிமீ 22-தேதி கூடிய செங்கற்பட்டு ஜில்லா கோ ஆபரேட்டர்களுடைய இரண்டாவது மீட்டிங்கில் அக்கிராசனாதிபதியாகிய ஸ்ரீமான் பி. ஆர். சுந்தர அய்யரவர்கள் பின் வருமாறு அந்த ஸ்தானத்திலிருந்து பிரவசனம் செய்தார்கள் :--

நீங்கள் பெரிய மனது செய்து இந்த மகோன்னத பதவியை வகிக்கவேண்டுமென்று கேட்டதில், சாவகாசம் வெகுவாய்க் குறைந்திருந்தபோதிலும், அப்படியே ஆகட்டுமென்று ஒப்புக்கொண்டதற்கு உபசார வார்த்தையொன்றும் நான் இப்போது சொல்லப்புகவில்லை. இதை வகிப்பதற்கு என்னைவிட யோக்கியதை கூடியவர் வேறு அனேகரிருக்கத்தான் வேண்டுமென்பது எனக்கு பனதாறத் தெரியும். என்றாலும் (நான் உபசாரம் சொல்லுவது அநாவசியமென்றே காணுகிறது.) கோ-ஆபரேடிவ் சங்கங்களாலுண்டாகும் உத்தமபக்ஷமான நன்மைகளும், இப்போது கூடியிருக்கும் கனவான்களாகிய நீங்கள் இந்த முறையைப் பிரபலமாக்கவேண்டி மனப்பூர்வமாய் உழைத்து வருகிறீர்களென்ற ஞானமும், இந்தக் காரியத்திற்குப் படித்தறிந்தவரொவ்வொருவரும் தங்களால் கூடிய சகாயத்தை வஞ்சனையின்றிச் செய்து, அதை மேலுமேலும் வலுக்கும்படி உற்சாகமூட்டிப் போஷித்து வரவேண்டுவதற்கு அனுகூலமான எல்லா உபாயங்களையும் கையாடி வருவது, அவர்கள் செய்து தீரவேண்டிய கடமையென்கிற கோட்பாடும், ஆகிய இவை யனைத்தும் ஒன்று சேர்ந்து என்னைத் தூண்டியதால், இப்படி எனக்கு வாய்த்த தருணத்தையொட்டி, ஏதாகிலும் செய்யவேண்டுமென்பதில் எனக்குச் சிறிதும் ஆலசியம் உண்டாகவில்லை. ஆதலால் இந்தப் பெரிய முகூர்த்தத்தில் வந்து கூடியிருக்கும் உங்களனைவர்க்கும் நான் சிறிதும் தடையின்றி முகமன் கூறுகிறேன். கோ-ஆபரேடிவ் நாணயச் சங்கங்கள் விஷயத்தில் நான் படித்துக்கேட்டுத் தேர்ந்தவனல்ல. ஆதலால் நான் இவ்விஷயமாய்ச் சொல்லப்புகும் இரண்டொரு யோசனைகளை நீங்கள் சாமன்னியமாகத்தான் கொள்ளவேண்டும். என்றாலும் இந்த முறை பிரபலிக்கவேண்டிய அக்கரை எனக்கு அதிகம். இது ஆரம்பித்தது முதல் இது பெருகிவருவதை நான் வெகு ஆக்கிரகத்துடன் கவனித்து வந்திருக்கிறேன். இது இனி எக்காலத்திலும் உயர்ந்தோங்குவேண்டுமென்பதும் என் மனத்திலுள்ள பேராசை. அப்படிப் பிரபலித்தால் அதனால் நம்மவர்களாகிய மகா ஜனங்களுக்குக் கிடைக்கக்கூடிய நன்மைக்கு அளவே யில்லையென்பது என்னுடைய பூரண நம்பிக்கை. இந்தப் புராண பூமியிலுள்ள ஏழைகளுக்கு இம்மூலமாய்க் கதிமோக்ஷமுண்டாகி அவர்கள் முன்னுக்கு வர இதுதான் சரியான ஹேதுவென்றும் எனக்குப் பூரண நம்பிக்கை. இப்படி முன்னுக்குவருவது லௌகிகமென்னும் செல்வமுறையில் மட்டுமேயல்லாமல், நம்மவர்களுடைய ஆசாரம், வியவகாரம், முதலிய மற்ற அம்சங்களிலும் கூடிக்காணுமென்பது எனக்கு நிச்சயம். ஆதலால் இவ்வளவுமட்டில் பேச யோக்கியதைகூடிய சாமன்னியனொருவன் இவ்விஷயத்தில் யோசனை சொல்வதுத் தகுதியென்றால், நான் சொல்வதையும் நீங்கள் அதன் யோக்கியதையை அனுசரித்து அங்கீகரிக்கவேண்டும். அப்படிச்

சொல்லப் புகுமுன், கோ-ஆபரேஷன் காரியத்தில் இவ்வளவு உறைப்பாகக் காரியம் செய்து சாதித்த பெருமையை நாடி, உங்களுக்கும் மொத்தத்தில் செங்கற்பட்டு ஜில்லாக்காரனைவருக்கும், என்னுடைய வாழ்த்து வசனங்களை யிதோ சமர்ப்பிக்கிறேன். ஏனெனில் உங்கள் மத்தியில் ஏற்கனவே உங்களுக்கு வேண்டியபடி இவ்வளவு சங்கங்களை ஸ்தாபித்திருக்கிறீர்கள். இவைகள் எத்தனையோ நன்மைகளை யிப்பொழுதே செய்துவருகின்றன வென்பதில் சந்தேகமில்லை. மனதாறவும் பிடித்தபிடி விடாமலும் நீங்கள் செய்துவரும் வேலையானது இனி வரும்காலத்தில், அபாரமான பெரும்பயன்களை விளைவித்தே தீரும். அதனால் இந்த ராஜதானியிலுள்ள மற்ற ஜில்லா மகாஜனங்கள் தாங்களும் பார்த்துத் தெரிந்துகொள்ளும்படி நீங்கள் இவ்வளவு சீராக நடத்திய இக்காரியங்களுக்காக உங்களை நன்றியுடன் வந்திப்பதற்கு நியாயமும் ஏற்படும்.

1904-ம் ௵த்திய 10-வது ஆக்ட்டு என்னும் இந்தக் கோ-ஆபரேடிவ் நாணயச் சங்கங்களின் ஆக்ட்டைவிடச் சிறந்ததாக ஒரு ஆக்ட்டு இந்த ராச்சியத்தின் கவர்ன்மெண்டாரால் இப்போது வெகு காலமாக ஜாரிக்கு வரவில்லை யென்று நான் தாராளமாய்ச் சொல்ல மாட்டேன். இதைப்போன்று அவசியமானது மில்லை, உபகாரமானது மில்லை, துரைத்தனத்தாற்கு ஏற்றதுமில்லை. நமது துரைத்தனத்தார், தமது பிரஜைகளாகிய மகா ஜனங்களில் காணும் எல்லா வகையோருடையவும் க்ஷேமத்தைச் சமரஸமாகப் பெருக்கக்கருதி ஆக்கிரகம் வலுத்திருப்பதற்கு, இந்தச் சட்டத்தை ஜாரிக்குக் கொண்டுவந்ததை விட உறைப்பான சாக்ஷியம் வேறு வேண்டியதில்லை. ஆதலால் நம்மில் படித்தவர்களாகிலும், சாமான்னியமாய்ப் படியாதவரென்று தூஷிக்கப்படுபவர்களாகிலும், ஒருவர் பாக்கியில்லாமல் அனைவரும், இதனுடைய பெரிய தனத்தையும் பிரயோஜனத்தையும் நன்றாக மனதிலுறைக்கப்பெற்று, அதைத்தோஷம் சிறிது மின்றிப் பெருகும்படி வணங்கி யுழைத்துப் பலன் பெறும்படி செய்வார்களென்று நான் நம்பி யெதிர்பார்க்கிறேன்.

இந்தச் சட்டத்தை கவர்ன்மெண்டார் ஜாரிக்குக் கொண்டுவந்த காலத்தில் சீக்கிரத்தில் இதனால் எதாகிலும் பெரியதரமாகக் காரியம் சித்திப்பது சாத்தியமன்று என்பதாகவே நினைத்திருந்தார்கள். தவிர கோபரேஷன் என்னும் செடி கீழ் நாட்டுப் பூமிகளில் வேரூன்றிச் செழிப்பதல்ல வென்றே நம்பியிருந்தவர் பலர். ஆனால் இது இந்த சீதோஷ்ண ஸ்திதிக்கு ஒவ்வாதென்று அவர்கள் நினைத்ததற்குத் தக்க காரணமுண்டு. ஏனெனில் கோ ஆபரேடிவ் ஸொஸைட்டிக்கு வாஸ்தவமான மூலதனம் 'நாணயம் அதுவோ சங்கமெம்பர்களொவ்வொருவருடையவும் கிரகஸ்த குணத்தைப் பொறுத்தது. அல்லாமலும், இந்தமுறை பலிக்க வேண்டினால், பரஸ்பர விசுவாசம் செம்மையாக உருப்படுவது, அனுகூலமாகச் சேர்ந்து வேலை செய்வது, வியாபார முறை பிசகாது நடத்திவருவது, ஆகிய இச்சாதனங்கள் இருந்து தீரவேண்டியவை. நமது நாட்டில் கிராமங்களில் கக்ஷிகள் எவ்வளவு கெடுதியுண்டாக்குகிறதென்றும், நமக்கு ஞாபகமிருக்க வேண்டும். நமது ஜனங்களுக்குள் பரஸ்பரம் நம்பிக்கை எவ்வளவு குறைந்து காணுகிறதென்பதையும் நாம் கவனிக்க வேண்டும். அல்லாமலும், வாங்கின கடன்களைச் சரியாகச் செலுத்துவதும், எதாகிலும் ஒரு ஒப்பந்தம் செய்தால் அந்தப்படி நடப்பதை விரதமாகக் கொள்வதும், உலகத்தில் எங்கு பார்த்தாலும் இருக்க வேண்டியபடி யில்லை தான் என்றாலும், இந்நாட்டில் இந்த துர்லக்ஷணங்கள் வெகு தூரம் எடுப்பாக் காணுவதையும் நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். நம்முடைய மகா ஜனங்களுள் 'நாயகராக' விருப்பவர்கூடப் பிண்டாரித்தனத்தை அதிகமாக்கும் தோஷங்கள் தங்களுக்குத் தெரிந்தவர்களுடைய நடவடிக்கைகளில் கண்டால், அவற்றை வெளியாக்காமல் மூடி



வைக்கிற துர்வழக்கம் அதிகமாய்க் கொண்டவரென்பதை நாம் அங்கீகரிக்க வேண்டும். இப்படி யெல்லாமிருக்கும் அவலக்ஷணங்களை நாம் பார்க்கும்போது, ஜனங்கள் இது விஷயத்தில் காரியசித்தி யடைவது சுலப சாத்தியமல்ல வென்றும், வெகுசாய் இக்காரியம் பலிப்பதற்கா காதென்றும் நினைப்பதற்கு நியாய மிருக்கத்தான் இருந்ததென்பது விளங்கும். பரீக்ஷை செய்து பார்க்கவேண்டுமென்று கவர்ன்மெண்டார் துணிந்து காரியமாரம்பித்த பொழுதும், நமது குடிச்சனங்களுக்குக் கடன் தொல்லைகள் வெகு காலமாக வாதித்து வந்திருப்பதையும், வெகு தூரம் வியாபித்திருப்பதையும் பார்த்து நாம் இக்காரியம் எப்படிப் பலிக்கப்போகிறதென்று வாஸ்தவத்தில் வெகு தூரம் பயந்தோம். ஆனால் இதுவரை நடந்ததை பார்க்கும் பொழுதே, இந்தக்காரியம் இனித் தடையில்லாமல் பெருகி, வேரூன்றிச் செழிக்குமென்று தீர்மானிப்பதற்குத் தக்க நியாயம் காணுகிறது. இனிமேலும் இதற்குள்ள தசை வெகு நல்லதென்றே நாம் சொல்லி விடலாம். ஒரே ஒரு வருஷத்தில், (அதாவது 1908-9-ம் ஆபீசு வருஷத்தில்,) இந்த ஆக்ட்டின் கீழ் ரிஜிஸ்தரான ஸொஸைட்டிகள் 313-லிருந்து 1201 ஆகி விட்டது! மெம்பர் சங்கியை 91,000-லிருந்து, 1,49,000 எட்டி விட்டது மெம்பர்களிட மிருந்து வந்த டிபாசிட்டு $5\frac{1}{4}$ லக்ஷத்திலிருந்து 9-லக்ஷம் கூடிவிட்டது. வியாபார மொத்தம் $23\frac{3}{4}$-லக்ஷத்திலிருந்து 44-லக்ஷமாகப் பெருகிவிட்டது! கனம் மில்லர் சொல்லுகிறார்:—"என் அபிப்பிராயத்தில் இந்தச் சங்கியைகள் பெரிதென்றாலும், இவற்றைவிட, இந்தமுறை விஷயத்தில் உத்தியோகஸ்தரல்லாத மற்ற வகையோருக்குப் பிறந்திருக்கும் அக்கறை தான் நாம் கவனிக்க வேண்டிய விஷயம். இது இந்தியாவின் க்ஷேமத்தை நாடுவோரனைவரும் கவனிக்கவேண்டிய முதல்தரமான காரியமென்று எல்லோருமறிந்து வருகிறார்கள். இந்திய வியாபாரிகளுடையவும், பங்குக்காரருடையவும் 'வட்டங்களில்' இதை நன்றாகச் சூக்ஷித்து வருகிறார்கள் ஆகவே அது இக்காரியத்திற்குப் பெரிய கௌரவமாகிறது" என்று, 1909-ம் ௵த்தில் மதிராசு ராஜதானியிலேயே 76 கிராமப்பாங்குகளும், 2 அர்பன் பாங்குகளும், ரிஜிஸ்திராகியிருக்கின்றன. இதே வருஷத்தில் இரண்டு ஸெண்ட்ரல் ஸொஸைட்டிகள் உருப்படியாகிவிட்டன வென்பது நாம் விசேஷத்துக் குறிப்பிடத்தக்க விஷயம். கோ ஆபரேடிவ் பாங்களுக்குக் கடனுகத்தங்களுடைய பணங்களைக் கொடுத்து வைப்பதில் பயம் சிறிதுமில்லை யென்கிற விசுவாசம் ஜனங்களுக்குள் துரிதமாகப்பரவி வருகிறதென்பதற்கு இதுவே சாக்ஷியாம். மற்ற மாகாணங்களுக்குரிய சங்கியைகளை உங்களுக்குப்படித்துக் காண்பிப்பது அனாவசியம். மொத்தத்தில் எங்கு பார்த்த போதிலும் காரியம் சீராகவே முன்னுக்கு வந்து கொண்டிருக்கிறது. நல்லது, நீங்கள் இப்போது கேட்கலாம், இவ்வளவு நன்றாய் நாம் காரியசித்தி யடைந்து வருவதெப்படி யென்று. தவிர இப்படி நடந்த காரியத்தைப் பார்த்துத் திருப்திகொண்டு, அதையே நியாயமாக வைத்து, இனிமேலும் அப்படித் தானாக வேண்டுமென்று சொல்வது தகுமா வென்றும் நீங்கள் கேட்கலாம். ரகசியம் என்னவென்றால், யாரெப்படிச் சொன்ன போதிலும் கோ ஆபரேடிவ் முறையில் காரியம் நடப்பதற்கு மூலாதாரமாயுள்ள தருமத்தை நம்மவர்கள் அறிந்து கொள்வது ஒரு பெரிய பிரம்ம வித்தையல்ல. அதனால் மொத்தத்தில் மகா ஜனங்களுடைய பிழைப்புக்கு உண்டாகும் அனுகூலங்களோ பிரத்தியக்ஷம். இதற்கு ஆக்ஷேபமில்லை. கோ ஆபரேடிவ் சங்கங்கள் நேராக நடந்து செழிக்க வேண்டியதற்கு அவசியமாயுள்ள சுபலக்ஷணங்கள், மகாஜனங்களுக்குள் தனித்தனியாகப் பார்த்தாலும்சரி, மொத்தத்தில் பார்த்தாலும்சரி, மலிந்திருக்கவில்லையென்பதும், சுலபத்தில் வருவனவல்லவென்பதும், வாஸ்தவமே. ஆகிலும், அவைகள் நம்முன் சீக்கிரம்வந்து பரவவேண்டியதற்குப் பலத்தகாரணங்கள் பலகூடி

நம்மைக் கிட்டிப்போட்டு வாட்டுகின்றன. ஆதலால், எங்கே ஜனங்களுக்குள் ஆக்கிரகம் வலுத்திருக்கிறதோ, எங்கே விவேகிகளான பெரியதனக்காரருக்குக் குறைவில்லையோ, அங்கெல்லாம், காரியம் சித்திப்பது நிச்சயம். இவ்விஷயத்தை நன்றாய் ஆராய்ந்து தேறியவராகிய ஸ்ரீமான் வுல்ப் என்பவர் நமது காரியத்தைப்பார்த்து அதைவெகுவாய் மெச்சியிருக்கிறார். இப்படிப்பட்டவருடைய ஆசீர்வசனத்தைவிட நமக்குப்பலம் கொடுக்கக்கூடிய சாதனம் வேறில்லை. அவர் சொல்லுகிறார் :—"இந்தியாவில் காணுவது போல, கோ ஆபரேடிவ் பாங்குகள் வேறெங்கும் இவ்வளவுவிரைவாய் வேரூன்றவில்லை. அவற்றின் குழந்தைப்பருவத்தில் இவ்வளவுதூரம் சோபித்து முன்னுக்குவரவுமில்லை," என்று. இவ்விஷயத்தை நாம் சற்று யோசிப்போமானால், வாஸ்தவத்தில் இதில் அதிசயமொன்றுமில்லையென்பது நமக்கு விளங்கும், ஏனெனில் இந்திய மகாஜனங்களுக்குச் சில அனுகூலங்கள் சுதாவிலுண்டு. இவை ஜர்மனி, இத்தாலி முதலிய மேனாட்டு ராச்சியத்தாருக்கு, கோ ஆபரேஷன்முறை அவ்வவ்விடங்களில் ஆரம்பமாகியகாலத்தில் கைவசமில்லை. முதலாவது முன்னொருகாலத்தில் நமது ராச்சியத்தி லெங்கேபார்த்தாலும் மகாஜனங்களுக்குள் பரஸ்பரசகாயம் வெகுதூரம் பரவியிருந்தது. கிராமத்திய மகாஜனங்களுக்குள் ஒற்றுமைவலுத்து எல்லாருக்கும் காரியத்தில் உபகாரமாயிருந்தது. கிராமத்திலாகவேண்டிய பொதுக்காரியங்களெல்லாம் அவ்விடத்திய மகாஜனங்களாலேயே நடந்துவந்தன. ஆதலால் அவர்கள் தங்களுடைய புத்தி, யுக்தி, சக்தி, ஐவேஜு முதலிய சகலசாதனங்களையும் ஐக்கியமாக்கிப் பொதுநன்மைக்காக உழைத்து அதனால் எல்லோரும் பெருத்தலாபத்தை யடைந்துவந்தார்கள். ஆகவே கிராமத்தில் மகாஜனங்கள் நேராகப்பிழைப்பதற்கு மூலாதாரமாகப் பரஸ்பரம் உபகாரமாயிருப்பதை அவர்கள் ஏற்ற சாதனமாக்கிக் கொண்டார்களல்லது, அவரவர் தத்தம் க்ஷேமத்தையே நாடிப் போட்டிபோட்டுக்கொண்டு மூச்சுமுட்ட ஓடினார்களில்லை! இப்பொழுது நடக்கிற முறைக்குக் கோ-ஆபரேஷன் என்பது கிராமங்களில் முன்னிருந்த தருமங்களை மறுபடி உயிர்ப்பிக்குமென்று யாரும் உறுதிசொல்லுவது சாத்தியமில்லை என்றாலும் சென்ற தலைமுறைவரை ஜனங்களுக்குள் வேரூன்றிக் கண்டுவந்த தருமங்களின் வாசனை இக்காரிய மாரம்பமாகிற இந்த தசையில் நமக்கு க்ஷேமத்தை நன்றாய் விளைவிக்கும் நீதியென்பதில் சந்தேகமில்லை. ஒரு சங்கதி நான் இப்போது குறிப்பிடப்புகுவது அநேகமாய் இந்தப் பிரகிருதத்திற்கு ஏற்றதென்றே காணுகிறது. அது வெகுசாய் உங்களில் அநேகருக்குத் தெரியாதென்றே நினைக்கிறேன். மலையாளத்தில் பாலக்காடு தாலுக்காவில், தமிழ்ப் பிராம்மணர், தஞ்சாவூர், வட ஆற்காடு, தென் ஆற்காடு, திருச்சினாப்பள்ளி முதலிய ஜில்லாக்களிலிருந்து போய், சுமார் 500 வருஷத்திற்கு முன் குடியேறிய காலத்தில், அவர்களுடைய தரித்திர தசையில் அவர்கள் அனுபவித்துத் தீரவேண்டிவந்த பலதுக்கங்களுக்கும் பரிகாரம் கோ-ஆபரேஷன் தானென்று கண்டு பிடித்துக்கொண்டார்கள். ஆதலால் இன்றையவரை பாலக்காட்டில் தமிழ்ப் பிராம்மணக் கிராமங்களில், சமையலுக்குப் பாத்திரங்கள் 'பொத்தியிலிருப்பது' ஒரு விசேஷ லக்ஷணம். இந்தப் பாத்திரங்களைக் கிராமத்திலுள்ள ஒவ்வொரு கிரகஸ்தனும் பெரிய சமாராதனை செய்ய வேண்டினால், அம்மாதிரிப் பிரகிருதங்களிலெல்லாம் எடுத்து உபயோகிக்க உரிமையுண்டு. சுபாசுபங்கள் இரண்டிலும் ஆகும் செலவிற்கும், தேகப்பிரயாசத்திற்கும், கிராமத்தார் அனைவரும் பரஸ்பர முதவிசெய்ய நேரவேண்டும். கல்யாணங்களில் அவர்கள் பரஸ்பரம் பல்லக்குத் தூக்குவது முதலியவைகளும்! கிரகஸ்தர்கள் அவரவருடைய மூலியத்தையே கொண்டு செய்யமுடியாத அநேக சடங்குகளைக் கிராமத்தவர் எல்லோரும் கூடிப் பணமுதவிப் "பொத்தியில்' கிராம மகா ஜனங்களுடைய பிரீதியர்த்தமாகப் பழைய காலத்திலும், இதுவரையிலும் செய்துவந்தும், வருவதும், சகஜமாகக் காணப்படுகிறது.



பைசிக்கலையில் தேர்ந்த நிபுணராகிய ஸ்ரீமான் லீஸ் ஸ்மித்து என்பவர், கோ-ஆபரேஷன் விஷயத்தில் இந்நாட்டாருக்கு இன்னொரு அனுகூலமிருப்பதாகச் சொல்லுகிறார். அதாவது இத்தேசத்தில் ரயித்துகளில் பெரும்பாலார் தாங்கள் சாகுபடி செய்யவும் பூமிகளில் பல பாத்தியங்களை சாசுவதமாகவும் சாஸன மூலமாகவும் பெற்றிருப்பதாம். அவர் சொல்லுகிறார்:—" இந்தியாவில் அத்தேசத்திய பூர்வோத்திர தருமங்களே இம்மாதிரி (கோ-ஆபரேடிவ்) ஸொஸைட்டிகளைச் செழிப்பிக்கவேண்டியவை. ஆதலால் மேனாட்டு (ஐரோப்பிய) ப்பிரதேசங்களைவிட அவ்விடத்தில் இவைகள் சுலபமாய் முன்னுக்குவந்து தீரவேண்டும். மேனாட்டில் எந்த வருக்கத்தவருள் இந்த சங்கங்கள் நன்றாய்ச் செழித்துவந்தனவோ, அதே வருக்கத்தவர்தான் இந்திய ஜனங்களுள் பெரும்பாலர். நாம் எவ்வளவு வியவகரித்தாலும் ஐரோப்பாவைக் குறித்தமட்டில் இது வாஸ்தவம் அதாவது, சிறுமிராசுதாராகிய குடிகள் நிறைய இருந்தாலும், மகா ஜனங்களுள் இவர்கள் தான் முக்கியஸ்தரென்பதற்கு இல்லை. இந்தியாவிலோ, சிறு மிராசுக்குடிகளை அந்த ராச்சிய மகா ஜனங்களென்று சொல்லிவிடுதல் தகும். இவர்களுடைய க்ஷேமத்தைக் கருதி ஒரு காரியமானால், அது இந்திய மகா ஜனங்களில் மூன்றில் இரண்டு பங்கு ஜனங்களுக்கு க்ஷேமகரமானதாகச் சொல்லிவிடலாம். இந்தியாவில் ஐக்கிய நாணயச் சங்கங்க முறை இன்னும் சில்லரையாகத்தான் காணுவது என்றாலும், இக்குழந்தைப் பருவத்திலேயே, சென்ற 12 மாதங்களில் உருப்பட்ட நன்மைகளைப் பார்க்கும்போது, வருங்காலத்தில் அதற்கு என்ன மகோன்னத தசையிருக்கிறதென்றும், எவ்வளவு நன்மையுண்டாகலாமென்று நம்ப இடமுண்டென்றும், யாரும் சொல்லக்கூடும்," என்றும்,

தவிர நமது ஜனங்களுடைய பொது வியவகாரங்களில் மற்றொரு அனுகூலமும் காணுகிறது. அதைச் சில்லரையென்று இச்சந்தர்ப்பத்தில் நாம் ஒழித்துவிடுவது தகுதியன்று. அதாவது இந்திய சாமான்னியஜனங்கள் தங்கள் அயலவருடைய காரியங்களில் விசாரணை அதிகமாகவே வைத்துக்கொள்ளுகிறார்கள். தங்களுடைய கிருககிருத்தியங்களையும் தாராளமாய்ப் பிரஸ்தாபித்துவருகிறார்கள். இதனால் ஒரு பெரும் பயன் கிடைத்திருப்பது நிச்சயம். அதாவது இந்தியாவில் எவ்விடத்திலும், ஒரு கிராமத்திய மகாஜனங்களுக்குள் குடும்பரகசியங்கள் பரஸ்பரம் எவ்வளவு செம்மையாகத் தெரியுமோ, ஐவேஜுவிஷயத்திலும் பரஸ்பரம் எவ்வளவுமட்டில் தாக்கலிருக்குமோ, அம்மாதிரி ஐரோப்பாவில் எந்தப்பிரதேசத்திலும் கிராமவாசிகளுக்குள் பரஸ்பரபரிசயமில்லையென்பது நிஜம்.

ரயித்துவார் பிராந்தங்களில், பூமி ஒரேயினமாகப்பெருகி ஒரு பெரிய மிராசுதாரன் அதீனமாகி யிருக்குமிடங்களில் உள்குடிகள், ஜமீன்தாரிக்குடிகளைவிட மோசமான அவஸ்தையி லிருக்கிறார்கள். மதிராஸில் 1908-ம் வருஷத்திய 1-வது ஆக்ட்டாகிய பூஸ்திதி நிலவகைச்சட்டமூலமாய் ஜமீன் குடியானவனுக்கு, தான் மாமூலாய்ச் சாகுபடிசெய்துவரும் பூமியில் சொந்தபாத்தியம் கிடைத்திருக்கிறது. மற்றவனுக்கோ பூமிவிஷயத்தில் ஒரு பாத்தியமுமின்றி திண்டாடுவதால், ஜமீன்குடியைப்போல் கோ ஆபரேடிவ் முறையில் காரியங்களைத் (தீர்க்கதிருஷ்டியுடன்) செய்யச் சௌகரியமுமில்லை. செய்யவேண்டுமென்னும் அக்கரையுமிருப்பதற்கில்லை. ஏனெனில் அன்னியனுக்குப் பாத்தியப்பட்ட பூமியில்தான் பாடுபட்டு அதை உருப்படுத்துவதனால் தனக்காகவேண்டியதென்னவென்றுதான் நினைக்கக்கூடும். இதற்குக்காரணம் இப்போது வழக்கமாய்நடக்கும் ரீதிக்கு, இவனை அந்தப்பூமியைவிட்டு எந்தநிமிஷத்தில் வேண்டுமானாலும் உடைமைக்காரன் ஓட்டிவிடலாம். அப்படியானாலும் நன்றாய்

ஆலோசிக்குமிடத்து, ஊர்க்காரராகிய மற்றகுடிகளுடன்கூடித் தானும் கோ ஆபரேடிவ் சங்கத்திற்சேர்ந்தால், அதனால் சாவுகாருடைய இழவாவது தன்னைப் பற்றாமலிருக்குமேயென்பது அவன் கண்டறிந்து தீரவேண்டிய விஷயம். ஏனெனில் சாவுகாரப் பிசாசு ஆவென்று வாயைத்திறந்து யாரைப்பற்றுகிறதோ, அவனுக்குக் கைகால் மறுபடி சுவாதீனமாய் ஓடுவதில்லை. அது ஒன்றுமட்டும் பிடிக்காமல் 'ரக்ஷித்தால்', தான் படும் சிரமத்திற்குள்ளபலனைத் தானேயடைவதன்றி, மிச்சமும்பிடித்துத் தனக்கும் தன் குடும்பத்தாருக்கும் உபயோகப்படுத்திக்கொள்ளலாம். பூஸ்திதியாருக்கிருக்கிறதோ அவர்கள் அந்த உரிமையைமுன்னிட்டு நிச்சயமாய் அடையக்கூடிய நாணயத்தின்பலனை இவன் அடைவது சாத்தியமில்லையென்பது மெய்தான். ஆனால் கோ ஆபரேடிவ் முறையிலாகும் காரியங்களுக்குப்பலன் நிஜமாகவும் சாசுவதமாகவு மிருக்கவேண்டுமானால் ஒவ்வொரு கோ ஆபரேடிவ் சங்கத்தாரும் விடாமல் கவனித்துவரவேண்டிய அம்சம் ஒன்றுண்டு. அதாவது அதற்கு மெம்பராக வருபவரிடமிருந்து வியாபாரமுதலொன்றும் அபேக்ஷிக்கக்கூடாதென்றும், ஒவ்வொருவருடையவும் கிரகஸ்தகுணமும், சரியான நடவடிக்கையுமே தக்க ஆதாரமாக்கி, அவனுடைய ஆவசியகம்போல சங்கத்திலிருந்து கொடுக்கல்வாங்கல் செய்வது சாத்தியமாக வேண்டுமென்றும், ஆகிய இந்த இரண்டு லக்ஷணங்கூடியதாம். இவனுடையகுணம் சரியானதுதானென்று ஒன்று அல்லது அதிகப்பட்ட இதரமெம்பர்கள் ஒப்புக்கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் தாராளமாயிருக்கலாம். அவர்கள் அவனுக்குப் பிணையாகநின்று, அவனை நேர்வழியில் நடத்தி, அவன்மூலமாய்ப் பணம் கெடுப்படிதவறாமல் செல்லாகும்படி பார்க்கவும் செய்யலாம். இது வாஸ்தவமென்றாலும், குடித்தனக்காரனைவனுக்காவது பூமியில் நிலையான பாத்தியம் இல்லாவிட்டால், அவனுக்கு யஜமானனாகிற சயித்துவார் மிராசுதாரன் இவ்விஷயத்தில் தனக்கு ஒரு பெரிய பாரம் வகிக்கவேண்டியிருப்பதை நன்றாயறிந்து, அதை யாதுகாரணம்பற்றியும் நழுவவிடக்கூடாதென்று பிடிவாதங்கொண்டு நடப்பதுதான் வெகு திறமானகாரியமாக எனக்குக்காணுகிறது. அதமபக்ஷம் அவன் தன்பூமியைச் சாகுபடிசெய்யும் குடியானவன் கோ ஆபரேடிவ் சங்கத்திற்சேர்ந்து உழைக்கும்படி உற்சாகமூட்டவாவது வேண்டும். தவிர ஒரு சங்கத்திலிருந்து இவனுக்குக் கடன்வாங்க வேண்டுமானால் அதற்குத்தான் ஜாமீனாகவும் வேண்டும். இப்படிச்செய்வதில்தான் பிணைப்படுவதற்குப் பிரதியாக ஏதாகிலும் அபேக்ஷித்து, தான்செய்யும் உபகாரத்திற்காக அவனிடமிருந்து தக்ஷிணைவாங்கிவிட வேண்டுமென்று அனேகருக்கு ஆசையுண்டாகலாம். அந்தத் துர்க்குணத்தை மட்டும் என்னசெய்தும் வரவொட்டாமல் தடுக்க வேண்டியது அவர் தருமம். நல்ல மிராசுதாரருக்குச் சக்தியுமிருந்தால், சொந்தப்பணத்திலேயே தன் குடியானவனுக்கு வேண்டியகடனைச் சலீசு வட்டிக்குக்கொடுத்து உதவ வேண்டும். ஆனால் எந்த மிராசுதாரனும் தனது குடியானவனுக்குக் கோ ஆபரேடிவ் சங்கத்திலிருந்து கடன் உதவும்படி உபகரிக்கலாகும். இப்படிச்செய்வதனால் மிராசுதாரனுக்கு வாஸ்தவத்தில் லாபமிருக்கிறதென்று, ஓ கனவான்களே, நான் தாராளமாய்ச் சொல்லமாட்டேன். ஏனெனில், இவர் இப்படிச்செய்யாவிட்டால், இவருடைய குடியானவன் சாவுகாரிடத்தில்போய் மாட்டிக்கொள்ளுவான். விளைச்சல் கைகூடும்போது, தான்வாங்கிய கடனுக்கு ஒற்றைக்கு இரட்டையாய்க் கொடுக்கவேண்டிவரும். அப்பொழுது குத்தகை தகராரில்விழும். ஆதலால் குடியானவன் கடன் தகாதாவில் மூழ்காமலிருக்கப்பார்ப்பது மிராசுதாருடைய தேவை.

ஸ்ரீமான்களே, இந்தியக்குடியானவனுக்குக் கடன்சுமை பொறுக்கமுடியாமல் அதிகரித்திருப்பதால், அதை எப்பொழுதாகிலும் அவன் சரிப்படுத்திக்கொண்டு, முழுகிப்



போகாமற் முன்னுக்குவருவானென்பது வீணெண்ணமென்று அனேகர் நினைக்கலாம். ஆனால் கோ ஆபரேஷன் விஷயத்தில் ஏற்கனவே கிடைத்திருக்கும் அனுபவத்தைக் கொண்டு பார்க்கையில் இப்படி மனதுவிட்டுப்பேசுவது தப்பென்று காணுகிறது. ஜர்மனி, இத்தலி, பிரான்சு முதலிய தேசங்களில் (கொஞ்சகாலத்திற்குமுன்) குடியானவர் ரணபாதையில் வருந்தியது இதற்கு எவ்விதத்திலும் குறைந்துபோனதல்ல. என்றாலும் ஐரோப்பிய க்ருஷிகருக்குக் கோ ஆபரேஷனுடைய மகிமையால் சீக்கிரம் தசை நல்லதாகமாறி அவர்களுக்கு முன்னுக்குவரவேண்டிய உற்சாகமும் பெருகிவிட்டது. இந்தியக்குடியானவன் சாவுகாருக்குக்கொடுக்கும் 100-க்கு 75 வட்டிவிகிதம், ஐரோப்பியக்குடியானவன் கொடுத்துவந்ததைவிட அதிகமன்று. ஆகவே ஐரோப்பியருக்குக் கோ ஆபரேஷன்மூலமாகக் கதிமோக்ஷம் கிடைத்திருப்பதால், இந்தியருக்கும் அவ்வாறே கிடைக்கலாமென்பது நிச்சயம்.

தவிர, கோ-ஆபரேஷன் முறையில் இங்கு நமக்குள் காரியம் ஆரம்பமாகும் இப்போது நமக்கிருக்கும் மற்றொரு சௌகரியம் ஐரோப்பியருக்குள் இருக்கவில்லை. ஐரோப்பாவில் இந்தக்காரியம் ஆரம்பித்தார்கள். வெகு ஏழைகள் அவர்களுக்கு நேர்வழி தெரிந்து போவதற்குக் கல்வியுமில்லை. முந்திய அனுபவமில்லை. இந்தியாவிலோ, இதை ஆரம்பித்து நடத்துபவர்கள் கவர்ன்மெண்டார்; அவர்களுக்கு மற்ற ராச்சியங்களில் கோ-ஆபரேஷன் சம்பந்தமான அனுபவங்களெல்லாம் நன்றாய்த் தெரியும். ஆகவே இவ்வாறு தெரிந்தவித்தையை அவர்கள் மகாஜன க்ஷேமத்தை யுத்தேசித்து நடத்திவருகிறார்கள். அதனால், தேர்ந்த கைகளை இவ்விஷயத்தில் கவர்ன்மெண்டாருடைய உத்தேசத்தை நிறைவேற்றச் சிப்பந்திபாக ஏற்பட்டு, இதை விசாரித்தும் நடத்தியும் வருகிறார்கள். ஒவ்வொரு சங்கத்தாரும் தனக்கு அனுபவக் குறைவினாலுண்டாகும் தோஷங்களை உடனே பரிகரிப்பதற்கு ஐக்கியநாணய ரிஜிஸ்திராரவர்கள் கொடாமல் பார்த்துவருகிறாரென்கிற தைரியம் கூடியிருக்கலாம். மேலுமேலும் விர்த்தியடையவேண்டிய யோசனைகளையும் யுக்திகளையும் சொல்லிக் கொடுக்கவும் அவர் சர்வதா தயாராயிருக்கிறாரென்பது அவர்களுக்குத் தெரியும். அவர்கள் போகிற மார்க்கம் தப்பென்றால், அதை உடனே அவர்களுக்குத் தெரிவித்து, எச்சரித்து வருவதற்கும் அவர் உஷாராயிருக்கிறார். இப்போது நமக்கு ரிஜிஸ்திராராக விளங்கும் ஸ்ரீமான் ஆர். ராமசந்திர ராயரவர்களைவிடக் கல்வி, அனுபவம், ஞானம், (இந்த மார்க்கம் பிரபலிக்கவேண்டுமென்னும்) ஆக்கிரகம், (காரியநிர்வாக) சக்தி இந்தியாதி குணங்கள் கூடியவராயும், எச்சரிக்கை தாராளசிந்தை இரண்டுங்கூடி உழைப்பவராயும், நமக்கு யார் கிடைக்கப்போகிறார்கள்? இவைகளை யபேக்ஷித்து அவர் விஷயத்தில் பூரண நம்பிக்கைவைத்து நடப்பதுதான் க்ஷேமகரமென்று இவ்விடத்தில் கூடியிருப்பவர்களில் யாருக்குத் தெரியாது? இந்த சந்தர்ப்பத்தில் அவர் நம்மோடுசேர்ந்து கலந்திருப்பது எனக்கு நல்ல உற்சாகமூட்டுகிறது. அப்படியே உங்களுக்கும் உற்சாக மூட்டுகிறதென்பதில் எனக்குச் சந்தேகமில்லை.

நமது கவர்ன்மெண்டார் இவ்வளவு விவேகத்துடனும், தீர்க்க திருஷ்டியுடனும் இவ்வாறு ஆரம்பித்த இப்பெருங்காரியம் நன்றாய்ச் சித்திக்குமென்கிற நம்பிக்கை யுண்டாவதற்குக் காணும் சௌகரியங்களை இதுவரை சொல்லிவந்தேன், இனி உங்கள் அனுமதியின்பேரில் கோ-ஆபரேஷன் நேராக நடப்பதற்கு உரிய இரண்டு மூன்று முக்கிய தருமங்களைக் குறிப்பிடுகிறேன். அவற்றை நாம் எவ்வளவுமட்டில் விசாரித்து மறவாமற் கைப்பற்றிய போதிலும் தகும். அவற்றை விட்டு விலகினால் காலக்கிரமத்தில் நமது காரியமனைத்தும் கெட்டுப்போவது நிச்சயம். அவற்றுள் முதன் முதல் கவனிக்கவேண்டியது இது. இச்சங்கங்களுக்கு நாணயமே சாசுவத

மான வியாபார முதலேயல்லது வேறல்ல வென்பதை மறவாமலிருப்பதாம். இதுதான் நம்முடைய லக்ஷியம். கோ ஆபரேடிவ் சங்கங்கள் நேராய்ப் பிழைப்பவைகளென்று ஜனங்களுக்கு நம்பிக்கை யிருக்கும் வரை, பங்குப்பணம் அனுவசியமாகத் தான் வேண்டும். டிபாசிட்டுகளும், வேறு கடன் வகைகளும் சேர்ந்து அந்தச் சங்கத்திற்கும் வேண்டிய பணத்தைக் கொடுத்து வருவதற்குப் போதுமான சாதனங்களாயிருக்கவேண்டும். காரியம் நேராக நடந்துவரும் கோ ஆபரேடிவ் சங்கத்தில் கடனாகப் பணம் போட்டு வைப்பது எள்ளளவேனும் சந்தேகத்திற்கு இடமின்றிச் செய்யத்தக்க காரியமென்று எல்லோரையும் நான் நம்ப வேண்டுகிறேன். ஸொஸைட்டி மெம்பருடைய பொறுப்பு சாமான்யமாய் வரையறுப் பில்லாமலிருப்பதால், எல்லா மெம்பருடையவும் சர்வ சொத்தும், கடன் கொடுப்பவருக்கு ஜாமீனாகிறது. இப்படி மெம்பர்களின் பொறுப்பு வரையறுத்திருப்பதன் நன்மைகளை, நமது ஜனங்கள் எவ்வளவு சுலபமாயும் துயவாயும் அறிந்து பிடித்துக் கொண்டிருக்கிறார்களென்பது ஆச்சரியகரம். சில கிராமங்களில் மெம்பர்கள் இந்த முறையே தான் ஏற்றதென்று உபதேசித்து வருகிறார்களென்று எனக்குத் தெரிகிறது. இவ்வாறே இச்சங்கங்களுக்குக் கடன் கொடுப்பதில் சிறிதும் தோஷமில்லை யென்கிற நம்பிக்கை இந்திய மகா ஜனங்களுக்குள் பரவி விட்டால், கோ ஆபரேஷன் இடையறாது பிரபலிக்குமென்பது நிச்சயம். இந்த நம்பிக்கை பரவலித்து வருவதற்கு ஏற்கனவே குறிகள் காணுகின்றன. சங்கங்களுக்கு வியாபாரத்திற்கு வேண்டிய பணம் உள்ளூரிலேயே அதிகமாய்க் கிடைத்து வருகிறது. மற்ற பக்ஷத்தில் இவற்றிற்கு வேண்டியபோது பணமுதவ வேண்டி ஸெண்ட்ரல் பாங்குகளை ஆரம்பிக்க வேண்டுமென்னும் ஆக்கிரகமும் வலுத்து வருகிறது. இப்போதே சாவுகார் தனது ஆசிரமத்தை மாற்றிக் கொள்ளுகிறான் போலும். ஏனெனில் அவனுக்குத் தான் இதுவரை அடித்து வந்த வட்டிக் கொள்ளைக்கு இனிச் சீக்கிரம் இடமின்றிப்போய் விடுமென்று மனதில் நன்றாய்ப் பட்டிருக்கிறது. ஆகலால் அவன் சிறக்க லாபமடைய வேண்டிய அவஸ்தையை விசாரித்து அதற்கேற்றபடி நடக்க முயன்று வருகிறான். இதனால் தனக்கு (வாராப் புள்ளியினால்) நஷ்டமென்பது இனிச் சிறிதும் காணுதென்றும், தனக்குக் கொள்ளை கொடுத்தவர் வயிறெரிந்து சாபங் கொடுப்பதற்கு இனிப் பிரசக்தம் இல்லையென்றும் அவனுக்குத் தெரிகிறது. ஒவ்வொரு சங்கத்தவரும் தங்களுக்குக் கடன் கொடுப்பவர்கள் கூடிய மட்டில் உள்ளூர்க்காரர்களாகவே யிருக்கப் பார்க்கவேண்டும். அல்லது வெகு 'சமீபபந்துக்களாக'ப் பார்க்கவேண்டும், இது நாம் மெத்தவும் ஜாக்கிரதையாக உறைப்பித்துக் கொள்ளவேண்டிய அம்சம். ஏனெனில் இவ்வாறு கடன் கொடுப்பவரொவ்வொருவரும் சங்கத்தின் லாப நஷ்டங்களைத் தீர விசாரிப்பவரும் சங்கத்திற்குப் போலீஸ் காரருமாகி விடுகிறார். இப்படிக் கோ ஆபரேடிவ் சங்கங்களின் பூரண விசுவாசம் ஜனங்களுக் [illegible] பரவுவதற்காக ஆக்கிரகம் வலுத்துத் தேசாபிமானமும் கூடிய இஷ்டர்களனேகமாயிரம் பெயர் வேண்டும். இம்மாதிரிச் சங்கங்களுக்குக் கடன் கொடுப்பதால் யாதொரு நஷ்டத்திற்கும் இடமில்லை, யென்பதை விளக்கி வருவதையே இந்த இஷ்டர்கள் தாம் மேற்கொண்ட விரதமாகப் பாவித்து நடக்கவேண்டும். நமது மத்தியிலுள்ள பெரியதனக் காரரும், பத்திரிகைகளும், கோ ஆபரேஷன் சம்பந்தமான நன்ன கோஷத்தை முழக்கி இத்தருணத்தில் மகா ஜனங்களுக்குப் போதித்து வருவது அவர்கள் செய்தே தீரவேண்டிய கடமையாம். இவ்விஷயத்தில் பேச யோக்கியதை யுள்ள ஒருவர், "நமக்கு வேண்டியது மனுஷியரே," என்கிறார். அது சரியே. ஆனால் நான் சொல்லுவதோ, "இந்தத் தருமகாரியத்திற்கே உழைப்பதாகக் கங்கணம் கட்டிக் [illegible] கூடிய '[illegible]' நமக்கு இப்போது வேண்டியவர்கள்,"



என்பதாம். ஆகலால், கோ ஆபரேஷனுடைய தன்மையை விளக்குவதற்கும், இந்த ராச்சியத்திலெல்லா மூலை முடக்குகளிலும் கோ ஆபரேடிவ் நாணயச் சங்கங்களை ஸ்தாபிப்பதற்கு மென்றே தீக்ஷித்துக் கொண்டு வேலை செய்வதற்குச் சங்கங்கள் இருந்தால் நமக்கு நல்லது. இப்படி யிருக்கும் அவசரத்தை ஏற்கனவே நன்றாயறிந்து, செங்கற்பட்டில் 'கோ ஆபரேட்டர்களுடைய' சங்கமொன்றை யாரம்பித்திருப்பதற்காக நான் இந்த ஜில்லா மகா ஜனங்களுக்கு ஆசி கூறுகிறேன். ஏனெனில் விசேஷமாய் இந்தச் சங்கத்தவருடைய ஊக்கத்தினால் இந்த ஜில்லாவில் இதற்குள் 60 சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றனவென்று எனக்குத் தெரிகிறது.

இன்னுமொரு தருமத்தையும் நாம் எப்போதும் நினைவில் வைத்து நடக்க வேண்டும். அதாவது, கோ ஆபரேடிவ் முறையிலாகும் காரியத்திற்குச் சில்லரைச் செலவு அதிகமாய்க் கூடிக்காணுவது தகாதென்பதாம். ஐரோப்பாவில் இம்மாதிரிக் காரியங்கள் அனேகமாய்த் தருமமாகவே நடக்கின்றன. இதுதான் நாமும் அனுசரிக்கப் பிரியப்படவேண்டிய சாஸ்திரம். நிர்வாகம், விசாரிப்பு ஆகிய இரண்டு காரியங்களும் சம்பளமில்லாமலே நடக்கவேண்டும். சம்பளம் கொடுத்து மானேஜர்களை வைத்தால், அவர்கள் எப்போதும் வட்டி விகிதத்தை உயர்த்தியே காட்ட முயல்கிறார்கள். நீங்கள் நான் சொல்வதை நம்ப வேண்டுகிறேன். ஏனெனில், அவ்வாறு செய்வது அவர்களுக்கு வாஸ்தவத்தில் நல்லது.

மற்றொரு தாபில் ஒரு விதியை நாம் ஆசரித்தே தீரவேண்டும். அதன் உபயோகத்தை ஜனங்கள் ஏற்கனவே அறிந்திருக்கிறார்களென்பது என் எண்ணம்: அதாவது, கெடுவானதும் கடன்களை வசூலிப்பதில், தடக்கம் சிறிதுமில்லாமல் கண்டிப்பாய் வாபஸ் வாங்குவதாம். அல்லாமலும், எந்தக் காரியத்தை உத்தேசித்துக் கடனை ஒரு மெம்பர் வாங்குகிறாரோ, அதே காரியத்திற்கு அந்தப்பணம் செலவாகித் தீரவேண்டுமென்று நிர்ப்பந்திக்க வேண்டும். இந்தத் தருமத்தை நழுவவிட்டால், ஒரு சங்கத்திற்கு அதைவிட நிச்சயமான அபமிருத்யு இருப்பதற்காகாது. சர்க்கார் ரிபோர்ட்டு ஒன்றை நான் வாசித்துப் பார்த்ததில், நிர்வாக விஷயத்தில் கண்டிப்பாயிருப்பதற்குள்ள ஆவசியகத்தை கோ-ஆபரேடிவ் சங்கத்தார் அறிந்துவருகிறார்களென்று தெரிவதனால், எனக்கு அந்த விஷயத்தில் திருப்திதான். ஏழையாயிருப்பவர் நிஷ்கண்டகனான சாவுகாருக்குக் கொடுக்கும் அன்னியாயவட்டி விகிதத்திற்கும் சங்கத்திற்குக் கொடுக்கிற வட்டி விகிதத்திற்கும் உள்ள அபார வித்தியாசத்தை நாம் மனதில் பதிய வைத்துக்கொள்வோம். இந்த பேதம் இருக்கும்வரை மெம்பர்கள் வாங்கிய கடன்களை கண்டிதமாய் நாம் வாபஸ் வாங்குவதனால் அவர்களுக்கு அயாசமுண்டாகாதென்று நீங்கள் நிச்சயமாயிருக்கலாம். தவிரவும், கண்டிப்பான நடவடிக்கைகள் சனங்களுக்கு முதலில் கசப்பாகக் கண்டாலும், பழகப்பழக நியாயத்திற்குக் கட்டுப்பட்டு நடப்பது மனுஷியத் தர்மமாம். ஆனபோதிலும் இவ்விஷயத்தில் நாம் விடாமல் எச்சரிக்கையாயிருப்பது அவசியம். ஆகலால் ஒவ்வொரு ஸொஸைட்டிக்கும் நிர்வாகக் கமிட்டியாரல்லாமல், தனிக்கைக் கமிட்டியொன்று கூடியிருப்பது வெகு சிறந்தென்று எனக்குக் காணுகிறது. அதுவுமன்றி, ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒரு யூனியன் உண்டாவதற்கு முகூர்த்தம் வந்துவிட்டதென்றும் எனக்குக்காணுகிறது. இவைகளில் கோ-ஆபரேடிவ் முறையில நடக்கும் காரியங்களுக்குரிய பெருத்த விஷயங்களையும் பொது லக்ஷணங்களையும் விசாரித்து, அவற்றிற்கு விஹிதமானவைகளைக் கண்டறிய வேண்டும். கோ-ஆபரேஷன் என்பது லேவாதேவிக்குமட்டுமன்றி வேறு அனேகக் காரியங்களுக்கும் உதவுவதால், அவைகளைப் பரிசோதித்து, பலன் பலவகையிலும்

கிட்டும்படிசெய்து, ஜில்லாவிலுள்ள சில்லரைச் சங்கங்களுக்கு வேண்டியபடி, எச்சரிக்கையோ, போதனையோ, மார்க்கமோ, வேண்டியதை யுதவியும் வரவேண்டும். இப்படியே உயரப் பறப்பதில் என்னுடைய மனது எவ்வளவோ தூரம் போகிறது. அதை மறைக்க எனக்கிஷ்டமில்லை. (இப்படி ஜில்லா யூனியன்களாகையில்) கடைசியாக ராஜதானியின் தலைமைப் பட்டணத்தில் ஒரு பெரிய ஸென்ட்ரல் ஸொஸைட்டியாக வேண்டுமென்பதும், அது மூலமாய் மாகாண முழுதும் கோ-ஆபரேடிவ் வேலை கிரமமாக நடக்கவேண்டிய சாத்தியமும், தனிக்கையும் நமக்குக் கிடைக்கவேண்டுமென்பதும் என் மனதில் வலுத்துக்காணும் ஆக்கிரகம். எனெனில், கனவான்களே, சுவர்ன்மெண்டாருக்கு இருக்கும் காரியங்கள் அளவற்றவை. அப்படியிருக்க அவர்களையே ஒவ்வொரு கோ-ஆபரேடிவ் சங்கத்தையும் போகவேண்டிய வழியில் நடத்துங்களென்று கேட்பதும் அப்படியே நடத்தட்டுமென்று நாம் கையை மடக்கிக்கொண்டிருப்பதும் நியாயமன்று. ஆனால் கோ-ஆபரேடிவ் தருமங்களிலெல்லாம் உத்தமமாகச் சிறந்து விளங்குவது ஒன்றுண்டு. அதாவது இம்முறையில் காரியம் நடப்பதெல்லாம் ஏழைகளுக்கு உதவியும் உபகாரமும் கிடைத்து அவர் கஷ்டம் விடியவேண்டுமென்பதேயாம். இதை நாம் ஒருக்காலும் மறக்கக்கூடாது. இந்த தருமத்தை நாம் எப்போதும் கோபுர விளக்குப்போல உயர்த்தி அது நமது கண்களில் பட்டுக்கொண்டே யிருக்கும்படி பார்க்க வேண்டும். ஏழைகளுக்குள் சமர்த்து அதிகரிக்கும்படி செய்து குடியானவன், தொழிலாளி, இவர்களைச் சாவுகார் கையிலிருந்து விடுவித்தும் பிழைக்கும் வழி தெரிவிப்பதும் வருவதே நமக்கு முதற்கடமையாம். எந்த மனுஷியனுக்கும் இதைவிடச் சிறந்த தருமம் காணவில்லை. இந்தப் பாவங்களுக்கு, விவேகம் வரச்செய்து, தங்கள் மரியாதையைக் கெடுத்துக்கொள்ளாமலிருக்கவும் தங்கள் காரியங்களைத் தாங்களே சமாளித்துக் கொள்ளும் திறனுண்டாகவும் செய்து, வெகுநாளாய் மங்கி மலினமாய்ப் போயிருக்கும் காரிய உற்சாகத்தை அவர்கள் மறுபடியடையச் செய்யவேண்டும். ஜீவசையில் அவர்கள் மறுபடி முன்போல் குஷாவாக வுழைத்து முன்னுக்குவந்து, ஜீவனம் சுகமாய் நடக்குமுபாயத்தைத் தெரிவித்துவிட்டால், நாம் மோக்ஷசாம்பிராச்சியத்தை வாஸ்தவமாகவே இவ்வுலகத்திற்குச் சமீபித்துவரச் செய்துவிடுவோமென்பதில் தடையில்லை. இப்படியாகவேண்டிய ஜீரணோத்தாரத்தை கோ-ஆபரேடிவ் சங்கம் தவிர வேறொன்றும் அதே யளவிற்குச் செய்து நிறைவேற்றாது. எனெனில் நம்மவரில் பரம ஏழைகளான பெரும்பாலார்க்கு தக்க நிவாரணமாக வேண்டினால், அவர்களுக்கு வேண்டிய சில்லரைத் தொகைகளை அவர்கள் சுலபமாயடையவேண்டும். இதற்கு ஏற்ற சாதனமெதுவானாலும் அது நாம் இழுத்தபடி இழுபடவேண்டும். அப்படி இழுபடக்கூடிய லக்ஷணம் கோ-ஆபரேடிவ் முறையில் தான் விசேஷித்துக் காணுவது.

கோ ஆபரேடிவ் சங்கங்களினால் நமது ஆசாரங்கள் எத்தனை வகையில் திருந்தக்கூடுமென்று நான் இங்கே விவகரிக்க வேண்டுமோ, என்ன? இன்றைக்கு 50 வருஷம் சென்றமேல், நமது நாடு எப்படி யிருக்குமென்று கொஞ்சம் யோசியுங்கள். அக்காலத்தில் தேசமெங்கும் கோ ஆபரேடிவ் சங்கங்கள் நிறைந்திருக்க வேண்டும். குடியானவனும், தொழிலாளியும் தாங்கள் மீத்து வைக்கக்கூடிய ஒவ்வொரு பைசாவையும் தமது கிராமப்பாங்கு வியாபாரம் பெருகுவதற்காகச் சேர்த்து வைப்பார்கள். பாங்கிலிருந்து சலீசு வட்டிக்கு வாங்கி அந்த மூலமாய்த் தங்கள் ஏனங்களையும், யந்திரங்களையும் விமரிசையாக்கி வருவார்கள். விதை, எரு, ஆட்டு ரோமம், சாயம், முதலிய சகல காரியங்களுக்கும் கடன் சலீசாக வாங்கி, அவற்றையெல்லாம் விமர்சனங்கள் விடாமல் செய்து வருவார்கள். வாங்கின கடன்களையோ சீக்கிரம் வாபசு செய்வார்கள். எனெனில் அவர்களுக்குள் வேலை எப்பொழுதும் சுருசாகவும் இடையறுமலும் நடந்து



வரும். பெரிய காரியங்களாக வேண்டிப் பலர் 'செடி'யாகச் சேருவார்கள். இப்பொழுது நடப்பது, இவர்கள் பாடுபட்டு உருப்படுத்தும் சரக்குகளை அவைகளுக்கு நியாய மாயுள்ள விலையில் மூன்றிலொன்று வாங்கிக்கொண்டு கொடுத்து விடவேண்டியிருக்கும் துக்கம். இதெல்லாமொழிந்து, அக்காலத்தில், சரக்குகளுக்குத் தக்க விலை கூடும்படி செய்து கொள்ளுவார்கள், தங்களைப்போலவே யுழைக்கும் கிரகஸ்தருடன் சேர்ந்து, அனுகூலமாகப் பாடுபட்டு, பிரதி வருஷமும் பிழைப்பு மேலு மேலும் திருப்திகரமாகும்படியே யோசிப்பார்கள், இதனால் பரஸ்பரம் உபகார மதிகரித்து, எல்லோரும் நன்றாய்ப் பிழைக்கவும், 'நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை' யென்பதை எல்லோரும் காணவும் இடமுண்டாகும். அன்னியாய வட்டிக்காரனென்பவனைக் கண்டு நடுங்க அக்காலத்தில் இடமிராது. (இப்பொழுது செய்யவேண்டி யிருக்கிறபடி) கடன்காரன் சொன்ன அநீதங்களுக்கெல்லாம் முதலில் இசைந்து, வேறு வகை தெரியாமல் கடனை இவ்வாறு வாங்கியும், மறுபடி அவனை மோசஞ்செய்யு முபாயம் தேடியும், திண்டாட வேண்டியிராது. அதைவிட்டு, பணக்காரனுடைய பணத்தை நியாயமான வட்டிக்குவாங்கி, வட்டியையும் குஷாலாகக் கொடுக்கலாகும். 'ஆயிரம் கட்டு ஆனை பலம்' என்னும் பழையவாக்கியத்தைச் சத்தியமென்று பிரத்தியக்ஷத்தில் கண்டு, கிராமப்பாங்கினுடைய ராக்ஷத பலத்தை யறிந்துகொண்டு, தங்களுடைய பிரபிதாமகர்கள் கக்ஷி வலுத்ததினாலும், வீண் வியவகாரங்களில் போராடி வந்ததனாலும், அவர்களால் சாதிக்கவே கூடாமற்போன பெருங் காரியங்களைச் செய்யல் நமது மக்களுக்குச் சாத்தியமாகும். தாங்கள் மற்றவருடன் சேர்ந்து அனுகூலமாகவே உழைத்துவரும் அனுபவம் முற்றியதனால், அவர்களுக்கு ஒருவர் பிழைக்க வேண்டுமானால் பலர் கெடவேண்டுமென்ற துரெண்ணம் சிறிது மின்றி, தன் அயலவர் நன்றாய்ப் பிழைக்குமளவிற்குத் தனக்கும் சுகம் அதிகமாவது தெரிந்துவிடும். தங்கள் பெரியோருக்கு வெகு சாதாரண லக்ஷணமான யாசகம் என்பது இவர்களுக்கு வெகு கசப்பாகிவிடும். எனெனில் இவர்களுக்குத் தங்கள் காரியங்களைத் தாங்களே நிர்வகித்துச் கொள்ளவும், கிராமத்தாழ்வான நடவடிக்கைகளுக்குப் போகாமலிருக்கவும், பரம்பரையாக ஞானம் வந்திருக்கும், தங்களுடைய அயலவர்கள் தங்களை மரியாதை மனுஷரென்று பாவிக்கவும், தாங்கள் செய்வது அவர்களுக்குச் சம்மத மாயிருக்கவுமே, அவர்கள் 'ருக்ஷிப்பார்கள்'. எனெனில், அயலவர்களுடைய அபிமானத்திற்குத் தக்கபடி தான் இவர்களுக்குக் கோ ஆபரேடிவ் சங்கங்களில் மரியாதையுண்டு. அயலவர்கள் தங்களுடைய காரியங்களை வெகு எச்சரிக்கையாக விசாரித்து வருவது அவர்களுக்குத் தெரியும். தாங்களும் அயலவர்களை அப்படியே கவனித்து வருவார்கள். குடி, சூது முதலிய துர்விநியோகம் செய்து பணத்தைச் சூறையிடலாமென்று எண்ணுவது சத்தியமாகாது. எனெனில், இதனால் இவர்களுக்குச் சங்கத்தினின்றும் கிடைக்கக்கூடிய உபகாரமெல்லாம் தொலைந்து விடுமென்று தெரியும்.

இந்தப் பிரஸ்தாபத்திற்கு ராஜாங்க சம்பந்தமான ஒரு அம்சம் உண்டு. ஆனால் அதைப்பற்றி இன்றையதினம் பேச எனக்கு இஷ்டமில்லை. ஆகிலும் அது விஷயமாய்ப் பண்டித ஸ்ரீமான் லீஸ் ஸ்மித்து சொல்லியதை மட்டும் படிக்கிறேன். அவர் சொல்லுகிறார்:—"வியவசாய சம்பந்தமாகக் கோ ஆபரேடிவ் பாங்குகள் தேசமெங்கும் பரவினால் அதனால் முடிவில் மகாஜனங்களுடைய பிழைப்பு வகையில்கூடும் அனுகூலங்களைப் புகழ்வதுமட்டும் போதாது. துரைத்தன சம்பந்தமாகக் காணும் பலன்களையும் (இப்பேச்சைக்கேட்போர்) கவனிக்கவேண்டும். இச்சங்கங்களில் மகா ஜனங்களுக்குப் பிரதிநிதி துரைத்தனம் என்னும் முறைக்குவேண்டிய ஆரம்பம் கிட்டுகிறது.

பிரதிநிதிகளால் வேலையாகவேண்டிய துரைத்தன அங்கங்கள் நேராக நடக்கவேண்டுமானால், அவற்றை ஒரு தேசத்திய மகா ஜனங்களுக்கு யாரேனுமொருவர் வரமாகக் கொடுப்பதுமட்டும் போதாது. இம்மாதிரி நமது காரியங்களை நிர்வகிக்க ஏற்படும் சாதனங்களைக் காரியத்தில் காணுவதற்கும், அடக்கியாளுவதற்கும், வேண்டிய அப்பியாசம், பிரதிநிதிகளைத் தெரிந்தெடுப்பவருக்கு எம்மூலமாயாவது இடையறாது இருந்துகொண்டிருக்கவேண்டும். எந்த ராஜ்யமாவது பிரதிநிதி துரைத்தனத்திற்கு யோக்கியதையடைந்திருக்கிறதாவென்று பார்க்கவேண்டுமானால், அதற்கு இதுதான் பலத்த சாக்ஷியம். அதாவது, அவ்விடத்தில் சர்க்கார் தமக்குள்ள ஞானத்தைக்கொண்டு செய்யும் காரியத்தைத் தவிர்த்து, மகா ஜனங்கள் தங்கள் காரியங்களை நிர்வகிக்கவேண்டிப் பிரதிநிதிகள் மூலமாய்க் காரியம் நடக்கும் சாதனங்களைத் தாங்களே யுண்டாக்கிக்கொள்ளுகிறார்களாவென்பதாம். கிராம ஐக்கிய நாணயப் பாங்குகளில் மெம்பர்களுக்கு அவை மூலமாய்க் கிடைக்கும் அப்பியாசமானது, சர்க்கார் இந்த அம்சத்தில் அருளியிருக்கும் சாதனங்களில் கிடைப்பதைவிட வெகு உறைப்பானதும், உபயோகமானதுமென்பது எனக்கு நிஷ்கரிஷை. இங்கிலீஷ் துரைத்தனத்தார் இப்பொழுது இந்தியர்களைப் பிரதிநிதி துரைத்தனத்துக்குத் தயாராகுங்களென்று சொல்லி யெதிர் பார்த்துவருவதில், அப்படியே அவர்கள் அதற்கு வேண்டிய யோக்கியதையைப் பெருக்கிவருகிறார்களாவென்பதற்கு ஒரே சாக்ஷியம்போதும். கிராமப் பாங்குகளை அவர்கள் நேராக நடத்திக்காரியசித்தியுண்டாகும்படி பார்க்குமளவிற்குத்தான் அவர்களுக்கு மற்ற காரியத்திற்கும் யோக்கியதை."

பிரகிருதத்தில், ஐரோப்பாவில் கோ-ஆபரேடிவ் சங்கங்கள் பலவிதமாகவும் உழைத்து பொருள்களை உண்டாக்குவதிலும், பண்டமாற்றிலும், எத்தனையோ விந்தைகளைக்காட்டிப் பெரும்பயன்களை நான் விவரிக்கமுடியாது. விவசாயத்தில் பெரிய யந்திரங்களை உபயோகிப்பது, கைத்தொழிலிலும் அப்படியே, பண்டங்களை நல்ல விலை கூட்டிவிற்பது, வண்டிவாடகை குறைவது, முதலிய பல காரியங்களில் கோ-ஆபரேஷன் உதவுவதை (நீங்களே யோசித்துக்கொள்ளவேண்டும்.)

பூட்ஸ் தைப்பவன் தன்னுடைய மர அச்சைவிட்டு வேலை செய்யக்கூடாதென்று இங்கிலீஷில் ஒரு வசனம்; அவ்வாறே நானும் மகா ஜனங்களெல்லோரு மறியக்கூடிய சில அம்சங்களைக் குறித்துமட்டும் பேசினேன். ஆதலால் இதை முடிப்பதில், ஜனங்களை முன்னுக்குவந்து உபகரிக்கும்படி மாக்ஷிமைபொருந்திய பம்பாய் கவர்னரவர்கள் கூறிய மொழியை ஒப்புவிப்பதைவிடச் சிறந்த காரியம் நான் செய்யக்கூடுமென்று காணவில்லை. "வாஸ்தவத்தில் தேசாபிமானமுள்ளவர்களைவரும் தங்களுடைய தேசவாசிகளுக்குப் பிழைக்கும்வழி மேற்படவும், க்ஷேமமதிகரிக்கவும் விரும்புமவர்களும், வீண்பேச்சையும், துஷ்டப்பேச்சையும் ஒழித்து, உபகாரமேதாகிலும் செய்ய இஷ்டமுள்ளவர்களைவரும்," வந்து இக்காரியத்திற் குதவவேண்டுமென்பதாம். ஒருவனுக்கு வாஸ்தவத்தில் சுகம் வேண்டுமானால், பிறருக்கு உபகாரமாகக் காரியம் ஏதாகிலும் செய்வதே சிறந்த சாதனமும் ரகசியமுமாம். வெகு பொறுமையுடன்கூடிய சாதுக்களாகிய நமது குடிகளுடைய நன்மையைநாட்டி வந்திருக்கும் இந்தக் காரியத்திற்கு யார் யார் தங்களுடைய நேசத்தையும், மனதையும் அர்ப்பிக்கிறார்களோ, அவர்களுக்கு நல்ல பலனைப் பகவான் கூசாமலும், சாசுவதமாகவும் அருள்வார்."

# ஒற்றுமையைப்பற்றிய சில விஷயங்கள்.

ராவ்பஹதூர். ம. ஆதிநாராயணயகாரு, அவர்கள் செங்கற்பட்டு கூட்டுறவினர் இரண்டாவது மஹா நாட்டில் 1910-ம் வருஷம் ஜனவரி மீ 23-உ யன்று அடியிற்கண்ட உபந்நியாசம் செய்தார். இவர் இந்த சமஸ்தானத்தில் முதல் முதலாக ரிஜீஸ்திரான

1. திரூர் சொசைடியின் அக்கிராசனாதிபதி. 1909-ம் வருஷத்திற் கூடிய செங்கற்பட்டு ஜில்லா கூட்டுறவினர் முதல் மஹாநாட்டில் இவர் அக்கிராசனம் வஹித்தார்:—

"இது நமது ஜில்லாவின் இரண்டாவது மஹாநாடு. கூட்டுறவுச் சங்கங்கள் கிரமமாக பிரபலப்பட்டு வருவது ஒரு மிகவும் திருப்திகரமான விஷயம். விவசாயிகளுக்கு பெருங்கடன் நிமித்தமிருக்கும் துயரை நீக்குவதே இந்த ஏற்பாட்டின் முக்கிய உத்தேசம். வேறு விஷயங்களிலும் கூட்டுறவானது (ஒற்றுமை) பரவி வருகிறது. உதாரணமாக, நெசவுக்காரர்கள், தையற்காரர்கள் போன்ற தொழிலாளிகளுக்காக லாவாதேவி பாங்குகளும், பட்டணப் பிரதேசங்களில், சில்லறை வியாபாரத்திற்காக கூட்டுவியாபாரப் பண்டகசாலைகளும் ஏற்பட்டு வருகின்றன. இப்படி இருந்தபோதிலும், இது முக்கியமாக பரவி வருவது விவசாயிகளுக் கிடையில் தான். இந்த துறையில் உண்டாயிருக்கும் அபிவிருத்தியிலிருந்து, இந்த ஏற்பாடு எந்தெந்த வழிகளில் தலையிட்டிருக்கிறதென்றும், இதன் நோக்கங்கள் முழுவதும் கைகூடி வருகின்றதா என்றும் நாம் அறிவதற்கிடமுண்டு. இது விஷயமாய் என் புத்திக்கெட்டின சில அம்சங்களை நான் இங்கெடுத்துரைப்பேன்.

2. இச்சங்கங்கள் பெரும்பாலும் பொறுப்பு வரையறுக்கப் படாதவை. சில வரையறுக்கப்பட்டும் இருக்கின்றன. நாணயத்தை வெளிக்கடனுக்குஒரு சாதனோபாயமாக யோசிக்குமிடத்து முற்கூறியசங்கங்களே பின்னதைக்காட்டிலும் சிலாக்கியமாகச் சொல்ல வேண்டும். இச்சங்கங்களில் நேரிடக்கூடிய நஷ்டங்களை யோசிக்குமிடத்து, இரண்டாவதாக சொன்ன சங்கங்களிலுள்ளதைக் காட்டிலும் முன் சொன்ன வகுப்பு சங்கங்களில் அதுகளில் ஏற்படுத்தியிருக்கும் பந்தோபஸ்துகளை வி[illegible]க்குமிடத்து, அதிக பொறுப்பு ஏற்படுவதற்கு காரணமில்லை. ஆரம்பத்தில் [illegible]ய நாணயத்தின் வியாப்தியும் அதன் நோக்கமும் ஜனங்களுக்கு நன்றாக விளங்காமலிருந்தன. சில விடங்களில் ஒற்றுமை

யென்பது ஜனங்களுக்குள் நன்றாக தெரியாமலிருந்தது. இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் ஒருவன் மற்றொருவனுக்காக தன்னுடைய சர்வ சொத்தையும் ஈடுவைப்பது என்பது ஒரு அதிசயமாகவிருந்தது. இதுமட்டுமேயல்ல. ஜனங்களும் பயப்பட்டார்கள். இந்த எண்ணம் வரவர கழிந்துவருகிறது. பொறுப்பு வரையறுக்கப்படாத சங்கங்களை நடத்தி வருவதற்காக செய்திருக்கும் பந்தோபஸ்துகளால் நஷ்டத்திற்கு மெம்பர்களுடைய உத்தரவாதம் பொறுப்பு நிர்ணயித்தச் சங்கங்களிலுள்ளதை விட குறைகிறது. இதுவிஷயம் அதிகம் தெளிவாகத் தெரியும்போது இப்போதிருக்கிற சில பொறுப்பு வரையறுத்த சங்கங்களும்கூட அவற்றின் பொறுப்பை வரையறுக்கப் படாததுகளாக மாற்றிக்கொள்ளுர்.

3. ஒரு சங்கத்தின் பொறுப்பு வரையறுக்கப்பட்டிருந்தாலும் அல்லது வரையறுக்கப்படாமல் இருந்தபோதிலும், கூடுமானவரையில் சௌகரியமாகக் கடன்வாங்கி அதை மெம்பர்களுக்கு கடன்கொடுப்பதே அதன் உத்தேசமாகும். இது ஐக்கிய நாணயச்சங்கமானது அதன் மெம்பர்களுக்குச் செய்யக்கூடிய வேலைகளில் ஒன்றேயாகும். விவசாயிகளான அதன் மெம்பர்களுக்குத் தேவையான, புதுவிதைகளை சேகரிப்பதும், விவசாயக்கருவிகளை வாங்கிவைப்பதும், அவர்களுக்குள் வீட்டிலேயே செய்யக்கூடிய கைத்தொழில்களை பிரபலப்படுத்துவதும், அவரவர்செய்யும் பயிர்களின் மாசூலுக்குத் தகுந்த லாபகரமான விலைக்கேற்ற சந்தைகளைக் கண்டுபிடிப்பதும், இன்னும் இதுபோன்ற வேலைகளைச் செய்வதனால் சங்கங்கள் எவ்வளவோ உபயோகமான வேலைகளைச் செய்யக்கூடும். இச்சங்கங்கள் இன்னும் இளமைப்பருவம் விட்டு நீங்கவில்லை. ஆகவே மேற்கண்டவைபோன்ற வேலைகளைச்செய்ய தற்போது சௌகரியம் போதாதென்றாலும் இப்பெரும் நோக்கங்கள் எப்பொழுதும் நம் திருஷ்டியினின்று அகலக்கூடாது. நமது ஏற்பாடுகள் விருத்திக்கு வரவர அதை பூர்ணப்பிரயோஜனமுள்ளதாகச் செய்யவேண்டும்.

4. மெம்பர்களுக்குப் பண ஒத்தாசை செய்வதே தற்போதைக்கு நமது சங்கங்களின் நோக்கமாகவிருக்கிறது. இவ்வம்சத்திலும்கூட நமது சங்கங்களின் வேலையானது இரண்டு வகைகளில் குறைவுள்ளதாயிருக்கிறது. அவற்றில் உள்ளூரிலுள்ள பணத்தை நிக்ஷேபமாக (டிபாசிட்டாக) சேகரிப்பது ஒன்றும், மற்றது சங்கங்கள் கொடுக்கும் கடன்விஷயமாய் ஏற்பட்டிருக்கும் சில வரையறுப்புகளும் ஆகும். இவ்விரண்டும் ஒன்றை ஒன்று தழுவியே இருக்கிறது. இதை பின்னால் எடுத்துக்காட்டுகிறேன். கடன் கொடுப்பது கிரமமாய் பிரபலப்படாமல் உள்ளூர்தனம் சேகரத்தை எதிர்பார்ப்பது யுக்தமன்று. மெம்பர்களுக்கு கடன்கொடுக்கும் விஷயமாய் சங்கங்கள் பரமாவதி (அதிகமாக) செய்வது என்னவெனில், ஒருமெம்பருக்கு ஒன்றோ, அல்லது இரண்டு மூன்றுவருஷ காலங்களுக்கோ ஒரு கடனைக்கொடுத்து அக்கடனைத் திருப்பிச் செலுத்தவேண்டிய வாய்தா வரும்வரை அவனைப்பற்றி யா



தொரு வகையிலும் கவலையில்லாமல் இருந்து கடனுக்கு கெடுவுவந்தவுடன் தொகையை ஜாடாவாகவோ ஒருபாகமாகவோ வசூலித்து பாக்கிக்கு மறுகொடுப்பதுவுந்தான். இப்படிச் செய்வதனால் கடனாளி என்றும் கடனாளியாகவே யிருக்கிறான். அவன் கடனை சங்கவிதிகளை யநுசரித்து அவன் வாங்கக்கூடிய தொகை பூராவும் வாங்கியிருக்கிறது. அக்கடனை அவன் தீர்க்கும்வரை தனக்கு தேவையான எவ்வித ஆதாரவையும் சங்கத்திலிருந்து எதிர்பார்க்க இடமில்லாமலிருக்கிறது. இவ்விதம் நடவடிக்கைகளை நடத்துவதில் சங்கமானது கடனாளியுடைய நித்திய யோகக்ஷேமத்தை கவனிக்க முடியாததாகவிருக்கிறது. கடனாளியையும் வெளியிலிருக்கிற சாவுகாரிடமிருந்து பிரித்து வைக்க முடிவதில்லை. குடியானவனுக்கு ஒரு வருஷத்திற்கிடையில் எவ்வளவோ சமயங்களில் மிகச்சிறிய தொகைகளுக்கு திடுக்கு(கஸ்தி)நேரிடுகிறது ஆகையினால் ஒவ்வொரு மெம்பருக்கும், அவரவர்கள் அந்தஸ்துக்கு தக்கபடி வரம்பேற்படுத்தி அதற்குள்ளாக இரண்டு அல்லது அதிகம் மெம்பர்களிடம் உத்தரவாதத்தின்மேல், தன் சமயத்துக்குத்தக்கபடி அவனுக்கு சௌகரியமாக நாணயத்தின்மேல் கடன் பற்றுவரவு செய்தாலன்றி, நம்ஏற்பாட்டில் அவர்கள் கஷ்டத்தை அவர் அறியும்படி நாம் செய்வதாக ஏற்படாது.

என் உத்தேசத்தை நான் விளக்கிச் சொல்லுவேன். அதென்னவென்றால், ஒவ்வொரு மெம்பருக்கும் ஒரு நடமுதல் கணக்கேற்படுத்த வேண்டும். அவர் எவ்வளவு தொகைவரை கடன்வாங்கலாம் என்ற வரம்பை சங்கத்திலிருந்து முன்னாடியே நிர்ணயிக்கவேண்டும். இப்படி வாங்கும் கடன் தொகையானது மெம்பர்கள் சாதாரணமாக அவரவர் சங்கத்திற்கு பத்திரம் எழுதிக் கொடுத்துவாங்கும் பெருந்தொகை கடன்களுக்கு சம்பந்தப்படாது. இப்புது ஏற்பாட்டில், காலக்கிரமத்தில் வரவர மெம்பர்கள் எவ்வித சமயத்திலும் கடன்களுக்கு நமது சங்கங்களை நாடிவரும்படி செய்வதே பெரிய அநுகூலமென்பது என் அபிப்பிராயம். தவிரவும், இந்நாணயப்பற்றானது அப்போதைக்கப்போது சிறு தொகைகளாக வாங்கப்படுகிறபடியால் அக்கடன்களை திருப்பிச்செலுத்துவதும் சிறு தொகைகளாகவே இருக்கலாம் இதனால் ஒவ்வொரு மெம்பரையும் அன்றாடமோ, வாரத்திற்கொருதரமோ தான் மீத்துவைக்கும் தொகைகளை எளிதில் சங்கத்திற்கொண்டுவந்து செலுத்தும் வழக்கத்தை ஏற்படுத்தலாம். தங்கள சுவல்பசேகரங்களை வெளிப்படுத்துவதில் மெம்பர்களுக்கிருக்கும் நாணத்தை (லஜ்ஜையை) நாம் இவ்வாறு பிரயத்தனப்படலாம். இப்படிச்செய்து சிறுகச்சிறுக டிபாசிட்டு வைக்கும்படியும் செய்யலாம். இவ்வகையான அற்ப வரவு செலவுகளை நாம் செய்யாமல் விலகிநிற்கும்வரையிலும் உள்ளூர் பணங்கள் நமது சங்கங்களுக்குள் டிபாசிட்டுகளாக வரவும் வராது, நமது சங்கங்களின் நோக்கங்கள் முற்றிலும் கைகூடிவருமென்று நாம் நம்பவும்வேண்டாம். நான் இப்போது எடுத்துக்காட்டின நாணயப்பற்று வரவின்மூலம் சங்கங்கள் கடனாளி மெம்பர்களுடைய நித்திய யோகக்ஷேமத்தை கவனிக்க இடமுண்டாகும். இது இரண்டுவழிகளில் கை

கூடும். அதாவது கடன்களைச் சிறுகச்சிறுகக் கொடுத்து டிபாசிட்டுகளை யுண்டாக்கி மெம்பர்களையும் வரவர சங்கத்தை நெருங்கச்செய்யும். அப்போது, உள்ளூர் சாவுகார்களும் தங்கள் பணத்தை சங்கங்களில் போட்டு வைப்பதில் அநுகூலமுண்டென்று அறிவார்கள். கடன்களும் அவர்கள் மூலம் பட்வாடா செய்விக்கலாம். இவ்விதம் திரவியத்தை விணைச் சேகரிக்கும் சுபாவம் நீங்கும். வெளியில் பரவியிருக்கும் அதிகவட்டியும் வரவரக்குறையும்.

5. இவ்விதம் நாணயப்பற்று வரவையும் டிபாசிட்டையும் ஏற்பாடு செய்வதில் சங்கங்களுக்கு எழுத்து வேலை சற்று அதிகப்படும். அது காரணமாக, இருக்கும் விதிகளில் சில மாற்றுதல்களையும் அவசியம் செய்ய வேண்டியிருக்குமென்றும் நான் நினைக்கிறேன். வேண்டிய விதிகளைக் கவனமாக ஏற்படுத்துவதில் யாதொரு கஷ்டமும் இராதென்று நினைக்கிறேன். எல்லாச் சங்கங்களும் இவ்விதம் அதிகரிக்கும் வேலையைசெய்யப் பிரியப்படுமென்றும் எனக்கு உறுதியுண்டு.

6. சங்கங்கள் அதிகரித்து வருகின்றன. அவற்றின் மூலதிரவியமும் கிரமமாய்ப் புஷ்டிப்பட்டு வருகிறது. அப்படியிருக்க, இந்த ஏற்பாடானது எவ்விதம் குடித்தனக்காரனுடைய நித்திய யோகக்ஷேமத்திற்கு உதவிவருமோ அதற்கேற்ற சௌகரியங்களைச் செய்ய நாம் கடமைப் பட்டிருக்கிறோம். அவர்கள் சிறுகச் சிறுக மீத்து வைக்கும் தொகைகளை சங்கங்களில் வழக்கமாய் கொண்டுவந்து சேர்க்கும்படிக்கான நடவடிக்கைகளை ஏற்படுத்தி அவைகளைப் பிரபலப்படுத்த வேண்டும். மூல திரவியம் முழுவதும் தற்போது வெளியிலிருந்துவாங்கியிருக்கும் கடனாகவே இருக்கிறது. அகஸ்மாத்தான இந்நிலைமையினின்றும் ஈடேற வர வர முயல வேண்டும்.

7. நமது சங்கங்கள் மூலமாய் அநுகூலமடைய வேண்டிய குடித்தனக்காரர் மூன்று வகையா யிருக்கிறார்கள். (1) வது நிலத்திற்கு சுவான்தார் ஆன மிராசுதார் (ரயத்து); (2) வது நிலமில்லாத பண்ணைக்காரன் (3) நிலமில்லாத வயிற்கூலி வேலைக்காரன் அல்லது (அத்தக்) கூலியாள். கடைசி வகுப்பைச் சேர்ந்தவன் கடைத்தேற இன்னும் வெகு நாளிருக்கிறது. இவனைவிட பண்ணையக்காரனை குடியானவன் பாடு சற்று பாதகமில்லை என்றாலும் இவனும் கிணற்றோரமாகவே யிருக்கிறான். மிராசுதாருக்குத்தான் நாணயம் ஒரு மாதிரியாக சலாவணியாகிறதாயிருக்கிறது. நமது அநுஷ்டானத்தில் எப்படியிருக்கிறதோ அதைத் தான் நான் சொல்லுகிறேன். [illegible]



வகுப்பினர்களும் ஒன்றாகவே க்ஷேம திசையிலிருந்தால் மட்டுமே இத்தொழில் நல்ல நிலைமையிலிருக்கும். வயற்கூலி வேலைக்காரன் அல்லது கூலியாளுக்கு கிடைக்கவேண்டிய நிவிருத்திக்கு இடையூறுகள் அநேக மிருக்கின்றன. இவ்விஷயத்தைக்கவனிக்க நமது சங்கங்களுக்கு ஐசுவரியமும் போதாது, அநுபவமும் கிடையாது, என்றாலும் நிலத்தில் பாத்தியதையே இல்லாத பண்ணையக்காரனுக்கு உதவிசெய்ய நாம் பிரயத்தினப்படலாம். அவனுக்கு ஆதாரமான இடம் சுருக்கலாயிருந்தாலும் கூலியாளை விட இவனுக்கும் மிராசுதாருக்கும் கொஞ்சம் நிலையானபற்று (ஸ்தாயியான பிரியம்) இருப்பதுடன் இவனுக்கு சுதாவிலேயே கொஞ்சம் நாணயமுமுண்டு. இந்த ஆதாரங்களின் பேரில் நிலைப்படுத்தி இவனுக்கு உதவி புரியக்கூடும். நாணயமும் நம்பிக்கையும் ஒற்றுமைக்கு உயிர்த்துணையாகும். இவ்விரண்டும் எங்கிருக்கிறதோ அவ்விடத்திற்கு எதிர்சென்று பணம் உதவும்.

நிலையற்ற பண்ணையக்காரர்களும், சிறு பட்டாதார்களும் ஈவிரக்கமின்றி வட்டி என்னும் பெருங்கொள்ளை கொள்ளும் லாவாதேவிக்கார் சாகுபடி செய்யும் கழனியாகிறார்கள். தற்போதைய சந்தர்ப்பத்தில் நிலையற்ற பண்ணையக்காரர்களுக்கு விசேஷ உதவி புரிய இடமுண்டென்ற நம்பிக்கை எனக்கில்லை யென்றாலும், (ஏனென்றால் மிராசுதாருக்கும் கூட நாம் இப்பொழுது செய்யும் உதவி மிகவும் சுவல்பம்) நமது நோக்கம் இன்னும் ஆழ்ந்தும் விசேஷ வியாப்தி யுள்ளதாகவும் இருக்கவேணும். இவ்விஷயத்தை உங்களை கவனிக்கச் செய்வதில் என் கருத்தென்ன வென்றால், சௌகரியமுள்ள இடங்களில் நான் சொன்ன வகுப்பினர் உள்ளவர்களுக்கு உதவி புரிய நமது சங்கங்கள் ஆரம்பிக்கவேணும். அதில் நமக்கு அநுகூலம் சித்திக்குமானால் அந்த அனுபோகம் எல்லாருக்கும் உபயோகப்படக் கூடியதாகவிருக்கும்.

## ஐக்கிய நாணயச்சங்கங்கள்.

8. ஒருங்கு சேர்ந்து ஒவ்வொரு வட்டங்களாக (யூனியனாகச்) சேருவதே நான் உங்களுக்கு சொல்ல உத்தேசித்த விஷயங்களில் மற்றொன்று. இந்த ஆலோசனையானது நமது சமஸ்தானத்தைப்பற்றின மட்டில் இன்னும் கருப்பிராயமாகவே இருக்கிறது. ஏற்கனவே கீழ் வங்காளத்தில் இவ்விஷயத்தில் பிரதமப் பிரயத்தினம் செய்திருப்பதாகத் தெரிய வருகிறது. (ஐக்கிய சமாஜம்) யூனியன்களைச் ஏற்படுத்துவதின் கருத்தென்னவெனில், அதற்குட்பட்ட சங்கங்களின் ஆஸ்தி விவரங்களையும், கணக்குகளையும், நடவடிக்கை விவரங்களையும் அடிக்கடி யூனியனிலிருந்து செய்விப்பதேயாகும். இப்படிச் செய்வதால் சங்கங்களின் பந்தோபஸ்து பலப்படும். தவிரவும், சங்கங்கள் அதிகரிக்க அதிகரிக்க கவர்ன்மெண்டு தரப்பிலிருந்து செய்துவரும் தணிக்கையானது நாளடைவில் சரியான கவனமில்லாமல் வழக்கத்தைப்பொறுத்து [illegible] உள்ளூர்க்காரருக்கு ஒரு [illegible] கருத்துக்கும்

காரணமாகும். இவ்வித ஏற்பாடு நாளடைவில் மட்டிலேயே தான் திடப்பட வேண்டுமென்பது என் அபிப்பிராயம். சரிவரவும் திருப்திகரமாகவும் யூனியன் (சமாஜ) வேலைசெய்யத் தகுந்த மனுஷர்கள் எல்லா இடங்களிலும் கிடைப்பதற்கு நமது சங்கங்கள் ஒவ்வொன்றுக்கும் பிரத்யேகமான அனுபோகம் போதாது. ஐக்கிய நாணய இலாகா ஏற்பாட்டுக்கு இற்றைக்கு ஆறு வயதுதான் ஆகிறது. மேலும் வெகு சங்கங்களுக்கு அவை செய்யவேண்டிய வேலைகள் தெரியவும் அவைகளுக்கு அறிவிக்கவும் வேண்டியுமிருக்கிறது. இந்த சாமாஜிக (யூனியன்) வேலையை மட்டும் சர்க்காரிலிருந்து உரித்தான காலத்திற்கு முந்தி ஏற்படுத்துவார்களானால் அதைப்பற்றி விசனப்படவேண்டியிருக்கும். சமாஜங்கள் ஏற்பட்டாலும் ஏற்படாவிட்டாலும் வருஷாந்தர தனிக்கை எப்போதும் போல சர்க்கார் தாப்பிலேயே நடைபெற வேண்டும். சமாஜங்களை யேற்படுத்தவேண்டிய காரணமென்ன வென்றால் (சொசைடி சம்பந்தமாய்) அந்தந்த இடங்களிலிருந்து விவரமாய் அறிய வேண்டிய விஷயங்களைக் கவனிப்பதேயாகும். கூடிய சீக்கிரத்திலோ அல்லது சிறிது காலத்திற்கு பிறகாவது இவ்விஷயம் சர்க்கார் தரப்பிலிருந்து கவனிக்க முடியாததாக ஆகுமென்பது மட்டும் நிச்சயமே. சமாஜங்களை ஏற்படுத்த அவசியமானால் அவற்றின் விவகார எல்லை குறைந்ததாகவே இருக்க வேண்டும். தவிறவும் எந்த மெம்பரும் சமாஜத்தின் மீட்டிங்குகளுக்கு ஆஜராவதற்காக ஐந்து மைலுக்குமேல் பிரயாணப்படக்கூடாது. சமாஜத்திற்கு சேரும் சங்கங்களும் சாதாரணமாக ஆறு சங்கங்களுக்கு அதிகப்படக் கூடாது. அப்படி இருந்தால்தான் அவைகளை வருஷத்தில் இரண்டு முறையாவது தனிக்கை செய்யமுடியும். பரிசோதனை விஷயமாக சமாஜம் மாதத்திற்கு ஒரு தடவைக் கதிகம் வெளியேற சாத்தியப் படுமோவென்பது எனக்குத் தெரியாது. தவிறவும் சங்கங்கள் தற்போதிருக்கும் பணம் குறைந்த நிலைமையில் சமாஜங்களை ஏற்படுத்தும் பொருட்டு சங்கங்களிடமிருந்து பணம் வசூலிப்பது தகுதியல்ல. கூடுமான வரையில் அவ்விதம் பணம் வசூலிக்காமல் இருக்கவேணும். சங்கங்கள் தனித்தனியே வேலைசெய்யும் விஷயத்தில் எவ்விதம் பிரதிபிரயோஜனத்தை எதிர்பார்ப்பதில்லையோ அது போலவே, சிறிது காலம் வரை சமாஜங்களிலும் வேலையை இலவசமாய் நடத்த உத்தேசிப்பது அவசியம்.

9. என் புத்திக்கெட்டும் சில விஷயங்களை உங்களுக் கெடுத்துக்காட்டுவதே என் உபந்நியாசத்தின் உத்தேசம். அவை அநுஷ்டானைக்கு யோக்யமென்று தோன்றும் பக்ஷத்தில் அவைகளைப்பற்றி ஏதேனும் சில நடவடிக்கைகள் நடத்தப்பட்டால் நான் அதுபற்றி சந்தோஷிப்பேன். ஏனென்றால் அடுத்த தடவை நாம் கூடும்போது பரஸ்பரம் நமது அநுபோகங்களை ஒத்துப்பார்க்கலாம்.



செங்கற்பட்டு கூட்டுறவினர் மஹாநாட்டைக்குறித்து 1910-ளு ஜனவரிமீ 25உ மதராஸ் மெயில் பத்திரிகையில் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது:—

இந்த சமஸ்தான ஐக்கிய நாணயச்சங்கங்களின் வேலையைக்குறித்து சென்ற வருஷத்திற்கு எழுதிய ரிபோர்ட்டைப்பற்றி சிறிதுகாலத்திற்கு முன்னால் (சமீபத்தில்) நாம் விமர்சனை எழுதியிருந்தோம். அந்த ரிபோர்ட்டில் ரிஜிஸ்திராரவர்கள் செங்கற்பட்டு கூட்டுறவினர்களைப்பற்றி அவர்கள்போன்ற சங்கத்தார் மதராஸில் மிக உபயோகமுள்ள ஒரு சமாஜத்தார் என்றும் இந்த ஐக்கிய நாணயம் ஏற்பாடானது, மேலான அபிவிருத்திக்கு வரவேண்டிய வகையானது, அதுபோன்ற கூட்டுறவினர்கள் சங்கம் ஜில்லாவுக்கு ஜில்லா எவ்வளவுக் கெவ்வளவு அதிகரிக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவு, பிரபலப் படுமென்றும் புகழ்ந்து எழுதியிருந்தார். ஐக்கிய நாணயச் சங்கங்களை ஏற்பாடுசெய்து அவைகளை சரிவர நடக்கும்படி கவர்ன்மெண்டார் செய்ததில் அந்தவேலையை ஏற்றுக்கொள்ள வேறெவரும் ஏற்படாததால் அவர்களே அவசியம் செய்யவேண்டியிருந்தது. இந்த வேலைக்காக செங்கற்பட்டு கூட்டுறவினர்கள் போன்ற சர்க்கார் இலாகா சம்பந்தப் படாதவர்களை சர்க்கார் தரப்பில் தேவைப்படுகிறார்கள். இதன்காரணம் என்னவென்றால், ஜனங்களுக்கு அவரவர்களுடைய சங்கங்களை, ஐக்கிய நாணயத்திற்கு முக்கிய ஆதாரமான மர்மங்களை யனுசரித்து தாங்களே சுதாவில் நிர்வஹிப்பதற்கு தகுந்த யோக்கியதை யடையும்போது இவ்வேலையினின்றும் தாங்கள் விலகவேண்டு மென்பது சர்க்கார் அபிப்பிராயம்.

இச்சங்கத்தார் சென்ற சனிக்கிழமை கூடிய இரண்டாவது மஹாநாட்டில் ம-ள-ள-ஸ்ரீ, பு. ரா. சுந்தரய்யர் அவர்கள் அக்கிராசனம் வஹித்து அம் மஹாநாட்டை யாரம்பித்து அதில் ஒரு உபந்நியாசம் செய்தார். அவ்வுபந்நியாசத்தின் ஒவ்வொரு பதத்தையும் (அதன்கருத்தை) எவ்வளவு தெளிவாக உணரக்கூடுமோ அவ்விதம், இந்த சமஸ்தானத்தில் பிரதி ஜில்லாவிலும் இச்சங்கங்களை ஏற்படுத்துகிறவர்க ளாள்மட்டில் நிறுத்தாமல் எல்லாக்குடிகளுக்கும் எடுத்துரைப்பது அவசியம். ஏனென்றால் குடிகளுடைய க்ஷேமத்திற்கென்றே, எவ்வளவோ தீர்க்கமான ஆராய்ச்சியின்பேரிலும் யோசனையின்பேரிலும், முக்கிய கவர்ன்மெண்டாராலும் அவருக்கு கீழ்ப்பட்ட சமஸ்தானம் இந்த ஐக்கியநாணயச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

இவ்விஷயத்தை கவனிக்கும் பொழுது, சற்றேறக்குறைய இருபது வருஷங்களுக்குமுன் விவசாய பாங்கு சம்பந்தமான ஒரு பெரு ஆராய்ச்சி செய்யும்படி Sir (சர்) பிரடெரிக் நிக்கால்சன் துரையவர்களை மதராஸ் கவர்ன்மெண்டார் பிரத்யேகமாய் நேமித்த சங்கதி நினைவுக்கு வரவே மிக சந்தோஷமுண்டாகிறது. சர்க்கார் செய்த பேருதவியை பு. ரா. சுந்தரய்யர் நிஷ்

கபடமறவும் மனப்பூர்வமாகவே எடுத்துரைத்தார். அஃதெப்படியெனில் அவர் கூறியது "இந்த நாட்டின் கவர்ன்மெண்டாரால் இதைவிட மிக அவசியமானதும், பிரயோஜன முள்ளதும், இராஜாங்கத்துக்கு தகுந்ததுமான வேறெந்தச் சட்டமும் ஏற்படுத்தப்படவில்லை. எவ்வளவோ பெரிய இடையூறுக்கு எதிர் கொடுத்து இந்த ஏற்பாடு இம்மட்டில் விருத்திக்கு வந்திருப்பது பற்றியும் அவர் அவ்வண்ணமே புகழ்ந்துரைத்தார். இவ்வுபந்நியாசகர் இவ்விஷயங்களை மறையாமல் நிர்வியாஜமாய் எடுத்துரைத்தது பற்றி அவரை மெச்சவேண்டும். இவர் இந்துவானது பற்றி வேறெவரும் சொல்வதைக் காட்டிலும் இவர் கூறியதில் இருமடங்கு கவரக்கூடியதா யிருக்கிறது. அவர் எடுத்துக்காட்டிய குற்றங் குறைகள் எவ்வளவு நியாயமாயிருந்த போதிலும். இந்தியர்களுக்குள்ள குற்றங் குறைகளை ஒரு ஐரோப்பியன் சொல்லவோ, எழுதவோ நேர்ந்தால் சிலருக்கு அது மனத்துயரை விளைவிக்கும் சங்கதி எடுத்துச் சொல்லும்போது வீண்விழி விழிப்பது பிரயோஜனமில்லை. "ஐக்கிய நாணய ஏற்பாடு ஜனங்களுக்குள் ஒருவருக்கொருவர் நம்பிக்கையையும் கண்டிப்பான காரிய விதரணையையும் உண்டாகச் செய்தால், இந்தியாவின் கைத்தொழிலை உயிர்ப்பித்த பலன் உண்டு. இந்நிலையை எவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறார்கள். பிரிட்டானியார் இந்நாட்டில் குடிப் புகுந்ததையாவது, அவர் அரசாட்சி இந்நாட்டு ஐசுவரியத்திற்கு ஓர் அழிதலையாயிருக்கிறதென்றாவது காரமாகக் கடிந்துரைப்பதினால் ஒரு பயனில்லை இந்தியாவின் செல்வமட்டும் சரியாக உபயோகப் படுத்தப்படாமல் இந்நாடு வறுமையுற்றது என்றுகூற இடமில்லை. இந்தக் கருத்தையே ஐக்கிய நாணயம் போதித்தல் வேண்டும். இதுமட்டுமல்ல. இந்த ஏற்பாடு குடித்தனக் காரனுக்குமட்டும் பண உதவி செய்வதோடு நிற்கப் போகாது. வியாபாரப் பயிற்சியைப் பற்றியவரை இது இன்னதுதான் செய்யும் என்று வரையறுத்துச் சொல்ல முடியாது. குடித்தனக் காரனுடைய கல்வி அதிகமாயிருத்தல் பற்றி இவ்வேற்பாடு விவசாயத்தில் ஆரம்பித்தது. விவசாயமே இந்தியாவுக்கு மூல ஆதாரவாக இருக்கிறதென்பது சர்வ சம்மதம். ஜனங்களில் அதிக பாகத்தாரும் அதனாலேயே ஜீவிக்கிறார்கள். ஒரு பக்கம், மழை மாரி காலாகாலத்தில் வருமோ வாராதோ என்று பயந்தும் மற்றொரு பக்கத்தில் கடன்காரர் (கடன்கொடுத்த முதலாளி) எப்போ வருவானோவென்று பயந்தும் கைக்கெட்டியதையெல்லாம் வாயிற்போட்டுக் கொள்ளும்படி ஏற்படுவது வெகு பரிதாபமான விஷயம். இதுகாறும் என்றும் கடனில் மூழ்கியிருந்த குடித்தனக்காரன் எந்தக் கூட்டுறவு ஏற்பாட்டின் அநுகூலத்தால் தனக்குத் தானே சுதாவில் யதேச்சையாய் நடமாடும்படி சௌகரியப்படுகிறதே, அந்த ஏற்பாட்டையே எல்லாக் கைத்தொழில்களையும் உருப்படி யாக்கலாம்

Mr. சுந்தரய்யர். உபந்நியாசத்தை மீண்டும் கவனிக்கப் புகுவோம். சகஜமான அவை படக்கத்துடன் இந்த சாஸ்திரத்தை தாம் பிரத்யேக [illegible] யுடன் பகுத்தவரல்ல வென்று, அவர் மறுத்துச் சொல்லுகிறார். [illegible]



லும் இவ்விஷயத்தில் பாண்டித்தியம் பெற்றவருங்கூட அதன் முக்கிய அம்சங்களை அதிகம் சொல்லாமல் சுருக்கியும் மிகத் தெளிவாயும் எடுத்துரைப்பதற்கு சாத்தியப்படாது. ராஜ்யம் க்ஷேமமடைவதற்கு ஐக்கிய நாணயம் அதில் வேரூன்ற வேண்டும். அப்படிச் செய்வதற்கு இவ்வம்சங்களை எப்போதும் மனதில் வைக்கவேண்டும். அதைச் சுருக்கிச் சொல்ல:—நாணயமே சங்கங்களின் சாசுவதமான கைமுதலாகும். சரிவர மேற்பார்வையுள்ள சங்கத்தில் நிக்ஷேபம் செய்யும் (வட்டிக்கு வைக்கும்) முதல் நிராக்ஷேபமான பந்தோபஸ்துள்ளது. சரிவர மேற்பார்வையுள்ள சங்கம் எப்பேர்ப்பட்டது? அதையே Mr. சுந்தரய்யரும் எடுத்துச் சொல்லுகிறார். சுருக்கமான செலவின்மேலும் சரியான கவனத்தோடும் நடவடிக்கை செய்வதும், காரிய நிர்வாஹத்தில் கண்டிப்புமேயாகும். உதாரணமாக, கடன்களுக்குக் கெடு ஏற்பட்டதும் முகதாக்ஷிண்யம் பாராமல் அவைகளை கராராக வசூல் செய்வதும், கடன்கள் எந்தெந்த உத்தேசத்திற்கு வாங்கப்படுகிறதோ அந்தந்த வேலைக்கே உபயோகப்படுத்தும்படி நிர்ப்பந்தம் செய்வதும் தான். "இவ்வேற்பாடு தற்போது விருத்தி அடைந்திருக்கும் அளவிலும் நிலைமையிலும், இது (கடன்) விஷயமாய் கடனாளி லேவாதேவிக்காரன் வலையிற் சிக்காமலிருக்க வேணுமானால், அவனுக்கு இதுவிஷயத்தில் சில சுதந்தரியங்களை அநுவதிக்க வேண்டுமென்று போன (வருஷத்திய) ரிபோர்ட்டில் ரிஜிஸ்திரார் சொல்லியிருப்பது நமக்குத் தெரியும். ஆனால், கல்யாணத்திற்கென்று உதவிசெய்யும் பொருள் வாஸ்தவத்தில் செலவு செய்யக்கூடிய தொகையிலிருந்து எவ்வளவு குறைந்திருந்தாலும், அது அவ்வளவு நியாயமான செலவுமல்ல, கடன்களை இவ்விதம் உபயோகிப்பதும் சரியல்ல. இத்தசையில் கடன்களெல்லாம் பிரதிப் பிரயோஜனமுள்ள விஷயத்திலேயே செலவு செய்யப் படவேண்டுமென்று எதிர்பார்ப்பதும் வீணே. Mr. சுந்தரய்யர் தம் உபந்நியாசத்தின் இறுதியில் மிக வாய்மையோடு குறித்த காலத்தை எவரும் எதிர்பார்க்கலாம். அதெக்காலமெனில் குடித்தனக்காரன் லேவாதேவிக்காரன் பயத்திலிருந்தும் விலகி, தன் சாவகாசத்தையும், கவனத்தையும், தன் சக்தியையும், தன் உழைப்பின் லாபத்தையும் தன் ராஜ்பத்தின் நன்மைக்கும் தன் சொந்த க்ஷேமத்திற்கும் உபயோகிப்பதற்கு ஏற்படும் காலந்தான்.

இதரர்கள் செய்த உபந்நியாசங்களைப்பற்றி வியாக்கியானிக்க நாம் அதிக இடம் வைத்துக்கொள்ள வில்லை. இந்த ஏற்பாடு எவ்வளவு தூரம் விருத்திக்கு வந்திருக்கிறதென்பதைப்பற்றி வியந்து பேசுவதுடன், சங்கங்கள் தற்போது வேலைசெய்து வருவதில் ஒன்றிரண்டு அம்சங்களில் குறைகளிருப்பதையும் ராவ்பஹதூர் ஆதிநாராயண ஐயா எடுத்துக் காட்டினார். ஒரு மெம்பர் சங்கத்திலிருந்து கடன்பெற்ற பிறகு சங்கம் அவன் என்ன செய்கிறான் என்பதையே கவனியாது அவன் வழியேபோக விடுகிறார்கள். இப்படிச் செய்வதால் அவன் கடைசியில் மறுபடியும் லேவாதேவி சாவுகாரிடமே வந்து சேர இடமுண்டாகிறது. இதைச் சீர்திருத்த அவர் நாணயத்தின்

பேரில் மதிப்புக்கடன் கொடுத்தல் என்னும் ஓர் ஏற்பாட்டைக்குறித்து பிரேரணைசெய்தார். இவ்விஷயத்தைப்பற்றி பரிசீலனையும் யோசனையும் செய்ய வேண்டியது. இரண்டாம் நாள் சுவாரசியமான உபந்யாசங்கள் சில செய்யப்பட்டன. சென்ட்றல் அர்பன் பாங்கு காரியதரிசி Sir. V. C. தேசிகாசாரியார் செய்த உபந்யாசம் அவைகளில் ஒன்று. இந்த ஹோதாவில் அவர் ஐக்கியநாணயச் சங்கங்களோடு கலப்பதற்கு இடையுண்டு. அநேகம் சங்கங்கள் புழங்கிவரும் திரவியம் இந்த சங்கத்திலிருந்தே வருகிறது. மேல் நாட்டிலும், கீழ் நாட்டிலும் இந்த ஏற்பாடு விருத்திக்கு வந்ததைப்பற்றியும் அவைகளின் நிலைமையிலுள்ள வித்தியாசங்களையும் பற்றியும் Mr. L. D. சுவாமிக்கண்ணு பிள்ளையவர்கள் சில அரிய விஷயங்களைச் சொன்னார். மீட்டிங்கு முடியுமுன்னே கனம். Mr. A. E. Castlestuart Stuart (காஸில்ஸ்டுஅர்டு ஸ்டூஅர்ட்) அவர்களிடமிருந்தவந்த மிக அனுராசமுள்ள கடிதம் படிக்கப்பட்டது. அதன் கண் ஜனங்கள் பணத்திற்காக சர்க்கார் உதவியை எதிர்பார்க்கும் தப்பிதத்தை எடுத்துக் காட்டியிருந்தார்.

இருந்தாலும், அந்த திசை கடந்திருக்கிறது என்னும் விஷயம் எல்லாரும் ஒப்புக்கொள்ளத் தகுந்தது என்று நாம் நினைக்கிறோம். வாஸ்தவத்தில், இவ்வித (சர்க்கார்) உதவி எவ்வளவு சுவல்பமாயிருந்தது என்றும், அதுவும் கூட எவ்வளவு சீக்கிரம் அநாவசியமாய் விட்டது என்பதையும் பற்றி வெற்புறுத்தி எழுதியிருப்பதே இது சம்பந்தமாய் கடைசியாய் எழுதப்பட்ட (அபிஷியல்) ரிபோர்ட்டின் முக்கிய கருத்து.

# சேலம்ஜில்லா: கூட்டுறவு மஹாநாடு.

---

சேலத்தில் நாளதுமீ 19, 20உ களில் நடந்த சேலம்ஜில்லா கூட்டுறவு மஹாநாடு நடவடிக்கைகள் நமக்கு வந்திருக்கிறது. சேலத்தார் தங்கள் ஜில்லாவில் ஐக்கியநாணய வியவகாரத்தைப் பரவச்செய்து அதன் மூலம் பட்டினிகிடக்கும் குடித்தனக் காரனுக்கும்கூட தேவையான பண சஹாயத்தை அவன் வீட்டு வாயிலுக்கே கொண்டுவந்து கொடுத்திருப்பது பற்றி அவர்களைப் புகழவேண்டியது. இராஜாங்க சம்பந்தமாயும், ஜன சம்பந்தமாயும் இருக்கப்பட்ட இதர விதமான பொதுக்காரியங்களுக்கு பாடுபடுவது வெகுவாய்க் கவர்த்தக்கதா யிருக்கிறது. இதன் காரணம் அவ்வகை காரியங்களுக்குட் பட்டவர்களுக்கு தங்கள் பேரை பிரசித்தப்படுத்த இது ஒருதக்க அவசரமாக ஏற்படுவதுமட்டுமல்ல. இதற்கதிகமாக என்ன சௌகரியமெனில், பேசுவதும் எழுதுவதும் தவிர, இது விஷயமாய், இடையூறுகளை தவிர்க்கவாவது, பாடுபட்டு சுமந்தெடுத்து கல்மேல் கல்வைப்பதுபோல் உண்டாக்க வேண்டிய (உற்பத்தி) செய்யவேண்டிய வேலை யொன்றுமில்லை. ஐசுவரியாபிவிருத்தி சம்பந்தமாயும் கைத்தொழில் விருத்தி சம்பந்தமாயும் செய்ய வேண்டிய பொதுகாரிய உழைப்பு மிக பிரயாசையுள்ளது தான். அதற்குத் தகுந்த யோக்கியதை பொருந்தியவர் வேலைக்கு அதிகம் பேர் வருவதுமில்லை. ஆகவே, இம்மஹாநாட்டை ஒருங்குபடுத்தியவர்களை புகழவேண்டியது அவசியமே. இதற்கு காரணம் இம்மஹாநாடு நன்றாய் சித்திபெற்றது மட்டுமல்ல. அதன் விவரம் நாம் பிரசுரப்படுத்தி யிருக்கிறோம். மேலும், இம்மஹாநாடு போன்ற ஒரு கூட்டத்தை ஏற்படுத்துவதற்காக, ஐக்கிய நாணயமென்னும் ஒரு சிறு பூண்டை சகலருக்கும் தெரியும்படி (வளர்த்து) எடுத்துக்காட்டுவதான மிகப்பெரிய வேலையைச்செய்வது ஒரு காரணமாகும். பிரஸ்தாவ வருஷத்தில் இந்த ஜில்லாவில் பாங்குகள் இரட்டித்திருக்கின்றன. கொடுபட கடன்கள் இரண்டு லக்ஷரூபாய்க்கு அதிகமாகிறது. இது விஷயமாய், இந்த சமஸ்தானத்தில் நடந்திருக்கும் வேலையைக் கவனிக்கும்போது, இவ்வேற்பாடு கடந்த ஆறு வருஷங்களுக்குள் குணமான * மாகப் பெருகி வருகிறது. இம்மஹா நாட்டில் அக்கிராசனம் வஹித்த. கனம் ஜஸ்டிஸ் வி. கிருஷ்ணசுவாமி ஐய்யரும் இவ்விதமே கூறியுள்ளார். அவர் செய்த, விஷயங்கள் மிகவடங்கிய, உபந்யாசத்தை, நேற்று பிரசுரித்தோம். இப்படியே ஏன் இன்னும் இவ்வேற்பாடு விருத்திபெறாது என்றுசொல்ல யாதொரு

---

* இங்கிலீஷில் இதற்கு (Geometrical progression) என்று பேர், அதாவது, 1,10, 100, 1000, ஆக பெருகிறது.

காரணமுமில்லை. இனிமேலும் இவ்விதமே அதிகரித்தால், அடுத்த இருபதில்லாவிட்டாலும் ஐம்பது வருஷத்திற்குள் இந்தியக் குடியானவனுக்குண்டாகும், கொடிய கருப்பும், நீங்காக்கடனும், அவைகளுக்கு சகாயிகளான துக்கம் தொடர்ந்த கடும் வறுமையும் ஒழிந்தவாறே யாகும்.

இந்த ஏற்பாடை அதிகம் பரவச்செய்ய வேண்டுமென்றால் உழைப்பாளிகள் அதிகம் பேர்வேண்டும். அவர் ஜனங்களின் துக்க நிவிருத்தி செய்வதற்கென்றே சுதாவில் தீக்ஷைபூண்டவர்களா யிருக்கவேண்டும். இவ்வுழைப்பாளி தனிகனாயிருக்க வேண்டுமென்றாவது தன் சாவகாச முழுவதும் இதற்கே செலுத்த வேண்டுமென்றாவது கட்டாயமில்லை. தேசாபிமானி யெவரும், அவர் செல்வமும் சௌகரியங்களும் எப்படி யிருப்பினும் நம்மாலாக வேண்டிய பெரிய வேலைக்கு தன்னாலியன்றளவு வேலை செய்யலாம். சம்பன்னர்கள், வறுமை திசையிலிருக்கும் தம் சகோதரர்களுக்கு தம் நாணயத்தின்பேரில் உதவிபுரியலாம். சாவகாச முள்ளவர்கள், சங்கங்களை ஏற்படுத்தி அவைகளுடைய தினப்படி சரிவர நடவடிக்கைகளை நடத்தி மேற்பார்வை பார்க்கலாம். கஷ்டப்படும் ஜனங்களுக்கு வெகுவாய் ஐக்கிய நாணயம் என்னும் திவ்விய மந்திரத்தைப் உபதேசித்து (எடுத்துக்காட்டி) பரவச் செய்யலாம். ஐக்கியநாணய ஏற்பாட்டிற்கு அநேகம் துறைகளுண்டு, இம்மஹாநாட்டிற் பிரதானமாகக் கண்ட லாவாதேவி யல்லாமல் உற்பத்திசெய்வதிலும், விற்பனை செய்வதிலும் ஒற்றுமையுண்டு. தன் பெண்ஜாதி, குழந்தைகளுடைய சம்ரக்ஷணைக்காக தான் கைப்பாடுபட்டு, நெசவு செய்ததையோ, அல்லது தான் அடித்து உருப்படிசெய்ததையோ குறைந்த விலைக்கு தரகாளிக்கு கொடுக்காமற் செய்யலாம். உற்பத்தியையும் விற்பனையையும் ஒழுங்கான ஏற்பாட்டின்பேரில் ஒற்றுமை மூலம் உருப்படி செய்தால், கைத்தொழில் சரக்குகளின் அசல் (விலை) சரசப்படும். இதுமட்டுமல்ல, மேல்நாட்டு யந்திரச் சரக்குகளோடு போட்டியும் போட செகரியமுண்டு. தரகாளி மூலமாயல்லாமல், தான் மெம்பராயிருக்கும் ஒரு பொதுவான கூட்டுறவு பண்டகசாலையினின்றும், ஒருஇடத்தில், ஒரு தறிக்காரனுக்கு அவன் நெசவுக்குவேண்டிய நூல் கிடைக்குமானால் பண்படாச் சரக்கு விலை குறையும். காரணம் இச்சரக்குகளின் பேரில் தரகாளி அதிகலாபத்தை யேற்றி விலைக்கு விற்கிறான். இப்படிச் செய்வதில் இப்போது நிலவர விலைக்கு விற்றாலும் அதிக லாபமிருக்கிறது. இதன் ஒரு பாகத்தை தான் அநுபவித்து மீதியை உற்பத்திசெய்யும் (வியாபாரிக்கு) கொடுத்தால், மான்செஸ்டர் தறித்துணியைக் காட்டிலும் இவன் துணியை வாங்கும்படிசெய்ய சௌகரியமுண்டு. இப்படி செய்வதில் நெசவுகாரனுக்கும் நாட்டிற்கும் நலமுண்டு. மேலும் நெசவுக்காரர்கள், தினசரி தங்கள் சில்லறைச்செலவுக்கு ஒத்து ஒருகூட்டுப் பண்டகசாலை ஏற்படுத்திக்கொண்டால், அவர்கள் அந்தக்கூலி சுவல்பமாயிருந்தாலும் அதன் மூலம் அவர் இப்போது அடையும் திருப்தியைவிட அதிக அளவிற்கு திருப்தியடைய இடமுண்டு.



இவ்விதம் சௌகரிய மடையவேண்டிய வகுப்பினருக்கு கூட்டுறவைப் பற்றி ஒன்றுமே தெரியாதிருப்பது மிகவும் விசனிக்கத் தக்கதாயிருக்கிறது. அதை அவர்களுக்குப் போதிக்கவேண்டும். அதிக அறிவுபெற்ற வகுப்பினர்—தாரதம்மியமாகப்பார்க்கையில், அதிக ஐசுவரியத்தோடும், சுகத்தோடும் அதிக அறிவோடும் இருப்பவர்கள்.—வறுமை திசையிலிருக்கும் தமது சகோதரர்களுக்கு அவர்கள் தெரிந்து கொள்ளும்படி அவர்களுக்கு அந்த அறிவைப்புகட்டி ஜனங்களின் சிரேணியில் அவர்களை உயர்வடையச் செய்வது அவர் கடமையாகும். துக்கத்திலும் அந்தஸ்து குறைந்தும் இப்போதிருக்கும் கைத்தொழில் வகுப்பினரைக் கைதூக்கி விடுவதான அருமையான வேலையைச்செய்ய கல்வித்தேர்ச்சி அதிக முடையவர்களுக்கு இது ஒரு நல்ல தருணம். இவ்வேலையில் அவர்கள் சுகத்தையாவது பணத்தையாவது ஒழிக்க வேண்டிய அவசியமில்லை. அவர்கள் (மிஷனிரிகளைப்போல்) கைப்பிடித்த வேலை நிறைவேற்றல் வேண்டுமென தீக்ஷை பூண்டவர்களாக ஜடா சேர்ந்து ஊர்க்கூர் போய், ஒற்றுமை என்னும் இப்புதுமந்திரத்தைப் பிரசங்கித்து, சங்கங்கள் வேலையாரம்பித்த முற்பத்தில் ஒத்தாசையும் செய்வார்களேயானால், கைத்தொழில் செய்யும் ஜாதிகள் சர்வத்திராளுக்குமுள்ள சுபாவமான சத்திய குணமும், நல்ல சுபாவமும் விருத்தியடைந்து அதன் மூலம் இந்த ஏற்பாட்டைப் பிரபலப்படுத்துமென்பதில் நமக்கு ஐயமில்லை. அப்போதுதான், அவர்கள் நிலைமையை அவர்களே சுதாவில் சீர்திருத்திக் கொள்வதற்கு தகுந்தவராவார்கள். அத்தசைவரும்வரை இதுபோன்ற ஒரு முயற்சியில் காலத்தையும் வேலையையும் கணக்கு வைக்காமல் உழைக்கவேண்டியது அறிவுள்ளவர்கள் தாம் பிறந்த நாட்டிற்குச் செய்யவேண்டிய முக்கியக் கடமை. சேலம் மஹாநாட்டின் நடவடிக்கைகளை பிரசுரப் படுத்துவது மூலமாய் இவ்விஷயத்தைப்பற்றி ஜனங்கள் அதிகசிரத்தையெடுத்துக் கொள்வதற்கிடமுண்டாகுமென்று நாம் நம்புகிறோம். இன்னும் சில வருஷங்களுக்குள் இவ்வேற்பாடு இந்த சமஸ்தானத்தின் எல்லா ஜில்லாக்களிலும் பரவுமென்றும், அவைகள் சகஜமான அபிவிருத்தியடைந்து அதன் பலன் நாட்டின் சகல பாகங்களிலும் ஊன்றி நாட்டின் ஐசுவரியத்தின் நிலைமையும் விருத்தியடைந்து இந்துஜாதியாரை ஜனசிரேணியில் மேன்மையடையச் செய்யுமென்றும் நம்புகிறோம்.

(இந்தியன் தேச அபிமானி) 23-3-10.

# “ஆள் நாணயமே ஒற்றுமைக்காதாரம்”

(திருவல்லிக்கேணி கூட்டுறவினர் இரண்டாம் திருநாளன்று

1908-ஆம் ஏப்ரில் 11உ வாசிக்கப்பட்ட ஒருவியாசம்).

“ஆள் நாணயமே ஒற்றுமைக்காதாரம்” என்னும் விஷயம் மிகப் பெரியது. அதைப்பற்றிச் சொல்லவேண்டியது அநேகம். அதை எடுத்துரைக்க சாவகாசமோ மிகச் சுருக்கம். ஆகையால் இவ்விஷயமாய் என்னை ஏதோ கொஞ்சம் எடுத்துச்சொல்லும்படி கேட்டு என்னை கௌரவப்படுத்தியதற்காக நான் அதிக ஆராய்ச்சியுள்ள ஒரு சாஸ்திர பரிசிலனைசெய்ய உத்தேசிக்கவில்லை. என் உத்தேசம் மிகவும் தாழ்மையுள்ளது. என் புத்திக்கெட்டின வரையில் அவ்வருமையான விஷயத்தில் எவை முக்கியமென்று தோன்றுகின்றனவோ அவைகளைமட்டும் சுருக்கமாய் எடுத்துக்காட்டினால் போதுமானதென்பது என் கருத்து. ஐக்கியநாணய தன சாஸ்திரத்தில் மிக உபயோககமான இந்த பாகத்தில் சாஸ்திர சம்பந்தமான ஆராய்ச்சிமட்டில் இதில் சிரத்தையெடுத்துக்கொள்வதை விட்டு அநுஷ்டானத்தில் நடவடிக்கை செய்பவர்கள்* அப்போதைக்கப்போது கவனிக்கவேண்டிய அம்சங்களையே நான் முக்கியமானதாக நினைக்கிறேன்.

“கடன் வாங்குபவனாகவாவது, கடன் கொடுப்போனாகவாவது, ஏனென்றால் கடன் கொடுத்தால் கடனும்போய் சிநேகமும் நஷ்டமாகும்; தவிரவும், கடன் வாங்கும் நடவடிக்கையினால் செட்டுத்தனம் மழுங்கிப் போகிறது.” இதைத்தான் லௌகிகத்தில் கைதேர்ந்தவரும், ஸ்தோத்திரம் செய்வதில் அதிசாதுரியமுமுள்ள போலோனியஸ் என்பவர் சொன்னதும் பூர்ண புஷ்டியானதும், பூராவும் அசாத்தியமான மதமான சதுபதேசம். அப்படியிருந்தாலும் நம்மவர்க்குள் மேன்மையானவர்களும், அதிகப் பணக்காரரும் செட்டாயிருப்பவரும்கூட அடிக்கடி கடன் வாங்க நேரிடும் விஷயம் விசனிக்கத்தக்கதும் உண்மையுமாம். நம்மில் எவனும், எவ்வளவு கன்னெஞ்சனும் தனது அத்தியந்த ஆப்த சிநேகிதர்களுக்கு கடன் கொடாமல் வாழ்நாள் கழிப்பது அசாத்தியம். கடன் வாங்குதலும் கொடுத்தலும் உலகம் உண்டான காலமுதல் இருப்பதென்பது நாம் திடமாய் நம்பலாம். எவ்வளவு நாகரிகம் ஏற்பட்ட போதிலும் இவையில்லாமல் லோக விவஹாரங்கள் ஒன்றும் நடைபெறாதென்பதையும் நாம் கட்டாயமாய் ஒப்புக்கொள்ள வேண்டியதேதான். ஆகவே கடன் வாங்குதலையும் கொடுத்தலையும் எவ்விதம் இல்லாமற்



செய்யலாமென்பது ஒரு வட்டத்தை சமகோண சதுரச்ரமாக்க பிரயத்தினப்படுவது எவ்வளவு நிஷ்பிரயோஜனமோ, இதுவும் அவ்வளவு பலனற்றதாகும்.

ஆகவே நமது ஆலோசனையிலுள்ள விஷயம் இவ்வளவிலேயே முடியக்கூடியதாயிருக்கிறது. அதாவது, வாஸ்தவத்தில் அவசியம் நேரிடும்போது எவ்விதம் ஒருவன் நொந்துபோகாமல் கடன் பெறலாம் என்பதே. எவ்விதம் ஒருவன் அடிக்கடி கடன் வாங்கியும்கூட தன் ஆயுள்நாள் முழுதும் தனக்கு கடன்கொடுத்த முதலாளிக்கு அடிமைப்படாமல் இருக்கலாம்? இக்கேள்விகளுக்கு நாம் கொடுக்கும் ஜவாபின்பேரில் பிரஸ்தாவ விஷயத்திற்கு சமாதானம் ஏற்படும். வேறு பழமொழிகள் போலவே இவ்விஷயமாயுள்ள பழமொழிகளும் அரைவாசியே நிஜமா? அல்லது அவைகளின் வலுமை இயற்கை நியாயங்களைப்போல தடுக்க முடியாதவைகளா? மேலும் காலில் ஏற்ற முள்ளை எடுக்க விரும்புவோன் எப்படி அதையே மறுபடியும் உறைக்கப் போகாதோ அப்படியே இச்செய்கைகளின் பயனில் நின்றும் விலக முடியாதா? ஹாசியகவி ஒருவன் கூறியதுபோல் இவ்வுலகில் சுகம் வாஸ்தவத்தில் நிழல்போன்றது மட்டுமோ “நாம் இருக்கும் இவ்வுலகு, கடன் கொடுக்கவும், செலவு செய்யவும் தானம் செய்யவும் நல்லதே. ஆனால் இரக்கவும் அல்லது கடன் வாங்கவாவது, அல்லது கொடுத்ததை கேழ்க்கவாவது நேரிட்டால் இவ்வுலகத்தைப்போல கெட்டவுலகில்லை.”

மேற்கண்ட சொற்களில் சூசித்தபடி கடன்கொடுப்பதில் நஷ்டத்திற்கிடையும், கடன் வாங்குவதில் கஷ்டமும் இருக்கிறதா? யூரோப் கண்டத்தின் அநுபோகம், அதாவது அக்கண்டத்தின் ஒவ்வொரு நாட்டிலும் சென்ற 50 வருஷம் அதற்கதிகம் காலத்திலும், ஏற்பட்டிருக்கிற ஐக்கிய நாணயச் சங்கங்களின் நடவடிக்கைகள் மேற்கண்ட கேழ்விகளுக்கு “இல்லை” என்றே உரத்துக்கூவுகின்றன. “கொடுத்தது கேட்டால் அடுத்தது பகை” என்றும், இன்னும் இவ்வாறு பலவிதமாக கடன் என்ற பேச்செடுத்தால் அடுத்தபேச்சு நஷ்டமென்றும் கருத்தமைந்து உலகமுண்டான காலமுதல் கடனுக்கு ஏற்பட்ட தூஷணைகள் பொருந்தாதென்றும் இச்சங்கங்கள் ஒரு குரலாய் முறையிடுகின்றன. அதுபோலவே கடன்வாங்குவது வெறுக்கத்தகுந்ததும் இழிவான காரியமுமல்ல. இந்த வெறுப்பும் இழிவும் கடனோடு உடன்பிறந்து பிரியாது இருக்கிறது என்ற தப்பான எண்ணம் உலகம் சிருஷ்டியானது முதற்கொண்டே ஏற்பட்டதால் இந்த நடவடிக்கையை நிந்திப்பது வழக்கமாயிருக்கிறது. கடன்கொடுக்கும் ஒவ்வொரு சாவுகாரும் தான் ஷைலாக் (இவன் வட்டிபைத்தியம்பிடித்து பணப்பேராசை கொண்ட ஒரு யூதனுக்)காக இருப்பது அவசியம் என்றும் அதிக மதிப்புள்ள எவரும் தமது மதிப்பையும் அந்தஸ்தையும் எள்ளளவும் குறைத்துக்கொள்ளாமல், வேண்டியபோது கடன்வாங்கலாமென்றும் இச்சங்கங்கள் சந்தேகந்தீரவும் தூஷணைக்கு இடமில்லாமலிருக்கிறதென்றும் நிரூபித்திருக்கின்றன.

யூரோப் கண்டத்திலுள்ள இந்த பாங்குகள் அவைஏற்பட்ட இந்த சுவல்ப காலத்துக்குள்ளாக அவைகள் இருக்குமிடங்கள் சுற்றிலுமுள்ள ஏழைக்குடிகளின் நிலைமையை எவ்வளவோ ஆச்சரியத்தை யுண்டாக்கும் படியாக மேன்மைப்படுத்தி யிருக்கின்றன ஈன ஸ்திதியிலிருக்கும் ஜனங்களுடைய ஆசார ஒழுக்கங்களையும் படிப்பையும் அர்ப்புதமாக முன்னுக்குக் கொண்டுவந்திருக்கின்றன. மிகப்பரிதாபமான வறுமையிலிருக்கும் யெவருக்கும் பொங்கும் செல்வத்தை யடையும்படி எவ்வளவும் அசாதாரணமாக (Midas) மைடாஸ் (என்பவனை)ப்போல கைதொட்டது பொன்னாகும்படியான சக்தி இச்சங்கங்களுக்கு இல்லவுமில்லை. கேட்டது கொடுக்கும் கல்ப விருக்ஷம்போன்ற அநந்தம் அலாவுடீன் தீபங்களை அதில் சேருகிறவர்களுக்கு இலவசமாக கொடுக்கும் பொருட்டு இச்சங்கங்கள் வைக்கபடவுமில்லை. பொன்மழை பெய்யும்படி செய்ய யத்தனமாவது உத்தேசமாவது கிடையாது: அப்படி யிருந்தாலும், அவைகளுடைய சக்திக்கும் சௌகரியத்துக்கும் தக்கபடி, இச்சங்கங்களின் எல்லைக்குள் வசிப்பவருக்கு கடன் என்று சொல்லும் பெரிய கவலையில் மூழ்திசை தெரியாமல் என்ன செய்வோமென்று பரிதபிக்கிறவர்களுக்கு விவசாயம் முதலிய உழைப்புகளை நித்தியமாக பரிசீலிப்பதும், மிதமாக ஜீவனம் செய்வித்தும் செட்டாக செலவழிப்பித்தும், அவரவர்கள் மரியாதையைக் காப்பற்றியும், ஜனங்களுக்குக் கைக்குமெய்யாக சுகத்தை யுண்டாக்கியுமிருக்கின்றன. இது நிச்சயமே. அசாதாரணமான இப்பெரும் க்ஷேமத்திற்குக் காரணமாக சிறிது காலத்திற் கிடையிலுண்டான இவ்வேற்பாடுகள் (சங்கங்கள்) என்ன? அவைகளைப்பற்றி ரகசியங்களொன்றுமில்லை. அபூர்வமானகுணங்களொன்றும் அவைகளுக் கிருப்பதாகச் சொல்லமுடியாது. அவைகளை நடத்திவரும் முறைகள் மிக சுலபமானவைகளும், விசேஷப்படிப்பு இல்லாதவர்களும் கூட எளிதில்தெரிந்து கொள்ளக்கூடியவைகளுமே. சௌகரியமான வட்டிமுதலிய நிபந்தனைக்குபணம் கடன் வாங்கிக் கொள்ளவேண்டியதற்காக தங்கள் தங்களுடைய சௌகரியத்துக்கு தக்கபடி ஒன்றுகச்சேரும்படி செய்யும் ஒருகூட்டம் ஜனங்களுடைய சங்கமே ஒரு ஐக்கிய நாணயச் சங்கமெனச் சொல்லலாம். எல்லா சாதாரண (Joint Stock) லாவாதேவி பாங்குகளைப்போலவே இதுவும் ஒன்று என்று சொல்லலாம். என்றாலும், இதில் ஒற்றுமை மிகப் பிரதானமாக இருக்கிறது. ஆனல், சாதாரண பாங்குகளில் லாபமொன்றில் மட்டுமே நோக்கம். இப்போது நாம் பிரஸ்தாபம் செய்துவரும் சங்கங்களென்றாலோ, அவைகள் சுத்தமாய் (முற்றிலும்) ஒற்றுமையின்பேரில் ஏற்பட்டிருக்கின்றன. இந்த ஏற்பாடானது "தாயும் பிள்ளையும் ஒன்றானாலும் வாயும் வயிறும் வேறு வேறு" "அவனவன்பாடு அவனவனுக்கு" என்னும் பழமொழியின் கருத்துக்கு நேர் விபரீதமாயிருக்கிறது. தவிரவும், "நான் அவன் வீட்டு வேலைக்காரனல்ல" வென்று விவகரிக்கும் கேவல சுயநயத்துக்கு இடம் கொடாமலே யிருக்கிறது. அதற்கு பதிலாக "ஊருடன் ஒத்து வாழ்" என்ற நடவடிக்கை அநுஷ்டானத்திற்கு வந்திருக்கிறது. இவ்விதமாக ஒற்றுமை



யின் நாணயத்தை பலப்படுத்துவதனால் கண்டிப்பாக வேலை நடக்காதென்று நினைக்க இடமில்லை. ஆனால் இந்த ஏற்பாட்டின் சாக்கை வைத்துக்கொண்டு கண்மூடித்தனமாக வீண் தர்மம் செய்ய நேரிட்டால் அது நிமித்தம் தாக்ஷிண்ணியத்திற்கு கட்டுப்பட்டு நஷ்டதிற் கிடையுண்டாகும். ஐக்கிய நாணயச் சங்கங்களின் நடவடிக்கைகளில் மெம்பர்களுக்கு எவ்வளவு வரையில் சௌகரியங்கள் செய்து கொடுக்கமுடியுமென்று கவனிக்சப் படுகிறதே யல்லாமல் எந்தக் காரணத்தாலும் லாபத்தைத் தெய்வமென்று எண்ணிக் கொண்டாடுவது கிடையாது. இவ்விரண்டும் சங்களையுமே ஐக்கிய நாணயச்சங்கங்களை நடத்தி வருவதில் முக்கியமானவை. அவைகளை நடத்தி வருகிறவர்கள் இவைகளைக் கவனித்து வரும் வரையில், யாரை யுத்தேசித்து இவை யுண்டாயிருக்கின்றனவோ அவர்களுக்கு நன்மையை விளைக்குமென்பது திண்ணம்.

ஐக்கியநாணயச் சங்கங்கள் கிழ்த்தரம் குடிகளுடைய சௌக்கியத்துக்காக வென்றே ஏற்படுத்தப்படுகின்றன. சிறிது காலமுன் வங்காளத்தில் வியாபார சபையின் பிரசிடெண்டாய் இருந்தவரும் இந்நாட்டில் ஐக்கிய நாணய ஏற்பாட்டிற்கு பந்துவுமான Sir D. M. ஹாமில்டன் துரையவர்கள் கைத்தொழில் முன்னுக்கு வரவேண்டிய உபாயத்தைப் பின்வருமாறு கூறுகிறார். அதென்னவென்றால், ஒருவனுக்கு தேவையாயிருக்கும் பணத்தை சரசவட்டிக்குவாங்கி தன்மாகூலை லாபவிலைக்கு விற்கவேணும். * வியவசாயி தனக்குத் தேவையான கால்நடைகள் விதை, எரு, விவசாயக்கருவிகளை வாங்கிவைத்துக் கொள்வதுடன் அவசியம் நேரிடும்போதெல்லாம் அவைகளைப் புதுப்பிக்கவும் வேண்டியிருக்கிறது. இவைகளுக்காக அவனுக்குப் பணம் அவசியமாயிருக்கிறது. ஆகவே அவன் வழக்கமாகக் கடன் வாங்கிவரும் சாவுகாரிடம போகிறது சகஜமாயிருக்கிறது. தவிரவும், அவனுக்கு இவன் வெகுசாய் கடன் பட்டிருக்கவும் கூடும். குடியானவனுக்கு அவசியம் நேரிடும் சமயமே சாவுகாருக்கு சரியான தருணம். ஆகவே, அப்போது எவ்வளவுக்கு இடம் கிடைக்குமோ அவ்வளவுக்கும் இவன் ஜாக்கிரதைபடுத்திக்கொள்ளுகிறான். கடனுக்கு அந்நியாயமான வட்டி தீர்மானிப்பதுடன், வட்டி சேரச் சேர இடமாகிறது. இவ்வளவு விபரீத நிலைமையில் குடியானவன் தன் சிறிய பண்ணையில் பயிர் செய்கிறான். மணியில் அறிவாள் வைக்கப்பருவம் வருமுன் கிஸ்துக்கு முதல் வாய்தா வந்து விடுகிறது. அந்த மாசூல் அறுவடை ஆக ஆக, இரண்டாவது கிஸ்துக்கும் கேடு வந்து விடுகிறது. தனுக்கு கொஞ்சம் சௌகரியம் செய்துகொண்டு சந்தையில் தான் வெள்ளாமைக்குத் தகுந்த விலையைத்தான் தேடுவதற்குள் பாக்கி கிஸ்து கேடுக்களும் பாக்கிகொடுக்கவேண்டிய வாய்தாவும் வந்துவிடுகின்றன. இதன் முடிவென்ன வெனில், அவன் சாவுகாரிடம் போய் பணம் சகாயம் பெற்று பட்டவில்லைகருத் தன்வெள்ளாமையை விற்க வேண்டியவனாகிறான் பட்டணவாசத்தில் இவனுக்கு நேர் பிரதிநிதி போலிருக்கும் கைத்தறி நெசவுதொழிற்காரனைக் கவனிப்போம். லான்காஷைர் விசை நாடாத்தறியால் இவன் நிலை

குலைந்து போனான் என்று சொல்வது ஒரு சம்பிரதாய மாயிருக்கிறது. நான் அதை மறுத்துச் சொல்லவில்லை. ஏதோ சிறிது பாகம் சரியென்றாலும், அநேகமாய் அது சரியென்றே நான் ஒப்புக்கொள்ளுகிறேன். சில தினுசு துணிகளில் இவ்விதமான போட்டிக்கு இடமில்லை. அப்படியிருந்தபோதிலும், கைத்தறி நெசவுகாரன் தான் தொழிலில் விருத்திக்கு வந்து கொண்டிருக்கிறானா? இல்லை. அவன் ஏழையாயிருப்பது உண்மை. அவனுக்கு கைமுதல் கிடையாது. பண்படாச் சரக்குகள், அதாவது நூல், சரிகை, பட்டு முதலியவை வாங்க அவனுக்குப் பணம் வேண்டும். அவன் கடன் வாங்க வேண்டியது அவசியமாகிறது. அக்கடன்களுக்கு வட்டியோ சுமக்க முடியாததாகவே யிருக்கிறதென்றாலும் அவைகளை வாங்கி சமயம்போல அவைகளுக்கு வாரத்திற்கு ஒருமுறை வட்டியும் கொடுக்க வேண்டி நேரிடுகிறது, இது நிமித்தமாக என்ன சம்பவிக்கிறதென்றால், தறியிலிருந்து துணியை அறுத்தெடுத்த உடனே அதை வாங்குவோர் எவரையேனும் தேடி தன் கையிலிருந்து யார் வாங்குவார்களோ வென்று காத்திருந்து எவருக்காவது கேட்ட விலைக்குக் கொடுக்கவேண்டியதா யிருக்கிறது. தாமஸ் ஹுட் என்பவர் எழுதிய "குடுத்துணைப் பாட்டை" இவனும் எடுத்துப் பாடலாம். அப்படிச் செய்வதில் இவன் ஒன்றுக்குப் பத்தாகப் பெருக்கிச் சொல்ல இடமேயில்லை. "நீங்கள் அணிந்திருப்பது சுதேசித் துணிகளல்ல சுதேச உயிர்களே" பருத்திசாகுபடி செய்பவர்களைக் கொண்டு இன்னும் ஒரு உதாரணம்கூட சொல்லலாம். அவர்கள் சாகுபடி செய்யும் பருத்தி பலனுக்கு வரும் வரையில் அவர்களுடைய வறுமை நிமித்தம் அவர்கள் காத்திருக்க முடியாது. அப்படிச்செய்ய அவர்களுக்கு சௌகரிய மிருந்தால் சரக்குக்கு அவர்களுக்குத் தகுந்த விலை கிடைக்கும். பூமியின் பேரில் உண்டாகும் விளைவின் ஆதாரவின்மேல் வெளி நாடுகளில் சரக்கு இறக்குமதி செய்பவர்களிடம் முன் பணத்தை வாங்கி, சந்தை விலையை எதிர் பாராமலே பயிரிடுகிறவர்களுடைய அவசரத்துக்கு தக்கபடி முன்னாடியே விலை பேசி அந்த விலைக்கு இவர்கள் கொடுக்க நேரிடுகிறது. ஆகவே, குடியானவன் பாடு, அவன் தானிய சாகுபடி செய்தாலும் சரி, அல்லது அவன் கைத்தொழிலுக்கேற்ற பண்படாச் சரக்குகளை உற்பத்தி செய்தாலும், நித்திய தரித்திரமும் தீராக்கடனுமாகவே யிருக்கிறது. நகர வாசியான கைத்தொழில் வேலைக்காரன் பாடும் நெசவுகாரன் பாடும் குடியானவன் நிலைமையை விட சௌகரியமானதாகச் சொல்ல முடியாது.

அவர்களை இப்பரிதாப நிலைமையிலிருந்து எவ்விதம் நிவிருத்தி செய்வது? அவர்கள் கடன் வாங்காமல் தீராது. அதில்லாமல் அவர்களுக்கு முடியாது. அதைப்பற்றி அவர்களை ஆக்ஷேபனை செய்வதில் பயனில்லை. அவர்கள் இப்போது கடன்வாங்கி வரும் நிபந்தனைகள் பிரக்கண்டிப்பாயிருக்கின்றன. அவர்கள் நெஞ்சற்றவர் களாயிருப்பது ஆச்சரியமில்லை. ஆகவே அவர்கள் வாழ்நாட்களை விசனத்தோடு கழிப்பதுடன் பாவைபோல் அங்கு



மங்குமோடி ஏதோ தற்காலம் கவலைகெட இராப்போமென்றெண்ணி குடிக்கவும் ஆரம்பித்து விடுகிறார்களேயல்லாது அவர்கள் கையில் பணம் மிஞ்சினதனாலல்ல.

அவர்கள் நிலைமையை சற்று சௌகரியப்படுத்த ஒரே ஒரு வழியுண்டு. அதென்ன வென்றால் அவர்கள் கைத்தொழிலுக்குத் தேவையான முதலை சௌகரியமான வட்டிக்கு வாங்குவதற்கு அநுகூலமான வழிகளைச் செய்து கொடுப்பதே. அதாவது, அவர்கள் உழைப்புக்கு கிடைக்கும் கூலியிலிருந்து ஜீவனத்துக்கு அவசியம் தேவையான தொகையை எடுத்துக்கொண்டு மீதியை கடனுக்கு அசலுக்கும் வட்டிக்கும் செலுத்த சௌகரியம் கொடுப்பதே. தீரா வறுமையையும் அழியாக் கடனையும் தீர்ப்பதற்கு ஆன காரியோபாயம் இதுவே. யூரோப் கண்டத்தில் இந்த கஷ்டத்திற்கு இது மார்க்கமாகவே நிவிருத்தி தேடி, அதனால் அளவற்ற பலன் அடைந்திருக்கிறார்கள். யூரோப்புக்கும் இவ்விடத்திற்கும் ஜனங்களுக்குள் அவ்வளவு வித்தியாசமில்லை. மனப்பூர்வமாக மட்டும் நாம் வேலைசெய்யப் புகுந்தால் நமக்கும் அம்மாதிரியே சித்தி கிடைக்காதென்று நாம் விசனப்பட வேண்டிய தனவசியம்.

பிரதமத்தில், எந்தெந்த விடங்களில் ஐக்கிய நாணயச் சங்கங்களை ஏற்படுத்த சௌகரியங்களுண்டோ அவ்விடங்களில் அவைகளை ஏற்பாடு செய்ய வேண்டும். அவைகள் ஒழுங்காக வேலை செய்து வருமாயின் சமீபத்திலுள்ள ஜனங்களும் அதைப்பற்றி நினைக்க இடமுண்டு. மேலும், அவைகளை ஏற்படுத்தும் முறையும், அவைகள் நடவடிக்கையும் எவ்வளவோ சுலுவாயிருப்பதால் வெகுசீக்கிரத்தில் ராஜ்யத்தில் இச்சங்கங்கள் யதேஷ்டமாகப் பரவும். ராஜ்யக் குடிகளின் ஐசுவரியத்தின் நிலைமை எவ்வளவோ மேன்மைப்படும்.

எவ்விதம் இச்சங்கங்களை ஏற்படுத்தி வேலை செய்கிறது? 1904-ம் வருடத்தில் இச்சட்டத்தை கவர்ன்மெண்டார் பிறப்பித்து இவைகளை ஏற்படுத்தி நடத்தும் பொருட்டு எவ்வளவோ சௌகரியங்களைச் செய்திருக்கிறார்கள். இச்சங்கங்களை ஏற்படுத்தி அவைகள் வேலைக்கு எவ்வளவு தூரம் கவர்ன்மெண்டார் ஒத்தாசையை நியாயமாய் எதிர்பார்க்கக் கூடுமோ அவ்வளவு தூரம் அவர்கள் செய்திருக்கிறார்கள். ஆகவே மேலால் செய்ய வேண்டிய வேலை முழுதும், ஜனங்களில் விவேகமும் நிர்வகிக்கும் திறமையுமுள்ளவர்களான பெரியோர்களால் ஆகவேண்டியது.

துவக்கத்தில் இவ்வேலைசற்று பிரயாசந்தான்; அசாத்தியமென்றேசொல்லக்கூடும். கடன் வேண்டுவோர்களெல்லாம் தங்கள் நாணயத்தை ஒன்று கூட்டி அந்த ஆதாரவின் பேரில் சரச வட்டிக்குப் பணம் கடன் வாங்கிக் கொள்வதே ஐக்கிய நாணயச் சங்கங்களின் உத்தேசம். இவ்வதிசயமான காரியத்தை எவ்விதம் செய்து முடிப்பது. ஒரு கூட்டம் ஏழை ஜனங்கள் ஒன்று சேர்ந்து ஒரு ஐக்கிய நாணயச்சங்கமாக சேருகிறார்கள்.

எல்லாருக்கும் கடன் தேவையாயிருக்கிறது என்றாலும், சங்கத்தில் போட்டுவைப்பதற்கு எவருக்கும் கையில் பணமில்லை. இவர்களுக்கு கடனுக்கு தேவையான பணம் எங்கிருந்து கிடைக்கும். உள்ளூரிலேயே டிபாசிட்டுகள் அதாவது குறித்தகாலங்களில் திருப்பிக்கொடுக்கத் தகுந்த ஊத்துக்களின் பேரில் பணம் வட்டிக்குக் கடன் வாங்கவேண்டுமென்பதே பிரத்யக்ஷத்தில் ஜவாபு. அதெப்படி? வட்டிக்குப் பணம்போடக் கூடியவர்களெங்குமிருப்பது மெய்யே. ஆனால் இச்சங்கங்களில் பணம்போடுவது பந்தோபஸ்தென்றும் அவைகளில் பணம் போட்டுவைத்தால் நஷ்டப்படுவதற்கில்லை என்றும் அவர்களுக்கு தைரியம் சொல்ல வேண்டியிருக்கிறது. பணம் படைத்தவர்களுக்கு எவ்விதம் இந்த நம்பிக்கையை உண்டாக்கி அவர்களை இச்சங்கங்களுக்கு பணம் கடன் கொடுக்கும்படி செய்வது? இச்சங்கங்களில் சேர்ந்திருப்பவர்கள் மட்டும் சமீபத்திலுள்ளவர்களிடையில் நாணயஸ்தர்கள் என்றும் பிரட்டில்லதவர்களென்றும் நம்பிக்கை மட்டுமிருந்தால், தனவான்களுக்கிடையில் இச்சங்கங்களை அபிவிருத்திக்கு கொண்டுவர வேண்டுமென்ற கருத்துள்ளவர் சிலராவது, இச்சங்கங்கள் மெம்பர்களாகச் சேரவாவது, அல்லது தங்கள் பணத்தை இவைகளில் டிபாசிட்டாவது செய்வார்கள். எந்த சங்கத்திலும் துவக்கத்தில் இவ்விஷயத்தில் சற்று கஷ்டம் இருப்பது நிச்சயம். ஒரு சங்கத்தின் நடவடிக்கைகள் ஒழுங்காயிருந்து அதனால் நம்பிக்கை சம்பாதிக்கும் வரை பணக்காரர்கள் தங்கள் பணங்களை அதில் போட பிரியப்படார்கள். ஆரம்பத்தில் கொஞ்சமேனும் முதலில்லாமல் அதன் நடவடிக்கைகளை ரூபிக்கவும் முடியாது. ஆனால், மதறாஸ் சமஸ்தானத்தில் மட்டில், அக்கஷ்டமில்லை. ரிஜிஸ்திரார் சிபார்சு செய்யும் எந்தச் சங்கத்திற்கும் பணம் சஹாயம் செய்ய மதராஸ் சென்ட்றல் நகர பாங்கு தயாராயிருக்கிறது. ஒரு புதுச்சங்கம் செய்யவேண்டியதெல்லாம் என்னவென்றால், அதை நம்பக்கூடியதென்றும், நன்னடக்கையுள்ளவர்களே அதில் மெம்பர்களாகச் சேர்ந்திருக்கிறார்களென்றும், அச்சங்கம் ரிஜிஸ்திராரை திருப்திப்படுத்த வேண்டியது. அப்படிக்கில்லையானால், சங்கம் ஏற்பட்டதாகவும் ஒப்புக்கொள்ளப் படமாட்டாது. அதை ரிஜிஸ்தரும் செய்யப்படமாட்டாது. ஒரு சங்கம்மட்டும் வேலையாரம்பித்து விட்டால் அதை செவ்வையாக நடத்துவதாலும் அதன் நாணயத்தாலும், உள்ளூர் பணக்காரர்களுக்கு அதில் நம்பிக்கையுண்டாகி டிபாசிட்டுகள் உண்டாவதுடன் மேலால் அதற்கு ஜில்லா சென்ட்ரல் நகரபாங்கின் உதவி அவசியமாயிராது. ஏனென்றால், ஒரு சங்கத்தின் கடன் மனுக்களுக்கெல்லாம் தேவையான பணம் முழுவதும் ஊர்க்குள்ளிருந்தே வருகிறதென்பதே ஒரு சங்கம் சரிவர நடத்தப்பட்டு வருகிறதென்பதற்குச் சரியான அத்தாக்ஷியாகும். நன்னடக்கை ஒரு சங்கத்திற்கு ஆஸ்தியென்றும் அதன் ஆதரவின்பேரில் விவஹாரத்திற்குத் தேவையான பணம் கிடைக்குமென்றும் இதனால் வெளிப்படும்.



சங்கத்தின் பணம் முழுவதும் மெம்பர்களுக்குமட்டுமே கடன் கொடுப்பதற்கே உபயோகப்படுகிறது. ஐக்கியநாணயச் சங்கத்திலிருந்து கடன் வாங்குபவனுக்கு அவன் நாணயமே முக்கியமாயிருக்கிறது. இதைத்தவிர வேறு ஆதரவு, சங்கத்து மெம்பர்களில் இன்னும் ஒருவர் அல்லது இரண்டு மெம்பர்களைத் தவிற வேறொன்றும் வேண்டுவதில்லை. இச்சங்கங்களில் மெம்பர்கள் பெரும்பாலும் ஸ்தாவர சொத்து அடமானம் கொடுக்க சாத்தியமில்லாதவர்களாயிருக்கிறார்கள். அதற்குக்காரணம் என்னவென்றால் அவர்களுக்கு அவை கிடையாது. நகரச்சங்கங்களிலோவென்றால், அநேகம் மெம்பர்கள் சர்க்கார் கச்சேரிகளிலும் இதர ஆபீசுகளிலும் குமாஸ்தாக்களாக இருக்கிறார்கள். அதிகமும் இவர்கள் உள்ளூர்க்காரர்களல்ல. ஆகவே இவர்கள் ஸ்தாவரசொத்து ஈடுகாட்ட சாத்தியப்படாது. அவர்களுக்குமட்டும் தேவையாகும்போது தங்கள் சமுசாரங்களுடைய நகைகளை கொதுவை வைக்கவும் அவர்கள் பிரியப்படமாட்டார்கள்.

ஈடு கட்டுவதற்காக ஒருவனுக்கு சொத்து இருந்தாலும் இல்லாவிட்டாலும் பொறுப்புக்கு மாத்திரம் ஏதாவது இல்லாமற்போகவில்லை. அல்லது, நாணயத்திற்கு ஆதாரமாகக் காட்டக்கூடிய ஒருசொத்தை உண்டாக்கக்கூடிய சக்தியுண்டு. அதென்னவென்றால் அவரைத்தெரிந்த எவருக்கும் இவன் நாணயஸ்தன் என்ற மதிப்பேதான். அவனுக்குப் பணம் இருக்காவிட்டாலும் ஸ்தாவர சொத்தில்லாவிட்டாலும், தன் நடவடிக்கைகளில் நாணயமாயிருக்கலாம். விவசாயக்காரர்களுக்கு அவர்கள் கிராமங்களில் நாணயஸ்தர்களென்று நம்பிக்கையுண்டு. இந்தியாவில் ஐக்கிய நாணயத்திற்கு நாணயப் பொறுப்பு ஆதாரமாகும். சற்றேறக்குறைய எல்லாக் கிராமங்களிலும் ஒரு துண்டுக்கடிதம்கூடக் கேழ்க்காமலே கடன் கேழ்ப்பதும் கொடுப்பதும் சஹஜமாயிருக்கிறது. இதற்கெல்லாம் ஆள்பொறுப்பே ஆதாரமாயிருக்கிறது. கிராமாந்தரங்களில் ஒருவொருக்கொருவரைப்பற்றி எல்லாவிவரங்களும் செவ்வையாகத் தெரியுமாதலால் ஆள்பொறுப்பு மிகவும் சிரேஷ்டமாயிருக்கிறது. மேலும் யார் நாணயஸ்தர் யார் அல்லவென்றும் சொல்வதும் எளிது. ஆனால் பட்டண வாசங்களில் ஆள்நாணயம் அவ்வளவு பலமுள்ளதாகச் சொல்லமுடியாது. ஏனெனில், ஜனங்கள் ஒருவருக்கொருவர் தகவலன்னியில் தனித்தனியாகவே குடியிருக்கிறார்கள். ஒரு பாதிபேர் குடியிருக்குமிடங்கள் மறுபாதியாருக்குத் தெரியாது. இந்தமாதிரி நபர் பொறுப்பு அவ்வளவு பலமுள்ளதாக இருக்காது. ஆனால், மெம்பர்களைச் சேர்த்துக்கொள்வதில் மட்டும் ஜாக்கிரதையாக இருந்தால் ஐக்கியநாணய லாவாதேவிக்கு நபர் நாணயத்தை ஏன் ஆதாரமாக வைத்துக்கொள்ளக்கூடாது என்பதற்கு காரணமேயில்லை. யூரோப் கண்டத்தில் அநேகம் சங்கங்களில் கடன்கள் நபர் ஜாமீன் பேரிலேயே பட்வாடா செய்யப்படுகிறது. இந்த பரஸ்பர நம்பிக்கையானது மிகவும் பந்தோபஸ்துள்ளதென்று ஐக்கிய நாணயச் சங்கங்களில் அநுஷ்டானத்தில் தெரிய வருகிறது. அதனால், சொல்லும்படிக்கு நஷ்டம் ஏற்படவில்லை.

ஆனால், யூரோப்புக்கு சரிவந்த நடவடிக்கை இந்நாட்டிற்கு சரிப்படாதென்று இவ்விஷயத்தில் ஆக்ஷேபனை செய்தல் கூடும். ஆனால் அப்படி சந்தேகிக்க இடமில்லை. லாவாதேவியில் நாணயம், மேல் இங்கிலாந்திலிருப்பதைவிட இந்நாட்டில் குறைவில்லை என்பது நிச்சயமே. நம் நாட்டில் தபால்காரன் மணி ஆர்டர்களை வீட்டிற்குக் கொண்டுவந்து பணம் பட்வாடா செய்துவிட்டுப் போகிறான். இவ்வேற்பாட்டை இங்கிலாந்தில் அநுஷ்டானத்திற்கு கொண்டு வருவதற்கு கவர்ன்மெண்டார் பின்வாங்குகிறதாக சமாசாரம். நம்நாட்டுத் தபாற்காரர் அந்தஸ்தில் மிகத் தாழ்ந்தவர்களே. ஆகையினால், இந்நாட்டில் நாணயம் எவ்வளவும் சிரேஷ்டமாயிருப்பதற்குப் போதுமான அத்தாக்ஷியம். ஆனால் இதைப்பற்றி யோசனைசெய்ய வேண்டியதில்லை. 1904-ம் ௵த்தியச் சட்டம் ஏற்பட்டபிறகு இந்நாட்டில் பற்பல இடங்களிலும் சங்கங்கள் நூற்றுக்கணக்காக ஏற்பட்டிருக்கின்றன. இதுவரையில் எந்தக்கடனும் வசூலாகாமலிருந்து அது காரணத்தில் நஷ்டமேற்பட்டதாக இது வரையில் கேள்விப்படவில்லை.

நான் இருக்கும் பட்டணத்தில் (மதுரை) ஏற்பட்ட முதல் இரண்டு பாங்கு நிர்வாகத்தில் எனக்கு சம்பந்தமுண்டு. ஒன்று, ஹிந்து சாசுவத நிதி, லிமிடெட் ஏற்பட்டு 16 வருஷங்களாகிறது, இது மைலாபூர் பண்டைப் போன்றது. மற்றது நகரச் சங்கம், லிமிடெட், இது மூன்று வருஷங்களுக்கு முன் 1904-ம் ௵த்திய சட்டப்படி ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கிறது. கம்பெனி ஆக்டுபடி ரிஜிஸ்தரானதும், முந்திக் குறிப்பிட்ட சங்கம் மற்றதைபோல் மெம்பர்களுக்கு மட்டும் கடன் கொடுக்கிறது. ஆனால் அதில் நபர் ஜாமீன் பேரில் கடன் கொடுக்கிறதில்லை. பிந்தியதிலோ வென்றால் நபர் ஜாமீன் பேரிலல்லாமல் வேறெந்த ஜவாபின்மேலும் கடன் கொடுக்கப் படுகிறதில்லை. இதனால் பண்டைப்போன்ற சங்கம் எவ்வளவுக்கு பிரபலப்பட வேண்டுமோ அவ்வளவு பிரபலப்படவில்லை. ஆனால் பண்டோ மிகவும் செவ்வையாகவே நடத்தப்பட்டு வருகிறது. இது ஒப்புக்கொள்ளத் தகுந்த விஷயம். ஆதாரக்கடன் ஒன்று பட்வாடாவாக சாதாரணமாக ஆறு மாதகாலம் பிடிக்கிறது. தவிரவும் கடனுக்கு ஆதாரவை ஒப்புக்கொள்ளு முன் நடக்கவேண்டிய பீடிகைகள் அநந்த மிருக்கின்றன. அதற்கு காலதாமதமும் யதேஷ்டமாக ஏற்படுகிறது. மேலும், அதுகளில் சுவான்தார் சம்பந்தமாய் நடக்கவேண்டிய விசாரணைகளும். மேலும் சிலசமயம், பண்டில் சட்ட விஷயங்களை விசாரணைசெய்ய ஏற்பட்டிருப்பவர்களுடைய புத்தி சாதுர்யத்தால் தலைமுறை தலைமுறையாயுண்டு, பாட்டன் தகப்பன், பிள்ளை முதலான யாவரும் தமதென்று எண்ணி அநுபவித்து வந்த வீடுகள் சட்டப்படி அவருடையது அல்லவென்றும் கண்டுபிடிக்க நேரிடுகிறது. இதனால் கடன் மனுதாரர்களுக்கு துக்கத்துக்கு காரணமாயிருக்கிறது. இதன் முடிவென்ன வென்றால் ஆறுமாதத்திற்கு பின் தனக்கு நேரிடும் செலவை இன்றைக்கு எதிர்பார்க்க முடியாவிட்டால் கடனுக்காக பண்டுக்கு மனுசெய்து



கொள்வதில் பயனில்லை. அப்படிச் செய்தாலும் கிடைப்பது நிச்சயமில்லை என்பது மட்டுமேயல்ல. தனதென்று எண்ணியிருந்த சொத்தும் தனதல்லவென்று சொல்லக்கூட இடமுண்டாகிறது இதனால், எவ்வளவோ காலமாக மெம்பர்களிடமிருந்து டிபாசிட்டு ஏற்றுக்கொள்ளப்படாமல் நின்று போயிருந்தபோதிலும், சில காலமாக பண்டுப்பணம், எத்தனையோ ஆயிரம் ரூபாய் வீணாக (வட்டியன்னியில்) கட்டுக் கடையாயிருக்கிறது, இவ்விதம் பண்டு அபாய ஸ்திதிக்கு வந்த பிறகு நபர் ஜாமீன் பேரில் கடன் கொடுக்க ஆலோசனை யுண்டாகிறது.

மற்ற சங்கம், நகரபாங்கு முன் சொன்னபடி, நபர் ஜாமீன் பேரிலல்லாது கடன் கொடுக்கிறதில்லை. இந்த பாங்கு வேலை துடங்கி மூன்று வருஷமாகிறது. அதற்கு கைமுதலே யில்லை. அதன் லாவாதேவிக்கு வேண்டிய தொகைமுழுவதும் மெம்பர்களிடமிருந்தாவது இதரர்களிடமிருந்தாவது டிபாசிட்டுமூலம் வாங்கப்படுகிறது. ஆரம்பமுதற்கொண்டே இந்த பாங்குக்கு டிபாசிட்டுகள் கிடைப்பதில் கஷ்டமிருக்கவில்லை. எப்பொழுதும் 100-க்கு $6\frac{1}{4}$-க்கு அதிகம் டிபாசிட்டுகளுக்கு வட்டிகொடுக்கவேண்டி யிருக்கவேயில்லை. டிபாசிட்டுகளுக்கு அதிகமும் 100-க்கு 5—வட்டிதானிருந்தது. முதல் வருஷத்தில் கடன் கொடுத்த தொகை ரூ. 18,000, இரண்டாவது வருஷம் சற்றுகுறைய ரூ. 23,000மும், மூன்றுவது வருஷம் அதிலும் அதிகமாயிருந்தது. இம்மூன்று வருஷகாலத்தில் கெடுமீறின கடன் ஒன்றுமேயிருக்கவில்லை என்னும் அம்சத்தையே நான் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இரண்டாவது வருஷத்தில் அந்த பாங்கிலும் திருவல்லிக்கேணியில் நடைபெறுவது போல கூட்டுச்சீட்டுகளை ஆரம்பித்து அவைகளில் 10 சீட்டுக்களும் நடத்தப்பட்டு வருகின்றன. இவைகளெல்லாம் நபர் நாணயத்தின் பேரிலேயே நடந்து வருகின்றன. நடைமுதல் கணக்குகளும் சேவிங்ஸ் பாங்கு கணக்குகளும் ஏற்பட்டு இவை எல்லாம் விருத்தியாய் வருகின்றன.

நபர் நாணயத்தையே பிரதானமாகக் கொண்டு ஐக்கிய நாணயச் சங்கங்களை ஏற்பாடு செய்யலாமென்பதற்கு அத்தாக்ஷி இன்னும் வேண்டுமானால் மதுரைக்கு 7-மைல் அருகாமையிலுள்ள ஒத்தக்கடை கிராம நாணயச்சங்கத்தை உதாரணமாகச் சொல்லலாம். இது ஒரு கிராமபாங்கு ஆகவே அதன் மெம்பர்கள் பொறுப்பு வரையறுக்கப்படவில்லை. அது ஏற்பட்டு இப்போது ஒரு வருஷத்திற் கதிகமாகிறது. அதற்கு மூலதிரவியம் பேருக்கு மாத்திரம் கொஞ்சமுண்டு. மதராஸ் சென்ட்றல் பாங்கிலிருந்து பெற்ற கடன் தொகை ரூ. 1000 வைத்துக்கொண்டு வேலை துடங்கியது. ஊருக்குள்ளாகவே அதற்கு வெகுசீக்கிரத்தில் கடன் கிடைத்து நபர் ஜாமீன் பேரிலேயே தற்போது ரூ. 5,000 மெம்பர்களுக்குக் கடன் கொடுத்திருக்கிறது.

இந்த கிராமபாங்கில் பரீக்ஷார்த்தமாக ஒருவித நடவடிக்கை நடத்திவரப்படுகிறது. அதை இவிடத்தில் பிரஸ்தாபிக்கவேண்டிய கருத்தென்னவென்றால், அந்த பரீக்ஷையில் உண்டாகும் ஜயத்தின் நிமித்தமாக இன்னும் வெகு சங்கதிகள் யோசனைக்கு வரக்கூடியதாக விருக்கிறது. அவ்விஷயமென்னவெனில், கூட்டாகக் கடன்வாங்குவதே யாகும். இந்த கிராமபாங்கில் எந்த மெம்பரும் தாம் தனியே ரூ. 500-க்கு மேற்பட்டுகடன் வாங்கக்கூடாது. ஆனால் ஏதேனும் ஒரு பொது காரியத்துக்காக ஏழுமெம்பர்கள் கூட்டாக சேருவார்களானால் அவர்கள் கூட்டு ஜவாபின்பேரில் ரூ. 5,000 வரைக்கும் கடன்வாங்கலாம். இந்த வரம்பின் கீழ் ஏழுமெம்பர்கள் கடன் வாங்கி மதுரை முனிசிபால் குப்பை டிபோ ஒன்றை ஏலத்திலெடுத்தார்கள். அதன்விலை சில்லறை விலையைவிட சலீசாக இருந்தது. இக்கடனுக்கு வட்டியும் கொடுத்து ரூ. 700 லாபமும் இவர்களுக்கு கிடைத்தது. ஆனால், இந்த லாபத்தை சொந்தமாக உபயோகிக்க அவர்களுக்கு உத்தேசமில்லை. இப்பணத்தைக் கொண்டு பாங்குக்கு ஒரு கட்டிடம் கட்டுவதே அவர்கள் உத்தேசம். ஆடுமாட்டுக்கு பருத்திவிதை, மேல்தரமான விவசாயக்கருவிகள், பலவிதமான உரம், முதலிய சாமான்களைக் கூட்டாக மொத்த விலைக்கு வாங்கும் விஷயத்திலும் கூட இப்பரீக்ஷையை மறுபடியும் செய்ய உத்தேசமுண்டு.

இவ்விதம்பரீக்ஷையை சிம்லா ஐக்கிய மஹாநாட்டில் பிரஸ்தாபிக்கும்போது Mr. ராமசந்திரராவ் சொன்னதாவது:—எல்லாருக்குமே யல்லாமல் ஒருகூட்டம் மெம்பர்களுக்குமட்டும் தேவைப்படுகிற ஒரு காரியத்தை முடிக்க இந்த ஏற்பாட்டில் "ஒரு நிலை சம்பாதிப்பதே இதன்உத்தேசம். இதனால் இதரமெம்பர்களுடைய பொறுப்பை உபயோகிக்காமல் சங்கத்தின் ரக்ஷைக்குள்பட்டு சரசமாய் நாணயம் பலப்படுகிறது. இதனால் காலம், சந்தர்ப்பம் முதலியவைகளால் விசேஷ பாதகங்களொன்றும் உண்டாவதில்லை. இவ்விதம் ஒன்றுகூடும் கோஷ்டிகளுக்குச் சேருகிற ஆள்களின் மொத்தம் வித்தியாசப் படுத்தலாம். அப்படிச் செய்வதில் நடவடிக்கைக்கு மிகவும் சௌகரியமுண்டு."

அம்மஹாநாட்டில் இந்நடவடிக்கையை ஒப்புக் கொண்டார்கள்.

ஆள் பொறுப்பின் மேல் ஐக்கியநாணயச் சங்கங்கள் ஏழைகளுக்குச் செய்யக்கூடிய பிரயோஜனத்திற்கு அளவேயில்லை. மதராவில் "ரிக்ஷா" வண்டிக்காரர்கள் நூற்றுக் கணக்காயும் நமது நகரங்களில் ஜட்காவண்டி, மாட்டு வண்டி, இவைகளை ஓட்டுகிறவர்கள், ஆயிரக் கணக்காயும் அநேகரும் உண்டு. ஆனால் அவர்களில் அநேகருக்கு சொந்தம் வண்டிகள் கிடையாது. ஆனால் முதலாளிகளிடமிருந்து இவ்வண்டிகளை வாடகைக்குவாங்கி தினசரி ஏதோ தொகை செலுத்திவருகிறார்கள். இத்தொகையானது வண்டி கொள் முதலுக்கு 100 க்கு வருஷத்திற்கு 300 முதல் 400 வரை வட்டி வீதத்தை கொடுக்கிறது. இவ்வேழைகளுக்கு தாங்களே சொந்த வண்டிகளை செய்து



கொள்ள சரசவட்டிக்கு சிறு தொகைகள் கடன் கிடைக்குமானால், அவர்களை வாழ்நாள்வரைக் காப்பாற்றியதாகும். ஏனெனில், வாடகைக்கு அவர்கள் வண்டி யோட்டுவதற்காக கொடுக்கும் வட்டி லாபம் அநியாயமாயிருக்கிறது.

நபர் நாணயப் பொறுப்பின்மேல் வேறுவித வேலைகளும் சொல்லலாம். ஆனால், அதிக உதாரணங்களனாவசியம். இவ்விஷயத்தைப்பற்றி சற்றும் கவனிப்போருக்கு எவ்வளவோ தோன்றலாம்.

கனவான்களே, சற்று விஸ்தாரமான என்கதை முடிவுக்கு வந்துவிட்டது. நான் நினைத்ததைவிட அதிக விஸ்தாரமாய்விட்டது. வேறு இடங்களைப்போலவே இந்நாட்டிலும் ஐக்கியநாணயச் சங்கங்களை நபர் ஜாமீன்பேரில் நடத்துவதற்கு தகுதியான ஆதாரமாகுமென்று நான் எடுத்துக்காட்டியதாக எண்ணுகிறேன். இதர நாடுகளின் அநுபவத்தின்பேரில் அவசியமென்று ஏற்பட்ட ஜாக்கிரதைகளை செய்துகொண்டால் நஷ்டத்திற்கிடையே இராது.

இவ்வியாசத்தைப் படிக்கும்படி என்னை வேண்டிக் கேட்டுக்கொண்டதற்காக இக்கூட்டுறவினர் திருநாளை ஏற்படுத்திய கனவான்களுக்கு நான்மீண்டும் வந்தனமளிப்பேனாக. சமயத்துக்குத் தகுந்த யோக்கியதையுள்ள ஒரு வியாசம் என்னால் எழுதமுடியவில்லையென்றும், நான் நேரில் இன்று உங்களுடன் கூடஇருக்க சாத்தியப்படாததுபற்றியும் எனக்கு அதிக விசனமுண்டு. என் மனம் உங்களுடன்கூடவே இருக்கிறதென்று நான் உறுதியாய்ச் சொல்லுவேன். இக்கூட்டுறவினர் தினம் பிரதிவருஷமும் நடைபெறும் ஒரு பிரசித்தமான மஹோற்சவ மாகுமென்றும், அதன் கொண்டாட்டத்தில் அதிக சிரத்தை யேற்படுமென்றும், அதனால் பிரயோஜன மதிகமாகுமென்றும் லக்ஷக்கணக்கான இந்நாட்டு வேலைக்காரர்களுக்கு ஐக்கிய நாணயத்தால் க்ஷேமம் உண்டாகுவதற்கு) இது அடிக்கடி ஒரு தூண்டுதலாவதற் கிடமாயிருக்குமென்றும் நான் நம்புகிறேன்.

மதுரை அ. ராஜாராமய்யர்.

# காசியிலிருக்கும் ஐக்கிய நாணயச் சங்கங்கள்.

ஐக்கிய இயக்கம் காசியில் தலையெடுத்து வளர்ந்துவருகிறது. கவர்ன்மெண்டார் ஆதரவின்கீழ் இரண்டு வருஷத்திற்கு முன்னமேயே ஒரு டிஸ்டிரிக்டு பாங்கு ஸ்தாபிக்கப்பட்டது. அந்த பாங்கின் முக்கிய கருத்து என்னவென்றால், தங்களுக்கு வேண்டிய முதலை தாங்களே சம்பாதித்துக் கொள்ளமுடியாத அந்த ஜில்லாவிலிருக்கும் சிறு கிராமச்சங்கங்களுக்கும் நகரச்சங்கங்களுக்கும் பணம் உதவிசெய்வதுதான். இந்த டிஸ்டிரிக்ட் பாங்கின் பாதுகாப்பின்கீழ் நல்ல பலனைக்கொடுக்கிற ரசமான பல சங்கங்கள் கிளம்பியிருக்கின்றன.

இப்போது அப்பேர்ப்பட்ட சங்கங்கள் 20-க்குமேல் இருந்து வேலைசெய்து வருகின்றன. அவைகளில் சிலவற்றின் பெயரை இங்கு சொன்னால் உபயோகமாயிருக்கலாம்:—

காசிப்பட்டணத்திலிருப்பவை.

பழம் பயிரிடுவோர்களின் சங்கம் நெ. 1.
மேற்படி ,, 2.
மேற்படி ,, 3.
மேற்படி ,, 4.
மேற்படி ,, 5.
மேற்படி ,, 6.
மேற்படி ,, 7.
தோல் பதனிடுவோர்களின் சங்கம் நெ. 1.
மேற்படி ,, 2.
மேற்படி ,, 3.
செருப்பு தைப்போர்களின் சங்கம்.
பித்தளைப்பாத்திரம் செய்வோர்களின் சங்கம்.
வசிக்கத்தேவையான சாமான் செய்வோர்களின் சங்கம்.
கஸ்தட்டி பின்னுவோர்களின் சங்கம்.
எக்காவண்டி யோட்டுவோர்களின் சங்கம்.

பாராகோன் ஜில்லாவிலிருப்பவை.

தின்பண்டங்கள் செய்வோர்களின் சங்கம்.
பேலாரி கிராமச்சங்கம்.
மார்வாரி கிராமச்சங்கம்.
லாலபுரம் கிராமச்சங்கம்.
ராம்நகர் கிராமச்சங்கம்.
ஷாபுரம் கிராமச்சங்கம்.



பழம் உற்பத்தி செய்வோர்களும் தோல் பதனிடுவோர்களும் பல சங்கங்களாய் பிரிந்திருக்கிறார்கள். அதேனென்றால், ஒவ்வொரு சங்கமும் ஒருவர்க்கொருவர் நன்றாய் அறிந்து அவர்களுக்காக அதிற்சேர்ந்தவர்கள் கூட்டாய் ஜவாபு இருக்கக்கூடிய மனிதர்களை மாத்திரம் மெம்பராய்ச் சேர்த்துக்கொண்டிருக்கிறது. ஒரு மோஹல்லாவில் ஒருசங்கம் ஸ்தாபிப்பதுதான் வழக்கம். ஏனென்றால் அப்போதுதான் ஐக்கியம் மெம்பர்களுக்குள் பலப்பட்டிருக்கும்.

பழம் பயிரிடுவோர்கள் காசியிலும் அதன் சுற்றுப்பாகத்திலிருக்கும் பழத்தோட்டங்களை குத்தகைக்குவாங்கி தாங்கள் உற்பத்திசெய்யும் பழங்களை காசியிலாவது அல்லது கல்கத்தாவுக்கு ஏற்றுமதிசெய்து அங்காவது விற்கிறார்கள். அவர்கள் பழத்தில் மிகுதியும் வியாபாரம் செய்கிறவர்கள். வெளிவர்த்தக இடங்களில் வியாபாரம் செய்து நல்ல லாபத்தை சம்பாதிக்கிறார்கள். அவர்கள் குத்தகையில் அகப்படாத சிறப்புப்பெற்ற வேறு பழத்தோட்டம் காசியில் கிடையாது. காசி எல்லாவிதமான பழங்களுக்கும் பேர்போனது. அவைகளில் முக்கியமானவை மாம்பழங்கள், பிளம்ஸுகள், மாக்ரோபாலாஸ் முதலியவை.

தோற்பதனிடுவோர்கள் தோலைவாங்கி சுத்தப்படுத்தி தண்ணீர் இறைக்க உதவுகிற சால்களாக செய்கிறார்கள். அவை கங்கை நதிசம வெளிகளில் தண்ணீர் இறைக்க அதிகமாய் வேண்டியிருப்பதினால் அங்கே விற்கப்படுகின்றன. செருப்பு தைப்போர்க்கு பதனிட்ட தோல்களாகவும் விற்கப்படுகின்றன. மேலே தோற் பதனிடுவோர்களின் சங்கங்கள் மூன்று என்று குறிக்கப்பட்டிருக்கிறது. அவை மூன்றும் மூன்றுமோஹல்லாவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

"ஆந்தாபலிஸ்" என்று சொல்லப்படுகிற எங்கும் பிரசித்திபெற்ற நாட்டுச்செருப்புகளைச்செய்கிற சக்கிலிகள் 'செருப்பு தைப்போர்களின் சங்கம்' என்று மேலே குறிப்பிட்ட சங்கத்தில் சேர்ந்திருக்கிறார்கள். அவர்கள் தைக்கும் மேற்சொன்ன செருப்புகள் பலமுள்ளனவாய் உழைப்புத்தாங்கக் கூடியவையா யிருப்பதினாலே சுதேச ராணுவ வீரர்களும் போலிஸாரும், இதரர்களும் அவைகளை விருப்பமாய் ஏற்று விசேஷமாய் உபயோகிக்கிறார்கள்.

தோற் பதனிடுவோர்களின் சங்கங்களிலும் செருப்பு தைப்போர் சங்கங்களிலும் சேர்ந்திருக்கும் மெம்பர்கள் எல்லாம் சக்கிலி ஜாதியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் நல்ல வேலையாளிகள் என்று தெரிந்துகொள்ள நமது நேயர்களில் அநேகர் உவப்பார்கள். அவர்கள் ஜன சமூகத்தில் தாங்கள் அநுபவிக்கும் குறைகளை நிவர்த்திசெய்ய விடாமுயற்சியுடன் வேலைசெய்து வருகிறார்கள்.

லாகிரிய பானங்களை குடிப்பதைவிட்டு விட்டார்கள். மாம்ச பக்ஷணம் செய்வதையும் அவர்களில் பெரும் பாலார் விட்டுவிட்டு சைவவூண் சாப்பிடுறவர்களா யிருக்கிறார்கள். இந்துக்களில் உயர்ந்த ஜாதியார் தாழ்ந்த ஜாதியார்களை உயர்த்தவேண்டிய தங்கள் கடமையைசெய்யத் தவறியபோது தாழ்ந்த ஜாதியாராகிய அவர்கள் சுயஉதவி, கூட்டுறவு இவைகளைக்கொண்டு தங்களை ஜன சமூகத்தில் தங்களை சமமாக்கிக்கொள்ள தாங்களே முன்வந்திருக்கிறார்கள்.

காசி பித்தளை வேலைசெய்யும் முயற்சிக்குப் பேர்போனது. பித்தளை வேலை செய்வோர்களின் சங்கத்திலுள்ள மெம்பர்கள் சாதாரணமாய் இந்துக்கள் வீட்டில் வழங்கும் பாத்திரங்கள் செய்கிறவர்கள். அவைகளில் பல பாத்திரங்கள் செய்வதற்கு பித்தளைத்தகடுகள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

நாற்காலி மேஜை முதலிய சாமான் செய்கிறவர்களுக்கு இந்த இடத்தில் "டர்காஸ்" என்று பெயர். அவர்கள் மூங்கில், பிரம்பு இவைகளைக் கொண்டு வேலை செய்கிறார்கள். பாய்களும் படுதாக்களும் (தட்டிகளும்), மூங்கிலினாலும் பிரம்பினாலும் நாற்காலிகளும் கோச்சுகளும் செய்து அவைகளுக்கு எல்லாவிதமான ரிப்பேர்களும் செய்வார்கள்.

(கஸ் கஸ்) வெட்டிவேர் தட்டி செய்வோர்கள் உபயோககரமானவர்கள். வெயிற்காலத்தில் நாம் சௌக்கியத்திற்காக உபயோகப்படுத்துகிற பற்பல விதமான சாமான்கள் அவர்களால் தான் நமக்குக் கிடைக்கிறது.

எக்காவண்டி யோட்டுபவர்களும் பணத்திலும் நடத்தையிலும் எளியோராயிருக்கிறார்கள். கூட்டுறவினால் அவர்கள் நிலைமையும் முன்னுக்கு வரக்கூடும்.

இம்மட்டும் நகரங்களிலுள்ள தொழிற் முயற்சி செய்வோர்க்கு செய்திருப்பன. விவசாயிகளும் ஐக்கிய இயக்கத்தினின்று விடுபடவில்லை. விவசாயிகளுக்காக ஏற்பட்ட ஒரு சங்கம் ஷாபூர் சங்கம். மிகவும் நன்றாய் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. அதனாலேயே அது யுனைடட் பிராவின்ஸிலுள்ள எல்லா சங்கங்களிலும் மிகச்சிறந்தது. அதன் நிர்வகிப்பு மதிக்கக்கூடிய ஜன சம்மத கோட்பாட்டை உட்கொண்டது. அதன் மெம்பர்களுக்கு அந்த சங்கம் சிநேகிதன் போலவும் மதிக்கப்படுகிறது. அப்படி மதிக்கப்படுவது நிரம்பவும் சரி. அது தனது மெம்பர்களுக்கு கடன்கொடுக்க சௌகரியத்தைச் செய்து கொடுப்பதும் தவிர அவர்களுடைய நன்மையை உத்தேசித்து பல முயற்சிகளை கைக்கொண்டிருக்கிறது. உதாரணமாக, மெம்பர்களுககுத் உண்டாகும் சச்சரவுகளை நீக்கவும் அவர்களுக்குள் சிநேக பான்மையை மறுபடியும் உண்டாக்கவும் அடிக்கடி மகா சபையைக் கூட்டுகிறது. க்ஷாமம் உண்டானபோது, மெம்பர்களுக்குள் அது பணம் வசூல்செய்து கிராமத்திலுள்ள ஏழை ஜனங்களை மூன்றுமாதம் காப்பாற்றிற்று. கிராமத்தில் புதுப் பயிர்களை உண்டாக்கும் உத்தேசமாக அநேக விதமான விதைகளை விதைத்து பரிக்ஷை செய்து கொண்டுவருகிறது. நிலக்கடலை இப்போது அதன் முயற்சியினால் வயலில் செடியாயிருக்கிறது. கிராமாந்தரங்களில் ஜனங்களுக்கு நோய்களுக்கு வைத்தியம் செய்ய உதவுதலும் கீழ்த்தரபடிப்புக் கற்றுக் கொடுத்தலும் மிகவும் முக்கியமானவை. இந்தச்சங்கம் அவைகளை வெகு ஊக்கத்துடன் பற்றியிருக்கிறது. டிஸ்டிரிக்ட் போர்ட்டின் அன்புள்ள உதவியைக் கொண்டு சாதாரணமாய் வேண்டிய மருந்துகளை அதுவாங்கி வைத்திருக்கிறது. கிராமப்பிள்ளைகளுக்கு ஆரம்பப்படிப்பைக் கற்றுக்கொடுக்கும் பொருட்டு ஒரு உபாத்தியாயரை அந்த சங்கம் நியமித்திருக்கிறது. மெம்பர்களுக்குள் பணம் வசூல்செய்து அந்த பணத்திலிருந்து அந்த உபாத்தியாயரின் சம்பளம் கொடுபடுகிறது. கிராமக்குளத்திற்கு ரிப்பேர் செய்யும்பொருட்டு மெம்பர்கள் மிகவும் ஊக்கமாய் பேசிவருகிறார்கள். ஆனால் அந்த வேலைக்கு ரூ. 500 செல்லும் என்று மதிப்பிட்டு இருப்பதால் அது எடுபட்டு முடிவடைவதற்கு வழிகாணோம். இருந்தபோதிலும் மெம்பர்கள் தினே தினே விர்த்திக்குவர நோக்கங் கொண்டவர்கள். ஒருவர்க் கொருவர் கூட்டுறவு செய்வதனால் பெரிய காரியங்களையும் சாதிக்கலாம் என்பதை அறிந்திருப்பதாக காணப்படுகிறார்கள். மெம்பர்களில் பெரும்பாலார் ஏழை விவசாயிகள் என்பதைக் கவனிக்க வேண்டும்.

மேல்வரைந்தன 1910 ௵ ஜனவரி மாசத்திய புத்தகம் நெ. 7 'கோவாபரேடர்' என்னும் பத்திரிகையிலிருந்து எடுத்தவை.

# அடிக்கடி இன்ஸ்பெக்ஷன் செய்வது அவசியம்.

சேலம் ஜில்லாவிலுள்ள 117 முத்துநாயக்கன்பட்டி ரூரல் கிரெடிட் சொஸைட்டியை வருஷமத்தியில் இன்ஸ்பெக்ஷன் செய்தபோது ரிஜிஸ்திரார் அவர்கள் கீழ்கண்ட குறைகளைக் கண்டார்:—

(a) சங்கம் ஒரே ரீதியாய் வேலைசெய்யாமல் ஒருசமயம் சுறுசுறுப்பாய் வேலை செய்தும் மற்ற சமயங்களில் வேலை செய்யாமலும் மற்றும் ஒருசமயம் வேலைசெய்தும் வந்தது;

(b) பெருந்தொகைகளாக கடன்கள் கொடுக்கப்பட்டன;

(c) கடன்கள் ஜாமீன்வாதியாய்க் கொடுபடுவது ஆதரிக்கப்படவில்லை.

(d) ஆறுமாதகாலத்தில் சங்கத்தில் புதுமெம்பர்களாய்ச் சேர்ந்தவர்கள் மூவர் தான்;

(e) டிபாசிட்டுகளே பெறப்படவில்லை.

மேற்சொன்ன குறைகளை எடுத்துக்காண்பித்து ஒரு கடிதம் சங்கத்துக்கு அனுப்பப்பட்டது. அந்தக்கடிதத்தில் காபியொன்று சேலம் டிஸ்டிரிக்ட் பாங்கு செக்ரிடெரிக்கு அனுப்பப்பட்டது. அதற்கு மறுமொழியாய் டிஸ்டிரிக்ட் பாங்கு காரியதரிசி கீழ்வருமாறு பதில் எழுதினார்:—

"1910௵ பிப்ரவரீ௴ 8௳ பிறந்த Reg. No. 233 Gl. of 1910 நெம்பர் உள்ள தாங்கள் 117 நெ. மூத்துநாய்க்கன்பட்டி பிரசிடெண்டுக்கு எழுதிய கடிதத்தின் நகல் ஒன்று எனக்குக் கிடைத்தது. இந்தவாரத்தில் இந்தசங்கத்தை நானும் இன்ஸ்பெக்ஷன் செய்தேன். தாங்கள் அந்த சங்கத்தின் குறைகளாக சொன்னவற்றை நானும் நன்றாக அறிகிறேன். தகும்என்றும் சொல்லுகிறேன். இந்தசங்கமாத்திர மல்லாமல் எல்லாச்சங்கங்களும் தங்கள் ரிமார்க்குகளை பொன்போல பாவிக்கக்கூடிய விதிகளென்று ஒப்புக்கொண்டு அவைகளைப் பின்பற்றுதல் தகுதியாகும்.

கிராமாந்தர ஜனங்களை மிகநுட்பமாய் அறிந்தநான் தங்கள் கடிதம்போன்ற ஒரு கடிதம் அனுபவத்தில் மிகுந்தபயனை உண்டாக்கமாட்டாதென்று நினைக்கிறேன். அப்படிச்சொல்ல நேரிடுகிறதினாலே என்னை மன்னிக்கவேண்டும். ஏன் நான் அப்படி நினைக்கவேண்டியிருக்கிறதென்று உடனே விபரமாய்ச் சொல்லிவிடுகிறேன். முக்கியமாய் ஓமலூர்டிவிஷனில் பிரசிடெண்டுகளும் செக்ரிடெரிகளும் அநேகமாய் ஏழைகள். ஜனசமூக நன்மையை மேற்கொண்ட உயர்ந்த எண்ணங்களில் ஈடுபடக்கூடியவர்களல்ல. அக்கிராசனாதிபதியோ அல்லது காரியதரிசியோ மேற்குறிப்பிட்ட கடிதம் போன்ற கடிதம் வந்தபோது அதைப்பெரும்பாலும் பெட்டியில் வைத்துவிடுவார். அதனோடு அந்தக்கடிதத்துக்கு முடிவுதான். டிஸ்டிரிக்ட்பாங்கில் வாங்கிய பெருந்தொகை கொண்ட 2 அல்லது 3 கடன்களோடு பெரிய மனிதர்களாயிருக்கிற சிலர் தாங்கள்

கடன் எடுத்துக்கொண்டு தங்கள் அவசரத்தை நிவர்த்திசெய்து கொண்டார்கள். பின்புயென்னத்திற்கு அவர்கள் சங்கத்தில் வேலைகளை அதிகமாக்கவேண்டும்? நடவடிக்கைகள் இம்மாதிரியிருப்பதால், சங்கத்தை இன்ஸ்பெக்ஷன்செய்யும் உத்தியோகஸ்தர்தான் ஏழைகளின் கதியைக் கவனித்து அவர்களுக்கு நன்மைசெய்யக் கூடியவர்கள். இன்ஸ்பெக்டர் அவர் கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தராயிருந்தாலும் சரி அல்லது அவ்வுத்தியோகப்பற்றில்லாதவரா யிருந்தாலும் சரி, சங்கத்துக்கு அடிக்கடி போகவேண்டும். பைல்பண்ணாத கடிதங்களிலிருந்து மேற்சொன்ன கடிதத்தை எடுக்கவேண்டும். அதன்பின் பஞ்சாயத்து மெம்பர்களையும் சாதாரண மெம்பர்கள் எத்தனைபெயர்க் கூடக்கூடுமோ அவர்களையும்கூட்டி தங்கள் கடிதங்களைப்படித்து அவற்றிற்கு விஸ்தாரமாய் அருத்தம்சொல்லி அவர்கள் மனதில் நன்றாய்ப்பதியும்படி திருப்பிதிருப்பிச் சொல்லவேண்டும். பஞ்சாயத்து மெம்பர்கள் அவர்கள் தெரிந்தெடுத்த ஏஜண்டுகள்தான் என்றும் அப்படியிருப்பதினாலே சங்கதின் வியவகாரங்களை கிராமஅவசரத்தை அநுசரித்து விர்த்திசெய்யக் கடமைப்பட்டவர்கள் என்றும் கிராமத்தாருக்குச் சொல்லவேண்டும். மேற்சொன்ன முத்துநாய்க்கன்பட்டி சங்கவிஷயத்தில், 1909௵ ஆகஸ்டு௴ 13௳முதல் 1910௵ ஜனவரி௴ 28௳வரையில் அந்தசங்கம் இன்ஸ்பெக்ஷன் செய்யப்படவில்லை. ஆகஸ்டுமாததில் செய்யப்பட்ட இன்ஸ்பெக்ஷன் அவசியமாய் செய்தேதீரவேண்டியிருந்ததென்று நினைக்கிறேன். ஏனெனில் வருஷாந்தர ஆடிட்டுக்காக அது செய்யப்பட்டது. பஞ்சாயத்து மெம்பர்களும் சாதாரண மெம்பர்களில் 100க்கு 90 பெயர்களும் இருப்புவேலை செய்பவர்கள். அவர்கள் செய்யவேண்டியதைக்குறித்து அவர்களுக்கு அடிக்கடி போதிக்காவிட்டால், அவர்கள் எப்படி சங்கத்தைத் திறமையாய் நிர்வகிக்கக்கூடும்? நாட்டுச்சங்கங்களில் மேற்சொன்னதைப்போல அடிக்கடி கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தாராலாவது இதரர்களாலாவது இன்ஸ்பெக்ஷன் செய்யப்படாதவை பலஉண்டு. சற்றேறக்குறைய 20 சங்கங்கள்போல நான் இன்ஸ்பெக்ஷன்செய்து இப்போதுதான் திரும்பினேன். அதனால் நான்கொண்ட அபிப்பிராயம் என்னவென்றால் சங்கங்கள் போதுமான அளவுஅடிக்கடி போதிக்கப்படவில்லை. உதாரணமாக, சென்ற ஞாயிற்றுக்கிழமை நான்போன ஒருசங்கத்தில், கடன்வாங்கினவர்களுடைய எவ்வித ஆதாரவுமில்லாத பாண்டுகளின்பேரில் மூன்றுகடன்கள் கொடுத்திருக்கக்கண்டேன். இந்த விஷயத்தைக்குறித்து இன்ஸ்பெக்டருக்கு ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன். மற்றொரு சங்கத்தில் டிஸ்டிரிக்ட் பாங்கிலிருந்து ஆறுநாளைக்கு முன் அனுப்பிய ஒருபாதி கர்ரென்ஸி நோட்டுகளை அக்கிராசனாதிபதி தபாலாபிசிலிருந்து பெற்றுக்கொள்ளவில்லை. அதற்குக்காரணம் அக்கறையில்லாததுதான். நோட்டுகளின் முதல்பாதி வந்து சேர்ந்ததாக அந்த சங்கத்திலிருந்து இன்னும் எனக்கு சங்கதி எட்டவில்லை. தாங்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்து கிஸ்திகட்ட வைத்திருந்த பணங்களை பங்குத்தொகைகளாக செலுத்திவிட்டு கடன்களுக்காக ஏழைக் குடியானவர்கள் கூக்குரலிட்டுக்கொண்டிருக்க அக்கிராசனாதிபதி கிராம தபாலாபீசில் வந்திருக்கும் ரிஜிஸடர்கடிதத்தைப் பெற்றுக்கொள்ள சோம்பலாயிருக்கிறார். கோளூர், வீரக்கல்பூதூர், பொட்டனேரி நல்லகவுண்டன்பட்டி, இந்தசங்கங்களுக்கு 10 நாளைக்கும் அதற்குமுன்னமேயும் அனுப்பிவைத்த பத்திர நக்கல்கள் ரிஜிஸ்தர் செய்யப்படாமல் இன்னும் இருக்கின்றன. இந்த கிராமங்களுக்கு நானபோகிறபோது ஜனங்கள் பணத்துக்காக வேண்டி கேட்டுக் கொள்ளுகிறார்கள். அநேக கிராமங்களிலுள்ள பஞ்சாயத்தார்கள் டிஸ்ரிக்டிட்டுபாங்கு கொடுக்கும் கடன்களுக்கு நாள் கணக்கில்லாமல், மாதங்களின் பேரில் வட்டி கணக்கிடுகிறதென்று அறியமாட்டார்கள். இந்த ஜனங்களுக்கு இனிவரப்போகும் மகாநாட்டில் இவைகளை குறித்துகற்பிக்கலாமென்று இருக்கிறேன். என்து



இனிஸ்பெக்ஷனில் நான் ஒருவழியை கைக்கொண்டிருக்கிறேன். அது மிக ஆச்சரியகரமாய் வேலைசெய்திருக்கிறது. பஞ்சாயத்து மெம்பர்களோடுகூட சாதாரண மெம்பர்களில் எத்தனை பெயர் வரக்கூடுமோ அவ்வளவு பெயரையும் சேர்த்து அவர்களோடு பேச ஆரம்பிக்கிறேன். தங்கள் அபிப்பிராயத்தை அனுசரித்து பஞ்சாயத்தார் நடக்கவேண்டியவர்களென்று ஏழை ஜனங்களின் மனதில் உறுத்தும்படி சொல்ல நான் தவறுகிறதில்லை, அவர்களுக்கு இருக்கும் சக்தியை இன்னதென்று எடுத்துக்காட்டிய பிறகு ஒன்றுமறியாத இந்த ரயத்துகள் மறு இனிஸ்பெக்ஷன் வரையலுமாவது பஞ்சாயத்தாரை ஒழுங்காய் நடக்க பார்ப்பாரென்று நம்பலாம். பட்டண வாசங்களை பார்க்கிலும், கிராமாந்தரங்களில் பொது ஜன அபிப்பிராயம் மிக்கவலிவுகொண்டது. இந்த விதமாய் கிராமத்தாருடன் நேராய் பேசினதனால் பயங்கொண்ட கிராமத்தானுக்கூட சில ஞாயமான குறைபாட்டுகளை டிஸ்டிரிக்ட்பாங்கின் கவனத்திற்கு கொண்டுவந்தான். இந்த சங்கங்களை டிஸ்திரிட் பாங்கு இனிஸ்பெக்ஷன் செய்வதென்றால் அது சாதாரணமாய் வருஷத்திற்கு இரண்டு அல்லது மூன்று தடவைக்கு அதிகப்படாது. இந்த கிராம சங்கங்களை சோதித்து புத்திபுகட்டி காரியங்களை நடத்திக் காட்டுவது உங்களுடைய இனிஸ்பெக்டர்களால் ஆகவேண்டியிருக்கிறது.

1910 வருஷம் பிப்ரவரி௴ 14தேதி துலசம்பட்டி அக்கிராசனாதிபதி வீட்டின் தெருத்திண்ணையில் நெடுநேரம் பேசிமுடிந்த பின்பு 70 வயதுள்ள ஒருகிழவன் என்னை தூர அழைத்துக்கொண்டுபோய் தான் 100 ரூபாய் வைத்துக்கொண்டிருப்பதாகவும் அதில் இப்போது 20 ரூபாய் பரிக்ஷார்த்தமாக சங்கத்தில் டிபாசிட்டு செய்வதாகவும் சொன்னான். இதுமாதிரியாகவே கூடியிருந்த கிராமத்தார்களுடன் ஓமலூர் இனிஸ்பெக்டர் பேசியானஉடன் வனவாசியில் வயது சென்ற ஒருபெண்பால் ரூபா 250 டிபாசிட்டாக கொடுத்தாள்.

3. ம-ா-ா-ஸ்ரீ டி. ஆதிநாராயண செட்டியார் அவர்கள் மேற்குறித்த விதமாய் வெளியிட்ட அபிப்பிராயத்தை ரிஜிஸ்தரார் ஒப்புக்கொண்டு அவருடைய கடிதத்தின் நகல் ஒன்றை எல்லா இனிஸ்பெக்டர்களுக்கும் அனுப்பினால் ஐக்கிய இயக்கத்தின் நோக்கங்களை சங்கங்கள் நன்றாய் அறியும் வண்ணம் இனிஸ்பெக்டர்கள் அவைகளுக்கு போதிப்பதில் கஷ்டம் எடுத்துக்கொள்ள பின்வாங்க மாட்டார்களென்று ரிஜிஸ்தரார் பூர்த்தியாய் நம்புகிறார்கள்.

4. ஒரு வருஷம்போல சிலகாலம் வேலைசெய்த சங்கங்கள் உள்ளூரில் மிகுந்திருக்கும் பணங்களை சேகரிக்க சக்திபெற்று செண்டரல் சங்கங்களிலிருந்து அதிகமாய் கடன்பெற எதிர்பாராமலிருக்க வேண்டும். இந்த வழியில் சங்கத்தின் வேலை ஒன்றுமில்லாமலிருந்தால் அது பஞ்சாயத்தார் அக்கறையில்லாதவர்களா யிருக்கிறார்கள். அல்லது அவர்கள் பஞ்சாயத்து வேலைக்கு தகுதியற்றவர்களா யிருக்கிறார்களென்பது அறிகுறி. ஒரு பஞ்சாயத்து மெம்பர் கிராமத்தை சுற்றிவந்து டிபாசிட் வைப்பதின் அனுகூலங்களையும் ஐக்கிய சங்கங்களிலிருக்கும் பந்தோபஸ்துகளையும். விவரித்து ஜனங்களுக்கு சொல்லி 1 ரூபா ஆனாலும் டிபாசிட்டாக வசூல்செய்தால் சங்கம், சிக்கனத்துக்கு நேர்த்தியான இடம் ஆகிறதோடு காலக்கிரமத்தில் தனக்கு வேண்டிய பணத்தை தானே உதவி கூடும் மேலும் சங்கத்தில் அல்ப வட்டிக்கு பணம் பெற்றுக்கொண்டு உபயோககரமான காரியங்களுக்கு அதை செலவழிக்க கடமைப்பட்டுள்ள மெம்பர்கள, இதர இடங்களில் கடன் பெற்றால் அவர்கள் இழக்ககூடிய அதிக வட்டியை இப்போதுயிருந்து அவர்கள் சங்கத்தில் டிபாசிட் செய்வது சாத்தியமென்று எதிர்பார்ப்பது அதிகமல்ல.

5. இரண்டு வருஷங்களுக்கு மேற்பட்ட சங்கங்கள் விஷயத்தில் அவைகள் சென்டிரல் பாங்கிலிருந்து வாங்கிய கடன்கள் மொத்தத்தில், வட்டியை அல்லாமல், அசலில், 10-ல் ஒருபாகத்தை திருப்பிக்கொடுக்க வேண்டியதென்று இனி ரிஜிஸ்திரார் எதிர்பார்க்கிறார். குறிப்பிட்ட தவணைக்குள் வட்டியையும் அசலின் பாகமும், செலுத்தாட்டால் கடனுக்கு தவணையை நீட்டிக்க சிபார்ஸ் செய்யப்பட மாட்டாது. அப்பேர்ட்ட சங்கங்கள் புது கடன்களுக்கு விண்ணப்பம் செய்துகொள்ளும் போது பழய கடனின் தவணை தொகைக்காக புதுகடன் உபயோகபடாதபடிக்கு புதுகடன் சாங்கிஷன் செய்வதற்கு முன்னமே பழய கடனுக்காக அந்த வருஷத்தின் தவணைத்தொகை வாஸ்தவத்தில் செலுத்தபட்டதாவென்றும் ரிஜிஸ்திரார் கவனிப்பார். மேலும் கடன் விண்ணப்ப தேதியில் ஏற்கனவே பாக்கியிருக்கும் கடன்களோடு அப்போது கேட்கும் தொகையும் சேர்த்து மொத்தத்தில் 100-த்துக்கு 10-க்கு குறையாமல், சங்கம் டிபாஸிட் சம்பாதித்து இருந்தால் ஒழிய புது கடன்கள் சாங்கிஷன் செய்யப்படமாட்டா.

# கூட்டுறவினால் எருசப்ளை செய்தல்.

விதை, எரு, விவசாயக் கருவிபோன்ற விவசாய முயற்சிக்கு வேண்டியனவற்றை வாங்க, கூட்டுக் கடன்கள் பெறுவதற்கு ஒத்தக்கடை கிராம நாணயச்சங்கத்தின் விதிகள் இடங்கொடுக்கின்றன. சங்கம் வேலை ஆரம்பித்த சில வாரங்களுக்கெல்லாம் அதன் மெம்பர்களில் 7 பெயர் மதுரை முனிசிபல் குப்பை டிபோ மூன்றில் ஒன்றை வாங்கும் பொருட்டு ரூ. 500 கடன் கேட்டார்கள். அந்த கடன் கொடுத்தால் சங்கத்தின் மெம்பர்களின் வயலுக்கு மேற்சொன்ன தெரு குப்பைகளைக் கொண்டு சேர்ப்பதாயும் ஒப்புக்கொண்டார்கள்.

அந்த டிபோவை ரூ 2,705க்கு வாங்கினார்கள். இந்தத் தொகையில் ரூ. 676-8-0 உடனே டிபாசிட்டு செய்யும்படி நேர்ந்தது. மிகுதியை மாதம் 1 க்கு ரூ. 225-8-0 வீதம் 9 மாதத்தல் கட்டவேண்டி யிருந்தது. குப்பைகளை மெம்பர்களுக்கு விற்றதில் 2 மீத்திற்குள் சங்கத்தின் கடன் ரூ. 500 யும் திரும்பிச்செலுத்தி விடுவது அவர்களுக்கு சாத்தியமாயிற்று.

குப்பைகளை விற்றதில் வந்த விற்பனைத்தொகை ரூ. 3,700. அதில் மெம்பர்களுக்கு விற்றதில் வசூலானது ரூ. 2,000. மிகுந்த குப்பையை இதரர்களுக்குக் கொடுத்ததில் வந்தது ரூ. 1,700. மற்ற இரண்டு டிப்போக்களில் ரூபாய் ஒன்றுக்கு முறையே 2 வண்டியும் 2½ வண்டியும் விற்றன. சங்கத்தின் டிபோவில், கொஞ்ச நாள் வரையில் ரூ. 1 க்கு 3 வண்டியும், லாபம் அதிகமாய்க் கிடைக்குமென்று தெரிந்த அதன் பின் 3½ வண்டியும் விற்கப்பட்டன.

இதற்குச் சிப்பந்தி செலவு ரூ. 350 க்கு மேற் போகவில்லை. ஆகவே கிடைத்த நிகரலாபம் ரூ. 650. இந்த தொகையில் ரூ. 600 ஒத்தக்கடையில் சங்கத்தின் உபயோகத்திற்கு ஒரு கட்டடம் பொருட்டு சங்கத்திற்கு கொடுக்கப் பட்டிருக்கிறது. கட்டடத்திற்கு வேண்டியமனை ஏற்கனவே வாங்கியாய் விட்டது. இன்னும் ஒரு வாரத்தில் அந்த கட்டடம் ஆரம்பித்து நடந்தேறும்.

மதுரைபோன்ற பெரிய நகரத்தில் தெருக்குப்பைகள் நெல்வயல்களுக்கு நேர்த்தியான எருவாகும். இந்த எருவின் விலை படிப்படியாய் உயர்ந்துகொண்டே போவதால் கூட்டுறவு செய்யாவிட்டால் சிறு நிலச்சுவான் தாரர்களாகிய பல பெயருக்கு இந்த எரு சம்பாதித்தல் முடியாததாகும்.

எருக்குப்பையில் உபயோகப்படக் கூடிய பாகத்தை மாத்திரம் பிரித்து மற்றதை தள்ளிவிட உபாயம் சொல்லிக் கொடுக்கும் ஒரு நிபுணன் சங்கத்திற்கு கிடைப்பானால் பிரயோசனகரமாயிருக்கும். ஏனென்றால் எருக்குப்பை மொத்தத்தையும் கொண்டுபோக ரயத்துகள் வண்டிவாடகை அதிகம் கொடுக்கவேண்டி யிருக்கிறது.

எருக்குப்பையில் முக்கியபாகங்களை மாத்திரம் பிரித்து எடுத்துக் கொண்டால் இப்போதைய எருவில் 10 வண்டி அடங்கிய சாரத்திற்காக ஒரு வண்டி போதுமானதாயிருக்கும். இந்த விஷயத்தில் சங்கத்தில் தெளிவு வேண்டியிருக்கிறது.

மதுரை
7 டிசம்பர் 1909.

கே. ராமசாமி அய்யர்.

# உதவிசெய்ய நேரும் சமயங்கள்.

ரிக்ஷா வண்டியிழுக்கும் கூலிக்காரர்கள் வண்டிகளின் சொந்தக்காரர்களிடமிருந்து நாள் 1-க்கு 4 அணா வீதம் கொடுப்பதாக வண்டிகளை வாடகைக்குப் பெறுவதாக தெரிகிறது. ஒரு ரிக்ஷாவண்டியின் விலை ரூ. 50-க்கு மேற்படாது. அந்த தொகைக்குக் கொடுக்கும் லாபம் வண்டியின் தேய்வுக்குக் கழித்தது போக 100-க்கு 150 ஆகிறது. ஒரே இடத்தில் வேலைசெய்பவர்களாயும் ஒருவரையொருவர் நன்றாயறிந்தவர்களாயும் இருக்கிற 12-அல்லது அதற்கு மேற்பட்ட ரிக்ஷா இழுக்கும் கூலிகள் ஒன்று சேர்ந்து இப்போது ஒரு சங்கம் ஸ்தாபிக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அந்தக் கூலிகளுக்கு வண்டி வாங்கிக் கொடுப்பதில் சங்கம் ரூ. 600 அட்வான்ஸாக அவர்களுக்கு கொடுத்ததாகவும் அந்த தொகைக்கு வருஷம் 1-க்கு 100-க்கு $9\frac{3}{8}$ வீதம் வட்டி கணக்கிடுவதாகவும், இப்போது இந்தக் கூலிகள் வண்டியின் சொந்தக்காரர்களுக்கு கொடுப்பது போலவே சங்கத்துக்கும் நாள் 1-க்கு 4 அணா கொடுப்பதாகவும் ஏற்பாடு செய்தால் 1 வருஷத்துக்குள் அந்தக்கூலிகள் அந்தவண்டிகளுக்கு சொந்தக்காரர்களாகி விடுவார்கள். அவர்கள் அதற்குப்பின் செலுத்தும்பணம அவர்கள் கையிருப்புத் தொகையாகும். இந்தச்சங்கம் சித்தி பெற்று நிறைவேறுவதற்கு அவர்களில் ஒருவன் தவறுவானானால் எல்லாருக்கும் உண்டாகும் நஷ்டத்தைக்குறித்து அடிக்கடி எடுத்துப்புகட்ட வேண்டும். எழுதப்படிக்கத் தெரிந்த ஒரு மனிதன் தினந்தோறும் சாயங்காலவேளையில் வண்டிகளை ஏற்றுக்கொள்ளுவதோடு பிரதிகூலியினிடத்தும் தவறாமல் 4 அணா வசூலித்துக்கொள்ள வேண்டும். மேலும் அந்தகூலி தன் சம்பாத்தியத்திலிருந்து நாலணாவுக்கு மேல் கூடுமானால் அட்வான்ஸாக பணம் கொடுக்க அவர் பார்க்க வேண்டும். லாகிரி பானக்கடைக்குப் போகாமலிருக்க அவனுக்கு புத்திமதி சொல்லவேண்டும். இந்தக காரியத்தை அந்த ஏழை கூலியினிமித்தம் செய்வதற்கு யாரேனும் ஒருவராவது இச்சென்னையில் இருக்கிறாரா? அப்படி இருந்தால் மிகுந்த நன்மை செய்வதற்கு இதோ ஓர் சமயம் வாய்த்திருக்கிறது.

மேற்சொன்ன விதமாகவே, தெரு மூலைகளில் வறுத்த தானியத்தை விற்கும் ஸ்திரீகள் நாள் 1-க்கு ரூ 1-க்கு 4-அணாவீதம் வட்டிக்கொடுப்பதாக தெரிய வருகிறது. அந்த வட்டிவீதம் 100-க்கு 90,25 ஆகிறது! அவர்களில் சிலரை ஒன்று சேர்த்து அந்த ஒற்றுமை (கூட்டம்) யின்பலத்தைக்கொண்டு அவர்களுக்கு பணம் அட்வான்ஸ் ஏன் செய்யக்கூடாது. ஐந்து நாளய காலத்துக்குள் கடன் பைசலாகி அதற்குப்பின் சேர்த்தபணம் வியாபாரம் நடவாத நாள்களுக்கும் மழையிருந்த நாள்களுக்கும் உதவும். சரியானவழியில் ஆரம்பித்தால் நஷ்டம் வரஏதுவில்லை. ஏனெனில் ஒரு வாரத்துக்குள் கடன் அடைபட்டுப்போகும். அதன் பின் அந்த சங்கம் ஏழைப் பெண்களின் சேவிங்ஸ்பாங்காயிருக்கும் ஏழைப் பெண்ணின் பொருட்டு இந்தக் காரியத்தைச் செய்ய முன் வருபவர் சென்னைப்பட்டணத்தில் ஒருவரேனும் உண்டா?

இப்படியே மார்க்கட்டின் அருகிலுள்ள காய்கறி விற்போர் முதலியவர்களுக்கும் ஐக்கிய நாணயச்சங்க ஆக்ட் ஜனங்கள் நல்வாழ்வடைய ஹேதுவானது. அது பிரயோசனப்படுமாறு வேலை செய்யப்படுவதற்கு ஏழைகளின் நிலைமையை அறிந்து தங்களது என்று கொண்டு அதை மீட்க வழிதேடும் பலமனிதர்களில் சகாயம் வேண்டும். அந்த மனிதர்கள் தங்கள் பணத்தை அதன்பொருட்டு செலவழிக்கவேண்டாம். தங்கள் அவகாசத்தில் சிறிது பொழுதை ஏழைகளின் காரியங்களின் நிமித்தம் செலவழிக்க வேண்டும். அவகாசமுள்ள சென்னைப்பட்டணத்திலிருக்கும் கனவான்கள் இச்சமயத்தில் முன்வருவார்களா?

# குறிப்புகள்.

இனிஸ்பெக்டர்களுக்கும், சங்கங்களுக்கும் சர்க்குலர் உத்தரவுகள் அப்போதைக் கப்போது அனுப்பப்படுகின்றன. அவைகள் துண்டுக் கடிதங்களில் எழுதி அனுப்பப் படுகிறதினால் போக்கடிந்து போவதைத் தடுப்பதற்கும், அவைகளை அடிக்கடி எடுத்துப் பார்ப்பதற்கும் சௌகரியம் உண்டுபண்ணும் பொருட்டு புல்லடீன் பத்திரிகையில் மறுபடியும் அச்சுப் போடப்படுகிறது. அவைகள் சங்கங்களுக்குச் சம்பந்தப் படும்பொழுது சர்க்குலர் உத்தரவுகளென்றும், இன்ஸ்பெக்டர்களுக்குச் சம்பந்தப் படுகிற பொழுது டிபார்ட்மெண்டல் உத்தரவுகளென்றும் சொல்லப்படுகிறது. உத்தரவுகள் வரிசைக் கிரமமாக நெம்பர் கொடுக்கப்படுகிறது.

2. இந்தியாவிலுள்ள சமாசாரப் பத்திரிகைகளை கொஞ்சநாளாக வாசித்து வரும் எவரும், ஐக்கிய நாணய சங்கங்களின் விஷயம் எங்கும் பரவி வருகிறதென்று அறிவார்கள். பன்னிரண்டு மாதத்துக்கு முன்னமே, அந்த சங்கங்களுக்கு ஒரு செல்வாக்குள்ள ஆரம்பம் செய்யப்பட்டு அந்த எண்ணமானது, பிரக்கியாதியான கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களால், பரவச் செய்யப்பட்டிருக்கிறது. அவைகளின் ஒரு பெரிய பிற்கால விருத்தியை எதிர்பார்க்கப் படுகிறது. அவைகள் முக்கியமாக விவசாயத் தொழிலாளிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் இந்த தேசத்திய ஜனத்தொகையால் மூன்றில் இரண்டு பங்காக இருக்கிறார்கள். விவசாயத்துக்கு, ஒரு புதிய ஆயுதத்தைக் கொடுப்பவைகளாக, அவைகள் இருக்கின்றன. லண்டன் சர்வகலாசாலையைச் சேர்ந்த பண்டிதராகிய லீஸ் ஸ்மித் என்பவர் அவைகளை விருத்தி செய்வதில், தற்கால பிராபல்லியவானாக இருக்கிறதை நாம் அறிகிறோம். இவர் கொஞ்சநாளைக்குமுன் கவர்ன்மெண்டாரின் வேண்டுகோளின் பேரில் பம்பாய்க்கு வர்த்தகம் சிக்கனம் இவைகளின் சம்பந்தமான பிரசங்கங்கள் செய்வதற்குப்போயிருந்தார். இவர் இந்தியாவானது விவசாயிகளினுடைய நிலமென்று சொல்லுகிறார். ஐக்கிய நாணயச் சங்கங்கள் அவர்களுடைய காரியங்களுக்கு அதிக ஒத்ததென்றும் ஐக்கிய இயக்கம் ஆரம்ப கஷ்டமும் ஜாதி வித்தியாசமுமின்றி பரவி வருகிறதென்றும் சொல்லுகிறார். ஆனால் சங்கங்கள் வெகு ஸ்வல்பந்தானிருக்கிறதென்று கண்டித்துச் சொல்லுகிறார். ஆனால் அவைகள் குழந்தைப் பருவத்தைப் அடைந்திருப்பதால் சென்ற பன்னிரண்டு மாதத்தினுடைய பலனை நோக்குகையில் ஐக்கிய இயக்கமானது பிற்காலத்தில் விர்த்திகாத்தை அடைய போதுமான மார்க்கமுண்டென்று சொல்லுகிறார். சங்கங்கள் ஜனங்களுடைய பொருள்களை விர்த்திசெய்வதில் ஒத்தாசை

செய்வதல்லாமல் அவைகளினுடைய சன்மார்க்கவழிகள் இதுவரையில் அமைப்பு பெருத ஜனக் கூட்டங்களுக்கு உயர்வடையும் குறிகளைக் காண்பிக்கிறது.

மேல்சொன்ன விஷயம் 1909-ம் வருஷம் பிப்ரவரிமாதம் 8-ம் தேதியுள்ள குவாபோரேடிவ் நியூஸ் என்னும் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

3. குண்டூர் ஜில்லா நரசராவ்பேட்டு தாலுகா 182-நெம்பர் வைதனு ஐக்கிய நாணயச் சங்கத்தின் கணக்குகளை பார்வையிட்டு ஐக்கிய நாணயச் சங்கங்களின் டெப்டிகலெக்டர் அவர்கள் 1910-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 22-ம் தேதியில் கீழ் குறித்தவாறு எழுதுகிறார்.

"சங்கமானது ஏழை பறையர்களையும் சக்கிலிகளையும் அங்கத்தினர்களாகச் சேர்த்துக்கொண்டு வருகின்றது. ஆகையால் இந்த சங்கம் யாருக்கு ஏற்பட்டதோ அவர்களுக்கு அதாவது ஏழைகளுக்கு ஒத்தாசை செய்வதற்கு ஏற்பட்ட கருத்தை நிறைவேற்றி வருகிறது. கொடுத்த அநேக கடன்கள் ரூபாய் 10-முதல் ரூபாய் 25-வரையில் ஏற்பட்டிருக்கின்றன. சங்கம் ஆரம்பித்தது முதல் கொடுபட்ட 83-கடன்களில் ஒருகடன் முழுவதும் திருப்பிச் செலுத்தப் பட்டது. மற்ற 82-கடன்கள் அவைகளுக்கு தவணை முடிவாகாததால் பாக்கியா யிருக்கின்றன. ஜனங்கள் ஐக்கிய நாணயச் சங்கங்களின் நன்மைகளை உணர்ந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். பஞ்சாயத்து மெம்பர்கள் வேலைகளில் அக்கரை எடுத்துக் கொள்ளுகிறார்கள். இன்னும் பிரயத்தனப்பட்டு அதிக மெம்பர்களைச் சேர்த்துக் கொள்ளும்படிக் கும் உள்ளூர் டிபாசிட்டுகள் வாங்கும் படிக்கும் பஞ்சாயத்தார்களுக்கு சொல்லப்பட்டிருக்கிறது. வடகிழக்குப் பருவ மழை தவறிப் பயிர்கள் சரியான பலிதத்தை கொடாததினால் சங்கம் இதுவரையில் யாதொரு டிபாசிட்டையும் அடையவில்லை. மொத்தத்தில் சங்கம் நல்லவேலை செய்வதாக வாக்களித்திருக்கிறது.

4. திருவல்லிக்கேணி நகர் ஐக்கியசங்கத்தின் ஆதரவின் கீழ் 1908-ம் வருஷம் ஏப்பிரல்மாதம் 11-ம்தேதியில் கூட்டுறவினர்களின் 2-ம்நாள் கொண்டாட்டம் நடத்தப்பட்டது. சில வெளிஜில்லா சங்கங்களிலிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். மிஸ்டர் கே. பி. ராமநாதஅய்யர் அவர்களின் வரவேற்பு பிரசங்கம் வாசிக்கப்பட்டது. மிஸ்டர் வி. எஸ். ராமசாமி சாஸ்திரி அவர்கள் B.A., B.L., இந்தராஜதானியில் 'ஐக்கிய நாணய விருத்தி' என்னும் வியாசம் வாசித்தார். கோயம்பத்தூர் மிஸ்டர் சி. என். கிருஷ்ணசாமி அய்யர் M.A., L.T., ஐக்கிய ஸம்பந்தமானதொரு வியாசத்தை எழுதி அனுப்பினர். உத்திரமல்லூர் ஓ. எம். வெங்கடநாத அய்யங்கார் கிராமச்சங்கவிஷயமாக இன்னொரிடத்தில் பிரசுரம் செய்திருக்கிற வியாசத்தை வாசித்தார். மதுரை வெ. [illegible]ராம அய்யர் 'ஐக்கியத்திற்கு அஸ்திவாரம் நபர் நாணயம்' என்னும் வியாசத்தை எழுதி அனுப்பினர். சங்கத்தின் அக்கிராசனாதிபதியான மிஸ்டர் டி. கே. அனுமந்தராவ் B.A., L.T., அவர்கள் ஒரு பிரசங்கஞ்செய்தார்.



பின்பு வழக்கப்படி வந்தனோபசாரம் தந்ததின்பேரில் சபை கலைந்தது. மேல் நடவடிக்கைகளெல்லாம் ஒரு நேர்த்தியான துண்டுப் பத்திரிகைகளில் அச்சிடப்பட்டு திருவல்லிக்கேணி சங்கத்தில் கொடுக்கப்படுகின்றன. அவைகள் இவ்விராஜதானியிலுள்ள எல்லாக் கூட்டுறவினர்களும் ஜாக்கிரதையோடு வாசிக்கத்தகுதியானவை.

5. 1909—10-ம்வருஷத்திய ரிபோர்ட்டின் கடைசியில் 25-வது நெம்பர் சேலம் நகர ஐக்கிய சங்கத்தின் காரியதரிசி கீழ்க்குறித்தவாறு எழுதுகிறார்:—

"சிலருடைய கட்டாயமான ஆக்ஷேபனையிலும், அனுதரவான காலத்தில் வேலை ஆரம்பஞ்செய்யப்பட்டு பண லேவாதேவிச் சங்கங்கள் சொற்பமாக இராத ஒருபட்டணத்தில் இந்தசங்கம் பண லேவாதேவியில் முதன்மையாக முன்வந்திருக்கிற நல்ல அதிர்ஷ்டத்தைப் பெற்றிருக்கிற விஷயம் கவனிப்பதற்கு விருத்திகரமானதாக விருக்கிறது.

"என்னுடன்கூட வேலைசெய்கிற உத்தியோகஸ்தர்களன்றியில் இன்னும் இருக்கப்பட்ட எவர்களுக்காக எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன். அந்த மெம்பர்களுடையவும் டிபாசிட்டர்களுடையவும் கூட்டுறவு இல்லாமலிருந்தால் இந்தவெற்றி அடைந்திருக்க முடியாது. சங்கத்தின் வேலைப்பாடுகள் போதுமானவலாயில் அதிகப்பட்டுப் போயிருக்கிறது. சீட்டு பண்டு டிபாசிட்டுகளும், சேவிங்ஸ் டிபாசிட்டுகளும் ஏற்பாடு செய்யப்படுவதனால் சங்கத்தின்வேலை இன்னும் அதிகமாக விருத்தியாக வேண்டியிருக்கிறது. சேவிங்ஸ் டிபாசிட்டுகளுக்கு அதிகமான காலமும், பொறுமையும், காருண்யமும் வேண்டியிருக்கும். இனி சங்கம் கௌரவ நிர்வாகத்தின்கீழ் இருக்கமுடியாதென்று நான் பயப்படுகிறேன். மாதம் 1-க்கு ரூபா 25 முதல் வருஷம் ஒன்றுக்கு ஒரு ரூபாய்வீதம் 30 வரையில் உயர்ந்துகொண்டுபோகும் சம்பளத்தில் ஒரு ஜவாப்தாரியான மானேஜர் ஒருவர், இப்பொழுது சங்கத்துக்கு இருக்கும்மாதிரியாக வேலை நடந்து வரவேண்டுமானால், இருக்க வேண்டியது அவசியமென்று நான் அபிப்பிராயப்படுகிறேன். கடன்களின் வட்டிவீதம், கடன்களுக்காக ஏற்படுகிற அதிக பாரங்களுக்குப் பர்த்திசெய்வதற்கு, சங்கத்துக்கு ஷேர் கட்டணத்தொகை வசூல் இல்லாததினால், வேண்டுமானவரையில் டிபாசிட்டுகளைப்பெற மெம்பர்கள் முயலவேண்டுமென்று நான் மெம்பர்களின்மனதில் நன்றாகப் பதியும்படி எடுத்துச்சொல்லுகிறேன். இது ஒரு ஐக்கியசங்கமாதலால் இந்தவேலையைச் செய்யும்படி மெம்பர்களை முயலச்சொல்லுவதில் நான் அளவுகடந்து பேசவில்லையென்று நான் நிச்சயமாக இருக்கிறேன். டிபாசிட்டுகள் பெறுவதற்கு அநேக வழிகள் உண்டு. அவைகள் அதில்சேர்ந்தவர் நன்மையை அடையாத அவ்வளவு சொல்பமானவைகளாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

6. ஈஜிப்துதேசத்து பாங்குகளானவை குடிகளுக்கு நேராக சம்மந்தப்பட்ட ஒரு பெரியபாங்காக இருக்கிறது. குடியானவனைக் கடனின்று மீட்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாயுள்ள சங்கமாக இருக்கிறது. சர்க்கார் சகாயத்தோடாவது சகாயமின்றியாவது நடத்தப்படுகிற ஒரு பெரிய பாங்கானது வாஸ்தவத்தில் குடியானவனுக்குச் சகாயம்செய்ய முடியாது என்பதும் பயனற்றது என்பதும், 1910ஷத்திய ஈஜிப்து தேசத்தின் அரசிறைக்கணக்கில், பணஉதவியிலாகா ஆலோசனைக் கர்த்தர் எழுதிய கீழ்க்கண்டவிஷயங்களினால் நன்குபுலப்படும். தவணைதவறிய பகுதிக்கடன்களின் எண்ணிக்கைகளின் அதிகத்தாலும், கடன்களைநியாயப்படி வசூலிக்க எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளாலும் கடன்வாங்கிய தொகைகளைச் சரியானவழிகளில் உபயோகிக்காததாலும் இந்தியாவிலுள்ள ஐக்கியநாணயச் சங்கங்கள் பெற்றிருக்கிற பலன்களை இந்தபாங்கு அடையவில்லை. இந்தமாதிரி பாங்கிலும் ஸ்தாபிக்க விரும்பும் விஷயம் ஐக்கிய நாணயச் சங்கம்தான்.

"1907-ம் வருஷத்தில் பணவிஷயத்தில் நேரிட்ட கஷ்டத்தினால் கிராமஜனங்களுக்கு நேரிட்ட சம்பவத்தாலும் 1908-ம்ஷத்திய சொற்பமாசூல் பலிதத்தினாலும், விவசாய பாங்கானது விவசாயிகளுக்குக் கொடுத்த கடன்களை இந்தவருஷத்தில் வசூலிப்பதில் கொஞ்சம் கஷ்டத்தை யடைந்திருக்கிறது. கடன்களை வசூல்செய்வதில் பாங்கானது நியாயப்படி தாவா செய்வதற்கு கட்டாயப்படுத்தப்பட்ட விஷயம் கண்டித்துப் பேசப்படுகிறது. பெருத்த ஜனசங்கியையுடைய கடனாளிகளுடைய, அறியாமைத் தனத்தையும் ஏழ்மைத்தனத்தையும் யோசித்து, நியாயமானவும் சரியானவுமான கடன்காரர்களின்பேரில் சட்டப்படி தாவாசெய்வது சங்கத்தின் சரியானவேலையாகவும், இருக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லை. கடனாளி கடனைத் திருப்பிச் செலுத்துவதில் அடைகிற கஷ்டம் அநேக சந்தர்ப்பங்களில் அவன்வாங்கிய பணத்தைச் சரியானவழியில் செலவிடாமல் விட்டபலனென்று பயந்து சொல்லப்படுகிறது.

இதனால் நாம் தேர்ந்து அறிந்துகொண்ட விஷயம் என்னவென்றால் ஒரு பிரதிப் பிரயோஜனமுள்ள காரியத்துக்காக கடன்கேட்கிறபொழுது கூடுமானவரையில் அந்தக் காரியத்துக்கே கடன்கொடுக்க வேண்டியதுதான். பாங்கில் சேர்ந்திருக்கிற 2,50,000நபர்களில் ஒவ்வொருவரும் என்னத்துக்கு உபயோகப்படுத்த கடன் கோரினார்களோ அந்தக் காரியத்துக்கே கடன் உபயோகப்படுத்தினார்களென்பதைத் தெரிந்துகொண்டு திருப்தியடைய முடியாதென்பது வெளிப்படை. ஐக்கியநாணயச் சங்கங்கள் விருத்தியடைவதால், பாங்குக்கும், விவசாயிக்கும் மத்தியமாக நடத்திக்காட்ட ஒருவழி கண்டுபிடிக்கப்படலாம். அவர்களின் செயற்கை ஜவாப்புதாரித்தனத்தால் ஒரு விஷயத்தில் பாங்குக்கு நஷ்டம்வராமல் நிச்சயமாய்த் தடுக்கமுடியும். மற்றொரு விஷயத்தில் பிரதிபிரயோஜனமற்ற காரியத்துக்குக் கடன்கொடுக்கிறதில்லையென்ப



தையும் நிச்சயமாய்த் தெரிவிக்கும். 1908-ம்வருஷம் டிசம்பர்மாதம் 31-ந் தேதியில் பாங்குக்கு 30,710 தவணைதவறிய கடன் கேஸுகள் இருந்தன. இந்த கேஸுகள் பெரும்பாலும் கோர்ட்டுக்குப் போகாமலே பைசல் செய்யப்பட்டன. நவம்பர்மாதக் கடைசிவரையில்328வரை தவறிய கேஸுகள் தாக்கல்செய்யப்பட்டு ஜட்ஜிமெண்டுகள் பெறப்பட்டன. இதனால் பாங்கு, நிதானமாகவே நியாய அதிகாரங்களை நடத்தியிருக்கிறதென்று தெரிகிறது.

7. "உணவுப்பொருள்" விஷயமாய்ச் சென்ற வாரத்தில் நாம் எழுதிய நிரூபம் போதுமான வரையில், ஜனங்களால் தெரிந்துகொள்ளப் பட்டதாகக் காண்கிறது. அதன் பயனாக இந்த வாரத்தில், வர்த்தகத்தில் யதார்த்தம் வேண்டுமென்னும் விஷயமாய், சில குறிப்புகள் எழுத நேரிட்டிருக்கிறது. இன்னும், முக்கியமாய், இந்த யதார்த்தம் ஐக்கியக் கோட்பாடுகளிலும், மாதிரிகளிலும் எப்படிப் பொருந்தியிருந்ததென்றும் சொல்ல வேண்டிருக்கிறது. ஒரு ஐக்கியநாணயச் சங்கத்தின் அமைப்பும் நோக்கமும் எம்மாதிரி என்று சற்று பார்ப்போம். உண்மையின் பழக்கத்தைக் கற்றுக்கொள்ள மெம்பர்கள் உட்படுகிறார்கள். இதனால் விளங்குவது என்னவென்றால், இப்படி உட்படுவதனால், பொய்மைத்தனம், எந்த வழியிலும் இல்லாமல், வேரறுந்து போகிறது. உற்பத்தி செய்யப்படுகிற அல்லது விற்கப்படுகிற எந்தப் பொருள்களும் உற்பத்தி செய்கிறவருக்காவது, விற்கிறவருக்காவது, அவைகள் என்ன பொருள்கள் என்று தெரிந்திருக்கவேண்டும். ஏனென்றால், விற்கிறவனுக்கு சரக்கின் விஷயமாய்த் தெரிந்திருக்கும் உண்மை, வாங்குகிறவனுக்குத் தெரியாமலிருக்கக் கூடாது. இது, கலப்புச் சரக்குகளை விற்கவொட்டாமல் தடுக்கிறது. சப்ளை செய்த சாமான்களின் குணத்துக்கு உத்தரவாதமான உண்மையானது. ஐக்கிய வியாபாரத்தின் முக்கிய தொடர்ச்சியாக விருக்கிறது. அதன் ஆரம்பத்தினால், காலத்திலும், அகாலத்திலும், பழக்கத்தினாலும் நிர்ப்பந்தத்தினாலும், அவன் என்ன வாங்குகிறானென்பதைத் தெரிவிக்கிறதற்கு, வாங்குகிறவனுடைய அக்கை, கூட்டுறவு வெளிப்படுத்துகிறது. அபரிமிதமான சட்டங்கள், வாங்குகிறவனுடைய, காப்புக்காக ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கின்றன. தினசரி உபயோக உணவுப் பொருள்களில் உள்ள கலப்படங்க உறப்பற்றி நமது பத்திராதிபர் ஒருவர் சொல்லும் வார்த்தைகள் வர்த்தகத்தில் போட்டிபோடுகிற ஏற்பாடு இருப்பதினால் யதார்த்தத்தை முற்றிலும் மறுக்க இடம் உண்டாகிறதென்பதை வெளிப்படுத்துகிறது. ஐக்கிய நாணயச்சங்கங்களை அவைகளுடைய போட்டிக்காரர்களோடு கிரமமாக ஒத்திட்டுப்பார்க்க இன்னொருவகையுண்டு. ராபர்ட் ஓவன் என்பவர் பிரைவேட் ஆதாயவருமான முள்ளவர்கள் பெறுகிற அதிக வருமானத்தைக்குறித்து அவர் காலத்தில் பலமாக எழுதியிருந்தார். ஆனால் ஒரு ஐக்கியசங்கத்தில், மெம்பர்கள் அவரவர்கள் வாங்குகிற வீதப்படி, லாபம் பிரிக்கப்படுகிறபடியால், அதாவது லாபமுழுவதும் ஐக்

நிய உறவினர் பெறுகிறபடியால், யதார்த்தத்துக்குமாறான காரியத்தைச் செய்ய வழி ஏற்படுகிறதில்லை. சுயநலம் பாராட்டுதலானது, இதராளுடைய செலவின்பேரில், தனக்குவேண்டிய பொருளை வாங்குதலினின்று, தவிர்க்கச் செய்கிறது. ஐக்கியமானது, பிரயாசைப்படுதல் என்னும் விஷயமாய், எவ்வளவு வரையில் தேசத்தாரை விருத்திசெய்யத் தூண்டியிருக்கிறதென்பதையும் ஐக்கியாபிமானிகள், யதார்த்தமாக இருப்பதால் அவர்கள் கண்டு வெட்கப்படுமான சாமான்கள் களஞ்சியங்களில் வைக்கப்படுகிறதில்லையென்பதையும் அவர்கள் யதார்த்தவாதிகள் என்பதை அதிகப்பட நிச்சயமாய்ச் சொல்லும்படியான பேரவாவை அவர்கள் அடைந்திருப்பதையும, சரித்திரமானது எடுத்துச்சொல்லுகிறது. ஐக்கியாபிமானிகள், வர்த்தகவிஷயமான சன்மார்க்க நெறியை அதிகமாகக் கற்றுக்கொள்ள முயன்றார்களென்றும், அவர்களின் இயக்கமானது வர்த்தகத்தில் யதார்த்தம் இருக்கிறதென்பதைத் தெரிவிக்க பொருந்தியுள்ளதென்றும் நாம வற்புறுத்திச் சொல்லுகிறோம். ஐக்கியாபிமானம், பாபத்துக்கு நிந்தனையாகவும் கலப்படச் சரக்குகளுக்குக் குற்றமாகவும் இருக்கிறது. அது உணவுப்பொருள்களின் சுத்தத்தையும், தொழில் சாமான்களின் உண்மை நிலைமையையும், கொடுக்கல் வாங்கலின் சத்திய நிலைமையையும், எப்பொழுதும் மேன்மைப்படுத்துகிறது. வர்த்தகத்தில், ஒரு கூர்மையானவும், தெளிவானவுமான சாக்ஷியை வளர்க்க அது நெடுநாளாகக் கவலையுடன் பாடுபட்டு வருகிறது.

அடிக்கடி, சிறிதுகால வெற்றியை யுத்தேசித்துத் தெரிந்த கருத்துகளினின்றும் புத்திசாலித்தனமான கதைகளினின்றும் தவறிப் போகும்படியான ஆசைகள் கெடுதலைத்தருகின்றன. ஆனால், வருஷக்கணக்கில், வர்த்தகத்திலும் சன்மார்க்கத்திலும் அதிகபக்தி ஏற்பட்டுவருகிறது. நல்லவழியின்பயன் கூட்டுறவினருக்கு மாத்திரம் அல்ல. இந்தவழியில், ஐக்கியாபிமானம் மனிதனுடைய சமர்த்தைப் பெருக்குவதில் வேலைசெய்திருக்கிறது. அந்த பெருக்கமாகி செல்வாக்கு விரித்துச்சொல்லுவதற்காவது கணக்கிடுவதற்காவது முடியாதது. ஆனால் அது வியாபித்திருக்கிறது. அந்த செல்வாக்கு, அது வியாபித்திருக்கும் விஸ்தீரணத்தினால் அளக்கமுடியாமல், அதனுடைய பக்ஷத்தினால் அளக்கப்படுகிறது. ஐக்கியம், அதனுடைய எண்ணத்தினாலேயே சாமான்களின் போட்டியை உண்டுபண்ணிற்று. அதற்காக வாங்கித் தின்போர் வந்தனம் புரியவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

நாம் சொன்ன விஷயங்களின் சாதகம் இரண்டுவிதமாக இருக்கிறது. வர்த்தக விஷயங்களில், சன்மார்க்கத்தின் குறைவினால் நேரிடும் குறைவுபாடுகளைத் தடுப்பதற்கு ஏற்படுகிற அமைப்புச் சங்கம் கூட்டுறவினர்களுடைய ஆதரவையும், பக்ஷத்தையும் பெறவேண்டும். யதார்த்தம் மேலிட்டிருக்கிறவர்களுக்கும் அவர்கள் எதிர்பார்க்கிற திருப்தியை, அவர்களின் வர்த்தகத்திலிருந்து விற்கிறவரும் வாங்குகிறவரும், அடைகிறார்கள் (1909-ஞ நவம்பர் 27உ யுள்ள கோவாபரேடிவ் நியூஸ்.)



8. மேல் நாட்டாருடைய எண்ணங்களை இந்தியா நேசிக்கிறது. அது ஒரு கீழ்நாட்டு தேசம். நாம் எல்லாம் சிறியவர்களாக இருக்கும்பொழுது, அது புலிகளாலும், யானைகளாலும் நிறைந்தும், அதில் வாழும் பக்ஷிகள் வானத்தின் வில்லைப்போன்ற நிறமுள்ளவைகளென்றும், அதில் வாழும் மனிதர்கள், கருநிறமுள்ளவர்களாகவும், நகைகளைப் பூண்டும், பெண்கள் ஆசைச் சந்திரனைப் போன்றவர்களாகவும் இருக்கிறார்களென்றும், எண்ணிக்கொண்டிருந்தோம். இதை நமது, பாவனர்கள் கற்றுக்கொடுத்தார்கள். ஆர்மஸ் அல்லது, இரண்டு, அல்லது, நேர்த்தியான கீழ்தேசங்களின் திரவியத்தைப்பற்றி சரித்திரங்கள் இருந்தன. நமக்கு தெளிவு ஏற்பட்ட பிற்பாடு, திரவியவானது மேல் நாட்டு பாங்குகளின் கணக்குகளுக்கு மாற்றப்பட்டதென்பதைத் தெரிந்து கொண்டோம். பைசாசு, சுல்தான் கோயில், மசூதி இவைகளுக்குரிய நிலங்களென்று நமது பாவாணர்கள் சொன்னவைகளெல்லாம் பொய்க்கதைகளென்றும், நாம் சிறுபோது தெரிந்துகொண்டபடி இந்தியாவானது, அராபிக்கதைகளில் சொல்லும்விதமாக ஜாலவித்தைக்காரர்களால்; குடியேற்றப்பட்டிராமல், நம்மைபோன்ற ஆண்களாலும், பெண்களாலும் குடியேற்றப்பட்டிருக்கிறது. காசிப்பட்டணத்துக்கு அருகே ஸ்தாபித்துள்ள ஒரு நாணயச்சங்கத்தின் விவகாரங்களைப்பற்றி பங்காளிப்பத்திரிகையில் பண்டிதர் ஜோகீந்தரநாத் சாமதர் எழுதியகடிதத்தை வாசிக்கும்பொழுது, அதைவிட விரைவுள்ள வேறுசிந்தை நமக்குத் தோன்றுகிறதில்லை. இங்கே ஜாலவித்தைக்காரர்கள் ஒருவருமில்லை. அயர்லாந்தில் நம்மைப்போன்ற ஜனங்கள் விவசாயபாங்குவேலை செய்துவருகிறார்கள்; பாட்டுகள் நமது உத்தேசத்தை மிஞ்சிப் போகவில்லை. ஏனென்றால் பஞ்சாயத்துசபைகள், அமாவாசை, பௌர்ணமி இந்ததினங்களில் நடந்தேறுகின்றன. இந்த சந்திர சம்மந்தமான செயற்கை நாம்வகித்த பழைய இந்தியாவோடு, புது இந்தியானது சேர்ந்ததாயிருக்கிறது. எப்படி யிருந்தபோதிலும், மெம்பர்கள் பக்ஷமுள்ளவர்களாகவும், கூட்டுறவின் உண்மைநிலையோடு கூடினவர்களாகவு மிருக்கிறார்கள். கிராமத்தில், அமாவாசை பௌர்ணமி இந்ததினங்களில் சேர்வது கட்டாயமாயிருக்கிறது. இவ்விடத்தில் கிராமசச்சரவுகள் நீங்குகின்றன. சங்கங்கள் ஸ்தாபித்ததினால், ஒருவரும் நியாயகோர்ட்டுகளுக்குப் போகிறதில்லை. மீடிங்குகாலங்களில், சாஸ்திரசம்பந்தமானவும் விவசாயசம்மந்தமானவும் புத்தகங்களோடு, மதசம்மந்தமான புத்தகங்களும் வாசிக்கபடுகின்றன. இந்தியாவைப்பற்றி சிறுபோதில் நாம்கொண்ட தப்பு அபிப்பிராயங்களில் நாம் சேரவில்லையென்றும் நாம் நம்புகிறோம். ஆனால் நம்முடைய எண்ணங்களானவை பௌர்ணமி, சாஸ்திரம், விவசாயம் பிரம்ம விளையாட்டிவைகளின் சம்மந்தமானமீடிங்குகளை நினைக்கும்போது மாறானவைகளாகவிருக்கின்றன. காசிப்பட்டணத்து விவசாயபாங்கானது நம்முடைய சொந்த பாங்குகளைப்போல அமைப்பு பெற்றிருக்கிறது. நம்முடைய பாங்குகளைவிட விர்த்திகரத்தைப் பொருந்தியிருக்கின்றது. மத்திய இராத்திரிகாலத்தில் பனியில்தான் ஜனங்கள் வேலை செய்யும்படியான

அவ்வளவு உஷ்ணமாக இந்தியா யிருக்கிற தென்றும் - மனிதனுடைய வலி வெல்லாம், வியர்வையால், குறைந்து போகிற தென்றும் - கீழ்நாட்டு சோம்பல் தனத்தினால் கெட்டியான தன்மையை ஒருவன் அடையக்கூடுமென்றும் நாம் கருதுகிறோம். ஆனால் இது தப்பானதாக இருக்கிறது. ஏனென்றால் சங்கம் ஒரு தடாகத்தை ஏற்பாடு செய்துகொண்டு அதில் கோடைகாலத்தில் ஜலம் நிரப்பிக்கொண்டது. க்ஷேமநிதி ஏராளமாய்ச் சேர்க்கப்பட்டு, பொது நன்மைக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அந்த க்ஷேம நிதியாகிய ஜலம் கோடைகால உபயோகத்துக்குப் போதுமானதாக விருக்கிறது. இந்த வேலையைச் செய்ய, ஒரு நிலம் எடுத்துக்கொள்ளப்பட்டு கரும்பு பயிர் செய்யப்படுகிறது. எல்லாமெம்பர்களும் அதைப் பயிர்செய்ய வேலைசெய்து வருகிறார்கள். தங்களுடைய கஷ்டத்தை இனாமாகக்கொடுத்து வருகிறார்கள். இதின் லாபம் க்ஷேம நிதியை விர்த்திசெய்ய கொண்டுபோகப்படுகிறது. நல்லவழியில் கிராம ஜலத்தைப் பாய்ச்ச முடிகிறது. கொஞ்ச காலத்துக்கு முன்வந்த கருப்பு காலத்தில், கவர்ன்மெண்டார் இதர இடங்களில் பஞ்ச சம்ரக்ஷணை செய்து வந்தபொழுது இந்த கிராமம் கவர்ன்மெண்டு சகாயத்தைப் பெறாமல் போகவே, கிராம சங்கத்தின் மெம்பர்கள், தங்களுக்குள் சந்தா வசூல்செய்து அனாதரவான மூன்று ஏழைக்குடும்பங்களை மூன்றுமாதம் காப்பாற்றினார்கள். நாம் கருதின போலி இந்தியாவைக் காட்டிலும் உண்மையான இந்தியாவை அதிக பக்ஷத்துடன் நினைக்க ஆரம்பித்திருக்கிறோம்.

இதைப்போன்ற அநேக சங்கங்கள், சுயஉதவியோடு, வேலைசெய்து வரக்கூடுமானால், அதை அதன் பழைய ஸ்திதியோடு ஒத்திட்டுச் சொல்வதில் பயப்படவேண்டியதில்லை. மிஸ்டர் - பிரீமான்டில் துரையவர்களின் பத்திரிகையின்படி, இந்தியாவில் இப்பொழுது 1201 சங்கங்கள் இருக்கின்றன. அவைகள் தீவிரமாக விருத்தியடைந்து வருகின்றன; ஐயர்லாந்து தேசத்தில் நடக்கும் மாதிரியானது இந்தியாவில் விவசாய பாங்குகள் ஏற்பாடு செய்வதற்கு ஒத்தாசையாக விருக்கிறது என்பதை நினைக்க சந்தோஷத்தைத் தருகிறது. வெவ்வேறு சமயங்களில் ஐயர்லாந்து தேசத்தைச் சுற்றிப்பார்த்தவர்கள் ஐந்து அல்லது ஆறு பெயர்கள். இந்தியாவில் அவர்கள் வேலை ஆரம்பஞ் செய்யு முன்னமே அவர்களுக்கு நாம் கற்றுக்கொண்டவைகளைச் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்றும், அவ்விடத்தில் ஐக்கிய இயக்கம் கிராமாந்தரங்களில் பரவி வருகிற தென்றும் சென்டரல் பாங்குகளோடு கிராமங்கள் செயற்கை அடைந்து வருகிறதென்றும, அந்த வேலையின் பயனாக ஒற்றுமை குணம் வளர்ந்து வருகிறதென்றும் நாம் கற்றுக்கொண்டோம். இது இந்தியாவுக்கு ஒரு பெரிய நன்மையைத் தருமென்று சொல்வதற்கு சந்தேகமில்லை, இந்த கிராம அமைப்புகளினால். கிராமக் குடிகளின் வேண்டுகோளைத் தெரிவிப்பதற்கும் அவர்கள் இது வரையில் அடையாத விர்த்தியை அடைவதற்கு அது ஒரு முதன்மையானதாக இருக்கிறதென்பதை நாம் சொல்ல சந்தேகமில்லை. கிராம ஜனங்களை ஒன்று சேர்த்து அமைப்பதற்கும் அந்த அமை



ப்புப் பெற்ற சங்கங்களை சென்டரல் யூனியனில் சேர்ப்பதற்கும், அப்படிச் சேர்ப்பதினால், ஜாதி வித்தியாசம்போய்த் தேசமுழுவதும் ஐக்கியஎண்ணம் உற்பத்தியாகி - இந்தியர் முழுவதும் ஒரே ஜாதியாராக வாழ்வதற்கு இந்த சங்கங்களைத் தவிர வேறுவகையில்லை. இந்த விஷயம், ஐயர் லாந்து தேசத்தைப் போல, இந்தியாவுக்கும் ஏற்றதாகவிருக்கிறது (ஐரிஷ் ஹோம்ஸ்டெட்)

---

## சர்க்குலர் உத்தரவுகள்.

நெம்பர் 1.

வருஷவாரி, ஒரு சங்கத்துக்கு ஒரு கிராமத்தில் பற்றுள்ள சர்வே நிலங்களின் லீஸ்டுஒன்றைத் தயார்செய்து ஒரு ரூபாய் கட்டணம்செலுத்தி, ஒருசங்கம், தனது பெயரையும் விலாசத்தையும் ரிஜிஸ்தர்செய்து கொள்ளுமானால், அந்த நிலங்கள் சர்க்கார் தீர்வைக்காக ஜப்தி செய்யப்பட்டால் அது விவரம் சங்கத்துக்குத் தெரிவிக்கப்படும். வரையறுக்கப்படாத பொறுப்பின் பேரில் ரிஜிஸ்தர் செய்யப்படும் சங்கங்கள் விஷயத்தில், மெம்பர்களின் எல்லா நிலங்களின் பேரிலும், மெம்பர்களுக்குக் கொஞ்சம் பற்றுள்ள நிலங்களின்பேரிலும், சங்கத்துக்கு அக்கறை ஏற்படுகிறது. ரிஜிஸ்தர் செய்துகொண்ட பிற்பாடு, மற்ற நிலங்களில், மெம்பர்களுக்குப்பற்று ஏற்பட்டால், அந்த நிலங்களுக்காக ஒரு தொடர்ச்சி ஜாப்தா ஒன்று அனுப்பப்பட வேண்டும். சங்கத்தின் விவகார எல்லைக்குள் எத்தனை கிராமங்கள் இருக்கின்றனவோ, அத்தனை பிரிவுகள் ஜாபிதாவில் காட்டப்பட்டிருக்கவேண்டும். நெம்பர்வாரி ஜாப்தா ஒன்று சங்கங்களும் வைத்திருக்கவேண்டும். பசலி ஆரம்பத்தில், வருஷவாரி, ரிஜிஸ்தர் பதிப்பிக்க வேண்டும். இப்படி ரிஜிஸ்தர் செய்து கொள்வது கட்டாயமென்று சங்கங்கள் நினைக்கக் கூடாது. சங்கங்களுக்குச் சம்பந்தப்பட்ட நிலங்கள், அவைகளுக்குத் தெரியாமலே விற்கப்பட்டுப் போகுமென்று, அவைகள் பயப்படுமானால், அந்த சந்தர்ப்பத்தில் தான் சங்கங்கள் ரிஜிஸ்தர் செய்துகொள்ள வேண்டும். ரிஜிஸ்தர் செய்து கொள்வதற்கு நோடீசு தாலூக்கா தாசில்தார் அவர்களுக்கு அனுப்பப்பட வேண்டும்.

# டிபார்ட்மெண்டல் உத்தரவுகள்.

### நெம்பர் 1.

ரெயில்வே கயிட்டுகள் வாங்குவதற்கு இனிஸ்பெக்டர்கள் ஐக்கியநாணயச் சங்கங்களின் ரெஜிஸ்திரார் அவர்களுடைய முன் அனுமதியைப் பெற வேண்டும். இந்த சாங்ஷன் இல்லாமல் வாங்கினால் அவைகளின் செலவு ஒப்புக் கொள்ளப் படமாட்டாது.

### நெம்பர் 2.

அந்தந்த சக்கார் கஜானாவிலிருந்து இனிஸ்பெக்டர்கள், தங்கள் உபயோகத்து, சர்விஸ்தபால் தலைகள் வாங்கிக்கொள்ள அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள். கஜானா ரசீதுகள் அனுப்பி அவைகளின் செலவை, மறு கண்டின்ஜெண்டு பில்லில் எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

### நெம்பர் 3.

ஐக்கிய நாணயச் சங்கங்களை ரெஜிஸ்தர் செய்வதற்காக பிரேரேபணைகள் அனுப்பும்பொழுது, இனிஸ்பெட்டர்கள் சங்கத்தின் விவகார எல்லையில் சம்பந்தப்பட்ட கிராமங்களின் சர்வே நெம்பர்களையும், ஒவ்வொரு கிராமமும் எந்தத் தபாலாபீசினால் கடிதப் போக்குவரவு நடத்தப்படுகிறதென்பதையும், குறிப்பிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

### நெம்பர் 4.

ஒரு சங்கத்தின் மெம்பர்களுடைய சொத்து ஜாப்தாவைப் புதுப்பித்து எழுதுகிற பொழுது புது மெம்பர்களையும் பழைய மெம்பர்களையும் சேர்த்து எழுதவேண்டும். ஜாப்தா தயார் செய்த தேதிவரையில் சேர்ந்த மெம்பர்களின் பெயரை எழுதி அந்தத் தேதியில் மெம்பர்களுக்கு இருக்கும் சொத்தின் மொத்த பாத்யதையும் கண்டு எழுத வேண்டும்.

# சங்கத்தின் இன்ஸ்பெக்ஷன் ரிபோர்ட்டு.

---

தணிக்கைசெய்த தேதி ... ...

இதற்குமுன் தணிக்கையான தேதிகள் ...

[குறிப்பு.—ஒவ்வொரு தணிக்கையிலும் அடியிற் கண்டவைகளுக்கு தெளிவாயும் சுருக்கமாயும் விடைகள் எழுதவேண்டும். சங்கத்திற்கு தகுந்த விடைகள் எழுதிய ஒரு தமிழ் காபியைகொடுத்து, இங்கிலீஷ் காபியை, இன்ஸ்பெக்டர் அந்த கிராமம் விட்டுப்போகுவதற்கு முன்பே, ரிஜிஸ்ட்ரார் அவர்களுக்கு அனுப்பவேண்டும். இதற்கடியிற்கண்ட வினாக்களில் சூபர்வைசர் என்பதற்கு இன்ஸ்பெக்டர் என்றே அர்த்தம்.]

1. (a) சங்கவிவகார ஹத்துக்களில் எத்தனை கிராமங்கள் சேர்க்கப்பட்டன? அவை யாவை?
   (b) அந்த ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் மெம்பர்கள்வந்து சேர்ந்திருக்கிறார்களா?
   (c) விவகாரசரிஹத்தில் சேர்ந்த எந்த கிராமத்திலிருந்தாவது, மெம்பர்கள் சேராமலிருந்தால், அதற்கென்ன காரணம்? பஞ்சாயத்தார்களும் இதர மெம்பர்களும் அந்தக் கிராமத்தைப்பற்றி என்ன நினைக்கிறார்கள்?
   (d) மெம்பர்கள் வராமலிருக்கும் கிராமத்துக்குப் பிரத்தியேகமாக ஓர் சங்கம் ஏற்படுத்த அந்த கிராமம் தகுதியாயிருக்கிறதாக சூபர்வைசர் நினைக்கிறாரா? இப்பொழுது சேர்ந்திருக்கும் மற்ற எந்த கிராமமாவது விலக்கக்கூடியதாயிருக்கின்றதா?

### மெம்பர்கள்.

2. (a) மெம்பர்களை சேர்க்கும் விஷயத்தில் பஞ்சாயத்தார் பகுத்து யோசித்து சேர்த்துக் கொள்ளுகிறார்களா? நன்னடக்கை உள்ளவர்களென்றும் சத்தியம் தப்பாதவர்களென்றும் பிரசித்தி பெற்றவர்களை தான் சேர்த்துக்கொள்ள வேண்டும்.
   (b) கடந்த தணக்கை தேதியிலிருந்து மெம்பர்கள்கூடி எத்தனை தடவை மகாசபை நடத்தினார்கள்? எந்தந்த காரியார்த்தமாய் மகாசபைக் கூடினார்கள்?

(c) சங்கத்தில் சேர்ந்த எல்லா மெம்பர்களும் அந்த மீட்டிங்குகளுக்கு வந்து ஆஜராகிறார்களா?

(d) எல்லா மெம்பர்களையும் சேர்ப்பித்துமீட்டிங்கு நடத்தவேண்டுமென்கிற முயற்சி செய்யாமலே ஒவ்வொரு மீட்டிங்கிலும் ஒரே வகுப்பாரே சேர்ந்து நடவடிக்கை நடத்திக்கொண்டு வந்திருப்பார்களேயானால், ஒவ்வொரு மெம்பரும் ஹாஜராக நிர்பந்தப்படுத்த ஒரு பிரத்தியேக நிபந்தனை ஏற்படுத்த வேண்டியது ஆவசியகமென்று சூபர்வைசர் நினைக்கிறாரா? அப்படி ஏற்படுத்தினால் சங்கம் விருத்தியடையுமென்று அபிப்பிராயப் படுகிறாரா?

(e) சங்கத்தில் மெம்பர்களை ஒன்று அல்லது இரண்டு இனத்தார்களிருந்தே சேர்த்துக் கொள்ளுகிறார்களா?

(f) இதர விஷயங்கள் திருப்திகாமாயிருக்கும் பட்சத்தில் எல்லா ஜாதியாரையும் சேர்த்துக் கொள்ளுகிறார்களா? முக்கியமாய்ப் பஞ்சம ஜாதியாரையும் சேர்த்துக் கொள்ளுகிறார்களா?

(g) விவசாயிகள் அநேகமாய்ச் சேராமலிருந்தால் அப்படி சேராமலிருப்பதற்கு காரணமென்ன?

(h) உள்ளூர் சாவுகாரர்களின் பிரவர்த்தனையெப்படியிருக்கின்றது? அவர்கள் சேர்ந்தார்களா? அல்லது அவர்கள் ஒன்றாய்ச் சேராமலிருக்கிறார்களா?

(i) கடந்த தணிக்கையான பிறகு எத்தனை மெம்பர்கள் சேர்ந்தார்கள்? யாரும் சேராமலிருந்தால் என்ன காரணம்?

(j) ஒவ்வொரு மாதத்திலும் இரண்டு அல்லது மூன்று பேரையாவது மெம்பர்களாக சேர்த்துக் கொள்ளுகிறார்களா?

(k) எத்தனை மெம்பர்கள் சங்கத்திலிருந்து விட்டுப்போனார்கள்; என்னத்திற்காக விட்டுப்போனார்கள்?

(l) சங்கத்தின் பரிபாலனையால் மெம்பர்களும் மற்ற இதரர்களும் கிராமத்தில் நன்னடக்கை அடைந்து மத்தியபானம் முதலிய துர்வியாபாரங்களை தாவதிருந்தால் அவை விட்டுவிட்டு ஒருவருக்கொருவர் ஒன்றுபட்டு வாழ்கிறார்களா?

3\. (a) பிரதி மாதத்திலும் நிர்ணயித்த நாட்களில் பஞ்சாயத்தார் கலக்கிறார்களா? அத்தினங்களில் கலந்து வேலைசெய்வது ஜனங்களுக்குதெரியவருகின்றதா? வேலையொன்று இல்லாவிட்டாலும் மாசத்திற்கொருதரமாவது சங்காபிவிருத்தியைக் குறித்து மாசாந்திர ரிபோர்ட்டு வாசிக்க ஒருசபை



கூடவேண்டும். இதன் நிமித்தம் மீடிங்குசெய்ய அமாவாசியை அல்லது பௌர்ணமி சௌகரியமானது.

(b) பஞ்சாயத்தார் எல்லோரும் அப்பேர்ப்பட்ட மீட்டிங்குகளில் ஹாஜர் ஆகிறார்களா? அப்படி இல்லாவிட்டால் அவர்கள் முகாந்திரமென்ன?

(c) அந்த மீட்டிங்குகளுக்கு இதர மெம்பர்கள் வருகின்றார்களா?

(d) அந்த மீட்டிங்குகளுக்கு இதர கிராமஸ்தர்கள் வருகிறார்களா? அந்த மீட்டிங்குகளில் எல்லோரும் ஆஜராகும்படி ஏற்பாடு செய்யப்படுகின்றதா?

(e) மீட்டிங்குகள் கதவுகளை மூடிக்கொண்டு நடத்தாமல், பகிரங்கமாக நடத்தப்படுகின்றனவா?

4\. (a) மெம்பர்களுக்குக் கடன்கள் கொடுக்கும் விஷயத்தில் பஞ்சாயத்தார் தகுந்த யோசனைசெய்து எல்லோரும் ஒப்பும்படியான தீர்மானங்கள் செய்கிறார்களா?

(b) பிரதி மெம்பருக்கும் எவ்வளவு கடன் வேண்டுமோ என்கிற யோசனை யில்லாமலே யாருக்காவது கடன் கொடுக்கப்பட்டதா?

(c) எத்தனை கேசுகளில் விதிகள் பிரகாரமும் ஒரு மெம்பர் வாங்கக்கூடிய கடன் மொத்தங்கள் முழுவதும் கொடுக்கப்பட்டன? நன்றாய் ஆலோசனை செய்து அந்த மொத்தம் அவர்களுக்கு அவசியமானதாலேயே கொடுக்கப்பட்டது என்று சூபர்வைசர் கிராமத்தில் விசாரணைசெய்து அவரும் அப்படியே அபிப்பிராயப்படுகின்றாரா?

(d) கடன் வாப்சுசெய்ய வாயிதா கொடுக்கும் விஷயத்தில் பஞ்சாயத்தார் யோசனைசெய்துவாயிதாபோட்டு கொடுக்கிறார்களா? மாசூல் அடையும் காலத்தை அனுசரித்து அப்பேர்ப்பட்ட வாயிதாக்கள் நிர்ணயிக்கப் படுகின்றனவா?

(e) கடன் எந்தகாரியத்துக்கு உபயோகம் செய்யவேண்டுமோ அந்தகாரியத்துக்கு தகுந்தாற்போல் மொத்தங்கள் நிர்ணயிக்கப் படுகின்றனவா?

(f) கடன் கோரும் மெம்பர் பகிரங்கமாய் பப்ளிக் மீட்டிங்கில் தனக்கு இந்திந்த வேலைக்கு கடன் வேண்டுமென்று சொல்லுகிறாரா?

(g) கடன்கள் பணம் கிடைத்த உடனே ஆலசிய மில்லாமல் பட்வாடா செய்யப்படுகின்றனவா?

(h) மஞ்சூரான கடன்களை பப்ளிக் மீட்டிங்கில் பகிரங்கமாக கலந்திருக்கும் எல்லோரு மறியும்படியாக பஞ்சாயத்தார் கோரும் மெம்பருக்கு பணம் பட்டவாடா செய்கின்றார்களா ?

5. (a) பட்வாடா ஆன கடன்கள் எந்த காரியத்திற்கு கொடுக்கப்பட்டனவோ அந்த காரியத்திற்கு உபயோகம் செய்தார்களா என்று பஞ்சாயத்தார் திருப்திகரமாக விசாரணை செய்கின்றார்களா ? சூபர்வைசர் சிலகேசுகளை தணிக்கைசெய்து அவைகளின் உண்மையை தெரிந்துகொண்டு இவைகளைப்பற்றி, இதில் குறிக்கவேண்டும். மேலும், கடன் வாங்கினவன் கொஞ்சம் சாக்கிறதையோடு பணத்தை உபயோகித்தால், தன் வேலையை குறைந்த மொத்தத்தையோடே முடித்துக் கொள்ளலாமோ என்கிற விஷயம்கூட கவனிக்கவேண்டும் ; இதைப்பற்றியும் சூபர்வைசர் விடை எழுதவேண்டும்.

(b) முன்கடன்களை தீர்க்க அடையும் கடன் விஷயங்களில், செல்லுபோட்ட கடன் தஸ்தாவேஜுகளை சங்கத்தில் பஞ்சாயத்தார் டைல் செய்கின்றார்களா ? இந்த விஷயத்தை நன்றாய் விசாரணைசெய்து இதைப்பற்றி விடைகுறிக்கவேண்டும்.

(c) நில அடமான விஷயத்தில்முன் அடமானம் ஏதாவதிருக்கின்றதா என்று பஞ்சாயத்தார் விசாரணைசெய்து ஒன்றும் இல்லையென்று அறிந்து திருப்தி அடைந்தார்களா?

(d) தான் வாங்கின கடன் மொத்தத்தில் தனக்கு வேண்டாத மொத்தத்தை எந்த மெம்பராவது வாப்சு செய்தாரா ?

(e) தன்னுடைய வேலைக்கு போதுமான மொத்தம் போக மிகுந்ததை வாப்சு செய்யும்படி பஞ்சாயத்தார் கேட்கின்றார்களா ? (மற்றொரு வேலைக்கு கடன் வேண்டுமானால், இன்னொரு கடனாக வாங்கிக் கொள்ளவேண்டும். (முன்வாங்கிய கடன் மொத்தத்தில் செலவாகாத மொத்தம் ஏதேனுமிருந்தால் அதை மற்றொருகாரியத்துக்கு உபயோகப்படுத்தக் கூடாது.)

(f) துர்வினியோகப் படுத்தப்பட்ட கடன் விஷயங்களில் பஞ்சாயத்தார் கடன்களை ரத்து செய்து பணம் வசூலிக்கின்றார்களா ?

(g) பகிரங்கமான மீட்டிங்கில் பஞ்சாயத்தார்களுக்கு வாயிதாக் கடந்த கடன்பட்டியை சூபர்வைசர் வாசித்து அந்தபிரதி



கடன் மொத்தமும் எந்த காரியத்திற்கு வாங்கப்பட்டதோ அந்தக் காரியத்திற்கே முழுமையும் உபயோகப் படுத்தப்பட்டதா என்று விசாரிக்கவேண்டும்.

**நடவடிக்கை புஸ்தகம் (மினிட் புக்).**

6. (a) ஒவ்வொரு நடவடிக்கையும் நடந்தவுடனே அதன் தீர்மானத்தை மினிட் புக்கில் எழுதுகிறார்களா ? அந்த தீர்மானங்கள் எல்லாம் ஆஜரான மெம்பர்கள் எதிரில் எழுதப்பட்டு எல்லாராலேயும் கையொப்பம் செய்யப்படுகின்றதா ?

(b) மினிட் புக்கில் யெல்லாத் தீர்மானங்களும் நடந்தேறிய வண்ணம் ஒன்றும் விடாமல் பூர்த்தியாக யெழுதப்பட்டிருக்கின்றனவா ? மேலும், ஒரு விஷயத்தைக் குறித்து தீர்மானம் செய்யும்பொழுது அத் தீர்மானத்திற்கு வேண்டிய யெல்லா அம்சங்களும் யோசிக்கப்பட்டு தீர்மானிக்கப் படுகின்றதா ?

(c) மஞ்சூரான கடன் விஷயங்களில், கடன் உபயோகப் படுத்த வேண்டிய காரியம், வாப்சு செய்யவேண்டிய கெடுவு, கடனுக்குக் கொடுத்த ஆதாரவு விவரம், ஜாமீன் கடன் விஷயத்தில் ஜாமீன்தாரர்களின் பெயர் முதலான விவரங்கள் தீர்மானங்களில் அடங்கி யிருக்கின்றனவா ?

(d) தீர்மானங்களுக்கெல்லாம் வரிசை நெம்பர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவா ?

(e) பிரதி மீட்டிங்கின் தீர்மானங்களை அடுத்த மீட்டிங்கில் படித்து சரியாயிருக்கிறதென்று ஒப்புக்கொள்ளப் படுகின்றனவா ?

**தின வரவு செலவு கணக்கு.**

7. (a) சென்டறல் அர்பன் பாங்குனின்று வாங்கிய மொத்தம் கணக்குகளில் உடனே வரவு எழுதப்பட்டதா ?

(b) வரவு செலவு கணக்கில் வரவு தலைப்பின் கீழாவது அல்லது செலவு தலைப்பின் கீழாவது எழுதப்பட்ட பிரதி பாப்புக்கும் பஞ்சாயத்தார் தீர்மான மிருக்கின்றதா ?

(c) பிரதி வரவு பாப்புக்கும் வழக்கத்திலிருக்கும் பாரத்தில் ரசீதுகள் கொடுக்கப்படுகின்றனவா ?

(d) பிரதி செலவு பாபுக்கும் பத்திரம் அல்லது கிரமமாய் எழுதப்பட்ட வவுச்சர் இருக்கின்றதா ?

(e) பத்திரங்கள் சரியான பாரத்தில் இருக்கின்றதா ?

(f) லேவாதேவி இருக்கின்ற நாட்களில் பிரதி தினமும் வரவு செலவு கணக்கு முடிவு கட்டப்படுகிறதா ?

(g) அந்தந்த தினத்தின் கையிருப்பை எழுத்தாலும் இலக்கத்தாலும் எழுதி, காரியதரிசி (Secretary) (டிரஷரராயிருந்தால் அவரும்) கையெழுத்து செய்கின்றார்களா ?

(h) கையிருப்பு பிசகில்லாமல் இருக்கிறதா ? அந்த கணக்கில் கண்டிருக்கும் கையிருப்பும் கையில் இருக்கும் ரொக்கமும் சரியாயிருக்கின்றதா ? இதைப்பற்றி சூபர்வைசர் சர்டிபை செய்யவேண்டும்.

(i) பெரிய மொத்தமாக ரொக்கம் கையிருப்பாக இருக்கிறதா ? சென்ட்ரல்பாங்கு கடனை வாப்சு செய்தாவது மஞ்சூரான கடன்களுக்கு பணத்தை சகாலத்தில் பட்வாடா செய்தாவது அந்த பெரிய மொத்தத்தை வைத்துக்கொள்ளாமல் இருக்கலாமென்று சூபர்வைசர் நினைக்கிறாரா ?

(j) பெரிய கையிருப்பும் இருக்குங்கால் சென்டிரல் பாங்குக்கு தட்சணம் அனுப்ப சாத்தியப்படாமல்போனால், போஸ்டாபீஸ் சேவிங்க்ஸ் பாங்கில் பணம் கட்டப்படுகிறதா ?

(k) மிகவும் அஜாக்கிரதையினால் நின்ற பெரிய கையிருப்புக்கு வட்டி நஷ்டமானதென்று சூவர்வைசர் நினைக்கின்றாரா ?

(l) தணிக்கையை சுலபப்படுத்தும் பொருட்டு பிரதி மெம்பரின் ஜெனரல் நெம்பரும், பஞ்சாயத்தாரின் தீர்மானங்களின் நெம்பரும் சிட்டாவில் (வரவு செலவு கணக்கு) தாக்கல் செய்யப்படுகின்றனவா ?

### பிரவேச புஸ்தகம்.

8. (a) இதில் கண்ட பாப்புகளை சரியாய் எழுதப்படுகின்றனவா ? பிரதி மெம்பரின் கையொப்பம் அவாளவாள் பேஜியில் வாங்கப்படுன்றதா ?

(b) பிரதி மெம்பரின் பொறுப்பு அதற்குரிய கலத்தில் சரியாய் எழுதப்பட்டிருக்கிறதா ? தன் ஜவாப்பை பிரதி மெம்பரும் அறிந்திருக்கிறாரா ?

(c) எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் விஷயங்களில், அவர்கள் கைநாட்டுகளுக்கு இரண்டு சாக்ஷிகளின் கையெழுத்திருக்கின்றதா ?



(d) பிரதி பாபத்துக்கும் செக்கிரிடெரி இனிஷியல் இருக்கின்றதா ?

### கடன்பேரேடு.

9. (a) இந்த பேரேட்டில் எல்லா பாபத்துகளும் கிரமமாய் அந்தந்த இடங்களில் எழுதப்பட்டனவா ? ஒவ்வொரு வரவுக்கும் ஒவ்வொரு செலவுக்குங் கடன் வாங்கினவரின் கையொப்பமும், செகிரிடெரி கையொப்பமும் இருக்கின்றனவா ? ஒருவருக்கே ஒன்று அல்லது பல கடன்கள் கொடுக்கப்பட்டிருந்தால், வெவ்வேறாக பேரேட்டுகள் இருக்கவேண்டும்.

(b) கடன் பேரேட்டில் ஒவ்வொரு கடனும் எந்த காரியத்துக்கு வாங்கப்பட்டதோ அந்த காரியத்துக்காக வென்று தாக்கலாயிருக்கின்றதா ? எந்த பஞ்சாயத்தாராவது அந்த கடன் கணக்கில் அந்தக் கடன் மொத்தம் எல்லாம் அக்காரியத்துக்கே உபயோகப்பட்டது என்று சர்ட்டிபை செய்திருக்கின்றாரா ?

(c) வாயிதாக்களை நீடிக்கும் விஷயத்தில் ஜாஸ்தி கெடுவுகள் விபஜனை இல்லாமலே கொடுக்கப்படுகின்றனவா ?

(d) ஒவ்வொரு ஜாஸ்தி கெடுவையும் மிகவும் யோசனை செய்து கொடுக்கின்றார்களா ? கொடுத்த ஜாஸ்தி கெடுவுகளை கடன் பேரேட்டில் குறிக்கப்படுகின்றனவா ?

(e) ஒவ்வொரு ஜாஸ்தி கெடுவும் பிரதியேக தீர்மானத்தில் சாங்க்ஷன் செய்யப்பட்டிருக்கின்றதா ? அந்த தீர்மானம் விவரமாய் மினிட்புக்கில் தாக்கலாயிருக்கின்றதா ? பிரதிகடன் கேசும் வெவ்வேறாக அதன் சந்தர்ப்பங்களை அனுசரித்து ஆலோசிக்கப்பட்டதா ?

(f) ஜாமீன் கடன் விஷயத்தில் ஜாஸ்திகெடுவு கொடுக்குமுன்பே ஜாமீன் தாரர்களின் எழுத்து மூலமான சம்மதங்கள் வாங்கப்பட்டனவா ?

(g) வாயிதா தேதிகளில் கடன்கள் கிரமமாய் வாப்சு செய்யப்படுகின்றனவா ?

(h) வாயிதாகடந்த கேசுகள் ஏதாவ திருக்கின்றனவா ? ஏதாவதிருந்தால் இவைகளை எடுத்துக் காண்பிக்கவேண்டும். பஞ்சாயத்தார் என்ன நடவடிக்கை நடத்தியிருக்கின்றார்கள்

(i) கடனுக்குக் கொடுத்த வாயிதா கெடுவு வாரதமுன்பே சில்லரைச் செல்லாக நிபந்தனைகள் பிரகாரம் செலுத்திய ஸ்வல்ப மொத்தங்களை வாங்கிக்கொண்டு அசலுக்கு அவைகள் வரவு வைக்கப் படுகின்றதா ?

(j) அபராதம் செலுத்தும் பொருட்டு ஏதாவது ஷரத்து இருக்கின்றதா ? இல்லாவிட்டால், அப்பேர்ப்பட்ட ஷரத்து இருக்கவேண்டுமென்று தோன்றுகிறதா ?

(k) அதிக வசூல் ஏதாவதிருக்கிறதா ? அப்படி ஏதாவதிருந்தால் அதை விவரமாகக் காட்ட வேண்டும்.

### வௌசர் பைல்.

10. (a) வௌச்சர்களுக்கு வரிசை நெம்பர் கொடுத்து தேதிவாரி அவைகள் பைல் செய்யப்படுகின்றனவா ? அவைகள் பூர்த்தியாயும் கிரமமான பாரத்திலேயும் இருக்கின்றனவா ? தேதிவாரி வரவு செலவு கணக்கை அனுசரித்து அவைகளை தணிக்கை செய்யவேண்டும்.

(b) படிப்பு வராதவர்களுக்கு பணம் பட்வடா செய்யும்பொழுது அவர்கள் குறிபோட்டதற்கு இரண்டு சாக்ஷிகளின் கையொப்பம் வாங்கப்படுகின்றதா ?

### கடிதங்களின் பைல்.

11. (a) வரவு கடிதங்கள் தேதிவாரி பைல் செய்யப்படுகின்றனவா ? அக்கடிதங்களெல்லாம் பஞ்சாயத்து மீட்டிங்கில் வாசிக்கப் படுகின்றனவா ?

(b) ரிஜிஸ்ட்ராரவர்களிடமிருந்தாவது, சென்டிரல் சங்கங்களிடமிருந்தாவது வந்த கடிதங்களுக்குப் பதில் போகவேண்டியதாயிருக்கிறதா ? ஆகையிர் தணிக்கையிலிருந்து வந்த கடிதங்களுக்கு விலேவாரியாக ஒரு லிஸ்டுக்கொடுக்கவேண்டும்.

(c) வந்த கடிதங்களுக்கு ஜவாப் எழுதாத முன்பே அவைகள் எல்லா மெம்பர்களுக்கும் அனுப்பப் படுகின்றனவா அல்லது மீட்டிங்கில் ஆலோசிக்கப் படுகின்றனவா ?

### டிபாசிட்டு பேரேடு.

12. (a) பஞ்சாயத்தார் தங்கள் கிராமத்திலேயே டிபாசிட்டுகளை பெற பிரயத்தினப்படுகிறார்களா ? ஒவ்வொரு ரூபா டிபாசிட்டுக்கூட போடும்படி பிரோத்ஸாகம் செய்யவேண்டும்,



(b) தன் எதிரில் ஏதாவது டிபாசிட்டுகளை சம்பாதிக்க சூபர்வைசருக்கு சாத்தியப்பட்டதா ? எவ்வளவு மொத்தம் வசூல் செய்யப்பட்டது ?

(c) டிபாசிட்டுகளும் இதர சங்கங்களி லிருந்து வாங்கப்பட்ட கடன்களும் கிரமமாக பேரேட்டில் எழுதப்படுகின்றனவா ?

(d) பிரதி டிபாசிக்கும் அல்லது பிரதி கடனுக்கும் ஷரத்துகள் கிரமமாய்த் தாக்கலாயிருக்கின்றனவா ?

(e) டிபாசிட்டுகளின் வட்டியையும், இதர கடன்களின் வட்டியையும் வாயிதா தேதிகளில் அந்தந்த பார்ட்டிகளுக்கு நேராகவாவது தபால் த்வாராகவாவது செலுத்தப்படுகின்றனவா ?

(f) வட்டி, அசல், அல்லது அபராதம் ஏதாவது சென்ட்றல் சொசயிடிகளுக்கு பாக்கி யிருக்கின்றதா ? அப்பேர்ப்பட்ட பாக்கி மொத்தங்களை சூபர்வைசர், தான் அந்த கிராமம்விட்டு போகும் முன்பே, அனுப்பிவிட்டு வரவேண்டும்.

(g) பிராவிடெண்டு டிபாசிட்டுகள் அல்லது ரிகரிங் டிபாசிட்டுகள் இவைகளை வசூல்செய்ய கிராமம் பொருந்தியிருக்கிறதா ? பிரதி தணிக்கையிலும் பிராவிடெண்டு டிபாசிட்டு, ரிகரிங்கு டிபாசிட்டு, இவைகளைப்பற்றி விவரமாக சொல்லி அவைகளின் உபயோகங்களை விவரமாக போதிக்கவேண்டும்.

### நானாவிதம்.

13. (a) க்ஷேமநிதி மொத்தங்களை கிரமமாய் செலுத்தி யிருக்கின்றார்களா ? க்ஷேமநிதி மொத்தத்திற்கு வட்டி பிரதிவருஷமும் சிட்டாவில் வரவு எழுதப்பட்டதாவென்று பஞ்சாயத்தார் கவனிக்கிறார்களா ?

(b) கடன் பத்திரங்களை ஆலசிய ரஹிதமாக ரிஜஸ்டர்செய்து சென்ட்றல் பாங்குகளுக்கு அனுப்புகிறார்களா? சென்ட்றல் சொசயிடியார் அனுப்பின தேதிக்கு பின்பு அந்த சொசயிடிக்கு வாப்சு செய்த தேதிக்கு நடுவில் எவ்வளவு சாவகாசமாச்சுது. இதைக் குறிக்கவேண்டும்.

(c) கணக்குகள் பிசகில்லாமலும் நன்றாயும் எழுதப்படுகின்றனவா?

14. (a) சூபர்வைசர் தன் எதிரில் பஞ்சாயத்து மீட்டிங்காவது அல்லது மகாசபை மீட்டிங்காவது சேர்ப்பித்தாரா? அந்த மீட்டிங்குகளில் எத்தனை பெயர் ஆஜரானார்கள்?

(b) அவர்களுக்கு கூட்டுறவு விஷயத்தைப் பற்றியும் சாதாரணமாக சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டிய விஷயங்களைக் குறித்தும் அவர்களுக்கு செல்லலாச்சுதா?

(c) மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை பிரசுரமாகும் புல்லடின் பத்திரிகையை வாசித்து அம்சங்கள் விவரித்து சொல்லப்பட்டனவா?

(d) பஞ்சாயத்தார் மாசாந்திர வரவு செலவு ஸ்டேட்மெண்டுகளையும் தயார்செய்து பகிரங்கமான இடத்தில் அவைகளை பிரசுரம் செய்யவேண்டும்.

(e) பிரகிருதம் ஜாரியில் இருக்கும் நிபந்தனைகளை அனுசரித்து வேலை நடத்துவது அசௌகரியமென்று ஏதாவது மாற்றல் வேண்டுமென்று கேட்கிறார்களா?

முடிவு.

15. ஆஸ்திப்பட்டி எந்தத் தேதியில் தயார்செய்யப்பட்டது. அதில் ஏதாவது மாற்றல் வேண்டுமா? வருஷத்துக் கொருமுறையாவது அது மறுபடியும் தயாராக வேண்டும்.

16. இதற்கு முன் தணிக்கையில் குறிப்பிட்ட லோபங்கள் பூர்த்தியாய் சீர்திருத்தமாச்சுதா?

17. கணக்குகள் இந்த தேதிவரைக்கும் தணிக்கையாச்சுதா? எந்த மாதத்தில் தணிக்கை ஆகிறதோ, அந்த மாதத்திற்கு முன்மாதம் ஆகயிர் வரைக்கும் தணிக்கையாயிருக்க வேண்டும்? மேல் தணிக்கையிலிருந்து அந்த காலம் வரைக்கும் வரவு செலவு ஸ்டேட்மெண்டு இந்த ரிபோர்ட்டுடன் அனுப்பவேண்டும்.

18. சங்கம் இருப்பதால் எல்லா இனத்தாரும் ஒன்றுசேர்ந்து நடக்கும்படி ஆயிருக்கிறதா? அல்லது, ஒருவருக்கொருவருக்கு வீணாய் பகைகள் உண்டாயிருக்கிறதா? பகைகளே உண்டாயிருந்தால் என்னத்துக்காகப் பகை உண்டாயிற்று? அது எப்படி?

19. அச்சங்கத்தின் வேலையைப்பற்றியும், பஞ்சாயத்தார் நடக்கைப் பற்றியும் சூபர்வைசருக்கு என்ன அபிப்பிராயம்.

20. கிராமத்தில் கடன் லேவாதேவி வட்டி இச்சங்கம் இருப்பதால் குறைந்ததா?



21. கவர்ன்மெண்டாரால் இச்சங்கங்களின் அபிவிருத்திக்காக கொடுக்கப்பட்ட சதுபாயங்களை ஜனங்கள் அறிந்து ஆமோதிக்கிறார்களா?

22. ஜில்லா கெஜட்டுகளும், மூன்றுமாதத்திற் கொருதரம் பிரசுரமாகும் பத்திரிகையும் தருவித்து ஒரு மீட்டிங்கில் வாசித்து கிரமமாய்ப் பைல் செய்யப்படுகின்றனவா?

23. எந்த மெம்பராவது எந்த டிபாசிட்டுதாரராவது சங்கக்கணக்குகளை பார்க்கவேண்டுமென்று கோருகின்றாரா? அப்படிக் கேட்டவருக்கு தணிக்கை செய்யத் தகுந்த சௌகரியங்களை சங்கத்தார் கொடுக்கிறார்களா?

24. கிராமத்தில் எல்லோரும் சேருவதற்கும் எல்லோரும் கலந்து பேசுவதற்கும் ஒரு பொதுவான இடம் ஏற்பாடுசெய்ய என்ன முயற்சி செய்தார்கள்? அந்த மாதிரி மீட்டிங்குகளில் எல்லோரும் சேருவார்களா?

25. சங்கத்தின் நிபந்தனைகளின் காபியில் எல்லா மாற்றல்களையும் தாக்கல் செய்து அந்த காபி நாளது தேதிவரையில் திருத்தப்பட்டிருக்கிறதா?

26. பஞ்சாயத்து மெம்பர்கள் மெம்பர்களுக்கு வேண்டிய பொத்தத்திற்கு மேற்பட்டு சாங்க்ஷன் செய்கிறார்களா? வாயிதா கடந்த கடன்களின் பட்டியை தயார்செய்து கொடுக்கவேண்டும். விவரவாரியாய்க் கடன் மொத்தங்கள் கிரமமான வேலைக்கு உபயோகப்பட்டதா என்று தணிக்கை செய்ய வேண்டும்.

27. சாதாரண ரிமார்க்குகள் ஏதாவதிருந்தால் அவை இந்த இடத்தில் எழுதவேண்டும்.

## சர்க்கார் கடன்களின் மறுதவணையைத் தெரிவிக்கும் 1910–1911-ம் சங்க ஜாபிதா.

| வரிசை நெம்பர். | சங்கங்களின் ரிஜிஸ்டர் நெம்பரும் பெயரும். | | ஜில்லா. | சேரவேண்டிய அசல் மொத்தம். | இன்ஸ்டால்மெண்டு நெம்பர். | சேரவேண்டிய அசல் மொத்தம். | மொத்தம். | செலுத்தவேண்டிய தேதி. | ரிமார்க்கு. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ரூ. அ. பை. | | ரூ. அ. பை. | ரூ. அ. பை. | | |
| 1 | 32 | கொத்தகோடா | ...அனந்தபூர் | 60 0 0 | முதலாவது | 24 0 0 | 84 0 0 | 7—7—1910 | .. |
| 2 | 33 | தொழூர் | ...செங்கற்பட்டு | 10 0 0 | ... | 4 0 0 | 14 0 0 | 25—7—1910 | |
| 3 | 14 | புக்கபட்டணம் | ...அனந்தபூர் | 85 0 0 | இரண்டாவது | 30 9 8 | 115 9 8 | 29—7—1910 | |
| 4 | 34 | கந்துகூர் | ...நெல்லூர் | 60 0 0 | முதலாவது | 24 0 0 | 84 0 0 | 22—8—1910 | |
| 5 | 16 | அளிஞ்சிவாக்கம் | ...செங்கற்பட்டு | 15 0 0 | இரண்டாவது | 5 6 4 | 20 6 4 | 27—8—1910 | |
| 6 | 1 | திரூர் | ... ... | 40 0 0 | மூன்ருவது | 12 12 6 | 52 12 6 | 30—8—1910 | |
| 7 | 2 | கீழச்சேரி | ... ... | 200 0 0 | ... | 64 0 0 | 264 0 0 | 7—9—1910 | |
| 8 | 17 | சாலேவேடு | ...வடஆற்காடு | 135 0 0 | இரண்டாவது | 48 9 8 | 183 9 8 | 26—9—1910 | |
| 9 | 39 | தம்மப்பூடி | ...குண்டூர் | 200 0 0 | முதலாவது | 80 0 0 | 280 0 0 | 9—11—1910 | |
| 10 | 20 | வேலூர் | ...சேலம் | 200 0 0 | இரண்டாவது | 72 0 0 | 272 0 0 | 10—11—1910 | |
| 11 | 41 | உத்தரமல்லூர் | ...செங்கற்பட்டு | 200 0 0 | முதலாவது | 80 0 0 | 280 0 0 | 22—11—1910 | |
| 12 | 42 | கலியாம் பூண்டி | ... ... | 100 0 0 | ... | 40 0 0 | 140 0 0 | 27—11—1910 | |
| 13 | 43 | பாகல்பட்டி | ...சேலம் | 100 0 0 | ... | 40 0 0 | 140 0 0 | 5—12—1910 | |
| 14 | 44 | பனமரத்துப்பட்டி | ... ... | 200 0 0 | ... | 80 0 0 | 280 0 0 | 7—12—1910 | |
| 15 | 4 | காவேரிபாக்கம் | ...வடஆற்காடு | 200 0 0 | மூன்ருவது | 64 0 0 | 264 0 0 | 24—12—1910 | |
| 16 | 47 | தர்மவரம் | ...அனந்தபூர் | 105 0 0 | முதலாவது | 42 0 0 | 147 0 0 | 8—1—1911 | |
| 17 | 48 | மேல்மலையனூர் | ...தென்ஆற்காடு | 125 0 0 | ... | 50 0 0 | 175 0 0 | 9—11—1911 | |
| 18 | 50 | கன்னண்டஹல்லி | ...சேலம் | 200 0 0 | ... | 80 0 0 | 280 0 0 | 18—1—1911 | |
| 19 | 5 | தாமல் | ...செங்கற்பட்டு | 195 0 0 | மூன்ருவது | 62 6 4 | 257 6 4 | 19—1—1911 | |
| 20 | 23 | குரேபள்ளி | ...குண்டூர் | 200 0 0 | இரண்டாவது | 72 0 0 | 272 0 0 | 21—1—1911 | |
| 21 | 6 | விளாத்திக்குளம் | ...திருநல்வேலி | 85 0 0 | மூன்ருவது | 27 3 4 | 112 3 4 | 30—1—1911 | |
| 22 | 51 | கல்விப்பட்டி | ...செங்கற்பட்டு | 100 0 0 | முதலாவது | 40 0 0 | 140 0 0 | 31—1—1911 | |
| 23 | 53 | பியாபள்ளி | ...கர்னூல் | 55 0 0 | ... | 22 0 0 | 77 0 0 | 4—2—1911 | |
| | | | | ரூ. அ. பை. | | ரூ. அ. பை. | ரூ. அ. பை. | | |
| 24 | 7 | நீடாமங்கலம் | ...தஞ்சாவூர் | 200 0 0 | மூன்ருவது | 64 0 0 | 264 0 0 | 5—2—1911 | |
| 25 | 54 | வஜ்ரகரூர் | ...அனந்தபூர் | 200 0 0 | முதலாவது | 80 0 0 | 280 0 0 | 7—2—1911 | |
| 26 | 55 | குண்டக்கல் | ... ... | 200 0 0 | ... | 80 0 0 | 280 0 0 | 8—2—1911 | |
| 27 | 9 | மெலட்டூர் | ...தஞ்சாவூர் | 115 0 0 | மூன்ருவது | 37 3 4 | 152 3 4 | 11—2—1911 | |
| 28 | 24 | கூடூர் | ...நெல்லூர் | 200 0 0 | இரண்டாவது | 72 0 0 | 272 0 0 | 19—2—1911 | |
| 29 | 10 | கந்தலூர் | ...கடப்பை | 120 0 0 | மூன்ருவது | 38 6 4 | 158 6 4 | 14—3—1911 | |
| 30 | 56 | காசையலங்கா | ...கிருஷ்ணு | 200 0 0 | முதலாவது | 80 0 0 | 280 0 0 | 15—3—1911 | |
| 31 | 57 | திம்மன்செர்லா | ...அனந்தபூர் | 200 0 0 | ... | 80 0 0 | 280 0 0 | 27—3—1911 | |
| 32 | 11 | நெம்மிலி | ...செங்கல்பட்டு | 40 0 0 | மூன்ருவது | 12 12 10 | 52 12 10 | 8—4—1911 | |
| 33 | 30 | லால்குடி | ...திருச்சி | 200 0 0 | இரண்டாவது | 72 0 0 | 272 0 0 | 1—5—1911 | |
| 34 | 61 | போண்டவாக்கம் | ...செங்கல்பட்டு | 200 0 0 | முதலாவது | 80 0 0 | 280 0 0 | 1—5—1911 | |
| 35 | 12 | வடநாங்கூர் | ...வடஆற்காடு | 100 0 0 | மூன்ருவது | 32 0 0 | 132 0 0 | 6—5—1911 | |
| 36 | 13 | நம்பிபுரம் | ...திருநல்வேலி | 45 0 0 | ... | 14 6 4 | 59 6 4 | 30—6—1911 | |
| | | | மொத்தம் | 4890 0 0 | | 1807 14 0 | 6697 13 0 | | |

ஸர் டி. எம். ஹாமில்டன் லோன் நிதி சம்பந்தமான 1910–11-ம் சங்க ஜூத்து ஜாபிதா.

| வரிசை நெம்பர். | சங்கத்தின் நம்பரும் பெயரும். | | ஜில்லா. | சேரவேண்டிய அசல் தொகை. ரூ. அ. ப. | வாய்தா நெம்பர். | சேரவேண்டிய வட்டி. ரூ. அ. ப. | அசல் வட்டத் தொகைகளின் மொத்தம். ரூ. அ. ப. | செலுத்தவேண்டிய தேதி. | ஷரா. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 6 | விளாதிகுளம் | ... திருநல்வேலி | 30 0 0 | முதலாவது | 6 0 0 | 36 0 0 | 7—9—1910 | |
| 2 | 1 | திரூர் | ... செங்கல்பட்டு | 50 0 0 | ,, | 10 0 0 | 60 0 0 | 9—11—1910 | |
| 3 | 32 | சொத்தகோட்டா | ... அனந்தபூர் | 20 0 0 | ,, | 4 0 0 | 24 0 0 | 18—12—1910 | |
| 4 | 2 | கிழச்சேரி | ... செங்கல்பட்டு | 50 0 0 | ,, | 10 0 0 | 60 0 0 | 31—1—1911 | |
| 5 | 11 | நெம்மிலி | ... ,, | 30 0 0 | இரண்டாவது | 5 6 6 | 35 6 6 | 23—2—1911 | |
| 6 | 16 | அளிஞ்சிவாக்கம் | ... ,, | 50 0 0 | ,, | 9 0 0 | 59 0 0 | 23—2—1911 | |
| 7 | 14 | புக்கபட்டணம் | ... அநந்தப்பூர் | 30 0 0 | ,, | 5 6 6 | 35 6 6 | 28—2—1911 | |
| 8 | 10 | கந்தலூர் | ... கடப்பை | 30 0 0 | ,, | 5 6 6 | 35 6 6 | 9—3—1911 | |
| 9 | 37 | ஜமீன் தங்கம்பாக்கம் | செங்கல்பட்டு | 20 0 0 | முதலாவது | 4 0 0 | 24 0 0 | 25—3—1911 | |
| 10 | 24 | கூடூர் | ... நெல்லூர் | 50 0 0 | இரண்டாவது | 9 0 0 | 59 0 0 | 5—4—1911 | |
| 11 | 13 | நம்பிபுரம் | ... திருநல்வேலி | 30 0 0 | ,, | 5 6 6 | 35 6 6 | 9—4—1911 | |
| 12 | 48 | மேல்மலையனூர் | ... தென்னார்க்காடு | 30 0 0 | முதலாவது | 6 0 0 | 36 0 0 | 26—4—1911 | |
| 13 | 31 | ஆனைக்காடு | ... தஞ்சாவூர் | 25 0 0 | ,, | 5 0 0 | 30 0 0 | 20—5—1911 | |
| | | | மொத்தம். | 445 0 0 | | 84 10 0 | 529 10 0 | | |


## விளம்பரங்கள்.

### பெரிய காஞ்சீபுரம் அர்பன் சாலியர் யூனியன், ராஜாதெருவு, பெரிய காஞ்சீபுரம்.

(ஸ்தாபிதமானது டிசம்பர் 1909.)

**உத்தேசம்:**—சாலியர்களுடைய பிழைப்பையும் குணத்தையும் நோக்க.

வரும் லாபத்தை சாலிய மெம்பர்களுக்கு மட்டும் வீதித்துக்கொடுக்கப்படுகிறது.

நன்றாக நெய்ததும், நாள்கூடி வருவதுமான வேஷ்டி, சோமன் வகைகள் இந்த யூனியனிடமிருந்து பின்வரும் விலை வீதத்திற்கு வாங்கலாம்.

| நூல் நெம்பர் | அகலம் | விவரம். | கஜம் 1—க்கு விலை. | | |
|---|---|---|---|---|---|
| 80 | 54 | சர்க்கம்பி, கோரஞ்சு அல்லது சாதா | 0 | 8 | 6 |
| 60 | 54 | ,, ,, ,, ... | 0 | 7 | 6 |
| | 49 | ,, ,, ,, ... | 0 | 6 | 6 |
| | 45 | ,, ,, ,, ... | 0 | 5 | 6 |
| 40 | 54 | ,, ,, ,, .. | 0 | 6 | 3 |
| | 49 | ,, ,, ,, ... | 0 | 5 | 9 |
| | 45 | ,, ,, ,, ... | 0 | 5 | 3 |

அஞ்சுகளுக்குப்பட்டு அல்லது சரிகையென்றால் தக்கபடி விலை கூடும். வேறுவகை வேஷ்டிவகையறு கேட்பவரிஷ்டம்போல் செய்து கொடுக்கப்படும். **வியாபாரமுறை:**—ரொக்கம் அல்லது வால்யூபேயெபிள் போஸ்டு.

யூனியன் பிறப்பித்திருக்கும் பத்திரங்கள் யாரிடமுண்டோ அவர்களுக்குரூபாய் 1-க்கு அணா ½ வீதம், மேற்சொல்லிய விலை விகிதங்களிலிருந்து குறைத்துக் கொடுக்கப்படும். மற்ற விவரங்கள் தெரியவேண்டுமானால், அடியிற் கையொப்ப மிட்டவருக்கு எழுதலாம்:—அதாவது, செகரிடேரி.

பி. ராமசந்திரன்.

செகரிடேரி.

**22—12—1910.**

# மதிராசு ஸெண்ட்ரல் அர்பன் பாங்கு

## (லிமிடெட்.)

1904-ம் வருஷத்திய இந்தியா ஆக்ட்டு 10வதுப்படி. ரிஜிஸ்தரானது.)

கணக்குகள்—மதிராசு கோஆபரேடிவ் நாணயச்சங்கங்கள் ரிஜிஸ்திரார் அவர்களால் தனிக்கை செய்யப்படுகிறது

கடன் கொடுப்பது ரிஜிஸ்திராருடைய விசேஷ உத்தரவின்படிதான்.

பாங்கு டிபாசிட்டுகள் வேண்டுகிறது—நிபந்தனைகள் அறியவேண்டுவோர் எழுதித் தெரிந்து கொள்ளவும்.

வேண்டியவர், செகர்டெரி, பத்மவிலாஸம், லஸ், மைலாப்பூர் S., என்றெழுதவும்.



மதிராசு புல்லடின் ஆப் கோஆபரேஷனில் விளம்பரம் செய்வோர் கொடுக்க வேண்டிய சட்டணவீதம்.

எப்போதாவது போடுவதற்கு:—

| | |
|---|---|
| 1. பக்கம் ... ... ... ... | ரூ. 12. |
| ½. பக்கம் ... ... ... ... | ரூ. 6. |
| ¼. பக்கம் அல்லது குறைந்ததற்கு ... ... | ரூ. 3. |

நாலு நெம்பர்களில் தொடர்ச்சியாய்ப் போடுவதற்கு:—

| | |
|---|---|
| 1. பக்கம் ... ... ... ... | ரூ. 40 |
| ½. பக்கம் ... ... ... ... | ரூ. 20 |
| ¼. பக்கம் அல்லது குறைந்ததற்கு ... ... | ரூ. 10 |

1904-வருஷத்திய 10-வது ஆக்ட்டுப்படி ரிஜிஸ்தரான ஸொஸைட்டிகளின் விளம்பரங்கள், ரிஜிஸ்திராரின் சந்தோஷத்தை யநுசரித்துக் கட்டணமில்லாமலே பிரசுரிக்கப்படும்.



# எல்லாப்பயிர்களுக்கான உரங்கள்.

தேயிலை, காபி, புகையிலை, சர்க்கரை, அரிசி மற்றுமுள்ள தானியவகைகளுக்கெல்லாம் உரிய விசேஷ வகைகள்

செவ்வனே ஆராய்ச்சி செய்ததற்கு உத்தரவாதம்.

செழுமைக்கான சத்துக்கள் தனியாகவோ அல்லது ஆர்டருக்குத் தகுந்தவாறு கலந்தோ விற்கப்படும்.

| | நைட்ரஜன். | பாஸ்பாரிக் ஆஸிட். | |
|---|---|---|---|
| எலும்புத்தூள் ... | 3½/4% | 22/23% | ,, |
| ஸூபர்பாஸ்பேட் ... | ... | 14/15% | ,, தண்ணீரில் கரையக்கூடியது |
| பேஸிக் ஸூபர்பாஸ்பேட் ... | | 12/13% | ஸைட்ரிக் ஆஸிட்டில் கரையக்கூடியது. இதில் 35% சுண்ணாம்புண்டு. |

உயர்ந்த நிலக்கடலைப் புண்ணாக்கு 8%

பொட்டாஷ் மூரியேட், 80% சுத்தம், சுத்தமான பொட்டாஷ் 50% அடங்கியுள்ளது.

,, ஸல்பேட், 96o/o ,, ,, ,,

கெய்னிட், இதில் 12½o/o சுத்தமான பொட்டாஷ் உண்டு.

இதல்லாமல் பொட்டிலுப்பு, ஸிலிஸால்ட் பீடர், பேஸிக் ஸ்லாக், மீன் எச்சம், பலவித புண்ணாக்குகள் எம்மிடம் அகப்படும். தென்னிந்தியாவிலுள்ள எந்த ஸ்டேஷனுக்கும் எந்தத் துறைமுகத்திற்கும் அனுப்பவேண்டுமானாலும் எழுதிக்கொள்ளலாம்.

மெஸர்சு பாரி அண்டு கம்பெனி,

மானேஜிங் ஏஜெண்டுகள்,

ராஜதானி ரஸாயன உரக்கிடங்கு, லிமிடெட், மதிராசு.



விவேகாநந்த ஸ்வாமிகள் செய்த உபந்நியாசங்கள்.

முழுமையும் கொஞ்சங் கொஞ்சமாக சிறு புத்தகங்களாக பதிப்பித்துக்கொண்டிருக்கிறேன். இதுவரையில் தயாராக இருக்கும் புஸ்தகங்கள் ரொக்க விலைக்கு கொடுக்கப்படும். இனி வெளியாகும் புஸ்தகங்களுக்கு அட்வான்ஸாக கொடுப்பவர்களுக்கு விலை ரொம்பவும் சகாயம்.

கைவசமிருக்கும் புஸ்தகங்கள்:—

| | | | |
|---|---|---|---|
| 1. சிக்காகோ உபந்நியாசங்கள் விலை | 0 2 0 | 3. என்னுடைய குருநாதர் ... | 0 4 0 |
| 2. கர்மயோகம் (முதற்பாகம்) ,, | 0 2 0 | 4. வேதாந்த தத்துவம் ... | 0 4 0 |

1911-ல் வெளியாகும் பாகங்கள்:—பாரதமாதாவின் மகிமை, கர்மயோகம் (இரண்டாம் பாகம்), பக்தியோகம், ஞானயோகம், இன்னும் சிலவும்.

ஆர். நாராயணஸ்வாமி அய்யர், 1/306, திருவொற்றியூர் பெரிய சாலை, பழைய வண்ணாரப்பேட்டை, மதராஸ்.



# The Swadesi Warehouse, Madras.

## சுதேசி வேர் அவுஸ்.

நெ. 3–தம்புசெட்டி வீதி–சென்னை.

தினந்தோறு முபயோகிக்கத் தக்க வஸ்திரங்களும், சோப்புகள், தலைமயிர் தைலங்கள், பற்பொடி, வாசனைகள், செக்குத்துணி, டுவில், டுவில்சர்ட்டு, தலைகுட்டை, ஜமக்காளம், கம்பளி, பனியன், பூட்ஸ் முதலியன கிடைக்கும். விலை அதிக குறைவாகவும் சரக்கு நாணய முள்ளவுமாகவிருக்கும். விவரம் மேற்குறித்த விலாசமெழுதி தெரிந்து கொண்டதுடன் ஆர்டருமனுப்ப வேணுமாய்க் கோருகிறோம்.

# விளம்பரம்.

## கிராம உத்தியோகஸ்தர்களைக் குறித்த சட்ட புஸ்தகங்கள்.

### வினா விடை 1, 2-வது பாகங்கள்.

———:0:———

இதன் 1வது பாகத்தில் கிராம உத்தியோகஸ்தர்களுடைய அந்தஸ்து முதலியவைகளும், 2வது பாகத்தில் கிராம முன்சீபுகோர்டு நடவடிக்கைகளுக்கு சம்மந்தப்பட்ட 1889ம் வருஷத்து 1வது ஆக்டும், கிராம பஞ்சாயத்தைக் குறித்த 1816ம் வருஷத்து 5வது ரெகுலேஷனும், நிலம் தண்ணீர் விவாதங்களின் பஞ்சாயத்தைக் குறித்த 1816ம் வருஷத்து 12வது ரெகுலேஷனும் அடங்கியுள்ளது.

ஜில்லா நிலையான உத்திரவுகளில் முக்கியமானவற்றையும், இந்து தேசத்து முத்திரைக் கடுதாசி ஆக்டு, கோர்டு கட்டண ஆக்டு, சாக்ஷி ஆக்டு, கால நிர்ணயச்சட்டம் முதலியவைகளில் கிராமக் கோர்டு நடவடிக்கைகளுக்கு சம்மந்தப்பட்ட பாகங்களை அவ்வவற்றிற்கு பொருத்தமான இடங்களில் அமைத்தும், பாஷை நடை கடினமாயிருக்கிறவிடங்களில் சாதாரண வார்த்தைகளால் அர்த்தஞ் சொல்லியும், படிப்போருக்கு விஷயங்கள் நன்றாய் மனதில் பதியும்படி உதாரணங்கள் எடுத்துக்காட்டியும் வினாவிடை ரூபமாக எழுதப்பட்டிருக்கிறது.

கிராமக் கோர்ட்டில் தாக்கல் செய்யவேண்டிய சகல விதமான பிளையண்டுகள், மனுக்கள், மேற்படி கோர்ட்டில் உபயோகிக்கப்படவேண்டிய நமூனாக்கள், கணக்குகள் மேற்படி கோர்ட்டார் பிறப்பிக்கவேண்டிய சம்மன்கள், நோட்டீசுகள், கட்டளைகள், டிக்ரிகள் இவைகளுக்கு மாதிரிகளும் எழுதப்பட்டிருக்கின்றன. இதுவரையில் இம்மாதிரியான புஸ்தகம் வெளிவந்ததே இல்லை. கிராம முன்சீபு கோர்டு நடவடிக்கைகளுக்காக எழுதப்பட்ட பலவகைப் புஸ்தகங்களில் சட்ட ஞானமுள்ள கனவான்களின் நல்ல அபிப்பிராயத்தைப் பெற்றவைகளுமில்லை.

இந்த புஸ்தகத்தின் காபி ஒன்றை கனம் பொருந்திய சென்னை ரிவினியூ போர்டார் அவர்கள் வந்தனத்துடன் பெற்றுக்கொண்டிருப்பதோடு கோயமுத்தூர் ஜில்லா கலெக்டர் கனம் H. F. W. கில்மேன் துரையவர்களும், சட்ட ஞானமுள்ள கனவான்களும், தாசில்தார்களும் நற்சாக்ஷிப் பத்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

கிராம முன்சீபுகள், கர்ணங்கள், கிராம உத்தியோகஸ்தர்களைக் குறித்த ஸ்பெஷல் டெஸ்டு பரீக்ஷைக்கு படிக்கும் வித்தியார்த்திகள், கிராம முன்சீபு கோர்டுகளில் வக்கீல்களாகத் தொழில் புரிகிறவர்கள், வியாபாரிகள், லேவாதேவிக்காரர்கள், மிராசுதார்கள் முதலியவர்களுக்கு மிகவும் அவசியமானது.

220 பக்கங்களுள்ளதாய் நல்ல எழுத்துக்களில் 20 பவுன் கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டு, கெட்டி அட்டையில் பைண்டு செய்யப்பட்ட இப்புத்தகத்தின் விலை தபாற்கூலி உட்பட ரூபா 1-4-0. ஒரே தடவையில் 10 புஸ்தகங்கள் வாங்குவோருக்கு ஒரு புஸ்தகம் இனாம். வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதினால் வி.பி. யில் அனுப்பப்படும். எழுதுவோர் இப்பத்திரிகையின் பெயரையும் கண்டு எழுத வேண்டுகிறேன்.

K. N. ரங்கயகவுண்டர்,
கிராமமுன்சீபு, கம்புளியம்பட்டி,
விஜயமங்கலம் போஸ்ட், கோயமுத்தூர் ஜில்லா.

# தமிழ் இந்தியன் பினல் கோட்.

(௧௮௬0-வருஷத்து ௪௫-வது ஆக்ட்). விலை ரூபா 2—8—0.

இது வக்கீல்கள் சகாயம் இல்லாமலே ஷை பினல்கோட் பிரிவுகளை அனுசரித்து தீர்மானிக்கப்பட்ட சகலமான லாரிபோர்டுகளை சுலபமாய் அறியும் பொருட்டு தமிழ் பாஷையில் ஹைகோர்ட்டு வக்கீலால் எழுதிப் புதிதாய் அச்சிடப்பட்டது.

இதில் மதிராஸ், பம்பாய், அலஹாபாத், கல்கத்தா, நார்த்வெஸ்ட் பிராவின்ஸ், வீக்லி ரிபோர்ட்டு, கிரிமினல் லியர்ஸ்ருலிங்க்ஸ், இவைகளுடனும் இதுவரையில் ரத்தான பாகங்களை திருத்தப்பட்ட சட்டங்களுடனும் அந்தந்த செக்ஷன்களின் அடியில் நோட்டுகள் விவரமான அர்த்தங்களுடன் அச்சிடப்பட்டிருக்கின்றன. இப்புத்தகம் கிராம முன்சீபு, பிரைவேட் வக்கீல், போலீஸ் உத்தியோகஸ்தர், ஜமீன்தார், மிராசுதார், வர்த்தகர்கள், இன்னும் தமிழ்பாஷை தெரிந்த சகல ஜனங்களுக்கும் இப்புத்தகம் ரொம்பவும் உபயோகமுள்ளது. வேண்டியவர்கள் அடியில்கண்ட விலாசத்துக்கு எழுதிக்கொள்ளவும்.

பி. எஸ். ரெங்கசாமிராயர், 14, கீழ்மாடவீதி, மைலாப்பூர், மதராஸ்.

வி. ஆர். காமத் அண்டு கோ.,
காபினெட் மேகர்சு, 191, மவுண்டுரோட், சென்னை.

*Illustrated catalogue Post Free.*



The "Buscot" Drawing Room suite in rose wood. Price on application.



JL
XMm211, N09
N09.1

160952



The South Indian Press, 18, Linghi Chetty St., G.T. Madras.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

தவணைத்தாள்.

சே. எண் : 160952 ப. எண் : XMm 211,N N09.1

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

S.F. 259A-6—1,00,000—30-1-84.